2804

# T. N. L. A. Debates

OFFICIAL REPORT

VOL: LXVII NO: 4 and 5

April 27th 28

1984

C

D
V211, 31 N84
N84.67.4&5;1
136270

2517 | ஆ. 4/85

வெளியீடு 13-3-85] [Issued 13-3-85

2804

10 MAY 1985

# தமிழ் நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## பணித்துறை வெளியீடு—OFFICIAL REPORT

வெள்ளிக்கிழமை, ஏப்ரல் 27, 1984 - தொகுதி LXVII எண் 4

Friday the 27th April 1984 - Volume LXVII No 4

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009
Legislative Assembly Secretariat, Fort St. George,
Madras - 600 009

விலை: ரூ. 3-50 காசுகள்] [Price Rs. 3-50 paise

D
V211,31 N84
N84.67.4Q531
136270
சென்னை-600 009.

# உள்ளடக்கம்


| 27—4—84 | பக்கங்கள் |
|---|---|
| 1 வினாக்கள்— விடைகள் — | |
| [அ] உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. | 744—785 |
| [ஆ] உடுக்குறியிடாத வினாக்கள் .. .. | 785—843 |
| 2. தகவல் கோரல் — | |
| உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள் .. | 843—846 |
| 3. ஒத்திவைப்புத் தீர்மானம்— | |
| வடசென்னை கடலோர குடிசைப் பகுதிகளில் ஏற்படும் தீ விபத்து .. .. .. | 846—854 |
| 4. கவன ஈர்ப்பு— | |
| கலசப்பாக்கம் ஊராட்சி குடிநீர்க் குழாய் இணைப்புகளுக்கு அளவுமானி பொருத்துதல் | 854—859 |
| 5. அறிக்கைகள் அளித்தல் — | |
| [அ] பொது நிறுவனங்கள் குழு .. .. .. | 860 |
| [ஆ] மதிப்பீட்டுக் குழு .. ... .. | 864 |
| 6. அரசினர் சட்ட முன்வடிவுகள்— | |
| (அ) நிதி ஒதுக்க (எண். 2) சட்டமுன்வடிவு 1984 | 861 |
| (ஆ) இந்திய தண்டனைச் சட்டக் கோவை, இந்திய குற்றவியல் நடைமுறைச் சட்டக் கோவை, (தமிழ் நாடு திருத்த) சட்டமுன் வடிவு 1984 .. .. .. .. | 862—874 |
| (இ) கடன் நிவாரண (திருத்த) சட்டமுன்வடிவு 1984 .. .. .. .. .. | 874—890 |
| (ஈ) பொது விற்பனை வரி (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு .. .. .. | 890—898 |
| (உ) கேளிக்கை வரி உள்ளாட்சி அதிகார மன்றங்கள் நிதி (திருத்த) சட்டமுன்வடிவு 1984 | 899—905 |
| (ஊ) கேளிக்கை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு 1984 .. .. .. .. | 906—914 |
| (எ) பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு 1984 .. .. .. | 914—924 |

பக்கங்கள்

7. அரசினர் தீர்மானம்—

விதி 30 (3)-ன்கீழ் அலுவல் வரிசை மாற்றம் 861—862

8. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் — 925

2804

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

**1984, ஏப்ரல் 27, வெள்ளிக்கிழமை.**

**சித்திரை 15, ரக்தாக்ஷி—திருவள்ளுவர் ஆண்டு 2015.**

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :**

“ வில்லேர் உழவர் பகைகொளினும் கொள்ளற்க
சொல்லேர் உழவர் பகை.”

ஒருவன் வில்லை ஏராக உடைய உழவர்களாகிய வீரர்களுடன் பகை கொண்டான் ஆயினும், சொல்லை ஏராக உடைய உழவர்களாகிய அறிஞர்களுடன் பகை கொள்ளாமல் இருத்தல் வேண்டும்.

### 1. வினாக்கள்-விடைகள்

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்.

**26—3—1982 அன்று தூத்துக்குடி அனல் மின்நிலையத்தில் வாரியத்தின் பொருட்களைக் கடத்த நடைபெற்ற முயற்சி.**

**669 * வினா—திரு. மு. அப்பாதுரை : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—**

(அ) 26—3—1982 அன்று தூத்துக்குடி அனல் மின்நிலையத்தில் -2135 என்ற லாரியில் சுமார் 1 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள வாரியத்தின் பொருள் கடத்த முயற்சித்ததாகத் தகவல் ஏதும் வந்துள்ளதா ?

(ஆ) அதில் ஈடுபட்ட அதிகாரிகள் யார் ?

(இ) அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** (அ), (ஆ) மற்றும் (இ) தூத்துக்குடி மின்நிலையத்தில் 26—3—1982 அன்று சுமார் ரூ. 20,000 மதிப்புள்ள இரும்பு எஃகுப் பொருள்களை தனியார் லாரியில் கடத்த முயற்சி நடந்தது. இச்சம்பவம் 27—3—1982 அன்று தூத்துக்குடி அனல்

மின்நிலையப் பொது கண்காணிப்பாளரின் கவனத்திற்கு வந்தது. விசாரணையில், ஒரு போலி நுழைவாயில் அனுமதிச் சீட்டைக் காட்டி பொருள்களைக் கடத்த முயற்சி நடந்ததாகத் தெரிய வந்ததால் உடனடியாக 28—3—1982 அன்று காவல் நிலையத்தில் ஒரு புகார் பதிவு செய்யப்பட்டது. நெல்லை மாவட்டக்காவல் அதிகாரியின் அறிக்கைப்படி குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டு, நீதி விசாரணை நடைபெறவுள்ளது. நீதிமன்றத் தீர்ப்பு வந்த பின்தான், இத்திருட்டு முயற்சியில் வாரிய அதிகாரிகள் சம்பந்தப்பட்டிருக்கிறார்களா என்பது தெரியும்.

திரு. மு. அப்பாதுரை : தலைவரவர்களே, இந்தக் கேள்வியைக் கேட்டு ஏறத்தாழ இரண்டு ஆண்டுகள் ஆகிவிட்டன. இப்போதுதான் விடை வந்திருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது நீதிமன்றத்திலே வழக்குத் தொடரப்பட்டுள்ளது என்று சொன்னார்கள். அந்த லாரி செக்போஸ்ட் வரை சென்றபிறகுதான் தகவல் அறிந்து மடக்கிப் பிடித்திருக்கிறார்கள் என்றுதான் எனக்குத் தகவல் வந்திருக்கிறது. அங்கே இருக்கிற செக்யூரிட்டி ஆபீசர் பொருள்களை கடத்திச் செல்வதற்கு உடந்தையாக இருந்தார் என்று புகார் செய்திருக்கிறார்கள். அந்த செக்யூரிட்டி ஆபீசர்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, காவல் துறையிலிருந்து பாதுகாப்பு அதிகாரி செக்யூரிட்டி ஆபீசராக தூத்துக்குடி அனல் மின் நிலையத்தில் நியமிக்கப்பட்டிருக்கிறார். அவர் இதில் சம்பந்தப்பட்டிருக்கிறார் என்றுதான் சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது. அதனால் அவரை மீண்டும் காவல் துறைக்கு அனுப்ப வேண்டுமென்று மின்வாரியத்தின் மூலமாக நடவடிக்கை எடுத்து, அனுப்பப்பட்டிருக்கிறார். ஆனால் இந்தக் கேள்விபோட்டு இவ்வளவு காலதாமதம் ஆகி பதில் வந்திருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறினார்கள். இந்த காலதாமதத்திற்கு என்ன காரணம் என்பதை அரசு கட்டாயம் கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏனென்றால் அந்த பாதுகாப்பு அதிகாரி காவல் துறைக்கு சென்று, இப்போது ஓய்வு பெற்று விட்டார் என்று தகவல் வந்திருக்கிறது. இது வேண்டுமென்றே பயிரை மேய்வது போல் இருக்கிறது. அதற்காகத்தான் காலதாமதம் ஆனதோ என்னவோ தெரியவில்லை. காலதாமதத்திற்கு காரணமானவர்கள் மீது கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும்.



திரு. மு. அப்பாதுரை : தலைவரவர்களே, இந்த லாரியைப் பிடித்து வழக்குப் போட்டிருக்கிறார்கள். ஆனால் கடத்திச் செல்லப்பட்ட பொருள்களை வாரியம் கைப்பற்றியிருக்கிறதா அல்லது அவர்களே கொண்டு போய்விட்டார்களா ? அந்தப் பொருள்களை அவர்களே கடத்திச் சென்று விட்டார்கள் என்பதுதான் எனக்கு கிடைத்திருக்கிற தகவல். பல இடங்களில் மின்வாரியத்தில் இப்படி கடத்தல் நடைபெறுவதாகத் தெரிகிறது. துறைமுகத்தில் கூட இப்படிப்பட்ட கடத்தல் நடக்கிறது என்ற புகார் இருக்கிறது. ஆகவே இந்த வழக்கில் துரித நடவடிக்கை எடுக்கப்படுமா ? கடத்தப்பட்டப் பொருள்கள் இன்றைக்கு மின்வாரியத்தில் இருக்கின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே; மாலை 6 மணிக்குப் பிறகு லாரிகள் வெளியே போகக் கூடாது என்பது உத்தரவு. இது 6 மணிக்குப் பிறகு வந்ததனால், துணை செக்யூரிட்டி ஆபீசர், (அசிஸ்டண்ட் செக்யூரிட்டி ஆபீசர்) அதைப் பிடித்தார். ஆகவே திரும்ப அந்த லாரி வெளியே வரவில்லை. 11 மணிக்குப் பிறகு செக்யூரிட்டி ஆபீசர் வந்து அந்த லாரியிலுள்ள சாமான்களை அன்லோடு செய்து லாரியை வெளியே அனுப்பிவிட்டார். ஆகவே சாமான்களுக்குச் சேதம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 670 முதல் 675 வரை பிறகு எடுத்துக்கொள்ளப்படும்.

### ஏர்வாடி அரசு மருத்துவ மனைக்கான கட்டிடம்.

676—(*வினா எண். 13569) திரு. மு. ஜான் வின்சென்ட் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) ஏர்வாடி அரசு மருத்துவமனைக்கு நிரந்தரக் கட்டிடம் இல்லை என்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) மற்றும் (ஆ) பழைய கட்டிடம் பழுதடைந்துவிட்டதால், தற்போது வாடகை கட்டிடத்தில் செயல்பட்டுவருகிறது. புதிய கட்டிடம் கட்ட உரிய நேரத்தில் போதிய நிதி வசதி இருக்கும்போது பரிசீலனை செய்யப்படலாம்.

[1984 ஏப்ரல் 27

திரு. மு. ஜான் வின்சென்ட் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏர்வாடி நகரம் 12,000 முஸ்லீம் மக்களைக் கொண்ட ஒரு பேரூராட்சி மன்றம். அங்கேயுள்ள கோஷா பெண்கள் வெளியூர் செல்வதற்கு வசதியற்ற நிலை இருப்பதால் இது குறித்து பலமுறை புகார் கொடுக்கப்பட்டுள்ளது. ஆகவே இந்த ஆண்டாவது நிரந்தரமாக புதிய கட்டிடம் கட்ட அரசு முன்வருமா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : அதைத்தான் நான் இங்கே குறிப்பிட்டேன். proposals for the construction of new Government Dispensary Buildings என்று பார்ட்-2 ஸ்கீமில் நாம் 1984-85 ஆம் ஆண்டில் ஆராய்வதாக இருக்கிறோம். ஆகவே அதைத்தான் நான் குறிப்பிட்டிருக்கிறேன். 1984-85 ஆம் ஆண்டு பார்ட் 2 ஸ்க்கீமில் ஆராய்ந்த பிறகு, ஆரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

திரு. மு. ஜான் வின்சென்ட் : 1984-85 பார்ட் 2 ஸ்கீமில் எடுப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். அதற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் பேசும்போது டி.எம்.ஓ. அவர்கள் கொடுத்த பதிலில் பொதுப்பணித்துறையால் தான் காலதாமதம் ஏற்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். ஆகையால் அவர்கள் சொல்வது சரியா, அல்லது அமைச்சரவர்கள் சொல்வது சரியா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, பொதுப் பணித் துறை பிரச்சினை வரவில்லை. ஏனென்றால் நாம் கிளியரன்ஸ் கொடுக்க பிறகு அதற்காக நாம் நிதி ஒதுக்கிய பிறகு தான். பொதுப்பணித்துறை எடுத்துக்கொள்ளும். எனவே பொதுப்பணித் துறை பிரச்சினை இதில் எழவில்லை. நிதி ஒதுக்கக்கூடிய நிலைமை தான் இங்கே இருக்கிறது. அதற்குத்தான் நிதிநிலைமைக்கேற்ப என்று சொன்னேன். திட்டவட்டமான முடிவை பைனான்ஸ் டிபார்ட்மெண்டை அணுகிய பிறகு செய்யலாம். நம்முடைய இலாக்கா பொறுத்தவரையில், ஃபைனான்ஸ் டிபார்ட்மெண்ட் பல நேரங்களில் வருவாயை ஆராய்ந்து, இதை விட முக்கியமான ஒரு கட்டிடம் இருக்கிறது என்றால், அதை எடுத்துக் கொள்வார்கள். இதையெல்லாம் பார்த்த பிறகு, எந்த அளவிற்கு முடியுமோ. அந்த அளவிற்குச் செய்கிறேன் என்ற ஒரு வாக்குறுதியைத் தருகிறேன்.



1984 ஏப்ரல் 27]

திரு. கே. தனுக்கோடித்தேவர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் கீழத்தூவல் என்ற ஒரு கிராமச் சுகாதார ஆஸ்பத்திரி இருந்து வருகிறது. அதற்கு கட்டிடம் இல்லாமல் அங்கே பணிபுரிகின்ற அதிகாரிகளுக்குக் கட்டிடம் கட்டிக் கொடுப்பதில், மக்கட்தொகை வேண்டுமென்றும், ரூ. 10,000 தொகையையும், அதற்குரிய இடமும் அந்த கிராமத்தாரால் கொடுக்கப்பட்டிருக்கிறது. மூன்று ஆண்டு ஆகியும், பணிகள் இன்னும் தொடங்கப்படாமல் இருக்கின்றன. இந்த ஆண்டு எடுத்துக்கொள்வதற்கு அமைச்சரவர்கள் ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : இதை இப்படிக் கேட்கக் கூடாது. தனியாக ஆராய்ந்து அதற்குரிய பதிலை வாங்கவேண்டும். மாண்புமிகு உறுப்பினர்களுக்கு இப்போது இல்லை என்று சொன்னால், சங்கடமாக இருக்கும். தனிக் குறிப்பு தந்தால், டிபார்ட்மெண்டு மூலமாக ஆராய்ந்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும். அவர்களுக்கும் சாதகமான ஒரு பதில் இருக்குமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மருத்துவக் கல்வி கற்பிக்கும் இடங்களில் ‘டையலைசர்’ பிரிவு அமைக்கும் திட்டம்.**

677—(*வினா எண். 19918) திரு. சி. கணேசன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா :—

(அ) மருத்துவக் கல்வி கற்பிக்கும் இடங்களில் ‘டையலைசர்’ பிரிவு ஒன்று அமைத்துக் கொடுக்கும் உத்தேசம் அரசுக்கு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) ஆம்.

(ஆ) ஐந்து மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைகளுக்கு டையலைசர் கருவி வாங்கி வழங்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இதை வாங்கி வழங்குவதற்கான நடவடிக்கையை மருத்துவக் கல்வி இயக்குநர் எடுத்துக் கொண்டுவருகிறார்.

[1984 ஏப்ரல் 27

**அரசு ஹோமியோபதிக் கல்லூரியில் பணிபுரியும் பேராசிரியர் மற்றும் விரிவுரையாளர்களுக்கான ஊதியம்.**

678—(* வினா எண் 21153) திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசினர் ஹோமியோபதிக் கல்லூரியில் பணிபுரியும் பேராசிரியர்களுக்கும் (Professors) விரிவுரையாளர்களுக்கும் (Lecturers) ஒரே ஊதியம் என அரசு ஆணையிட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

(முற்பகல் 9-10)

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) மற்றும் (ஆ) தற்போது அரசு ஹோமியோபதி கல்லூரியில் ஒரே ஒரு பேராசிரியர் பதவிதான் உள்ளது. இப்பதவிக்கான சாதாரண நிலை சம்பள விதமும், விரிவுரையாளர்களுக்கான சம்பள விதமும் ரூ. 750—50—1,350 ஆக உள்ளது. ஆனால் பேராசிரியர் பதவிக்கான தேர்வு நிலைச் சம்பள விதம் ரூ. 850—50—1,200—60—1,500 ஆக உள்ளது.

**மருத்துவக் கல்லூரிகளில் பட்டமேற்படிப்பிற்காக விண்ணப்பிக்கும் மாணவர்கள்.**

679—(*வினா—எண். 21365) திரு. என். பழனிவேல் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மருத்துவக் கல்லூரிகளில் பட்ட மேற்படிப்பு வகுப்புக்களுக்கு விண்ணப்பிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அவ்விடங்களின் எண்ணக்கையை அதிகரிப்பது குறித்து அரசு ஆய்ந்து வருகிறதா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) ஆம்.

(ஆ) மருத்துவக் கல்லூரிகளில் உள்ள வசதிகள் மற்றும் ஆசிரியர் மாணவர் விகிதாச்சாரம் ஆகியவைகளைக் கருத்தில் கொண்டு அவ்வப்போது பட்ட மேற்படிப்புகளில் இடங்கள் அதிகரிக்கப்படுகின்றன.



1984 ஏப்ரல் 27]

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் டாக்டர்கள் மிக அதிக அளவில் பட்ட மேற்படிப்பு படிப்பதற்காக விண்ணப்பிக்கிறார்கள். பல பேர்களுக்கு, பல ஆண்டுகளாக விண்ணப்பித்தாலும் கிடைப்பதில்லை. ஆகவே இதை அதிகரிப்பதற்கு அரசிடம் ஏதாவது திட்டம் உள்ளதா ? தற்போது ஓர் ஆண்டுக்கு எத்தனை பேர் விதம் நியமிக்கப்பட்டு வருகிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1982 ஆம் ஆண்டு ஒட்டுமொத்தமாக போஸ்ட்-கிராஜுவேட் டிகிரி கோர்சுக்கு 471 நபர்களை எடுத்துக் கொண்டிருக்கிறோம். போஸ்ட் கிராஜுவேட் டிப்ளமோ கோர்சுக்கு 479 பேர்களை எடுத்துக்கொண்டிருக்கிறோம். இந்த எண்ணிக்கை, 1983 ஆம் ஆண்டு, 471-லிருந்து 490 ஆக உயர்த்தியிருக்கிறோம். டிகிரி கோர்சில் அதேமாதிரி டிப்ளமா கோர்சில் 479 ஆக இருந்த எண்ணிக்கையை 489 ஆக உயர்த்தியிருக்கிறோம். படிப்படியாக அவ்வப்போது தேவைக்கு ஏற்ப, நம்முடைய வசதிகளுக்கு ஏற்ப ஏன் என்றால், போஸ்ட் கிராஜுவேட் பாடங்களைச் சொல்லிக் கொடுப்பதற்கு போஸ்ட் கிராஜுவேட் புரபசர்கள் தேவை, அது மட்டுமல்லாமல், ஒரு புரபசருக்கு இத்தனை போஸ்ட்-கிராஜுவேட் மாணவர்கள் என்று நாம் விகிதாச்சாரம் வைத்திருக்கிறோம். அந்த அடிப்படையிலே நாம் சேர்க்கவேண்டும். அதிலே ஏதாவது கொஞ்சம் ஜாஸ்தியாக இருந்தால், மெடிக்கல் கவுன்சில் ஆப் இந்தியா, அதாவது எம்.சி.ஐ. அவர்கள் அதற்கு ஆட்சேபனை தெரிவிக்கிறார்கள். ஆகவே இவைகளை எல்லாம் மனதிலே கொண்டு நாம் அவ்வப்போது எண்ணிக்கையை உயர்த்திக் கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். பழனிவேல் : தலைவர் அவர்களே, தற்போது போஸ்ட்-கிராஜுவேட் படிக்கக்கூடியவர்கள் எண்ணிக்கை 479 ஆக இருந்தது. 489 ஆக உயர்த்தப்பட்டிருப்பதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்து இருக்கிறார்கள். ஒவ்வொரு ஆண்டும் எத்தனை விண்ணப்பங்கள் வருகின்றன என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ? அதோடு தாழ்த்தப்பட்ட ஆதி திராவிட இனத்தைச் சார்ந்த மாணவர்கள் இந்த மாதிரி போஸ்ட் கிராஜுவேட் மேல் படிப்பிற்காக விண்ணப்பிக்கின்றபோது, அவர்களுக்கு இடமே கிடைப்பதில்லை என்று புகார்கள் வருவதாக பல பேர்கள் சொல்கிறார்கள். எனவே எந்த விகிதாச்சார அடிப்படையிலே அவர்களுக்கு ஒதுக்கப்படுகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

[1984 ஏப்ரல் 27

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போஸ்ட் கிராஜுஏவேட் டிகிரி, மற்றும் போஸ்ட் கிராஜுவேட் டிப்ளமோ, ஆகிய இரண்டையும் சேர்த்தால் சராசரியாக 950 வருகிறது. இப்போது இதை ஆயிரமாக உயர்த்தயிருக்கிறோம். இதற்காக. ஏறக்குறைய 7 ஆயிரம் முதல் 8 ஆயிரம் பேர்கள் வரை, எம்.பி.பி.எஸ். படித்தவர்கள் மனுப் போடுகிறார்கள்; இதிலே சர்வீஸ் கேன்டிடேட்ஸ். அதாவது வேலையிலே இருக்கின்றவர்களுக்கு 60 சதவீதம் என்று நாம் உயர்த்தியிருக்கிறோம். எனவே சர்வீஸ் கேன்டிடேட்டுகளுக்கு நல்ல வாய்ப்பு இருக்கிறது. பிரைவேட் கேன்டிடேட்டுகளுக்குக் கொஞ்சம் வாய்ப்பு குறைவாகத்தான் இருக்கிறது. இதிலே நாம் பல ஆண்டுக்காலமாக திட்டமிட்டு செய்து கொண்டு வருகிறோம்.

அடுத்தபடியாக இன்னொரு கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். நம்முடைய ஆதி திராவிட இனத்தைச் சேர்ந்த உடன்பிறப்புகளுக்கு எவ்வளவு சதவீதம் கொடுக்கப்படுகிறது என்று. நிச்சயமாக போஸ்ட்-கிராஜுஏவேட்டைப் பொறுத்தவரையிலும்—எம்.பி.பி.எஸ். கோர்சில் ஒதுக்கிய அந்த சதவீதத்திற்கு மேலே எப்படி நாம் கொடுக்கிறோமோ, அதேமாதிரி போஸ்ட்-கிராஜுஏவேட்டைப் பொறுத்தவரையிலும்—அவர்களுக்கு நல்ல வாய்ப்பு கொடுத்துக் கொண்டிருக்கிறோம். அவர்களும் திருப்தியாக இருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எல். இளையபெருமாள் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்லுகின்றபோது, கருணையோடு அவர்களுக்குக் கொடுப்பதாகச் சொன்னார்கள். ஆனால் இந்த 18 சதவீதம், எம்.டி., எம். எஸ். போன்ற படிப்பு படிப்பதற்கு கொடுப்பதில்லை என்பது உண்மையா ? இது சம்பந்தமாக முதல் அமைச்சர் அவர்களே, தாக்கீது கொடுத்து, இவர்களுக்கு 18 சதவீதம் கட்டாயமாக ஒதுக்கிக் கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதன்படி நடக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.



1984 ஏப்ரல் 27]

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னைப் பொறுத்தவரையிலே அவர்களுடைய உரிமை என்று வாதாடக்கூடிய பலரிலே நான் ஒருவன். அது மாண்புமிகு உறுப்பினர் இளையபெருமாள் அவர்களுக்கே நன்கு தெரியும். அண்மையிலே டாக்டர் அம்பேத்கார் விழாவிலே பேசிய போது கூட அதைத்தான் சொன்னேன். சலுகைக்கும் உரிமைக்கும் வித்தியாசம் இருக்கிறது. டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சியிலே, அவர்களுக்கு முழுவதுமாக உரிமைகள் கொடுக்கப்படும் என்று சொல்லிக் கொள்கிறேன். இதிலே சின்ன ஒரு பிரச்சினை இருக்கிறது.

போஸ்ட் கிராஜுஏவேட்டைப் பொறுத்தவரையில் பிரச்னை இல்லை. போஸ்ட் கிராஜுஏவேட்டுக்கு விகிதாச்சார அடிப்படையில் கொடுத்துவிடுகிறோம். சூப்பர் ஸ்பெஷலிஸ்ட்ஸ் என்பதைப் பொறுத்தவரையில், அதற்கு இல்லாமல் இருந்தது. இப்போது அவர்களிடம் கேட்டிருக்கிறேன். நீங்களும் மனு போடுங்கள் மனு போட்டால் தான் கிடைக்கும், மனுவே போடவில்லை என்றால் கிடைக்காமல் போய்விடும் என்று சொல்லியிருக்கிறேன்.

I am encouraging all the persons belonging to Adi Dravida Community to apply.

அந்த வகையிலே அப்ளை செய்தால் நன்றாக இருக்கும். (குறுக்கீடு) மனு போட்டு கிடைக்கவில்லை என்றால், மாண்புமிகு உறுப்பினர் அதைக் குறிப்பிட்டு என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தால் நிச்சயமாகக் கவனிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவக் கல்வியில் பட்ட மேற்படிப்பு படித்த பிறகு, மற்ற கல்வித் துறைகளில் இருப்பதைப்போல ஆராய்ச்சிப் பட்டம் பெறுவதற்கு வாய்ப்பு இருக்கிறதா ? இல்லையென்றால் அந்த வாய்ப்பை உருவாக்கித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா ?

[1984 ஏப்ரல் 27

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆராய்ச்சி என்பது ஒரு வகை. இருந்தாலும் இப்பொழுது முதலிடம் எதற்காக கொடுக்கவேண்டும் என்றால், உதாரணத்திற்கு சொல்கிறேன். எம். டி. அனஸ்தீஷியாலஜி. அனஸ்திஷ்யாவைப் பொறுத்த வரையில், தேவையான அளவுக்கு டாக்டர்கள் கிடைக்கவில்லை என்பதற்காக அனஸ்தீசியாவுக்கு ஜாஸ்தியாக இடங்களை ஒதுக்கியிருக்கிறோம். வருகின்ற ஆண்டு எம்.டி. அனஸ்திசியாலஜியை தஞ்சாவூரிலும், டிப்ளோமா இன் அனஸ்தீசியா, கோயம்புத்தூரிலும் உள்ள கல்லூரிகளிலே, இந்த படிப்பில் ஸ்பெஷலிஸ்டுக்காக இடத்தை ஒதுக்கியிருக்கிறோம். அது மட்டும் அல்லாமல், பிறகு ஆராய்ச்சிக்குப் பதிலாக

Diploma in Leprosy
M.D. Leprosy.
M. Pharmacy.
M.D. Nutrition and Diabetes
M.Ch. Gastro Entrology.
M.Ch. Vascular Surgery.
M.D. Pathalogy.
Dip. in Venerology.
Dip in Diabetelogy.
M.Ch. (Cardio-thoracic Surgery)

என்று இவைகளையெல்லாம் நாம் துவக்குவதற்காக திட்டம் வைத்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதற்குப் பிறகு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கக்கூடிய அந்தக் கருத்தை நாம் நடைமுறைப்படுத்த முயற்சிக்கலாம்.

**திரு. மா. சின்னராசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போஸ்ட் கிராஜுவேட் மெடிகல் ஸ்டடீசுக்கு இப்பொழுது அதிகமாக விண்ணப்பங்கள் வருவதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். நான்-சர்வீஸ் கேண்டிடேட்டுகளுக்கு இதிலே ஒதுக்கப்படுகிற இடம் தேவைக்கு ஏற்ப இல்லை என்பது நடைமுறையில் இருக்கிறது. ஆகவே அதிக அளவில் நான்-சர்வீஸ் கேண்டிடேட்களுக்கு இடம் கொடுத்து—அவர்கள் வசதி படைத்தவர்கள், ஆகவே, அவர்களிடம் அதற்குரிய முழு கட்டணத்தைப் பெற்றுக் கொண்டு கூட அதிகமான இடத்தை—அவர்களுக்குக் கொடுக்கிற வகையில் மெடிகல் கவுன்சிலை ஆலோசித்து அரசு நடவடிக்கை எடுக்குமா ?



1984 ஏப்ரல் 27]

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அரசாங்கத்தைப் பொறுத்தவரையிலே, We are in a socialistic egalitarian society ஆகவே, அந்த வகையிலே நாம் இருக்கக்கூடிய காரணத்தாலே தனிப்பட்ட சிலரிடத்திலே கட்டணத்தை அதிகமாக வாங்கிக் கொண்டு, அவர்களுக்கு தனியாக இடம் கொடுப்பது என்பது நம்முடைய கொள்கைக்கு, நம்முடைய சித்தாந்தத்திற்கு நேர் மாறாக இருக்கும். ஆகவே, அந்த வகையிலே ஏற்க இயலாது என்ற முடிவுக்கு வந்திருக்கிறோம். அதேநேரத்தில் இன்னொன்றை இந்த நேரத்தில் சொல்ல விரும்புகிறேன்.

ஒரு தவறான எண்ணம் டாக்டர்கள் மத்தியிலே பரவி இருக்கிறது. போஸ்ட் கிராஜுவேட் படிக்க வேண்டும். போஸ்ட் கிராஜுவேட் படிக்க வேண்டும் என்று அத்தனை பேரும் ஆவலோடு இருக்கிறார்கள். இது எங்கே கொண்டு போய் முடியும் என்றால், ஜெனரல் பிராக்டிஷனரே பற்றாக்குறையாக உருவாகக் கூடிய பயங்கரமான ஆபத்தை ஏற்படுத்தும். அந்த அவையின் மூலமாக அவர்களுக்கு நான் சொல்லிக் கொள்கிறேன். கூடிய வரையில் ஜெனரல் பிராக்டிஸ் பண்ணுவது நன்றாக இருக்கும். Because General Practitioners will ultimately become a vanishing tribe என்று சொல்லக்கூடிய ஒரு சித்தாந்தத்தை சொல்லி, டபிள்யூ.எச்.ஓ. கூட தன்னுடைய அதிர்ச்சியை வெளிப்படுத்தி இருக்கிறது. போஸ்ட் கிராஜுவேட்டாக இருந்து தான் ஒரு டாக்டர் சிறப்பாக செயல்பட வேண்டும் என்பது தேவையில்லை. நல்ல ஜெனரல் பிராக்டிஷனராகக்கூட செயல்பட முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 9-20)

**திரு. பெ. சு. திருவேங்கடம் :** தலைவர் அவர்களே, மருத்துவக் கல்லூரியில் பட்ட மேற்படிப்புக்கு கடுமையான போட்டி இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். இந்த ஆண்டு பட்டமேற்படிப் பிற்கான இடங்களை அதிகமாக ஆக்கியதாகவும் நேர்முகத் தேர்வுக்கு ஆஜராகாதவர்களுக்கு அப்படிப்பட்ட இடங்கள் வழங்கப்பட்டதாகவும் பத்திரிகைகளிலே செய்தி வந்ததே, அதற்கு என்ன காரணம் என்பதை அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா ?

[1984 ஏப்ரல் 27

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** தலைவர் அவர்களே, பத்திரிகையிலே என்ன செய்தி வந்தது என்று எனக்குத் தெரியாது.

It is not possible.
நேர்முகத் தேர்வுக்கு வரவில்லையென்றால் இடமே கிடைக்காது. காரணம் நேர்முகத் தேர்வுக்கு மார்க் இருக்கிறது. நேர்முகத் தேர்வுக்கு வராமல் இடம் கிடைப்பது இயலாத காரியம். ஏதோ பத்திரிகையிலே போட்டு இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அவர்களுடைய கற்பனா சக்திக்கு நாம் பாராட்டுதலைத் தெரிவிக்க வேண்டும்.

**திரு. ஏ. பாலுச்சாமி :** தலைவர் அவர்களே, எம்.டி.எம்.எஸ். போன்ற போஸ்ட் கிராஜுவேட் படிப்பிற்கு எம்.பி.பி.எஸ்; படித்து முடித்தவுடனேயே அவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்களா ? இத்தனை ஆண்டுக்காலம் சர்வீஸ் உள்ளவர்களுக்குத்தான் கொடுக்கவேண்டும் என்று நிபந்தனை ஏதாவது இருக்கிறதா என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** எம்.பி.பி.எஸ் படித்ததற்குப் பிறகு அவர்கள் interneeship முடித்ததற்குப் பிறகு அப்ளிகேஷன் மெரிட் பேசிசில் கிடைப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. இத்தனை ஆண்டுகள் இருக்கவேண்டுமென்ற நிபந்தனை இல்லை. முன்பெல்லாம் எப்படி இருந்தது என்றால் டிப்ளமா படிக்காமல் நேரடியாக எம்.பி.பி.எஸ். படித்துவிட்டு M.S. (ortho.) இல் சேரலாம் என்று இருந்தது. ஆனால் இப்போது Diplomo (ortho.) முடித்தால்தான் M.S. (ortho.) போடமுடியும். அதேமாதிரி Diploma (opthalmology) முடித்தால்தான் M.S. (opthalmology) போடமுடியும். இரண்டு டயர் சிஸ்டத்தை தற்போது வைத்திருக்கிறோம். இப்படி எதற்காக வைத்திருக்கிறோம் என்றால் இரண்டுபேரும் அப்ளிகேஷன் போட்டு ரஷ் ஆக இருக்கக்கூடிய நிலைமையைத் தடுப்பதற்காகத்தான். டிப்ளமோ பாஸ் பண்ணியதற்குப் பிறகு தான் போட வேண்டுமென்று இப்போது நிபந்தனை வைத்திருக்கிறோம்.

**திரு. க. பாலசுப்பிரமணியன் :** தலைவர் அவர்களே. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த போஸ்ட் கிராஜுவேட் சம்பந்தமாக பதில் சொல்லும்போது 60 சத விகிதம் பணியிலே இருப்பவர்களுக்கும் மீதியுள்ள இடங்கள் பணியில் இல்லாத மற்ற பிரிவினர்களுக்கும் கொடுப்பதாகச் சொன்னார்கள். அப்படி என்றால் பணியில் இல்லாதவர்களுக்கு வாய்ப்புக் குறைவாக இருக்கிறதே, அப்படிப்பட்டவர்களுக்கு ஆர்வம் அதிகமாக இருந்தும் அவர்களுக்கு வாய்ப்பு அதிகமாக இல்லையே அதோடு பணியில்



1984 ஏப்ரல 27]

இருக்கிறவர்களுக்கு 60 சத வீதம் பேர்களுக்கு வாய்ப்புக் கொடுத்து அவர்கள் படித்து முடித்தபின்னர் தனியாக அரசின் பணியில் இல்லாமல் தனியாக உத்தியோகத்திலோ அல்லது பிரைவேட் பிராக்டிசிலோ ஈடுபடுகின்ற அளவுக்கு பணிகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள் என்ற விவரம் அரசுக்கு வந்திருக்கிறதா ? அப்படி யாராவது ஈடுபட்டிருந்தால் அவர்களிடமிருந்து அவர்களுக்காகச் செலவிடப்பட்ட தொகையை அரசு வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** தலைவர் அவர்களே, சர்வீஸ் கேண்டிடேட்ஸ் பொறுத்தவரையில் சர்வீசிலே இருந்துகொண்டு விண்ணப்பம் போட்டால் அவர்களுக்கு வாய்ப்புக் கொடுக்கிறோம். அப்போது அதை முடித்தபிறகு அவர்கள் சர்வீசிற்குத்தான் போய்ச் சேரவேண்டும். சர்வீசில் இருந்துகொண்டு போஸ்ட் கிராஜுவேட்டுக்கு விண்ணப்பித்து படித்து முடித்த பிறகு அந்த சர்விசிற்கே போகாமல் தனியாக பிராக்டிஸ் செய்ய முயற்சி செய்கிறவர்கள் மீது நிச்சயமாக நடவடிக்கை எடுத்து டிஸ்மிஸ் செய்யக்கூடிய அளவுக்கு உத்திரவிடுகிறோம். அந்தமாதிரியாக எந்த கேசும் கவனத்திற்கு இதுவரையில் வரவில்லை. போஸ்ட் கிராஜுவேட் படித்ததற்குப் பிறகு அவர்கள் சர்விசிற்குத்தான் போகவேண்டும். அதிலே தயவுதாட்சண்யம் கிடையாது. இங்கே எழுப்பப்பட்ட பிரச்சினை சர்வீசில் இருக்கிவர்களுக்கு கொஞ்சம் ஜாஸ்தியாக இருக்கிறது. சர்வீசில் இல்லாதவர்களுக்கு குறைவாக இருக்கிறது என்று சொல்லப்பட்டது. சர்வீசில் இருப்பவர்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து, அரசாங்கத்திற்கு விசுவாசமாக இருக்கிறவர்களுக்கு 40 சதவீதமாக இருந்ததை 60 சதவீதமாக ஆக்கவேண்டுமென்ற முறையிலே சர்வீசில் இருக்கின்ற அத்தனை டாக்டர்களும் விண்ணப்பித்துக் கொண்டதற்கேற்ப முடிவு எடுத்து அண்மையில் அப்படிப்பட்ட உத்திரவை நாம் போட்டிருக்கிறோம்.

### தல்லாற்றில் அணை கட்டி மின் உற்பத்தி செய்யும் திட்டம்.

670—(*வினா எண். 17579)—**திரு. பி. கந்தசாமி மற்றும் திரு. ப. செ. சென்னிமலை என்கிற கந்தசாமி :** மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம் தல்லாற்றில் அணைகட்டி மின்சாரம் எடுக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது செயல்படுத்தப்படும் ?

[1984 ஏப்ரல் 27

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** (அ) மற்றும் (ஆ) : இத்திட்டம் குறித்து தமிழ்நாடு மின்வாரியம் பொதுப் பணித்துறையுடன் இணைந்து விரிவான ஆய்வுப் பணிகளை மேற்கொண்டுவருகிறது. விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டபின் மைய அரசின் அனுமதி பெற அனுப்பப்படும். அனுமதி கிடைத்தவுடன் இத்திட்டம் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

**திரு. மா. சின்னராசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் கோவை மாவட்டத்தில் நல்லாற்றில் எந்த இடத்தில் அமைக்கப்படும்? எவ்வளவு மெகா வாட மின்சாரம் இதிலிருந்து உற்பத்தி செய்யப்படும்? இந்தத் திட்ட மதிப்பீடு எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்பர் நீர் ஆற்றுக்கும் திருமூர்த்தி நீர்வாயருக்கும் இடையே இந்தத் திட்டம் அமையும். இதன் மூலம் 155 மெகா வாட் மின் உற்பத்தி கிடைக்கும்.

**தமிழ்நாட்டில் யானைகள் வைத்துக் கொண்டுள்ள திருக்கோயில்கள்.**

671—(*வினா எண். 18300)—திரு. பெ. க. திருவேங்கடம் மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் உள்ள கோவில்களில் யானைகள் வைத்துக் கொண்டுள்ள கோவில்கள் எத்தனை?

(ஆ) யானைகள் வைத்துக்கொள்ள கோவில்கள் எந்த அடிப்படையில் தேர்வு செய்யப்படுகின்றன?

(இ) யானைகளின் உணவுக்கு எந்த அடிப்படையில் நிதி ஒதுக்கப்படுகிறது?



1984 ஏப்ரல் 27]

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** (அ) தமிழ்நாட்டில் உள்ள திருக்கோவில்களில் யானைகள் வைத்துக்கொண்டுள்ள திருக்கோவில்கள் 35.

(ஆ) திருக்கோயில்களுக்கு உபயமாகவரும் யானைகளை திருக்கோவிலுக்காக வைத்துக் கொள்ளப்படுகிறது. அவ்வாறு உபயமாக வரும் இனங்களில் யானையை பராமரிக்க ஆண்டு செலவிற்கு வட்டி வருவாயாக கிடைக்கும் அளவில், ஒரு தொகையினை உபயதாரர் முதலீடு செய்து, அம்முதலீட்டினை திருக்கோவில் நிருவாகத்தினரிடம் ஒப்படைத்து ஒப்பந்த பத்திரமும் எழுதிக் கொடுக்க வேண்டும் என்றும், அப்படி செய்தால் தான் யானையை உபயமாக பெற வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. தேவையான திருக்கோயில்களுக்கு வனத்துறையிடமிருந்து யானை விலைக்கு வாங்கப்படுகிறது.

(இ) ஒவ்வொரு திருக்கோயிலின் வரவு-செலவுத் திட்ட அனுமதிப்படி நிதி ஒதுக்கப்படுகிறது

**திரு. பெ. க. திருவேங்கடம் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் உள்ள திருக்கோயில்களில் யானைகள் வைத்துக்கொண்டுள்ள திருக்கோவில்கள் 35 என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். பரவலாக பல்வேறு இடங்களில் இந்த யானைகளுக்கு சரியான உணவு அளிக்காத ஒரு சூழ்நிலை இருக்கிறது. பராமரிப்பும் சரியான ஒரு முறையில் கொடுக்கப்படுவது இல்லை. காரணம் யானை வாய் இல்லாத ஜீவன் அவைகள் சங்கம் அமைத்துக் கொள்ள முடியாது. கோரிக்கை எழுப்ப முடியாது. சிபாரிசு பிடிக்க முடியாது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் அந்த யானைகளுக்கு சரியான உணவையும் பராமரிப்பையும் அளிக்கும் வகையில் ஏதாவது புதிய திட்டத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செயல்படுத்தி இருக்கிறார்களா? செயல்படுத்தப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலயங்களில் யானைகளை வைத்து வளர்க்கின்ற, பராமரிக்கின்ற அந்த முறை நீண்ட காலமாக இருந்து வருகிறது. அது சமீபகாலத்தில் நம்முடைய வன விலங்கு பாதுகாப்புச் சட்டம் எல்லாம் ஏற்படுத்திய பிறகு அவைகள் முறையாக பாதுகாக்கப்படவேண்டும் என்றும், உணவு வழங்க வேண்டும் என்றும், அதை நடத்துவதிலேயும், அதை பழக்குவதிலேயும் நம்முடைய வன விலங்குகளை எந்த அளவுக்கு பாதுகாக்கவேண்டுமோ அந்த அடிப்படையில் செய்யவேண்டும் என்றும் 14 குறிப்புகள் அடங்கிய அறிவிப்புகளை, அறிவுரைகளை ஆலயங்களுக்கு வழங்கியிருக்கிறோம். அதிலே முறையாக எப்படி அந்த யானைகள் பாதுகாக்கப்படவேண்டும் குறிப்பாக 6 வயது முதல் 8 வயது வரை தான் ஆலயங்களில் அந்த யானைகளை வைத்துக் கொள்ளுவது நல்லது. அதற்கு பிறகு வருகின்றபோது, யானைகள் குறிப்பாக

கூட்டமாக இருந்து பழகிக்கொண்டு இருப்பவை, தனியாக இருக்கிற காரணத்தால் ஒரு குறிப்பிட்ட அந்த வயதுக்கு மேல் இருந்தால் விரக்தி அடைந்து அது வேறு பழக்க வழக்கங்களுக்கு அல்லது தொல்லைகள் தருவதற்கு கூட வழி ஏற்படுத்தப்படக்கூடும். அவைகளுககும் தொல்லை ஏற்படக்கூடும். ஆகவே அந்த வயது ஆன உடனே அதை வனத்துறையில் கொடுத்து வேறு குட்டி யானைகள் வாங்கிக் கொள்ளவேண்டும் என்று அறிவுறுத்தி இருக்கிறோம். உணவு வகைகளிலே கூட நம்முடைய வனத் துறையில் இருக்கிற கால்நடை மருத்துவர்கள் தருகின்ற அந்த குறிப்புப் படி வழங்க வேண்டும். வைத்திய வசதிகள் செய்யவேண்டும். அந்த மத சின்னங்களை அணிவதற்காக உட்கார வைத்து பழக்குவது போன்றவைகள் எல்லாம் செய்யக் கூடாது. அவைகள் நிற்கின்ற அளவிலேயே ஒரு உயரமான ஆசனத்தை வைத்து தான் செய்ய வேண்டும். இந்த மாவுத்தர்கள் முறையாக இல்லாமல் அதை வைத்துக் கொண்டு பிழைப்பை நடத்துவது அல்லது அதை வைத்துக்கொண்டு தொல்லை தருவது என்பது கூட கடுமையாக தடுக்கப்பட்டு இருக்கிறது. இப்போது தான் இந்த வன விலங்கு பாதுகாப்பு சட்டத்தின் அடிப்படையில் இந்த குறிப்புகளை, அறிவுரைகளை எல்லாம் ஆலயங்களுக்கு அனுப்பி இருக்கிறோம். இதை மீறி யாராவது நடந்தால் அல்லது யானைகளுக்கு பாதகம் அல்லது தொல்லைகள் ஏற்படுகின்ற சூழ்நிலைகள் இருந்தால், அந்த நிர்வாக அதிகாரிகள் அல்லது அறங்காவலர்கள் தண்டனைக்கு உட்படுத்தப்படுவார்கள் என்று கண்டிப்பாக அறிவுரைகள் வழங்கப்பட்டிருக்கின்றன.

(முற்பகல் 9-30)

**திரு. பெ. சு. திருவேங்கடம் :** தலைவர் அவர்களே, யானைகள் எப்படிப் பராமரிக்கப்படவேண்டும், எப்படி அவைகளுக்கு உணவு அளிக்கப்பட வேண்டும் என்கிற வகையில் வனத்துறை விதிகளை கோவில்களுக்கு அனுப்பியிருக்கிறார்கள் என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். ஆனால் அதை சரியான முறையில் நடைமுறைப் படுத்துகிறார்களா என்றால் இப்போது சரியான கண்காணிப்பு இல்லை என்பதுதான் என் கேள்வியின் முக்கிய நோக்கமாகும். சாதாரணமாக ஒரு விவசாயி வண்டிக்கு மாடைக் கட்டிக் கொண்டு சென்றால் காலில் லாடம் இருக்கிறதா இல்லையா என்று கண்காணிக்க அதிகாரிகளை வைத்திருக்கிறோம். அப்படி லாடம் அடிக்கவில்லையென்றால் உடனடியாக தண்டனை வழங்குகிறோம். ஆனால் இப்படிப்பட்ட புனிதமான ஆலயங்களில் யானைகள் சரியானமுறையில் பராமரிக்கப்படாத காரணத்தால் வனத்துறை அதிகாரிகள் அல்லது கால்நடை சம்பந்தப்பட்ட டாக்டர்களை அதற்காக நிர்ணயித்து அவர்கள் திடீரென்று சோதனை செய்து சரியான நடவடிக்கைகள் எடுக்காத கோவில் அதிகாரிகள்மீது நடவடிக்கை எடுக்கிற ஒரு நிலையை அரசு ஏற்படுத்துமா என அறியவிரும்புகிறேன்.





**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** தலைவர் அவர்களே, அதைத்தான் என் பதிலில் தெரிவித்தேன். வன விலங்குகள் பாதுகாப்புச் சட்டத்தின் அடிப்படையில் அதை நிறைவேற்றுகிற பொறுப்பில் இருக்கிற வனத்துறை அதிகாரிகள் கண்காணிக்கிறார்கள். அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவருகிற போது நடவடிக்கைகள் எடுக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர்களைப் போன்றவர்கள் அல்லது இந்த மன்றத்தின்மூலம் இப்படிப்பட்ட செய்திகளைத் தெரிந்துகொள்கிற போது, அல்லது வேறு பொதுமக்கள் யாராக இருந்தாலும் சரி இப்படி யானைகள் போன்ற விலங்குகளுக்கு கொடுமை இழைக்கப்படுகிறது என்று தெரிவித்தால் உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

**திரு. உ. சுப்பிரமணியன் :** தலைவர் அவர்களே, தனியார் அன்புக் காணிக்கையாக வழங்குகிற யானைகளுக்கு தீனி போடுவதற்காக என்டோமென்ட் க்ரியேட் செய்கிறார்கள். அது யானையைக் கட்டி தீனி போடுவதற்கு போதுமான அளவிற்கு இருக்கிறதா? அப்படிப் போதாது என்றால் அதற்கு மாற்று ஏற்பாடு ஏதாவது அரசாங்கம் செய்கிறதா? ஓராண்டுக்கு முன்னால் சிவகங்கை தேவஸ்தானத்தைச் சேர்ந்த காளையார்கோவிலில் ஒரு யானைக்கு தீவனம் சரியாக போடாததால் அது சிக்காக இருந்து இறந்து போயிருக்கிறது. அதுபற்றி நோட்டீஸ் எல்லாம் அடித்துக் கொடுத்தது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? ஆகவே அப்படிப்பட்ட சூழ்நிலையில், இந்து ரிலிஜியஸ் என்டோமென்ட் போர்ட் இதைக் கண்காணிக்க என்ன நடவடிக்கை எடுக்கும்?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** தலைவர் அவர்களே, அப்படி அவர்கள் தருகிற நிதியிலிருந்து அல்லது வைப்புத் தொகையில் இருந்து கிடைக்கிற அந்த வட்டித் தொகை அப்படி உணவு வழங்குவதற்கு போதுமான அளவிற்கு இல்லை என்ற சூழ்நிலை இருந்தால் அந்த ஆலயத்திற்கு வருமானம் இருந்தால் அதிலிருந்து இதெல்லாம் வழங்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகிற அந்த சிவகங்கை தேவஸ்தானம் என்பது யானையை பட்டும் பட்டினி போடவில்லை, அங்கிருக்கிற, அங்கே வேலைசெய்கிற அலுவலர்கள் எல்லோரையும் பட்டினி போட்டுக் கொண்டிருப்பதாக தகவல் வந்துதான் நடவடிக்கை எடுத்திருக்கிறோம். ஆனால் இப்போது புதிதாக தம்முடைய கருத்துக்களைத் தெரிவிக்கிறபோது கூடுமானவரையில் ஆலயங்களில் இப்படி யானைகளை வைத்துப் பராமரிக்கிற அந்த உணர்வைக் குறைக்க வேண்டும். அதை ஊக்குவிக்கக்கூடாது என்றதொரு கருத்தை அரசாங்கம் தெளிவாகத் தெரிவித்துக் கொண்டிருக்கிறது.

**திரு. டி. மணி :** தலைவர் அவர்களே, இந்த யானைகளுக்கு தீவனம் வழங்குவது சம்பந்தமாக, அமைச்சர் அவர்கள் சில கருத்துக்களைச் சொன்னார்கள். பொதுவாக யானைகளுக்கு தென்னங்கீற்று அதிகமாக வழங்கப்படுகிறது. இப்போது தென்னங்கீற்று, ஒரு ரூபாய்க்கு மேலாகிறது. இந்த விலைவாசியிப் அடிப்படையில் தென்னங்கீற்றுகள் அதிகமாகக் கிடைப்பதற்காக நிதிவசதி ஆலயங்களுக்குச் செய்து கொடுக்கப்படுகிறதா? அப்படி இல்லை என்றால் இனியாவது செய்து கொடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** தலைவர் அவர்களே, தென்னங்கீற்றுதான் அதற்குத் தரவேண்டும் என்பதில்லை. யானை எப்போதுமே நல்ல சைவ உணவை, இலைகளைச் சாப்பிட்டுப் பழக்கப்பட்டிருக்கிற ஒரு அற்புதமான பிராணி, தென்னங்கீற்று இல்லை என்றால் வேறு பச்சைத் தழை, இலைகள் முதலியவைகளை வழங்குகிறார்கள். வழங்குவதற்கான அறிவுரைகள் வழங்கப்பட்டிருக்கிறது.

**திரு. செ. இராமலிங்கம் :** தலைவர் அவர்களே, திருபுவனம் ஆலயத்தில் ஒரு வருட காலத்திற்குள்ளாக இரண்டு பக்தர்களை யானை உடனடியாக இறைவனடி சேர்த்துவிட்டது. அந்த யானைக்கு தற்போது மதம் பிடித்திருப்பதாக் கூறப்படுகிறது. ஆகவே உடனடியாக இந்த யானைகளை கோவிலில் வைத்திருப்பதை தடை செய்ய அரசு ஆவன செய்யுமா.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** தலைவர் அவர்களே, அதுபற்றிய தகவல் இல்லை. இருந்தாலும் பொதுவாக ஆலயங்களில் யானைகளை வைத்து அதை வளர்க்கிற முறையைத் தவிர்க்கவேண்டுமென்று, குறைக்க வேண்டுமென்று கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கிறது. தடை செய்வது என்பது முடியாது. காரணம், நீண்ட காலமாக பழக்கத்தில் இருந்து வருகிற பல்வேறு நம்பிக்கையின் அடிப்படையில், ஆன்மீக நம்பிக்கையில் அடிப்படையில் கூட இருந்துவருகிற காரியங்கள் அவை. ஆகவே நாம் அந்த அளவிற்கு உடனடியாக ஒட்டுமொத்தமாக தடை விதிக்க இயலாது.

**திரு. கி. அன்பழகன் :** தலைவர் அவர்களே, கோவில் யானைகளை கோவில் நிகழ்ச்சிகள் தவிர மற்ற தனிப்பட்டவர்கள் நடத்துகிற நிகழ்ச்சிகளுக்கு வாடகை அடிப்படையில் தந்து அதன் மூலம் வருவாயைப் பெருக்கி அரசாங்கம் அதைப் பயன்படுத்திக்கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** தலைவர் அவர்களே அப்படி அனுமதிக்கிற காரணத்தினால் தான் அதை வியாபாரப்பொருளாக்கி அதற்கு தொல்லைகள் எல்லாம் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த முறைகளைத் குறைக்க வேண்டும், தவிர்க்கவேண்டும் என்று தெரிவித்திருக்கிறோம்.





**திரு. தி. கா. நல்லப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 35 ஆலையங்களிலே யானைகள் வைத்திருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இந்த 35 ஆலையங்களிலே உள்ள யானைகளுக்கு உணவிற்காக ஒரே மாதிரியான செலவு செய்யப்படுகிறதா அல்லது அந்தந்த ஆலையங்களினுடைய வருவாயை அனுசரித்து செலவு செய்யப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தந்த ஆலையங்களுக்கு உள்ள வருவாய்க்கு ஏற்ப இந்த உணவு வழங்கப்படுகின்றது என்றாலும். அந்த யானைகளுக்குத் தேவையான உணவு வழங்கப்பட வேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டிருக்கிறது.

**திரு. என். பழனிவேல் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கோவில்களிலே வைத்திருக்கக்கூடிய யானைகளுக்கு ஒரு நாளைக்கு உணவுக்காக எவ்வளவு செலவு செய்யப்படுகின்றது என்பதைத் தெரிவிப்பதோடு, இந்த யானைகள் இருப்பதால் கோவில்களுக்கும். பொதுமக்களுக்கும் ஏற்படக்கூடிய நன்மைகள் என்ன என்பதையும் அதோடு 6 ஆண்டு காலமாக யானைகளை ஒரே இடத்தில் வைத்திருப்பதால், அவைகளுடைய இன விருத்தி பாதிக்கப்படாதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போட்டால், இதைப்பற்றி தீவிரமாக ஆராய்ச்சி செய்து இதற்கு நல்ல முறையில் பதிலளிக்க இயலும்.

**கும்பகோணம் வட்டம் அருள்மிகு ஆகாச மாரியம்மன் கோயில் திருவிழாவின்போது ஏற்பட்ட தீ விபத்து.**

672.—(* வினா எண் 18387)—திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு செய்தி—அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், கும்பகோணம் வட்டம், ஆகாச மாரியம்மன் கோயிலில் 1981 ஆம் ஆண்டு நடைபெற்ற திருவிழாவின் போது ஏற்பட்ட தீ விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு அரசு நிதிஉதவி அளித்ததா?

(ஆ) ஆம் எனில், எத்தனை பேருக்கு அளிக்கப்பட்டது?

[1984 ஏப்ரல் 27

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** (அ) மற்றும் (ஆ) மேற்படி விபத்தில் மாண்ட திருவாளர்கள் சுப்பையா மற்றும் காந்தி ஆகிய அருள்மிகு ஆகாச மாரியம்மன் கோவில் அர்ச்சகர்கள் குடும்பத்திற்கு திருக்கோயில் நிதியிலிருந்து தலா ரூ. 750-ம், முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து தலா ரூ. 1,000 வழங்கப்பட்டுள்ளது. இது தவிர, மேற்கண்ட இருவருக்கும், மேலும் தலா ரூ. 2,000 உதவித்தொகை முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து அளிக்க உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டு உள்ளன. மற்றும் விபத்தில் காயமுற்ற திரு. ராசாங்கத்திற்கு ரூ. 500 திருக்கோயில் நிதியிலிருந்து வழங்கப்பட்டுள்ளது.

**திரு. செ. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாச்சியார் கோயில், ஆகாச மாரியம்மன் கோயிலில் இரண்டு ஆண்டுகளுக்கு முன் ஏற்பட்ட தீ விபத்தில் அந்த ஸ்தலத்திலேயே இருவர் மாண்டிருக்கிறார்கள். காயமுற்ற மூவர் மருத்துவமனையில் அனுமதிக்கப் பெற்று, ஒரு மாத காலத்திற்குப் பிறகு திரும்பியிருக்கிறார்கள். அவர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கின்ற நிவாரணத் தொகை மிகவும் குறைவானது. எனவே, குறைந்த பட்சம் முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து ரூ. 5.000 வழங்க அரசு ஆணை பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** தலைவர் அவர்களே, அப்படிப் பட்ட விதிகள் இப்போது இல்லை. ஆனாலும், ஏற்பட்டிருக்கக்கூடிய சம்பவத்தையும், துயரத்தையும் பற்றி முதலமைச்சர் அவர்களுக்கு நாங்கள் எடுத்துச் சொல்வதற்குப் பிறகுதான் ஆயிரம் ரூபாய் போதாது என்று, மேலும் இரண்டாயிரம் ரூபாய் வழங்கியிருக்கிறார்கள். ஆகவே, 3,750 ரூபாய் இப்போது வழங்கப்பட்டிருக்கிறது. அரசுத் தரப்பிலேயிருந்து இப்போது இந்த அளவில்தான் உதவி வழங்க இயலும். ஆனால், அந்தக் குடும்பத்தினுடைய சூழ்நிலைகள், நிலைமைகள் பற்றித் தகவல் தருவதன் மூலம், மேலும் அறநிலையத் துறையின் மூலமாகவோ அல்லது பொதுமக்களிடமிருந்து அவர்களுக்கு உதவி பெற்றோ அறநிலையத் துறை தக்க நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அரசு அவர்களுக்கு அறிவுரை வழங்கும்.

**திரு. செ. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீ விபத்தில் இறந்த அந்த அர்ச்சகர்கள் குடும்பத்தில், அவர்களுடைய வாரிசுதாரர்களுக்கு இதுவரை வேலை கொடுக்கப்படவில்லை என்று கூறப்படுகிறது. மேலும், இறந்தவர்களுக்கு பணிக் காலத்தில் அவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய சம்பள பாக்கிகள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. இந்த இரண்டையும், உடனடியாகப் பரிசீலித்து இந்தக் குடும்பத்திற்கு வழங்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.



1984 ஏப்ரல் 27]

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** தலைவர் அவர்களே, சென்ற ஆண்டிலே இருந்து ஆலைய அலுவலர்கள் இப்படி எதிர்பாராது மரண முற்றால், அவர்கள் குடும்பத்திற்கு ரூ. 5,000 வழங்குவதற்கு இன்சூரன்ஸ் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதைப்போலவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிப்பதுபோல். அவர்கள் குடும்பத்தில் யாராவது வேலை செய்வதற்கு தகுதியுள்ளவர்கள் இருந்தால், அவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அப்படி வேலைபார்ப்பதற்கு தகுதியுள்ளவர்கள் இருந்தால், அவர்களுக்கு வேலை வாய்ப்பு அங்கே இருந்தால், இரண்டையும் பரிசீலித்து அறநிலையத் துறை தக்க நடவடிக்கைகளை எடுக்கும்.

## ஆலையங்கள் சம்பந்தப்பட்ட வழக்குகளை விசாரிக்க தனி தீர்ப்பாயம் (Tribunal) ஏற்படுத்தும் திட்டம்.

673—(*வினா எண் 21009)—**திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆலையங்கள் சம்பந்தப்பட்ட வழக்குகளை விசாரிக்க தனி 'டிரிபியூனல்' நியமிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** ஆலயங்கள் சம்பந்தப்பட்ட வழக்குகளை விசாரிக்க புது தீர்ப்பாயம் (Tribunal) ஏற்படுத்துவது பற்றிய சட்ட திருத்தம் பற்றிய செயற்குறிப்பு அரசின் சட்டத்துறையினுடைய பரிசீலனையில் உள்ளது.

**திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஆலய சம்பந்தப்பட்ட வழக்குகளை விசாரிப்பதற்காகத் தனியாக ட்ரிப்யூனல் அமைக்கின்ற செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருப்பதாகச் சொன்னார்கள். உண்மையிலேயே, சாதாரண நீதிமன்றங்களுக்குப் போவதால் பல்வேறு சிக்கல்கள் ஏற்படுகின்றன. மாவட்ட முன்சீப் நீதிமன்றம், துணை நீதிமன்றம், உயர்நீதி மன்றம் என்று குறைந்த பட்சம் கட்டணத்தை வாடகையாகச் செலுத்திக் கொண்டிருப்பவர்கள்கூட பெருந்தொகையை வாடகைப் பாக்கியாக வைத்துக் கொண்டு ஏழாண்டுகள், பத்தாண்டுகள் தாமதப்படுத்துகின்ற அளவிற்கு சாதாரண நீதிமன்றங்களுக்கு வழக்குகளை எடுத்துச் செல்லுகின்ற சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, இதைப் போக்குவதற்காக டிரிப்யூனல் அமைப்பதற்கு அரசு தனிக் கவனம் செலுத்தி விரைவாக அமைக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1984 ஏப்ரல் 27

(முற்பகல் 9-40)

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் தெரிவிக்கின்ற கருத்து, நம்முடைய நடைமுறையிலேயே நாமெல்லாம் பார்த்து, அதை எவ்வளவு சீக்கிரத்திலே செய்ய முடியுமோ அவ்வளவு சீக்கிரத்தில் செய்ய வேண்டிய அவசியத்தில் இருக்கிறோம். காரணம், இந்த வழக்கு மன்றங்களுக்கு உள்ளே போய் நீண்ட காலமாக நிலுவையிலே வைக்கப்பட்டிருக்கின்ற அடிப்படையிலே, நம்முடைய ஆலயங்களுக்கு வர வேண்டிய கோடிக்கணக்கான ரூபாய் வராமல் இருக்கிறது; அல்லது வசூலிக்கப்பட முடியாமல் இருக்கிறது. ஆகவே 59 ஆம் ஆண்டு இந்து சமய அறநிலையச் சட்டத்தில் 70-வது விதியைத் திருத்தி இப்படிப் பட்ட ஒரு ட்ரிப்யூனலை அமைக்க வேண்டுமென்ற கருத்து மிகத் தீவிரமாகப் பரிசீலிக்கப்பட்டு வருகிறது. மிக விரைவில் இதற்கான சட்ட முன்வடிவைக் கொண்டு வந்து அரசு நிறைவேற்றும்.

**டாக்டர் கே. சமரசம்:** பேரவைத் தலைவரவர்களே, பொதுவாக சமய நெறி என்பது மிகத் தொன்றுதொட்டு உலக நாகரிகத்தின் வளர்ச்சிக்காகவே உருவாக்கப்பட்ட ஒன்று. அதைச் சட்டத்தின் மூலமாகத் தீர்த்து வைக்கப் போனால் வடகலையா தென்கலையா என்று போகின்றபொழுது அங்கே போய் இது ஆறு மாதம், அது ஆறு மாதம் இருக்கட்டும் என்று சொல்லிவிடக்கூடிய அளவிற்குத் தீர்ப்பு வழங்க வேண்டியதாக இருக்கிறது. எந்த நோக்கத்திற்காக இந்தச் சமய நெறியை ஆரம்பித்தார்களோ அது பல்வேறு வகையிலே சட்டத் துறையாலே சீரழிக்கப்படுகிறது. ஆகவே, இன்றையதினம் சமயநெறியை அடிப்படையாக வைத்து சம்பிரதாயங்கள் உருவாகிக் கொண்டிருக்கின்ற சூழ்நிலையில் எந்த வகையிலேயும் அது பாழாக்கப்படாமல், அந்தப் பண்பாடு கெடாமல் காக்கப்படக்கூடிய வகையில் இந்த ட்ரிபியூனலை, தனியாக இந்தத் துறைக்காகவே அமைத்து, நீதிமன்றத்திற்கே செல்லாமல் தனியாகவே அமைத்து, நீதி வழங்குவதற்கு வழிவகை செய்ய சட்டத் திருத்தங்களை அரசு கொண்டுவர முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** தலைவரவர்களே, ட்ரிப்யூனல் என்பதே அப்படிப்பட்ட ஒரு சாதாரண, படிப்படியாகச் செல்லுகின்ற அந்த நீதிமன்ற முறைகளைக் குறைக்க வேண்டுமென்றுதான் அமைக்கப் படுகிறது. ட்ரிப்யூனல் என்பதே ஒரு டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜ் அளவிலே அந்தத் தகுதி உள்ள அல்லது அதற்குத் தரமான வேறொரு தகுதியுள்ள அதிகாரிகளைக் கொண்ட நீதிமன்றம்தான். இந்த ட்ரிப்யூனல் அமைக்கப்பட்டால் இதிலிருந்து நேராக அவர்கள் ஹைகோர்ட்டிற்குத்தான் செல்ல முடியுமே தவிர



1984 ஏப்ரல் 27]

வேறு படிப்படியான பல்வேறு வழக்குமன்றங்களிலே காலதாமதத்தை ஏற்படுத்திக்கொண்டிருப்பதைத் தவிர்க்க முடியும். அதற்காகத்தான் இதை அமைக்க வேண்டுமென்று இப்பொழுது பரிசீலனை தீவிரமாக இருக்கிறது.

**திரு. செ. குப்புசாமி:** மாண்புமிகு தலைவரவர்களே, இந்தக் கோயில்களின் நிர்வாகத்தைச் செய்துக்கொண்டிருந்தவர்கள் அந்தக் கட்டனங்களிலேயிருந்து வருகின்ற வருமானங்களையும், நிலங்களிலேயிருந்து வருகின்ற வருமானங்களையும் ஏமாற்றுவதற்காகக் கோர்ட்டுக்குச் செல்கிறார்கள். அப்படி அவர்கள் கோர்ட்டுகளுக்குச் செல்லுகின்ற நேரத்தில், நீண்ட நெடுங் காலமாக அவை தள்ளிப் போடப்படுகின்றன. அப்படித் தள்ளிப் போடப் படுவதால் இடைக்காலத்தில் கோயிலுக்கு வர வேண்டிய வருமானத்தையும் அவர்கள் ஏமாற்றுகின்ற காரணத்தினால், அந்தத் தொகையையும் வசூலிக்க என்ன நடவடிக்கை எடுக்கவிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** தலைவரவர்களே, அந்த நடவடிக்கைதான் டிரிப்யூனல் அமைப்பது.

**திரு. எஸ். என். இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நெல்லை மாவட்டத்தில் குரும்பூரில் உள்ள ஒரு பெரிய கோயிலான ஸ்ரீ ஆதி நாராயணப் பெருமாள் சுவாமி கோயிலுக்குச் சொந்தமான பல ஏக்கர் நிலங்களைத் தனியார் வைத்துக்கொண்டு, சுமார் ஐந்தாண்டுக்காலமாக அந்தக் கோயிலுக்குக் கொடுக்க வேண்டிய நெல்லைக் கொடுக்காமல் இருக்கிறார்கள். அந்த நெல்லை வாங்குதற்கும் டிரிப்யூனல் மூலம் ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்:** தலைவரவர்களே. அந்த விவரம் என்னிடத்தில் இல்லை. அப்படிப்பட்ட வழக்குகளெல்லாம் தனியாக நீதி மன்றங்களுக்குச் சென்று சிக்கிக் கொண்டிருக்கின்றன. அதற்காகத்தான் ட்ரிப்யூனல் அமைக்க வேண்டுமென்ற முயற்சி மேற்கொள்ளப்படுகிறது.

**திரு. கோவைத்தம்பி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த ட்ரிப்யூனல் சிவில் வழக்குகளை மட்டும் விசாரிக்குமா அல்லது கிரிமினல் வழக்குகளையும் விசாரிப்பதற்கு உகந்ததாக அமைக்கப்படுமா? சமீபகாலமாகத் தமிழ்நாட்டில் மக்களின் மீது நம்பிக்கை இல்லாத ஒரு சிலர் ஆண்டவனின் ஆலயங்களில் நடைபெறும் காரியங்களைத் தங்களுடைய கிரிமினல் வழக்குகளாக எடுத்துக்கொண்டு செயல்படுகிறார்கள். ஆண்டவனின் மீது நம்பிக்கை வைத்துப் பணியாற்றுகின்ற அந்தப் பணியைக் கவனிக்கின்றபொழுது முரண்பட்ட கருத்தாக இருக்கிறது. அதை ஆண்டவனும் கவனிப்பதில்லை; ஆண்டுகொண்டிருப்பவர்களும் கவனிப்பதில்லை. ஆகவே, இந்த

வழக்குமன்றத்தை அமைத்து, அப்படிப்பட்ட உண்மைக்குப் பொருந்தாத குற்றச்சாட்டுகளைச் சுமத்துகிறவர்கள் மீது இந்த சிவில் வழக்குகளை விசாரிப்பதைப்போல—அந்தக் கிரிமினல் வழக்குகளும் வேகமாக விசாரிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** பேரவைத் தலைவர் அவர்களே, சிவில் வழக்குகளுக்குத்தான் டிரிப்யூனல் அமைக்க முடியும். கிரிமினல் வழக்குகளுக்காக ஸ்பெஷல் கோர்ட் அமைக்க முடியுமே தவிர அது ட்ரிப்யூனலாக இருக்காது. ஆகவே ட்ரிப்யூனல் அமைக்கப்படுவது சிவில் வழக்குகளுக்குத்தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. செ. சிவசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார்கள் கோயில்களுக்குச் செலுத்தவேண்டிய நிதிகளை ஒழுங்காக அளிக்காமல் அதனை அனுபவித்து வருவதன் காரணத்தால் ட்ரிப்யூனல் அமைக்க வேண்டும் என்று சொல்லப்படுகின்றது. பரமக்குடியிலே இருக்கக்கூடிய அனுமார் கோயிலுக்குச் சொந்தமான இடத்தை பொறுத்தவரையில் உள்ளாட்சித் துறை எட்டாயிரத்து சொச்சம் ரூபாய் தரவேண்டி இருக்கின்றது. அவ்வாறு அந்தத் தொகையை உள்ளாட்சித் துறை கொடுக்காமல் காலதாமதம் செய்வதன் காரணத்தால் அந்தப் பிரச்சினை டிரிப்யூனல் மூலமாகத் தீர்க்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** பேரவைத் தலைவர் அவர்களே, வாடகை பாக்கி அல்லது குத்தகை பாக்கி ஆகியவற்றைக் கொடுக்க வேண்டும் என்பதும் அல்லது நியாயமான வாடகையைத் தரவேண்டும் என்பதும் தனியார்களுக்கு மாத்திரமல்ல. அரசினுடைய நிறுவனமாக இருந்தாலும் அவர்களும் சட்டப்படி இந்த நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுகிறவர்கள்தான் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது இவை சம்பந்தப்பட்ட வழக்குகள் அறநிலையத் துறை ஆணையர்களாலும் மற்றைய அதிகாரிகளாலும் நடத்தப்படுகின்றது. அதிலே வழக்கு தொடுப்பவர்கள் பிரபல வழக்கறிஞர்களை நியமித்துக்கொண்டு இருக்கக்கூடிய சூழ்நிலை இருக்கின்றது. அந்தத் துறைக்கென்று வாதாடுவதற்காகத் தனியாக வழக்கறிஞர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்களா? இல்லை என்றால் ட்ரிப்யூனல் நியமிக்கின்றவரை அந்தத் துறைக்காக வாதாடுவதற்கென்று மற்றைய சிவில் நீதிமன்றங்களில் நியமித்திருப்பதுபோன்று பப்ளிக் ப்ராசிக்யூட்டர் மற்றும் கவர்ன்மென்ட் ப்ளீடர் நியமிக்கப்பட்டிருப்பது போன்று, இந்தத் துறைக்கும் வழக்கறிஞர்களை நியமிக்கின்ற செயற்குறிப்பு இருக்கின்றதா என்பதை அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆலயங்களைப் பொறுத்தவரையில் அந்த நிறுவனங்கள் எல்லாம் தனித்தனியாக இயங்குபவை. ஆகவே அவர்கள் தனக்கென்று ஒவ்வொரு வழக்கறிஞர்களை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அப்படி வைத்துக் கொண்டிருக்கின்ற காரணத்தால் எந்த ஆலயத்திற்கு எந்த வழக்கறிஞர் என்பதேகூட தெரியாமல் இருக்கின்றது. மேலும் அப்படி ஆலயங்களால் வைத்துக் கொள்ளப்பட்டிருக்கின்ற வழக்கறிஞர்கள் ஆலயங்களுக்காக வாதாடுகிறார்களா அல்லது எதிரானவர்களுக்கு உதவியாக இருக்கிறார்களா என்பது கூடத் தெரியாமல் இருக்கின்றது. வேலியே பயிரை மேய்கின்றது என்பதற்கு உதாரணமாக சில நேரங்களில் அவர்கள் விளங்குகிறார்கள். இந்தச் சிக்கலைத் தீர்ப்பதற்காகத் தான் டிரிப்யூனல் அமைத்துவிட்டால் கொஞ்சம் தெளிவாகக் காரியங்களில் நாம் ஈடுபட முடியும். ஆலயம் சம்பந்தப்பட்ட வழக்குகளைப் பொறுத்தவரையில் வழக்கறிஞர்களைக் கொண்ட ஒரு பேனலை ஆணையாளர்கள் வைத்துக் கொள்ளவேண்டும் என்றும், அந்த வழக்கறிஞர்கள் பேனலிலே இருந்துதான் ஆலயங்கள் சம்பந்தப்பட்ட வழக்குகளுக்கு வழக்கறிஞர்களை நியமிக்க வேண்டும் என்கிற கருத்தைப் பரிசீலிக்க வேண்டும் என்று அறநிலையத் துறையை அரசு கேட்டுக்கொண்டிருக்கிறது.

## 1977 ஆம் ஆண்டிற்குப் பிறகு மைய அரசு தமிழகத்தில் செய்துள்ள தொழில் முதலீடு.

*674—(வினா எண் 18671) **திரு. கி. அன்பழகன் :** மாண்புமிகு கைத்தறி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1977 ஆம் ஆண்டிற்குப் பிறகு மத்திய அரசு தமிழகத்தில் செய்திருக்கும் தொழில் முதலீடு எவ்வளவு?

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** மைய அரசு 1977 க்குப் பின்னர் தமிழ்நாட்டில் இரு புதிய தொழிற்சாலைகள் நிறுவ ரூ. 202.5 கோடி முதலீடு செய்துள்ளது. அதாவது சேலம் உருட்டாலைக்கு ரூ. 169.70 கோடியும் இராணிப்பேட்டையில் உள்ள பாரத கனரக மின் உபகரணங்கள் தயாரிக்கும் தொழிற்சாலைக்கு ரூ 32.80 கோடியும் ஆகும்.

[1984 ஏப்ரல் 27

2. இவற்றைத் தவிர ஏற்கெனவே நிறுவப்பட்டுள்ள தொழிற்சாலைகளில் விரிவாக்கத் திட்டங்கள்மூலம் ரூ. 261.79 கோடி முதலீடு செய்துள்ளது. அவை பின்வருமாறு :

(ரூபாய் கோடியில்)

| | |
|---|---|
| 1. இந்துஸ்தான் போட்டா பிலிம் தொழிற்சாலை, உதகமண்டலம்— | |
| பூச்சு தொழிற்சாலை | 9.00 |
| ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி | 1.97 |
| கிராபிக் ஆர்ட் பிலிம் | 2.19 |
| 2. இந்துஸ்தான் டெலிபிரிண்டர்ஸ் நிறுவனம், சென்னை (15,000 தட்டச்சு இயந்திரங்கள் தயாரிக்க) | 3.85 |
| 3 சென்னை எண்ணெய் சுத்திகரிப்பு ஆலை | 158.00 |
| 4. பாரத கனரக தொழிற்சாலை, திருச்சி | |
| பாய்லர் தயாரிப்பு | 35.48 |
| இணைப்பு இல்லாத குழாய்கள் | 58.20 |
| மொத்தம் | 261.79 |

**திரு. கி. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கின்றபோது இது மிகவும் குறைவாக இருக்கிறது. ஆகவே புதிய தொழில்களை அமைக்க மத்திய அரசைத் தமிழக அரசு வற்புறுத்தி இருக்கின்றதா? தமிழகத்திலே புதிய தொழில்களை அமைக்க மத்திய அரசு எந்த அடிப்படையில் இசைவு தருகின்றது என்பதை அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏறக்குறைய 11 தொழில்கள், 1977 ஆம் ஆண்டுக்கு முன்னால் தமிழ்நாட்டில் ஆரம்பிக்கப்பட்ட தொழில்கள்—பெரிய தொழில்கள் தமிழகத்தில் இருக்கின்றன. தமிழ்நாட்டில் மத்திய அரசு செய்திருக்கின்ற தொழில் முதலீடு 4 சதவீதமாகும். புதிய தொழில்கள் அனைத்திந்திய அளவில் வருகிறபோதெல்லாம் தமிழ்நாடு அரசு முன்வந்து வேண்டிய வசதிகளைச் செய்து தருவோம் என்று கடிதங்கள் மூலமாகவும், நேரிலேயும் வற்புறுத்தி வருகிறோம். ஆனால் முடிவு செய்ய வேண்டியது மத்திய அரசு. நம்மைப் பொறுத்த வரையில் நமக்கு சமீபத்தில் கிடைத்திருப்பது குறைவுதான் என்றாலும் கூட இனிமேலாவது நிறையத் தொழில்கள் கிடைக்கும் என்று நம்புகிறோம்.



1984 ஏப்ரல் 27]

(முற்பகல் 9-50)

**திரு. கி. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசினுடைய தொழில் கொள்கை புதிய தொழில்களை ஆரம்பிக்கத் தடையாக இருப்பதால் புதிய தொழில் அமைக்க மாவட்ட அளவில் அனுமதி வழங்குவதை மாற்றி, தாலுகா அல்லது ஒன்றிய அளவிலே அனுமதி பெற மைய அரசை மாநில அரசு வற்புறுத்துமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** பேரவைத் தலைவர் அவர்களே, இப்பொழுது இரண்டும் அமுலில் இருக்கிறது. தொழில் துறையிலே பின்தங்கிய பகுதியாக தாலுகாவாரியாக ஏற்கனவே அறிவிக்கப்பட்டு அப்படி பின்தங்கிய பகுதியிலே தொழில் துவங்குகிற பொழுது சப்சிடி, மானியம் போன்ற வசதிகளை மைய அரசு தருகிறது. தமிழ் நாட்டிலே 30 தாலுக்காக்களிலே மைய அரசினுடைய மானிய வசதி நடைமுறையிலே இருக்கிறது. இது தவிர நாம் இப்பொழுது கேட்பது—சீரோ இன்டஸ்ட்ரீஸ் டிஸ்டிரிக்ட் என்று அனைத்திந்திய அளவிலே 118 மாவட்டங்களைத் தேர்வு செய்திருக்கிறார்கள். அதற்குச் சிறு தொழில்களுக்கு மேலே, நடுத்தரத்தொழில் ஏதாவது ஒன்று இருக்குமானால் அந்த மாவட்டம் சிறு தொழிலிலே முன்னேறிய மாவட்டம் என்று கணக்கெடுக்கப்பட்டு, ஒரு தொழிலும் இல்லாத மாவட்டம் என்று 118 மாவட்டங்கள் தேர்வு செய்யப்பட்டிருக்கிறது. அதிலே ஒன்றும் தமிழ் நாட்டிலே இல்லை. எனவே தான் அந்தப் பகுதியிலே ரூ. 25 இலட்சம் மானியம் தருகிறார்கள். அப்படிச் செய்வதற்குப் பதிலாக தாலுகாவை பேசிக் கிரைட்டீரியாவாக எடுத்துக்கொண்டு கடன் வசதி செய்ய வேண்டுமென்று மைய அரசை வற்புறுத்தி வருகிறோம்.

**திரு. எல். இளையபெருமாள் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் இரும்பாலை பகுதியில் கிடைக்கின்ற இரும்புத் தாதுப்பொருள் ஜப்பானுக்கு அனுப்பப்பட்டு அங்கு கிடைக்கின்ற இரும்புத் தாது இலாபகரமாக இருக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது. மத்திய அரசு, அதற்கு எல்லாவித சலுகையும் செய்திருந்தும், கிடைக்கின்ற தாதுப் பொருளில் இரும்பாலை இலாபகரமாக நடக்கும் என்று இருந்தும் உண்மையான தஸ்தூர் ரிப்போர்ட்டை எடுத்து மத்திய அரசுக்குத் தெரிவிக்கப்பட்டதா? அதற்காக மேற்கொண்டு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது? வருங்காத்திலாவது கட்டாயமாக அந்த இரும்பாலையை உருவாக்குவதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுக்கே மிக நன்றாகத் தெரியும். அடிக்கல் நாட்டு விழா நடக்கிறபொழுது சேலம் கஞ்சமலை பகுதியிலே இருக்கிற அயர்ன் ஓர்க்சை எடுத்து, அந்தப் பகுதியிலே உருக்காலை உண்டாக்கப்படும் என்ற அந்த உணர்வோடுதான் அன்றைக்குத் தொடங்கப்பட்டது. அதற்குப் பின்னாலே நான் முன்னாலே சொல்லியதுபோல ரூ. 118 கோடி செலவு செய்யப்பட்டாலும் இப்பொழுது வெறும் உருட்டாலைதான் இருந்து கொண்டிருக்கிறது. மைய அமைச்சர் திறப்பு விழா கூட்டத்திலே கலந்து கொண்டபொழுது, நான் அந்த விழாவிலே பேசுகிறபொழுது அங்கேயே சொன்னேன். அவர்கள் சொல்கிற குறைபாடு, அங்கே இருக்கிற அயர்ன் ஓரிலே அயர்ன் கன்டென்ட் குறைவாக இருக்கிறது என்பதாகும். இதுதான் மைய அரசு சொல்கிற குறைபாடு. நாம் சொல்கிறோம் ஏறக்குறைய 30 சதவிகிதம் அயர்ன் கன்டென்ட் இருக்கிறது. வளர்ச்சி அடைந்த நாடுகளில் டைரக்ட் ரிடக்‌ஷன் மெத்தட் என்ற ஒரு புதிய முறை வந்திருக்கிறது. அந்த டைரக்ட் ரிடக்‌ஷன் மெத்தட் மூலமாக ஏறக்குறைய 30 சதவிகிதம் அயர்ன் இருந்தாலுங்கூட உருக்காலை உண்டாக்க முடியும் என்று விஞ்ஞான ரீதியாக வளர்ச்சி அடைந்த நாடுகளில் நிரூபித்திருக்கிறார்கள். எனவே அந்த அடிப்படையிலே உருக்காலை உண்டாக்க வேண்டுமென்று மைய அரசைக் கேட்டிருக்கிறோம், தொடர்ந்து வற்புறுத்தி வருகிறோம்.

**திரு. ஏ. சி. சண்முகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகிற பொழுது 4 சதவிகிதம் தான் மைய அரசு தமிழ் நாட்டிலே தொழில் முதலீடு செய்கிறது என்று சொன்னார்கள். ஆனால், உத்தரப்பிரதேசம் போன்ற மாநிலங்களிலே 25 அல்லது 30 சதவிகிதம் தொழில் முதலீடு செய்கிறார்கள். இந்த 7 ஆண்டுக் காலத்திலே இரண்டே இரண்டு தொழிற்சாலைகளில்தான் தொழில் முதலீடு செய்யப்பட்டிருக்கிறது. 1984-85-ல் ஏதாவது புதிய தொழில் முதலீட்டை மத்திய அரசு செய்ய இருக்கிறதா? மேலும் மைய அரசு இங்கு தொழில் துவங்குகின்ற ஏற்பாட்டை மாநில அரசு எந்த வகையிலே வற்புறுத்த இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** பேரவைத் தலைவர் அவர்களே, உத்தரப் பிரதேசமாக இருந்தாலும் அல்லது வேறு வட மாநிலமாக இருந்தாலும், மற்ற மாநிலங்களிலே அதிகமாக முதலீடு செய்வதைப் பற்றி நமக்கு வருத்தம் இல்லை. தமிழ்நாட்டிலே இருக்கிற 4 சதவிகிதம் அதிகமாக உயர்த்தப்பட வேண்டுமென்கிற வேண்டுகோளைத் தொடர்ந்து மைய அரசுக்கு மாநில அரசு வைத்து வருகிறது. நடப்பு ஆண்டிலே என்ன, என்ன தொழில் திட்டங்களென்பது மைய அரசுக்குத்தான் தெரியும். அப்படி அவர்கள்



தொழில்களைத் தொடங்குகிற பொழுது அந்தத் திட்டங்களைத் தமிழகத்திலே ஏற்படுத்த வேண்டுமென்று அப்போதைக்கப்போது நாமும் மத்திய அரசோடு தொடர்பு கொண்டு வற்புறுத்தி வருகிறோம்.

**திரு. ப. நெடுமாறன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, மத்திய அரசின் கனரகத் தொழில்கள் தமிழகத்திலே அதிகமாக இல்லையென்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படி வந்தத் தொழில்கள் கூட தென் மாவட்டங்களில் இல்லை. மத்திய அரசின் ஒரு தொழில் கூட தென் மாவட்டங்களில் அமைக்கப்படாததற்கு காரணம் பிராட்கேஜ் ரெயில் பாதை இல்லையென்பது ஒரு முக்கியமான காரணமாகும். ஆகவே அடுத்த ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலேயாவது சில ஹெவி இண்டஸ்ட்ரிஸ்களை தென் மாவட்டங்களில் அமைக்க மத்திய அரசை வற்புறுத்துவதோடு, அதற்கு முன்னோடியாக தென் மாவட்டங்களில் அகல ரெயில் பாதை உடனடியாகக் கொண்டு வருவதற்கு இந்த அரசு முயற்சி எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அகல ரெயில் பாதைத் திட்டம் மூலக் கேள்விக்கு ஒட்டியதல்ல. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மூலக்கேள்வியை ஒட்டி துணைவினாக்கள் போடுவது தான் சரியான வழிமுறையாக இருக்கும்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு தலைவர் அவர்களே, தென் மாவட்டங்களில் அகல ரெயில் பாதை ஏற்படுத்த வேண்டுமென்று தமிழகத்திலுள்ள அனைத்துக் கட்சிகளும் மத்திய அரசை வற்புறுத்தி வருகின்றன. மாநில அரசும் மத்திய அரசை வற்புறுத்தி வருகிறது. இங்கு மத்திய அரசால் துவங்கப்பட்ட பெரிய, நடுத்தரத் தொழில்கள் ஒன்றுமில்லை என்றுச் சொன்னார்கள். உண்மைதான், தொடங்கப்பட்டதெல்லாம் 1967க்கு முன்னாலே தான் தொடங்கப்பட்டன.

**திரு. கோ. விஸ்வநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. மத்திய அரசின் 'ஜீரோ இண்டஸ்ட்ரீஸ்' என்ற கொள்கையை மாற்றவேண்டுமென்று நம்முடைய அரசு கேட்டுள்ளது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நம்முடைய மாநிலம் மட்டுமல்ல தென் மாநிலங்களில் ஓரே ஒரு மாநிலத்தைத் தவிர மற்ற நான்கு மாநிலங்களுக்கும் கொடுப்பதில்லை என்று மத்திய அரசு முடிவு எடுத்திருக்கிறது. ஆகவே அனைவரும் கூட்டாகச் சேர்ந்து இந்த முடிவை மாற்றுவதற்கு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். இதுவரையில் அவர்கள் மாற்றுவதற்கு ஒப்புக்கொண்டிருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1984 ஏப்ரல் 27

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** தலைவர் அவர்களே, ஆந்திராவிலே தெலுங்கு தேசம், கர்நாடகாவிலே ஜனதா, கேரளாவிலே இந்திரா காங்கிரஸ், தமிழ்நாட்டில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், இவர்கள் எல்லாம் ஒன்றுபட்டு குரல் எழுப்புகிற வாய்ப்பு இப்போது இருப்பதாக நான் நம்பவில்லை. தனித்தனியாக ஒவ்வொரு மாநிலமும் மத்திய அரசை வற்புறுத்திக் கொண்டிருக்கிறது. தமிழ்நாடும் தொடர்ந்து வற்புறுத்தும். இதுவரையில் நமக்கு ரெஸ்பான்ஸ் நல்லவிதத்திலே இல்லை. ஆனால் அவர்கள் கவனிப்பார்கள் என்ற நம்பிக்கை நமக்கு இருக்கிறது.

**திரு. பாபு ஜனார்த்தனன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது, சேலம் உருக்காலை உருட்டாலையாக மாற்றப்பட்டிருக்கிறது. அதை உருக்காலையாக மாற்றுவதற்கு மத்திய அரசை வற்புறுத்தி வருகிறோம் என்று சொன்னார்கள். சேலம் உருட்டாலையை உருக்காலையாக மாற்றுவதற்கு சட்டமன்றத்தில் அனைத்துக் கட்சியினரும் சேர்ந்து தீர்மானம் நிறைவேற்றி அதன்மூலம் மத்திய அரசை வற்புறுத்துவதற்கு நம்முடைய அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு தலைவர் அவர்களே, நாம் நேரிலும், கடிதம் மூலமாகவும் தொடர்ந்து வற்புறுத்திக் கொண்டிருக்கிறோம். இனிமேலும் தொடர்ந்து வற்புறுத்துவோம். அதைத் தீர்மானத்தின் மூலமாக தான் செய்ய வேண்டும் என்பதல்ல. நேரிலும், கடிதங்கள் மூலமாகவும் வற்புறுத்தலாம். அந்த நிலைமையிலே தொடர்ந்து வற்புறுத்துவோம்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த அவையிலே முன்னாலே கேள்வி ஒன்றிற்கு பதில் சொல்கிறபோது, ரப்பரை பயன்படுத்தி பெரிய ஸ்டேட் செக்டார் இண்டஸ்ட்ரீஸ் ஒன்றை ஆரம்பிக்கக் கூடாது என்று மத்திய அரசு தடை விதித்ததாக அமைச்சர் அவர்கள் தெரிதார்கள். இந்த மாநிலத்திலே அதிகமாக உற்பத்தியாகிற ரப்பரைப் பயன்படுத்தி ஒரு பெரிய தொழிற்சாலையை ஏற்படுத்துவதற்கு, மத்திய அரசின் முதலீட்டிலே அதைச் செய்யவேண்டுமென்று மத்திய அரசை வற்புறுத்துவதற்கு மாநில அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு தலைவர் அவர்களே, அந்த ரப்பர் தொழிற்சாலை சம்பந்தமாக கோப்பு இப்போது என்னிடத்திலே இல்லை. இருந்தாலும் என்னுடைய ஞாபகத்திலேயிருந்து சொல்கிறேன்.



1984 ஏப்ரல் 27]

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அந்த விவரம் நல்ல ஞாபகத்தில் இருந்தால் மட்டும் சொல்லுங்கள். ஏனென்றால் சொல்கிற விவரம் தவறாகப் போனால், தவறான தகவலை அமைச்சர் அவர்கள் கொடுத்தார்கள் என்ற பிரச்சினை வந்து விடும்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு தலைவர் அவர்களே, தனிக்கேள்வி போட்டால் பதில் தருகிறேன்.

(முற்பகல் 10-00)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் அனுமதியுடன், வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**டாக்டர் கே. பி. இராமலிங்கம் :** தலைவர் அவர்களே, சேலம் உருக்காலைத் திட்டத்தைப் பொறுத்தவரையில், அது பல்வேறு நிலைகளில் வற்புறுத்தப்பட்டும், மத்திய அரசு பாராமுகமாக இருப்பதால், அதற்காக தனிபாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பாரதப் பிரதமர் அவர்களிடம் வற்புறுத்துவார்களா, அல்லது அனைத்துக் கட்சித் தலைவர்களையும் அழைத்துச் சென்று வற்புறுத்துவார்களா, அல்லது மாண்புமிகு அமைச்சர் மூலமாக அதற்கான நடவடிக்கைகளை எடுப்பார்களா என்று அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்னதைப் போல, மாநில அரசு தொடர்ந்து வற்புறுத்திக் கொண்டு வருகிறது. மைய அரசு கவனிக்கும் என்று மனப்பூர்வமாக எதிர் பார்க்கிறோம்.

**புகளூரில் நிறுவப்பட்டு வரும் தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம்.**

675—(*வினா எண் 21898) **திரு. எம். சின்னசாமி :** மாண்புமிகு கைத்தறி மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

புகளூர் தமிழ்நாடு செய்தித்தாள் நிறுவனம் எப்போது உற்பத்தியைத் தொடங்கும்?

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** தலைவர் அவர்களே, புகளூரில் சுமார் 195 கோடி ரூபாய் மதிப்பீட்டில் துவக்கப்படவிருக்கிற தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித ஆலை இந்த ஆண்டு (1984) ஜூன் மாதத்தில் மாதிரி உற்பத்தியைத் துவங்கும். 1984 செப்டம்பர், அல்லது அக்டோபர் மாதத்தில் ஆலை முழு அளவில் இயங்க திட்டமிடப்பட்டுள்ளது.

[1984 ஏப்ரல் 27

திரு. கோவைத்தம்பி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த புகளூர் காகித ஆலை எவ்வளவு டன் காகிதத்தை உற்பத்தி செய்யும்? இதனால் காகித உற்பத்தியில் தமிழகம் நன்கு வளம் பெறுமா? அண்டை மாநிலங்களை எதிர்பாராமல் இருக்கும் அளவிற்கு காகித உற்பத்தி செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த ஆலை ஆண்டு ஒன்றுக்கு 50,000 டன் செய்தித்தாள் காகிதத்தையும் 40,000 டன் காகிதம் மற்றும் எழுதும் காகிதம் ஆகியவற்றை உற்பத்தி செய்யும். இந்த ஆலை முழுமையான அளவில் உற்பத்தியைத் தொடங்குமானால், இப்போது வெளி நாட்டில் இருந்து நாம் இறக்குமதி செய்யும் செய்தித்தாள் காகித அளவு குறைக்கப்படும். அதன் காரணமாக ஏறத்தாழ 40 கோடி ரூபாய்க்கு நமக்கு அந்நியச் செலாவணி இந்தத் தொழிற்சாலையின் காரணமாக மிச்சப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆகவே, இது தமிழ் நாட்டிற்குமட்டுமல்ல, மற்ற மாநிலங்களுக்கும் பயன்படும் வகையில் உதவியாக இருக்கும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

திரு. உ. சுப்பிரமணியன் : பேரவைத் தலைவர் அவர்களே, புகளூரில் ஆரம்பிக்கப்பட்டுள்ள காகித ஆலை பகாஸ் என்று சொல்லக்கூடிய கரும்புச் சக்கையை மூலப்பொருளாகக் கொண்டு புதிய முறையில் காகித உற்பத்தி செய்யும் தொழிற்சாலையாகும். இது வெற்றிகரமாக அமல்செய்யப்படவிருக்கிற காரணத்தால், மற்ற பகுதிகளிலும், குறிப்பாக கரும்புச் சக்கை அதிகமாகக் கிடைக்கிற பகுதிகளிலே, இத்தகைய ஒரு தொழிற்சாலையை—ஒரு மினி-பிளான்ட்—என்ற வகையில் ஆரம்பிக்கும் உத்தேசம் அரசுக்கு இருக்கிறதா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, இப்போது வேறு திட்டங்கள் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, புகளூர் காகித ஆலை கிட்டத்தட்ட 40 கோடி செலவில் ஆரம்பிக்கப்படுகிறது என்றும், அதற்கு மூலப் பொருள் கரும்புச் சக்கை என்றும் சொல்லப்படுகிறது. இந்தக் கரும்புச் சக்கையைத் தவிர வேறு என்னென்ன மூலப்பொருள்கள் அதோடு சேர்க்கப்பட்டு, இந்தக் காகிதம் செய்யப்படுகிறது என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, மூலப் பொருள்களில் கரும்புச் சக்கையும் ஒன்று. அதோடு, மரங்கள், மற்றும் விஞ்ஞான ரசாயன பொருள்கள் ஆகியவற்றைச் சேர்த்து அந்தக் காகிதம் உற்பத்தி செய்யப்படுகிறது.



1984 ஏப்ரல் 27]

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் உ. சுப்பிரமணியன் அவர்கள் கேட்ட கேள்விக்கு அமைச்சர் அவர்கள் அந்த மாதிரியான திட்டம் எதுவும் இல்லை என்று பதில் சொன்னார்கள். இப்படிப்பட்ட தொழிற்சாலை ஆரம்பிக்க முக்கியமாகத் தேவைப்படும் மூலப்பொருள் கரும்புச் சக்கை என்று சொல்லப்படுகிறது. ஆகவே, இந்த மூலப்பொருள் கிடைக்கின்ற இடங்களில், மத்திய அரசு, மாநில அரசு பின் தங்கிய பகுதிகள் என்று அறிவித்திருக்கிற பகுதிகளில், இத்தகைய ஒரு காகித ஆலையை ஆரம்பிக்க அரசு முன்வரவேண்டும். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன கருத்தை மறுபரிசீலனை செய்து. இத்தகைய ஒரு மினி-தொழிற்சாலையை ஆரம்பிக்க முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஏற்கெனவே சொன்னதைப்போல, இந்தத் தொழிற்சாலை 195 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்காக உலக வங்கி 100 கோடி ரூபாய் கொடுத்துள்ளது. ஐ.டி.பி.ஐ. போன்ற நிறுவனங்கள் 30—35 கோடி ரூபாய் வரை கொடுத்துள்ளன. மாநில அரசும் உதவிகளைச் செய்து வருகிறது. ஆகவே, இத்தகைய அளவிற்குப் பெரிய வகையில் நடைமுறைப்படுத்தும் இந்த திட்டத்தின் பயனாக நல்ல பலன் ஏற்படும். ஆகவே சிறு தொழிற்சாலைகளைத் தொடங்கும் வாய்ப்பை அரசு பரிசீலிக்கவில்லை. அது உடனடியாக சாத்தியக் கூறுனாதும் அல்ல. இது பற்றிய சிந்தனையோ செயற்குறிப்போ அரசிடம் தற்போது எதுவும் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 680 மாண்புமிகு அமைச்சரின் வேண்டுகோளிற்கு இணங்க தள்ளிவைக்கப்படுகிறது.

### மேச்சேரி நகர கூட்டுறவு வீட்டுவசதி சங்கம் துவங்கும் திட்டம்.

681—(* வினா எண் 22767) திரு. செ. செம்மலை : மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம் மேச்சேரி நகர கூட்டுறவு வீட்டுவசதி சங்கத்தைத் துவக்குவதில் கால தாமதம் ஏற்படக் காரணம் யாது?

(ஆ) விரைவில் துவக்கப்பட எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

**மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா:** (அ) மற்றும் (ஆ) மேச்சேரி கூட்டுறவு வீட்டுவசதி சங்கம் 18—9—1973-ல் பதிவு செய்யப்பட்டு 11—10—1973-ல் துவக்கப்பட்டுள்ளது. ஆகவே, சங்கத்தைத் துவக்குவதில் காலதாமதம் ஏற்படவில்லை. ஆனால் மூன்று ஆண்டுகளுக்கு மேல் சங்கம் சரியான முறையில் செயல்படாமையால் தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்களின் சட்டப் பிரிவு 66-ன் கீழ் ஆய்வு மேற்கொண்டபின் 6—8—1977-ல் சேலம் மண்டல வீட்டுவசதி துணைப்பதிவாளர் இச்சங்கத்தைக் கலைப்பதற்கு உத்திரவிட்டுள்ளார். அதன் பின்னர் அச்சங்க உறுப்பினர்கள் பங்குத் தொகையைத் திருப்பிப் பெறுவதில் காலதாமதம் ஏற்பட்டது. 1982 இறுதியில் கலைக்கப்பட்ட இச்சங்கத்தைப் புதுப்பிக்க வேண்டுமென்று கோரி விண்ணப்பம் அனுப்பியதை ஒட்டி கலைப்பு அலுவலர் சிறப்பு பேரவை கூட்டத்தைக் கூட்டி கலைக்கப்பட்ட சங்கத்தின் உறுப்பினர்களது கருத்தினை அறிய முயற்சி செய்ததில், கலைக்கப்பட்ட சங்கத்தைப் புதுப்பிக்கப்பட வேண்டுமென்று மேற்படி சிறப்பு பேரவை கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டுள்ளது. மேற்கூறிய கலைக்கப்பட்ட சங்கத்தைப் புதுப்பிப்பதற்கு தடையில்லையென்று தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி சங்கம் தெரிவித்ததின்பேரில், சேலம் மண்டல வீட்டுவசதி துணைப்பதிவாளர் சங்கத்தைப் புதுப்பிப்பதற்கு உரிய நடவடிக்கையினை மேற்கொண்டுள்ளார்.

**திரு. செ. செம்மலை:** தலைவரவர்களே, இந்தச் சங்கத்தை மீண்டும் புதுப்பிப்பதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படுவதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். அதற்கு நன்றி. இந்தச் சங்கத்தைப் பொறுத்தவரையில் புதுப்பிப்பதிலே காலதாமதம் ஏற்படுவதற்குக் காரணம் இந்தச் சங்கத்திற்கு கடன் கொடுக்க ஹட்கோ (HUDCO) போன்ற நிறுவனங்கள் நிதி உதவி செய்வதில் காலதாமதம் ஏற்படுகிறது என்ற கருத்தைச் சொல்லி, தொடங்குவதில் அதிகாரிகள் காலதாமதம் செய்கிறார்கள். எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தச் சங்கத்தை விரைவாகப் புதுப்பித்து, விரைவிலே தொடங்கி. அதன் மூலம் அந்தப் பகுதி மக்கள் பயன்பெறுவதற்கு ஹட்கோ (HUDCO) நிறுவனம் மூலம் கடன் கொடுக்க உத்தரவிடுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா:** தலைவரவர்களே, இந்தச் சங்கம் செயல்படாத நிலையில் கலைக்கப்பட்டது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் திரு. செம்மலை அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சியின் காரணமாக மீண்டும் இந்தச் சங்கத்தைப் புதுப்பிப்பது என்று முடிவு செய்து, அந்தச் சங்கப் பேரவை இந்த முடிவை எடுத்து, அதிகாரிகளுக்குத் தெரிவித்த பிறகு, உடனடியாக நடவடிக்கை எடுத்து, புதுப்பிக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்



பட்டுள்ளன. அதைப்போன்று இந்தச் சங்கம் புதிய சங்கம் அல்ல, பழைய சங்கம் என்பதால் பழைய சங்கங்களுக்கு எப்படி கடன் உதவி செய்யப்படுகிறதோ அதைப்போன்று இந்தச் சங்கத்திற்கும் செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**டவுன் பஞ்சாயத்துக்களில் வீட்டுவசதி வாரியம் மூலம் வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம்**

682—(* வினா எண் 23087) **திரு. ஜி. கே. சுப்பிரமணியன்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) டவுன் பஞ்சாயத்துக்களில் வீட்டுவசதி வாரியத்தின் மூலம் வீடுகள் கட்டிக் கொடுக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், பவானிசாகர் தொகுதி நம்பியூர், புஞ்சைப்புளியம்பட்டி ஆகிய டவுன் பஞ்சாயத்துக்கள் ஆய்வுக்காக எடுத்துக் கொள்ளப்படுமா?

**மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா:** (அ) பெரிய நகரங்களின் புறநகர் பகுதிகளில் உள்ள பஞ்சாயத்துக்களிலும், தாலுக்கா தலைமையிடங்களிலும் வீட்டு வசதி வாரியத்தின் மூலம் வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம் அப்பகுதி மக்களின் தேவையை கணித்து பின்னர் செயல்படுத்தப்படும்.

(ஆ) பவானி சாகர் தொகுதி நம்பியூர் மற்றும் புஞ்சைப்புளியம்பட்டி டவுன் பஞ்சாயத்துக்கள் மேற்குறிப்பிட்ட பகுதிகளில் வரவில்லை.

**திரு. ஜி. கே. சுப்பிரமணியன்:** தலைவரவர்களே, பவானிசாகர் தொகுதி புஞ்சைப்புளியம்பட்டி இந்த ஆண்டு நகராட்சியாக ஆக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே 200, 300 அப்ளிகேஷன்ஸ் வீட்டு வசதி வாரியத்தின் எக்சிகியூட்டிவ் எஞ்சினியருக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. அங்கே 5 மில்கள் இருக்கின்றன. மில் தொழிலாளர்கள், ஆசிரியர்கள் அதிகமாக இருக்கின்ற காரணத்தால், வீட்டுவசதி வாரியத்தின் மூலம் பெரிய நகரங்களின் புறநகர் பகுதிகளிலுள்ள பஞ்சாயத்துக்களிலும் தாலுகா தலைமையிடங்களிலும் வீடு கட்டிக் கொடுக்கும் திட்டம் இருப்பதால், அதிலே இந்த ஆண்டு புஞ்சைப்புளியம்பட்டி டவுன் பஞ்சாயத்தும் சேர்த்துக் கொள்ளப்படுமா? அதைப்போன்று நம்பியூர் டவுன் பஞ்சாயத்தும் இந்தத் திட்டத்தில் இந்த ஆண்டு சேர்த்துக்கொள்ளப்படுமா? மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கு ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

[1984 ஏப்ரல் 27

(முற்பகல் 10-10)

**மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கேள்வியைப் பொறுத்த வரையில், ஒரே நேரத்திலே எல்லா பஞ்சாயத்துக்களிலும் வீடுகள் கட்டுவது என்பது, உடனடியாக முடியாத காரியம். அந்தப் பஞ்சாயத்துக்களில், அவற்றுக்கான தேவைகளை ஆராய்ந்து, அதற்கான ஆய்வு செய்யப்பட்டிருக்கிறது. அந்த ஆய்வின் அடிப்படையில் அங்கே வீடு கட்டுவதற்கான நிலம் உடனடியாக கிடைக்கவும், மேலும் அப்படிப்பட்ட இடங்களில் வீடுகள் கட்டுவதற்கும் அரசு தயாராக இருக்கிறது.

**திரு. ஜி. கே. சுப்பிரமணியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பவானி சாகர் நகரியத்தைப் பொறுத்தவரையிலும் பொதுப் பணித் துறையைச் சார்ந்த இடம் தான் நூற்றுக்கணக்கான ஏக்கரில் இருக்கிறது. இதுவும் அமைச்சரின் துறையில் இருக்கிறது. வீட்டு வசதி வாரியமும் அமைச்சரிடத்திலே இருக்கிறது. பொதுப்பணித் துறையிலுள்ள 12 ஏக்கர் நிலத்தை இந்த வீட்டு வசதி வாரியத் தலைவர் பார்வையிட்டார்கள். பார்வையிட்ட பிறகு, பொதுப்பணித் துறையினர் இந்த இடத்தை ஒதுக்க மறுக்கிறார்கள் என்று எனக்குத் தகவல் கிடைத்துள்ளது. பொதுப்பணித் துறையும், வீட்டு வசதி வாரியமும் தங்களிடத்தில் இருக்கின்ற காரணத்தினால் பொதுப் பணித் துறையின் மூலமாக அந்த நிலத்தை கொடுத்தால், பவானி சாகரில் வீடுகள் கட்டுவதற்கான வாய்ப்பு இருக்கும். இங்கேயுள்ள ஊழியர்கள் அந்த பவானி சாகரில் டிரெயினிங் எடுக்கிறார்கள். தமிழகத்திலே உள்ள அத்தனை பேரும் அங்கே பயிற்சி பெறுகின்றனர். விவசாயப் பண்ணையில் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் இருக்கிறார்கள். இடம் கொடுப்பதும் நீங்கள் தான், வீடுகள் கட்டிக் கொடுப்பதும் நீங்கள் தான். இரண்டு அதிகாரங்களையும் நீங்களே வைத்திருக்கிறீர்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக இதற்கான ஆணைகளை பிறப்பிக்க முயற்சிகளை மேற்கொள்வாரா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா :** இடம் தருவதும், வீடு கட்டிக் கொடுப்பதும் நான் தான் என்ற அளவோடு நிறுத்துவதற்கு நன்றி. குடியிருப்பதும் நான் தான் என்ற அளவிலே வராமல் இருந்ததற்காக பாராட்டு தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை நியாயமான கோரிக்கையாக இருப்பதால், பொதுப்பணித்துறையில் வீடு கட்டுவதற்கான நிலம் இருக்குமானால், அதை வீட்டு வசதி வாரியத்திற்கு கொடுத்து, வீடுகள் கட்டுவதற்கான முயற்சியில் ஈடுபடுவதற்கு துணையாக இருக்கிறேன்



1984 ஏப்ரல் 27]

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாம் இப்போது வீடு கட்டிக் கொடுப்பதிலே, அர்பன் ஹவுசிங் ஸ்கீம், ரூரல் ஹவுசிங் ஸ்கீம் என்று வைத்திருக்கிறோம். அவை இரண்டிலும் வராமல் நடுத்தர விவசாயிகள் இருக்கிறார்கள். அந்த நடுத்தர விவசாயிகளுக்கு வீடுகள் கட்டுவதற்கான திட்டங்களே இல்லை. ஆகையால் நடுத்தர விவசாயிகளுக்கு நிலம் இருந்தும், கொஞ்சம் வருமானம் இருந்தும்கூட, வீடுகள் கட்டுவதற்கான சக்தி இல்லாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கு ரூ. 30,000 கொடுக்கக்கூடிய அளவில், அவர்களும் வீடுகளை கட்டிக்கொள்ளும் அளவில், அப்படிப்பட்ட திட்டங்களை கிராமப்புறங்களில் உருவாக்கிக் கொடுப்பதற்கு அமைச்சர் அவர்கள் திட்டங்களைப் போட்டுக் கொடுப்பார்களா ?

**மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கையில் விவசாயிகள் என்று தனியாக பிரித்திருக்கிறார்கள். வீடு கட்டுவதில், விவசாயிகள், நெசவாளர்கள் அல்லது வேறு தொழில் செய்பவர்கள் என்று பிரிப்பதில்லை. அவர்களுடைய வருமானத்தைப் பார்த்து, வீடு கட்டிக் கொடுப்பதற்கான சங்கங்கள் இருக்கின்றன. அவர்களுக்கு கிராமக் கூட்டுறவு வீட்டுவசதி சங்கத்தின் மூலமாக ரூ. 4,500 கொடுக்கப்படுகிறது. இப்படி பல்வேறு கூட்டுறவு சங்கங்கள் குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கு ரூ. 18,000 வரையில் கடன் கொடுப்பதற்குத் தனித்தனியாக இருக்கின்றன. (குறுக்கீடு) மாண்புமிகு தலைவர் அவர்களே, நான் பதில் சொல்லிக் கொண்டிருக்கும்போதே இல்லை என்று சொல்கிறார்கள். இதற்கு முன்னால் மெச்சேரி என்ற கிராமத்தில் ஒரு கூட்டுறவுச் சங்கம் 1960-ல் ஆரம்பிக்கப்பட்டு பின்னர் அது கலைக்கப்பட்டு, மீண்டும் புதுப்பிக்கப்பட்டிருக்கிறது. உதாரணத்திற்காக இதைச் சொல்கிறேன். இப்படி 18,000 ரூபாய் வரையில் கடன் கொடுத்து வருகின்றன. கூட்டுறவுச் சங்கங்களில் எல்லா தரப்பு மக்களுக்கும், வீட்டுவசதி வாரியம் கட்டுகின்ற வீடுகளை, அதில் விவசாயிகள், நெசவாளர்கள் என்று யாரையும் பிரிக்காமல், அவர்களுடைய கோரிக்கைகளுக்கு ஏற்ற அளவிற்கு, வீடுகளை வழங்குகிறது.

**திரு. சோ. அழகர்சாமி :** மாண்புமிகு உறுப்பினர் திருமதி பொன்னம்மாள் அவர்கள் கேட்ட கேள்விக்கு, அமைச்சர் அவர்கள் ரூ. 18,000 வரையில் வீடுகள் கட்டிக் கொள்வதற்கான கடன்களை கூட்டுறவுச் சங்கங்கள் கொடுப்பதாக சொன்னார்கள். முன்பு ரூ. 3,000 கொடுக்கவேண்டுமென் றிருந்தது. இப்போது ரூ. 4,500 க்கு மேல் கொடுக்கக் கூடாது என்று கண்டிப்பான ஒரு உத்தரவு போடப்பட்டிருக்கிறது. ஆகவே ரூ. 10,000,

ரூ. 15,000 என்ற அளவிற்கு அவர்கள் சொந்தமாக கட்டிக்கொள்ள முடியாத நிலைமை கிராமங்களில் இருக்கிறது. அவர்களுக்கும் இந்தக் கடன் வசதி களைச் செய்து கொடுக்கவேண்டும். நகரங்களிலே இருக்கிறவர்களுக்கு ரூ. 40,000 ரூ. 50,000 என்று கடன் கொடுத்து உதவுகிறதோ, அதுமாதிரி, கிராமங்களில் உள்ளவர்களுக்கும், வீடுகளைக் கட்டிக்கொள்ளும் முறையில் இந்தச் சங்கங்கள் ரூ. 20000, ரூ. 25,000 என்ற அளவில் கடன் கொடுக்கக் கூடிய ஒரு ஏற்பாட்டை அமைச்சர் அவர்கள் இனிமேலாவது செய்வார்களா என்பதை அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா:** உறுப்பினரவர்கள் விளக்கமாகவே சொல்லிவிட்டார்கள். இப்போது கிராமங்களிலே பல்வேறு இடங்களில் வீடு களைக் கட்டுவதற்கான சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்கிற நேரத்திலே, அது செயல்படாமல் இருந்தாலும், இன்று செயல்படும் அளவில் நடைமுறையில் இருக்கிறது. ஆனால் சங்கங்களிலிருந்து பணம் கடன் வாங்கியவர்கள் திருப்பிச் செலுத்துவதில்லை என்று சங்கத்தினர் சொல்கிறார்கள். வட்டி யையும், அசலையும் சரியாகக் கொடுப்பதில்லை என்று சொல்லப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் உடனடியாக வசூலிக்கின்ற ஒரு நிலைமையை கிராமப் பகுதியிலே உண்டாக்குவார்களானால், அதிலே அவர்களுக்கு வீடு கட்டுவதிலே நிச்சயமாக எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை.

### மீனவர்களுக்கு வீடு கட்ட வழங்கப்பட்ட கடன் தொகையை ரத்து செய்யும் திட்டம்

**683—(*வினா எண் 23159) திரு. செ. செம்மலை மற்றும் திரு. மா. சின்ன ராசு :** மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மீனவர்களுக்கு வீடு கட்டக் கொடுக்கப்பட்ட கடன் தொகையை ரத்து செய்ய அரசிடம் கோரிக்கை ஏதேனும் வரப்பெற்றுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

**மாண்புமிகு திரு. க. கலைமணி:** (அ) மற்றும் (ஆ) தஞ்சாவூர், செங்கற் பட்டு, தென் ஆற்காடு, புதுக்கோட்டை, இராமநாதபுரம், கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் மீனவர்களுக்கு மீனளத் துறையின் மூலம் மற்றும் சிறப்புத் திட்டத்தின் கீழும் 1342 வீடுகள் கட்டுவதற்கு வழங்கப்பட்ட கடன் தொகை யான ரூ. 16.32 இலட்சத்தை ரத்து செய்வதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.



**திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழை மீனவர்கள் மகிழத்தக்க வகையில் ஒரு நல்ல அறிவிப்பை அமைச்சர் அவர்கள் இன்றைக்கு அறிவித்திருக்கிறார்கள். அதற்காக நன்றி. இப்படிக் கடன் ரத்து செய்வதன் மூலம்,ஏற்கெனவே கடன் வாங்கிய எத்தனை மீனவர்கள் இதனாலே பயன் பெற இருக்கிறார்கள் என்ற அந்த விவரத்தையும், தற்போது மீனவர்களுக்கு எந்த அடிப்படையிலே எவ்வளவு வீடுகள் கட்டிக் கொடுப்ப தற்கு நமது அரசாங்கம் திட்டமிட்டு இருக்கிறது என்ற விவரத்தையும் அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. க. கலைமணி:** மாண்புமிகு தலைவர் அவர்களே, 1975-76 ஆம் ஆண்டுகளுக்கு முன்னர் சுமார் 1342 வீடுகள் கடன் அடிப்படையிலே மீனவர்களுக்குக் கட்டிக் கொடுக்கப்பட்டு இருக்கிறது. இந்த கடனை ரத்து செய்வதன் மூலமாக 1,342 மீனவர்கள் குடும்பங்கள் பயன் பெறுகிறார்கள். 1975-76 ஆம் ஆண்டுக்குப் பின்னர் மீனவர்களுக்கு கட்டிக் கொடுக்கின்ற வீடுகள் இலவசமாக, முழுவதும் இனாமாகக் கட்டிக் கொடுக்கப்படுகிறது. ஆண்டுதோறும் சுமார் ஆயிரம் மீனவர் குடும்பங்களுக்கு 1 கோடி ரூபாய்ச் செலவில் தற்போது இலவசமாக மீனவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப் படுகின்ற திட்டம் செயல்பட்டுக்கொண்டு இருக்கின்றது.

1975-76 ஆம் ஆண்டுக்கு முன்னாலே கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகள் கடனாகக் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவைகளிலே சரிவர வசூ லிக்கப்பட முடியவில்லை. ஏழை மீனவர்களிடமிருந்து வசூல் ஆகவில்லை. அதனால்தான் புரட்சித் தலைவர் அவர்கள், இப்போது கட்டிக் கொடுக்கிற வீடுகள் இலவசமாகக் கட்டிக் கொடுக்கிறபோது இதற்கு முன்னாலே கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகள் மட்டும் ஏன் கடனாக இருக்க வேண்டும்; அவர்களு டைய கடனிலேயிருந்து மீனவர்களை விடுவிக்க வேண்டும் என்ற அந்த நல்ல நோக்கத்தோடு இதை ரத்து செய்கின்ற எண்ணம் கொண்டு அரசு பரிசிலனை செய்துகொண்டிருக்கிறது.

**திரு. மா. சின்னராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழை மீனவர்களுக்கான கடனை ரத்து செய்வதற்காக அரசு பரிசிலித்துக்கொண்டு இருப்பதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இது விரைவிலே பரிசீ லித்து அந்தக் கடன் தள்ளுபடி செய்யப்படுமா? என்பதையும், இதுவரை இந்த வசூல் நடவடிக்கைகள் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

[1984 ஏப்ரல் 27

**மாண்புமிகு திரு. க. கலைமணி:** மாண்புமிகு தலைவர் அவர்களே, விரைவில் இந்தக் கடனை தள்ளுபடி செய்வதற்காக அரசு நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது. இதற்கிடையிலே மீனவர்கள் மத்தியிலே அந்தக் கடனை வசூலிப்பதற்கு அரசு எந்தவித வற்புறுத்தலும் செய்யாது. அவர்கள் நீண்ட காலமாகக் கொடுக்க முடியாத நிலையிலே அந்தக் கடனை வைத்திருக்கிறார்கள் என்பதையும் மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கெ. சொக்கலிங்கம்:** பேரவைத் தலைவர் அவர்களே, மீனவர்களுக்காக வீடு கட்டும் திட்டத்தின் அடிப்படையிலே, கடனாகக் கட்டிக் கொடுக்கப்பட்ட அந்தக் கடனை அரசு ரத்து செய்யவேண்டும் என்று கேட்பது ஒரு பக்கம் இருக்க, அதே நேரத்தில் ஏற்கனவே கட்டப்பட்டு பழுதடைந்த நிலையில். ஒழுகும் நிலையில் மிக மோசமான நிலையில் உள்ள அந்த வீடுகளை பழுது பார்ப்பதற்காக அதற்கு என்று நிதி ஒதுக்கி, அப்படி மோசமாக உள்ள வீடுகளை, ஒழுகும் வீடுகளை பழுது பார்த்து நிவாரணம் அளிக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. கலைமணி:** தலைவர் அவர்களே, நாம் கட்டிக் கொடுக்கிற வீடுகள் இலவசமாகக் கட்டிக் கொடுத்துக்கொண்டு வருகிறோம். அதில் பழுதுகள் ஏற்படுமானால் அதை அவர்களே பழுது பார்த்துக்கொள்ள வேண்டும். நாம் பழுது பார்க்கின்ற திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. பி. எஸ். துரைசாமி:** மாண்புமிகு தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி டாமிலே, கே. ஆர். பி. டாமிலே, மீன் வளர்ப்புத் திட்டத்தின் அடிப்படையிலே அங்குள்ளவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட இதுவரையிலும் எந்த அரசும் உத்தேசிக்கவில்லை. எனவே, உடனடியாக அங்கே வீடுகளைக் கட்டிக் கொடுக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

(முற்பகல் 10-20)

**மாண்புமிகு திரு. க. கலைமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாம் இப்போது இலவசமாகக் கட்டிக் கொடுக்கின்ற வீடுகளை கடல் பகுதியிலே வாழ்கிற மீனவர்களுக்குத்தான் கட்டிக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். அவர்கள் உள்நாட்டு மீனவர்களைப்பற்றிக் கேட்கிறார்கள். அது பற்றி அரசு பரிசீலிக்கும்.



1984 ஏப்ரல் 27]

**திரு. ப. பொன்னுரங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் 1977-க்குப் பிறகுதான் 1 கோடி ரூபாய் மீனவர்களுக்காக இலவசமாக வீடுகள் கட்டிக் கொடுக்க ஒதுக்கப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். 1974-லே கலைஞர் ஆட்சிக் காலத்திலேயே 100 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டது. எமர்ஜென்சி காலத்திலேயும் கூட 100 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டது. அப்பொழுதே இலவசமாக வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா? அப்படி என்றால், இப்பொழுதுதான் கட்டிக் கொடுக்கிறோம் என்று சொல்வது முறைதானா, சரிதானா? மேலும், 1974-லேயிருந்து இதுவரையில் ஒதுக்கிய நிதியில் எத்தனை வீடுகள் மீனவர்களுக்காக இலவசமாகக் கட்டப்பட்டது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. கலைமணி:** மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பொன்னுரங்கம் அவர்கள் நான் சொன்னதை சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என்று நினைக்கிறேன். 1975 ஆம் ஆண்டிலேயிருந்துதான் இலவசமாக வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம் இருக்கிறது என்று சொன்னேன். ஆனால் அவர்கள் 1977 என்று சொன்னதாகச் சொல்கிறார்கள். (குறுக்கீடு) ஆனால் இப்பொழுது கடனைத் தள்ளுகிற அந்தத் திட்டம் 1975 ஆம் ஆண்டுக்கு முன்னாலே கட்டிக் கொடுக்கப்பட்ட வீடுகளுக்கு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உடுக்குறியிட்ட வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

## (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்.

### சத்தியமங்கலம் வட்டம், குத்தியாலத்தூர் மலைக்கு சாலையை அகலப்படுத்தி செப்பனிடும் திட்டம்.

**1 — வினா எண். 3121 — திரு. இரா. தாமரைக்கனி :** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

கோவை மாவட்டம், சத்தியமங்கலம் வட்டம், குத்தியாலத்தூர் மலைக்கு சாலையை அகலப்படுத்தி செப்பனிடும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

குத்தியாலத்தூர் வனப் பகுதியில் சாலை மேம்பாட்டுப் பணி மத்திய அரசால் ஐந்தாவது திட்ட மத்தியசாலை நிதி (ஒதுக்கீடு)யின் கீழ் ரூ. 51.50 இலட்சத்திற்கு முதலில் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இச்சாலைப் பணி கீழ்க்காணும் மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டது—

1. கெம்பநாயக்கன் பாளையத்திலிருந்து கடம்பூர் வரை—இச்சாலையின் நீளம் 16.50 கி.மீ. ஆகும். இதன் திருத்திய மதிப்பீடு மத்திய அரசினால் ரூ. 44.75 இலட்சத்திற்கு ஏற்கப்பட்டு வேலை முன்னேற்றத்திலுள்ளது.

2. கடம்பூரிலிருந்து சந்திப்பு முனைவரை—இச்சாலையின் நீளம் 6.70 கி. மீ. ஆகும். ரூ. 23.00 இலட்சத்திற்கு திருத்திய நிர்வாக ஒப்பளிப்பு மத்திய அரசிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கிடையில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு அவை மாநில அரசின் பரிசீலனையில் உள்ளன.

3. அஞ்சனம் சந்திப்பிலிருந்து குன்றி முடிய—இச்சாலையின் நீளம் 9.00 கி.மீ. ஆகும். இச்சாலைப் பகுதியை ரூ. 45.00 இலட்சம் செலவில் ஆறாவது ஐந்தாண்டு திட்டத்தில் எடுத்துக் கொள்ளலாம் என்று மத்திய அரசுக்கு சிபாரிசு செய்யப்பட்டுள்ளது. மத்திய அரசின் ஏற்பு கிடைத்தவுடன் வேலை தொடங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**வேடசந்தூர் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் கிராம நல அலுவலர்களுக்காக கட்டப்பட்ட குடியிருப்பு வீடுகள்.**

2—வினா எண். 3248—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் தாலுகா வேடசந்தூர் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் கிராம நல அலுவலர்களுக்காக கட்டப்பட்ட பத்து குடியிருப்பு வீடுகளும் பயன்படுத்தப்படாமல் இருக்கிறது என்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில் அவைகளை உடன் சரி செய்ய அரசு மேற்கொண்ட நடவடிக்கை யாது ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) புயலால் சேதமடைந்துள்ள இக்கட்டிடங்களைப் பழுது பார்க்கும் செயற்குறிப்பு மாவட்ட ஆட்சியாளரின் நடவடிக்கையில் உள்ளது.





**உதகமண்டலம் சிறப்பங்காடியின் நிர்வாகம் பற்றி புகார் பேரில் அரசு நடவடிக்கை.**

3—வினா எண். 4462—திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு கைத்தறி மற்றும் கூட்டுறவு அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உதகமண்டலம் சிறப்பங்காடியின் நிர்வாகம் பற்றி புகார் ஏதேனும் அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது ?

விடை—

(அ) உதகமண்டலம் சிறப்பங்காடி ''நீலகிரி கூட்டுறவு நிறுவனத்தினரால்'' நடத்தப்பட்டு வருகிறது. இதன் நிர்வாகம் பற்றி புகார் கூறி முறையீடுகள் வந்துள்ளன.

(ஆ) இது குறித்து துணைப்பதிவாளர், உதகமண்டலம் தமிழ்நாடு கூட்டுறவு சட்டப் பிரிவு 65-ன்கீழ் விசாரணை நடத்தினார். மதுபானப் பிரிவில் ஜூன் 79 முதல் பிப்ரவரி 1981 வரை மொத்தம் ரூ. 64,055.17 மதிப்புள்ள சரக்கு இருப்புக் குறைவு கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இருப்புக் குறைவிற்கு பொறுப்பான விற்பனையாளர்கள் இருவர் வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளார்கள். அவர்களிடமிருந்து ரூ. 1,966.03 வசூலிக்கப்பட்டுள்ளது. மேலாளர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. உதகமண்டலம் சிறப்பங்காடியின் முன்னாள் தனி அலுவலரிடம் பெறப்பட்ட விளக்கத்தை பதிவாளர் பரிசீலித்து வருகிறார். மேலும் குற்ற நடவடிக்கை (Prosecution) மற்றும் இருப்புக் குறைவிற்கு உண்டான தொகையை வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.

**மதுராந்தகம் தாலூகாவில் 1979-80 1980-81 ஆம் ஆண்டுகளில் நிலங்களில் புதிதாக சவுக்கு பயிர் செய்யப்பட்டுள்ள நிலத்தின் பரப்பளவு.**

4—வினா. எண். 4630—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு, மதுராந்தகம் தாலூகாவில் 1979–80, 1980–81 ஆம் ஆண்டுகளில் நிலங்களில் புதிதாக சவுக்கு பயிர் செய்யப்பட்டுள்ள நிலத்தின் பரப்பளவு எவ்வளவு ?

விடை —

தனியார் நிலங்களில் புதிதாக சவுக்கு பயிர் செய்யப்பட்டுள்ள நிலத்தின் பரப்பளவு கீழ் வருமாறு—

| | | தனியார் நிலங்கள். | வனத்துறை நிலங்கள். |
|---|---|---|---|
| (1, 1979–80 | .. | 6,008 ஏக்கர் | 115.75 ஏக்கர் |
| (2) 1980–81 | .. | 4,346 ஏக்கர் | ஏதுமில்லை |

**மதுராந்தகம் நகரத்தில் உள்ள ஜானகிராமன் பந்துலு டிரஸ்ட் சரிவர நடைபெறாதது குறித்து அரசு நடவடிக்கை.**

5—வினா எண். 5316—திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுராந்தகம் நகரத்தில் உள்ள ஜானகிராம் பந்துலு டிரஸ்ட் சரியாக நடைபெறவில்லை என்பது அரசுக்கு தெரியுமா?

(ஆ) அந்த டிரஸ்டுக்கு சொந்தமான சொத்துக்கள் விற்கப்பட்டும் தனியாரின் ஆதிக்கத்தில் உள்ளது என்பது அரசுக்கு தெரியுமா ?

(இ) டிரஸ்டின் நோக்கமாகிய இலவச உணவு இலவச தங்கும் இடம் நிறைவேற்றப்படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா ?

விடை—

(அ), (ஆ) மற்றும் (இ) மதுராந்தகத்தில் உள்ள ஜானகிராம் பந்துலு டிரஸ்ட் நிர்வாகம் சரியாக நடைபெறவில்லை என்ற புகார் வந்ததின் பேரில் இந்த டிரஸ்டினை இந்து சமய அறநிலைய சட்டப் பிரிவுகளின்கீழ் கொண்டுவர, 1959 ஆம் ஆண்டு இந்துசமய அறநிலைய சட்டப் பிரிவு 3 (1)-ன்கீழ் விசாரணை செய்து அறிக்கை அனுப்புமாறு இந்துசமய அறநிலையத்துறை ஆணையர் கோரப்பட்டுள்ளார். விசாரணை முடிவுற்றதும் இந்து சமய அறநிலையச் சட்டத்தின்கீழ் தக்க நடவடிக்கையினை அரசு மேற்கொள்ளும்.



**மதுரை, சென்னை மருத்துவக் கல்லூரிகளில் மருந்தாக்க இயல் (B. Pharmacy) கற்றுக்கொடுக்கும் ஆசிரியர் பதவிகளை நிரப்புதல்**

6—வினா எண். 5571—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை, சென்னை மருத்துவக் கல்லூரிகளில் மருந்தாக்க இயல் (B. Pharmacy) கற்றுக் கொடுக்கும் ஆசிரியர்கள் பதவி நிரப்பப்படாமல் எவ்வளவு இருக்கிறது ?

(ஆ) அவைகளை உடனடியாக நிரப்புவதற்கு அரசு முன் வருமா ?

விடை—

(அ) மதுரை மருத்துவக் கல்லூரியில் மருத்துவம் சாரா மருந்து செய்முறை உதவி சிறப்பாசிரியர் பதவிகள் மூன்று இன்னும் நிரப்பப்படாமல் உள்ளன. மற்றும் மருந்தியல் உதவியாளர் பதவியில் சென்னை மருத்துவக் கல்லூரியில் மூன்றும், மதுரை மருத்துவக் கல்லூரியில் இரண்டுமாக ஐந்து பணியிடங்களும் நிரப்பப்படாமல் உள்ளன.

(ஆ) இவைகளை எவ்வளவு விரைவில் நிரப்ப நடவடிக்கை எடுக்க முடியுமோ அத்தகைய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**கொடைக்கானலிலுள்ள தனியார் எஸ்டேட்டுகளில் வேலைசெய்யும் தொழிலாளர்களுக்கு கூலி.**

7—வினா எண். 6364—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) கொடைக்கானலில் உள்ள தனியார் எஸ்டேட்டுகளில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு சட்டப்படி கூலி கொடுப்பதில்லை என்பதை அரசு அறியுமா ?

(ஆ) குறிப்பாக செயிண்ட் ஜோசப் எஸ்டேட், பாலமலை எஸ்டேட், தாண்டக்குடி எஸ்டேட் ஆகியவைகளில் பல ஆண்டுகளாக தொழிலாளர்களை குறைந்த கூலிக்கு பயன்படுத்தி வருவதை மாற்ற அரசு என்ன நடவடிக்கை எடுக்க உத்தேசித்துள்ளது ?

விடை —

(அ) குறைந்த அளவு ஊதிய வீதங்கள் மலைத் தோட்டங்களில் கொடுக்கப்படுவதில்லை என்றும், மலைத் தோட்ட அதிபர்கள் இதை அமுல்படுத்த தவறி விடுகிறார்கள் என்றும் அண்ணா தொழிற்சங்கப் பேரவையிடமிருந்து தோட்ட தலைமை ஆய்வாளருக்கு பொதுவான புகார்கள் வந்தன. மேற்கண்ட புகார்களின் அடிப்படையை கண்டறிந்து திண்டுக்கல்லில் உள்ள மலைத் தோட்ட ஆய்வாளர் தொழிற்சங்கங்களின் கூட்டமொன்றை நடத்தினார். அந்தக் கூட்டத்தில் தொழிற்சங்கங்கள் தாங்களாகவே குறிப்பிட்ட புகார்களைக் கொடுப்பதென முடிவு செய்யப்பட்டது. ஆனால் இந்தக் கூட்டத்திற்கு பிறகு குறிப்பிட்ட யாதொரு புகாரும் திண்டுக்கல் தோட்ட ஆய்வாளருக்குக் கிடைக்கப் பெறவில்லை. திண்டுக்கல் மலைத் தோட்ட ஆய்வாளரும் குறைந்த அளவு ஊதியச் சட்ட விதிகள் அமுல்படுத்துவதை சரியாகக் கண்காணிக்க வேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டுள்ளார்.

(ஆ) (1) செயிண்ட் ஜோசப் எஸ்டேட் : இம்மலைத் தோட்டத்திலுள்ள தொழிலாளர்களுக்கு சட்டப்படி கொடுக்கப்பட வேண்டிய குறைந்த பட்சக் கூலி கொடுக்கப்படுகிறது.

(2) பாலமலை எஸ்டேட் : இந்தப் பெயரில் தோட்ட தொழிலாளர் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட மலைத் தோட்டம் ஏதுமில்லை. ஆயினும் பாலமலைப் பகுதியிலுள்ள மலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு குறைந்த அளவு ஊதிய சட்டத்தின் கீழ் நிர்ணயிக்கப்பட்டுள்ள ஊதியம் வழங்கப்படுகிறது.

(3) தாண்டக்குடி எஸ்டேட் : இந்தப் பெயரில் தோட்ட தொழிலாளர் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட மலைத் தோட்டம் ஏதுமில்லை. எனினும் தாண்டக்குடி [illegible] மலைத் தோட்டங்களில் பணிபுரியும் தொழிலாளர்கட்கு குறைநத அளவு ஊதியச் சட்டத்தின் கீழ் நிர்ணயிக்கப்பட்ட கூலி கொடுக்கப்பட்டு வருகிறது.

மலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு குறைந்த அளவு ஊதிய வீதங்களை அமுல்படுத்த அரசு எடுத்துவரும் நடவடிக்கை:

கோவை மைய விலைவாசிப் புள்ளியை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொரு நான்கு மாதத்திற்கும் குறைந்த அளவு கூலி வீதங்களைக் கணக்கிட்டு சம்பளம் வழங்க நான்கு மாதத்திற்கு ஒருமுறை மலைத் தோட்ட நிர்வாகங்களுக்கு திண்டுக்கல் மலைத் தோட்ட ஆய்வாளரால் சுற்றறிக்கை அனுப்பப்படுகிறது. மேலும், ஆய்வுகளின்போது அரசு நிர்ணயித்தகூலி வீதங்கள் தொழிலாளர்களுக்குக் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இது பற்றி வரும் குறிப்பிட்ட புகார்கள் அவ்வப்போது விசாரணை செய்து தீர்த்து வைக்கப்படுகின்றன.



## திருச்சி கூட்டுறவு தொழில் நிலையத்தில் மாணவர்கள் சேர்த்தல்.

8 — வினா எண். 7689—திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) திருச்சி கூட்டுறவு தொழில் நிலையத்தில் மாணவர்களைச் சேர்ப்பது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் காரணம் என்ன ?

விடை —

(அ) ஆம்.

(ஆ) இந்த நிலையத்தில் கற்றுக் கொடுத்த கல்வியை மற்ற பல்தொழில் பயிலகங்கள் (Polytechnics) கற்றுக் கொடுக்கலாம் என்ற காரணத்தால் இதில் மாணவர்கள் சேர்க்கப்படவில்லை.

## கமுதி—கீழ்குடி, கோவிலாங்குளம், —பெருநாழி— அபிராமம் —உடைகுளம் ஆகிய சாலைகள் செப்பனிடப்படுதல்.

9— வினா எண். 8795—திரு. கே. தனுக்கோடித் தேவர் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1975-76 இல் வெள்ளத்தால் பழுதுபட்ட கமுதி கீழ்குடி கோவிலாங்குளம் - பெருநாழி, அபிராமம்-உடைகுளம் சாலைகள் செப்பனிடப்படுமா ?

விடை—

கமுதி-கீழ்குடி சாலை, பெருநாழி-கோவிலாங்குளம் சாலை, மற்றும் உடைகுளம்-நத்தம் சாலை ஆகிய மூன்று சாலைகளில் சில பகுதிகள் 1975-76 ஆம் ஆண்டு வெள்ளத்தால் பழுதடைந்தன. அப்பகுதிகள் அப்போதைக்கப்போது கிடைத்த நிதி வசதிகளைக் கொண்டு செப்பனிடப்பட்டன. அதற்கு மேலும் கிடைத்த நிதி வசதிக்கேற்ப தனிப் பழுதுகள் செப்பனிடப்பட்டன. எல்லாச் சாலைகளும் பழுது நீக்கப்பட்டு போக்குவரத்து நடைபெற்று வருகிறது.

மேலும் கீழ்குடி-கமுதி சாலையை தாரிடவும், அபிவிருத்தி செய்யவும் சிறு பாலங்கள் கட்டவும் ரூ. 40.00 இலட்சத்திற்கு அரசு ஒப்புதல் அளித்து ஆய்வு பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

பெருநாழி-கோவிலாங்குளம் சாலையை ரூ. 26.00 இலட்சம் செலவில் தாரிடவும், அபிவிருத்தி செய்யவும், சிறு பாலங்கள் கட்டவும் அரசு நிர்வாக ஒப்புதல் வழங்கவுள்ளது.

உடைகுளம்-நத்தம் சாலையை அரசின் நிதி வசதிக்கேற்ப அபிவிருத்தி செய்ய திட்டகால பட்டியலில் சேர்க்க பரிசீலனை செய்யப்படும்.

**பாலிடெக்னிக்குகளில் காவலர், துப்புரவாளர்(Sweeper) மற்றும் தோட்டக்காரர்களுக்கு சீருடை.**

**10—வினா எண். 9033—திரு. பம்மல் நல்லதம்பி :** மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாலிடெக்னிக்குகளில் பணிபுரியும் காவலர்கள், துப்புரவாளர் (Sweeper) தோட்டக்காரர்களுக்கு சீருடை வழங்கப்படுகிறதா ?

(ஆ) இல்லையெனில், சீருடை வழங்கப்படுமா ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) சீருடை வழங்குவதற்கான கருத்துரு தொழில்நுட்ப கல்வி இயக்குநரிடம் கோரப்பட்டுள்ளது. அக்கருத்துரு பெறப் பட்டவுடன் அரசு பரிசீலிக்கும்.

**கொடைக்கானல் வட்டம் மண்ணவனூரிலும் பூம்பாறையிலும் TWAD மூலம் குடிநீர் வழங்கும் திட்டம்.**

**11—வினா எண் 9567—திரு. கே. கோபாலகிருஷ்ணன் :** மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா —

(அ) கொடைக்கானல் வட்டம், மண்ணவனூரிலும், பூம் பாறையிலும் TWAD மூலம் குடிநீர் வழங்கும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேறும் ?

விடை—

(அ) ஆம்

(ஆ) பூம்பாறை என்னும் சிற்றூருக்கு குடிநீர் வசதி அளிக்கும் திட்டம் நடைபெற்று வருகிறது. 1983 ஆம் ஆண்டு ஜூன் மாதத்திற்குள் நிறைவேற்றப்படும் என்று எதிர்பார்க்கப் படுகிறது. மண்ணவனூருக்குக் குடிநீர் வழங்கும் திட்ட வேலை கள் 1983-84 ஆம் நிதியாண்டில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் படும்.





**சேடப்பட்டி தொகுதி டி. கல்லுப்பட்டி பஞ்சாயத்து யூனியன் சுப்புலா புரத்திற்கு அருகேயுள்ள அருள்மிகு கோபால்சாமி ஆலயத்திற்கு பாத் தியப்பட்ட 81 ஏக்கர் நிலங்களை அறநிலையத்துறையின் கீழ் கொண்டுவரும் உத்தேசம்.**

**12—வினா எண். 9761—திரு. இரா. தாமரைக்கனி :** மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம், சேடப்பட்டி தொகுதி டி. கல்லுப் பட்டி பஞ்சாயத்து யூனியன் சுப்புலாபுரத்திற்கு அருகே உள்ள அருள்மிகு கோபால்சாமி ஆலயத்திற்கு பாத்தியப்பட்ட 81 ஏக்கர் நிலங்களை அறநிலையத்துறையின் கீழ் கொண்டுவரும் உத் தேசம் உள்ளதா ?

விடை—

அருள்மிகு கோபால்சாமி திருக்கோயில் இந்து சமய அற நிலைய ஆட்சித் துறையின் கீழ் உள்ளது. மேற்படி கோயிலுக்குச் சொந்தமாக ஏக்கர் 85·06 நிலம் உள்ளது. அவற்றில் 66.51 ஏக்கர் நிலம் தனி நபர்கள் ஆக்கிரமிப்பில் உள்ளது.

66.51 ஏக்கர் ஆக்கிரமிப்பிலுள்ள நிலத்தை திருக்கோயில் சுவாதீனத்திற்கு கொண்டு வர தக்க மேல் நடவடிக்கை எடுக்கப் பட்டு வருகிறது.

**1977-ம் ஆண்டு முதல் 1981-ம் ஆண்டு வரை தள்ளுபடி செய்யப்பட்ட தக்காவிக் கடன் தொகை.**

**13—வினா எண் 10678—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகுவருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் 1977ஆம் ஆண்டு முதல் 1981ஆம் ஆண்டு முடிய தள்ளுபடி செய்யப்பட்ட தக்காவிக் கடன் தொகை எவ்வளவு ?

(ஆ) இதனால் பயனடைந்துள்ள விவசாயிகளின் எண்ணிக்கை எவ்வளவு ?

விடை—

(அ) தமிழகத்தில் 1977ஆம் ஆண்டு முதல் 1981ஆம் ஆண்டு முடிய தக்காவிக் கடன் தொகை ரூ. 27,95,72,419 தள்ளுபடி செய்யப்பட்டது.

(ஆ) இதனால் 18,80,445 விவசாயிகள் பயனடைந்துள்ள னர்.

### கூடலூர் தொகுதி பொன்னூர் கிராம மக்கள் மனைப்பட்டா கோரிய மனு மேல் நடவடிக்கை.

**14—வினா எண். 11395—திரு. கே. உச்சி :** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், கூடலூர் தொகுதி, பொன்னூர் கிராமத்திலுள்ள மக்கள் மனைப்பட்டா கோரி மனு அனுப்பி உள்ளார்களா ?

(ஆ) ஆம் எனில் அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

**விடை—**

(அ) நீலகிரி மாவட்டம், கூடலூர் வட்டம், தேவாலா கிராமம் பொன்னூர் காலனியில் தாயகம் திரும்பிய இலங்கை அகதிகள் 468 பேர்கள் மனைப்பட்டா கோரி விண்ணப்பம் செய்துள்ளார்கள்.

(ஆ) மனைப்பட்டா கோரி விண்ணப்பம் செய்தவர்களில் தகுதியுள்ள நபர்கள் எல்லோருக்கும் தற்காலிக மனைப்பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. பொன்னூர் காலனி தேவாலா கிராமம் புல எண். 363/1-ல் உள்ள நிலம் ' காடு ' என்று கணக்கிலிருப்பதால் இதில் 5,000 ஏக்கரை நத்தமாக நிலமாற்றம் செய்வது பரிசீலனையில் உள்ளது. மேற்படி நிலங்களை நத்தமாக மாற்றிய பிறகு, தற்காலிக மனைப்பட்டா வழங்கப்பட்டுள்ளவர்களுக்கு நிரந்தர வீட்டு மனைப்பட்டாக்கள் வழங்கப்படும்.

### குடவாசல் ஒன்றியம் வடுகக்குடி செம்பொன் சேர்ப்பாக்கம் திருப்பாம்புரம் சாலையை கப்பிச் சாலையாக அமைக்கும் திட்டம்.

**15—வினா எண். 11680—திரு. இரெ. இராசமாணிக்கம் :** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம் குடவாசல் ஒன்றியம் வடுகக்குடி செம்பொன் சேர்ப்பாக்கம் திருப்பாம்புரம் சாலையை கப்பிச் சாலையாக அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் திட்டம் எப்போது செயல்படும் ?

**விடை—**

(அ) ஆம்.

(ஆ) இச்சாலையில் ஒரு பகுதி கிராம வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் சிகப்பு கப்பிச் சாலையாக மாற்றப்பட்டது. மற்றொரு பகுதி தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் சிகப்பு கப்பிச் சாலையாக மாற்றப்பட்டு வருகின்றது.





### குத்தாலம் ஒன்றியத்தில் நக்கம்பாடி—இராமாபுரம் சாலையில் நட்டாற்றில் வண்டிப் பாலம் கட்டும் ஆய்வு.

**16—வினா எண். 11684—திரு. இரெ. இராசமாணிக்கம் :** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குத்தாலம் ஒன்றியத்தில் நக்கம்பாடி—இராமாபுரம் சாலையில் நட்டாற்றில் வண்டிப்பாலம் கட்டும் ஆய்வு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், வேலை எப்போது துவங்கப்படும் ?

**விடை—**

(அ) இல்லை.

(ஆ) இவ் வினா எழ இடமில்லை.

### மதுராந்தகம் வட்டம், சிறுநல்லூர், சிறுவங்குணம் சிக்கனாங்குப்பம் சிவாடி ஆகிய கிராமங்களில் உள்ள மானிய நிலங்களுக்கு பட்டா.

**17—வினா எண்.—12100 : திரு. எஸ். டி. உகம்சந்த் :** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்டம், மதுராந்தகம் வட்டம், சிறுநல்லூர், சிறுவங்குணம், சீக்கனாங்குப்பம், சீவாடி ஆகிய கிராமங்களில் உள்ள மானிய நிலங்களை (வெட்டி மானியம், நாவிதர் மான்யம் போன்றவை) மிராசுதாரர்கள் அனுபவிப்பதிலிருந்து அப்புறப்படுத்தப்பட்டுள்ளதா ?

(ஆ) அவ்வாறு எத்தனை ஏக்கர் நிலங்கள் கைப்பற்றப்பட்டன ?

(இ) அவைகள் எத்தனை நபர்களுக்குப் பிரித்துக் கொடுக்கப்பட்டது ?

**விடை—**

(அ) மதுராந்தகம் வட்டம், சிறுநல்லூர், சீக்கனாங்குப்பம், சிறுவங்குணம், மற்றும் சீவாடி ஆகிய கிராமங்களில் உள்ள இனாம் நிலங்கள் (வெட்டி மான்யம், நாவிதர் மான்யம் போன்றவை) அரசால் கடந்த 1951, 1961 மற்றும் 1965ஆம் ஆண்டுகளில் எடுத்துக்கொள்ளப்பட்டு, ரயத்துவாரி பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

(ஆ) 166.56 ஏக்கர்கள் கைப்பற்றப்பட்டன.

(இ) 155 நபர்களுக்கு பிரித்துக் கொடுக்கப்பட்டது.

**சென்னையில் மூன்று பெண்களைக் காப்பாற்றிய ஒரு மாணவியின் படத்தை பள்ளிகளில் வைக்க அரசாணை.**

18. வினா எண். 12328—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் மூன்று பெண்களைக் காப்பாற்றிய ஒரு மாணவியின் படத்தை எல்லாப் பள்ளிகளிலும் வைப்பதற்கு அரசு ஆணை பிறப்பித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் விவரம் யாது ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

**கிராமப்புறங்களில் உற்பத்தியாகும் உணவுப் பொருட்களை பாதுகாக்க உலக வங்கி உதவியுடன் கிடங்குகளை அதிக அளவில் அமைக்கும் செயற் குறிப்பு.**

19—வினா எண். 12654—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிராமப்புறங்களில் உற்பத்தியாகும் உணவுப் பொருட்களை பாதுகாக்க உலக வங்கி உதவியுடன் கிடங்குகளை அதிக அளவில் அமைக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) ஆம். பரிசீலனையில் உள்ளது.

(ஆ) ஒருங்கிணைந்த வேளாண்மை விற்பனை வளர்ச்சிக்காக ரூ. 127.76 கோடிக்கு தயாரிக்கப்பட்ட திட்டத்தின் ஓர் அங்கமாக ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் சேமிப்புக் கிடங்கு வசதிகளுக்காக ரூ. 7 கோடி ஒதுக்க ஓர் செயற்குறிப்பு பரிசீலனையில் உள்ளது. இத்திட்டத்தின் மூலம் துணை அங்காடிகள் (sub-markets) உட்பட 250 ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்கள் பயன்பெறும்.



**தென் ஆற்காடு மாவட்டத்தில் உலக வங்கி உதவியுடன் வறண்ட பகுதிகளில் ஆழ்குழாய் கிணறுகள் அமைக்கும் திட்டம்.**

20—வினா எண். 12658—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தென்னாற்காடு மாவட்டத்தில் உலக வங்கி உதவியுடன் வறண்ட பகுதிகளில் ஆழ்குழாய் கிணறுகள் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் யாது ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ் வினாவிற்கு இடமில்லை.

**மதுராந்தகம் வட்டம், சிறுநல்லூர், பொலம்பாக்கம் ஆகிய கிராமங்களில் நில உச்சவரம்பு சட்டத்திலிருந்து தப்பிக்க பினாமியாக நில பரிவர்த்தனை.**

21—வினா எண். 12808—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்டம், மதுராந்தகம் வட்டம், சிறுநல்லூர், பொலம்பாக்கம் ஆகிய கிராமங்களில் நில உச்சவரம்பு சட்டத்திலிருந்து தப்பிக்க பினாமியாக நில பரிவர்த்தனை செய்யப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், பினாமி நிலங்களை கைப்பற்ற எடுத்த நடவடிக்கை யாது?

விடை—

(அ) மற்றும் (ஆ) : நிலச்சீர்திருத்தச் சட்டத்தின் தற்போதுள்ள சரத்துக்கள்படி நடப்பில் பினாமியாக நிலங்களை வைத்திருப்பதற்கும், சட்டப்படி வைத்திருப்பதற்கும் பாகுபாடு இல்லை. மேலும் பினாமியாக வைத்திருந்தாலோ அல்லது சட்டம் செயலுக்கு வருமுன் மாற்றப்பட்டிருந்தாலோ நடவடிக்கை எடுக்க வழிவகை செய்யப்படவில்லை. நில உச்ச வரம்பு கட்டுதல் குறித்த உத்தேச சட்டத்தினை ஏய்க்கும் நோக்கத்துடன் 1-1-1958 ஆம் நாளிலிருந்து 6-4-1960 ஆம் நாள் வரையில் செய்யப்பட்ட நிலமாற்றங்கள் செல்திறனற்று போகும் வகையில் இரு சபைகளிலும் நிறைவேற்றப்பட்ட சட்ட முன்வடிவிற்கு குடியரசுத் தலைவர் இசைவை அளிக்கவில்லை. மேற்சொன்ன சட்டதிருத்தம் செயல்படுத்தப்படுமேயானால் 1-1-1958-க்குப் பின்னரும் 6-4-1960க்கு முன்னரும் செய்யப்பட்ட நிலமாற்றங்கள் செல்திறனற்றுவிடும்.

**ஆர். எஸ். மங்களம் ஒன்றியம் கடற்கரை பகுதியில் வீணாகும் தரிசு நிலங்களை அபிவிருத்தி செய்யும் திட்டம்.**

22—வினா எண். 12877—திரு. செ சிவசாமி : மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

''ஆர். எஸ். மங்களம் ஒன்றியம் கடற்கரை பகுதியில் (மணக்குடி பஞ்சாயத்து) சுமார் 400 ஏக்கர் தரிசு நிலம் வீணாவதை காட்டு இலாக்கா எடுத்து அபிவிருத்தி செய்யும் உத்தேசம் உண்டா''.

விடை—

ஆர். எஸ். மங்களத்திலுள்ள சர்வே எண் 211-1 மணக்குடி கிராமத்திலுள்ள நிலம் மரங்களுடன் காணப்படுவதால் இதை ஒதுக்குக் காடாக மாற்றி பாதுகாத்து நல்ல முறையில் பராமரிக்க முடியுமா என்பது குறித்து ஆய்வு செய்து இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவருடன் கலந்தாலோசிக்கப்பட்டு வருகிறது.

**செங்கற்பட்டு ஜில்லா ஆவடி நகர வாரியம் அமைத்தல்**

23—வினா எண். 12950—திரு. எல் இளையபெருமாள்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு ஜில்லா ஆவடி நகர வாரியம் எப்போது அமைக்கப்பட்டது?

(ஆ) அவ்வாரியத்தில் எத்தனை உறுப்பினர் உள்ளனர்?

(இ) ஆதி திராவிடர், மலைவாழ் மக்களுக்கு பிரதிநிதித்துவம் அளிக்கப்பட்டுள்ளதா?



விடை—

(அ) 1-7-1971-ல் அமைக்கப்பட்டது.

(ஆ) 21 உறுப்பினர்கள்.

(இ) ஆம்.

**31-12-1981 முடிய சென்னை மாநகராட்சியில் முதல் நான்கு பிரிவுகளில் பணிபுரியும் நபர்களின் எண்ணிக்கை.**

24—வினா எண். 12957—திரு எல் இளையபெருமாள் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மாநகராட்சியில் முதல், இரண்டு, மூன்று, நான்கு ஆகிய பிரிவுகளில் பணிபுரியும் நபர்களின் மொத்த எண்ணிக்கை 31-12-1981 முடிய யாது?

(ஆ) அவர்களில் ஆதிதிராவிடர், மலைவாழ் மக்கள் மேற்கண்ட நான்கு பிரிவுகளிலும் பணி செய்பவர்களின் எண்ணிக்கை யாது?

விடை—

(அ) 31-12-1981ல் பணிபுரிபவர்களின் மொத்த எண்ணிக்கை 13238.

(ஆ)

| வரிசை எண்ணும் வகை விவரமும். | ஆதி திரா விடர். | மலைச் சாதி யினர். | மற்ற பிரி வினர். | மொத்த எண் ணிக்கை. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 முதல் பிரிவு அதிகாரிகள். | இல்லை. | இல்லை. | 17 | 17 |
| 2 இரண்டாம் பிரிவு அதிகாரிகள். | 18 | 1 | 282 | 301 |
| 3 மூன்றாம் பிரிவு அதிகாரிகள். | 381 | இல்லை. | 8,304 | 9,185 |
| 4 நான்காம் பிரிவு அதிகாரிகள். | 511 | 1 | 3,223 | 3,735 |
| மொத்த எண்ணிக்கை. | 1,410 | 2 | 11,826 | 13,238 |

தனியார் பொருட்காட்சி நடத்துவதை தடை செய்ய செயற் குறிப்பு.

25—வினா எண். 12972—திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு செய்தி அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

"தமிழ்நாட்டில் தனியார் பொருட்காட்சி நடத்துவதை தடுக்க தடை சட்டம் கொண்டு வரும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?"

விடை—

தமிழ்நாட்டில் தனியார் பொருட்காட்சி நடத்துவதை தடுக்க புதிய சட்டம் கொண்டு வரும் கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

1981-82 ஆம் ஆண்டு மதுராந்தகம் ஜமாபந்தியில் கோரியுள்ள வீட்டு மனைகள் மற்றும் நிலப்பட்டாக்கள் எண்ணிக்கை.

26—வினா எண் 13099—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்டவினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1981-82 ஆம் ஆண்டு மதுராந்தகம் ஜமாபந்தியில் வீட்டு மனைகள், நிலப்பட்டாக்கள் கோரி வந்துள்ள மனுக்கள் எத்தனை? வழங்கப்பட்டவை எத்தனை?

(ஆ) அதனால் எவ்வளவு பேர் பயன் அடைவார்கள்?

விடை—

(அ) மற்றும் (ஆ) 1981-82 ஆம் ஆண்டில் மதுராந்தகம் ஜமாபந்தியில் வீட்டுமனைகள் மற்றும் நிலப்பட்டாக்கள் கோரி வந்துள்ள மொத்த விண்ணப்பங்கள் 323. இவைகளில் 28-2-1983 வரை 108 விண்ணப்பதாரர்களுக்கு பட்டாக்கள் வழங்கப்பட்டு அவர்கள் பயனடைந்துள்ளார்கள், மீதமுள்ள மனுக்கள், குளம், குட்டை தீர்வை ஏற்படாத மற்றும் தீர்வை ஏற்பட்ட தரிசு, கல்லாங்குத்து புறம்போக்கு ஆகிய நிலங்கள் பற்றியவை யாதலால் அவைகளுக்கான வரைபடங்கள் தயாரித்து புல உட்பிரிவு மற்றும் வகை மாற்றம் செய்து பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.



136270
600 008

சென்னை துறைமுகம் First Line Beach அருகே ஒரு பாலம்.

27—வினா எண். 13485—திரு. ப. பொன்னுரங்கம் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னைத் துறைமுகத்தையொட்டியுள்ள First Line Beach ரயில்வே லெவல் கிராசிங் அடிக்கடி மூடப்படுவதால், அவ்விடத்தில் ஒரு பாலம் அமைக்க அரசு ஆவன புரியுமா?

விடை—

வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் மேம்பாலம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை.

கம்பம் தொகுதியிலுள்ள கூடலூர் பேரூராட்சியை நகராட்சியாக மாற்றல்.

28—வினா எண். 13699—திரு. ஆர். டி. கோபாலன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கம்பம் தொகுதியிலுள்ள கூடலூர் பேரூராட்சியை நகராட்சியாக மாற்ற அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது மாற்றப்படும்?

விடை—

(அ) தற்போது இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

கர்ப்பிணி அரசு ஊழியர்கள் மருத்துவ சான்றிதழ் பெற வேண்டும் என்ற முறை.

29—வினா எண். 13787—திரு. ப. வெங்கட்டசுப்பிரமணியம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கர்ப்பிணி அரசு ஊழியர்கள் மருத்துவ சான்றிதழ் பெறவேண்டும் என்ற முறை மாற்றப்படுமா?

(ஆ) இச்சான்றிதழ் பெறுவதற்கு வசூலிக்கப்படுகின்ற கட்டணம் நீக்கப்படுமா?

விடை—

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசு அடிப்படை விதிகள் 101 (அ)வின்படி கர்ப்பிணி அரசு ஊழியர்கள் பேறு கால விடுப்பு எடுப்பதற்கு எந்தவித சான்றிதழும் பெற வேண்டியதில்லை.

ஆனால் குறை பிரசவ விடுப்பு எடுப்பதற்கு அவர்களுக்கு எந்த மருத்துவமனையில் குறை பிரசவம் நடைபெற்றதோ, அங்குள்ள மருத்துவ அலுவலரிடமிருந்து சான்றிதழ் பெற வேண்டும். இதற்கான சான்றிதழ் இலவசமாகவே வழங்கப் படுகிறது.

### அனைத்து வருவாய் கிராமங்களுக்கும் பல் பொருள் அங்காடிகள்.

30—வினா எண் 13865—திரு. இல. பலராமன் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் உள்ள எல்லா வருவாய் கிராமங் களுக்கும் பல்பொருள் அங்காடிகள் திறக்கப்பட்டுள்ளனவா?

(ஆ) இதன் மூலம் விற்ற பொருள்களின் மதிப்பு யாது?

விடை—

(அ) தமிழகத்தில் மக்கள் வசிக்காத கிராமங்கள் (Uninhabited village) மக்கள் தொகை குறைவாக உள்ள கிராமங்கள், மற்றும் நகராட்சி எல்லைக்கு உட்பட்ட கிராமங்கள் ஆகியவைகளைத் தவிர மற்ற எல்லா வருவாய்க் கிராமங்களிலும் கிராம நியாயவிலைக் கடைகள் திறக்கப் பட்டு விட்டன. மேற்படி கிராம மக்கள் குறைவாக இருக்கும் கிராமத்து அட்டைகள் அருகிலுள்ள நியாய விலைக் கடையில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

(ஆ) இக் கடைகள் மூலம் 1981-82-ம் ஆண்டில் ரூ. 114 கோடி மதிப்புள்ள பொருள்கள் விநியோகம் செய்யப் பட்டன.





### பேருந்துகள் பாடி கட்டுவதற்கு தனியாருக்கு விடல்.

31—வினா 14108—திரு. தி. கா. நல்லப்பன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேருந்துகள் பாடி கட்டுவற்கு தனியாருக்கு கொடுக் கப்படுவது என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், எந்தெந்த கார்ப்பரேஷன்கள் பாடி கட்ட தனியாருக்கு கொடுத்து வருகின்றன.

விடை—

(அ) மற்றும் (ஆ) : திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் மற்றும் பல்லவன் போக்குவரத்துக் கழகம் (மாவட்டப் பிரிவு) கூடு கட்டும் பணியை மேற்கொண்டுள்ளன. பொறியியற் கழகங் களும் போக்குவரத்துக் கழகங்களுக்குக் கூடுகட்டும் பணியினை மேற்கொண்டுள்ளன. 1981-82ஆம் ஆண்டில் போக்குவரத்துக் கழகங்களின் சக்திக்கு மேல் கூடுகள் கட்டுவது அவசியம் எனக் கருதப்பட்டதால் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம், பல்லவன் போக்குவரத்துக் கழகம் (மாவட்டப் பிரிவு) (தற்பொழுது பட்டுக்கோட்டை அழகிரி போக்கு வரத்துக் கழகம்), சோழன் போக்குவரத்துக் கழகம், மற்றும் அண்ணா போக்குவரத்துக் கழகம் ஆகியவற் றிற்கான பேருந்து கூடுகள் கட்டுவதற்குத் தனியா ருக்கு கொடுக்கப் பட்டிருந்தது. போக்குவரத்து நிறுவனங் கள் மற்றும் பொறியியற் கழகங்களின் கூடுகட்டும் திறன் தற்போது அதிகரிக்கப்பட்டுள்ளது. எனவே, இவ்வாண்டி லிருந்து கூடுகட்டும் பணிகள் அனைத்தையும் போக்குவரத்துக் கழகங்களே மேற்கொள்ள வாய்ப்பு உள்ளது.

### விளாத்திகுளம் அரசு மருத்துவமனையில் செவிலியர்கள் மற்றும் பெண் மருத்துவ அதிகாரி நியமித்தல்.

32—வினா 14124—திரு. ரா. கு. பெருமாள் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம் விளாத்திகுளம் அரசு மருத்துவ மனையில் செவிலியர், பெண் மருத்துவ அதிகாரி இல்லை யென்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நியமிக்கப்படுவார்கள்?

விடை—

(அ) மற்றும் (ஆ): தற்சமயம் இம்மருந்தகத்தில் ஒரு செவிலியரும் ஒரு மருத்துவ அலுவலரும் (ஆண்) பணிபுரிந்து வருகின்றனர். இம் மருந்தகத்தை ஐம்பது படுக்கைகள் கொண்ட மருத்துவ மனையாக உயர்த்தி அரசு ஆணை ஏற்கனவே பிறப்பித்துள்ளது, அதற்காக கூடுதலாக ஆறு செவிலியர் பணியிடமும் இரண்டு மருத்துவ அலுவலர் பணியிடமும் உருவாக்கி ஆணை பிறப்பித்துள்ளது. கூடுதல் கட்டிடங்கள் கட்டி முடிக்கப்பட்டு மருத்துவத் துறையிடம் ஒப்படைக்கப்பட்ட பின்னர் பெண் மருத்துவ அலுவலர், செவிலியர்கள் நியமிக்கப் படுவார்கள்.

### இளையான்குடியில் போலீஸ் குவார்ட்டர்சும் போலீஸ் ஸ்டேஷனும் கட்டும் உத்தேசம்.

33—வினா 14197—திரு. செ. சிவசாமி : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இளையான்குடியில் போலீஸ் குவார்ட்டர்சும் போலீஸ் ஸ்டேஷனும் ஒரே இடத்தில் கட்டுவதற்கு உத்தேசிக்கப் பட்டுள்ளதா?

(ஆ) அப்படியானால் எங்கு கட்டப்படும்?

(இ) அதன் பரப்பளவு எவ்வளவு?

விடை—

(அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ) : இக் கேள்விகளுக்கு இடமில்லை.

### ஓட்டல்களில் உள்ள மாவு அரைக்கும் இயந்திரங்களுக்கு விதிக்கப் படும் கட்டணம்.

34—வினா 14219—திரு. எம். கே. ராஜமாணிக்கம் : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஹோட்டலில் மாவு அரைக்கும் இயந்திரங்களில் ( wet grinder ) ஒரு குதிரைத்திறன் அளவுக்கு கட்டணம் வசூலிப்பதில் தொழிற்சாலைக்குள்ள கட்டணம் வசூலிக்கப்படுகிறதா? அல்லது வியாபார ரீதியான கட்டணம் வசூலிக்கப் படுகிறதா ? கட்டணம் எவ்வளவு?

(ஆ) இதற்கென இணைப்பு கொடுக்கும்போது தொழிற் சாலைக்குள்ள விதிமுறைகள் அனுசரிக்கப்படுகின்றனவா?



விடை—

(அ) குறைவழுத்த மின் விநியோகத்தில், மின் பளு பயனீட்டாளர்களுக்கு தொழிற்சாலை மற்றும் தொழிற்சாலை அல்லாத பகுதிகளுக்கும் பொதுவான கட்டணம் விதிக்கப்படு கிறது. ஆகையால் ஹோட்டல்களிலுள்ள மாவரைக்கும் இயந்திரங்களுக்கும் இக்கட்டணமே விதிக்கப்படுகிறது. குறை வழுத்த மின்பளு பயனீட்டார்களுக்குக்கான கட்டணம் பின்வருமாறு :—

| | யூனிட் ஒன்றுக்கு. |
|---|---|
| சென்னைப் பெருநகர் பகுதி .. .. | 55 காசு. |
| மற்ற பகுதி .. .. .. .. | 50 காசு. |

(ஆ) இவற்றிற்கு மின் இணைப்புக் கொடுக்கும்போது மின்பளு பயனீட்டாளர்களுக்கு நடைமுறையிலுள்ள விதிமுறைகள் அனுசரிக்கப்படுகின்றன.

### பாலாற்றில் வெள்ளம் வரும்போது காளாப்பூர், மட்டியூர் மாங்குடி ஆகிய ஊர்கள் பாதிக்கப்படுவதை தடுக்க தடுப்புச் சுவர்.

35—வினா 14264—திரு. இரா. அருணகிரி : மாண்புமிகு நீர்ப் பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) பாலாற்றில் வெள்ளம் வரும்போது, காளாப்பூர், மட்டியூர், மாங்குடி ஆகிய ஊர்கள் மிகவும் பாதிக்கப் படுகின்றன என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், தடுப்புச் சுவர் கட்ட அரசு நட வடிக்கை எடுக்குமா?

விடை—

(அ) 1977 மற்றும் 1979-ம் ஆண்டுகளில் ஏற்பட்ட எதிர்பாராத வெள்ளத்தின்போது, மேற்படி கிராமங்கள் பாதிப்புக்குள்ளாயின.

(ஆ) வெள்ள நிவாரண நிதியின்கீழ், மாவட்ட ஆட்சித் தலைவர் இராமநாதபுரம் அவர்களால், ஒதுக்கீடு செய்யப் பட்ட நிதியிலிருந்து மாங்குடி, காரையூர் கிராமங்களுக்கு, வெள்ளத் தடுப்புகரை மற்றும் அலைக்கற்கள், அமைக்கும் பணி பொதுப்பணித் துறையினரால் செய்து முடிக்கப்பட்டு விட்டன.

[1984 ஏப்ரல் 27

**ஆலங்குடி தொகுதி கும்மங்குளம் இராமத்தில் மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி மூலம் குடிநீர் விநியோகிக்கும் செயற்குறிப்பு.**

36 — வினா 14292—திரு. பெ. திருமாறன் : *மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—*

*புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி தொகுதி கும்மங்குளம் கிராமத்தில் மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி மூலம் குடிநீர் விநியோகிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா*

விடை—

**தற்போது இல்லை.**

**இன்றியமையாப் பொருள்களை பெற மக்களுக்கு கொடுக்கப்பட்ட குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை.**

37— வினா 14382—திரு. இரா. கருப்பையா : *மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தமிழ்நாட்டில் இன்றியமையாப் பொருள்களைப் பெறுவதற்கு மக்களுக்கு கொடுக்கப்பட்ட குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை என்ன ?*

*(ஆ) மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி பகுதிகளில் கொடுக்கப்பட்ட குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை என்ன ?*

*(இ) கிராமப் பகுதிகளில் கொடுக்கப்பட்ட குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை என்ன ?*

விடை—

மாநிலத்திலுள்ள குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை கீழ் வருமாறு :—

| | | |
|---|---|---|
| | | (இலட்சத்தில்). |
| (அ) மொத்த குடும்ப அட்டைகள் | .. | 118.65 |
| (ஆ) நகர்ப்புற பகுதிகளில் வழங்கப்பட்டவை | .. | 34.10 |
| (இ) கிராமப் பகுதிகளில் வழங்கப்பட்டவை | .. | 84.55 |



1984 ஏப்ரல் 27]

**மதுராந்தகம் வட்டம் முன்னத்திருப்பம், சாலையூர் தொண்டமநல்லூர் காலனி மக்களுக்கு மேல்நிலை தொட்டி மூலம் குடிநீர்.**

38—வினா 14415—திரு. எஸ். டி. உகம்சந்த் : *மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) செங்கற்பட்டு மாவட்டம் மதுராந்தகம் வட்டம், முன்னத்திருப்பம், சாலையூர், தொண்டமநல்லூர் காலனி மக்களுக்கு மேல்நிலை தொட்டி மூலம் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க செயற் குறிப்பு உள்ளதா ?*

*(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டிக் கொடுக்கப்படும்?*

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

**1979-80, 1980-81 மற்றும் 1981-82 ஆம் ஆண்டுகளில் நியாய விலைக் கடைகளில் உணவுப் பொருட்களை வழங்க மானியமாக ஒதுக்கிய தொகை.**

39—வினா 14416—திரு. ரா. கிருஷ்ணன் : *மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) நியாய விலைக் கடைகளில் உணவுப் பொருள்கள் வழங்க தமிழ்நாடு அரசு, 1979-80, 1980-81, 1981-82 ஆண்டுகளில் மானியமாக ஒதுக்கிய தொகை எவ்வளவு ?*

*(ஆ) அந்த மானியத் தொகை தொடர்ந்து வழங்கப்படுமா ?*

விடை—

(அ) அரசு அளித்த தொடர் மானியத்தின் விபரங்கள் கீழ் வருமாறு :—

| வருடம். | | கூட்டுறவு. கடைகளுக்கு. | தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகக் கடைகளுக்கு. | மொத்தம். |
|---|---|---|---|---|
| (1) | | (2) | (3) | (4) |
| | | | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| 1979-80 | .. | 125.53 | 98.89 | 224.42 |
| 1980-81 | .. | 132.14 | 105.43 | 237,57 |
| 1981-82 | .. | 254.42 | 105.39 | 359.81 |
| மொத்தம் | .. | 512.09 | 309.71 | 821.80 |

(ஆ) 31-3-1983 வரை லாபத்தில் இயங்க முடியாத கிராமப்புற கடைகளுக்கு மானியம் வழங்க முடிவெடுக்கப்பட்டுள்ளது. அதற்கு மேல் மானியம் வழங்குவது பற்றி பரிசீலித்து முடிவெடுக்கப்படும். தவிர, அரிசியை நியாய விலைக் கடைகள் மூலம் விற்பதில் தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்திற்கு ஏற்படும் நட்டத்தை ஈடுகட்ட தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்திற்கு இதுவரையில் ரூ. 130 கோடிக்கு வழி வகைக் கடன் அரசு வழங்கியுள்ளது.

### நீலகிரி மாவட்டத்தில் ரெவின்யூ கிராமத்திற்கு இரு நியாய விலைக் கடைகள்.

40—வினா 14739—திரு. கே. உச்சி : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நீலகிரி மாவட்டத்தில் செயல்பட்டு வரும் ரெவின்யூ கிராமத்திற்கு ஒரு நியாய விலைக் கடை என்பதை மாற்றி இரண்டு நியாய விலைக் கடைகளை ஏற்படுத்த அரசு முன் வருமா ?



விடை—

ஓடைகள் போன்ற தடைகள் இருந்தாலொழிய, ஒரு வருவாய்க் கிராமத்திற்கு ஒரு கடை என்பதை மாற்றியமைக்க வேண்டியதில்லை என அரசு முடிவெடுத்துள்ளது. ஆனால் தேவையென்றால் மலைப் பகுதிகளில் வரும் கோரிக்கைகளை அனுதாபத்துடன் அரசு பரிசீலிக்கும்.

### நீலகிரி மாவட்டத்தில் கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளில் உற்பத்தியாகும் பதப்படுத்தப்பட்ட தேயிலைக்கு விலை நிர்ணயம்.

41—வினா 14752—திரு. கே. உச்சி : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டத்திலுள்ள பதினொன்று கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளில் உற்பத்தியாகும் பதப்படுத்தப்பட்ட தேயிலைக்கு போதுமான விலை (கட்டுப்படியாகும் விலை) கிடைக்கவில்லையென்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ) : ஆம். உறுப்பினர்கள் அளிக்கும் பச்சை தேயிலையின் தரத்தைப் பொறுத்து, பதப்படுத்தப்பட்ட தேயிலைக்கு விலை கிடைக்கிறது. உறுப்பினர்கள் தரமுள்ள பச்சைத் தேயிலை அளிப்பதற்கு கீழ்க்கண்ட நடவடிக்கைகள் எடுக்கப் பட்டுள்ளன :—

(1) தரமான தேயிலை தயாரிப்பதற்குத் தேவையான தரமுள்ள பச்சைத் தேயிலையை உறுப்பினர்களிடமிருந்து பெற அவர்களுக்குக் குறைந்த விலையில் பூச்சிக் கொல்லி மருந்துகள் அளிக்கப்படுகின்றன.

(2) உற்பத்தி விலையைக் குறைக்க மத்திய மற்றும் மாநில அரசுகள் கலால் வரியையும், விற்பனை வரியையும் குறைத்துள்ளன.

## தஞ்சையிலிருந்து திருவையாறு செல்லும் வழியில் அம்மன்பேட்டை கிராமத்தில் பாலம்.

42—வினா 14972—திரு. மா. சுப்பிரமணியன் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சையிலிருந்து திருவையாறு செல்லும் வழியில் அம்மன்பேட்டை கிராமத்தில் வெட்டாறு பாலத்தின் ஒரு பகுதி உடைந்ததினால் அந்த பாலத்திற்குப் பதிலாக புதிய பாலம் ஏதேனும் கட்டுவதற்கான திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் என்ன மதிப்பீடு ? எப்போது அதற்கான வேலைகள் துவங்கப்படும் ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) பெரம்பலூர்—மானாமதுரை சாலையில் கி.மீ. 62/8ல் வெட்டாற்றின் குறுக்கே ரூ. 25.00 இலட்சம் செலவில் பாலம் கட்ட அரசு அனுமதி வழங்கியுள்ளது. இப் பாலத்தைத் திரும்பக் கட்டும் பணி ஆணை (work order) ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்பட்டுள்ளது. விதிகளின்படி ஒப்பந்தக்காரருடன் உடன்பாடு (Agreement) செய்த பிறகு பணி துவங்கப்படும்.

## பழனி தொகுதியில் முடி திருத்தும் தொழிலாளர் மற்றும் சலவைத் தொழிலாளர்களிடமிருந்து தொழிற் கருவி கேட்டு 1980-8 மற்றும் 1981-82-ல் வந்த மனுக்களின் எண்ணிக்கை.

43—வினா 14999—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பழனி தொகுதியில் முடிதிருத்தும் தொழிலாளர் மற்றும் சலவைத் தொழிலாளர்களிடமிருந்து தொழிற் செய்வதற்கென தொழிற் கருவி கேட்டு மதுரை மாவட்ட ஆட்சித் தலைவருக்கு 1980—81 மற்றும் 1981—82 இல் வந்த மனுக்கள் எத்தனை ?

(ஆ) பெறப்பட்ட மனுக்களில் தொழிற் கருவிகள் வழங்கப் பெற்றவை எவ்வளவு ?



விடை—

(அ) வரப்பெற்ற மனுக்கள்.—

| வருடம். | | சலவைக் கருவி. | சவரக் கருவி. |
|---|---|---|---|
| (1) | | (2) | (3) |
| 1980-81 | .. | 214 | 112 |
| 1981-82 | .. | 234 | 106 |

(ஆ) பெறப்பட்ட மனுக்களில் தொழிற் கருவிகள் வழங்கப் பெற்றவை.—

| | | | |
|---|---|---|---|
| 1980-81 | .. | 74 | 205 |
| 1981 82 | .. | 58 | 96 |

## உத்தமபாளையம் அரசினர் மருத்துவமனையில் உள்ள படுக்கையின் எண்ணிக்கை.

44—வினா 15035—திரு. ஆர். டி. கோபாலன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு, விடையளிப்பாரா—

உத்தமபாளையம் அரசினர் மருத்துவமனையில் உள்ள படுக்கையின் எண்ணிக்கையை அதிகப்படுத்த அரசிடம் திட்டம் உள்ளதா ?

விடை—

இல்லை.

[1984 ஏப்ரல் 27

தென்னாற்காடு மாவட்டம் மேமாத்தூர் மதகுகள் பழுது பார்க்க நடவடிக்கை.

45—வினா 15166—திரு ஆர். தியாகராசன் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தென்னாற்காடு மாவட்டம் மேமாத்தூர் அணைக்கட்டு மதகுகள் பழுதுபார்க்கவும், அலைதாங்கிக் கட்டை கட்டவும் அரசு நடவடிக்கை எடுக்குமா ?

விடை.—

அத்தியாவசியமான மராமத்து வேலைகள் 1982—83ஆம் ஆண்டிலேயே முடிக்கப்பட்டன. மற்ற மராமத்து வேலைகள் வருடந்தோறும் ஒதுக்கப்படும் நிதிக்கு ஏற்ப படிப்படியாகச் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

திருச்சி சட்டக் கல்லூரிக்கு நிரந்தர கட்டிடம் கட்ட நிலம் ஆர்ஜிதம்

46—வினா 15173—திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி சட்டக் கல்லூரிக்கு நிரந்தரக் கட்டிடம் கட்ட நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டதா ?

(ஆ) இல்லை எனில் அரசின் நடவடிக்கை என்ன ?

விடை.

(அ) ஆம். திருச்சிராப்பள்ளி சட்டக் கல்லூரிக் கட்டிடத்திற்காக நாகமங்கலம் கிராமத்தில் சர்வே எண். 180-2, 180-3, 180-4, 181 மற்றும் 182-1இல் உள்ள 30 ஏக்கர் நிலத்தினை ஆர்ஜிதம் செய்வதற்காக நில எடுப்புச் சட்டப் பிரிவு 4(1), மற்றும் 6 மற்றும் 7 இன்கீழான அறிவிக்கைகள் வெளியிடப்பட்டு விட்டன.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.



1984 ஏப்ரல் 27]

மதுரை பொறியியற் கல்லூரி மாணவர் விடுதி.

47—வினா 15339—திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை பொறியியற் கல்லூரி மாணவர் விடுதி மூடப்பட்டது உண்மையா ?

(ஆ) ஆம் எனில் காரணம் என்ன ?

விடை —

(அ) 31—3—1981 முதல் மதுரை தியாகராஜா பொறியியற் கல்லூரி மாணவர் விடுதி காலவரையறையின்றி மூடப்பட்டிருந்தது உண்மை.

(ஆ) 1981 மார்ச் மாத இறுதியில் தியாகராசர் பொறியியற் கல்லூரி விடுதி மாணவர்கள் இரண்டு பிரிவுகளாகிக் கைகலப்பிலும் வன்முறையிலும் ஈடுபட்டதன் காரணமாக இரண்டு மாணவர்கள் கொல்லப்பட்டனர். அதைத் தொடர்ந்து 31—3—1981 முதல் மாணவர் விடுதி காலவரையறையின்றி மூடப்பட்டது. பின்னர் இக்கலவர வழக்கில் விடுதலை செய்யப்பட்ட மாணவர்கள் வேறு கல்லூரிகளுக்கு மாற்றப்பட்டு, அவர்தம் படிப்பைத் தொடர அனுமதிக்கப்பட்டனர்.

மாணவர்களின் நலன் கருதி கல்லூரி விடுதியினைத் திறக்கக் கேட்டுக் கொண்டதன் பேரில் இவ்வாண்டு பொங்கல் விடுமுறைக்குப் பின் கீழே கொடுக்கப்பட்டுள்ள தேதிகளில் விடுதி திறக்கப்பட்டு நன்முறையில் செயல்பட்டு வருகிறது.

(அ) முதலாம் மற்றும் இரண்டாம் ஆண்டு பி.ஈ., மாணவர்களுக்கு 17—1—1983 முதல் திறக்கப்பட்டது.

(ஆ) மூன்றாம் மற்றும் நான்காம் ஆண்டு மாணவர்களுக்கு 21—2—1983 முதல் திறக்கப்பட்ட

மதுரை மாவட்டம் ஏழுமலையில் உள்ள கால்நடை மருந்தகத்திற்கு கட்டிடங்கள் கட்டும் செயற்குறிப்பு.

48—வினா 15350—திரு. இரா. முத்தையா : மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம் ஏழுமலையில் உள்ள கால்நடை மருந்தகத்திற்கு கட்டிடங்கள் கட்டும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

[1984 ஏப்ரல் 27

விடை—

மதுரை மாவட்டம் ஏழுமலையில் உள்ள கால்நடை மருந்தகத்திற்கு கட்டிடங்கள் கட்டும் செயற் குறிப்பு கால்நடை பராமரிப்பு இயக்குநரின் பரிசீலனையில் உள்ளது.

**மதுராந்தகம் வட்டம் மாரிபுத்தூர் கிராம ஆதிதிராவிடர் மக்களுக்கு, வீட்டு மனை வழங்க எடுக்கப்பட்ட நடவடிக்கை.**

49— வினா 15393—திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

செங்கற்பட்டு மாவட்டம் மதுராந்தகம் வட்டம் மாரிபுத்தூர் கிராம ஆதி திராவிட மக்களுக்கு வீட்டுமனை வழங்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

விடை—

மதுராந்தகம் வட்டம் மாரிபுத்தூர் கிராமத்திலுள்ள ஆதி திராவிடர் காலனியில் வசித்துவரும் 63 குடும்பங்களில் சொந்தமாக வீட்டும்னை இல்லாத 15 குடும்பங்களுக்கு மட்டுமே வீட்டு மனை வழங்க வேண்டியிருக்கிறது. இந்த குடும்பங்களைத் தவிர, 24 ஆதி திராவிட குடும்பங்கள் சர்வே எண். 24, குளம் புறம்போக்கிலும் 6 ஆதி திராவிடர் குடும்பங்கள் சர்வே எண். 256 மேய்க்கால் புறம்போக்கிலும் ஆக்கிரமிப்பு செய்து குடிசைக்கட்டி தற்போது வாழ்ந்து வருகின்றனர். ஏற்கெனவே, ஆக்கிரமிப்பிலுள்ள புறம்போக்கு நிலங்களில் மேலும் இடம் இருப்பதால் தனியார் நிலங்களை கையகப்படுத்துவதற்கான தேவை இந்த கிராமத்தில் எழவில்லை. அதனால் ஆக்கிரமிப்புகளை ஒழுங்குபடுத்தி தேவையானவர்களுக்கு வீட்டுமனை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**பொள்ளாச்சி—கோட்டூர் சாலையில் உள்ள ரயில் பாதைக்கு மேம்பாலம் கட்டும் திட்டம்.**

50—வினா 15706—திரு. எம். வி. இரத்தினம்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொள்ளாச்சி-கோட்டூர் சாலையில் உள்ள இரயில் பாதைக்கு மேம்பாலம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது வேலை துவங்கப்படும் ?



1984 ஏப்ரல் 27]

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

**மாங்கோடு ஊராட்சியில் தெரு விளக்குகள் பொருத்த மின்சார இலாகாவுக்கு செலுத்தப்பட்ட தொகை.**

51—வினா 15840—திரு. டி. மணி: மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) கன்னியாகுமரி மின் திட்டத்தின் கீழ் மாங்கோடு ஊராட்சியில் தெரு விளக்குகள் பொருத்த ஊராட்சி மன்றம் மின்சார இலாகாவுக்கு பணம் செலுத்தியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது தெரு விளக்கு இணைப்புகள் கொடுக்கப்படும் ?

விடை—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், மாங்கோடு ஊராட்சியால் கூடுதலாக 25 தெரு விளக்குகள் (15 குமிழ் விளக்குகள், 10 குழல் விளக்குகள்) பொருத்த ரூ. 350. 13—5—1974 அன்றும், 156 தெரு விளக்குகள் (131 குமிழ் விளக்குகள், 25 குழல்விளக்குகள்) பொருத்த ரூ. 2,060, 19—12—1975 அன்றும் செலுத்தப்பட்டது.

(ஆ) எல்லா விளக்குகளுக்கும் மின் இணைப்பு வழங்கப்பட்டுவிட்டது.

**தமிழகத்தில் பால்வாடிகள் எண்ணிக்கை.**

52—வினா 15875—திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் மொத்தம் எத்தனை பால்வாடிகள் உள்ளன ?

(ஆ) செங்கற்பட்டு மாவட்டத்தில் எத்தனை உள்ளன ?

விடை—

(அ) 31-12-82 முடிய தமிழகத்தில் மொத்தம், 27,889 குழந்தைகள் நல மையங்கள் இயங்கி வருகின்றன.

(ஆ) இவற்றுள் செங்கற்பட்டு மாவட்டத்தில் 2536 குழந்தைகள் நல மையங்கள் இயங்கிவருகின்றன.

### மதுராந்தகம் தொகுதியில் கிராமங்களுக்கு Additional Street lights

53—வினா 16037—திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுராந்தகம் தொகுதியில் பல கிராமங்களுக்கு Additi nal St eet lights போட மனுக்கள் வந்திருந்தும் mat rials இல்லாமல் பல மாதங்களாக போடப்படவில்லை என்பது உண்மையா?

(ஆ) எந்த எந்த கிராமங்களுக்கு 1982 ஜனவரி முதல் ஜூன் முடிய Additional s e t lights போடப்பட்டது?

விடை—

(அ) இல்லை.

(ஆ) 1982 ஜனவரி முதல் ஜூன் முடிய மதுராந்தகம் தொகுதியில் கூடுதல் விளக்குகள் போடப்பட்ட கிராமங்கள் விபரம் வருமாறு:—

| | |
|---|---|
| 1. சிறுகளத்தூர் மற்றும் சிலா வட்டம் | 40 வாட் குழல் விளக்குகள் 4 |
| 2. மலையாளிபேட்டை (கருங்குழி ஊராட்சி) | 40 வாட் குழல் விளக்குகள் 2. |
| 3. மலையூர் ஆதி திராவிடர் குடியிருப்பு | 40 வாட் குழல் விளக்குகள் 5. |



### பட்டுக்கோட்டை சிவில் சப்ளை கார்ப்பரேஷனில் உணவு தானியம் மோசடி செய்யப்பட்டுள்ளதாக வந்த புகாரின் பேரில் நடவடிக்கை.

54—வினா 16073—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டுக்கோட்டை சிவில் சப்ளை கார்ப்பரேஷனில் சுமார் 5 இலட்சம் ரூபாய் பெறுமான உணவு தானியம் மோசடி செய்யப்பட்டுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இது பற்றிய விவரம் யாது?

(இ) என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

விடை:

(அ), (ஆ) மற்றும் (இ): பட்டுக்கோட்டையில் உள்ள தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நவீன அரிசி ஆலை மற்றும் அதனுடன் இணைந்துள்ள கிடங்கில் பணிபுரிந்த உதவி மேலாளர், உற்பத்தி பொறியாளர் மற்றும் தர ஆய்வாளர் ஆகியோர் புழுங்கல் அரிசியை கையாடல் செய்துள்ளனர் என 5-6-1982 ஆம் நாளன்று புகார் வந்தது. அப்புகாரின் மீது மேல் நடவடிக்கையாக கழகத்தின் தலைமை அலுவலக ஆய்வுக் குழு (Inspection cell) மேற்படி கிடங்கு, நவீன அரிசி ஆலையை சோதனை செய்தது. மேற்படி சோதனையின் போது 16-5-1982 ஆம் நாளன்று பட்டுக்கோட்டை வடிவேலர் அன் கோ என்னும் நிறுவனம் டி. என். வீ. 6569 என்னும் லாரியில் 110 மூட்டைகள் புழுங்கல் அரிசியையும், மற்றொரு வண்டியில் (cart) 12 மூட்டைகள் புழுங்கல் அரிசியையும் லெவிக்காக டெபாசிட் செய்துள்ளார்கள் என்று தெரியவந்துள்ளது. டெபாசிட் செய்த பிறகு லாரியும், வண்டியும் 121 காலி கோணிகள் மற்றும் 1 சிப்பம் அரிசியுடன் சென்று விட்டன. வாயில் வழி அனுப்பும் பதிவேட்டினை (gate registe ) சோதனை செய்ததில் ஒரு வண்டி (cart) என்பது லாரி டி. என் வீ. 6569 என்றும் 12 மூட்டைகள் புழுங்கல் அரிசி என்பது 120 மூட்டைகள் புழுங்கல் அரிசி என்றும் திருத்தி எழுதப்பட்டுள்ளது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. மேலும் இதுவே 10 வண்டிகள் (carts) 112 மூட்டைகள் என்று அழித்து திருத்தி எழுதப்பட்டுள்ள விபரம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. 12.100 மெட்ரிக் டன் எடையில் 121 மூட்டை புழுங்கல் அரிசி உண்மையாக லெவிக்கு கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால் வியாபாரிக்கு 10 மெட்ரிக் டன் எடையுள்ள 100 மூட்டை புழுங்கல் அரிசி கூடுதலாக அளித்ததாக லெவி ஏற்பு அளிப்பு (Acknowledgement)

வழங்கப்பட்டுள்ளது. லெவி வாங்கும் விலையில் 100 மூட்டைகளின் மதிப்பு ரூ. 25,000 ஆகும். ஆகையால் மேற்படி பட்டுக்கோட்டை நவீன அரிசி ஆலை கிடங்கில் முறைகேடுகள் நிகழ்ந்துள்ளதாகச் சந்தேகப்படும் புழுங்கல் அரிசியின் மதிப்பு ரூ. 25,000 ஆகும். மேற்கூடிய ஒழுங்கீனங்களுக்குப் பொறுப்பான திருவாளர்கள் சி. பன்னீர்செல்வம் (உதவி மேலாளர்) எம். சுந்தரம் (தர ஆய்வாளர்), ஏ. சின்னப்பா (காவலர்) மூவரும் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் மீது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழக இணை நிர்வாக இயக்குநர் தெரிவித்துள்ளார்.

**மதுரை மண்டபம் தேசிய நெடுஞ்சாலையில் சிலைமான் ருக்குமணி ஆலைக்கு அருகில் புதிய பாலம் கட்டும் திட்டம்.**

**55—வினா** 16087—திரு. க. பாரமலை: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழக்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை-மண்டபம் தேசிய நெடுஞ்சாலையில் சிலைமான் ருக்குமணி ஆலைக்கு அருகில் வளைவான இடத்திலுள்ள பழுதடைந்த குறுகிய பாலத்திற்கு பதிலாக புதிய பாலம் கட்டும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

**விடை—**

தேசிய நெடுஞ்சாலை 49, கி.மீ. 10/2-ல் வினாவில் குறிப்பிட்ட சிறிய பாலம் திரும்பக் கட்டும் பணிக்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்தது. இதற்கிடையில், இவ்விடத்தில், பொதுப் பணித் துறையினரால் வைகை மேம்பாடு திட்டத்தின் கீழ் ஒரு பாசனக் கால்வாய் மற்றும் மதகு பலகைகள், மதகுகள் போன்ற நிரந்தர அமைப்புகள் கட்டப்பட்டுவிட்டதால் உத்தேசிக்கப்பட்டுள்ள சிறிய பாலத்தை அமைக்கும் இடத்தை மாற்றி திருத்திய நேர்பாடு மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டது. இந்த பாலத்தின் இடமானது இச்சாலையில் கிலோ மீட்டர் 7/6-லிருந்து 10/6 வரை இணைந்துள்ளது என்றும் இந்த தூரத்தின் நேர்பாட்டை மாற்றியமைக்கும் குறிப்புரை மத்திய அரசின் பரிசீலனையில் இருக்கிறது. இதற்கிடையில் மதுரை நகருக்கு ஒரு மாற்றுவழிச் சாலை அமைப்பதற்கான ஆய்விலுள்ள திட்டம் உருவாகுமானால், மறு நேர்பாடு அமைக்க வேண்டிய அவசியமிருக்காது. ஒரு முடிவெடுக்கும்வரை இப்பொழுதுள்ள குறுகிய பாலத்தை தகுந்த பராமரிப்பு செய்து போக்குவரத்துக்கு உகந்ததாக செய்யப்பட்டுள்ளது.





**கொடைக்கானலில் காட்டிலாகாவிற்கு சொந்தமாக நிலம்.**

**56—வினா** 16102—திரு. ஏ. எம். சேதுராமன் : மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொடைக்கானலில் காட்டு இலாகாவிற்கு சொந்தமாக எவ்வளவு நிலம் உள்ளது ?

(ஆ) அதில் எந்த வகை மரங்கள் வளர்க்கப்படுகின்றன ?

**விடை—**

(அ) கொடைக்கானலில் 29,128.14 ஹெக்டேர் நிலங்கள் காட்டு இலாகாவிற்கு சொந்தமானது. இதில் 25,128.14 ஹெக்டேர்கள் வனச்சட்டம் 1882-ன் பிரிவு 16-ன் கீழ் ஒதுக்குக் காடுகளாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. மீதமுள்ள 4,000 ஹெக்டேர் மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 4-ன் கீழ் ஒதுக்கு நிலங்களாக பிரகடனங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

(ஆ) வனத்துறையால் 13,800 ஹெக்டேர்கள் காப்பு காடுகளில், ப்ளுகம், மிளாறு மற்றும் பைன் மரத்தோட்டங்கள் வளர்க்கப்பட்டுள்ளன. 30 ஹெக்டேர்களில் தேக்கு மரத்தோட்டங்களும் வளர்க்கப்பட்டுள்ளன.

**ஆற்காடு தாலூகா கலவையில் இருந்து வெள்ளம்பி கிராமத்திற்குச் செல்லும் பெரிய கால்வாயை செப்பனிட செயற்குறிப்பு.**

**57—வினா** 16105—திரு. ஏ. ஏம். சேதுராமன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆற்காடு தாலூகா கலவையில் இருந்து வெள்ளம்பி கிராமத்திற்குச் செல்லும் பெரிய கால்வாயை செப்பனிட அரசிடம் ஏதேனும் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) இதனால் பயன் அடையும் கிராமங்கள் எத்தனை ?

[1984 ஏப்ரல் 27

விடை—

(அ) ஆம். மேற்படி வாய்க்காலில் தூர் எடுப்பதற்கு ரூ. 4,500-க்கான ஒரு மதிப்பீடு அனுமதிக்கப்பட்டு, தேசிய ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் திமிரி ஊராட்சி ஒன்றியத்தால் இப்பணி செயற்படுத்தப்பட்டு வருகிறது.

(ஆ) இக்கால்வாயினால் வெள்ளம்பி ஏரியின் கீழ் 249.16 ஏக்கர் நிலங்கள் வெள்ளம்பி கிராமத்தில் பயனடைகின்றன.

**1981 ஜனவரி முதல் 1982 ஜூன் முடிய தமிழகத்தில் உள்ள சிறைகளில் இறந்தவர்கள் எண்ணிக்கை.**

58—வினா 16122—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு சட்டம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1981 ஜனவரி முதல் 1982 ஜூன் முடிய உள்ள காலங்களில் தமிழகத்திலுள்ள சிறைகளில் இறந்தவர்கள் எத்தனை பேர் ?

(ஆ) இயற்கையாக எத்தனை பேர் மாண்டனர் ?

விடை—

(அ) 91

(ஆ) 91 பேர்களில் 83 பேர்கள் இயற்கையாக மாண்டனர். 7 பேர்கள் தற்கொலை புரிந்து கொண்டு மாண்டனர். 1 நபர் சக சிறைவாசியால் அடித்துக் கொல்லப்பட்டார்.

**புதிய மீனவர் பயிற்சி மையங்கள் துவங்கும் செயற்குறிப்பு.**

59—வினா 16289—திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு மீன் வளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதிய மீனவர் பயிற்சி மையங்கள் துவங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) மீனவர் பயிற்சி மையங்களில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை எவ்வளவு ?

(இ) அவர்களில் எத்தனை பேருக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது ?



1984 ஏப்ரல் 27]

விடை—

(அ) இல்லை.

(ஆ) தற்போதுள்ள மையங்களில் பயிற்சி பெறும் மாணவர்களின் எண்ணிக்கை 227.

(இ) இதுவரை 4,883 பேர் பயிற்சி பெற்றுள்ளனர். சிலர் அரசு நிறுவனங்கள், துறைகள், தனியார் நிறுவனங்கள் போன்றவற்றில் வேலை வாய்ப்பினையும் பெறுகின்றனர். மீத முள்ளோர் தமது தொழிலில் ஈடுபடுகின்றனர். இத்துறையும் கூடிய வரையில் பயிற்சி பெற்ற மீனவர்கள் தங்கள் தொழிலில் ஈடுபட்டுள்ளனரா என்பதையும் கவனித்து வருகிறது. மீன் துறை நடத்தும் பயிற்சியானது, மீன் துறையிலோ அல்லது வேறு துறையிலோ வேலை வாய்ப்பினுக்கு உத்திரவாதம் அளிக்கும் எண்ணத்தோடு, அல்ல ; பயிற்சியாளர்களின் திறமையின் தரத்தை உயர்த்துவதற்காகத்தான் நடத்தப்படுகிறது.

**திருநெல்வேலியில் கடனா நதி பாசனத்திலுள்ள விவசாயிகள் கூட்டுறவு கடன்களை தற்காலிகமாக ஒத்திவைக்கக் கோரிக்கை.**

60—வினா 16523—திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : மாண்புமிகு கைத்தறி மற்றும் கூட்டுறவு அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம் கடனா நதி பாசனத்திலுள்ள விவசாயிகள் அண்மையில் ஏற்பட்ட நீர்ப்பாசன தட்டுப்பாட்டின் காரணமாக பயிர்கள் பாதிக்கப்பட்டுள்ளதால் கூட்டுறவுக் கடன்களை தற்காலிகமாக ஒத்தி வைக்குமாறு தமிழக அரசிற்கு கோரிக்கை ஏதேனும் கொடுத்துள்ளார்களா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

(இ) அரசு என்ன முடிவெடுத்துள்ளது?

விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

(இ) கேள்வி எழவில்லை.

[1984 ஏப்ரல் 27

**வடமதுரை ஒன்றியம் சுக்காம்பட்டியில் ஆதி திராவிட மக்களுக்கு வீட்டு மனைப் பட்டா.**

61— வினா 16580—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வேடசந்தூர் வட்டம், வட மதுரை ஒன்றியம் சுக்காம் பட்டியில் வசிக்கும் ஆதி திராவிட மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா கொடுக்கும் உத்தேசம் உள்ளதா ?

விடை—

வேடசந்தூர் வட்டம், வட மதுரை ஒன்றியம், சுக்காய் பட்டியில் வசிக்கும் ஆதி திராவிட மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்குவது குறித்து திண்டுக்கல் ஆதி திராவிடர் நல தனித் தாசில்தார் (அலகு எண் 2) இடமிருந்து அறிக்கை பெற்று மாவட்ட ஆட்சியாளரால் நடவடிக்கை எடுக்கப்படும்.

**வேடசந்தூர்—கோவிலூர் வழி ஆர். புதுக்கோட்டை, திண்டுக்கல்—அச்சணம் பட்டி ஆகிய வழித்தடங்களில் நகர பேருந்து விடல்.**

62— வினா 16584—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வேடசந்தூர்-கோவிலூர் வழி ஆர். புதுக்கோட்டை. திண்டுக்கல்-அச்சணம்பட்டி ஆகிய வழித்தடங்களில் நகரப் பேருந்து விட அரசிடம் செயற் குறிப்புள்ளதா ?

விடை—

வேடசந்தூரிலிருந்து ஆர். புதுக்கோட்டை வழியாக கோவிலூருக்கு பாண்டியன் போக்குவரத்துக் கழகத்தின் நகரப் பேருந்து 1—1—1983 முதல் ஓடிக் கொண்டிருக்கிறது. திண்டுக்கல்லிலிருந்து அச்சணம்பட்டிக்கு நகரப் பேருந்து விடும் செயற் குறிப்புஅரசின் பரிசீலனையில் உள்ளது.



1984 ஏப்ரல் 27]

**1980–81, 1981–82 ஆகிய ஆண்டுகளில் திண்டுக்கல் மாவட்ட மருத்துவ மனையில் பணியாற்றும் பணியாளர்களின் எண்ணிக்கை.**

63— வினா 16594—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1980–81, 1981–82 வரை திண்டுக்கல் மாவட்ட மருத்துவமனையில் மொத்தம் பணியாற்றும் சகலவிதமான பணியாளர்கள் எத்தனை பேர்கள் ?

(ஆ) 1980–81, 1981–82 ஆண்டுகளில் அங்கு வழங்கப் பட்ட மருந்துகளின் மதிப்பு எவ்வளவு ?

விடை—

(அ) மற்றும் (ஆ) திண்டுக்கல் மாவட்ட மருத்துவமனையில் 1980–81, 1981–82 ஆண்டுகளில் மொத்தம் பணியாற்றிய சகலவிதமான பணியாளர்களின் எண்ணிக்கையும், வழங்கப்பட்ட மருந்துகளின் மதிப்பும் கீழ்வருமாறு :

| ஆண்டு. | மொத்தம் பணி யாற்றிய சகல விதமான பணி யாளர்களின் எண் ணிக்கை. | வழங்கப்பட்ட மருந்துகளின் மதிப்பு. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | | ரூ. |
| 1980—81 .. | 343 | 14,88,839 00 |
| 1981—82 .. | 350 | 28,87,751 00 |

**தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் உள் நோயாளிக்கு செலவிடப்படும் தொகை.**

64— வினா 16650—திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சாதாரண உள் நோயாளியாக உள்ளவர்களுக்கு நாள் ஒன்றுக்கு உணவுக்காக மட்டும் என்ன செலவிடப்படுகிறது?

(ஆ) அவ்வாறு வழங்கப்படும் ஊட்டச் சத்துணவு வகைகள் என்ன ?

விடை—

(அ) மருத்துவமனை உள் நோயாளிகளுக்கு தமிழ்நாடு மருத்துவத் துறை விதித் தொகுப்பில் குறிப்பிட்டுள்ளபடி உணவு வகைகள் வழங்கப்படுகின்றன. தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலுள்ள உள் நோயாளிகளுக்கு, ஒரு நாளைக்கு உணவுக்காக கீழ்க்கண்டவாறு செலவிடப்படுகிறது:

(1) இந்திய சாதாரண ஊட்டச் சத்துணவு ஒரு நாளைக்கு ஒரு உள் நோயாளிக்கு—

அசைவம் —4.61 வீதம்.

சைவம்—4.38 வீதம்.

(2) குழந்தைகளுக்கான ஊட்டச் சத்துணவு ஒரு நாளைக்கு ஒரு நோயாளிக்கு—

அசைவம்—6.11 வீதம்.

சைவம்—5.71 வீதம்.

(3) நீரிழிவு நோயாளிகளுக்கு ஒரு நாளைக்கு ஒரு நோயாளிக்கு—

சைவம்—7.11 வீதம்.

அசைவம்—6.87 வீதம்.

(4) டி. பி. நோயாளிக்கு ஒரு நாளைக்கு ஒரு நோயாளிக்கு—

அசைவம்—7.95 வீதம்,

சைவம்—8.43 வீதம்.

(5) பால் மற்றும் ரொட்டி உணவு (M. and B. Di t) இந்த உணவு வகையில் பால், ரொட்டி, பழம், வெண்ணெய் போன்ற வற்றிற்கு ஒரு நோயாளிக்கு ஒரு நாளைக்கு ரூ. 5.18 வீதம் செலவிடப்படுகிறது.

மேற்கண்ட உணவு வகைகளின்படி, ''தஞ்சை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில்'' அனைத்து உள் நோயாளிகளுக்கும் உணவுக்காக சராசரியாக ஒரு நாளைக்கு ரூ. 2,000 செலவிடப்படுகிறது.

(ஆ) பால், ரொட்டி, வெண்ணெய், காய்கறி, கீரை, ஆரஞ்சு, வாழைப்பழம், முட்டை, எலுமிச்சைப்பழம், இட்லி போன்ற ஊட்டச் சத்துணவு வகைகள் ஆகும்.



**பாபநாசம் தொகுதி நெடுந்தெருவில் கால்நடை மருந்தகம் அமைக்கும் திட்டம்.**

**65—வினா 16674—திரு. எஸ். இராசாராமன் :** மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம், பாபநாசம் தொகுதி நெடுந்தெருவில் கால்நடை மருந்தகம் அமைக்கும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**தஞ்சை, திருச்சி மாவட்டங்களில் இருந்து சமய அறக்கட்டளைகள் நிர்வாகத்தின் கீழுள்ள கோவில்களில் தமிழில் அர்ச்சனை செய்யப்படும் கோவில்கள்.**

**66—வினா 16684—திரு. எஸ். இராசாராமன் :** மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை, திருச்சி மாவட்டங்களில் இந்து சமய அறக்கட்டளைகள் நிர்வாகத்தின்கீழ் உள்ள கோவில்களில் தமிழில் அர்ச்சனை செய்யப்படும் கோயில்கள் எத்தனை ?

(ஆ) அந்தக் கோயில்களில் தமிழ் அர்ச்சனை மூலம் கிடைக்கும் ஆண்டு வருமானம் எவ்வளவு ?

விடை—

(அ) மற்றும் (ஆ) : தஞ்சை மாவட்டத்தில் 21 ஆலயங்களில் தமிழில் அர்ச்சனை நடைபெற்று வருகின்றது. அந்த ஆலயங்களுக்கு கடந்த பசலி ஆண்டில் தமிழ் அர்ச்சனை மூலம் ரூ. 5,051.30 வருமானம் வந்துள்ளது. திருச்சி மாவட்டத்தில் 22 திருக்கோயில்களில் தமிழில் அர்ச்சனை நடைபெறுகிறது. இதில் 13 ஆலயங்களில் தமிழ் அர்ச்சனை மூலம் ஆண்டு ஒன்றுக்கு சுமார் ரூ. 12,612 கிடைக்கிறது. எஞ்சிய 9 ஆலயங்களில் தனிக் கணக்கு வைத்துக் கொள்ளாததால் தமிழ் அர்ச்சனை மூலம் வரும் வருமானம் தெரியவில்லை.

[1984 ஏப்ரல் 27

**சேலம் மாவட்டத்தில் ஓடைக்காட்டுப்புத்தூரில் கூட்டுறவு அங்காடி.**

**67—வினா 16789—திருமதி தா. இராசாம்பாள் :** மாண்புமிகு நிதித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஓடைக்காட்டுப்புத்தூரில் உள்ள மலைவாழ் மக்கள் பயன்பெறும் வகையில் அங்கே ஒரு கூட்டுறவு அங்காடி அமைக்க அரசு முன்வருமா ?

**விடை—**

சேலம் மாவட்டம், ஆத்தூர் தாலுக்காவிலுள்ள வேப்பம் பூண்டி வருவாய்க் கிராமத்தின் உட்கடையாக ஓடைக் காட்டுப்புத்தூர் இருக்கிறது. இங்குள்ள 38 குடும்பங்களுக்கு 38 குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. 38 குடும்ப அட்டைகளும் இரண்டு கிலோ மீட்டர் தொலைவிலுள்ள வேப்பம் பூண்டி நியாய விலைக் கடையுடன் இணைக்கப்பட்டுள்ளன. இக்கடை மூலம் அத்தியாவசியப் பண்டங்கள் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன. 38 அட்டைகளுக்கு மட்டும் ஓடைக்காட்டுப்புத்தூரில் ஒரு நியாய விலைக் கடை தனியாகத் திறப்பது என்பது தேவையற்றது என அரசு கருதுகிறது.

**குமரி மாவட்டம் பழையாற்றின் குறுக்கே பாலம்.**

**68—வினா 16824—திரு. சு. முத்துக்கிருஷ்ணன் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டம் பழையாற்றின் குறுக்கே உத்திரப் பட்டி ஊருக்குச் செல்ல பாலம் கட்ட மதிப்பீடு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்போது கட்டப்படும் ?

**விடை—**

(அ) மற்றும் (ஆ): கன்னியாகுமரி மாவட்டத்தில், கன்னியாகுமரி—திருவனந்தபுரம் தேசிய நெடுஞ்சாலையில் (தேசிய நெடுஞ்சாலை 47) கி.மீ. 637/2-ல் பிரிந்து உதிரப்பட்டி கிராமத்திற்குச் செல்லும் வழியில் பழையாற்றின் குறுக்கே ரூ. 20 இலட்சம் செலவில் பாலம் கட்டும் பணியை 1983-84-ம் ஆண்டு இரண்டாம் பாக திட்டத்தில் செயல்படுத்த அரசின் ஒப்புதல் அளிக்கப்பட உள்ளது.



1984 ஏப்ரல் 27]

**1980-81 மற்றும் 1981-82 ஆம் ஆண்டுகளில் அறநிலையத்துறையின் மூலம் நடந்த கலப்பு திருமணம்.**

**69—வினா எண் 16828—திரு. சு. முத்துக்கிருஷ்ணன் :** மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக அறநிலையத் துறையின் மூலம் 1980-81, 1981-82-ம் ஆண்டுகளில் எத்தனை ஏழைகளுக்கு கலப்பு திருமணம் நடத்தி வைக்கப்பட்டது?

(ஆ) அதற்கான செலவு எவ்வளவு ?

**விடை—**

(அ) தமிழக அறநிலையத்துறையின் மூலம் 18 பெரிய திருக்கோயில்களின் நிதியிலிருந்து கலப்புத் திருமணம் செய்து வைக்கப்பட்ட ஏழைத் தம்பதிகளின் எண்ணிக்கை பின் வருமாறு :—

| ஆண்டு. | தம்பதிகளின் எண்ணிக்கை. |
|---|---|
| 1980-81 .. .. | 199 |
| 1981-82 .. .. | 547 |
| மொத்தம் .. | 746 |

(ஆ) மேற்கண்ட கலப்புத் திருமணங்களுக்கான செலவு மொத்தம் ரூ. 5,95,240.92.

**1981-82-ல் தொழிலாளர் நல கோர்ட்டுகள் மூலம் தீர்க்கப்பட்ட தொழில் தகராறுகள் எண்ணிக்கை.**

**70—வினா எண் 16831—திரு. சு. முத்துக்கிருஷ்ணன் :** மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1981-82-ல் எத்தனை தொழில் தகராறுகள் தொழிலாளர் நல கோர்ட்டுகள் மூலம் தீர்க்கப்பட்டுள்ளது?

(ஆ) தீர்க்கப்படாதவை எத்தனை ?

விடை—

| | | |
|---|---|---|
| (அ) | 1981-ல் தீர்க்கப்பட்டுள்ள வழக்குகள் 2,827. | 1982-ல் தீர்க்கப்பட்டுள்ள வழக்குகள் 3,164. |
| (ஆ) | 1981-ல் தீர்க்கப்படாதவைகள் 4,205. | 1982-ல் தீர்க்கப் படாதவைகள் 3,530. |

### வேடசந்தூரிலிருந்து வடமதுரை செல்லும் தனியார் பஸ்கள் தென்னம்பட்டி கிராமத்தினுள் சென்றுவர நடவடிக்கை.

71—வினா எண் 16846—வேடசந்தூர் திரு. வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூரில் இருந்து வடமதுரை செல்லும் தனியார் பஸ்கள் தென்னம்பட்டி கிராமத்தினுள் சென்று திரும்பி வரவேண்டும் என பெர்மிட் இருந்தும் அந்தத் தனியார் பேருந்துகள் அவ்வூருக்குள் செல்வதில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அப்பேருந்துகள் தென்னம்பட்டி உள்ளே சென்றுவர எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ) திண்டுக்கல் ராஜமோகன் டிரான்ஸ்போர்ட் கம்பெனியாரது நகரப்பேருந்து ஒன்றும், மற்றும் திண்டுக்கல் சக்தி விநாயகர் டிரான்ஸ்போர்ட் கம்பெனியாரது நகரப்பேருந்து ஒன்றும், ஆகிய இரண்டு பேருந்துகள் தென்னம்பட்டி கிராமத்தினை தொட்டுச் செல்ல அனுமதி அளிக்கப்பட்டுள்ளவையாகும். இந்த இரண்டு நகரப் பேருந்துகளும் தவறாமல் தென்னம்பட்டி கிராமத்தினை தொட்டுச் சென்று பணியாற்றி வருகின்றன.

### மதுரை மாநகரில் மங்கம்மா சத்திரத்தை பராமரித்தல்.

72—வினா எண் 16946—திரு. க. பாரமலை : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) மதுரை மாநகரில் உள்ள மங்கம்மா சத்திரத்தில் (தங்கும் விடுதி) உள்ள அறைகள் உரிய பராமரிப்பு இன்றியும், கழிப்பறைகள் கதவுகள் இன்றியும் பல ஆண்டுகள் பழுது பார்ப்பதோ, வெள்ளையடிக்கப்படுதலோ (Wh te Washing) இன்றி மோசமாக உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில் அவற்றின் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?



விடை—

(அ) மற்றும் (ஆ) மங்கம்மா சத்திரத்தில் உள்ள கழிப்பறைகளில் உள்ள கதவுகள் ஆகியவை அவ்வப்போது பழுது பார்க்கப்பட்டுள்ளன. மேலும் இக்கட்டிடங்களுக்காக விசேஷ பராமரிப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### மதுரை மாநகரில் மங்கம்மா சத்திரத்தில் பயணிகள் தங்குவதன் மூலம் கிடைக்கும் வருவாய்.

73—வினா எண் 16947—திரு. க. பாரமலை : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாநகரில் உள்ள மங்கம்மா சத்திரத்தில் பயணிகள் தங்குவதற்கு அறைகள் வாடகைக்கு விடப்படுவதன் மூலம் கிடைக்கும் வருவாய் அனைத்தும் பராமரிப்பு செலவுகள் போக சேமிப்பில் உள்ள தொகை எவ்வளவு ?

விடை—

மங்கம்மா சத்திரத்தில் செலவைவிட வருவாய் சமீப ஆண்டுகளில் சற்று கூடுதலாகி உள்ளது. 31—3—82 தேதி முடிய மீதமுள்ள தொகை ரூபாய் 1,11,000 ஆகும்.

### வேதாரண்யம் ஒன்றியம் தகட்டூர் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம்.

74—வினா எண் 16956—திரு. எம். எஸ். மாணிக்கம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம் வேதாரண்யம் ஒன்றியம் தகட்டூர் கிராமத்தில் ஒரு புதிய ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்படுத்த அரசு முன் வருமா ?

விடை—

தற்சமயம் அரசிடம் அவ்வித குறிப்பேதும் இல்லை.

[1984 ஏப்ரல் 27

**வேதாரண்யம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு சொந்தக் கட்டிடம்.**

75—வினா எண் 16957—திரு. எம். எஸ். மாணிக்கம் : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டம் வேதாரண்யம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு சொந்தக் கட்டிடம் இல்லை என்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில் கட்டிடம் மற்றும் கிடங்கு கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) சொந்தக் கட்டிடம் மற்றும் கிடங்குகள் கட்டுவதற்காக நிலம் வாங்க விற்பனைக்குழு நடவடிக்கை எடுத்து வருகிறது.

**புதிய ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் ஏற்கனவே உள்ள சுகாதார நிலையத்திற்கும் இடையே உள்ள அளவு.**

76—வினா எண் 16959—திரு. ப. சுந்தரம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதியதாக ஏற்படுத்தப்படும் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் ஏற்கெனவே உள்ள சுகாதார நிலையத்திற்கும் இடையே உள்ள அளவு ஏதேனும் நிர்ணயிக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அளவு எவ்வளவு ?

விடை—

(அ) மற்றும் (ஆ) புதிய ஆரம்ப சுகாதார நிலையம் ஏற்படுத்தப்படும் கிராமத்திற்கு 8 கி.மீ. தூரத்திற்குள் எந்த மருத்துவமனைகளும் இதர மருத்துவ வசதிகளும் இருக்கக் கூடாது என்ற பொதுவான அடிப்படையில் தான் புதிய ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஏற்படுத்தப்படுகின்றன.



1984 ஏப்ரல் 27]

**வடாற்காடு மாவட்டம் திருப்பத்தூர் நகரிலிருந்து மண்டலவாடி ஊராட்சி குன்னத்தூர் வரை நகர பேருந்து விட தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்திற்கு வந்த மனுக்கள் எண்ணிக்கை.**

77—வினா எண் 16961—திரு. ப. சுந்தரம்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம் திருப்பத்தூர் நகரிலிருந்து மண்டலவாடி ஊராட்சி குன்னத்தூர் வரை நகர பேருந்து விட தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகத்திற்கு மனுக்கள் வந்து உள்ளதா?

(ஆ) ஆம் எனில் உடன் பேருந்து விட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

(அ) ஆம்.

(ஆ) திருப்பத்தூரிலிருந்து மண்டலவாடி குறுக்குச் சாலைக்குப் போதுமான பேருந்துகளும் நகரப்பேருந்துகளும் ஓடிக் கொண்டிருக்கின்றன. மண்டலவாடி குறுக்குச் சாலையில் இருந்து குன்னத்தூர் வரை உள்ள தடம் போக்குவரத்துக்கு தகுதியற்றதாக உள்ளதால் இந்தத் தடத்தில் நகரப்பேருந்து விடுவதற்கு இயலாது.

**நொய்யல் ஆற்றில் அணைப்பாளையம் சமீபம் அணைக்கட்டுதல் குறித்து செயற்குறிப்பு.**

78—வினா எண் 16980—திரு. தி. கா. நல்லப்பன்: மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நொய்யல் ஆற்றில் அணைப்பாளையம் சமீபம் அணைகட்டி, புஞ்சைபாடி தொழுவு குளத்திற்கு தண்ணீர் கொண்டு செல்லும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது எப்போது செயலுக்கு வரும்?

விடை—

(அ) மற்றும் (ஆ) இத்திட்டம் சம்பந்தப்பட்ட நல அதிகாரிகளின் அறிக்கை தலைமைப் பொறியாளர் (ஆய்வு) அவர்களின் பரிசீலனையில் உள்ளது.

[1984 ஏப்ரல் 27

**கஸ்தூரிபாய் காந்தி இண்டியன் நேஷனல் ஸ்லம்ஸ் எய்டு சொசைடி நிறுவியுள்ள ஸ்ரீதேவி கருமாரி அம்மன் வீட்டு மனை கட்டிட சங்கத்தை கூட்டுறவு சங்கமாக பதிவு செய்ய கோரிக்கை.**

79—**வினா எண்** 17004—திரு. க. பாரமலை : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வீடில்லாத ஏழை அரிஜன மற்றும் பிற்படுத்தப்பட்ட மக்களுக்காக வீட்டுமனை நிலங்கள் வழங்கும் நோக்கத்தோடு ஆரம்பிக்கப்பட்ட கஸ்தூரிபாய் காந்தி இண்டியன் நேஷனல் ஸ்லம்ஸ் எய்டு சொசைட்டி நிறுவியுள்ள ஸ்ரீதேவி கருமாரி அம்மன் வீட்டுமனை கட்டிட சங்கத்தை கூட்டுறவுச் சங்கமாகப் திவு செய்ய வேண்டுகோள் ஏதும் அரசுக்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

**விடை—**

(அ) ஆம்.

(ஆ) ஸ்ரீதேவி கருமாரி அம்மன் கூட்டுறவு மனை வழங்கும் சங்கம் அமைப்பதற்கான சாத்தியக் கூறுகள் இல்லையென கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் (வீட்டுவசதி) கூறியுள்ளார். கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் (வீட்டுவசதி) அவர்கள் கோருகின்ற விவரங்களை முதன்மை அமைப்பாளர் அளித்தால் வீட்டு வசதி கூட்டுறவுத் துறையினால் மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

**வேதாரண்யத்தில் அரசு ஊழியர் குடியிருப்பு கட்ட செயற்குறிப்பு.**

80—**வினா எண்** 17023 திரு. எம். எஸ். மாணிக்கம்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், வேதாரண்யத்தில் அரசு ஊழியர் குடியிருப்புக் கட்ட ஏதேனும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

இல்லை.



1984 ஏப்ரல் 27]

**கன்னியாகுமரி மாவட்டத்தில் சித்த மருத்துவமனைகளின் எண்ணிக்கை.**

81—**வினா எண்** 17041—திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள சித்த மருத்துவ மனைகள் எத்தனை?

(ஆ) எந்தெந்த இடங்களில் உள்ளன?

(இ) பஞ்சாயத்து ஒன்றியங்கள் மேற்பார்வையில் சித்த மருத்துவமனைகள் அந்த மாவட்டத்தில் ஏற்படுத்தப்பட்டிருக்கிறதா?

(ஈ) பூவங்கோடு என்ற இடத்தில் சித்த மருத்துவமனை நடத்த அனுமதிக்கப்பட்டுள்ளதா?

விடை—

(அ) மூன்று சித்தா பிரிவுகள் அரசினர் மருத்துவமனைகளில் உள்ளன.

(ஆ) (1) அரசினர் தலைமையில் மாவட்ட மருத்துவமனை, நாகர்கோயில்.

(2) அரசினர் மருத்துவமனை, பத்மனாடபுரம்.

(3) அரசினர் மருத்துவமனை, குழித்துறை.

(இ) ஆம். குருந்தென்கோடு ஊராட்சி ஒன்றியத்தின் கீழ் திங்கள் சந்தையில் ஒரு முழுநேர முறைப்படுத்தப்பட்ட சித்த மருந்தகம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

(ஈ) 18-2-1980 நாளும், 251 எண்ணும் (நிலை) கொண்ட (நல்வாழ்வுத்துறை) அரசு ஆணையில் 20 அரசினர் ஊரக சித்த மருந்தகங்கள் ஆரம்பிக்க அரசு அனுமதி வழங்கியுள்ளது. இதில் பூவங்கோடு ஊரக சித்த மருந்தகமும் அடங்கும்.

**கல்லூரி கல்வி இயக்குநர் நியமனம்**

82—**வினா எண்** 17050—திரு. ஜே. ஹேமச்சந்திரன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 31-7-1982லிருந்து கல்லூரிக் கல்வி இயக்குநர் பதவி காலியாக இருக்கிறது என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ)—டாக்டர் கா. மீனாட்சி சுந்தரம் அவர்கள் கல்லூரிக் கல்வி இயக்குநராக 11-2-1983 முற்பகலில் நியமனம் செய்யப்பட்டுள்ளதால், இயக்குநர் பதவி காலியாக இல்லை.

### காடு வளர்ப்பு திட்டத்தின்கீழ் கன்னியாகுமரி மாவட்டத்தில் நடப்பட்டுள்ள மரக்கன்றுகளின் எண்ணிக்கை

83—வினா எண் 17066—திரு. டி. மணி: மாண்புமிகு செய்தி மற்றும் அற நிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் காடு வளர்ப்புத் திட்டத்தின் கீழ் எந்தெந்த சாலையோரங்களில் எத்தனை கன்றுகள் நடப்பட்டுள்ளன?

(ஆ) நடப்பட்டவைகளில் எத்தனை வகை மரக்கன்றுகள் நடப்பட்டன?

விடை—

| | | கன்றுகள். |
|---|---|---|
| (அ) | (1) 1979 ஆம் வருடத்தில் ஆரல்வாய்மொழி நெடுமாங்காடு சாலையில் கலியல் முதல் நெட்டா வரை (7.9. கி. மீ.) | 822 |
| | (2) 1980 ஆம் வருடத்தில் காவல்கிணறு கன்னியாகுமரி சாலையில் குமாரபுரம் முதல் அஞ்சுகிராமம் வரை (11.6 கி.மீ.) | 1,825 |
| | (3) 1981 ஆம் வருடத்தில் ஆரல்வாய் மொழி முதல் தடிக்காரன் கோணம் வரை (12.5 கி. மி.) | 2,500 |
| | மொத்தம் நடப்பட்ட கன்றுகள் .. | 5,147 |

(ஆ) நடப்பட்ட கன்று வகைகள் :—

சிசு, புளி, புங்கம், வேம்பு, டிலோனிக்ஸ்ரிஜியா ஆகிய ஐந்து வகை கன்றுகள் நடப்பட்டன.



### சோழன் போக்குவரத்துக் கழகத்தை இரண்டாகப் பிரித்தல்.

84—வினா எண் 17095—திரு. ப. செ. சென்னிமலை என்கிற கந்தசாமி : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சோழன் போக்குவரத்துக் கழகம் இரண்டாகப் பிரிக்கப்படுமா ?

(ஆ) ஆம் எனில் எப்போது பிரிக்கப்படும் ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) இப்பொருள் அரசின் பரிசீலனையில் உள்ளது.

### 1980-81 மற்றும் 1981-82 ஆகிய ஆண்டுகளில் கும்பகோணம் கிராமிய மின்சார கூட்டுறவுச் சங்கம் மூலம் விவசாயிகள் மோட்டார்களுக்கு கொடுக்கப்பட்ட மின் இணைப்புகளின் எண்ணிக்கை.

85—வினா எண் 17139—திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்பகோணம் கிராமிய மின்சார கூட்டுறவுச் சங்கம் மூலம் 1980-81, 1981-82, 1982-83 ஆகிய ஆண்டுகளில் விவசாயிகள் மோட்டார்களுக்கு கொடுக்கப்பட்ட மின் இணைப்புகள் எவ்வளவு ?

(ஆ) 1982-ல் தேங்கி இருக்கும் விண்ணப்பங்கள் எவ்வளவு ?

விடை—

(அ) சங்கம் ஆரம்பிக்கப்பட்ட தேதி —1-7-1980.

| | 1980-81. | 1981-82. | 1982-83. (பிப்ரவரி முதல்). |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| விவசாய மோட்டார்களுக்கு கொடுக்கப்பட்ட மின் இணைப்புகள். | (9 மாதங்கள்) 66 | 141 | 146 |
| (ஆ) 1982-83ல்-தேங்கி இருக்கும் விண்ணப்பங்கள்— | 1 | .. | .. |

[1984 ஏப்ரல் 27

ஆட்டோ டாக்சிகளில் உள்ள மீட்டர்களில் இரவு நேரங்களில் பல்புகள் எரியாதது குறித்து நடவடிக்கை.

86—வினா எண் 17195—திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆட்டோ, டாக்சிகளில் உள்ள மீட்டர்களில் இரவு நேரங்களில் பார்ப்பதற்கென பொருத்தப்பட்டுள்ள பல்புகள் சரிவர எரிவதில்லை என்பதை அரசு அறியுமா ?

(ஆ) இதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

விடை—

(அ) மற்றும் (ஆ) ஆட்டோ, டாக்சி ஆகியவற்றில் உள்ள மீட்டர்களில் பொருத்தப்பட்டுள்ள விளக்குகள் எரிவதில்லை எனக் கண்டு பிடிக்கப்பட்ட உடன் சி.எப்.எக்ஸ். நோட்டீஸ் கொடுக்கப்படுகின்றது.

மோட்டார் வாகன ஆய்வாளர்கள் காவல் துறையினர் சென்னை நகரில் உள்ள வாடகைக் கார்களையும், ஆட்டோ ரிக்ஷாக்களையும் சோதனை செய்ததில் கடந்த 1-4-1982 முதல் 15-3-1983 வரை 4 முறைகேடுகள் கண்டு பிடிக்கப்பட்டன. மேலும் 99 வாகனங்களுக்கு சி.எப்.எக்ஸ். நோட்டீஸ் கொடுக்கப் பட்டிருக்கிறது. மீட்டர் சரிவர பொருத்தப்படாமலும், விளக்குகள் எரியாமலும் குற்றம் புரிந்த வாகனங்களின் ஓட்டுநர்கள் உரிமையாளர்கள் மீது காவல் துறையில் 1982-ம் ஆண்டு 100 வழக்குகளும் 1983-ம் ஆண்டு 22-3-1983 மார்ச் மாதம் முடிய 25 வழக்குகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

அரசுக் கட்டிடத்திலும் வாடகைக் கட்டிடத்திலும் உள்ள மாவட்ட ஆட்சியாளர்.

87—வினா எண் 17197—திரு. து. புருஷோத்தமன் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

எந்தெந்த மாவட்ட ஆட்சியாளர் அலுவலகம் அரசு கட்டிடத்திலும், வாடகைக் கட்டிடத்திலும் உள்ளன ?



1984 ஏப்ரல் 27]

விடை—

ஈரோட்டில் அமைந்துள்ள பெரியார் மாவட்ட ஆட்சியாளர் அலுவலகம் தவிர, ஏனைய எல்லா மாவட்ட ஆட்சியாளர் அலுவலகங்களும், அரசுக் கட்டிடத்தில் உள்ளன. பெரியார் மாவட்ட ஆட்சியாளர் அலுவலகம் கட்டும் பணி விரைந்து நடைபெற்று வருகின்றது.

1981 ஜனவரி முதல் 1982 டிசம்பர் வரை தஞ்சை மாவட்டத்திற்கு புதிய பேருந்து வழித்தடம் கேட்டுவந்த மனுக்களின் எண்ணிக்கை.

88—வினா எண் 17237—திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் மண்டலப் போக்குவரத்து அலுவலரிடம் 1981 ஜனவரி முதல் 1982 டிசம்பர் வரை புதிய பேருந்து வழித்தடம் கேட்டுவந்த மனுக்கள் எத்தனை ?

(ஆ) அனுமதி வழங்கப்பட்ட வழித்தடங்கள் எத்தனை ?

(இ) வழங்கப்பட்டவையில் எத்தனைப் பேருந்துகள் ஓடிக் கொண்டிருக்கின்றன ?

விடை—

(அ) 48 மனுக்கள்.

(ஆ) உரிமம் ஏதும் வழங்கப்படவில்லை. அவை பரிசீலனையில் உள்ளன.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

சென்னையிலுள்ள சட்டக் கல்வி இயக்குநர் அலுவலகம்.

89—வினா எண் 17238—திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் உள்ள சட்டக் கல்வி இயக்குநர் அலுவலகம் வாடகைக் கட்டிடத்தில் இயங்கி வருகிறதா ?

(ஆ) ஆம் எனில், மாத வாடகை எவ்வளவு கொடுக்கப்படுகிறது ?

(இ) சட்டக் கல்லூரியில் இவ்வலுவலகம் மீண்டும் இயங்க அரசு உத்தரவு இடுமா ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) ரூ. 6,147.50.

(இ) சட்டக் கல்லூரியில் இவ்வலுவலகத்தை மீண்டும் இயங்கச் செய்வதற்கான செயற்குறிப்பு எதுவும் அரசின் வசமில்லை.

1979-80, 1980-81 மற்றும் 1981-82 ஆண்டுகளில் சோழன் போக்குவரத்துக்கு வழங்கப்பட்ட பேருந்துகள்.

90—வினா எண் 17249—திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சோழன் போக்குவரத்துக் கழகத்தினருக்கு 1979-80, 1980-81, 1981-82 ஆண்டுகளுக்கு வழங்கப்பட்ட புதிய பேருந்துகள் எத்தனை ?

(ஆ) அவற்றின் மதிப்பு எவ்வளவு ?

விடை—

| | | |
|---|---|---|
| (அ) | 1979-80 — | 125 |
| | 1980-81 — | 115 |
| | 1981-82 — | 138 |
| (ஆ) | 1979-80 — | ரூ. 2,25,16,717. |
| | 1980-81 — | ரூ. 2,63,46,000. |
| | 1981-82 — | ரூ. 3,12,11,810. |

வடாற்காடு மாவட்டம், பூங்குளம் ஊராட்சியில் பலப்பநத்தம் சாலை அமைக்க ஊராட்சி நிதியிலிருந்து எடுக்கப்பட்ட பணம்.

91—வினா எண் 17270—திரு. ப. சுந்தரம் : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டம், திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள பூங்குளம் ஊராட்சியில் பலப்பநத்தம் சாலை அமைப்பதற்கு ஊராட்சி நிதியில் இருந்து பணம் எடுக்கப்பட்டு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?



விடை—

(அ) ஆம்.

(ஆ) இச்சாலை முழுமையும் பட்டா நிலங்களினூடே செல்வதால் நில ஆர்ஜிதம் செய்ய வாணியம்பாடி வட்டாட்சியர் அளித்த மதிப்பீட்டின்படி ரூ. 9,000 பூங்குளம் ஊராட்சி நிதியிலிருந்து எடுக்கப்பட்டு துணை ஆட்சித்தலைவர் தணிக்கை கணக்கில் மாநில வங்கியில் வைக்கப்பட்டுள்ளது. திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றிய பொறியாளரால் சரியான மதிப்பீடு தயார் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. கோட்டப் பொறியாளரின் தொழில் நுட்ப அங்கீகாரம் விரைவில் பெற்று, தேசிய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் சாலை வேலை செய்யப்படும்.

செங்கற்பட்டு மலைப் பூங்காவை விஸ்தரிக்கும் செயற்குறிப்பு.

92—வினா எண் 17289—திரு. சி. கணேசன் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மலைப் பூங்காவை விஸ்தரிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

விடை—

(அ) மற்றும் (ஆ) இல்லை.

கடலோரப் பகுதி மீனவர்கட்கு வீடு.

93—வினா எண் 17291—திரு. சி. கணேசன் : மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழக கடலோரப் பகுதி மீனவர்கட்கு வீடு கட்டித் தர அரசு முன் வருமா ?

விடை—

1975—76-லிருந்து 1980—81 வரையில் கடலோர மாவட்டங்களில் உள்ள மீனவ கிராமங்களில் ரூ. 6.80 இலட்சம் செலவில் 9,931 வீடுகள் கட்டுவதற்கு ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன. அவைகளில் 6,643 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள வீடுகள் விரைவில் கட்டி முடிக்கப்படும்.

### செங்கற்பட்டு புனித மேரி பெண்கள் உயர்நிலைப்பள்ளியை மேல் நிலைப் பள்ளியாக அங்கீகரிக்க கோரிக்கை.

94—வினா எண் 17301—திரு. சி. கணேசன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு புனித மேரி பெண்கள் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக அங்கீகரிக்க அரசிடம் கோரிக்கை வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்து இருக்கும் நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக உயர்த்துவதற்கு விதிமுறைகள் நிர்ணயிப்பது குறித்து அரசு பரிசீலித்து வருகிறது. அதனால் தனியாக, செங்கற்பட்டு புனித மேரி பெண்கள் உயர்நிலைப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக உயர்த்துவதற்கான நடவடிக்கை இப்பொழுது எடுக்க இயலாது.

### பொதுப்பணித்துறையில் தொடர்ந்து வேலை செய்துவரும் தினக்கூலி ஊழியர்களை நிரந்தரமாக்கும் செயற்குறிப்பு.

95—வினா எண் 17330—திரு. க. பாரமலை: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பொதுப்பணித் துறையில் 5 வருடங்கள் தொடர்ந்து வேலை செய்துவரும் தினக்கூலி ஊழியர்களை (என். எம். ஆர்.) நிரந்தரம் செய்யும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?



விடை—

பொதுப்பணித் துறையில் பணியாற்றும் தினக்கூலி ஊழியர்களின் பணியினை நிரந்தரமாக்கத் தேவையான பணிக்காலத்தின் பத்து ஆண்டுகளிலிருந்து மேலும் குறைப்பதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

### 1981-82 ஆம் ஆண்டில் மரம் வளர்ப்புத் திட்டத்தின்கீழ் நடப்பட்ட மரங்களின் எண்ணிக்கை.

96—வினா எண் 17332-எ—திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மரம் வளர்ப்புத் திட்டத்தின்கீழ் 1981—82-ல் எத்தனை மரங்கள் நடப்பட்டன ?

விடை—

1981—82 ஆம் வருடத்தில் மரம் வளர்ப்புத் திட்டத்தின் கீழ் 746.00 லட்சம் மரக் கன்றுகள் நடப்பட்டன. இவைகளில் 680.71 லட்சம் வனத்துறை மூலமாகவும், 65.29 லட்சம் பொதுமக்கள் மூலமாகவும் நடப்பட்டுள்ளன.

### செங்கற்பட்டு நகரில் அரசு மருத்துவமனையில் யானைக்கால் நோயாளிகட்கு தனி இடம் ஒதுக்குதல்.

97—வினா எண் 17344—திரு. சி. கணேசன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

செங்கற்பட்டு நகரில் அரசு மருத்துவமனையில் யானைக் கால் நோயாளிகட்கு தனி இடம் ஒதுக்கப்பட்டுள்ளதா ?

விடை—

செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் யானைக்கால் வியாதி உள்ளவர்களுக்கு மருத்துவ வார்டிலும் அறுவை சிகிச்சைக்கு உட்பட வேண்டிய கேசுகளாக இருந்தால் அறுவை சிகிச்சை வார்டுகளிலும் சிகிச்சை அளிக்கப்படுகிறது. தனி வார்டுகள் ஒதுக்கப்படவில்லை.

செங்கை நகரில் ஆர்.வி. அரசுக் கலைக் கல்லூரிக்கு சுற்று மதில் சுவர்கள் கட்டுதல்.

98—வினா எண் 17346—திரு. சி. கணேசன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கை நகரில் ஆர். வி. அரசுக் கலைக் கல்லூரிக்கு சுற்று மதில் சுவர் கட்டப்படுமா ?

(ஆ) ஆம் எனில், அதற்கான நடவடிக்கை எப்போது எடுக்கப்படும் ?

விடை—

(அ) தற்போது சுற்று மதில் சுவர் கட்டப்படுவதற்கான கருத்துரு ஏதும் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

தர்மபுரி மாவட்டம் பாலக்கோட்டில் அண்ணா போக்குவரத்துக் கழக சார்பில் பேருந்துகளை பழுதுபார்க்கும் இடம் ஆரம்பிக்கும் உத்தேசம்.

99—வினா எண் 17417—திரு. மு. ப. முனுசாமி : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரி மாவட்டம் பாலக்கோட்டில் அண்ணா போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் பேருந்துகளை பழுது பார்க்கும் இடமும், கிளை அலுவலகமும் ஆரம்பிக்கும் உத்தேசம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ஆரம்பிக்கப்படும் ?



விடை—

(அ) ஆம்.

(ஆ) இதற்கான வேலை 1983–84 நிதியாண்டில் ஆரம்பிக்கப்படும்.

அரசு கலைக் கல்லூரி முதுநிலைப் பட்டப் படிப்புத்துறைக்கு தலைமைப் பேராசிரியர்களை நியமிக்க சிறப்புத் தகுதி.

100—வினா எண் 17434—திரு. சி. கணேசன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசு கலைக் கல்லூரிகளில் முதுநிலைப் பட்டப்படிப்புத் துறைக்கு தலைமைப் பேராசிரியர்களை நியமிக்கப்படுவதில் அனுசரிக்கும் சிறப்புத் தகுதிகள் யாவை ?

விடை—

அரசு கலைக் கல்லூரிகளில் முதுநிலைப் பட்டப்படிப்புத் துறைக்கு தலைமைப் பேராசிரியர்களாக நியமிக்கப்படுவதற்குத் தனியான சிறப்புத் தகுதிகள் எதுவும் இல்லை. பேராசிரியர்களே முதுநிலைப் பட்டப்படிப்புத் துறைகளில் (Head of Post Graduate Department) நியமிக்கப்படுகிறார்கள்.

[குறிப்பு. ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது எனபதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்.

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள்.

திரு. எல். இளையபெருமாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன். தஞ்சை மாவட்டத்தில் வேட்டமங்கலம் கிராமத்திலே அரசாங்கத்தின் பாலம் வழியாக பிணம் எடுத்துச் செல்லக்கூடாது என்று தடுக்கப்படுவதால், அங்கே கடந்த 30 நாட்களாக பதட்ட நிலை உருவாகியிருப்பதைக் குறித்து கொடுத்திருந்தேன். அதைத் தாங்கள் தள்ளும்போது, ஆதி திராவிட நலத்துறை அமைச்சர் அவர்களே அதைக் கவனிப்பார் என்று காரணம் சொல்லி தள்ளினீர்கள். ஆனால் அமைச்சர் அவர்களும் கவனிக்கவில்லை. வேறு யார்தான் இதற்கு பொறுப்பு என்று தெரியாததால் உங்கள் மூலமாகக் கேட்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நான் ஆதி திராவிட நலத்துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன், சவத்தை எடுத்துக் கொண்டு பாலம் வழியாகச் செல்ல முடியாத பிரச்சினை குறித்து ஏற்கெனவே உங்களுக்கு அனுப்பியிருக்கிறேன். சீக்கிரம் அதைக் கவனித்து அவருக்கு ஒரு முடிவு சொல்லுங்கள்.

**திரு. சோ. அழகர்சாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு கரும்பு உற்பத்தியாளர் சங்கத்தின் சார்பில் 25 ஆம் தேதி முதல் நம்முடைய 'எழிலகம்' அலுவலகத்தின் முன்னால் தொடர் உண்ணாவிரதம் இருக்கிறார்கள். போன மாதம் 12 ஆம் தேதியே அவர்கள் ஊர்வலமாக வந்து முதலமைச்சரிடமும் வருவாய்த்துறை அமைச்சரிடமும் பெட்டிஷன் கொடுத்திருக்கிறார்கள். முத்தரப்பு மகாநாட்டை ஒட்டி விலை நிர்ணயம் செய்ததில் ரூ. 20 குறைந்துவிட்டது என்று முறையிட்டிருக்கிறார்கள். நாளையோடு அசெம்பிளி முடியப் போகிறது. நாளைக்காவது அந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தை எடுத்துக் கொண்டு பேசினால், அமைச்சர் அவர்களுக்கு பதில் சொல்ல முடியும். அவர்கள் பெரிய பேரணியைக்கூட நடத்தினார்கள் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பதில் வந்தால்தான் ஒத்திவைப்புத் தீர்மானத்தை அவையில் எடுத்துக்கொள்ள முடியும். இன்றைக்கு வேறு ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தை நான் எடுத்துக்கொண்டிருக்கிறேன். உங்கள் கட்சியில் உள்ளவர்களும் சேர்ந்துதான் கொடுத்திருக்கிறார்கள். இதுவும் முக்கியமானப் பிரச்சனைதான். (குறுக்கீடு.) 4½ கோடி, 5 கோடி மக்கள் இருக்கும் இடத்தில் ஏதாவது பேரணி நடந்து கொண்டுதான் இருக்கும். நாளைக்கே எடுத்துக்கொள்ளப்படும் என்று உறுதி தர முடியாது. பதில் வந்தால்தான் எடுத்துக்கொள்ள முடியும்.

**டாக்டர் கே. பி. இராமலிங்கம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர்களுக்காக வைக்கப்பட்டிருக்கிற தொலைபேசி உடைந்துவிட்டது. ஒரு வார காலமாக வேலை செய்யவில்லை . . .





**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** யார் உடைத்தது? சரி, அதைப் பார்க்கலாம்.

**திரு. அ. ரகுமான்கான் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிக முக்கியமானப் பிரச்சனை. உரிமைப் பிரச்சனையைப் பற்றி . . . (குறுக்கீடு.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நீங்கள் ஒரு மாதிரி சொல்கிறீர்கள். அவர் வேறு மாதிரி சொல்கிறார். ஆகவே, அது குறித்து உங்கள் இரண்டு பேரிடமும் ஆதாரம் கேட்டு கடிதம் எழுதி அனுப்பியிருக்கிறேன். நாளைக்கு உங்களுக்கு அது வரும். நீங்கள் இரண்டு பேரும்தான் அதுபற்றி ஒரு முடிவுக்கு வரமுடியும்; இல்லையென்றால் ஒன்றும் செய்ய முடியாது.

**திரு. என். வரதராஜன் :** தலைவர் அவர்களே, நாளையோடு நம்முடைய சபை ஒத்திவைக்கப்பட இருக்கிறது. நீண்ட நாட்களாக இந்தச் சபையிலே பல்வேறு விவாதங்களை எழுப்பக்கூடிய முறையிலே பல்வேறு முக்கியமான விஷயங்களைப்பற்றி விவாதிக்கக்கூடிய முறையிலே அலுவல் ஆய்வுக் குழுவைக் கூட்டியோ அல்லது தாங்களாகவோ ஆலோசனை செய்து அதற்காக, ஒத்திவைப்புத் தீர்மானங்கள், கவன ஈர்ப்புகளை எடுத்துக் கொள்வதற்காக நாளைய தினம் 1 மணி நேரம் ஒதுக்கக்கூடிய முறையிலே முயற்சி எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நாளைக்கு பத்து சட்ட முன்வடிவுகள் முடிக்கப்பட்டாக வேண்டும். திடீரென்று நீங்கள் எழுப்புகிற இந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொள்ளக்கூடிய நிலையில் நான் இல்லை.

அடுத்து, திரு. ரகுமான்கான் நேற்றே அந்த உரிமைப் பிரச்சினையைப் பற்றி சபையிலே பேசியிருக்கிறார்கள். பேசி, வரவேண்டியது எல்லாம் வந்தாகிவிட்டது. அதற்கு மேல் தேவையில்லை.

**திரு. செ. இராமலிங்கம் :** தஞ்சை மாவட்டத்தில் இந்த ஆண்டு ஏற்பட்டுள்ள வெள்ள சேதம் பற்றி இந்த அவை நன்கு அறியும். வெள்ள நிவாரணப் பணிகளுக்காக தனி தலைமைப் பொறியாளர் நியமிக்கப்பட்டு 2 மாத காலம்தான் ஆகிறது. வருகிற 30 ஆம் தேதியோடு தலைமைப் பொறியாளர் அந்த டிவிஷனையே அபாலிஷ் பண்ண உத்திரவு பிறப்பித்திருக்கிறார். நான் அதைப்பற்றி ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன் . . .

(பேரவைத் தலைவர்) [1984 ஏப்ரல் 27

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வந்தால் பார்க்கலாம்.

திரு. என். சங்கரய்யா : தலைவர் அவர்களே, இராமநாதபுரம் கீழக்கரை போலீஸ் மரணம் பற்றியதை நாளைக்கு எடுத்துக்கொள்வது நல்லது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நல்லது என்பதை ஒத்துக்கொள்கிறேன். எல்லாக் கட்சிகளையும் மதித்தாக வேண்டும். கீழக்கரைக்கு தனி முக்கியத்துவம் கொடுக்க முடியாது. எல்லாக் கட்சிகளுக்கும் கொடுப்பதைப் போல்தான் உங்கள் கட்சிக்கும் கொடுக்க முடியும். (குறுக்கீடு.) நான் அதற்கு கியாரண்டி கொடுக்க முடியாது. இன்றைக்குக்கூட எல்லாக் கட்சிகளும் கொடுத்திருக்கிற ஒத்திவைப்புத் தீர்மானத்தை எடுத்துக் கொள்கிறேன். கீழக்கரை சம்பந்தமாக பதில் வந்தால் எடுத்துக் கொள்ளலாம்.

## 3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

### வடசென்னை கடலோர குடிசைப் பகுதிகளில் ஏற்படும் தீ விபத்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் ப. பொன்னுரங்கம், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், ரா. உமாநாத், ஜே. ஹேமச்சந்திரன், எம். செல்லமுத்து, தி. கா. நல்லப்பன், ஏ. டி. கருப்பையா, என். ஏ. பூங்காவனம், மு. அப்பாதுரை, ரா. கிருஷ்ணன் ஆகியோர். "சென்னை இராயபுரம் தொகுதி, தண்டையார்பேட்டை மீன்பிடித் துறைமுகப்பகுதி அமைந்துள்ள கடலோரத்தில் 5—4—1984 அன்றும், மீண்டும் 18—4—1984 அன்று காசிமேடு பகுதியிலும் தீ விபத்து ஏற்பட்டு அதனால் பல லட்சக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள வலைகள், கட்டுமரங்கள் மற்றும் மீன்பிடி தொழில் கருவிகள் எரிந்தும், 7 படகுகளும், 54 கொட்டகைகளும் 140 குடிசைகளும் எரிந்து நாசமடைந்துள்ளதால் பாதிக்கப்பட்டோர் மத்தியிலும் அப்பகுதிவாழ் மக்கள் மத்தியிலும் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும்" என்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு அறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து அவர்கள் மிகச் சுருக்கமாகக் கூறும்படி கேட்டுக்கொள்கிறேன்.



1984 ஏப்ரல் 27]

திரு. ப. பொன்னுரங்கம் : தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் இந்தத் திங்களில் இரண்டு முறைகள் தீ விபத்து ஏற்பட்டதுபற்றி தாங்கள் அறிவீர்கள். தீ பிடித்தது என்கிறபோது உடனடியாக வரவேண்டிய பயர் எஞ்சின்கள் போன்றவைகள் உரிய நேரத்திலே வந்திருக்குமானால் தீ பரவாமல் வெகுவாக தடுத்து இருக்கலாம். உரிய நேரத்தில் அது பற்றித் தகவல் தெரிவிக்கப்பட்டும் 1½ மணி நேரம், 2 மணி நேரம் கழித்து பயர் எஞ்சின்கள் வந்த காரணத்தினால் தீ பரவுவதற்கு ஏதுவாக இருந்தது என்பதை நான் மெத்த வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன். அது மட்டுமல்ல, நானே நேரில் சென்று பார்த்து அவர்களுக்கு வசதிகளைச் செய்து தரவேண்டுமென்று உரிய அதிகாரிகளிடம் தொடர்பு கொண்டு சொல்லியும்கூட அவர்களுக்கு எந்தவிதமான வசதியும் செய்யவில்லை என்ற தகவல் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அங்கே உதாரணமாக குடிநீர் கிடைப்பது சிரமமாக இருக்கிறது, விளக்கு வெளிச்சம் இல்லாத நிலை. இரண்டைப்பற்றியும் எடுத்துச் சொன்ன பிறகும் அரசாங்க இலாகாக்களிலிருந்து எதையுமே செய்யவில்லை என்ற செய்தியை நான் வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன். ஒரே ஒரு வேளை மட்டும் தான் சாப்பாடு போடப்பட்டதாக எனக்கு தகவல்,

(முற்பகல் 10-30)

அதேபோன்று குடிநீரும். ஆக இப்படிப்பட்ட ஒரு நிலைமை. கேட்பதற்கு ஆள் இல்லை என்ற காரணத்தால் இப்படிப்பட்ட நிலைமையை அரசுத் துறை கையாள்வது வேதனை தரத்தக்க ஒன்றாகும். மற்ற பகுதிகளில் உள்ள குடிசைகள் தீ பிடிப்பதற்கும் இந்தப் பகுதியில் குடிசைகள் தீ பிடிப்பதற்கும், அதிலே நிவாரணம் அளிப்பதற்கும் மாறுபாடு இருப்பதை நான் அறிவேன். அரசு இதுவரையில் எந்தவித நிவாரணமும் தரவில்லை என்பதை நான் சுட்டிக் காட்டுகின்ற அதே நேரத்தில் ஏன் தரவில்லை என்ற காரணத்தையும் நான் உணர்வேன். ஏன் என்றால் அரசு தரப்பிலிருந்து நாங்கள் பேசி முடித்த உடன் பதில் வரும். It is a non-residential place. என்று வரும். குடியிருக்கின்ற இடம் அல்ல, Storage Place என்று சொல்வார்கள். ஆனால் அந்த

ஸ்டோரேஜ் பிளேசில் என்ன என்ன அங்கே இருக்கிறது என்றால் கட்டு மரங்கள் இருக்கின்றன. அதற்குரிய வலைகள், படகுகள் ஏற்றி இறக்குகின்ற கருவிகள், மரங்கள் போன்றவைகள் அங்கே இருக்கின்றன. மீன், இறால் போன்றவைகள் கெடாமல் இருப்பதற்கு அந்த இடத்தில் பதப் படுத்துவதற்கு ஐஸ் வைக்கின்ற கொட்டகைகள் அங்கே இருக்கின்றன. அது மட்டும் அல்ல, தலைகாய்ந்த ஏழை, எளியவர்கள் பிழைப்புக்காக கருவாட்டுக் கொட்டகைகள் அங்கே இருக்கின்றன. படகுகளை பழுதுபார்க்கின்ற தச்சுப் பட்டறைகள், கருமார் பட்டறைகள், படகுகளுக்கு வேண்டிய உப கரணங்கள் இவைகள் எல்லாம் வைத்துள்ள கொட்டகைகள் இருக்கின்றன. இவைகள் எல்லாம் தீக்கு இரையாகி இருக்கின்றன. 10, 15 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள சொத்துக்கள் அங்கே தீக்கு இரையாகி இருக்கின்றன. இது வரையில் சாதாரணமாக குடிசைகள் எரிந்தால் தருகின்ற அந்த 200 ரூபாய் அல்லது 5 கிலோ அரிசி அல்லது வேட்டி, சேலை எதையும் அந்தப் பகுதியில் தரவில்லை. நான் ஏற்கனவே சுட்டிக்காட்டினேன். அது குடியிருக்கின்ற இடம் அல்ல, ஸ்டோரேஜ் பிளேஸ் என்று சொல்லுவார்கள். தமிழகத்தில் இருக்கின்ற பல்வேறு மாவட்டங்களில் வேலை இல்லாதவர்கள் அந்த அந்த மாவட்டங் களை விட்டு உதாரணமாக தென் ஆற்காடு, செங்கல்பட்டு, வட ஆற்காடு, சேலம் போன்ற மாவட்டங்களில் உள்ள ஏழைகள் விவசாயிகள் கூட அங்கு வந்து கூலி வேலை செய்து பிழைக்கிறார்கள். ஆக அப்படி பிழைக்கின்ற அவர்கள் அன்றாடம் காய்ச்சிகளாக இருக்கின்ற அவர்கள் அங்கே தங்கி இருப்பது அந்தக் குடிசைகளில்தான். அந்தக் கண்ணோட்டத்தில் பார்க்கின்ற போது அது குடியிருக்கின்ற இடமாக மாறுகிறது. கொஞ்சம் வசதி மிக்கவர்கள் குடிசைகளை கட்டிக்கொண்டு இருக்கிறார்கள். அவர்களும் கூலி செய்கின்ற ஏழைகள்தான். பிற மாநிலங்களில் இருந்து வந்து இருக்கிற அந்த பெரும் பாலான ஏழைகள் அங்கே குடியிருக்கிறார்கள். ஆக அந்த முறையில் அந்த கண்ணோட்டத்துடன் அவர்களுக்கு நஷ்ட ஈடு வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் வலைகள், கட்டுமரங்கள் போன்றவைகள் வெகுவாக பாதிக்கப்பட்டிருக்கின்றன. நம்முடைய அரசு தரப்பில் பதில் வரக்



கூடும், அது துறைமுக பகுதி, அதற்கு சொந்தமான இடம், ஆகவே அந்த இடத்தில் நாங்கள் எந்தவித நிவாரணமும் செய்ய முடியவில்லை என்று சொல்லக்கூடும். அங்கே கருமார், தச்சுப் பட்டறைகள் வைத்துக்கொண்டு இருப்பவர்களும் சாதாரணமான ஏழைகள்தான். நாம் பிற இடங்களில் தீப் பிடித்துக் கொண்டால் வீடுகள் கட்டிக்கொள்ள 2,000 ரூபாய் தருகிறோம். ஆனால் அதே போன்ற முறையை அங்கே இருக்கின்ற அந்த ஏழைகளுக்கு வீடு கட்டுகின்ற வாய்ப்பு அரசுக்கு இல்லாவிட்டாலும் கூட, காரணம் அது துறைமுகத்திற்கு சொந்தமான இடம், அதில் கட்ட இயலாது என்றாலும் கூட எரிந்து விட்ட கொட்டகைகளை மீண்டும் அமைத்துக் கொள்வதற்கு அரசு பிற பகுதிகளில் அளிக்கின்ற அந்த 2,000 ரூபாய் வழங்கும் முறையை இந்த விஷயத்தில் கையாளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் வலைகள், கட்டுமரங்கள் போன்றவைகள் வெகுவாக பாதிக்கப்பட்டிருக்கின்றன. மீன்வள இலாக்கா என்று ஒன்று இருக்கிறது. அது அந்த பாதிக்கப்பட்டவர்களுக்கு ஏதாவது செய்ததா என்றால் அல்லது அது குறித்து உரிய நடவடிக்கை எடுத்ததா என்றால் இல்லை என்று எனக்குத் தகவல். ஆக அரசு இதுபோன்று ஒத்திவைப்புத் தீர்மானம் வந்த பிறகாவது சம்பந்தப்பட்ட இலாக்காக்கள், வருவாய்த் துறையோ அல்லது மீன்வளத் துறையோ இதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏன் என்றால் பலயிடங்களில் தீப் பிடித்து இது நாள் வரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

அதே வட்டத்தில் என்னுடைய தொகுதியில் கடந்த அக்டோபர் மாதம் 1-ஆம் தேதி 8 வீடுகள் நாசம் ஆகியிருக்கின்றன. இதுவரையில் நிவாரணமே தரவில்லை. என்ன காரணம்? ஆக இந்த துறையில் இருக்கின்ற அதிகாரிகள் கண்மூடித்தனமாக தூங்கிக்கொண்டு, ஆமை வேகத்தில் இருக்கிறார்கள். கணக்கு எடுக்கிறார்களே தவிர பட்டுவாடா செய்வது இல்லை. ஆக இப்படிப்பதும் அதை பத்திரிகையில் போடுவதும் அதை பார்த்துக்கொண்டு இருப்பதும்தான் ஒரு அரசுனுடைய வேலையாக இருக்க முடியாது. ஆக சர்க்கார் இதிலே தீவிர கவனம், தனி கவனம் செலுத்தி உரிய

நடவடிக்கை எடுத்து அவர்களுக்கு தக்க நிவாரணம் அது எந்த முறையில் இருந்தாலும் சரி, வீடு கட்ட முடியாது, ஆர்டர் லெண்டு என்று இப்படி எல்லாம் சாக்கு போக்கு சொல்ல வேண்டாம். ஆனால் அவர்களே கட்டிக் கொள்வதற்காக குறைந்தபட்சம் இந்த 2 ஆயிரம் ரூபாயை பிற பகுதிகளில் வழங்குவது போல் அவர்களுக்கும் வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன். ஆக இது போன்ற விவாதங்களை எல்லாம் விளக்கமாக, விரிவாக விவாதிக்க வேண்டியிருப்பதால் பேரவையின் இன்றைய இதர அலுவல்களை ஒத்தி வைத்து இதை விவாதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம்:** பேரவைத் தலைவர் களே, அண்மையில், இராயபுரம், தண்டையார்பேட்டை, காசிமேடு போன்ற மீனவர்கள் வசிக்கின்ற பகுதிகளில் தொடர்ச்சியாகவும், விட்டுவிட்டும் தீப் பிடித்த காரணத்தால் இன்றைக்கு அவர்களுடைய மீன் வலைகளிலிருந்து ஐஸ் பெட்டிகள் வரையிலும், மேலும் மீன்களை உலர வைப்பதற்காக இருக்கின்ற இடத்திலேயும் மட்டுமல்லாமல், கருவாட்டை ஸ்டோர் பண்ணும் இடம் போன்றவைகளிலேயும் பாதிக்கப்பட்டிருக்கிறது.

அப்படிப் பாதிக்கப்பட்டபொழுது, நம்முடைய தீயணைப்புத் துறையைப் பொறுத்தவரையில் காலாகாலத்தில் போய் உதவி செய்திருந்தால், இந்தச் சேதங்களின் ஒரு பகுதியைத் தவிர்த்திருக்க முடியும். தீப்பிடித்தவுடனேயே தீயணைப்பு நிலையத்திற்கு தகவல் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் அவர்கள் உடனடியாகக் கிளம்பி வந்திருந்தால், அந்தத் துறை உடனடியாகச் செயல்பட்டிருந்தால் சேதத்தைக் குறைத்திருக்க முடியும். ஆகவே, தீய ணைப்புத் துறை இதில் சரியாகச் செயல்படவில்லை. அதன் காரணமாகத் தான் சேதம் அதிகரித்திருக்கிறது.

ஏற்கனவே, அந்தத் தொகுதி எம்.எல்.ஏ. அவர்கள் அங்கே எப்படிப் பாதிக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். சமீபத்தில் ஒரு கேள்விக்குப் பதில் சொல்லுகின்ற நேரத்தில் அமைச்சரவர்கள், மீனவர்களைப் பொறுத்த வரையில், பாதிக்கப்பட்டு கஷ்டப்படுகின்ற மக்களுக்கு உதவி செய்ய இந்த அரசு தயாராக இருக்கிறது என்பதற்கு முன்னுதாரணமாக, சில வீடுகள் கட்டப் பட்டதற்கான கடன்களை ரத்து செய்து கொடுக்கக்கூடிய வழிவகை களிலே உள்ள நிலைகளிலே அரசு எடுத்திருக்கிறது என்கின்ற கருத்தைச் சொன்னார்கள். வீடு உள்ளவர்களுக்கே நிவாரணம் கொடுக்கின்ற சர்க்கார், குடிசைகளை இழந்து இருக்கின்ற இந்த நிலையில் அதிக அனுதாபத்தோடு பார்க்கின்ற முறையில் நடவடிக்கை எடுக்க வேண்டும், என்பதுபற்றி விவாதித்து முடிவெடுக்க வேண்டியிருக்கிறது.





அவர்களுக்குப் புதிதாக வீடு கட்டிக்கொடுக்கின்ற அதே நேரத்தில், தங்களுடைய தொழிலுக்குத் தேவையான வலைகளிலிருந்து, நீண்ட நூல், கருவாடுகளை ஸ்டோர் செய்வதற்கான கட்டிடம் வரையில் கொடுப்பது பற்றி விவாதிக்க வேண்டி இருக்கிறது.

நம்முடைய சர்க்காரிடத்தில் ஒரு பழக்கம் இருக்கிறது. அது என்ன வென்றால், தீப்பிடித்து விட்டதா, இந்தா பிடி 200 ரூபாய்; இந்தா பிடி ஒரு வேட்டி; 4 கிலோ அரிசி என்று சொல்கின்ற நிலைமையில் மட்டும் பார்த்தால் சரியாக இருக்காது. அவர்கள் மிகவும் பாதிக்கப்பட்ட மக்கள். ஆகவே, அவர்களுக்கு விசேஷ நிவாரணம் அளிக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. ஆகவே, இவைகளைப்பற்றியெல்லாம் விவாதித்து முடிவு செய்ய வேண்டி யிருப்பதால் பேரவையின் இன்றைய இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று பேரவைத் தலைவரவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. தி. கா. நல்லப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கடந்த 5—4—1984 ஆம் தேதியன்றும், அதற்குப் பிறகும், சென்னை கடலோரப் பகுதிகளாக இருக்கின்ற இராயபுரம், தண்டையார்ப்பேட்டை போன்ற பகுதிகளிலே உள்ள மீனவர்களின் குடிசைகளிலே தீப்பிடித்து, அங்கே 40-க்கும் மேற்பட்ட குடிசைகள் எரிந்து போயிருக்கின்றன.

குறிப்பாகக் குடிசைகள் தீப்பிடித்த நேரம் எது என்று பார்க்கின்ற பொழுது, அதிகாலையாக இருந்த காரணத்தினாலேயோ என்னவோ, தீயணைப்புப் படையினரைப் பொறுத்தவரையில், மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டதைப்போல, அங்கே தகவல் கிடைத்து, அது வருவதற்குள்ளாகக் குடிசைகளாக இருந்தாலும் அல்லது மனைப் பகுதிகளாக இருந்தாலும் எரிந்த பின்பு, அது எப்படி எரிந்தது, என்ன காரணத்தால் எரிந்தது என்று விசாரிப்பதற்காக வருகிறார்களே தவிர தகுந்த நேரத்தில் நடவடிக்கை எடுக்கின்ற நோக்கத்தோடு வர முடியாத நிலை இருக்கிறது.

காரணம், வண்டி சரியாக இருக்காது; பழுது அடைந்திருக்கும்; இல்லையென்றால் அந்த வண்டியிலே முறையாகத் தண்ணீர் இருக்காது. அதைப் போலத்தான் இந்தச் சந்தர்ப்பத்திலேயும் நடந்திருக்கிறது.

அந்தப் பகுதியிலே ஏற்பட்டிருக்கின்ற தீ விபத்தின் காரணமாக 42 குடிசைகள், 20 மீன்பிடி வலைகள், 20 கட்டுமரங்கள், 2 விசைப்படகுகள், ஒரு கண்ணாடியிழைப் படகு என்று இப்படி அவர்களுக்குத் தொழிலுக்கும் தேவையாக இருக்கின்ற அனைத்துமே எரிந்து சாம்பலாகி இருக்கின்றன. ஆகவே, எரிந்துள்ள அந்தக் கருவிகளுக்குப் பதிலாக வேறு கருவிகளைக் கொடுக்க வேண்டும்.

குறிப்பாக வேறு இடத்திலே இருக்கின்றபொழுது, புறம்போக்கு என்று சொல்லப்படுகின்ற இடத்திலே இருக்கின்றபொழுது, அங்கே தீப்பிடித்தால் நிவாரணம் கிடைப்பதில்லை என்ற சூழ்நிலை இருக்கிறது. வீடற்றவர்கள், வாழ்க்கையிலே கடைகோடியிலே இருக்கிறார்களே, அவர்கள் இம்மாதிரியான இடங்களிலே குடியிருக்க வேண்டிய நிலைமை இருக்கிறது. ஆகவே, குடிசைகள் தீப்பிடித்து எரிந்தால் அதற்குப்பிறகு அவர்களுக்கு முறையாக வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட வேண்டும்.

தற்காலிகமாக நிவாரணம் அளிப்பதற்குமான ஏற்பாட்டைச் செய்வதன் மூலம் இம்மாதிரியான நிலைமைகளிலிருந்து அவர்களைக் காப்பாற்றுவது பற்றி எல்லாம் விவாதிக்க வேண்டி இருப்பதால் இன்றைய இதர அலுவல்கள் அனைத்தையும் ஒத்திவைத்து விட்டு இதுகுறித்து விவாதிக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

(முற்பகல் 10-40)

மாண்புமிகு திரு. க. கலைமணி: பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மீன்பிடித் துறைமுகத்தின் கடலோரப் பகுதியில் 5—4—1984 அதிகாலையில் சுமார் 4-00 மணியளவில் தீ விபத்து ஏற்பட்டது. இந்தத் தீ விபத்தில் உயிரிழப்பு ஏதுமில்லை. இத் தீ விபத்தால் அப்பகுதியில்



இருந்த குடியிருப்புகள் அல்லாத 49 குடிசைகள், அதில் வைக்கப்பட்டிருந்த வலைகள், அவற்றின் அருகே வைக்கப்பட்டிருந்த மீன்பிடி வலைகள், கட்டு மரம் மற்றும் கரையேற்றி பழுது பார்ப்பதற்காக வைக்கப்பட்டிருந்த 6 விசைப் படகுகளும் தீயினால் சேதம் அடைந்துள்ளன. இதில் கட்டு மரம் மற்றும் மீன்பிடி வலைகளின் சேதாரம் தோராயமாக ரூ. 1,17,500 ஆகும்.

தீ விபத்து நடந்த அன்று நானும் மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களும் குடிசை மாற்றுவாரியத் தலைவர் அவர்களும் மற்றும் சென்னை மாவட்ட ஆட்சியாளர் மற்றும் மீன்துறை அலுவலர்களும் விபத்து நடந்த இடத்திற்குச் சென்று பார்வையிட்டு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இழந்த மீன்பிடிச் சாதனங்களுக்காக நிவாரணம் வழங்க மீன்வளத்துறை தகுந்த நடவடிக்கை எடுத்து அது பரிசீலனையிலுள்ளது.

இதே போன்று மீன்பிடித் துறைமுகப் பகுதியின் அருகில் காசிமேடு குப்பத்தில் 17—4—1984 நள்ளிரவு 12-15 மணியளவில் ஏற்பட்ட தீ விபத்தில் உயிரிழப்பு ஏதுமில்லை. இத் தீ விபத்தில் ஒரு குடியிருப்பு குடிசை மட்டும் பாதிக்கப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு ரூ. 200 நிவாரணத் தொகை, ஒரு வேட்டி, ஒரு புடவை, மற்றும் 5 கிலோ அரிசி வருவாய்த் துறையினரால் வழங்கப்பட்டது. இதைத் தவிர குடியிருப்புக்கள் அல்லாத 200 சிறு குடிசைகள் பாதிக்கப்பட்டுள்ளன. இவற்றில் 164 குடிசைகளில் தேனீர் கடை, சிற்றுண்டி கடை, வெற்றிலை பாக்குக் கடை ஐஸ் விற்பனைக் கடை மற்றும் இறால் பதப்படுத்தப்படும் கூடம் முதலியவை நடத்தப்பட்டு வந்ததாகவும், அத்தொழில் சம்பந்தப்பட்ட சாமான்கள் எரிந்து போனதாகவும் அறியப்பட்டுள்ளது. மீதமுள்ள 36 குடிசைகளில் மட்டும் மீன்பிடிச் சாதனங்கள் வைக்கப்பட்டிருந்ததாகவும் அவை எரிந்து விட்டதாகவும் அறியப்பட்டது. இவற்றின் மொத்த சேதார மதிப்பு தோராயமாக ரூ. 5,10,300 ஆகும். பொதுவாகத் தீ விபத்தில் தங்கள் மீன்பிடி சாதனங்களான கட்டுமரம், வள்ளம் மற்றும் மீன்பிடி வலைகளை இழந்த மீனவர்களுக்குச் சேதத்தை மீன்வளத்துறையினால் மதிப்பிடப்பட்டு தேவை

(திரு. க. கலைமணி) [1984 ஏப்ரல் 27

...ான நிதி உதவிகள் அளிக்கப்படுகின்றன. இவ்வாறு நிவாரணமாக வழங்கப்படும் நிதி உதவியில் 75 விழுக்காடு கடனாகவும் 25 விழுக்காடு மானியமாகவும் வழங்கப்படுகிறது. இந்நிவாரணங்கள் மீனவ கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினர்களாக உள்ளவர்களுக்கு வழங்கப்படுகின்றன. மேலும் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாக இல்லாதவர்களுக்கும் மீனவ கூட்டுறவுச் சங்கங்களில் கடனை வசூலிப்பதற்கான உத்தரவாதம் பெற்ற பின்னர் கடன் உதவி வழங்கப்படுகிறது. இத் தீ விபத்திற்காகவும் நிவாரணம் வழங்க தகுந்த நடவடிக்கைகள் மீனளத் துறையால் மேற் கொள்ளப்பட்டு ஆய்வில் உள்ளது. நிவாரணம் விரைவில் அளிக்கப்படும்.

குடியிருப்புக்கள் அல்லாத குடிசைகள் மட்டும் சேதம் அடைந்துள்ள தாலும் நிவாரண வேலைகள் நேரிடை ஆய்வுக்கு உட்பட்டு துரிதமாக நடை பெறுவதினாலும் வசிக்கும் வீடுகள் பாதிக்கப்படாததினாலும் வீடுகள் இன்றித் தவிப்பதாக மக்கள் மத்தியில் பதட்ட நிலை இல்லை.

மேலே கூறப்பட்ட காரணங்களால் இந்தப் பிரச்சினை குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்கத் தேவை இல்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து இத் தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவை இல்லையென்பதால். இதற்கு இசைவு மறுக்கப் பெறுகிறது.

## 4. கவன ஈர்ப்பு.

### கலசப்பாக்கம் ஊராட்சி குடிநீர்க் குழாய் இணைப்புகளுக்கு அளவுமானி பொறுத்துதல்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : திருவாளர்கள் பெ. சு. திருவேங்கடம், த. வேணுகோபால் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.



1984 ஏப்ரல் 27]

**திரு. பெ. சு. திருவேங்கடம்** : தலைவர் அவர்களே, "வட ஆற்காடு மாவட்டம், கலசப்பாக்கம் ஊராட்சியில் குடிதண்ணீர் குழாய் இணைப்பு கோரு பவர்களிடம், அங்குள்ள தனி அதிகாரி மீட்டர் வைக்கப் பெற வேண்டும் என வற்புறுத்துவதால், அங்குள்ள மக்கள் படும் இன்னல் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு** : பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :—

### அறிக்கை.

வட ஆற்காடு மாவட்டம், கலசப்பாக்கம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள கலசப்பாக்கம் கிராமத்தில் 3,500 மக்கள் தொகை கொண்ட 600 வீடுகள் உள்ளன. செய்யாற்றின் கரையில் ஒரு குடிநீர் கிணறு வெட்டப்பட்டு மேல் நிலை நீர்த் தேக்கத் தொட்டி மூலமாக இக்கிராம மக்களுக்கு குடிநீர் வழங்கப் பட்டு வருகிறது.

2. இக்கிராமத்தில் 257 வீடுகளுக்கு குடிநீர் இணைப்புகள் கொடுக்கப்பட் டுள்ளன. இவற்றில் 19 நபர்கள் தங்கள் வீடுகளின் மேல் மாடிகளில் பெரிய தொட்டிகளைக் கட்டிக்கொண்டு 1 குதிரைத் திறன் மின்விசை இயந்திரங் களைப் பொறுத்தியும், வேறு 5 நபர்கள் கைபம்புகளைப் பொறுத்தியும் குடிநீர் விநியோகப் பிரதான குழாயிலிருந்து தேவைக்கு மேல் தண்ணீரை உறிஞ்சி தாங்கள் உபயோகித்தது போக எஞ்சியுள்ள குடிநீரைப் பயன்படுத்தி தங்கள் வீடுகளின் பின்புறத்தில் தோட்டங்களை அமைத்துப் பராமரித்து வருகின்றனர். இவ்வாறு குடிநீர் அளவு கடந்து எடுக்கப்பட்டு தவறாகப் பயன்படுத்தப்பட்டு வருவதால், பொதுமக்கள் உபயோகத்திற்காகவுள்ள 25 பொதுக்குழாய்களில் 23 குழாய்களில் தண்ணீர் முறையாக கிடைக்க வாய்ப் பில்லாமல் உள்ளது. ஆகவே, இக்கிராம ஏழை எளிய மக்கள் தங்கள் தேவைக்கான குடிநீரை வசதிபடைத்தவர்கள் தயவின் மூலம் பெறவேண்டிய

நிலை ஏற்பட்டுள்ளது. குடிநீர் முறையாக எல்லோருக்கும் கிடைக்கும் வகையில் அதன் விநியோகத்தை முறைப்படுத்த ஊராட்சிகளின் சட்டப்படி, 1983-ம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் குடிநீர் இணைப்புகளுக்கு அளவுமானி பொருத்துவது குறித்து மாவட்ட அரசிதழில் அறிவிப்பு கொடுக்கப்பட்டு, அதன்படி 20 இணைப்புகளுக்கு அளவுமானி பொறுத்தப்பட்டுள்ளது. குடிநீர் இணைப்புகளுக்கு அளவுமானி பொருத்துவதை எதிர்த்து கலசப்பாக்கம் கிராமத்தைச் சேர்ந்த சின்னப்பா நயினார் குமரான் சுந்தரமூர்த்தி என்பவர் அக்கிராம மக்களின் சார்பாக போளூர் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் (வ.எண். 36/84) வழக்கு தொடர்ந்துள்ளார். வழக்கு நிலுவையில் இருந்து வருகிறது.

3. மின்சாரம் இல்லாதபோது டீசல் பயன்படுத்தப்பட்டு ஆயில் எஞ்சின் மூலமாகத் தொடர்ந்து குடிநீர் வழங்க வேண்டிய நிலை இருப்பதாலும் இவற்றை அடிக்கடி பழுது பார்க்கவும், இதில் இயக்குபவருக்கு ஊதியம் அளிக்கவும், டீசல் வாங்கவும் ஏற்படும் அதிகச் செலவினை ஈடு செய்யவும், குழாய் வரியினை உயர்த்துவது அவசியமாகும். எனவே கலசப்பாக்கம் ஊராட்சியில் ஏற்கனவே பொதுமக்கள் செலுத்தி வந்த குழாய்வரி மாதம் தலா ரூ. 2 என்பதை மாற்றி குறைந்தது ரூ. 10 என 1—10—1983 முதல் உயர்த்தப்பட்டது. தவிர அளவுமானி பொருத்தி ஒரு நாளைக்கு இலவசமாக வழங்கப்படும் 270 லிட்டர் குடிநீர் போக அதிக அளவு பயன்படுத்தும் 1,000 லிட்டருக்கு 50 பைசா வீதம் செலுத்த வேண்டும் எனவும் ஆணையிடப்பட்டது.

4. கலசப்பாக்கம் ஊராட்சியிலுள்ள மக்கள் எதிர்ப்பு தெரிவித்ததால், உள்ளாட்சித்துறை அமைச்சரின் ஆணையின்பேரில் கலசப்பாக்கம் ஊராட்சியில் உயர்த்தப்பட்டுள்ள வரியை நிறுத்த வட ஆற்காடு மாவட்ட ஆட்சித்தலைவருக்கும், ஊர் வளர்ச்சி இயக்குநருக்கும், தக்க அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது.





**திரு. பெ. சு. திருவேங்கடம்:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையிலே கூறியிருப்பதை நான் படித்துப் பார்த்தேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் ஏற்கனவே அந்தப் பிரச்சினை நன்றாகத் தெரியும். கலசப்பாக்கம் என்பது 3,500 . மக்கள் தொகை கொண்ட ஒரு சிறிய கிராமப் பஞ்சாயத்து, 600 வீடுகள் இருக்கின்றன. 257 வீடுகளுக்குத் தான் குடி நீர் இணைப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. அதிலே 19 நபர்கள் தான் மிகத் தவறுதலாக மோட்டார் வைத்திருப்பதாக இந்த அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் அந்த 19 நபர்கள் மீது நடவடிக்கை எடுக்க நாங்கள் யாரும் குறுக்கே நிற்கவில்லை. அவர்களுக்கு வேண்டுமென்றால் மீட்டர் வைக்கலாம். ஆனால் அறிக்கையிலே பார்க்கும்போது 267 பேர்களிலே 19 பேர்கள்தான் தவறு செய்திருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கும்போது ஒரு கிராமப் பஞ்சாயத்திலே மீட்டர் வைப்பது முறை அல்ல என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களே ஒத்துக் கொண்டு சொல்லியதற்குப் பிறகும் அந்தத் தனி அதிகாரி, இந்த அறிக்கையிலே கூட குறிப்பிட்டுள்ள மாதிரி, அமைச்சர் உத்தரவு போட்டதற்குப் பிறகு, 20 மீட்டர்களைப் பொருத்தியிருக்கிறார்கள். ஆகவே, கிராமப் பஞ்சாயத்திலே மீட்டர் வைப்பதாலே பொதுமக்கள் பாதிக்கப்படுவார்கள், ஏழை, எளிய மக்கள் பெரிதும் பாதிக்கப்படுவார்கள். நகரங்களிலே வியாபார சம்பந்தப்பட்டவர்களுக்குத் தான் மீட்டர் கொடுப்பது வாடிக்கை. ஆகவே, உங்கள் உத்தரவை மீறிய அதிகாரிகள் மீது தக்க நடவடிக்கை எடுக்கவும், கிராமப் பஞ்சாயத்தில் மீட்டர் வைக்கின்ற முறையை அறவே நீக்கவும் அமைச்சர் நடவடிக்கை எடுப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கலசப்பாக்கம் கிராமத்தில் ஏறத்தாழ 3,500 மக்கள் தொகை கொண்ட அந்தப் பகுதியிலே 600 வீடுகள் இருக்கின்றன. அதிலே 257 வீடுகளுக்குக் குடிநீர் இணைப்புகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதிலே 19 வீட்டுக்காரர்கள் சொந்தமாகவே, ஒரு எச். பி. திறன் கொண்ட மின் இறைப்

பானையெல்லாம் உபயோகப்படுத்தி அதன் மூலமாகப் பக்கத்திலே இருக்கின்றவர்களுக்குத் தண்ணீர் கிடைக்காத சூழ்நிலையை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். இந்த நிலை போக்கப்பட வேண்டுமென்பது மட்டுமல்ல, மாண்புமிகு உறுப்பினர் திருவேங்கடம் அவர்களுக்கு மிகவும் வேண்டியவர்கள் தான் அந்த 19 பேர்கள். (குறுக்கீடு) குற்றச்சாட்டு அல்ல. வேண்டியவர்கள் என்று சொன்னால் குற்றச்சாட்டாக இருக்க முடியாது, வேண்டாதவர்கள் என்று சொன்னால்தான் குற்றச்சாட்டாக இருக்கும். அவர்கள் என்ன செய்கிறார்கள் என்றால் வாழைத் தோட்டங்கள் வைக்கின்றார்கள், வகை வகையான தோட்டங்களை வைக்கின்றார்கள். வாழைத் தோட்டங்கள் போன்ற தோட்டங்களுக்கெல்லாம் குடி நீரைப் பாய்ச்சுவது என்பது சரியாக இருக்க முடியாது. ஆகவே, அவர்களுக்கு வேண்டியவர்களைத் தயவு செய்து நேரடியாகப் பேசியும்கூட இது போன்ற காரியங்களைக் கைவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்ளலாம். ஆனால் இந்த அரசைப் பொறுத்த வரையில் இதுபோன்ற நிலைகளுக்குக் கண்டிப்பாக நாங்கள் தண்ணீர் கொடுக்க மாட்டோம்.

மின் இணைப்பைப் பொறுத்த அளவிலே இருக்கக்கூடிய குழாய் இணைப்புகளைப் பொறுத்தவரையில் நாம் கொடுப்பதெல்லாம், வீட்டு உபயோகத்திற்காக, விளக்குகள் எரிப்பதற்காக, அதேநேரத்தில் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்கத்தான் அவைகளையெல்லாம் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். இன்னமும் கூட பல்வேறு நபர்கள் மனுக்களைக் கொடுத்திருக்கிறார்கள். அவர்களுக்கும் கூட இணைப்புகள் கொடுக்கவேண்டிய சூழ்நிலை இந்த ஒன்றியத்தில் இருக்கிற அதிகாரிகளுக்கு இருக்கிறது. அவைகளையெல்லாம் கவனத்திலே கொண்டுதான் இப்பொழுது நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம். அளவுமானி என்று சொல்லக்கூடிய மீட்டர் 20 வீடுகளிலே வைக்கப்பட்டிருக்கின்றன. ஆனாலும் அவைகளையெல்லாம் நிறுத்த வேண்டுமென்று நான் கேட்டிருக்கிறேன். இவைகளை அரசு பரிசீலித்து அளவுமானிகளை வைக்க வேண்டுமா, இல்லையா என்பதை முறைப்படுத்தி அதற்குப் பின்னால் நடவடிக்கை எடுக்க இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.





**திரு. பெ. சு. திருவேங்கடம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 19 பேர்கள் எனக்கு வேண்டியவர்கள் என்றார்கள் என் தொகுதியிலே உள்ள அனைத்துக் கட்சியினருமே எனக்கு வேண்டியவர்கள். அதற்காக நன்றி. அந்த ஊரிலே உள்ள அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சி, காங்கிரஸ், ஜனதா ஆகிய அனைத்துக் கட்சியினரும் அதற்காகப் போராடினார்கள். அவர்கள் எல்லோருமே எனக்கு வேண்டியவர்கள். அதிலே மாறுபாடில்லை. நான் சொல்ல விரும்புவது ரூ. 20 என்பதை ரூ. 10 ஆக ஒரேயடியாக உயர்த்தியிருக்கிறார்கள். அதைத்தான் நான் மாண்புமிகு அமைச்சருக்கு முதலிலே சொல்ல விரும்புகிறேன். காரணம் வேலூரிலே ரூ. 5, திருவண்ணாமலை நகராட்சியிலே ரூ. 10 ஆக உயர்த்தியிருக்கும்போது, ஒரு கிராமப் பஞ்சாயத்திலே ரூ. 10 என்று ஆக்கியிருப்பதை, எல்லாக் கட்சியினருமே எதிர்க்கின்ற காரணத்தால் அது நியாயத்திற்குப் புறம்பானது என்பதை நாம் எல்லோரும் உணர்ந்திருக்கிற காரணத்தால், தேர்தல் வருகின்ற வரையில் மக்களுடைய பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படுகிற வரையில் இப்படி மீட்டர் பொருத்துகின்ற திட்டத்தையோ அல்லது வரியை உயர்த்துகின்ற திட்டத்தையோ அதிகாரிகள் செய்யாமல், இருக்கிற வருவாயை வைத்துக் கொண்டு—அவர்கள் ஒன்றும் பெரிய ஆக்கப் பணிகள் செய்வதில்லை இருக்க தடையை அரசாங்கம் விதிக்குமா? அப்படிச் செய்வதைத் தடுக்குமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-50)

**மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ரூ. 2 லிருந்து ரூ. 10 என்று உயர்த்தப்பட்டிருக்கிறது. அதற்காகத்தான் மாண்புமிகு உறுப்பினர் போன்றவர்கள் மற்றுமுள்ள கழகத் தோழர்கள் எல்லாம் சொன்னதற்குப் பின்னாலே, உடனடியாக நடவடிக்கைகள் எடுத்து, அவைகளெல்லாம் நிறுத்தப்பட்டிருக்கின்றன. ரூ. 10 என்பது கொஞ்சம் அதிகம்தான். ஆகவே அதைக் குறைக்க முடியுமா என்பதைப் பார்க்க வேண்டும். அதேநேரத்தில் சேர்ந்தெடுக்கப்பட்ட மன்றம் வந்ததற்குப் பிறகு இப்படிப்பட்ட தொகைகளை ஏற்றுவது என்பது சரியாக இருக்கும் என்ற எண்ணத்தைக் கூட இந்த அரசு கொண்டிருக்கிறது. அவைகளை எல்லாம் கவனத்திலே கொண்டு அரசு கண்டிப்பாக பரிசீலனை செய்யும்.

## 5. அறிக்கைகள் அளித்தல்.

### (அ) பொது நிறுவனங்கள் குழு.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, பொது நிறுவனங்கள் குழுவின் கீழ்க்கண்ட அறிக்கைகளை அவைக்கு அளிக்கிறேன் :

(அ) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் 1972-73 முதல் 1977-78 ஆம் ஆண்டு வரையிலான ஆண்டுக் கணக்குகள் குறித்த தணிக்கை அறிக்கைகள் மீதான மேற்படி குழுவின் நாற்பத்தி ஒன்றாவது அறிக்கை.

(ஆ) இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் 1979—80 ஆம் ஆண்டிற்கான (வணிகத் துறைகள் பற்றிய) அறிக்கையின் மீதான மேற்படி குழுவின் நாற்பத்தி இரண்டாவது அறிக்கை.

(இ) தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்தின் செயல்முறை குறித்த பதினேழாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய மேற்படி குழுவின் நாற்பத்தி மூன்றாவது அறிக்கை.

### (ஆ) மதிப்பீட்டுக் குழு.

திரு. எஸ். ஜகத்ரட்சகன் : துணைத்தலைவர் அவர்களே, மதிப்பீட்டுக் குழுவின் கீழ்க்கண்ட அறிக்கைகளை அவைக்கு அளிக்கிறேன் :

(அ) வேளாண்மைத் துறை குறித்த மதிப்பீட்டுக் குழுவின் இருபத்தி இரண்டாவது (ஏழாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கை.

(ஆ) கைத்தறி மற்றும் துணி நூல் துறை குறித்த மதிப்பீட்டுக் குழுவின் இருப்பத்தி மூன்றாவது (ஏழாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கை.

(இ) மருத்துவத் துறை குறித்த மதிப்பீட்டுக் குழுவின் இருப்பத்தி நான்காவது (ஏழாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கை.

மருத்துவத் துறை குறித்த அறிக்கை பொறுத்தவரையில் போதிய அவகாசம் இல்லாமையால் அச்சிட்டப் பிரதிகளுக்குப் பதிலாக படியெடுத்த பிரதிகள் அளிக்கப்பட்டுள்ளன. இந்த அறிக்கையின் இரண்டு பிரதிகள் மாண்புமிகு உறுப்பினர்களுக்காக சட்டமன்ற நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளன. அச்சிட்ட பிரதிகள் கிடைத்த பிறகு அவைகள் பேரவை உறுப்பினர்களுக்கு தனியாக அனுப்பி வைக்கப்படும்.





## 6. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

### (அ) நிதி ஒதுக்க (எண் 2) சட்ட முன்வடிவு 1984.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 2) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 35/1984) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவு 2, அட்டவணை ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 2) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 35/1984) நிறைவேற்றப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப் பெற்றது.

## 7. அரசினர் தீர்மானம்.

### விதி 30 (3)-ன் கீழ் அலுவல் வரிசை மாற்றம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : துணைத் தலைவர் அவர்களே, அடுத்து இங்கே விவாதிக்கப்பட இருப்பது மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற சட்ட முன்வடிவாகும். இன்றைக்கு 11-வது இனத்தில் இருக்கிற சட்டமுன்வடிவும் மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்களால் விவாதிக்கப்பட வேண்டியதாக இருக்கிறது. மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் இன்றும், நாளையும் இங்கே இருக்க வேண்டிய அவசியம் இருப்பதன் காரணமாக அவர்கள்

மேலவைக்குச் செல்வதற்கில்லை. ஆகவே மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்களின் சட்டமுன்வடிவு இங்கே நிறைவேற்றப்பட்டு விட்டால், அவர்கள் மேலவைக்குச் சென்று நாளை காலையில் இந்த இரண்டு மசோதாக்களையும் அங்கே விவாதிப்பதற்கு வசதியாக இருக்கும். அதேபோல மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் இங்கே அவர்களுடைய சட்டமுன்வடிவுகளை விவாதிப்பதற்கு வசதியாக இருக்கும். ஆகவே 11-வது இனமாக இருப்பதை மூன்றாவது இனமாகக் கொண்டு வருவதற்குத் தான் இந்த மாற்றம்.

ஆகவே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"இன்றைய நிகழ்ச்சி நிரலில் உள்ள இனம் 11 என்ற தலைப்பில் உள்ள 'தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு கடன் நிவாரண (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 27/1984)' இனம் 3 என்ற தலைப்பிற்கு மாற்றி கொண்டுவரப்பட்டு, இனம் 2 'தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு இந்திய தண்டனைச் சட்டக்கோவை, இந்திய குற்றவியல் நடைமுறைச் சட்டக்கோவை (தமிழ் நாடு திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 18/1984)' என்பதற்குப் பின் எடுத்துக் கொள்ளப்பெறவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

6. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

(ஆ) இந்திய தண்டனைச் சட்டக் கோவை, இந்திய குற்றவியல் நடைமுறைச் சட்டக்கோவை (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு, 1984.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு இந்திய தண்டனைச் சட்டக் கோவை, இந்திய குற்றவியல் நடைமுறைச் சட்டக்கோவை (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு * (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 18/1984) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்."

* 1984-ம் ஆண்டு மார்ச் 6-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.





திரு. அ. ரகுமான்கான் : மன்றத்தின் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்குக் கொண்டு வரப்பட்டு இருக்கக்கூடிய இந்த மசோதாவை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக நாங்கள் மனப்பூர்வமாக ஆதரிக்கிறோம், வரவேற்கிறோம். வாழ்த்துச்சொல்கிறோம். காரணம், ஏற்கனவே இந்தியன் பீனல் கோடில் 292(ஏ) என்ற பிரிவு இருக்கிறது. அதைப் போலவே, கிரிமினல் ப்ரொசீஜர் கோடிலும் ஏற்கனவே 455 என்ற செக்ஷன் இருக்கிறது. ஆனால் இவைகள் எல்லாம் ஏற்கனவே இருந்தாலும் கூட இந்த அரசாங்கம் அந்தப் பிரிவுகளுக்கு சில திருத்தங்களை எல்லாம் கொண்டு வந்தது. அந்தத் திருத்தங்களை எல்லாம் நாங்கள் கடுமையாக விமர்சித்தோம். கருப்புச் சட்டம் என்று சொன்னோம். அரக்கத்தனமான சட்டம் என்று சொன்னோம். இன்னும் சொல்லப்போனால் அரசியல் உள் நோக்கத்தோடு ஒரு சர்க்காரின் தவறுகளை, அதிகாரிகளின் தவறுகளை சுட்டிக் காட்டும் பத்திரிகைகளின் சுதந்திரத்தைப் பறிக்கும் பயங்கரமான சட்டம் என்று எல்லாம் வருணித்தோம். அன்றைக்கே இது சார்பாக போராட்டங்கள் நடத்தப்பெறவேண்டும் என்ற கருத்துக்களை எடுத்துச் சொன்னோம். பத்திரிகைகளும் ஒருமித்த குரல் கொடுத்தார்கள். ஆனால் அந்தச் சட்டம் நீண்டகால இடைவெளிக்குப் பிறகு, அந்தத் திருத்தத்தை நாங்கள் திரும்பப் பெறுகிறோம் என்ற வகையில் இந்தச் சட்டத்தை இங்கே கொண்டு வருவதை நாங்கள் வரவேற்கிறோம்.

அதே நேரத்தில் ஒன்றை நான் இங்கே நினைவுபடுத்த விரும்புகிறேன். இந்தச் சட்டத்திலேயே, அதாவது ஏற்கனவே உள்ள இன்டியன் பீனல் கோடிலேயே 292(ஏ) பிரிவு மிகத் தெளிவாக இருக்கிறது. ஆனாலும் அதற்கு ஒரு திருத்தத்தை நீங்கள் கொண்டு வந்தீர்கள். அது தான் மிக முக்கியமான பிரச்சினை. அதைக் கொண்டுவந்ததற்குக் காரணம் என்ன சொன்னீர்கள் என்றால், பத்திரிகைகள், படங்கள், சுற்றறிக்கைகள் இவைகள் எல்லாம் தரக்குறைவாக, ஆபாசமாக எழுதுகின்றன என்பது ஒரு குற்றச்சாட்டு. இரண்டாவது குற்றச்சாட்டு, தங்கள் பணிகளைச் செய்யும் அதிகாரிகளின் 'மொரேல் அஃபெக்ட்' ஆகும் அளவிற்கு அவர்களைப் பற்றி தவறுதலாக பத்திரிகைகளில் எழுதப்படுகின்றன என்பது அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்தது. ஆகையால்தான் இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டது என்று அந்த ஆப்ஜெக்ட்ஸ் அன்ட் ரீசன்சில் சொல்லியிருக்கிறார்கள்.

(திரு. அ. ரகுமான்கான்) [1984 ஏப்ரல் 27

அந்த அடிப்படையில் பார்க்கிறார்கள் என்று சொன்னால், ஏற்கனவே இருக்கும் சட்டத்தின் அடிப்படையில் ஒரு பத்திரிகை ஆபாசமாக எழுதுமானால், அல்லது தரக்குறைவாக எழுதுமானால், அல்லது இன்னும் சொல்லப்போனால் சுற்றறிக்கைகள், படங்களைப் பொறுத்தவரையில் தவறு இருக்குமானால், அதிகாரிகளைப் பற்றித் தரக்குறைவாக எழுதப்பட்டு இருக்குமானால், அந்தப் பத்திரிகைகள் மீது நடவடிக்கை எடுப்பதற்கு ஏற்கனவே பீனல் கோடில் இடம் இருக்கிறது. ஆனால் கொண்டு வரப்பட்ட. அந்தச் சட்டத்திலே என்ன சொல்லி இருந்தார்கள் என்றால், ஏற்கனவே உள்ள சட்டத்தின் அடிப்படையில் வழக்குத் தொடரப்பட்டு தண்டிக்கப்படுவார்களானால் அவர்களுக்கு இரண்டாண்டு தண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டும் சேர்த்து தரலாம் என்று இருக்கிறது. ஆனால் அந்தச்

(முற்பகல் 11-00)

சட்டத்தை நீங்கள் மாற்றினீர்கள். எப்படி என்றால் இரண்டாவது தடவையாக தவறு செய்தால் 5 வருஷம் ஜெயில், அதோடு அபராதம் வேறு உண்டு, ஜாமீனில் வரமுடியாது என்று ஒரு சட்டத் திருத்தத்தைக் கொண்டுவந்தீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இது ஏற்கெனவே உள்ள ஒரு சட்ட முன்வடிவை வாபஸ் பெறுவதற்காகக் கொண்டுவரப்பட்டிருக்கிற சிறிய சட்டமுன்வடிவு. இதன் மீது இவ்வளவு விரிவாகப் பேச வேண்டியதில்லை.

**திரு. என். சங்கரய்யா:** ஏன் வாபஸ் வாங்குகிறார்கள் என்பதற்கான காரணத்தைத்தான் சொல்கிறார்.

**திரு. அ. ரகுமான்கான்:** இன்றைக்கு, பத்திரிகை சுதந்திரத்தைப் பறிப்பதற்காக கொண்டுவரப்பட்ட திருத்தச் சட்டத்தை இந்தச் சட்டத்தின் மூலம் வாபஸ் பெறுகிறீர்கள். அதேநேரத்தில் இன்னொன்றையும் தெரிவிக்க விரும்புகிறேன்.

பத்திரிகை சுதந்திரம் பறிக்கப்படக்கூடாது. இப்போது கூட ஆபாசம் இருக்கிறது. ஏற்கெனவே இருக்கக்கூடிய 1960 ஆம் வருஷச் சட்டம் இருக்கிறது. அபஜக்ஷனபிள் பிரஸ ஆக்ட் என்ற சட்டம் இருக்கிறது. பழிவாங்குகிற நடவடிக்கை அதன் மூலமும் நடைபெறும் சாத்தியக்கூறுகள் இருக்கின்றன என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதையும் வாபஸ் பெற வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.



1984 ஏப்ரல் 27] (திரு. அ. ரகுமான்கான்)

பத்திரிகைகள் சுதந்திரமாக விமரிசனம் செய்ய அனுமதிக்கப்பட வேண்டும். இன்றைக்குக்கூட பல வழக்குகள் இருக்கின்றன. ஏற்கெனவே கொண்டுவரப்பட்ட சட்டத்தின் அடிப்படையில் 'எதிரொலி' ஆசிரியர் கில்ஜி மீது வழக்கு போடப்பட்டிருக்கிறது. வீராசாமி அவர்களையும் கில்ஜி அவர்களையும் சிறைக்கு அனுப்பினார்கள். அவர்கள் மீது போடப்பட்ட வழக்கு என்னவாயிற்று என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

ஒரு திருத்தச் சட்டம் கொண்டு வருகிறபோது, அந்த வழக்கும் வாபஸ் பெறப்பட்டிருக்க வேண்டும். பத்திரிகைகள் சுதந்திரமாகச் செயல்பட்டால் தான் சில உண்மைகள் வெளிவர முடியும். உண்மையை வெளியிடும் பத்திரிகைமீது நடவடிக்கை எடுக்கக்கூடாது; விரோதம் பாராட்டக்கூடாது. பத்திரிகைகள்தான் இந்த சட்டசபையில் அங்கம் வகிக்காத எதிர்க்கட்சி. சுதந்திரமாக அவை கருத்துக்களை வெளியிட அனுமதித்தால்தான் அதிகாரிகள் தவறு செய்தாலும் அதைச் சுட்டிக்காட்டி எழுதலாம். அரசாங்கம் தவறு செய்தாலும் சுட்டிக்காட்டலாம். அமைச்சர்கள் லஞ்சம் வாங்கினார்கள் என்றாலும் எழுதலாம், எம்.எல்.ஏ.-க்கள் லஞ்சம் வாங்கினார்கள் என்றாலும் எழுதலாம். முறைகேடுகள் எங்கே ஏற்பட்டாலும் சுட்டிக்காட்டலாம். அந்துலே விவகாரத்தைப்பற்றி இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையில் எழுதிய பிறகுதான் வெளியே தெரிய வந்தது. பகல்பூர் ஜெயிலில் கைதிகளின் கண்கள் குருடாக்கப்பட்டது பற்றி இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகை எழுதிய பிறகுதான் குற்றவாளிகள்மீது நடவடிக்கை எடுத்து, தண்டனை விதிக்கப்பட்டது. இன்றைக்கு வெள்ள நிவாரணம் பற்றி இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையில் எழுதினார்கள். அதுபற்றி நடவடிக்கை எடுத்தீர்களா இல்லையா என்று எனக்குத் தெரியாது. அதைப் போன்று பத்திரிகைகள் சுதந்திரமாகச் செயல்பட்டு, உண்மையை வெளிப்படுத்தினால்தான் குற்றவாளிகளைக் கண்டுபிடித்து, நடவடிக்கை எடுக்க முடியும். ஆகவே, ஏற்கெனவே நீங்கள் கொண்டுவந்த சட்டத் திருத்தத்தை இந்தச் சட்டத்தின் மூலம் வாபஸ் பெறுவதாக இருந்தாலும் ஏற்கெனவே இருக்கிற சட்டத்தின் அடிப்படையில்கூட பழி வாங்கும் நடவடிக்கைகளில் ஈடுபடலாம். வழக்கு போட முடியும் என்ற அபாயம் இருக்கிறது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஆபாசம் ஒழிக்கப்பட வேண்டும். இழிந்தரமாக, ஆபாசமாக செய்திகளை வெளியிடும் பத்திரிகைகள் ஒழிக்கப்பட வேண்டுமென்பது இந்த அரசின் கொள்கை. இன்றைக்கும் அந்தக் கொள்கையில் இந்த அரசு உறுதியாக இருக்கும் என்று நம்புகிறேன். காரணம் என்னவென்றால் நீங்கள் கொண்டு வந்த பழைய திருத்தச் சட்டத்தை திரும்பப் பெற்றுக்கொண்டாலும், ஏற்கெனவே இருக்கிற சட்டத்தின்படி கூட ஆபாசமாக, தரக் குறைவாக செய்திகளை வெளியிட்டால் நடவடிக்கை எடுக்கலாம். அப்படிச் சட்டம் இருந்தாலும் இல்லாததுபோல் நீங்கள் நடந்துகொள்ளக்கூடாது. தவறுகள் நடக்குமானால் அந்தச் சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்க வேண்டும். குறிப்பாக சிறுவர்களைக் கூட ஆபாச உணர்ச்சியைத் தூண்டக்கூடிய அளவுக்கு, பால் உணர்ச்சியைத் தூண்டக்கூடிய அளவுக்கு சில பத்திரிகைகளில் செய்திகள் வருகின்றன. குறிப்பாக, 'சினிமித்திரன்' என்று ஒரு பத்திரிகை வருகிறது. பால் உணர்ச்சியைத் தூண்டுவதாக அந்தப் பத்திரிகைச் செய்திகள் இருக்கின்றன. ஏற்கெனவே இருக்கிற சட்டப்படி அந்தப் பத்திரிகைமீது நடவடிக்கை எடுக்கலாம் (மணியடிக்கப்பெற்றது). இன்னும் கொஞ்சம் நேரம் வேண்டும். நான் இந்த சட்டத்தைப்பற்றித் தான் பேசுகிறேன். நான் கைநாட்டு அல்ல. விவரம் தெரியாதவன் அல்ல. பி.ஏ., பி.எல். படித்தவன்; அட்வகேட்; விவரம் தெரியாமல் பேசவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இது ஒரு சிறிய சட்ட முன் வடிவு; அதுவும் ஒரு பில்லை வித்ட்ரா பண்ணக்கூடியது. இதில் போய் இவ்வளவு விரிவாகப் பேசிக்கொண்டிருக்கத் தேவையில்லை. ஒரு உறுப்பினருக்கு 5 நிமிடம்தான் ஒதுக்க முடியும். நீங்கள் ஏற்கெனவே 10 நிமிடம் பேசியாகிவிட்டது. (குறுக்கீடு).

You cannot fix the time for discussion. I am sitting here to fix the time.

(குறுக்கீடு) நேரம் இல்லை; உட்காருங்கள்.

You cannot politicalise things here. This is a place for deliberation. This is not a place for politics. (குறுக்கீடு)





**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் பேரவையின் விதிமுறைகளுக்கு ஏற்றபடி நடந்துகொள்வதுதான் முறை. அலுவல் ஆய்வுக்குழுவின் முடிவுப்படி, 11 மசோதாவிற்கு மேல் இன்றும் நாளையும் அவையில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டியிருக்கிறது. அதற்கு ஏற்றாற்போல அவையின் நேரத்தை ஒவ்வொரு சட்ட முன் வடிவுக்கும் இவ்வளவு நேரம், பேசும் உறுப்பினருக்கு இவ்வளவு நேரம் என நேரத்தைக் கட்டுப்படுத்தி, எல்லோருக்கும் பகிர்ந்து தரவேண்டிய பொறுப்பு பேரவைத் தலைவருக்கு உண்டு. அவரது ஆணைக்கு உறுப்பினர்கள் கட்டுப்பட வேண்டுமே தவிர, இவ்வளவு எடுத்துக்கொண்டுதான் தீருவேன், என்று பேரவைத் தலைவருடன் வாதாடுவது முறையாகாது; சரியாக இருக்காது. எனினும் திரு. ரகுமான்கானுக்கு இன்னும் 2 நிமிடங்கள் கொடுக்கலாம்.

**திரு. அ. ரகுமான்கான்:** துணைத் தலைவர் அவர்களே, நீங்கள் கொண்டு வந்திருக்கின்ற திருத்தத்தை நான் வரவேற்கிறேன். ஏற்கனவே இருக்கக் கூடிய நடைமுறைச் சட்டத்திற்கு இணங்க இந்த சர்க்கார் ஆபாசத்தை ஒழிக்கக் கடமைப்பட்டிருக்கிறது. இந்தியன் பீனல் கோடு தெளிவாகச் சொல்கிறது.

"Section 294 : Obscene acts and songs :—

Whoever, to the annoyance of others

(a) does any obscene act in any public place, or

(b) songs, recites or utters any obscene songs, balled or words, in or near any public place, shall be punished with imprisonment of either description for a term which may extend to three months, or with fine, or with both."

இந்த அடிப்படையில் பொது இடத்திலே ஆபாசமாகப் பாடினால், பொது இடத்திலே ஆபாசமாக பிறரைக் கெடுக்கின்ற விதத்திலே நிகழ்ச்சி நடைபெறுமேயானால், அவர்களைக் கைது செய்து 3 மாதம் சிறையில் வைப்பதற்காகச் சட்டம் இடம் தருகிறது. இங்கே மன்றத்தின் கவனத்திற்கு இதனைக் கொண்டுவர விரும்புகிறேன். **

(கூச்சல், குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இதுதான் முறையா? நேற்று அவைக் குறிப்பிலிருந்து நான் நீக்கிய பகுதியையே திரும்பவும் பேசுகிறீர்கள். இதுவும் நீக்கப் பெறுகிறது.

---

* மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

Unless we restrain ourselves and participate in the deliberations, we cannot complete the business.

(குறுக்கீடு)

Thiru K. S. G. HAJA SHAREEF: Mr. Deputy Speaker Sir, I would request my esteemed friend, Mr. Rahmankhan, to co-operate with the Chair. The Chair has already said that he has to pass 11 bills to-day and tomorrow. Time is very short. I appeal to the Hon'ble Member to co-operative with the Chair, to fulfil the target.

**திரு. அ. ரகுமான்கான்:** இதிலே என்ன தப்பு என்பதைச் சொல்லுங்கள். (குறுக்கீடு) நான் ஒரு நிமிடத்திலே முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இதைப்பற்றி நேற்றே பேசி முடித்தாகிவிட்டது. அதெல்லாம் நீக்கியாகிவிட்டது. (மணியடிக்கப் பெற்றது).

(முற்பகல் 11-10)

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்ட முன்வடிவை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்கிறது என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆனால் அதே நேரத்தில் இந்தச் சட்டம் ஏறத்தாழ ஒரு வருட காலத்திற்கு முன்னாலே கொண்டு வந்திருக்க வேண்டிய சட்டம் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த அவையிலே பல தடவை இந்தச் சட்டத்தை வாபஸ் பண்ண வேண்டும் என்று குரல், அதற்கான கோரிக்கைகள் எல்லாம் வைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் என்ன காரணங்களாலோ அரசு அந்த நேரத்திலே நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. கொஞ்சம் காலம் தாழ்த்தி இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தது. உண்மையிலே இன்று பத்திரிகைகள் மேலே எடுப்பதற்காக உருவாக்கப்பட்டிருந்த கடுமையான நடவடிக்கைகளை வாபஸ் பண்ணுவதற்கு உள்ள ஒரு எண்ணத்தை அல்லது ஒரு நல்ல நிலையை உருவாக்கியதற்கு நாங்கள் மனப்பூர்வமாக எங்களுடைய ஆதரவைத் தெரிவித்துக்கொள்கிறோம்.





அதே நேரத்தில் ஒரு முக்கியமான விஷயம். ஜனநாயக உரிமைகளை பாதுகாத்துக்கொள்வது என்பது நாம் ஏற்றுக்கொண்டிருக்கக்கூடிய ஒரு கொள்கை. ஜனநாயக உரிமைகளை பாதுகாத்துக்கொள்வது என்ற எண்ணம் வருகின்ற நேரத்தில், பல நடவடிக்கைகளை, அரசினுடைய நடவடிக்கையாக இருந்தாலும் சரி, அரசியல் கட்சிகளுடைய நடவடிக்கைகளாக இருந்தாலும் சரி, அதைப்பற்றி உள்ள விமர்சனங்கள் மக்களிடமிருந்து பத்திரிகைகள் வழியாக வெளியே வரும் என்பது இன்று உள்ள தவிர்க்க முடியாத ஒரு நிலை. அந்த முறையிலே இன்று ஜனநாயக உரிமைகளை பாதுகாத்துக்கொண்டிருக்கக்கூடிய நேரத்தில், ஜனநாயக உரிமைகளை பாதுகாத்துக்கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தோடு, மக்கள் நடத்தக்கூடிய விமர்சனங்கள், பத்திரிகையிலே பிரகடனப்படுத்துவதை நாம் தவறான நோக்கத்தோடு அல்லது தவறான எண்ணத்தோடு, எடுத்துக் கொள்ளக்கூடாது. அதேபோல் பத்திரிகையிலே சில விமர்சனங்கள் எழுதப்பட்டாலும், அப்படிப்பட்ட விமர்சனங்களை நாம் ஒரு விரோத மனோபாவத்தோடு பார்ப்பது ஜனநாயக உரிமைகளை பாதுகாத்துக் கொள்வதற்கும், அதை வளர வைப்பதற்கும் உதவி அளிக்காது என்ற எண்ணத்தோடு நான் ஒன்றை வலியுறுத்துகிறேன். இன்று 292 (எ) என்ற அந்தப் பிரிவுகூட 1960-ம் ஆண்டிலே கொண்டு வரப்பட்ட ஒரு திருத்தம் என்பதை இந்த அவை நன்கு அறியும். ஏற்கனவே இந்தச் சட்டம் சம்பந்தமாக இந்த சபையிலே விவாதிக்கிற நேரத்திலே, இந்த 1960 ஆம் ஆண்டிலே கொண்டுவரப்பட்ட அந்த 292 (ஏ) என்ற ஒரு ஷரத்தைக்கூட வாபஸ் பண்ணவேண்டும் என்று ஒரு கோரிக்கை இங்கே எழுப்பப்பட்டது. இன்று நாங்கள் தெரிந்துகொண்டிருப்பது சரியாக இருக்குமானால், ஒரிசா மாநிலத்திலேயும், தமிழகத்திலேயும் மட்டும் தான் இப்படிப்பட்ட ஒரு பிரிவு இந்த ஐ.பி.சி. சட்டத்திலே இருக்கிறது. இந்த ஜனநாயக உரிமைகளைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டும் என்று சொல்லக்கூடிய நேரத்தில், ஜனநாயக உரிமைகளை வைத்துக்கொண்டு பல முறைகேடான நடவடிக்கைகளை—அது யார் செய்தாலும் சரி, பத்திரிகைகள் செய்தாலும் சரி, அல்லது மற்ற அரசியல் கட்சிகள் செய்தாலும்கூட, அதன் மீது நடவடிக்கை எடுப்பதற்கு இந்த நாட்டிலே இருக்கக்கூடிய சட்ட திட்டங்கள் இன்றைக்கு அரசுக்கு இடம் கொடுக்கிறது.

ஆகவே, இந்த 292 (ஏ) என்ற அந்தப் பிரிவு இந்தச் சட்டத்திலே இருக்க வேண்டுமோ என்று நாங்கள் கேட்க விரும்புகிறோம். 1960 ஆம் ஆண்டிலே, அன்று ஆட்சிப் பொறுப்பிலே இருந்தவர்கள், அன்றைக்கு இருந்த சூழ்நிலையை கவனத்திலே எடுத்துக்கொண்டு அந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கலாம். ஆனால் எங்களுடைய மேலான கருத்து இன்று இந்தச் சட்டப் பிரிவு தேவையில்லை. ஆகவே இந்தச் சட்டத்தைப் பொறுத்த அளவிலே. எப்படி 5 வருட கால தண்டனை என்பதை மாற்றி இன்று 2 வருட காலம் என்ற முறையிலே கொண்டு வரப்பட்டிருக்கிறதோ அதைப்போல, 292-ஏஜ ஏற்கெனவே க்ரக்னிஸ்பின் அபென்சாக இருந்ததை நான்-காக்னிசிபிள் அபன்ச்சாக கொண்டுவந்து. அதேபோல நான்-பெயிலபிளாக இருப்பதை, பெயிலபிளாகவும் எப்படி கொண்டு வரப்பட்டிருக்கிறதோ, அதைப்போலவே, அந்த எண்ணத்தோடவே இந்தப் பிரிவையும் வாபஸ் பண்ணக்கூடிய முறையிலே அல்லது நீக்கக்கூடிய வகையிலே நடவடிக்கை எடுப்பதற்கு, அப்படி ஒரு சட்டத் திருத்தத்தைக் கொண்டு வருவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அந்த முறையிலே உள்ள நடவடிக்கைதான் இந்த நாட்டிலே பத்திரிகையாளர்களுக்கு ஜனநாயக உரிமையை வளர்ப்பதற்கும், அதைப் பாதுகாப்பதற்கும், சரியாக அவர்களுடைய பாத்திரத்தை நிறைவேற்றுவதற்கு வசதி செய்து கொடுப்பதற்கும் உதவும் என்ற வகையிலே இந்தச் சட்டப் பிரிவை மாற்ற வேண்டும் என்று இந்த நேரத்திலே பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். அதற்காக வேண்டிய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி முடித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, பத்திரிகையாளர்கள் பெரும்பான்மையாக முதல்வர் அவர்களிடத்திலேயும், இந்த அரசிடத்திலேயும் வேண்டிக் கொண்டதற்கிணங்க, மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர், எம். ஜி. ஆர். அவர்கள், பத்திரிகைச் சுதந்திரத்திலே தலையிடாதவர் என்பதற்கிணங்க, பத்திரிகைச் சுதந்திரம் தொடர்ந்து இருக்க வேண்டும் என்பதிலே நம்பிக்கைக் கொண்டவர் என்பதை நிரூபிக்கும் விதத்திலே, இந்த 1982 ஆம் ஆண்டு இந்திய தண்டனைச் சட்டக் கோவை, குற்றவியல் நடைமுறைச் சட்டக் கோவை தமிழ்நாடு சட்டம் 13/1982, Indian Penal Code, Criminal Procedure Code 2/1973 சட்டத்தில் செய்யப்பட்டுள்ள திருத்தங்களை ரத்து செய்து ஏற்கெனவே இருந்தபடி. அதாவது 21—9—1981-க்கு முன்னால், சட்டம் 292 (ஏ)-ன் கீழ், 1960-வது சட்டத்தின்படி என்னென்ன ஷரத்துக்கள் இருந்ததோ, அதை அப்படியே கொண்டுவந்து, ஏற்கெனவே இந்த அரசின் மூலமாகக் கொண்டு வரப்பட்ட சட்டத் திருத்தம் வாபஸ் பெற்றுக் கொள்ளப்படுகிறது.



இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள், இந்தச் சட்ட முன்வடிவினை ஆதரித்து அரசுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டதற்கு நான் அரசின் சார்பிலே மீண்டும் நன்றியை தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அன்பிற்குரிய ரகுமான்கான் அவர்களும், ஹேமச்சந்திரன் அவர்களும் பேசுகிறபோது 292 (ஏ)-ன் கீழே இருக்கிற, அந்த விதியின் கீழேயே, சட்டத்தின் கீழேயே, இப்பொழுதும் அரசு விரும்பினால் பத்திரிகை சுதந்திரத்தைக் குலைக்க முடியும்; பத்திரிகையாளர்களை கஷ்டப்படுத்துவதற்கு முடியும், எனவே அதையும் திரும்பப் பெறவேண்டும் என்ற வேண்டுகோளை இங்கே சொன்னார்கள்.

அருமை சகோதரர் ரகுமான்கான் அவர்களுக்கு நான் சொல்லிக்கொள்ள விரும்புவது, அவர் இங்கே பேசும்போது Press Objectionable Act, 1951 என்பது இப்போதும் நடைமுறையிலே இருக்கிறது என்று சொன்னார்கள். ஆனால் அந்தச் சட்டம், அதாவது 1951-வது சட்டம் தற்போது நடைமுறையில் இல்லை. அதற்குப் பதிலாக 292 (ஏ) என்கிற 1960-லே கொண்டு வரப்பட்ட அந்தச் சட்டம்தான் நடைமுறையிலே இருந்து கொண்டிருக்கிறது நான் ஒரே ஒரு உறுதிமொழியை மட்டும் இந்த நேரத்திலே சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், பத்திரிகையாளர்களுக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சார்பிலே தரக் கடமைப்பட்டிருக்கிறேன். 1960 ஆவது சட்டம் 292 (ஏ)-ன் கீழே 1969-லே இருந்த காங்கிரஸ் அரசு எந்த வகையிலே அந்தச் சட்டத்தை பயன்படுத்தினார்களோ, அதற்குப் பின்னாலே ஆட்சியிலே இருந்த திராவிட முன்னேற்றக் கழகம் எப்படி அந்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்தினார்களோ அதைப்போலவே, இந்த அரசும் அந்தச் சட்டத்தை பாதுகாப்பாக பயன்படுத்தும் என்பதை இந்த நேரத்திலே ரகுமான்கானுக்கு, நான் முக்கியமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(திரு. எஸ். திருநாவுக்கரசு) [1984 ஏப்ரல் 27

(முற்பகல் 11-20)

குறிப்பாகவும் சுருக்கமாகவும் சொல்ல வேண்டுமென்றால், இருக்கின்ற 292-ஏ-இன் கீழ் பத்திரிகை சுதந்திரத்தைக் கட்டுப்படுத்துகிற விதத்திலேயோ பத்திரிகையாளர்களைக் கஷ்டப்படுத்துகிற விதத்திலேயோ எந்தவிதமான நடைமுறையையும் இந்த அரசு அரசியல் நோக்கத்தோடு எப்போதும் வேண்டுமென்று செய்யாது என்பதை மட்டும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த அரசு ஏற்கெனவே கொண்டுவந்திருக்கிற 1982 ஆம் ஆண்டு சட்டத் திருத்தத்தைத் திரும்பப் பெற்றுக்கொள்வதிலேயிருந்து ஜனநாயகத்தில் எழுத்துரிமையில் எவ்வளவு தூரம் இந்த அரசு நம்பிக்கையுள்ளது என்பதை மாமன்ற உறுப்பினர்களும் பத்திரிகையாளர்களும் தெரிந்துகொள்ள வேண்டும். எனவே தொடர்ந்து பத்திரிகை சுதந்திரத்தை பேணுகிற விதத்திலேயும் அவர்களுடைய எழுத்தை பேணுகிற விதத்திலேயும் இந்த அரசு அதற்கு ஏற்ப நடவடிக்கைகளை எடுக்கும் என்பதை மட்டும் சொல்லி இந்த நேரத்திலே கொண்டு வந்திருக்கிற சட்ட முன்வடிவை ஏற்றுக்கொண்டு நிறைவேற்றித் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி : " தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு இந்திய தண்டனைச் சட்டக் கோவை; இந்திய குற்றவியல் நடைமுறைச் சட்டக் கோவை (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 18/1984) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.



பிரிவு—3.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவை முன்னுள்ள கேள்வி : "பிரிவு 3 சட்டமுன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்."

**மாண்புமிகு எஸ். திருநாவுக்கரசு :** துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்.

In Clause 3, *for* item (ii) *substitute* the following :—

(ii) In the First Schedule, for the entries relating to section 292-A and 293, the following entries shall be substitu'ed, namely :—

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
|---|---|---|---|---|---|
| 292-A | Printing etc. of grossy in decent or scurilous matter or matter in tended for blackmail | Imprisonment of either description for two years or fine or both. | Non-cognizable. | Bailable. | Any Magistrate |
| 293 | Sale, etc, of obscene objects to young persons. | On first convictionwith imprisonment for 3 years, and with fine of 2,000 rupees and in the event of second or, subsequent conviction with imprisonment for 7 years, and with fine of Rs. 5,000 rupees. | Cognizable | Do, | Do. |

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 3, திருத்தப்பெற்றபடி, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்—

"தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு இந்திய தண்டனைச் சட்டக் கோவை, இந்திய குற்றவியல் நடைமுறைச் சட்டக் கோவை (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 18/1984), திருத்தப் பெற்றபடி, நிறைவேற்றப்பெற வேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு, திருத்தப்பெற்றபடி, நிறைவேற்றப்பெற்றது.

### (இ) கடன் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவு, 1984.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு கடன் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 27/1984) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்."

**திரு. பெ. சு. திருவேங்கடம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1982 ஆம் ஆண்டு கடன் நிவாரணச் சட்டத்தை மேலும் திருத்துவதற்காகக் கொண்டுவந்திருக்கிற இந்தச் சட்ட முன்வடிவை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே நாங்களும் வரவேற்று இதிலே சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். ஏற்கெனவே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே இருந்த காலத்திலேயிருந்து இப்படிக் குறைந்த வருவாய் உள்ள விவசாயிகளுக்குக் கடன் கொடுத்தவர்கள் வழக்கு மன்றத்திற்குப் போகக் கூடாது என்று சொல்லி 1974-லிருந்து ஏறக்குறைய 10 ஆண்டுக்காலம் இந்தச் சட்டத்திற்கு உயிரைக் கொடுத்துக்கொண்டே வருகிறோம். கிராமங்களிலே

---

* 1984 ஆம் ஆண்டு மார்ச் 29 ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.



உள்ள பல பேர்களுக்கு நன்மை செய்தாலும் இது பல பேர்களுக்கு தீங்கை விளைவிக்கின்ற ஒரு சூழ்நிலை ஒரு பக்கத்தில் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. இன்றையதினம் பணம் படைத்தவர்கள் கிராமங்களிலே ஏழை எளியவர்களுக்குக் கடன் கொடுத்தால் இந்தச் சட்டங்கள் வருகிறபோது பாதுகாப்பு இல்லாமல் போய்விடுமே என்ற அச்சத்தின் காரணமாக அவர்கள் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிலே டெபாசிட் செய்கிற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அதன் மூலமாக கிராமங்களிலே கடன் கிடைப்பதே மிக அரிதான நிலைமை என்ற அளவிலே இருந்துகொண்டு இருக்கிறது என்பதை நாம் அறிவோம்.

அதைப் போக்குவதற்கு நான் சென்ற முறையிலே இந்த மசோதாவின் மீது பேசுகின்றபோது கூட இதற்கு ஒரு முடிவை எடுத்தாக வேண்டும், பாதிக்கப் பட்டவர்களுக்கு ஒரு நிரந்தரமான பரிகாரம் கண்டாக வேண்டுமென்றும் ஒரு நிவாரணத்தை அவர்களுக்கு அளிக்க வேண்டுமென்றும் சொல்லி இருக்கிறேன். ஒரு பர்சன்ட் வட்டி என்று அடகுக் கடைக்காரர்கள் ஃவத்தாலும் கூட அதற்கான அனுமதியை தருகிறபோது தாசில்தார் அனுமதியை வழங்கி விடுகிறார்கள். பல நகரங்களிலே நகைகள் மட்டுமல்ல, ஏழை எளிய நடுத்தர குடும்பங்களிலே உள்ளவர்கள் பண்ட பாத்திரங்களை அடகு வைக்கிற கொடுமையான நிலைமை தமிழ்நாட்டில் பரவலாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்பதை பேரவை உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள். லைசென்ஸ் பெற்று இருக்கிறவர்கள் பல பேர் பல நகரங்களிலிருந்து சொல்லாமல் கொள்ளாமல் அடகு பிடித்த நகைகளோடும் சாமான்களோடும் இரவோடு இரவாக இந்த மாநிலத்தைவிட்டுப் போய்விடுகிறார்கள். பிறகு நகைகளையும் அடகு வைத்த சாமான்களையும் இழந்தவர்கள் போலீசிற்குப் போய் புகார் கொடுத்தால் அந்த நபரை இந்திய பூபாகத்திலே தேடிப் பிடிக்க முடியாத நிலையிலே பல்வேறு வழக்குகள் தமிழகத்திலே காலாவதியாகிவிட்டிருக்கின்றன, சில வழக்குகள் காவல் நிலையத்திலேயே தேங்கிக் கிடக்கின்றன.

அப்படி ஏமாற்றுகிறவர்கள் ஏராளமாக இருந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு சென்ற முறை இந்த விவாதத்தின்போது நம்முடைய மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் அவர்கள் இதற்கு ஒரு சட்டம் புதிதாக கொண்டு வரப்போகிறோம் என்று இந்தப் பேரவையில் அறிவித்தார்கள். ஆனால் அதற்கான சட்டம் வந்ததாகத் தெரியவில்லை. இன்றைய தினம் 3 சதவீதம் 5 சதவீதம் என்று வட்டியை வாங்குகிறார்கள். ஆனால் ரசீது கொடுக்கின்றபோது மட்டும் ஒரு சதவீத வட்டி வீதத்தில் ரசீதைத் தருகிறார்கள். இது வாடிக்கை. இது அடகு கடைக்கு செல்கின்ற எல்லோ

ருக்கும் நன்றாகத் தெரியும். இதை ஏதாவது ஒருவழியில் நம்முடைய அரசினர் நடவடிக்கை மூலம் எடுத்து இப்படிப்பட்ட ஒரு நிலையைப் போக்க தக்க நடவடிக்கை எடுத்தால் அன்றி ஏதோ தனிப்பட்டவர்கள் சில பேர் கொடுத்த கடனிலிருந்து நாம் சில பேரை காப்பாற்றி விடுவதாலே இந்தச் சமுதாயத்தையே காப்பாற்றிவிட்டோம் என்ற நிலைமை ஏற்பட்டு விடாது என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். முன்பு நான் பேசுகின்றபோது இந்த அவையில் கூறியதுபோல் இன்றையதினம் இந்த அடகு கடைக்காரர்கள் மூலம் கிராமங்களில் உள்ள பெரும்பாலான விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள். நம்முடைய கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் பல தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளுடைய விழா நிகழ்ச்சிகளில் அவர்கள் கலந்துகொண்டு அவர்களுடைய பேச்சை டி.வி.யில் பார்த்து கேட்கின்ற ஒரு நிலை ஏற்படுகிறது. மகிழ்ச்சி. ஆனால் இன்றையதினம் நீங்கள் பார்ப்பீர்களானால் தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் கூட தொழில் ஆரம்பிக்கிறவர்களுக்கு கடன் தருகிறார்கள். வேறு ஏதாவது வியாபாரம் செய்பவர்களுக்கு பல லட்சக்கணக்கான ரூபாயை முதலீடு செய்கிறார்கள். ஆனால் விவசாயம் செய்கின்றவர்களுக்கு கிராமங்களில் இருக்கின்ற தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளுக்கு எங்களைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் சென்று அங்கு இருக்கின்ற விவசாயிகளுக்கு நெசவாளர்களுக்கு கடன் கொடுங்கள் என்று கேட்டால் எங்களுக்குப் போதிய ஆட்கள் இல்லை என்று மறுத்துவிடுகிறார்கள். அதைப் போக்க வேண்டும் வங்கிகளை தேசிய மயமாக்கினால் அவை கீழ் மட்டத்தில் இருப்பவர்களுக்கு, விவசாயிகளுக்கு, ஏழை எளியவர்களுக்கு கடன் வழங்கும். ஆகவே அவர்களுக்கு அந்த வசதி வரவேண்டும் என்று சொல்லி நாம் அதை தேசிய மயமாக்கினோம். ஆனால் இன்றையதினம் அவர்கள் விவசாயிகளுக்கு கடன் கொடுக்க மறுக்கிறார்கள். காரணம் ஒரு நிரந்தரமான வருவாய் இல்லை. நிச்சயமாக அவர்கள் உற்பத்தி செய்கின்ற பொருட்களுக்கு நிரந்தரமான வருவாய் இல்லாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. அந்த அடகு கடைக்காரர்களிடமிருந்து மட்டும் நமது அரசு இந்தச் சட்டத்தின் மூலம் விவசாயிகளுக்கு பாதுகாப்பு கொடுத்தாலும் கூட்டுறவுத் துறையில் இப்படிப்பட்ட அநியாய வட்டிகள் வாங்குகின்ற ஒரு நிலைமை இருந்துகொண்டு இருக்கிறது. அதிலும் கூட்டுறவுத் துறை அமைச்சராக பொறுப்பு ஏற்று இருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நன்கு அறிவார்கள். இதிலிருந்து கூட இப்படிப்பட்ட விவசாயிகளுக்கு பாதுகாப்பு அளிக்கின்ற ஒரு நிலையை உருவாக்கி விவசாயிகள் இந்த அநியாய வட்டிக்கு கூட்டுறவுத் துறையானாலும் சரி, அரசாங்கம் ஆனாலும் சரி, அடகுக் கடைக்காரர்கள் ஆனாலும் சரி அவர்கள் பாதுகாப்புப் பெற இந்த சட்டம் போதுமானதாக இல்லை. இன்னும் ஒரு முற்போக்கான சட்டத்தைக் கொண்டு வந்து இந்த அநியாய வட்டியிலிருந்து காப்பாற்ற இந்த அரசு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறி முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.





(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

**திரு. என். வரதராஜன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு கடன் நிவாரணச் சட்டத்தை மேலும் திருத்துவதற்கான சட்ட முன்வடிவின் மீது மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக சில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன். இந்தச் சட்ட முன்வடிவு இன்னும் 24 திங்கள் கால கெடுவை நீடித்துத் தரவேண்டும் என்று கூறுகிறது. இதுவரை எவ்வளவு காலம் நீட்டித்துக் கொடுத்தாலும் கூட பெரும்பாலான நலிந்த பிரிவினர்களுக்கு பயன் அளிக்காத நிலையில் இருப்பதால் நாம் அதை மீண்டும் நீட்டிக்கின்ற அவசியம் இருக்கிறது என்று சுட்டிக் காட்ட விரும்புகிறேன். கிராமப்புறம் ஆனாலும் நகரப்புறம் ஆனாலும் இந்த பின்தங்கிய மக்கள் மத்தியில் இந்த கடனுக்காக விண்ணப்பம் போடுகின்ற நம்பிக்கை இல்லை. ஆகவேதான் ஒரு பக்கம் அவர்களுக்கு தகவல் தெரியவில்லை என்று சொல்லப்படுகிறது. இந்த காரண விளக்கத்தில் அது ஏற்றுக்கொள்ளக்கூடிய உண்மையாக இருந்தாலும் அவர்கள் அனுபவத்தில் ஏற்கெனவே மனுப் போட்டவர்களுக்கு கிடைத்து இருக்கக்கூடிய சலுகைகளை அவர்கள் பார்க்கிறபோது, சங்கடத்தைப் பார்க்கிறபோது இந்த மனுவைப் போடுவதற்கு அந்த மக்கள் முன்வரவில்லை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்தில் எடுத்துக்கொள்ளவேண்டும்.

(முற்பகல் 11-30)

அவர்களுக்கு நம்பிக்கை இல்லை. இது ஒரு பயங்கரமான வட்டிக் கொடுமை. தங்குவட்டி என்று சொல்வார்கள். 500 ஆண்டுகளுக்கு முன்னால் இருந்த அடிமைச் சமுதாயத்திலே மனிதனை வாட்டி வதைத்த வட்டி; முதலாளித்துவ சமுதாயத்திலே வாங்கப்பட்ட வட்டி, நிலப்பிரபுத்துவ சமுதாயத்திலே வாங்கப்பட்ட வட்டி என்பதுகூட அல்ல; அதற்கு முன்னால் இருந்த சமுதாயத்தில் வாங்கப்பட்ட வட்டி வாங்கப்படுகிறது. அடகு வைத்த நகைகளைப் பலரால் வாங்க முடிவதில்லை. சில நேரங்களில் அடகு பெற்றவர்கள் ஓடிவிடுவார்கள். இதனால் சாதாரண மக்கள் புலம்பித் தவிப்பது என்பது நம் நாட்டிலே கண்கூடாகப் பார்க்கிறோம்.

கடந்த 37 ஆண்டுகளாகப் பார்த்தால் புள்ளிகள் உள்ளே போகின்றன. ஏற்கனவே வருவாய் குறைந்தவர்களின் வருவாய் குறைந்து வருகிறது. ஆகவேதான் வட்டிக்கடைக்கு அவர்கள் போகிறார்கள். ஒரு பவுன், இரண்டு பவுன் நகைகளை, தங்களுடைய சொந்த அவசியமான காரியங்களுக்காக கொண்டு போய் அடகு வைத்து, உடனடியாகப் பணப் புரட்டலுக்குப் பயன் பட்டுக்கொண்டிருக்கிறது. வேறு வழி அவர்களுக்கு இல்லை.

தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளைப் பொறுத்தவரையில் அவர்கள் விளம்பரம் செய்கிறார்கள். தடாபுடா காரியங்களைச் செய்து, கீழே உள்ள மக்களை மேலே உயர்த்துவதாக வானொலியில் பிரச்சாரம் செய்வதற்குத்தான் அவைகள் பயன்படுகின்றன. ஆனால், உண்மையிலேயே இந்த மக்களுக்கு அங்கே எளிதில் கடன் கிடைக்காத காரணத்தினாலேதானே அவர்கள் அங்கே செல்வதில்லை. தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளிலேயும், கூட்டுறவுச் சங்க வங்கிகளிலேயும் சில எல்லைகளையும், வரம்புகளையும் வைத்திருக்கிறார்கள். நகைக் கடன் என்றால் இவ்வளவுதான் கொடுக்க முடியும், இதற்கு மேல் கடன் இல்லை என்று சொல்கிறார்கள். தாழ்ந்த நிலையில் உள்ள நலிந்த பிரிவினர் களைக் கை தூக்கி விடுவதற்காகத் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் நகைக் கடன்களைக் கூடுதலாக அளிக்க வேண்டுமென்று சொல்வதுதான் அவர்களுக்கு உதவி செய்யுமே தவிர, இன்னொரு 36 திங்கள்களுக்கு இதை நீட்டித்தாலும் அதனால் பயன் இல்லை. ஆகவே, அரசு இதைக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தச் சட்டத்தை அமல் நடத்துவதிலே உள்ள சிக்கல்களை அரசு புரிந்து கொள்ள வேண்டும். அரசு என்ன கைட்லைன்ஸ் கொடுத்து இருக்கிறார்கள் என்று தெரியவில்லை. வழிகாட்டி நெறிகள் என்னவென்று தெரியவில்லை. தாசில்தாரைக் கேட்டால் அரை ஏக்கரா இருப்பவர்கள் விவசாயம் செய்து, உற்பத்தி செய்து, அறுவடை செய்துகொண்டு வந்தால், அறுவடை செய்த முழு சாமான்களும் வருமானத்தில் சேரும் என்று சொல்கிறார்கள். விவசாயி களைக் கேட்டால், எனக்கு இரண்டாயிரம் ரூபாய் வருகிறது என்றால், 1,500 ரூபாய் உழவடைச் செலவு செய்திருக்கிறேன், ஆகவே எல்லாவற்றையும் வருமானமாகக் கணக்கிடுவது எப்படிச் சரியாகும் என்று வாதாடுகிறார்கள். தாசில்தார் அதை ஏற்க மறுக்கிறார்.



வருடத்திற்கு 4,800 ரூபாய் என்ற வருமானச் சான்றிதழைப் பெற வேண்டியது யாரிடத்திலே என்றால், தாசில்தாரிடத்திலேதான். அவர்தான் தீர்ப்பு அளிக்க வேண்டியவர். ஆகவே, இந்தச் சிக்கலின் காரணமாக, பலருக்கு 4,800 ரூபாய் வருமானச் சான்றிதழ் கிடைப்பது இல்லை. அந்த வருமானத்தை, இல்லாத பொல்லாத காரணங்களைச் சொல்லி அதிக வருவாய் வருவதாகச் சொல்லப்படுகிறது.

இன்னொன்றையும் அரசு ஆலோசிக்க வேண்டும். பணத்தின் மதிப்பு எவ்வளவு தூரம் குறைந்து வருகிறது என்பதை நாம் அறிவோம். 400 ரூபாய் மாத வருமானம் என்பது இப்பொழுது எந்த அளவிற்கு இருக்கும் என்பதைப் பார்க்க வேண்டும். இப்படி 400 ரூபாய் மாதம் வருமானம் என்று வைத்து, 4,800 ரூபாய் வருமானம் என்று இருப்பதை மாற்ற வேண்டும். 800 ரூபாய் மாத வருமானம் என்று வைத்து, வருடத்திற்கு 9,600 ரூபாய் வருமானம் என்று கொண்டு வந்தால்தான் அதை ரவுண்டாக மாற்றி 10.000 ரூபாய் என்று வைத்தால்தான் ஓரளவிற்கு அவர்கள் நிவாரணம் பெற முடியும் என் பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு இந்தச் சட்ட நீட்டிப்பு வருவதை நான் வரவேற்கிறேன். ஆனால், அதே நோக்கில் இன்னொரு முயற்சியையும் அரசு கைக்கொள்ள வேண்டும். அடகாக இன்றைக்குக் கடைகளில் வைக்கப்பட்டிருக்கின்ற நகைகள்ளையெல்லாம் அரசு தன்னுடைய பொறுப்பிலே ஏற்றுக்கொண்டு, கடன் களை வசூலித்துக் கொடுக்கின்ற சூழ்நிலைகள் வந்தால்தான் இந்தச் சட்டம் பயன்படும். அவ்வாறு செய்வதாக நீங்கள் முடிவெடுத்து, அதைப்பற்றி நீங்கள் விரிவாக விளம்பரம் செய்யுங்கள்; அந்தச் செய்தி கிராமப்புறங்களிலே எட்டட்டும். சாதாரணமாக விளம்பரம் இல்லை என்பது உண்மை. எனவே, அந்த முடிவைப்பற்றித் தெளிவாக விளம்பரம் செய்யுங்கள். கிராம மக்களுக்கு நம்பிக்கை ஏற்பட வேண்டுமென்ற முறையில் செய்ய வேண்டுமென் றால், இந்த நகைகள் மோசடியில்லாமல் பாதுகாக்கப்பட வேண்டுமென்றால் அந்த நகைகளுக்கு முழுப் பாதுகாப்பும் தேவைப்படுகிறது. எனவே, அந்த முறையில் சாதாரண மக்களுக்குக் கடன் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டி யிருக்கிறது.

ஒரு தாசில்தார் மட்டும் இன்றைக்கு இந்தக் காரியங்களை நிறைவேற்றி விடுவார் என்று நாம் நம்பிவிட முடியாது. அவருக்கு ஏராளமான வேலைப் பளு இருக்கிறது. சமுதாயப் பார்வையில் பல்வேறு நிர்ப்பந்தங்கள் இவை களோடு சேர்ந்துகொண்டு, அவர்கள் சரியாகத் தீர்ப்பு வழங்க முடியாத சிக்கலில் இருக்கிறார்கள் என்பதை நாம் அறிவோம்.

(திரு. என். வரதராஜன்) [1984 ஏப்ரல் 27

சிலயிடங்களில் ஆலோசனைக் குழுக்கள் வைக்கப்பட்டிருக்கின்றன
ஆனால் பல குழுக்கள் ஆண்டுக் கணக்கில் கூடுவதே இல்லை. எனவே,
அந்தக் குழுக்களினால் பயனில்லாத நிலைமை உள்ளது. குழு வேண்டும்
என்றுதான் நான் கேட்டுக்கொள்கிறேன். தாசில்தார் அல்லது அதற்குமேலே
உள்ள அலுவலர்களைக் கொண்ட குழுவாக அது இருக்க வேண்டும். அதன்
முடிவுதான் இறுதியான முடிவாக இருக்க வேண்டும். அப்படியில்லையென்
றால், ஐந்துபேர்கள் ஒரு குழுவில் இருக்கிறார்கள் என்றால், அந்த ஐந்தில்
மூன்றுபேர் ஆஜராவார்கள்; இரண்டு பேர் தாசில்தாரை ஆதரிப்பார்கள்.
இதனால் கடன்பட்டவர்கள் தங்கள் நகைகளைச் சிறுகச்சிறுக இழக்கின்ற
நிலைதான் இருக்கும்; அதிக வட்டி தருகின்ற ஆபத்தான நிலைதான்
இருக்கும்; அவர்களுக்குப் பாதுகாப்பு இல்லை என்ற நிலைமைதான்
இருக்கும்.

இந்தச் சட்ட முன்வடிவை நிறைவேற்றுவதோடு, நான் சொன்ன ஆலோ
சனைகளையும் கருத்திற்கொண்டு, அடுத்து வருகின்ற காலத்தில், ஒரு
அழுத்தமான திருத்தச் சட்டத்தைக் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக்
கொண்டு அமர்கிறேன்.

**திரு. தி. கா. நல்லப்பன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே,
தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு கடன் நிவாரணச்சட்டத் திருத்தத்தின் மீது
இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகச் சில கருத்துக்களைக் கூற ஆசைப்
படுகிறேன். இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையில் நான் மனதார வர
வேற்கிறேன்.

ஏற்கெனவே இந்தச் சட்டம் 18 திங்களாகப் போடப்பட்டு மேலும் இந்தச்
சட்டம் சம்பந்தமாக மக்களுக்குத் தெரியவில்லை என்ற காரணத்தால்
மேலும் 6 மாதங்களுக்கு அதாவது 24 அல்லது 25 மாதங்களுக்கு நீட்டிப்பதற்
காக இந்தச் சட்டம் இங்கே கொண்டுவரப்பட்டிருக்கின்றது. இந்தச்
சட்டத்தைப் பொறுத்தவரையில் திருத்துவதற்காகக் கொண்டு வந்திருந்
தாலும் இந்தச் சட்டத்தில் ஏற்கெனவே இருக்கக்கூடிய அம்சங்கள் குறைந்த
பட்சம் 4,800 ரூபாய் வருமானமும், அதேசமத்தில் 25 ஆயிரம் ரூபாய் பெறு
மான சொத்தும் இருந்தால் அவ்வாறு வருமானமும், சொத்தும் உள்ளவர்கள்
கடன் வாங்கியிருந்தால் அவர்களுக்கு இந்தச் சட்டம் செல்லுபடியாகாது
என்று இருக்கின்றது. இன்றையதினம் விவசாயத் தொழிலாளியை எடுத்துக்
கொண்டால் கூட நம்முடைய குறைந்தபட்சக் கூலிச் சட்டத்தின் அடிப்படை
யில் பார்த்தால் கூட ஒரு ஆணுக்கு 10 ரூபாயும் ஒரு பெண்ணுக்கு 6 ரூபாயும்



1984 ஏப்ரல் 27] [திரு. தி. கா. நல்லப்பன்]

கூலி என்று பார்த்தால் கூட அந்த அடிப்படையில் கணக்கிட்டால் கூட ஒரு
மாதத்திற்கு 450 ரூபாய் வருகின்றது. அப்படி ஒரு மாதத்திற்கு 450
ரூபாய் என்பதை ஒரு வருடத்திற்குக் கணக்கிட்டால் 5,400 ரூபாய் வரு
கின்றது. ஆனால் இந்தச் சட்டமோ 4,800 ரூபாய்க்கு மேல் வருமானம்
பெறக்கூடியவர்களுக்குச் செல்லாது என்று சொல்கின்றது. அப்படியானால்
ஒரு விவசாயத் தொழிலாளிக்குக் கூட பொருந்தாதா என்று கேட்கவேண்டிய
நிலைமை இருக்கின்றது. ஆனால் அந்த விவசாயத் தொழிலாளிக்கு ஆண்டு
முழுவதும் வேலை கிடைக்கின்றதா இல்லையா என்பது வேறு பிரச்சினை.
அதேபோல் 25 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள சொத்து இருந்தாலும் அவர்
களுக்குச் செல்லாது என்று சொல்லப்பட்டிருக்கின்றது. இன்றைக்கு
நகரத்தை ஒட்டி இருக்கின்ற பகுதிகளில் 5 சென்ட் அல்லது 6 சென்ட் நிலம்
இருந்தாலும் கூட அதுவும் அந்த அளவுக்கு விற்பனை ஆகக்கூடிய நிலைமை
இருக்கின்றது.

ஆகவே இந்தச் சட்டம் எந்த மக்களுக்குப் பயன்படவேண்டும் என்பதற்
காக நாம் கொண்டுவந்திருக்கிறோமோ அந்த மக்களுக்கு இந்தச் சட்டம்
பயன்படாத சூழ்நிலை இருப்பதன் காரணமாகப் பதிவு செய்து கொள்பவர்
களுடைய எண்ணிக்கை குறைவாக இருக்கின்றது என்பதை நான் இந்தச்
சமயத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும் கடன் பெற்றிருக்கின்ற ஒருவர் தனக்கு எவ்வளவு வருமானம்
வருகின்றது என்பதைப் பொறுத்தவரையிலே சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடத்
திலே இருந்து சான்றிதழைப் பெற்றுக் கொடுக்கவேண்டிய நிலைமைக்கு
இந்தச் சட்டத்தின் மூலம் உட்படுத்தப்படுகின்றார். அப்படிப்பட்ட
நிலைமை இருப்பதன் காரணத்தால் நான் ஏற்கெனவே சொன்ன இந்தக்
காரணங்களை வைத்து சம்பந்தப்பட்ட வருவாய்த் துறை அதிகாரிகள்,
உங்களுக்கு இவ்வளவு வருமானம் வருகின்றது; ஆகவே சான்றிதழ் அளிக்க
முடியாது என்று சொல்லக் கூடிய ஒரு நிலைமையும் இன்றையதினம் நடை
முறையில் இருக்கின்றது.

நகைகளைப் பொறுத்தவரையில் பல்வேறு நகரங்களில் பதிவு பெற்ற,
நகைகளை வாங்கக்கூடியவர்கள் இருக்கிறார்கள். அப்படிப் பதிவு பெற்ற,
நகைகளை வாங்கக்கூடியவர்கள் அடகு வைப்பவர்களிடத்திலே ரசீதைக்
கொடுப்பதோடு நீங்கள் நீதிமன்றங்களுக்குச் சென்றால் அல்லது சம்பந்தப்
பட்ட அதிகாரிகளிடத்திலே சென்று சொல்வீர்களேயானால் 2 ஆயிரம்
ரூபாய்தான் இந்த நகையின்பேரில் உங்களுக்குக் கொடுக்கப்பட்டாலும் இதை
4 ஆயிரம் என்று எழுதி வைத்துக் கொள்வோம் என்றும், நீங்கள் நியாயமாக

நடந்துகொண்டால், நானும் நியாயமாக நடந்துகொள்வேன், இல்லை என்றால் வேறுவிதமாக இருக்கும் என்று பயமுறுத்தக்கூடிய நிலைமை இருக்கின்றது. மேலும் பதிவு பெறாத, நகைகளை அடகு வாங்குபவர்களும் பல்வேறு நகரங்களில் இருக்கிறார்கள். அவர்களிடத்திலே நகைகளை அடகு வைப்பவர்கள் எல்லாம், நமக்கெல்லாம் இந்தச் சட்டத்தின் வாயிலாக எந்தப் பலனும் இல்லையே, எனவே 'இந்தப் பிரச்சினையில் எப்படி முடிவெடுப்பது என்று எண்ணுகின்ற நிலைமையும் அவ்வாறு பதிவு பெறாதவர்களிடத்திலே கடன் பெற்றவர்களுக்கு இருக்கின்றது. இப்படிப்பட்ட சூழ்நிலைகள் இருப்பதன் காரணத்தால் அடகு வைத்திருப்பவர்கள் அதிகாரிகளிடத்திலே போய் நான் இன்னாரிடத்திலே நகைகளை அடகு வைத்திருக்கிறேன் என்று சொல்வது நிச்சயமாக இருக்காது என்ற வகையிலேதான் சூழ்நிலை இருக்கின்றது.

எனவே நகைகளை அடகு வைப்பவர்கள் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் சென்று ஒரு பவுன் நகைக்கு இவ்வளவு கடன் இடைக்கும் என்று நம்புகின்ற வகையிலே ஒரு பவுன் நகைக்கு இவ்வளவு கடன் கொடுக்கப்படும் என்று சொல்லுகின்ற வகையிலே நிலைமைகளை உருவாக்கவேண்டும். மேலும் அவர்கள் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளுக்குச் சென்றவுடனே சம்பந்தப்பட்டவர்களிடத்திலே இருந்து நகைகளைப் பெற்றுக்கொண்டு உடனடியாக அவர்களுக்குக் கடன் கொடுக்கக்கூடிய ஒரு ஏற்பாட்டைச் செய்யவேண்டும்.

மேலும் நான் ஏற்கெனவே சொல்லிய விவசாயத் தொழிலாளிகளைப் பொறுத்தவரையில் 2 ஏக்கர், 3 ஏக்கர், 4 ஏக்கர், 5 ஏக்கர் என்று நிலங்களை வைத்திருப்பவர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் வங்கியிலே சென்று, அவர்கள் வைத்திருக்கக்கூடிய சொத்தினுடைய ஒரு பகுதிக்கு அரசு கடன் கொடுக்கின்ற வகையிலே ஏற்பாடு செய்யவேண்டும். அதாவது ஒரு ஏக்கருக்கு எவ்வளவு கடன் என்ற வகையிலே நிர்ணயிக்கவேண்டும். அந்த வகையிலே அவர்களுக்குப் பட்டா புத்தகத்தைப்போட்டு அந்த அடிப்படை யிலே அவர்களுக்குக் கடன் கொடுக்கவேண்டிய மாற்று ஏற்பாடுகள் எல்லாம் செய்யப்படுமானால் தான் இந்தச் சட்டத்தினுடைய முழுமையான பலனும் மக்களுக்குக் கிட்டும் என்று சொல்லி அமர்கிறேன். நன்றி.

திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இன்றையதினம் கொண்டு வந்திருக்கிற கடன் நிவாரணச் சட்டத்திலே இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில் ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்தச் சட்டத்தை வரவேற்கின்றபொழுது மறைந்த பெரியார் இராஜாஜி அவர்கள் செய்தது நினைவிற்கு வருகிறது. உத்தமர்





இராஜாஜி அவர்கள் இந்தக் கடன் நிவாரணச் சட்டத்தைக் கொண்டு வராமல் இருந்திருப்பாரானால் தமிழகத்திலே ஆயிரக்கணக்கான விவசாயக் குடும்பங்கள் அழிந்து போயிருக்கும். அப்படிப்பட்ட நல்லதொரு சட்டத்தை அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். அதே தோரணையில் இந்தச் சட்டம் இருக்கிறது என்பதை நான் பாராட்டுகிறேன்.

இந்தச் சட்டத்தை யாரிடம் ஒப்படைத்திருக்கிறோம்? தாசில்தாரிடம் ஒப்படைத்திருக்கிறோம். எனக்கு முன்பு பேசிய உறுப்பினர் தெளிவாகச் சொன்னார்கள். அமைச்சர் அவர்களும் விவசாயக் குடும்பத்திலே பிறந்தவர். கிராமத்திலே எப்படி இருக்கும் என்பதை அறிந்தவர்; பொறுப்பின் காரணமாகவும் அறிந்தவர். இந்தச் சட்டத்தைத் தாசில்தாரிடத்திலே இரண்டு விதத்திலே ஒப்படைத்திருக்கிறோம். ஒன்று அவரே நியாயம் வழங்க வேண்டுமென்பது. மற்றொன்று அவரே சான்றிதழ் வழங்க வேண்டுமென்பது. எனக்கு முன்பு பேசிய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் திரு. நல்லப்பன் சொன்னது போல், உண்மையில் யதார்த்தமான நிலை என்னவென்றால், கிராமப்புறத்திலே 3 விதமான அடகுக்காரர்கள் வாழ்கிறார்கள். ஒன்று லைசன்ஸ் இல்லாமல், நம்பிக்கையின் பேரிலே வைத்துக் கொண்டிருக்கிற கடைகள்; மற்றொன்று லைசன்ஸ் பெற்றிருக்கிற கடைகள்; மற்றொன்று அரசாங்கமே உதவி செய்து வைத்திருக்கின்ற கூட்டுறவு ஐக்கிய நாணயச் சங்கங்கள். அவர்களுக்கு உண்மையான உதவி செய்ய நல்லெண்ணம் கொண்டிருக்கிற இந்த அரசு தீர்க்கமாக மத்திய அரசுக்கும் சொல்லி, மத்திய அரசு ஆவன செய்ய வழி செய்யவேண்டும். கூட்டுறவு மூலமாகவும் எவ்வளவு பேர்கள் ஏழைகள், ஒரு குறிப்பிட்ட வருமானத்திற்குக் குறைந்த மக்கள் என்று பார்த்து உதவிகள் செய்ய வேண்டும்.

அது மட்டுமல்ல. தங்க நகைகள் வைக்கிறார்கள். அந்தக் குடும்பங்கள் அழிக்கப்படாமல், நிராபாதிகள் கண்ணீரும் கம்பலையுமாக இல்லாமலிருக்க, அவர்களுக்கு தேசிய வங்கிகள் மூலம் கடன் கொடுக்கின்ற நிலையைக் கொண்டு வரவேண்டும். அது மத்திய சர்க்காராக இருந்தாலும் மாநில சர்க்கார் அதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

மாநில அரசு கூட்டுறவு மூலமாகக் கடன் கொடுத்துக் கொண்டிருக்கிறது. அது போதாது. நாம் எத்தனையோ வகையில் உதவுகிறோம். ஏழை விவசாயிகள் என்ற பெயரால், ஏழை விவசாயத் தொழிலாளர்கள் என்ற பெயரால், முதியோர் என்ற பெயரால், விதவைகள் என்ற பெயரால் நமக்கு வருமானம் அதிகம் வராவிட்டாலும் செலவு செய்கின்றோம். நிலைமை எப்படியிருந்தாலும் அவைகளுக்கெல்லாம் ஒதுக்குகின்றபொழுது, இந்த ஏழைகள்

கண்ணீரும் கம்பலையுமாக இல்லாத நிலையை உருவாக்க வேண்டுமென்றால், கூட்டுறவு வங்கிகள் மூலம் மட்டுமல்ல, தேசிய வங்கிகளின் மூலமாகக் கூட தங்க நகைகளுக்குக் கடன் கொடுக்கவேண்டுமென்று செய்தாலொழிய, ஈட்டிக்காரனிடமிருந்து தப்ப முடியாது, நம்பிக்கையின் பேரில் நடத்துகின்ற கடைகளைத் தள்ள முடியாது.

இப்படிச் சட்டங்களை 6 மாதம், 12 மாதம் என்று போடுவதால், கிராமப்புறங்களிலே நம்பிக்கை இழந்து விட்டார்கள். கடன் கொடுத்தால் வருமோ, வாராதோ என்று சந்தேகப்பட்டு, கடன் கொடுக்க வேண்டாமென்று முடிவெடுத்து பணம் இல்லையென்று சொல்லும் நிலைமை வந்துவிட்டது. இது யதார்த்த நிலைமை. மாநில அரசாங்கம் நல்லது செய்ய ஒரு சட்டம் கொண்டு வந்தும், எந்த எண்ணத்திற்காகக் கொண்டு வந்தார்களோ அதற்கு நேர் மாறாக, கிராமத்திலிருக்கும் ஏழைக்குக் கஷ்டகாலத்திற்குக் கடன் கொடுக்க யாரும் முன் வரவில்லை. முன் வராத காரணத்தினால், ரூ. 100 கொடுத்தால், ரூ. 500-க்கு ப்ரோ நோட்டு எழுதி வாங்கிக் கொண்டு. கொடுக்கிறார்கள். அப்படிக் கொடுத்தால்தான் கொடுப்பேன் என்று சொல்லக்கூடிய உண்மையான, யதார்த்தமான நிலைமை வந்துவிட்டது. அதை இல்லையென்று யாரும் மறுக்க முடியாது. அது போக வேண்டுமென்றால் அவர்களுக்குக் கடன் கொடுக்கின்ற வாய்ப்பை அளிக்க அரசாங்கமே திட்டவட்டமாக முடிவெடுக்க வேண்டும். எல்லா இடங்களிலும் தனிப்பட்டவர்கள் கடைகளை வைத்துக்கொண்டு, லைசென்ஸ் வழங்கப்பட்டு, அவர்களுக்கென்று குறிப்பிட்ட வட்டி விகிதத்தை நாம் வைத்திருக்கிறோம். எல்லோருக்கும் பணம் கிடைக்கிறது என்ற நிலைமையை நாம் உருவாக்க வேண்டும். ஆனால் இப்போது இக்கட்டான, இரண்டுங்கெட்டான் நிலையில் நாம் கஷ்டப்படுகிறோம். அதிலும் தாசில்தாரை இதற்கு பொறுப்பாக வைப்பது அவ்வளவு நியாயமாக இருக்காது. காரணம் பல்வேறு வேலைகளுக்கு தாசில்தார்கள் இன்றைக்கு பொறுப்பேற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே இதற்கென்று தனி அதிகாரிகளை நாம் நியமிக்கலாம்; அல்லது தாசில்தார் இல்லாமல் வேறு அரசு அதிகாரிகளுக்கு ஸ்பெஷல் டியூட்டியாக இதைக் கொடுப்பது நியாயமாக இருக்கும். அப்படியாவது நீங்கள் செய்ய வேண்டும். தாசில்தார்கள் சர்டிபிகேட் வழங்குவதற்கும், இவர்கள் நியாயம் வழங்குவதற்கும் வாய்ப்பாக இருக்கும். இப்படிச் செய்வதால் தாசில்தார்களுக்கு சற்று ஓய்வு கிடைக்கும். இந்த அதிகாரிகளும் நல்லவிதத்தில் உண்மையைக் கண்டுபிடித்து நியாயம் வழங்குவார்கள். இப்படிச் செய்தால் யாருக்கு நன்மை செய்யவேண்டுமென்று விரும்புகிறீர்களோ அவர்களிடத்தில் இந்த அரசாங்கத்திற்கு ஒரு நல்லபெயர் உருவாகும். பாரதப் பிரதமர் அவர்கள் நல்ல எண்ணத்தோடு தேசிய வங்கிகள் மூலம் இதைக் கொண்டு வந்தார்கள். நம்முடைய அரசாங்கமும், நம்முடைய முதலமைச்சர் அவர்களும் நல்ல எண்ணத்தோடு,



தலைமைச் செயலாளர் அவர்களைப் பொறுப்பாக வைத்து கடனை எல்லாம் ஒன்று சேர்த்து கொடுப்பது என்று கொண்டு வந்து அதுவும் இப்போது நடைமுறையில் இருக்கிறது. அங்கே கூட என்ன நடக்கிறது? இந்தச் சபையிலே சொல்லக் கூடாது என்று தான் இருந்தேன். இப்போதும் பயந்து தான் சொல்கிறேன். அங்கே இருக்கிற மேனேஜர்களுக்கும், கடனை வாங்கிக் கொடுக்கிற புரோக்கர்களுக்கும் ஒரு உடன்பாடு இருக்கிறது. இரண்டு பேர்களும் ஒன்றாகச் சேர்ந்தால் கடன் தாராளமாக கிடைக்கிறது. அந்த மேனேஜரும், கடன் வாங்கிக் கொடுக்கிற புரோக்கரும் சேராவிட்டால் உண்மையான, ஏழையான, தேவையானவர்களுக்கு அந்தக் கடன் கிடைப்பதில்லை என்ற பரிதாபமான நிலை இருக்கிறது. அதை இங்கே ஒப்புக் கொள்ள வேண்டும். அதை நியாய ரீதியாக ருஜுப்படுத்தவேண்டுமென்றால் கடினமாக இருக்கும். ஆனால் உண்மை இது தான். இப்படிப்பட்ட அலங்கோலமான நிலை இருப்பதை அரசாங்கம் கவனிக்க வேண்டும். ஒவ்வொரு மாவட்டத்திலும், ஒவ்வொரு வட்டத்திலும், முடியுமானால், சட்டம் இடம் கொடுக்குமேயானால் ஒவ்வொரு பிளாக்கிலும் கூட தேசிய வங்கிகளிலிருந்து வழங்குகிற கடனை நாம் பிளாக்கிலே இருக்கிற அதிகாரிகளை வைத்து வேண்டியவர்களுக்குக் கொடுக்கலாம். அந்த நிலையை உருவாக்கினால், ஏழைகளுக்கு உதவிட வேண்டுமென்று கருணையோடு இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறீர்களே, அந்த ஏழைகளுக்கு இதன் மூலம் பலன் கிடைக்கும். ஆகவே அந்த நிலைமையை நீங்கள் உருவாக்க வேண்டும். ஆகவே காலத்தை அதிகப்படுத்துவதினால், ஒத்தி வைப்பதினால் அங்கே கடன் வாங்குபவர்களுக்கும் கொடுப்பவர்களுக்கும் இடையூறாக இருக்கும். குறிப்பாக ஏழை மக்களுக்கு கடன் கிட்டாத நிலைமை உருவாகிறது. இவைகளை அரசாங்கம் எண்ணிப்பார்த்து, ஏழை மக்களுக்கு, விவசாய மக்களுக்கு நல்லது கிடைக்க, நான் சொன்ன இந்த மூன்று யோசனைகளை வருங்காலத்தில் கருத்திலே கொண்டு ஆவன செய்யவேண்டும். அப்படிச் செய்வீர்கள் என்று நம்பிக்கைத் தெரிவித்து இந்த பில்லை வரவேற்று அமர்கிறேன்.

**திரு. கு. பா. பழனியப்பன்**: மாண்புமிகு மாற்றுத்தலைவர் அவர்களே, ஒரு முக்கியமான தகவலை அமைச்சர் அவர்களுக்குத் தருவதன் மூலமாக அவரிடமிருந்து ஒரு விளக்கத்தைப் பெற விரும்புகிறேன். கடன் நிவாரணச் சட்டத்தினுடைய முழுமையான பலனைப் பெறுவதற்கு தாசில்தார்களுடைய வருமானச் சான்றிதழ் தேவை என்பது எல்லோருக்கும் தெரியும். ஆனால் அவர்கள் தருகிற வருமானச் சான்றிதழை அப்படியே கோர்ட்டிலே ஏற்றுக் கொள்வதில்லை என்கிற நிலைமை சமீபத்திலே வந்த உயர்நீதி மன்றத் தீர்ப்

பினால் ஏற்பட்டிருக்கிறது. அதனுடைய விளைவாக தாசில்தாரிடம் வாங்கி வருகிற வருமானச் சான்றிதழ்களானாலும் கூட, கோர்ட்டிலே ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. தாசில்தாரே கோர்ட்டிற்கு வந்து சாட்சியம் சொல்லி நிரூபிக்கவேண்டுமென்று தீர்ப்பு வந்திருக்கிறது. இதனால் ஏழைகளுக்குப் பெரிதும் பாதிப்பாக இருக்கிறது. வருமானச் சான்றிதழ் பெறுவதே கடினம்; தாசில்தார் வந்து சாட்சியம் சொல்ல வைப்பது மிகமிகக் கடினம். இதை மாற்றுவதற்கு சட்டத்திருத்தத்தின் மூலமாவது வழிவகை செய்து ஏழைகளுக்கு உண்மையான பலன்கிடைக்க அரசாங்கம் ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 11-50)

**திரு. செ. சிவசாமி:** மாற்றுத் தலைவர் அவர்களே, இந்தக் கடன் நிவாரணச் சட்டம் நல்ல நோக்கத்தோடு கொண்டு வரப்பட்டு இருக்கிறது. இதை நான் வரவேற்கிறேன். ஆனால் அதே நோக்கிலே நடைமுறையிலே விவசாயிகளுக்கு நன்மை விளைந்து இருக்கிறதா என்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. ஆனால், இந்த நன்மையைப் பெறவேண்டும் என்பதற்காகச் சான்றிதழ் அளிக்கின்ற தாசில்தார்கள் நல்ல முறையில் வளர்ந்து கொண்டு வருகிறார்கள். பயன்பெறுகிறார்கள். அவர்களுக்கு இரண்டு பக்கத்திலும் வருமானம் வந்து கொண்டு இருக்கிறது. கடன் நிவாரணம் பெறுவதற்காகச் சான்றிதழ் பெறச் செல்கின்றவர்களும் அவர்களுக்கு ஏதாவது தருகிறார்கள். கடன் கொடுத்தவர்களும் அவர்களுக்கு சான்றிதழ் கொடுக்காதீர்கள், அதைச் செய்யாதீர்கள், இதைச் செய்யாதீர்கள் என்று அவர்களும் ஏதாவது தாசில்தார்களுக்கு தரும் நிலைமை இருக்கிறது. இப்படி இரண்டு பக்கத்தில் இருந்தும் அவர்களுக்கு வருமானம் வந்து கொண்டு இருக்கிறது.

இப்படிப்பட்ட சட்டங்கள் கொண்டு வரும் நேரத்தில், அவர்களின் வருமானத்தைக் கணக்கில் எடுத்துக்கொண்டு பார்ப்பதற்கு தாசில்தார்கள் செய்ய வேண்டும் என்பதற்குப் பதிலாக யார் கடன் கொடுத்தார்களோ அவர்கள்தான் அவர்களுக்கு எவ்வளவு வருமானம் வருகிறது என்பதை நிரூபிக்க வேண்டும் என்று கொண்டு வரவேண்டும். இன்றைக்கு யார் கடன் வாங்கினார்களோ அவர்கள்தான் தங்களுக்கு 4,500-க்குக் கீழே வருமானம் வருகிறது என்பதை நிரூபிக்க வேண்டியிருக்கிறது. இதனால் பல சிக்கல்கள் வருகின்றன. இதனால் கடன் வாங்கியவர்கள் தங்கள் கடனைத் திருப்பிச் செலுத்த முடியாத கஷ்டத்தோடு மட்டுமல்லாமல், இப்படிச் சான்றிதழ் வாங்குவதற்காகவும் கஷ்டப்படவேண்டி இருக்கிறது.





இன்னும் சில இடங்களில் பார்த்தால், கடன் பெறுகிறவர்கள் அடகு வைக்கிற நகைகளையும் மாற்றி எடுத்துக்கொண்டு விடுகிறார்கள், கடன் கொடுத்தவர்கள் அவர்கள் வாங்கிய கடனைத் திருப்பிச்செலுத்த இரண்டு மூன்று ஆண்டுகள் ஆகிவிடுவதால், அந்தக் காலகட்டத்திற்குள் அந்த நகைகளை பித்தளை நகைகளாக மாற்றிவிடுகிறார்கள். இன்னும் சொல்லப் போனால் சிலர் கோர்ட்டுக்குப் போய் தங்க நகைகளை இழந்து விடும் நிலைமை ஏற்பட்டு விடுகிறது. இப்படி சில இடங்களில் நடைபெற்று அதற்காக நாங்கள் பஞ்சாயத்து கூட்டி, அந்தத் தங்க நகைகளை அவர்களுக்கு திரும்பப்பெற்றுக் கொடுக்கவேண்டிய நிலைமை வந்து இருக்கிறது. ஆகவே, விவசாயிகள் மீது அரசாங்கம் எவ்வளவு தான் அனுதாபத்தோடு சட்டங்களைக் கொண்டு வந்தாலும், அவைகள் நல்ல பயனைக்கொடுக்க முடியவில்லை. அவைகள் நல்ல பயனைக் கொடுக்கும் வகையில் நடைமுறைகள் வகுக்கப்படவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஆகவே, அரசாங்கமே வங்கிகள் மூலம் நல்ல முறையில் கடன் உதவி அளிக்க முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். வங்கிகளில் இன்று போய் கேட்டாலும் கடன் கொடுக்க மாட்டோம் என்று சொல்கிறார்கள். திருப்பிச்செலுத்த முடியுமா என்று கேட்கிறார்கள். இப்படிப் பல்வேறு சிக்கல்கள் இருக்கின்றன. விவசாயிகள் நினைத்த நேரத்தில் கடன் வாங்க முடியவில்லை. ஆகவே, இப்படிப்பட்ட சிக்கல்கள் இருப்பதால் அரசாங்கம் இதைத்தவிர்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சில நேரங்களில் பிரச்சினைகளைச் செட்டில் செய்யவேண்டும் என்று தாசில்தாரிடம் போனால் அவர்கள் அந்தப் பிரச்சினையை செட்டில் செய்யாமல், இரண்டு பக்கமும் கையூட்டு வாங்கிக்கொண்டு எந்தவிதமான காரியத்தையும் செய்யாமல் இருக்கிறார்கள். இதை எல்லாம் அரசு கணக்கில் கொண்டு, உண்மையிலேயே இந்தச் சட்டத்தின் பலன்கள் மக்களுக்குப்போய்ச் சேரவேண்டும் என்று கேட்டு, இந்தச் சட்டத்தை வரவேற்று, அமைகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவு நல்ல நோக்கத்தை எய்துவதற்காக, சாதாரண ஏழை எளிய மக்களுக்கு மேலும் உதவவேண்டும் என்பதற்காகக் கொண்டு வரப்பட்ட சட்டமுன்வடிவு ஆகும். எற்கனவே இருந்து வருகிற அந்தச் சட்டம் 23—2—1984-ல் முடிவு அடைகிறது. அதை மேலும் 6 மாத காலத்திற்கு நீட்டிப்பதன் மூலம் ஏழை எளிய மக்களுக்கு, பாமர மக்களுக்கு, தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு பயன்தர இந்தச் சட்டமுன்வடிவு கொண்டு வரப்பட்டிருக்கிறது. இந்தச் சட்டமுன்வடிவில் பயன்கள் ஏழை எளிய மக்களுக்கு பாமர மக்களுக்கு தெரிவிப்பதற்காக டெலிவிஷன்

மூலமும், ரேடியோ மூலமும், துண்டுப் பிரசுரங்கள் மூலமும், தண்டோரா மூலமும் தேவையான இடங்களில் தேவையான அளவிற்கு விளம்பரங்களைத் தந்து அந்த மக்களுக்குத்தெரிவிக்கிற அளவிற்கு நடவடிக்கைகள் எடுக்கப் பட்டு வருகின்றன.

இதுவரை சுமார் 6,700 பேர்கள்தான் மனுச் செய்திருக்கிறார்கள். ஒட்டு மொத்தமாக இந்தச் சட்டம் இன்னும் சாதாரண மக்களுக்கு ஏழை எளிய மக்களுக்குத் தெரியாததுதான் இதற்குக் காரணம் என்று அரசு கருதுகிறது. ஆகவேதான் மேலும் இந்தக் கால வரையறையை 6 மாதத்திற்கு நீட்டிக்கும் வகையில் இந்த சட்டத் திருத்தம் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

இதிலே சான்றிதழ் கொடுப்பதும், தள்ளுபடி செய்வதும் ஒரே தாசில்தார் என்று மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். அப்படியல்ல. கடன் நிவாரணம் அளிக்க தனி தாசில்தார் இருக்கிறார். சான்றிதழ் கொடுப்பது ரெகுலர் தாசில்தார்.

திரு. தி. கா. நல்லப்பன்: மாற்றுத் தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் கூறும்போது கடன் நிவாரணத்திற்குத் தனி தாசில்தார் என்றும் சான்றிதழ் வழங்குவதற்கு ரெகுலர் தாசில்தார் என்றும் குறிப்பிட்டார்கள். ஆனால் பல்வேறு இடங்களில் அம்மாதிரியான நிலைமை இல்லை. ஏற்கெனவே இருக்கிற தாசில்தார் சான்றிதழ் வழங்குகிறார், கடன் நிவாரணத்தையும் கவனிக்கிறார், என்பதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாற்றுத் தலைவரவர்களே, நான் நடைமுறையில் இருப்பதைச் சொல்கிறேன். கடன் நிவாரணச் சட்டத்தின் படி நடவடிக்கை எடுக்க தனி தாசில்தாரும் சான்றிதழ் வழங்க ரெகுலர், தாசில்தாரும் இருக்கிறார்கள்.

தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் அதிக அளவில் கடன் தர முன்வர வேண்டுமென்றும், அதைப்போன்று ஷெட்யூல்டு வங்கிகளும் அதிக அளவில் கடன் தர முன்வர வேண்டுமென்றும் மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்தார்கள். அவர்களுடைய கவனத்திற்கு ஒன்றைக் கொண்டுவர விரும்புகிறேன். சென்ற ஆண்டு கூட்டுறவுத் துறையில் மட்டும் நகைக் கடனாக ஏறத்தாழ 170 கோடி ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது. அதைப்போன்று தேசிய வங்கிகள் மூலமாகவும் ஷெட்யூல்டு வங்கிகள் மூலமாகவும் ஏராளமாக கடன் வழங்கியிருக்கிறார்கள்.



'பான் புரோக்கர்களை'ப் பொறுத்தவரையில் அவர்கள் தவறு செய்வதாகச் சுட்டிக்காட்டினார்கள். அதிலும் குறிப்பாக அவர்கள் குறைந்த தொகைதான் கொடுக்கிறார்கள், அதிக வட்டி வாங்குகிறார்கள், அதனால் சாதாரண மக்கள் கஷ்டப்படுகிறார்கள் என்று சொன்னார்கள். அவர்கள் தவறுகள் செய்யாமல் இருக்க, தவறுகள் நடந்தால் தடுக்க, விரைவிலே ஒரு 'காம்பிரிஹென்சிவ்' சட்டம் கொண்டுவர அரசு முயற்சி செய்து கொண்டிருக்கிறது. விரைவிலே அந்தச் சட்டம் கொண்டுவரப்படும். அதுவும் சாதாரண மக்களுக்கு ஏழை எளிய மக்களுக்குப் பயனளிப்பதாக இருக்கும் என்று கருதுகிறேன்.

இப்படிப்பட்ட சட்டங்களினால் கடன் தரப் பயப்படுகிறார்கள் என்று சொன்னார்கள். இந்த அரசு அப்படிப்பட்டவர்களைப்பற்றி கவலைப்படவில்லை. சாதாரண மக்கள், ஏழை எளிய மக்களைப்பற்றித்தான் இந்த அரசு கவலைப்படுகிறது. ஆகவேதான் ஏழை எளிய மக்களின் நலன் கருதி மேலும் 6 மாதத்திற்கு காலத்தை நீட்டிக்கக்கூடிய இந்த சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம்.

கோர்ட்டுக்குப் போகும்போது ஏன் தாசில்தார்கள் வரவேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனியப்பன் அவர்கள் குறிப்பிட்டார்கள். கோர்ட்டுக்குப் போனால் நீதிமன்றம்தான் தீர்ப்பு அளிக்கிறது. சில நேரங்களில் சான்றிதழ் வழங்கும் தாசில்தார் 'பீஸ் ஆஃப் எவிடன்ஸ்' என்ற முறையில்தான் அழைக்கப்படுகிறார்கள். இதுதான் இப்போது இருக்கிற நடைமுறை. அதிலே தவறு நடக்க இடமேதும் இல்லை. சான்றிதழ் வழங்குவதற்கும் கடன் நிவாரணச் சட்டத்தை செயல்படுத்தவும் தனித் தனி தாசில்தார்கள் இருக்கிறார்கள். அதிலே பிரச்சினை இல்லை. எனவே இந்தச் சட்டத்தை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கு. பா. பழனியப்பன்: மாற்றுத் தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்லும்போது 'பீஸ் ஆஃப் எவிடன்ஸ்' என்ற முறையில்தான் தாசில்தார்கள் கோர்ட்டுக்கு அழைக்கப்படுகிறார்கள் என்று சொன்னார்கள். அதற்காக அழைப்பதில்லை. உயர்நீதி மன்றத்தின் தீர்ப்பின் காரணமாக இப்போது தாசில்தார்களை அழைப்பது நடைமுறையில் வந்திருக்கிறது. ஆகவே, அதுபற்றி அரசு 'ஸ்பெசிபிக்காக' திருத்தம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[1984 ஏப்ரல் 27

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (டாக்டர் கே. சமாசம்):** போவை முன்னுள்ள கேள்வி—

"தமிழ்நாடு 1954 ஆம் ஆண்டு கடன் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 27/1984) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 4 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

(நண்பகல் 12-00)

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு கடன் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 27/1984) நிறைவேற்றப் பெற வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

**(ஈ) பொது விற்பனை வரி (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு, 1984.**

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு** (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 23/1984) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்".

**திரு. எல். இளையபெருமாள்:** மாற்றுத் தலைவர் அவர்களே, இன்று எடுத்துக்கொண்டிருக்கிற பொது விற்பனை வரிச் சட்டத்திலே பக்கம் இரண்டிலே கொடுத்திருக்கின்ற விளக்கத்திற்கு நான் சார்ந்திருக்கின்ற காங்கிரஸ் கட்சியின் சார்பாக ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

---

** 1984 ஆம் ஆண்டு மார்ச் 19 ஆம் தேதி தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.



1984 ஏப்ரல் 27] (திரு. எல். இளையபெருமாள்)

அமைச்சரவர்கள் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருப்பது அரசாங்கத்திற்கு நல்லதை உண்டாக்க வேண்டுமென்ற நல்ல எண்ணத்தோடு கொண்டு வந்திருக்கிறார்கள். ஆனால் நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். பிரிவு 7, 8 உட்பிரிவிற்குட்பட்டு, யாதொரு பொருள்கள் கொள்கலன்களுடன் அல்லது சிப்பமிடும் பொருள்களுடன் விற்பனை செய்யப்பட்டிருந்தாலும் அல்லது வாங்கப்பட்டிருந்தாலும் அப்பொருள்களின் வாணிபத் தொகையில் அந் கொள்கலன் அல்லது சிப்பமிடும் பொருளின் விலை, செலவு அல்லது மதிப்பும், சிப்பமிடுவதற்கான கட்டணமும் அவ்வாறு சிப்பமிடுவதற்கான விலை, செலவு அல்லது மதிப்பு அல்லது கட்டணம் தனியாக விதிக்கப்பட்டிருந்தாலும், அல்லது விதிக்கப்படாவிட்டாலும், அடங்கும் என்று விளக்கத்திலே சொல்லப் பட்டிருக்கிறது. அத்தோடு ஒன்றைச் சேர்க்க வேண்டுமென்று சொல்ல விரும்புகிறேன்.

குறிப்பாக நம்முடைய அரசு ஏழை எளிய மக்களுக்காக சிறு தொழில் களை பஞ்சாயத்து யூனியன்கள் மூலமாகச் செய்ய வேண்டும். கருமான், தச்சுப் பட்டறைகளிலே, கிராமங்களிலே இருக்கின்ற பஞ்சாயத்து யூனியன்கள் மூலமாக ஏழை எளிய மக்களுக்காக, அந்த மக்களின் பொருளாதாரத்தை முன்னேற்றுவதற்கும், நல்ல பொருள்கள் கிடைப்பதற்கும், அரசாங்கத்திற்கு வருமானம் வரவில்லையென்றாலும், நல்ல பொருள்களை உண்டாக்குவதற்கும், அந்த ஏழை மக்களுக்கு உதவி செய்வதற்கும் தான் இந்த முறை கொண்டுவரப் பட்டிருக்கிறது. கிராமங்களிலே செய்யப்படுகின்ற அந்த பொருள்களுக்கு, கதர் இலாகாவின் மூலமாக அந்தச் சிறு தொழில்களுக்கு விற்பனை வரியிலே நாம் சலுகைகளைக் கொடுத்து வருகிறோம். ஆனால் அதே சமயம் அரசாங்கம் நடத்துகின்ற தச்சு, கருமான் பட்டறைகளில் சின்னஞ்சிறு தொழில் களுக்குப் போய் அரசாங்கம் விற்பனை வரி என்று சொல்லி, தென்னார்காடு, வடார்காடு, தஞ்சாவூர் போன்ற மாவட்டங்களில், பஞ்சாயத்து யூனியன் கமிஷனர்களே இப்போது கோர்ட்டிற்குப் போய் இருக்கிறார்கள். அவர்களுக்கு முன்கூட்டியே அது தெரியாது. பஞ்சாயத்து யூனியன்களில் ஏழை எளிய மக்களுக்காகத் தொழில் நடக்கிறது, நல்ல பொருள் கிடைக்கிறது என்ற நல் லெண்ணத்தில் அரசாங்கம் பஞ்சாயத்து யூனியன்கள் மூலமாகச் செய்கிறது. ஆனால் விற்பனை வரியைப் போட்டிருப்பதனால், அந்த அதிகாரிகள் ஏதாவது முறையில் கோர்ட்டிற்குப் போவதாக மாதத்திற்கு இரண்டு முறை போய் வருகிறார்கள். வேலைகளோ நடப்பதில்லை. வரிகளும் கட்டப்படப் போவது இல்லை. இந்த அரசாங்கப் பணிகளுக்கும் தொல்லை வருகிறது.

சின்னஞ்சிறு பொருள்களுக்கு வரிச் சலுகைகள் பஞ்சாயத்து யூனியன்கள் மூலம் காட்ட வேண்டும். அப்படி இந்த வரிச்சலுகையைக் காட்டுவதோடு மட்டுமல்லாமல், போடப்பட்டிருக்கின்ற வழக்குகளை நாம் வாபஸ் வாங்க வேண்டும். இப்போது அதிகாரிகளுக்குத் தொல்லைகள் இருக்கின்றன. தொழில்கள் சில இடங்களில் நிறுத்தப்பட்டிருக்கின்றன. நம்முடைய அமைச்சரவர்கள் கிராமப்புற நிலைமைகளை உணர்வார்கள். ஆகவே இதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. கு. பா. பழனியப்பன் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, 1984 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 23/1984) என்கிற இந்தச் சட்ட முன்வடிவை திராவிட முன்னேற்றக் கழக சார்பில் எதிர்க்கிறேன்.

நான் எதிர்க்கிற காரணம், இந்த அரசாங்கத்திற்கு வருகின்ற வருமானத்தை எதிர்ப்பது என்ற நோக்கமல்ல. அதுமட்டுமல்லாமல், இந்தச் சட்டப் பிரிவிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற காரண நோக்கங்களை விளக்கும் நடைமுறையில் மாறுபட்ட எண்ணத்தில் இருக்கிறது என்பதற்காகத் தான் நான் இதை எதிர்க்கிறேன். இதிலே சொல்லப்பட்டிருக்கிறது, வியாபாரிகள் தங்களுடைய மொத்த டர்ன்-ஓவரில், கொள் கலன்கள், சிப்பமிடும் பொருள்கள், சிப்பமிடும் பொருள்களுக்கான கட்டணங்கள் ஆகியவைகளின் விலைக்கிரயத்தை அதிலிருந்து தப்புகின்ற விதத்தில் அதிகப்படுத்திப் போட்டு, அதிலிருந்து வரி ஏய்ப்பு செய்து இருக்கிறார்கள் என்பது இந்தச் சட்டத்தினுடைய உள்நோக்கம்.

எனவே அந்த வரி ஏய்ப்பைத் தடுப்பதற்காக இந்தச் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்ததாக அமைச்சர் அவர்கள் தெரிவிக்கிறார்கள். அதற்காக என்ன சொல்கிறார்கள்? எந்தப் பொருள் அதிலே பேக் செய்யப்படுகிறதோ, அல்லது அனுப்பப்படுகிறதோ, அல்லது எந்தப் பொருள் விற்கப்படுகிறதோ, அந்தப் பொருள்களுக்கு, எந்தப் பொருளாலே, கொள்கலனாகவோ, அல்லது சிப்பம் கட்டும் பொருளாகவோ அல்லது சிப்பம் கட்டுகிற கட்டிடமாகவோ, செய்யப்படுகிறதோ, அந்தத் தொகையிலே கூட அங்கேயிருக்கிற பொருள்களினுடைய மதிப்புக்கு ஏற்றாற்போல, வரி போடவேண்டும் என்பதாக இங்கே சொல்லப்பட்டு இருக்கிறது. இது ஒரு வகையிலே வேடிக்கையாகவும், விநோதமாகவும் இருக்கிறது என்பதைத்தான் நான் சொல்ல விரும்புகிறேன். ஏன் என்றால் அறிவார்ந்த முறையிலே நாங்கள் மாற்றியமைக்கிறோம் என்பதாக உள்ளே போட்டுவிட்டு, அதற்குப் பொருத்தமற்ற வகையிலே சில கருத்துக்களை இங்கே சொல்லியிருக்கிறார்கள். அதைத்தான் நான் தெளிவுபடுத்த



விரும்புகிறேன். உதாரணமாக மின்சாரப் பொருள் இருக்கின்றது. பேன், அல்லது எலக்ட்ரிகல் பல்ப் இப்படிப்பட்ட பொருள்கள், இவைகளுக்கு இப்போது 15 சதவீதம் விற்பனை வரி இருப்பதாக அறிகிறேன். ஆனால் இவைகளை பேக் செய்கிற மெட்டிரியல், உதாரணமாக கன்னி பேக், அல்லது வேறு ஏதோ சாதாரணமான பொருள், இவைகளை பேக் செய்கிற வகையிலே தனிப்பட்ட முறையிலே பார்த்தால், அந்த பாக்சுக்கு அல்லது மற்றவைகளுக்கோ, 5 சதவீதம் அளவிலே விற்பனை வரி இருக்கக்கூடும். ஆனால் புதிய சட்டத்தின் முடிவினால் என்ன ஏற்படும். அந்த கன்னி பேக்ஸ் அல்லது சாதாரண அட்டைப்பெட்டி. போன்ற பொருள்களாலே, மின்சாரச் சாதனங்கள் அதை அடக்கி சிப்பம் கட்டி, அல்லது கொள்கலனிலே வைத்து, அதை அடக்கிக் கட்டி, விற்பனைக்கு எடுத்துப் போனால், அதற்கும் 15 சதவிகிதம் விற்பனை வரி. இது எந்த வகையிலே பொருத்தமாக இருக்கும்? இது ஏதோ வருமானத்தைப் பெருக்குவதற்காக நாங்கள் வியாபாரிகளை இப்படிக் கட்டுப்படுத்துகிறோம், வியாபாரி வரி ஏய்ப்புச் செய்யாமல் இருப்பதற்காக நாங்கள் திறமையாகச் செய்கிறோம் என்று நீங்கள் கருதுவீர்களானால், அது அறிவார்ந்த காரணமாக இருக்க முடியாது என்பதை நான் தெளிவாக்க விரும்புகிறேன். இதனுடைய விளைவு வியாபாரிகளை ஒருக்காலும் பாதிக்காது. நேரடியாக அதை உபயோகப்படுத்துகிறவர்களுக்கு, வாங்குகிறவர்களுக்கு, அல்லது நுகர்வோர்களுக்கு, ஏழை எளிய மக்களுக்குத்தான் இது பாதிப்பாக இருக்குமே தவிர, வியாபாரிகளை பாதிக்காது. நீங்கள் எந்த வகையான வரியை வேண்டுமானாலும் போடுங்கள். ஆனால் அந்த வரியை அவர்கள் எப்படி முறைப்படுத்தி, அதைப் பொது மக்களிடமிருந்து எந்த வகையிலே வசூலிக்க முடியுமோ, அந்த வகையிலே அவர்கள் வசூலித்துக் கொள்வார்கள். அது தான் நடைமுறை. ஆனால் இதனுடைய பாதிப்பு நேரடியாக பொதுமக்களுக்குத்தான் இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். இதன் விளைவாக மின்சாரப் பொருள்கள், நுழைவுப் பொருள்கள், மருந்துப் பொருள்கள், இன்னும் பல்வேறு வகையான நுகர்பொருள்கள், அத்தனையும் இன்றைக்கு இதனால் விலை கூடுதலாக ஆகக்கூடிய ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தி இருக்கிறீர்கள். தெரிந்தோ, தெரியாமலோ, இதைச் செய்திருக்கிறீர்கள். இப்போது கூட அமைச்சர் அவர்கள் முயற்சி செய்தால், ஒரு சிறிய திருத்தத்தைக் கொண்டு வரலாம். என்ன திருத்தம் என்று சொன்னால், கொள்கலனை தனிப்பட்ட முறையிலே ஒரு பொருளாகக் கருதுங்கள். ஒரு டின் இருக்கிறது, அல்லது கோணிப் பை இருக்கிறது. அல்லது ஒரு அட்டைப்பெட்டி இருக்கிறது, அவைகளைத் தனியாக ஒரு பொருளாக, விற்பனைப் பொருளாகப் பாவித்து, அதற்கு சராசரியாக என்ன விற்பனை வரி போட முடியுமோ, 5 சதவீதம் என்றால், 5 சதவீதம் மட்டும். இப்படிப் போடுவதன் மூலமாக, உள்ளே

(திரு. கு. பா. பழனியப்பன்) [1984 ஏப்ரல் 27

இருக்கிற பொருள்களினுடைய விலை மதிப்புக்கு ஏற்ற வரியைத் தவிர்த்து உள்ள 15 சதவீத வரி இருக்கலாம். இன்னும் ஐ.எம்.எப்.எல். போன்ற பொருள்களுக்கு எல்லாம் 25 சதவீதம் விற்பனை வரி இருக்கிறது. எனவே உள்ளே இருக்கிற பொருள்களுக்கு 25 சதவீத வரியும், அதைக்கொண்டு இருக்கிற கலனுக்கு 5 சதவீதம் அல்லது 10 சதவீதம் என்று வரி இருக்கும். இப்போது போடப்படுகிற சட்டத்தின் காரணமாக உள்ளே இருக்கிற பொருள்களுக்கு என்ன விற்பனை வரி விகிதமோ, அதையேதான் வெளியிலே இருக்கிற பொருள்களுக்கும் என்பதாக இருக்கிறது. இது முறையல்ல. முறைகேடானது, சரியானது அல்ல. எனவேதான் வாங்குகிற பொருள்களுக்கு இனிமேலாவது இந்தச் சட்ட திருத்தத்தின் மூலமாக மாற்றம் செய்து உள்ளே இருக்கிற பொருள்களுக்கு இருப்பதைப்போல இல்லாமல் வெளியிலே இருக்கிற கொல்கலன், டின்னோ, அல்லது கோணிப்பையோ, அதற்கும் தனிப்பட்ட முறையிலே என்ன சதவீதத்தை விற்பனை வரி என்று போடலாம் என்று ஏற்கெனவே நீங்கள் நிர்ணயித்து இருக்கிறீர்களோ, அந்தவகையிலே போடுகிற விதத்திலே சட்டத்தை மாற்ற வேண்டும். அப்படி மாற்றுவதன் மூலமாகத்தான் இந்த ஏழை எளியவர்களுக்கு, பொதுமக்களுக்கு ஏற்படுகின்ற வரிச் சுமையிலேயிருந்து நீங்கள் பாதுகாப்பு அளிக்க முடியும் என்ற ஒரு திருத்தத்தை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அதன் மூலமாக இந்தச் சட்டத்தை இப்போது இருக்கிற முறைப்படி நீங்கள் கொண்டு வந்தால், அது நிச்சயமாக பொதுமக்களைப் பாதிக்கும் என்பதைச் சொல்லி, இதைக் கடுமையாக எதிர்க்கிறேன்.

(பிற்பகல் 12-10)

**திரு. கே. ஆர். சுந்தரம்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, பொது விற்பனை வரி (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவின் மீது மார்க்கிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு விற்பனை வரியிலிருந்து, இந்த பேக்கிங் சாமான்களுக்கு அதிக விலை நிச்சயித்து, உண்மையான வரி விதிப்பிலிருந்து தப்பித்துக் கொள்கிறார்கள் என்ற காரணத்தாலே இந்தத் திருத்தம் கொண்டு வரப்பட்டிருப்பதாக கொள்கை விளக்கக் குறிப்பிலே சொல்லப்பட்டிருக்கிறது.

எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் பழனியப்பன் அவர்கள் சொல்லியதைப்போல, எந்தப் பொருளில் பேக்கிங் செய்யப்படுகிறதோ, அதனுடைய விலைக்கு ஏற்ற முறையில், இந்தப் பேக்கிங் பொருள்களுக்கும் விற்பனை வரி விதிப்பது என்பது நிச்சயமாக, சாதாரண மக்களை பாதிக்கக் கூடிய அளவுக்குப் போய்ச் சேரும். ஆகவே, அதை கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1984 ஏப்ரல் 27] (திரு. கே. ஆர். சுந்தரம்)

சாதாரண சிறிய பொருளாக இருந்தாலும், அதிக விலையுள்ள பொருளாக இருந்தாலும், அவைகளுக்கு ஏற்ற முறையில் வரி என்பதற்குப் பதிலாக. எந்தப் பொருளைக் கொண்டு பாக்கிங் செய்யப்படுகிறதோ, அதனுடைய விலை மதிப்பீடு என்னவோ, அந்த விலை மதிப்பீட்டை சராசரியாக நிர்சயித்து அதற்கான முறையிலே வரி விதிப்பு செய்ய வேண்டும் என்பதுதான் சரியாகும். அதுதான் அரசினுடைய நோக்கமாகவும் இருக்கும் என்று நான் கருதுகிறேன். அந்த முறையிலே இந்த விளக்கம் இருக்க வேண்டும். இந்த விளக்கத்திலே இருப்பது, அதிக விலையுள்ள பொருளை பேக்கிங் செய்கிற நேரத்தில், அந்த பாக்கிங்கினுடைய விலை குறைவாக இருந்தாலும், பொருளினுடைய விலைக்கு ஏற்ற முறையிலே அந்த வரி விதிப்பு இருக்கும் என்ற வகையிலே இருக்கிறது என்றால், அது நிச்சயமாக வாங்கி உபயோகப்படுத்துகிறவர்களை, பொதுமக்களை பாதிக்கும்.

அப்படி இல்லாமல் சாதாரண மக்களை பாதிக்காத வகையில், அல்லது மக்களுடைய அத்தியாவசியமான சிறு பொருள்களுடைய விலை பாதிக்காத முறையில், இத்தகைய வரிவிதிப்பு இருக்க வேண்டும் என்று சொல்லி என் உரையை முடிக்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே. இந்தச் சட்ட முன்வடிவைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லியதில் சில விளக்கங்களை மட்டும் நான் கொடுத்தால் போதும் என்று கருதுகிறேன். ஒரு பொருளை அனுப்புகிறபோது, அதை பாதுகாப்பாக அனுப்ப வேண்டும் என்பதற்காக, அதை பேக்கிங் மெட்டீரியல் என்று சொல்லப்படும் பொருளிலே வைத்து, அதனுள் பாக் செய்து அனுப்புகிறார்கள் அப்படி அனுப்புகிறபோது எதற்கு எந்த விலை போடுவது என்பதை நிர்ணயிக்க முடியாது.

எந்தப் பொருளுக்கு வேண்டுமானாலும் அதிகமான விலையை கொள்முதல் விலையிலிருந்து, நம் வியாபாரிகளால் போட முடியும். அதேபோல எந்தப் பொருளுக்கு வேண்டுமானாலும் குறைவாகவும் போடலாம். எப்படி என்று உதாரணமாகச் சொல்லவேண்டும் என்று சொன்னால், ஒரு பாட்டிலிலே அடைக்கப்பட்டிருக்கிற ஒரு மருந்தினுடைய விலை, உள்ளே இருக்கிற மருந்தினுடைய விலை 10 ரூபாய் என்று வைத்துக் கொள்ளுங்கள். அதை அப்படியே 10 ரூபாய் என்றுதான் போட வேண்டும் என்று நாம் அவர்களை கண்டிப்பாகச் சொல்ல முடியாது. அதேபோல பாட்டிலினுடைய விலை 1 ரூபாய் என்று வைத்துக் கொள்ளுங்கள். அவர்கள் பாட்டிலினுடைய விலையை 1 ரூபாய்க்கு பதிலாக 4 ரூபாயாக போட்டுவிட்டு, உள்ளே இருக்கிற மருந்தினுடைய விலையை பத்து ரூபாய்க்கு பாதிலாக 6 ரூபாய் என்று போட்டால், நாம் என்

என்று அவர்களைக் கேட்க முடியாது. ஏன் அப்படிச் செய்கிறார்கள் என்றால், உள்ளே இருக்கிற மருந்துப் பொருளுக்கு வரி அதிகமாக இருப்பதாலும், வெளியே அதை பாக்கிங் செய்கிற பொருளுக்கு போடுகிற வரி குறைவாக இருப்பதாலும், அதனுடைய விலையை அதிகமாக ஏற்றி, இதனுடைய விலையை குறைத்து, மொத்தமாக வியாபாரிகள் விற்கிறபோது, வாங்குகிறவர்களும் மொத்தமாகத்தான் வாங்கிவிடுவார்கள். வித்தியாசம் தெரியாது. இதனால் வரி ஏய்ப்பிற்கு ஒரு சாதகமாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னொன்றை தெளிவாக உதாரணமாக, புரியும்படியாகச் சொல்ல வேண்டும் என்றால், மது வகைகளை உதாரணத்திற்கு எடுத்துக் கொள்ளுங்கள் இந்த மது வகைகளில் பாக்டரிலிருந்து தயாரிக்கப்படுகிற மது வகைகளை எடுத்துக் கொண்டால், அது பாட்டிலில் அடைக்கப்பட்டதாக வைத்துக் கொண்டால், உள்ளே இருக்கிற மது வகைகளின் விலை ஒரு லிட்டர் 100 ரூபாய்க்கு வாங்குகிறார்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள், அது அடைக்கப்படுகிற பாட்டிலினுடைய விலை 2 ரூபாய் என்று வைத்துக் கொள்ளுங்கள். அப்படியே அதை 100 ரூபாய் என்று போட்டுவிட்டு, பாட்டிலினுடைய விலை 2 ரூபாய் என்று போட்டிருந்தால் அந்த 2 ரூபாய்க்கு உரிய வரியையும், உள்ளே இருக்கிற மதுவிற்கான 100 ரூபாய்க்கு உரிய வரியையும் கட்டினால் அரசுக்கு எந்தவிதமான ஏமாற்றமும் வராது.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

ஆனால் அவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதை உதாரணத்திற்குச் சொல்லவேண்டும் என்றால்,—அந்த மதுவினுடைய விலை 100 ரூபாய், பாட்டிலினுடைய விலை 2 ரூபாய் ஆகவே 102 ரூபாய்க்குத்தான் விற்றாக வேண்டும் —அவர்கள் மதுவினுடைய விலையை 50 ரூபாய் என்று போட்டுவிட்டு, பாட்டிலினுடைய விலையை 50 ரூபாய் என்று போடுகிறார்கள் என்று வைத்துக் கொண்டால், அதை ஏன் என்று யாரும் கேட்க முடியாது. அதுதான் இன்றைக்கு இருக்கிற நிலைமை. அப்படிச் செய்கிறபோது, பாட்டிலுக்கு நாம் இப்போது போடுகிற வரி விகிதம் 10 சதவீதம். மதுவிற்கு போடுகிற வரி 50 சதவீதம் போடுகிறோம். அப்போது 100 ரூபாய்க்கு வாங்கிய மதுவினுடைய விலையை 50 ரூபாய் என்று போட்டிருப்பதாலே, 50 சதவீதம் வரி மட்டுமே போடப்படும்போது, நமக்கு எவ்வளவு நஷ்டம் வருகிறது, என்பதையும் நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.





அதைப்போலவே இங்கே பேசுகிறபோது ஒன்றைச் சொன்னார்கள். மின்சார கருவிகளைப் பற்றி. மின்சார கருவிகளை அனுப்புகிறபோது, அந்தக் கருவிகளை அனுப்புகிறவர்கள் அட்டைப்பெட்டியிலே வைத்து அனுப்புகிறார்கள். அல்லது கல்லிப்பெட்டியிலே வைத்து அனுப்புகிறார்கள். அதற்கு விலை போடுவதில்லை, விலையே போடாதபோது வரி இருக்காது. மின்சார விசிறியை கல்லிப்பெட்டியில் வைத்து அனுப்புகிறார்கள், கல்லிப் பெட்டிக்கு ஒரு முனைவரி போடப்பட்டிருக்கும், ஆகவே வரி வராது, அப்படிச் செய்கிறபோது பெரிய வியாபாரிகள், அப்படிச் செய்கிறபோது வருகிற சங்கடங்களைப் போக்குவதற்காகத்தான் இது கொண்டுவரப்பட்டு இருக்கிறது. உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமானால் மதுவகைகள் I.M.F.L. Indian made foreign liquor. ஒரு குறிப்பிட்ட குவாண்டிட்டி. பற்றி கணக்கு காண்பித்திருக்கிறார்கள், அதை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

ஐ.எம்.எப்.எல். விலை 1,74,812.45 ரூபாய். ஆனால் அதை அடைக்கிறார்களே அந்த பாட்டில்களின் விலை ரூபாய் 3,73,599 ரூபாய். பாட்டிலினுடைய விலைக்கு எவ்வளவு தெரியுமா வரி? 10 பைசா. ஐ.எம்.எப்.எல்.க்கு எவ்வளவு தெரியுமா வரி? 30 சதவீதம். அதனுடைய விலையைக் குறைத்து இதனுடைய விலையை ஏற்றுகிறபோது எவ்வளவு வரி ஏமாற்றப்படுகிறது என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். பாரின் லிக்வராக இருந்தால் 50 சதவிதம் வரி. பாரின் லிக்கரை அடைக்கிற பாட்டிலுக்கு வரி 10 சதவீதம். மேலே வைக்கிற கார்க்கிற்கு 5 சதவீதம். எதைவேண்டுமானாலும் போடுவது, மொத்தமாக அந்த பாட்டிலை 100 ரூபாய்க்கு விற்கவேண்டும், அப்போதுதான் லாபம் வரும். 100 ரூபாய்க்கு அவர்கள் விற்கிறபோது வரி குறைகிறது, எப்படியென்றால் 5 பைசா கார்க்கை 1 ரூபாய் என்று அவர்கள் போட்டால் ஏன் போட்டார்கள் என்று நாம் கேட்கமுடியாது. 5 பைசா கார்க்கிற்கு 5 சதவீதம் வரி. ஆனால் அதன் உள்ளே இருக்கிறதே கன்டென்ட்ஸ் அதனுடைய விலையைக் குறைத்து விடுகிறார்கள். அப்படி ஏமாற்றுவதை தடுப்பதற்கு நல்ல நோக்கத்தோடு இது கொண்டுவரப்பட்டிருக்கிறது. சாதாரணமாக இருக்கிற மருந்துகள், மின்சார கருவிகள் எண்ணெய் இவையெல்லாம் இருக்கின்றன. எண்ணெய்க்கு வரி உண்டு. எண்ணெய்யை டின்னில் அடைக்கிறார்கள். முதலிலே டின்னிற்கு வரி போடப்பட்டிருந்தால் வரி வராது. டின்னினுடைய விலையை ஏற்றி எண்ணெய்யின் விலையைக் குறைத்து எண்ணெய்க்கு அதிகமாக வரி இருப்பதால் இரண்டையும் சேர்த்து அதனுடைய

விலையில் 50 சதவிகிதத்தை—கொள்முதல் விலை என்ன இருந்ததோ அதைக் குறைத்து—போட்டு டின்னினுடைய விலையை அதிகப்படுத்தினால் அவர் கருத்து அதன் மூலமாக வ்ரார். இப்படி ஏமாற்றுவதைத் தடுக்க வேண்டும். பதுக்கலைப்பற்றிச் சொல்கிறபோது நான் விளக்கமாகச் சொல்கிறபோது உறுப்பினர்கள் புரிந்துகொள்ளமுடியும் என்பதையெல்லாம் எண்ணித்தான் இதைச் சொல்லோன். மற்றபடி இதிலே எந்தவிதமான மாறுபாடான கருத்துக்கள் யாருக்கும் இல்லையென்று கருதுகிறேன். திரு. இளையபெருமாள் பேசியதுபற்றி கவனிக்கிறேன். 50 ஆயிரத்திற்கு மேல் 1 லட்சம் வரையில் வியாபாரம் செய்தால் வரியில்லை. அதிலே சங்கடங்கள் இருக்கிறதா என்று கேட்கிறேன், இருந்தால் அதையும் கவனிக்கிறேன் என்று தெரிவித்து இதை நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : பேரவை முன்னுள்ள கேள்வி—தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 23/1984) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவு 2—பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு—1 முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்** : துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (இரண்டாவது திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 23/1984) நிறைவேற்றப்பெற வேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன்வடிவு நிறைவேற்றப் பெற்றது.





(2) கேளிக்கை வரி உள்ளாட்சி அதிகார மன்றங்கள் நிதி (திருத்த) சட்டமுன்வடிவு 1984.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்.** துறைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்—

தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு கேளிக்கை வரி உள்ளாட்சி அதிகார மன்றங்கள் நிதி (திருத்த) சட்டமுன்வடிவு* (சட்டமன்றப்பேரவை சட்டமுன்வடிவு எண் 28/1984) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்.

(பிற்பகல் 12-20)

**திரு. பாபு ஜனார்த்தனம்.** மாண்புமிகு பேரவையின் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு கேளிக்கை வரி உள்ளாட்சி அதிகார மன்றங்கள் நிதி திருத்த சட்டமுன்வடிவின் மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சில கருத்துக்களை கூற விரும்புகிறேன். இந்தத் திருத்தச் சட்டம் புதிதாக விடியோ கேசட் பற்றிய ஒரு சட்டமாகும். விடியோ கேசட் தமிழ்நாட்டில் வந்த பிறகு டி.வி. வைத்து இருப்பவர்கள் எல்லாம் இன்றைய தினம் அதை ஒரு வியாபாரமாக கருதி பல மாவட்டங்களில் அந்த காப்பி பார் என்ற பெயரில் விடியோ கேசட்டுகளை தருவித்து காப்பி பாரில் ஒரு காப்பி 4 ரூபாய் என்ற அளவில் விற்பனை செய்வதாகக் கூறி அங்கே காப்பியும் கொடுத்துவிட்டு விடியோ கேசட் மூலம் டி.வி. யில் படம் காட்டுகின்ற தீங்கு இப்போது நாடு எங்கும் நடைப்பெற்றுக்கொண்டிருக்கிறது. இதைக் கட்டுப்படுத்த வேண்டும் என்ற எண்ணத்தில் இந்தச் சட்ட முன்வடிவை வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் நல்ல எண்ணத்தோடு கொண்டு வந்து இருக்கலாம். ஆனால் இதை ஆராய்கின்றபோது ஒரு பெரிய தீங்கை அரசு அனுமதிக்கப் போகிறது என்ற ஐயம் நமக்கு எல்லாம் ஏற்படுகிறது. இந்தச் சட்டத்தினுடைய நுணுக்கங்களில் நாம் நுழைந்து பார்த்தோம். ஆனால் கொடுத்து இருக்கின்ற 5 ஜி சட்ட புரவிஷனில், அந்த சட்டத்தில் யார் உரிமம் பெறாத படங்களை விடியோ கேசட்டுகளில் திரையிடுகிறார்களோ அவர்களுக்கு 50 சதவிகிதத்திற்குமேல் 150 சதவிகிதம் வரையில் அபராதத் தீர்வை விதிக்கலாம் என்று சட்டத் திருத்தம் செய்து இருக்கிறது. இதில் அரசுக்கு வருமானம் வரலாம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வெளிநாடுகளுக்கு எல்லாம் சுற்றுப் பயணம் செய்து இருக்கிறார்கள். நான் கூட பல வெளிநாடுகளுக்கு சுற்றுப் பயணம் செய்து இருக்கிறேன். இன்றையதினம் விடியோ கேசட்டுகளில் இருக்

---

* 1984 ஆண்டு மார்ச் 11-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

(திரு. பாபு ஜனார்த்தனன்) [1984 ஏப்ரல் 27

கின்ற பெரிய தீங்கு என்ன என்று சொன்னால் செக்ஸ் ஷாப் என்று வெளிநாடு களில் வைத்துக்கொண்டு இருக்கிறார்கள். அதிலே எல்லாம் பணத்தைக் கட்டி விட்டால் எவ்வளவு ஆபாசமான படங்களையும் பார்த்து விடலாம். இன்றைய தினம் அரசு இப்படிப்பட்ட ஒரு சட்டத்தை கொண்டு வந்து உரிமம் பெறாத திரைப்படங்களை திரையிட்டால் அபராதமாக செலுத்தவேண்டும் என்ற அளவில் விடியோ கெசட்டுகளுக்கு நீங்கள் அனுமதி கொடுத்துவிட்டால் நாட்டில் பயங்கரமாக ஒழுக்கக் கேடுகளான விஷயங்களை நாம் அனு மதித்தது போல் ஆகும் என்பதை வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் இதை நல்ல எண்ணத்தோடு இதை கட்டுப்படுத்தவேண்டும் என்ற எண்ணத்தில் சட்ட முன்வடிவை கொண்டு வந்தாலும் ஒரு பெரிய தீங்குக்கு நாம் அனுமதி கோலும் என்பதை இங்கே மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் சிந்திக்கவேண்டும். இன்றையதினம் நாடு எங்கும் இப்படிப்பட்ட படக் காட்சி கள் சினிமாவுக்கு எதிராக விடியோ கெசட்டுகளைக் கொண்டு டி.வி. மூலம் படம் காட்டுகின்ற ஒரு நடைமுறை இருந்தாலும் ஒருசில இடங்களில் தான் திரைப்படங்கள் காட்டப்படுகின்றன. திரைப்படங்கள் பற்றிய நிறுவனங்கள் எடுத்துக்காட்டுவதை அதை சுருக்கி டி.வி.யில் காட்டுகிறார்கள். ஆனால் பெரும்பாலான இடங்களில் விடியோ கெசட்டுகள் மூலம் ஆபாசமான ஆண் பெண் சேர்க்கைப் பற்றிய படம் இன்னும் பல விதமான ஆபாசமான படங்களை நாட்டில் பணத்தைப் பெற்றுக்கொண்டு காட்டுகின்ற நிலைமை ஏற்படுகின்ற காரணத்தால் இதை இப்போது அரசு அனுமதிக்கிறதா? இந்த அளவுக்கு அப ராதம் என்று சொன்னால் இதிலே நடைமுறையில் பார்க்கின்ற போது வசதிப் படைத்தவர்கள், இன்னும் சொல்லப்போனால் ஆட்சியில் இருப்பவர்கள், ஆட்சி யினுடைய செல்வாக்கில் இருப்பவர்கள் எல்லாம் இதை ஒரு பிரான்ச் கடை களாக விடியோ கெசட்டுக் கடைகளை ஆங்காங்கே வைத்துக்கொண்டு அப ராதம் தானே செலுத்திவிடலாம் என்று நாட்டில் ஒரு சட்ட ரீதியான முறை யில், ஏதோ வருமானம் வருகின்றது என்ற அளவுக்கு நாமே ஒழுக்கக் கேடான விஷயங்களை அனுமதிக்கின்ற நிலையில் இன்றையதினம் ஏற்படுமோ என்ற ஐயம் நிச்சயமாக ஏற்படும். ஆகவே, வருவாய்த் துறை அமைச்சரவர்கள் இதிலே வருவாயை மட்டும் கணக்கில் கொள்ளக் கூடாது.

அதிகாரம் படைத்தவர்கள் இதைப் பயன்படுத்திக் கொள்வார்கள்; ஒழுக்கக் கேடான விஷயத்தை நாமே அனுமதிப்பது போல ஆகிவிடும். வரு வாய்த் துறை அமைச்சரவர்களின்மீது நான் பெருமதிப்பை வைத்திருக்கி றேன். அவர்கள் நல்லெண்ணத்தோடு, இல்லீகலாக, சட்டமில்லாத முறையில் திரையிடுபவர்களிடமிருந்து அபராதம் விதித்து வருமானத்தை உருவாக்கி விடலாம். சினிமாக் காட்சிகளுக்கு வரி செலுத்துகிறார்கள், இதில் வரியில்லா



1984 ஏப்ரல் 27] (திரு. பாபு ஜனார்த்தனன்)

மல் செய்கிறார்கள், எனவே இவர்களிடமிருந்தும் வரியை வாங்கிவிடலாம் என்ற நல்லெண்ணத்தில் சொல்லியிருக்கலாம். நம்முடைய அதிகாரிகளெல் லாம் எந்த அளவிற்கு நல்லமுறையில் இருக்கிறார்கள் என்பது நம்மைப் போன்ற பழகியவர்களுக்குத் தெரியும். எப்படி எப்படிக் கவனித்து, யார் யாரிடத்தில் நுழையலாம், யார் யார் வீட்டில் நுழையக்கூடாது என்பது அவர் களுக்குத் தெரியும்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

இந்த விடியோ கெசட்டுகளை அனுமதித்துவிட்டால், நிச்சயமாக நல்ல படங்களே நாட்டிலே ஓடாது; செக்ஸ் படங்கள்தான் ஓடி, ஒழுக்கக் கேடான விஷயங்கள் நடக்கும். ஆகவே, இதை நல்ல முறையில் பரிசீலித்து, இதை அனுமதிக்கப்பட வேண்டுமா என்பது குறித்து ஆராய்வதற்கு, இதை ஓரள விற்கு நிறுத்தி வைத்து, ஒரு கமிட்டி போட்டு ஆலோசனை செய்து கொண்டு வந்தால், நன்றாக இருக்கும் என்பதைக் கூறி விடை பெறுகிறேன்.

**திரு. என். பழனிவேல்:** மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு கேளிக்கை வரி உள்ளாட்சி அதிகார மன்றங்கள் நிதி (திருத்த) சட்ட முன்வடிவின் மீது மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகச் சில கருத்துக்களைச் சொல்லலாம் என்று எண்ணுகிறேன். இதிலே சொல்லியிருக்கிறார்கள், நிலையான, நானவு நிலையான திரையரங்குகளுக்கு 50 சதவிகிதம் வரி என்று.

இன்றைக்கும் திரைப்படங்கள் ஒருசில மக்களுக்குத் தேவையற்றதாக இருந்தாலும்கூட, பெரும்பாலான மக்களுக்குத் திரைப்படங்கள் மிகவும் தேவையான நிலையில் இருந்துகொண்டிருக்கிறது. பல இலட்சக்கணக்கான அல்லது பல்லாயிரக்கணக்கான ரூபாய் அளவிலே திரையரங்குகளைக் கட்டி அதிலே படங்களைக் காட்டிக்கொண்டிருக்கிற காலக்கட்டத்தில், விடியோ கேசட்டுகளின் மூலம் படம் போடுவது நல்ல முறைதான். சாதாரண கிராமப் புற ஏழை எளிய மக்கள் குறைந்த கட்டணத்தில் சினிமாப்படங்களைப் பார்ப்பதற்கு இதுவொரு வசதியான நிலையாக இருக்கிறது. ஆகவே இது சரி என்ற முறையிலேதான் இருக்கிறது.

(திரு. என். பழனிவேல்) [1984 ஏப்ரல் 27

ஆனால், இதற்கு வரி போட வேண்டுமா என்பதைப்பற்றித் தான் சிந்திக்க வேண்டும். ஏனென்றால், இன்றைக்குத் திரைப்படக் கொட்டகைகளில் பல வசதிகளைச் செய்வதாகச் சொல்லி, லைசன்ஸ் பெற்றவர்கள்கூட வசதிகளைச் செய்து கொடுப்பதில்லை. பெரிய திரையரங்குகளில் சொல்கிறேன். ஃபேன் போடுவதாகச் சொல்கிறார்கள், ஆனால் அவை ஓடுவதில்லை; ஏர் கண்டிஷன் தியேட்டர் என்று சொல்கிறார்கள்; ஆனால் அது வேலை செய்வதில்லை. ஆனால் அதற்குரிய கட்டணத்தை மட்டும் வசூலித்துவிடுகிறார்கள். ஆகவே, இதிலே, வீடியோ கேசட்டுகள் போடுவதிலே சுகாதார வசதிகள் எந்த அளவிற்குச் செய்து கொடுக்கப்பட முடியுமோ அந்த அளவிற்குச் செய்து கொடுப்பதற்கு நீங்கள் ஒரு பாதுகாப்பை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நகராட்சிகள், பேரூராட்சிகளுக்கு இதன்மீது வரி போடுவதற்குச் சட்டம் இருந்தாலும்கூட, இந்த வீடியோ கேசட்டுகள் காட்டினால் வரி போடக் கூடாது என்று இருக்கிறது. எனவே, இதன்மூலம் வருகின்ற சிறப்பு வருமானத்திலிருந்து முனிசிபாலிட்டிகளுக்கும், பேரூராட்சிகளுக்கும் பங்காகக் கொடுக்க உத்தரவாதம் இருக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

ப்ளாக் மார்க்கெட்டில் டிக்கெட்டுகள் திரையரங்குகளில் விற்கப்படுகின்றன. 2 ரூபாய் டிக்கெட் 5 ரூபாய்க்கு விற்கப்படுவது உங்களுக்கு அநேகமாகத் தெரியும். இதிலேயும் அம்மாதிரி ஒரு பிளாக் மார்க்கெட் நிலைமை வந்துவிடக் கூடாது என்பதையும் நீங்கள் கண்காணிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதில் கறாராக சட்டத்தை அமலாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12-30)

இன்றைக்கு மாண்புமிகு மதிப்பிற்குரிய திரு. பாபு ஜனார்த்தனன் அவர்கள் பேசியது போல் இன்றைக்கு ஆபாசப் படங்கள் பல இடங்களில் காட்டப்படுகின்றன. அதற்கு ஒரு சட்டம் இருக்கிறது. அந்தச் சட்டம் சரியாக அமல்படுத்தப்படாததன் காரணத்தால் ப்ளூ ஃபிலிம் என்று சொல்கிறார்களே அந்த ஆபாசப் படங்களைக் கூடப் போடுவதாக அதைப் பார்த்துவிட்டு வந்த நண்பர்கள் என்னிடத்திலே சொன்னார்கள். எனவே இதை எல்லாம் மிகக் கவனமாகக் கண்காணித்து நல்ல படங்களை மக்களுக்குத் தேவையான கருத்துக்களைச் சொல்லக்கூடிய படங்களைக் காட்டுவதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் என்று நான் கேட்டுக் கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக்கொள்கிறேன்.



1984 ஏப்ரல் 27]

**திரு. தி. கா. நல்லப்பன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு கேளிக்கை வரி உள்ளாட்சி அதிகார மன்றங்கள் நிதி (திருத்த) சட்டத் திருத்தத்தின் மீது ஒருசில கருத்துக்களை மட்டுமே நான் சொல்ல ஆசைப்படுகிறேன்.

ஏற்கெனவே இந்த அவையிலே இந்த வீடியோ கேசட்டுக்கான ஒரு சட்டத்தைக் கொண்டுவந்து சட்டத்திருத்தம் செய்யப்பட்டிருக்கின்றது. இன்றையதினம், மக்களுக்கு இந்தப் படக்காட்சியைக் காட்டுகின்றபோது அதிலே 50 சதவீதத்தை வசூலிப்பதற்கான வகையிலே ஒரு சட்டத் திருத்தத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள். வசதி படைத்தவர்கள் வெளியே சென்று சினிமா பார்ப்பதை விட வீட்டிலேயே இருந்து சினிமா பார்த்துக் கொள்ளலாம் என்ற நோக்கத்தோடு தான் இந்த வீடியோ கேசட் என்பது பயன்படுத்தப்பட்டுவந்து படிப்படியாக பல்வேறு பொது இடங்களில் மற்றும் சிறு சிறு காப்பி பார்லர் போன்ற இடங்களிலும் எஞ்சிய இடங்களிலும் அந்தப் படங்களைப் போட்டுக்காட்டி டிக்கெட் எதுவும் இல்லாமல் 3 ரூபாய், 5 ரூபாய், 4 ரூபாய் என்று அந்தந்த ஊர்களுக்குத் தகுந்தமாதிரி வசூலித்துக்கொண்டிருக்கக்கூடிய சூழ்நிலை இருக்கின்றது. இந்தத் திருத்தத்தைப் பொறுத்தவரையில் 50 சதவீதம் என்று கொண்டு வந்திருப்பதே, சினிமா கொட்டகைகளின் வருமானத்தை இந்த வீடியோ கேசட் போட்டுக்காட்டுவது பாதிக்கும் என்ற காரணத்தால்தான் அந்த அடிப்படையில்தான் கொண்டு வந்திருக்கின்றார்கள் என்று நான் நினைக்கிறேன். அப்படி 50 சதவீதம் என்று திருத்தம் கொண்டுவந்தாலும் கூட நாளையதினம் இதற்கான அனுமதிகளைப் பெறக் கூடியவர்கள்—நான் நிச்சயமாகச் சொல்வேன்—நல்ல படங்களைப் போட்டுக் காட்டப்போவதில்லை; ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டது போல், நல்ல படங்களைக் காட்டப்போவதில்லை என்பதை நான் உறுதியாகச் சொல்கிறேன். நல்ல படங்களை மக்களுக்குக் காட்டவேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு அவர்கள் படத்தைக் காட்டப் போவதில்லை. 80, 90 சதவீதம் ப்ளூ ஃபிலிம் போட்டுக் காட்டக்கூடிய நிலைமையிலேதான் இந்த வீடியோ கேசட்ஸ் இருக்கும். ஆகவே இந்தத் திருத்தச் சட்டம் கொண்டு வந்திருப்பது போல், அந்தமாதிரி படங்களைக் காட்டுகின்றபோது ஏற்கெனவே இருக்கின்ற சட்டத்திருத்தங்களின் அடிப்படையில் அவர்களுடைய அனுமதிகளை ரத்து செய்யவேண்டும் என்று நான் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக் களைச் சொல்கின்றபோது இதிலே இருக்கின்ற சங்கடங்களைப் பற்றித்தான் சொன்னார்களே தவிர வரி போடுவது பற்றி ஒன்றும் சொல்லவில்லை. ஆனால் இதிலே எந்தவிதமான சங்கடமும் இல்லை என்பதை நான் தெரிவித்துக்கொள் கிறேன்.

மோசமான காட்சிகளைப் பொறுத்தவரையில் அனுமதி பெறாமல்தான் காட்ட முடியுமே தவிர அனுமதி பெற்றுக் காட்ட முடியாது. படம் எடுப் பவர்கள் அந்தப் படத்தைத் தணிக்கைக்கு அனுப்புகிறார்கள். தணிக்கையின் போது ஆபாசம் பற்றிய காட்சிகளை எல்லாம் வெட்டிவிடுவார்கள். அதற்குப் பிறகுதான் திரையிடுகிறார்கள். அப்படித் திரையிடுவதற்கு அனுமதி பெற்ற படங்களைத்தான் காட்ட முடியுமே தவிர, சர்டிபிகேட் அல்லது காப்பிரைட் அனுமதியைப் பெற்றுத்தான் காட்ட முடியுமே தவிர மற்ற வகைகளிலே காட்டப்படக்கூடாது. யாருக்கும் தெரியாமல் எங்கேயாவது வைத்து இந்த ஃபில்ம்களைக் காட்ட முடியாது. எனவே சட்டம் கொண்டுவந்திருக்கிறபடி அதாவது 7/1984-ன் கீழ் உரிமம் பெறவேண்டும். அப்படி லைசன்ஸ் பெறத் தவறினால் அவர்கள் மீது சட்டப்படி தண்டனையோ, அபராதமோ அல்லது இரண்டுமோ கொடுக்க முடியும். ஆக, சர்ட்டிபிகேட் பெற்று, பட உரிமை யாளரிடம் காப்பிரைட் அனுமதி பெற்ற பிறகுதான் இதைக் காட்ட முடியும். அதாவது திரைப்படங்களிலே எந்தெந்தப் படங்களைக் காட்டுவதற்கு என்னென்ன விதிகளை நாம் வைத்திருக்கிறோமோ அந்த விதிகளின்படி அனுமதியைப் பெற்று தான் இதைக் காட்ட முடியும் என்பதை நான் தெரிவித் துக்கொள்கிறேன். அப்படியும் தவறு செய்பவர்கள் இருக்கிறார்கள். அப்படி மேலே ஏதாவது செக்ஸ் அல்லது ஆபாசமான படம் காட்டினால் ஐ.பி.சி. பிரிவு 292-ன் கீழ் நடவடிக்கை எடுப்பதற்கும் கிரிமினல் நடவடிக்கை எடுப்பதற்கும் இன்றைக்கு வழிவகை இருக்கிறது. ஆனால், அங்கு காட்டப்படுகிற படம் லைசன்ஸ் பெற்று காட்டப்படுகிற படம். ஆகவே, அப்படிப்பட்ட படங் களுக்கு மட்டும்தான் இங்கே வரி போடப்படுகிறது என்பதை நான் தெரிவித் துக்கொள்கிறேன். மற்றவர்கள் எந்தவிதமான மாறுபட்ட கருத்துக்கள் சொல்லவில்லை என்பதனால் இந்தச் சட்டமுன்வடிவை நிறைவேற்ற வேண்டு மாய் கேட்டுக் கொள்கிறேன்.



**திரு. பாபு ஜனார்த்தனன் :** மாற்றுத் தலைவர் அவர்களே, திரைப்படம் காட்டுகிற நோக்கிலே, வசூலில் 50 சதவிகிதத்துக்கு ஒவ்வொரு நுழைவு அனுமதித் தொகைக்கும் வரி வசூலிக்கலாம் என்று இருக்கிறது. அப்படி யென்றால் எந்தப் படமும் காட்டலாம் என்றுதானே வரும். அதிலே தவறு கள் வர நேரிடுமே என்றுதான் சொல்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** எந்தப் படமும் காட்ட முடி யாது. முதலிலே லைசன்ஸ் பெற்ற படம்தான் காட்ட முடியும். திரை அரங்கு களுக்கு என்ன, என்ன விதிகள் இருக்கின்றனவோ, அத்தனை விதிகளும் இவைகளுக்கும் பொருந்தும். அந்த விதிகளை மீறினால் அதிலே எப்படி தண்டனை வருமோ, அந்தத் தண்டனை இதிலும் வரும்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (டாக்டர் கே. சமரசம்) :** பேரவை முன்னுள்ள கேள்வி :

"தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு கேளிக்கை வரி உள்ளாட்சி அதிகார மன்றங்கள் நிதி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 28/1984) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 5 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** மாற்றுத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு கேளிக்கை வரி உள்ளாட்சி அதிகார மன்றங்கள் நிதி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 28/1984) நிறைவேற்றப் பெறவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

[1984 ஏப்ரல் 27

**(ஊ) கேளிக்கை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு 1984**

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** மாற்றுத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு கேளிக்கை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு * (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 29/1984) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்."

**திரு. பாபு ஜனார்த்தனன்:** மாற்றுத் தலைவர் அவர்களே, செலக்ஷன் கிரேட் பஞ்சாத்துகளுக்கு வரிகள் மூலம் வருவாய் வர வேண்டுமென்பதற்காக செங்கல்பட்டு, வட ஆற்காடு, மதுரை, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களிலே சில ஊர்களைச் சேர்க்கின்ற ஒரு நிலைமை இச்சட்ட முன்வடிவில் இருக்கிறது. பொதுவாக, இன்றையதினம் திரைப்படங்கள் கிராமங்களிலே நசிந்து விடக்கூடிய அளவுக்கு ஆகி விட்டிருக்கிறது. காரணம் நகரங்களிலே ஓட்ட அனுமதி கொடுத்திருக்கிற காரணத்தால், பொதுவாக சிட்டியிலே, புற நகரங் களிலே நல்ல வருமானம் வருகிறது. முனிசிப்பாலிட்டியிலே திரைப்படங்கள் நடத்துகிறவர்களுக்கு நல்ல வருமானம் வருகிறது. ஆனால் கிராமங்களில் டூரிங் டாக்கிஸ் என்று சொல்லப்படும் நடமாடும் திரையரங்குகள் நடத்துகிறவர் களால் இவர்களோடு போட்டி போட முடியவில்லை. அதனால் பல சங்கடங் களுக்கு ஆளாகி மூடி விடுகிற காரணத்தால். எல்லோரையும் ஒரே கொள்கையை அனுசரிக்கும் வகையில் ஏற்படுத்தினால் நன்றாக இருக்கும். இப்பொழுது சில ஊர்களிலே, உதாரணமாக வட ஆற்காடு மாவட்டத்திலே வேலூரிலே, சத்துவாச்சாரியை செலக்ஷன் கிரேட் பஞ்சாயத்திலே சேர்த்திருக்கிறார்கள். நகரங்களிலே இருக்கின்றவர்களுக்கு வருமானம் அளிக்கின்ற நிலைமை ஏற்படும்போது, பக்கத்திலே கிராமங்களிலே இருப்பவர்களால் போட்டியைச் சமாளிக்கும் அளவு படங்களைத் திரையிட முடியவில்லை.

(பிற்பகல் 12-40)

பொதுவாக கிராமங்களில் இருப்பவர்கள் பெருவாரியான திரைப்படக் காட்சிகளைப் பார்த்து, அதன்காரணமாக ஆட்சிக்கு வந்தவர்கள் என்பதை நீங்கள் ஏற்றுக்கொண்டாலும், ஏற்றுக்கொள்ளாவிட்டாலும், இன்றையதினம் எந்தத் திரைப்படக் காட்சிகளினால் கிராமங்களிலே உள்ள மக்களுடைய செல்வாக்கைப் பெற்று ஆட்சிக்கு வந்தீர்களோ, அதை இழந்துவிடுகிற அளவிற்கு கூட நிலைமை இருக்கிறது. கிராமங்களில் டூரிங் தியேட்டர்கள்

* 1984-ம் ஆண்டு மார்ச் 31-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.





வசதியில்லாமல், அவதிப்படுகின்றன. ஆகவே சிட்டியிலே, மாநகராட்சியிலே, முனிசிபாலிட்டிகளிலே, பேரூராட்சிகளிலே இருக்கிறவர்களுடைய நன்மையை மட்டும் கருதி இப்படிப்பட்ட காரியங்களை நீங்கள் செய்தால் நல்லதல்ல. அதன் காரணமாக கிராமங்களிலே அந்தத் தொழில் நசிந்துவிடும் என்று சம்பந்தப்பட்டவர்கள் அந்தக் கருத்தைச் சொல்லி இருக்கிறார்கள். அவர் களுக்குச் சலுகை கிடைக்க செய்யவேண்டும். சிறிய மூலதனத்தைப் போட்டு கிராமங்களில் தியேட்டர்களை நடத்துகிறார்கள். அவர்கள் பயன்பெறுகிற அளவில் ஏதாவது வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டு முடித்துக்கொள் கிறேன்.

**திரு. என். பழனிவேல்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, 1939 ஆம் ஆண்டு கேளிக்கை வரிச் சட்டத்தை மேலும் திருத்துவதற்கான இந்தச் சட்ட முன்வடிவிலே, பேரூராட்சிகளின் தரத்தை மேலும் சில 10, 16 இடங்களில் உயர்த்தி, அவைகளில் வரிகளைப் போடுவதற்கு அதிகாரத்தை கொடுக்கக்கூடிய முறையில் சொல்லப்பட்டிருக்கிறது.

இன்றைக்கு பேரூராட்சிகளின் நிலைமையைப் பார்த்தால் அவை மிக மிக பரிதாபகரமான நிலையில் இருக்கின்றன. அவை நகரத்திலும் சேராமல், சாதாரண கிராமப் பஞ்சாயத்திலும் சேராமல், இரண்டும் கெட்டான் நிலையில் இருந்துக் கொண்டிருக்கின்றன. அவைகளுக்கு ஏற்படுகிற செலவு களை ஈடுகட்டுகிற அளவிற்கு கூட வருமானம் கிடையாது. அந்தப் பகுதி களில் வாழுகிற மக்கள்—பெயர் தான் பெரிய பெயராக இருக்கிறதே தவிர— எந்த வசதியும் இல்லாமல் இருக்கிறார்கள். இந்தச் சூழ்நிலையில் இந்த நிலையை உயர்த்தி இருப்பது என்பது பெயர் அளவிற்கு வரவேற்கக் கூடிய நிலையில் இருந்தாலும், அந்தப் பகுதி மக்களுக்கு பெயருக்கேற்ற வகையில் எந்த வசதியும் இல்லை என்பதை கணக்கிலே எடுத்துக்கொள்ள வேண்டும். இந்த நிலையில் இன்றைக்கு வரிகள் போடுவது என்பது அவ்வளவு பொருத்த மாக இருக்காது. அதிகாரம் வேண்டுமானால் கொடுக்கலாம். ஆனால் வரி களைக் கொடுக்கக்கூடிய அளவிற்கு மக்களுக்கு எந்தவிதமான வசதியும் கிடையாது. ஆகவே அரசாங்கம் நேரிடையாக அவர்களுக்கு பல உதவி களைச் செய்ய வேண்டும். குடிநீர் வசதியானாலும் சரி, ரோடுகள் வசதி யானாலும் சரி அல்லது சாக்கடை வசதியானாலும் சரி அங்கே இருப்பவர் களுக்கு எந்தவிதமான வசதிகளும் இல்லாமல் இருக்கிறார்கள் என்பதால் அரசாங்கம் அவர்களுக்கு நேரிடையாக இந்த வசதிகளைச் செய்ய வேண்டும்.

(திரு. என். பழனிவேல்) [1984 ஏப்ரல் 27

இந்தப் பேரூராட்சிகளின் நிர்வாக அதிகாரிகள் இன்றைக்கு மாவட்ட தலை நகரங்களில் இருந்துகொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு பேரூராட்சிக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்புகள் இல்லாத காரணத்தால் மிக மோசமான நிலையில் இருந்து கொண்டிருக்கின்றன. அங்கே இருக்கிற அதிகாரிகளும் வருவாய் இல்லாத காரணத்தால், 'ஏன் செத்தேன், ஏன் அழுதேன்' என்ற அளவில் இருக்கிறார்கள். ஆகவே இந்த நிலைமையில் பார்க்கிறபோது அரசு அந்த பேரூராட்சிகளுக்கு வேண்டிய உதவிகளைச் செய்து, அதற்குப் பிறகு கிரேடை உயர்த்தி இருந்தால் அது பொருத்தமாக இருந்திருக்கும். நாங்கள் சொல்லக் கூடிய விவரங்களை கணக்கிலே எடுத்துக்கொண்டு, அந்தப் பேரூராட்சிகளுக்கு வேண்டிய உதவிகளைச் செய்து, தரம் உயர்த்தியதை நியாயப்படுத்துகிற அளவிலே அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு முடித்துக்கொள்கிறேன்.

**திரு. தி. கா. நல்லப்பன் :** மாண்புமிகு மாற்றுத்தலைவர் அவர்களே, கேளிக்கை வரி 29/84 சட்ட திருத்தத்தின் மீது ஒன்றிரண்டு கருத்துக்களை மட்டும் சொல்ல ஆசைப்படுகிறேன்.

வட ஆற்காடு, செங்கல்பட்டு, மதுரை, திருநெல்வேலி ஆகிய நான்கு மாவட்டங்களில் இருக்கிற சில ஊர்களை 'ஏ' கிரேடு என்ற அளவிற்கு உயர்த்தி, அந்தப் பேரூராட்சிகளுக்கு முன்னுரிமை கொடுத்து, அங்கே கேளிக்கை வரியை அதிகப்படுத்துவதற்காக இந்தத் திருத்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறேன். ஏற்கெனவே பல்வேறு பேரூராட்சிகளில் அங்கே செய்யக் கூடிய வேலைகளுக்கு பணம் இல்லாத நிலை இருக்கிறது. சிப்பந்திகளுக்கு மாதா மாதம் முழுமையாக சம்பளம் கொடுக்க முடியாத நிலை இருக்கிறது. ஆகவே பேரூராட்சிகள் இந்த நிலைமையில் இருக்கிறபோது இந்தச் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வரவேண்டுமா என்பதை பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** தலைவர் அவர்களே, புதிதாக சட்டத்திலே திருத்தம் எதுவும் இல்லை என்பதை நாம் முதலில் தெரிவித்துக் கொள்கிறேன். இப்போது, உள்ளாட்சித் துறை மூலமாக, அந்தந்த ஊரின் வருமானத்திற்குத் தகுந்தபடி அந்தந்த ஊரின் தகுதிகளை மாற்றியமைக்கிறார்கள். மாநகராட்சி என்று சொல்கிறார்கள், நகராட்சி என்று சொல்கிறார்கள், அதிலேயே முதல் நிலை நகராட்சி, இரண்டாம் நிலை நகராட்சி, மூன்றாம் நிலை நகராட்சி, தேர்வு நிலை நகராட்சி, ஸ்பெஷல் கிரேடு நகராட்சி என்றெல்லாம் சொல்கிறார்கள். அதைப்போலவே, பேரூராட்சிகளைப் பொறுத்தவரையிலும் சில ஊர்களைப் பேரூராட்சி என்றும், சில ஊர்களை செலக்ஷன் கிரேட்



1984 ஏப்ரல் 27]

பேரூராட்சி என்றும் அறிவிக்கிறார்கள். இப்படிச் செய்கிறபோது, இந்த ஊரின் தகுதிக்குத் தகுந்தபடி வசூலிக்கப்படுகிறது. ஆகவே, அந்தந்த ஊரின் கேளிக்கை வரிகள் எப்படி வசூலிக்கப்படுகின்றன என்று சொன்னால் அந்தந்த தகுதிகள் மாற்றம் செய்கிறபோது அந்தந்த ஊரின் தகுதிக்குத் தகுந்தபடி நாமும் கேளிக்கை வரிகளை வசூலிக்க வேண்டியிருக்கிறது. அந்த வகையில் தான் நாம் இந்தச் சட்ட திருத்தத்தைக்கொண்டு வந்து இருக்கிறோம்.

இந்தச் சட்டத்தின் அட்டவணையில் உள்ள ஊர்கள் முதலில் பேரூராட்சிகளாக இருந்தன. பேரூராட்சிகளுக்கு என்ன கேளிக்கை வரி விதிதமோ அதை அங்கே உள்ள கொட்டகைகள் செலுத்தி வந்தன. தற்போது உள்ளாட்சித் துறை மூலமாக அது செலக்ஷன் கிரேடு/பேரூராட்சி என்று அறிவிக்கப்பட்டு இருப்பதால், அந்த நிலைக்குத் தகுந்தபடி வரி வசூல் செய்வதற்காக நாம் இங்கே சட்டத்தில் திருத்தத்தைக்கொண்டு வந்து இருக்கிறோமே தவிர வேறு ஒன்றும் இல்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

நகர்ப்புறத்திலே இருக்கிறவர்களுக்கே எல்லாவிதமான வசதிகளையும் செய்து கொடுக்கிறோம் என்று திரு. பாபு சனார்த்தனன் பேசுகிறபோது சொன்னார்கள். அப்படி அல்ல. உங்களுக்குச் சொல்லவேண்டுமானால், நகர்ப்புறத்தில் போடுகின்ற வரியை விட கிராமப்புறத்தில் இருப்பவர்களுக்கு போடும் வரி மிகக்குறைவு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். தேர்வு நிலை நகராட்சி என்று வைத்துக்கொண்டால், அவர்களுக்கு எவ்வளவு வரி போடுகிறோம் என்றால் அவர்கள் எத்தனைப் படங்கள் போட்டாலும், 30 படங்களுக்கு வரி கட்டவேண்டும். அங்கே எவ்வளவு இருக்கைகள் இருக்கிறதோ அந்த இருக்கைகளில் கிராஸ் கலெக்ஷன் பார்த்து 31 சதவிகிதம் வாங்குகிறோம். அதற்குப் பிறகு நகராட்சி என்று வருகிறபோது, முதல்நிலை இரண்டாம் நிலை, மூன்றாம் நிலை, அதற்குப் பிறகு பேரூராட்சி என்று வருகிறபோது, தேர்வுநிலை பேரூராட்சி வந்து, அதற்குப் பிறகு பஞ்சாயத்துக்கள் வருகின்றன. இப்படி படிப்படியாக நாம் நிலைகளை வைத்து இருக்கிறோம். அந்த அடிப்படையில் நாம் வரியை வசூலிக்கிறோம். பஞ்சாயத்து என்று வருகிறபோது, பர்மனென்ட் தியேட்டராக இருந்தால் அதிலே எவ்வளவு சீட் இருக்கிறதோ அதிலே 10 சதவீதம் கிராஸ் கலெக்ஷன் என்பதால் அதிலே 17 காட்சிகளுக்குத்தான் அவர்களுக்கு வரி போடுகிறோம். அந்த கொட்டகைகள் தற்காலிகமானவையாக இருந்தால் அல்லது டூரிங் கொட்டகையாக இருந்தால், இன்னும் குறைவாக வரி போடுகிறோம் என்பதைச் சொல்லிக் கொள்கிறேன்.

[1984 ஏப்ரல் 27

**திரு. பாபு ஜனார்த்தனன் :** தலைவர் அவர்களே, கிராமப் புறத்திற்கு சலுகைகள் கொடுத்து இருப்பதாகச் சொன்னார்கள். இன்றைக்கு கிராமத்திலே உள்ள நடமாடும் திரையரங்குகள் மூடப்பட்டுக்கொண்டு வருகின்றன. அதைப்பற்றி ஒரு சர்வே எடுத்துப் பார்த்தால், இது எந்த அளவிற்கு உண்மை என்பது தெரியும். பெரிய பெரிய டிஸ்டிரிபியூட்டர்கள் டூரிங் தியேட்டர்களுக்கு படங்களைக் கொடுப்பதில்லை. காரணம் அவர்கள் சொல்லும் ஹையர் ரேட்டை இவர்களால் கொடுக்கமுடியவில்லை. ஆகவே, இன்றைக்கு அவைகள் மூடும் நிலைமைக்கு வந்து இருக்கின்றன. ஆகவே, அவைகளை வாழவைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** கிராமத்தில் உள்ள தியேட்டர்களை எல்லாம் மூடுவதாகச் சொன்னார்கள். அப்படிப்பட்ட கணக்கு என்னிடத்தில் இல்லை. இருந்தாலும் இன்றைக்கு எனக்கு தெரிந்த வரையில் கிராமங்களிலே புதிதாக கொட்டகைகள் வந்து கொண்டு இருப்பதாகத்தான் கணக்கு இருக்கிறது. ஆகவே, கிராமங்களிலே அவர்கள் சினிமா பார்க்கவில்லையென்றால், இப்போது வருகிற படங்கள் எல்லாம் நல்ல படங்களாக இல்லை. ஆகவே, அவர்கள் நல்லவர்களாக இருக்கிறார்கள் என்று சொல்வது பொருத்தமாக இருக்கும் என்று சொல்லிக்கொள்கிறேன்.

(பிற்பகல் 12-50)

பேரறிஞர் அண்ணா அவர்கள் ஏன் இந்த படங்களை மக்கள் பார்க்கிறார்கள் என்று அழகாகச் சொல்லியிருக்கிறார்கள். இயலிசை நாடகங்கள் மக்களுக்கு அறிவு வளர, ஆர்வம் ஊட்ட, அகம் மகிழ, நல்ல எண்ணத்தை வளர்க்க பயன் பட வேண்டும் என்று சொன்னார்கள். அப்படிப்பட்டப் படங்கள் இப்போது வரவில்லை என்பதால் கிராம மக்கள் பார்க்கவில்லையோ என்னவோ எனக்குத் தெரியாது. அது மட்டுமல்ல, பேரறிஞர் அண்ணா அவர்கள் இன்னொன்றையும் சொல்லியிருக்கிறார்கள். அறிவு வளர, ஆர்வம் பிறக்க, மகிழ்வு தோன்ற மக்களை நன்னெறியில் பழக்க, நல்ல பண்புகள் உள்ளத்திலே குடிபுக—இப்படிப்பட்ட நல்ல காரியங்களைத்தான் நாடகம், திரைப்படங்கள் செய்ய வேண்டும் என்று சொன்னார்கள். இப்போது அப்படிப்பட்ட படங்கள்வரவில்லை என்பதால் கிராம மக்கள் பார்க்கவில்லையா என்பது எனக்குத் தெரியாது. ஆனால் என்னிடம் கொடுக்கப்பட்டிருக்கிற கணக்கு எல்லா இடங்களிலும் படம் ஓடுகிறது, மக்கள் ஏராளமாகப் பார்க்கிறார்கள் என்பதுதான்.



1984 ஏப்ரல் 27] (திரு. எஸ். டி. சோமசுந்தரம்)

கிராமங்களுக்கு, ஊராட்சி ஒன்றியங்களுக்கு பணம் இல்லை என்று சொன்னார்கள். வசூல் பண்ணுகிற பணத்தில் அவர்களுக்கும் பங்கு இருக்கிறது.

**திரு. கோவைத்தம்பி :** மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர், இப்போது நல்ல படங்கள் வராத காரணத்தால் மக்கள் பார்க்க கொட்டகைகளுக்கு வரவில்லை என்று சொன்னார்கள். எனவே, இதற்கு முன்பு வந்த நல்ல படங்கள் மக்களுக்குப் போய்ச் சேரும் வகையில் அரசே அந்தப் படங்களை விலைக்கு வாங்கி, அந்தப் படங்கள் யாரிடம் இருந்தாலும் வாங்கி, கிராம மக்களுக்கு மலிவு விலையில் விநியோகம் செய்ய ஏற்பாடு செய்வார்களா? அந்த பழைய படங்களில்தான் நாகரிகம், பண்பாடு, கலாச்சாரம், முடியுடை மூவேந்தர் வரலாறு ஆகியவற்றை விளக்கும் காட்சிகள் இருக்கின்றன. அவை மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் நடித்தப் படங்களில் இருக்கின்றன. அந்தப் படங்களை வாங்கி, மலிவு விலையில் கிராம சினிமா கொட்டகைகளுக்கு விநியோகம் செய்து அந்தக் கொட்டகைகளையும் காப்பாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** மாற்றுத் தலைவரவர்களே, நான் நல்ல படங்கள் வரவில்லை என்று அறுதியிட்டுச் சொல்லவில்லை. மாண்புமிகு உறுப்பினர் பாபு ஜனார்த்தனன் அவர்கள் சொல்லும்போது கிராமங்களில் படம் காட்டுவது குறைந்து வருகிறது, வருமானம் இல்லை, கொட்டகைகளை மூடிக்கொண்டு வருகிறார்கள் என்று சொன்னார்கள். அவர்களுக்குப் பதில் சொல்லும்போது நான் கொஞ்சம் கற்பனையோடு, கிராமங்களில் படங்கள் நிறைய ஓடிக்கொண்டிருக்கிறபோது ஓடவில்லை என்று சொல்லுகிறார்களே. அதனால் பேரறிஞர் அண்ணா சொன்ன மாதிரி நல்ல படங்களாக இருக்காதோ என்று சொன்னேன். அண்ணா வழியில் நடக்கிற கிராம மக்கள் அண்ணா சொன்ன மாதிரியான படங்கள் இல்லாத காரணத்தால் பார்க்கவில்லையோ என்று கற்பனையாக எண்ணிப்பார்த்துச் சொன்னேனே தவிர, நல்ல படம் ஒன்றும் வரவில்லை என்று சொல்லவில்லை.

**திரு. கோவைத்தம்பி :** மாற்றுத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதில் எந்த தவறும் இல்லை. சமுதாய முன்னேற்றத்திற்கான படங்களை எடுப்பதில் இன்றைக்கு தமிழக திரைப்படத் துறை பின்தங்கியிருக்கிறது. உண்மையிலேயே கிராமப்புறங்களில் இப்போது வருகிற படங்களில் 95 சதவீதம் மக்கள் பார்க்க முடியாதவையாகத்தான் இருக்கின்றன. ஆகவேதான் இன்றைய முதலமைச்சர் முன்னால் நடித்த படங்களை, இன்றைய பிரதான அரசியல்வாதிகள் பொறுப்புக்கு வருவதற்கு முன்னால் எழுதிய

கதை, வசனங்களை மக்கள் உள்ளத்திலே பதிய வைக்க, மக்கள் உள்ளத்திலே மறுமலர்ச்சியை ஏற்படுத்த, அந்தப் பழைய படங்களை கிராமப்புறங்களில் காட்ட ஏற்பாடு செய்வார்களா என்று கேட்டேன். சமுதாய மறுமலர்ச்சியை ஏற்படுத்தும் படங்கள், திராவிட உயர்வைத் தூண்டும் படங்கள் நூற்றுக்கு இரண்டு கூட இப்போது வருவதில்லை. எனவே அந்த பழைய படங்களை மலிவு விலையில் வாங்கி, கிராமப்புறங்களில் விநியோகிக்க ஏற்பாடு செய்வார் களா ?

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** மாற்றுத் தலைவரவர்களே, பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னமாதிரி சமுதாயத்திலே அறிவு வளர, ஆர்வம் பிறக்க, மக்களை நல்வழிப்படுத்த, பண்பாடு வளர இப்படிப்பட்ட படங்கள் எடுக்க வேண்டும். இப்படிப்பட்ட படங்களை இந்த அரசு தேர்ந் தெடுத்து, அவற்றை கிராமப்புற மக்களுக்குக் காட்டலாம் என்பது நல்ல யோசனைதான். அதை தேர்ந்தெடுக்கும்போது எப்படி தேர்ந்தெடுப்பது என்று இந்த அரசு யோசிக்கும். அதைச் செய்யும் என்று நான் அறுதியிட்டு சொல்ல முடியாது.

மற்றபடி, கேளிக்கை வரி மூலம் வருகின்ற பணத்தை பூராவையும் அரசாங்கமே எடுத்துக்கொள்கிறது என்று சொன்னார்கள். அப்படியில்லை. ஊராட்சிகளுக்கும் பங்கு இருக்கிறது. நகராட்சியாக இருந்தால் இந்த வருமானத்தில் 60 சதவீதம் நகராட்சிக்குப்போகிறது, 40 சதவிகிதம் அரசுக்கு வருகிறது. பேரூராட்சிகளாக இருந்தால் அரசுக்கு 40 சதவீதம் வருகிறது. பஞ்சாயத்து ஒன்றியங்கள், பஞ்சாயத்துக்கள் என்றால் 30 சதவீதம் அரசுக்கு வருகிறது. இப்படி பல்வேறு வகைகளில் ஊராட்சிகளில் வருமானத்தை உயர்த்த அவர்களுக்கும் இதில் பங்கு தரப்படுகிறது. ஆகவே, இந்த சட்ட முன்வடிவை நிறைவேற்றித்தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்.** மாற்றுத் தலைவரவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய இந்த கேளிக்கை வரி சட்டத்தில் கருத்துச் சொல்லும்போது கிராமப்புற கொட்டகைகளில் வருமானம் இல்லை; பார்க்க மக்கள் வரவில்லை என்று சொன்னார்கள். அது சரியல்ல. உள்ளே நுழைய முடியாத அளவுக்கு மக்கள் கூட்டம் இருக்கிறது. ஆனால் தேசிய உணர்வை வளர்க்கக்கூடிய படங்கள், குடிப்பதினால் வரும் கேடு என்ன என்பதை விளக்கும் படங்கள், இப்படிப்பட்டப் படங்கள் அதிகமாகக் காட்டப் பட வேண்டும். எந்தப் படம் வந்தாலும் இப்போது கூட்டம் அதிகமாக இருக்கிறது. ஆகவே, இன்னும் எவ்வளவு வரி போட்டாலும் தரும் என்று சொல்லி, இன்னும் அதிகமாக வரி போட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வ நுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, என்னைக் கொஞ்சம் பின்னாலே மாண்புமிகு உறுப்பினர்கள் அழைத்துச்சென்று கொண்டிருக்கிறார்கள். அவர்களால் என்னைப் பின்னால் அழைத்துச்செல்ல முடியாது. முன்னால் தான் நான் போவேன். பின்னால் சொன்ன கருத்திற்கு என்னை அழைத்துக் கொண்டு வந்திருக்கிறார்கள். நான் இந்த அவையிலே தெரிவித்திருக்கிறேன். அப்போது பேரறிஞர் அண்ணா அவர்கள் சொன்னதைப் படித்துக் காண்பித் தேன். அப்படிப்பட்ட நல்ல கருத்துக்களை பரப்பவேண்டுமென்றால், இன்றைக்கு இந்தியத் துணைக் கண்டத்தைப் பொறுத்தவரையிலும் இது ஒரு நாடு அல்ல என்பது எல்லோருக்கும் தெரியும்—இது ஒரு மல்டி நேஷன் என்று எல்லோரும் சொல்லியிருக்கிறார்கள்.

இந்தியத் துணைக் கண்டத்திலே பல மொழி பேசுபவர்கள் இருக்கிறார்கள்; பலவிதமான நாகரிகம் படைத்தவர்கள் இருக்கிறார்கள்; உடைகளை அணிவதிலும், பேசுவதிலும், நடையுடை பாவனைகளிலும் அந்தந்த மாநிலங் களுக்கு ஏற்றவாறு—அங்கே இருக்கிற தட்ப வெப்ப நிலைகளுக்கு ஏற்றவாறு அமைந்திருக்கிறது. அதற்காகத்தான் இந்த அவையில் சொன்னேன். எந்தப் படத்தை வேண்டுமானாலும், மத்தியப் பேரரசு தணிக்கை செய்து, தணிக்கை செய்கிற படத்தை எல்லா மாநிலங்களிலேயும், போடுகின்ற முறையிருக்கிறது. அந்த முறையை மாற்றி, அந்தந்த மாநிலங்களிலே இருக்கிற திரைப்படங்களை அங்கே உள்ளே தொலைக் காட்சி நிலையத்திலே படத்தைப் போடவேண்டுமென்றால், அந்தந்த மாநில அரசுகளே தணிக்கை செய்து, தணிக்கை செய்த பிறகுதான், அந்தப் படங்களை அந்தந்த மாநிலங்களிலுள்ள திரையரங்குகளில் போடலாம் என்று சட்டம் வந்தால், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்களே, ரொம்ப மோசமாக பார்ப்பதற்கு அருவருப்பான படங்கள் சில இடங்களில் போடப் படுகின்றன என்று சொன்னார்களே, அதைத் தடுக்கின்ற உரிமை அந்தந்த மாநிலங்களுக்கு இன்று இல்லை. அது இருக்கவேண்டுமென்று கேட்டு, இதை நிறைவேற்றித் தரவேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. கு. பா. பழனியப்பன்:** பாயின்ட் ஆப் ஆர்டர் சார், மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் திரு. இராகவானந்தம் அவர்கள் எதிர்க்கட்சி வரிசையில் உட்கார்ந்து, ஒரு குட்டி சட்டசபையை நடத்திக் கொண்டிருக்கிறார்களே, அதைத் தலைவர் அவர்கள் அனுமதித் தார்களா ?

[1984 ஏப்ரல் 27

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (டாக்டர் கே. சமரசம்):** அமைச்சர் அவ்வாறு நடத்தமுடியாது. உட்கார்ந்து உறுப்பினர்களோடு கலந்து பேசுவது என்பது ஒரு பண்பாடு, நாகரிகம். அது வரவேற்கக் கூடியது தான்.

பேரவை முன்னுள்ள கேள்வி :

"தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு கேளிக்கை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 29/1984) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்—

"தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு கேளிக்கை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 29/1984) நிறைவேற்றப்பெற வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

**(எ) பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்) சட்ட முன்வடிவு, 1984.**

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்—

"தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு * (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 30/1984) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்".

**திரு. கு. பா. பழனியப்பன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 30/1984) என்ற

* 1984-ம் ஆண்டு மார்ச் 31-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.





இந்தச் சட்ட முன்வடிவின் கீழ் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இதிலே இதுவரையிலும், ரூ. 50,000 வரையிலும் வரி விலக்கு வியாபாரிகளுக்கு என்று இருந்ததை ரூ. 1 இலட்சமாக உயர்த்த இருப்பதாகத் தெரிகிறது.

(பிற்பகல் 1-00)

இந்த விற்பனை வரி என்பதே அரசுக்கு வருகிற வருமானத்திலே ஒரு கணிசமான அளவிற்கு கிடைக்கக்கூடியதும், இன்னும் சொல்லப்போனால், இது காமதேனு போன்றது, கற்பகவிருட்சம் போன்றது, அட்சய பாத்திரம் போன்றது என்றெல்லாம் கூட வர்ணிக்கப்படுகிறது. ஆனால் நான் இதற்கு முன்னாலே பேசிய அந்த சட்டத் திருத்தத்தின் மீது சொன்ன கருத்துக் களை மீண்டும் வலியுறுத்திச் சொல்வது என்னவென்றால், என்ன வரி விதிப்பு மாற்றங்கள் ஏற்பட்டாலும், அது நேரடியாக வியாபாரிகளை மட்டும் பாதிப்பது மட்டுமல்ல, நேரடியாக பொதுமக்களையும் பாதிக்கின்ற அளவிற்கு அது மாற்றப்படுகிறது என்பதையும் அரசு உணரவேண்டும். ஏதோ நாம் வரி ஏய்ப்பைத் தடுக்கிறோம் அல்லது வரியை அவர்களுக்கு விலக்கு அளிப்பதன் மூலமாக ஒழுங்காக கணக்குப் பார்த்து அதன் மூலமாக அதிகமாக வரி வரும் என்றெல்லாம், அரசு கருதினாலும், அதனுடைய முழுப் பலன் அரசுக்குக் கிடைக்கிறதோ, இல்லையோ, அபத்தங்கள் நிச்சயமாக இருக்கின்றன. இதிலே சுருக்கமாகச் சொல்லப்போனால், பெட்ரோல் முதலிய அந்த எண்ணெய் ரகங்களுக்கு வரியை உயர்த்தியதன் மூலமாக அதனுடைய விளைவு பஸ் கட்டணம் நேரடியாக உயர்ந்துவிடுகிறது. அதைப் போலவே சரக்குக் கட்டணம் நேரடியாக உயர்ந்து விடுகிறது. பொதுவாக போக்குவரத்துக் கான செலவுகள் எல்லாம் அதிகரிக்கப்படுகின்றன. அது நேரடியாக பொது மக்களைப் பாதிப்பதாக இருக்கிறது. நான் குறிப்பாகச் சொல்ல விரும்புவது, ஒரு முனை வரி என்று சில பொருள்களுக்கும், பலமுனை வரி என்று சில பொருள்களுக்குமாக வரிகள் பல்வேறு விதமாக இருக்கின்றன. இன்னும் சொல்லப் போனால், நிறைய அளவிற்கு இதிலே மாறுபாடுகள்தான் அதிக மாக இருக்கின்றன. வரி ஏய்ப்புக்குக் கூட இது ஒரு காரணம். ஒன்று அரசாங்கம் இவைகளை ஒருமுகப்படுத்துவதன் மூலமாக அதைக் குறைந்த அளவிலே, குறைந்த சதவீதம் வரி என்று போட்டுக் கூட பலமுனை வரியாக அரசாங்கம் அறிவிக்குமானால், ஒவ்வொரு கட்டத்திலேயும் தவறான கணக்கு கள் காட்டப்படுகிற நிகழ்ச்சிகள் எல்லாம் தவிர்க்கப்படும். எல்லோரும் வரியை ஏய்க்காமல், ஒழுங்காக கணக்கைக் கொடுக்கக்கூடிய சூழ்நிலை ஏற்படும். இதைத் தவிர்த்து ஒருசில பொருள்களுக்கு பலமுனை வரி, ஒருசில பொருள் களுக்கு ஒருமுனை வரி என்பதாக பல்வேறு கால கட்டங்களில் இருப்பது, இதிலே கள்ளக் கணக்கு காட்டுவதற்கு வியாபாரிகளைத் தூண்டுவது ஒரு

[1984 ஏப்ரல் 27

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (டாக்டர் கே. சமரசம்):** அமைச்சர் அவ்வாறு நடத்தமுடியாது. உட்கார்ந்து உறுப்பினர்களோடு கலந்து பேசுவது என்பது ஒரு பண்பாடு, நாகரீகம். அது வரவேற்கக் கூடியது தான்.

பேரவை முன்னுள்ள கேள்வி :

"தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு கேளிக்கை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 29/1984) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்—

"தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு கேளிக்கை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 29/1984) நிறைவேற்றப்பெற வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(எ) பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்) சட்ட முன்வடிவு, 1984.

**மாண்புமிகு திரு. எஸ். டி சோமசுந்தரம்:** தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்—

" தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு * (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 30/1984) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்".

**திரு. கு. பா. பழனியப்பன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 30/1984) என்ற

* 1984-ம் ஆண்டு மார்ச் 31-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.



1984 ஏப்ரல் 27] (திரு. கு. பா. பழனியப்பன்)

இந்தச் சட்ட முன்வடிவின் மீது சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இதிலே இதுவரையிலும், ரூ. 50,000 வரையிலும் வரி விலக்கு வியாபாரிகளுக்கு என்று இருந்ததை ரூ. 1 இலட்சமாக உயர்த்த இருப்பதாகத் தெரிகிறது.

(பிற்பகல் 1-00)

இந்த விற்பனை வரி என்பதே அரசுக்கு வருகிற வருமானத்திலே ஒரு கணிசமான அளவிற்கு கிடைக்கக்கூடியதும், இன்னும் சொல்லப்போனால், இது காமதேனு போன்றது, கற்பகவிருட்சம் போன்றது, அட்சய பாத்திரம் போன்றது என்றெல்லாம் கூட வர்ணிக்கப்படுகிறது. ஆனால் நான் இதற்கு முன்னாலே பேசிய அந்த சட்டத் திருத்தத்தின் மீது சொன்ன கருத்துக்களை மீண்டும் வலியுறுத்திச் சொல்வது என்னவென்றால், என்ன வரி விதிப்பு மாற்றங்கள் ஏற்பட்டாலும், அது நேரடியாக வியாபாரிகளை மட்டும் பாதிப்பது மட்டுமல்ல, நேரடியாக பொதுமக்களையும் பாதிக்கின்ற அளவிற்கு அது மாற்றப்படுகிறது என்பதையும் அரசு உணர வேண்டும். ஏதோ நாம் வரி ஏய்ப்பைத் தடுக்கிறோம் அல்லது வரியை அவர்களுக்கு விலக்கு அளிப்பதன் மூலமாக ஒழுங்காக கணக்குப் பார்த்து அதன் மூலமாக அதிகமாக வரி வரும் என்றெல்லாம், அரசு கருதினாலும், அதனுடைய முழுப் பலன் அரசுக்குக் கிடைக்கிறதோ, இல்லையோ, அபத்தங்கள் நிச்சயமாக இருக்கின்றன. இதிலே சுருக்கமாகச் சொல்லப்போனால், பெட்ரோல் முதலிய அந்த எண்ணெய் ரகங்களுக்கு வரியை உயர்த்தியதன் மூலமாக அதனுடைய விளைவு பஸ் கட்டணம் நேரடியாக உயர்ந்துவிடுகிறது. அதைப் போலவே சரக்குக் கட்டணம் நேரடியாக உயர்ந்து விடுகிறது. பொதுவாக போக்குவரத்துக்கான செலவுகள் எல்லாம் அதிகரிக்கப்படுகின்றன. அது நேரடியாக பொது மக்களைப் பாதிப்பதாக இருக்கிறது. நான் குறிப்பாகச் சொல்ல விரும்புவது, ஒரு முனை வரி என்று சில பொருள்களுக்கும், பலமுனை வரி என்று சில பொருள்களுக்குமாக வரிகள் பல்வேறு விதமாக இருக்கின்றன. இன்னும் சொல்லப் போனால், நிறைய அளவிற்கு இதிலே மாறுபாடுகள்தான் அதிகமாக இருக்கின்றன. வரி ஏய்ப்புக்குக் கூட இது ஒரு காரணம். ஒன்று அரசாங்கம் இவைகளை ஒருமுகப்படுத்துவதன் மூலமாக அதைக் குறைந்த அளவிலே, குறைந்த சதவீதம் வரி என்று போட்டுக் கூட பலமுனை வரியாக அரசாங்கம் அறிவிக்குமானால், ஒவ்வொரு கட்டத்திலேயும் தவறான கணக்குகள் காட்டப்படுகிற நிகழ்ச்சிகள் எல்லாம் தவிர்க்கப்படும். எல்லோரும் வரியை ஏய்க்காமல், ஒழுங்காக கணக்கைக் கொடுக்கக்கூடிய சூழ்நிலை ஏற்படும். இதைத் தவிர்த்து ஒருசில பொருள்களுக்கு பலமுனை வரி, ஒருசில பொருள்களுக்கு ஒருமுனை வரி என்பதாக பல்வேறு கால கட்டங்களில் இருப்பது, இதிலே கள்ளக் கணக்கு காட்டுவதற்கு வியாபாரிகளைத் தூண்டுவது ஒரு

பக்கமும், அதேநேரத்திலே எப்படியாவது கணக்கைக் காட்டி அரசாங்கத்தை வரி ஏய்ப்பு செய்வது மட்டுமல்லாமல் அந்த வரியை, வாங்குகிற வரியை முழுமையாக பாதிக்கின்ற, ஏழை எளியவர்களை நேரடியாக அது பாதிக்கின்ற வகையிலேதான் இன்றைக்கு இருந்துக் கொண்டிருக்கிறது என்பதை அரசாங்கத்தின் கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன். இன்னொன்று கூட எனக்குத் தெரிய வருகிறது. அதாவது, வரி என்று வாங்குகிறபோது பொருள்களிலே அதிகமாக டர்ன் ஓவர், 1 இலட்ச ரூபாய் என்று சொன்னால், ஒரு இலட்சத்திற்கு மேற்கொண்டு வருகிற டர்ன் ஓவருக்கு மாத்திரம் தான் அந்த வரி வசூலிக்கிற அரசாங்கத்திற்குச் செலுத்தவேண்டும். அதற்குக் குறைவாக டர்ன் ஓவர் காட்டுகிற வியாபாரிகள், ஏற்கனவே வாங்குகிற நபர்களிடத்திலே வரி வசூலித்து இருந்தாலும்கூட, வரி என்று கணக்கு போட்டு, அவர்களிடத்திலே வாங்கியிருந்தாலும் கூட, அரசாங்கத்திற்கு கட்ட வேண்டியதில்லை. அது அவர்களுக்கு கிடைக்கிற லாபமாகவே எடுத்துக் கொள்ளலாம் என்கிற நிலைமையிருக்கிறது. அதை அரசாங்கம் தெளிவு படுத்த வேண்டும்.

உதாரணமாக, ஒவ்வொரு நாளும் விற்கிற பொருள்களிலே சேல்ஸ் டாக்ஸ் என்று போட்டு, ஒவ்வொரு விலைக்கும் என்று குறிப்பிட்டு வாங்கிவிடுகிறார்கள். வாங்குகிற நுகர்வோர்களே அதைக் கட்டிவிடுகிறார்கள். ஆனால் அந்த வரிகள் எல்லாம் ஒட்டுமொத்தமாக ஆனாலும் கூட, அந்த வரி அரசாங்கத்திற்கு வருவதில்லை. அதற்குப் பதிலாக மொத்த டர்ன் ஓவருக்கு உண்டான தொகைக்கு உள்ளாகவே, அந்தப் பணம் வந்தால்—வரியாக வசூலித்தால் கூட—விலைபொருளுக்கு மேற்கொண்டு வாங்குகிற வரியை வியாபாரிகளே எடுத்துக்கொள்ளக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. இதை அரசாங்கம் உணர்கிறதா? இதை மாற்றுவதற்கு ஏதாவது திட்டம் வைத்திருக்கிறதா? என்பதை அறிய விரும்புகிறேன்.

எனவே இப்போது இருக்கிற வரி விதிப்பு முறைகளைமாற்றி, குறைவான சதவீதமாக மாற்றி, பல முனை வரியாக வைப்பதன் மூலமாக வரி ஏய்ப்பைத் தடுக்கமுடியும், ஏழைகளைப் பாதிக்கிற நிலைமையை மாற்ற முடியும் என்று சொல்லி, அமர்கிறேன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாற்றுத்தலைவர் அவர்களே, 1984-85 ஆம் ஆண்டு பட்ஜெட் விவாதத்தின்போது, ஸ்மால் டீலரைப் பொறுத்தளவிலே அவர்களுக்கு ரிலிப் கொடுக்கப்படும் என்று கொடுக்கப்பட்ட வாக்குறுதிக்கு இணங்க இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது என்று ஆப்ஜெக்ட்ஸ் அன்ட் ரீசன்ஸ்லே சொல்லப்பட்டிருக்கிறது. அப்படி ஸ்மால் டீலரைப்



பொறுத்தளவிலே அவர்களுக்கு ரிலிப்பாக வேண்டி கொண்டுவரப்பட்ட சட்டம் என்ற முறையிலே இதை வரவேற்கவேண்டிய நேரத்திலே, இந்தச் சட்டத்திலே கொடுக்கப்பட்டிருக்கிற விவரங்களை வைத்துப் பார்த்தால் இந்தச் சட்டத்தை ஆதரிப்பதற்கு முடியாத ஒரு நிலையிருக்கிறது. ஏன் என்றால், இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையிலே; இன்று 50 ஆயிரத்திலே இருந்து 1 லட்சம் என்று இடத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு இருக்கிறதே தவிர, இந்த ரேட் ஆப் டாக்சைப் பொறுத்தளவிலே பார்த்தால், இன்று ஒரு ஆயிரம் ரூபாய் என்று இருந்த இடத்திலே, 2 ஆயிரம் ரூபாய் என்ற முறையிலே ஏறக்குறைய 1 மடங்கு இந்த ரேட் ஆப் டாக்ஸ் உயர்த்தப்பட்டிருக்கக்கூடிய நிலையை நாம் பார்க்கிறோம்.

இன்று இப்படி உயர்த்தப்பட்ட டேக்ஸ்னுடைய விவரங்கள் ஒருபுறம் இருக்கட்டும். இப்படிப்பட்ட டேக்ஸ்னுடைய விகிதம் உயர்த்தப்பட்டிருக்கிறது என்பதற்கும் அப்பால், நாம் எங்கு போகிறோம் என்றால், இன்று இந்த நாட்டிலே இருக்கக்கூடிய நடுத்தர மக்களையும், ஏழை மக்களையும் கடுமையாகப் பாதிக்கக்கூடிய முறையிலே இன்று சில பொருள்களுடைய வரி விகிதம் உயர்த்தப்பட்டிருக்கிறது என்பதை நாம் பார்க்கிறோம்.

பெட்ரோல் 11 பெர்சென்டிலேயிருந்து 14 பெர்சென்டாக உயர்த்தப்பட்டிருக்கிறது. ஏவியேஷன் ஃபியூல் 7 பெர்சென்டிலேயிருந்து 10 பெர்சென்டாக உயர்த்தப்பட்டிருக்கிறது. டீசல் ஆயில் 11 பெர்சென்டிலேயிருந்து 14 பெர்சென்டாக உயர்த்தப்பட்டிருக்கிறது. லூப்ரிகேஷன் ஆயில் அதேபோல 8 சதவீதத்திலிருந்து 10 சதவீதமாக உயர்த்தப்பட்டிருக்கிறது. அதேமாதிரி மினரல் ஆயிலைப் பொறுத்தவரையில் 8 சதவீதத்திலிருந்து 10 சதவீதத்திற்கு உயர்த்தப்பட்டிருக்கிறது. நிச்சயமாக இன்று போக்குவரத்து சம்பந்தப்பட்ட முறையிலே, நடுத்தர மக்களையும், ஏழை மக்களையும் பாதிக்கக்கூடிய முறையிலே, கட்டண விலை உயர்வு ஏற்படக்கூடிய சாத்தியக்கூறு ஏற்படும் என்று இந்த நேரத்திலே சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

நிச்சயமாக பெட்ரோலினுடைய விலையும், டீசல் ஆயிலினுடைய விலையும், டாக்ஸ் ரேட்டை உயர்த்தியதன் காரணமாக. டீலர்ஸ்லூக்கும், அதே மாதிரி உபயோகப்படுத்துகிறவர்களுக்கும்; மோட்டார் போன்றவற்றை பராமரிக்கக்கூடியவர்களுக்கும் கட்டணத்தை உயர்த்தக்கூடிய சாத்தியக் கூறுகள் ஏற்படும். நிச்சயமாக இது மக்களைப் பொறுத்தவரையில், அதிகமான கட்டணத்தைக் கொடுக்க வேண்டிய ஒரு நிலைமைக்குக் கொண்டு போகும் என்று இந்த நேரத்திலே சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

(திரு. ஜே. ஹேமச்சந்திரன்) [1984 ஏப்ரல் 27

விற்பனை வரியைப் பொறுத்த அளவிலே, டீலர்களைப் பொறுத்த அளவிலே, ஸ்மால் டீலர்ஸுக்கு ஒரு நிவாரணம் கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு கொண்டு வரப்பட்டதாக இருந்தாலும், இன்று அவர்களுக்கு நிவாரணம் கொடுப்பது என்பதற்குப் பதிலாக, இந்த நாட்டிலே இருக்கக்கூடிய ஏழை மக்களுக்கும், நடுத்தர மக்களுக்கும் அதிகமாக சுமையைக் கொடுக்கக் கூடிய சட்டமாகத்தான் அமைகிறது என்று சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

ஆகவே அந்த அடிப்படையிலே, இந்த விற்பனை வரி சம்பந்தமான, இந்தச் சட்டத்தைப் பொறுத்த அளவிலே, எந்த நோக்கத்தோடு ஸ்மால் டீலர்ஸுக்கு ரிலீப் கொடுக்க வேண்டும் என்ற முறையிலே இந்தச் சட்டம் கொண்டு வரப் பட்டதோ அந்த நோக்கத்தை வரவேற்கக்கூடிய நேரத்திலே, அவர்களுக்கு ரிலீப் கொடுக்கக்கூடிய அதே நேரத்தில், இந்த நாட்டிலே இருக்கக்கூடிய நடுத்தர மக்களுக்கும், ஏழை மக்களுக்கும் சுமை கொடுக்கக்கூடிய முறையிலே, அதுவும் அவர்களுக்கு ஏற்கெனவே நாட்டில் ஏற்பட்டிருக்கக்கூடிய பொருளாதார நெருக்கடி காரணமாக பொருள்களுடைய விலை, அவர்க ளுடைய வாங்கும் சக்திக்கு அதிகமாக இருக்கக்கூடிய நேரத்திலே, பர்ச் சேசிங் பவருக்கும் அதிகமாக இருக்கக்கூடிய நேரத்திலே, இப்படி மேலும் விற்பனை வரி என்ற முறையிலே, ஏற்கெனவே இருப்பதை விட அதிகமான வரி விதிப்பதன் காரணமாக, இந்த நாட்டிலே இருக்கக்கூடிய நடுத்தர மக்களுடைய, ஏழை மக்களுடைய வாழ்க்கை தரத்தைப் பாதிக்கக்கூடிய முறை யிலே இத்தகைய சட்டங்களைக் கொண்டு வரக்கூடாது.

அந்த முறையிலே உள்ள நடவடிக்கைகளை வாபஸ் பெறவேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். ஆகவே, இந்த ஸ்மால் டீலர்ஸுக்கு நிவாரணம் கொடுக்கக் கூடிய அளவுக்கு மட்டும் அது இருக்கட்டும். இந்த நாட்டிலே இருக்கிற நடுத்தர மக்களையும், ஏழை மக்களையும் பாதிக்கக் கூடிய வகையிலே அது அமைய வேண்டாம் என்று சொல்லி, அந்த முறையிலே தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அரசையும், அமைச்சர் அவர் களையும் கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 1-10)

திரு. சோ. அழகர்சாமி: மாற்றுத் தலைவர் அவர்களே. இந்த பொது விற்பனை வரி திருத்த சட்ட முன்வடிவின்மீது இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு முன்னால் இருந்த விலைகளைவிட பல மடங்கு விலைகள் உயர்ந்து கொண்டே இருக் கின்றன. ஒரு லட்சம் ரூபாய் வரையில் வியாபாரம் செய்யக்கூடியவர்களுக்கு வரி செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கப்படுகிறது என்று சொன்னால்



1984 ஏப்ரல் 27] (திரு. சோ. அழகர்சாமி)

முன்னாலே இருந்த பத்தாயிரம் ரூபாய்க்குத்தான் அது சமமாக இருக்கும். கஷ்டத்தைப் போக்கக்கூடிய முறையிலே நிவாரணம் வேண்டுமென்று பல கோரிக்கைகள் வந்த அடிப்படையிலே அமைச்சர் அவர்கள் 50 ஆயிரம் ரூபாய் என்பதை ஒரு லட்சமாக உயர்த்தியிருக்கிறார்கள் என்று சொன்னார்கள், நான் இதை வரவேற்கிறேன். ஆனால் இன்றைக்கு பல வரிகள் உயர்த்தப்பட் டிருக்கின்றன. டீசல் போன்ற பொருட்களுக்கு 11 சதவிகிதத்திலிருந்து 14 சதவிகிதமாக உயர்த்தப்பட்டிருக்கிறது. இப்படி வரி உயர்த்துவதன் காரண மாக அது பொதுமக்களைத்தான் பாதிக்கும் என்பதிலே சந்தேகம் இல்லை. டீசலுக்கு வரியை உயர்த்தினால் அதன் காரணமாக பொதுமக்களுடைய கட்டணத்தை பஸ் கட்டணம் போன்றவற்றை உயர்த்துகிற நிலைமைதான் இருக்கும். தொடர்ந்து இந்த அவையிலே இதைப்பற்றிச் சொல்லிக்கொண்டு வருகிறோம்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

விற்பனை வரியிலே பல்விதமான தொந்தரவுகள் வியாபாரிகளுக்கு ஏற்படு கின்றன. முழுமையாக ஒருமுனை வரியாகவே போட்டுவிட்டால்—ஏதாவது ஒரு இடத்திலே முதல் இடத்திலேயே வரியை ஒரு முறை போட்டு விட்டால்—பின்னாலே வரி போடுகின்ற தொந்தரவே வராது என்பது மட்டுமல்ல, அந்தப் பொருளின் விலையோடு வரியைச் சேர்த்துவிடுவதால் பின்னாலே வரி போட வேண்டிய அவசியம் இருக்காது, இதனால் கணக்குகள் வைத்துக்கொண்டிருக்க வேண்டிய சங்கடமும் கிடையாது, அதிகாரிகளுக்கும் சிரமம் இருக்காது, அரசாங்கத்திற்கும் சிரமம் இருக்காது, ஆகவே எல்லாவற்றிற்கும் ஒருமுனை வரி போடுவதால்—அரசாங்கத்திற்கு வருமானம் குறையும் என்று காரணம் சொல்லலாமே தவிர—அமைச்சர் அவர்கள் சிலவற்றிற்கு ஒருமுனை வரி கொண்டு வந்திருக்கிறார்கள் எல்லாப் பொருட்களுக்குமே ஒருமுனை வரி என்று கொண்டுவந்துவிட்டால் அதுவும் 10, 15 சதவீதம் என்ற அளவுக்கு ஆக்காமல் குறைந்த அளவுக்கு வரி விதிக்கிற முறைதான் அரசாங்கத்தின் வரி விதிப்புக் கொள்கையாக இருக்க வேண்டுமென்பதுதான் எங்களுடைய கருத்தாகும். தொடர்ந்து ஒவ்வொரு சந்தர்ப்பத்திலேயும் இதைச் சொல்லிக் கொண்டே வருகிறோம்.

இந்தத் திருத்த மசோதாவிலே பெட்ரோலுக்கு 11 என்பதை 14 சதவீதம் என்று உயர்த்தியிருக்கிறார்கள். விமான எண்ணெய் பற்றி சொல்லவில்லை, ஆனால் டீசலுக்கும் அதேபோன்று 11-லிருந்து 14 சதவீதம் என்று உயர்த்தியிருக்கிறார்கள். உயர்வு 3 சதவீதம்தான் என்று சொன்னாலும்கூட சாதாரணமாக பல இடங்களிலே மின்சாரத் தட்டுப்பாடு காரணமாக விவசாயிகள் இன்றைக்கு டீசலைப் பயன்படுத்துகிற நிலை இருக்கிறபோது அவர்களையும் இது பாதிக்கும். இங்கே நிவாரணம் அவர்களுக்கு வேண்டுமென்று கோரிக்கை வைத்து நிவாரணம் கொடுங்கள் என்று கேட்கக்கூடிய நேரத்திலே ஒரு பக்கத்திலே வரியை அவர்களுக்கு உயர்த்துவது சரியல்ல. ரூ. 50 ஆயிரத்தை 1 லட்சமாக உயர்த்தி அதன் மூலமாக வர்த்தகர்களுக்கு நிவாரணம் அளிக்கிறபோது பொதுமக்களை இந்த உயர்வு பாதிக்கக்கூடிய முறையிலே உயர்த்தவேண்டிய அவசியம் இல்லை. ஆகவே அமைச்சர் அவர்கள் இந்த வரிவிதிப்பை கைவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த மசோதாவின் இந்த அளவோடு இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் கருத்துக்களைக் கூறி முடித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்குத் தமிழகத்திலே இருக்கிற பல்வேறுபட்ட வியாபாரிகளின் எண்ணத்தின்படிதான் 1 லட்சம் வரைக்கும் அதற்குக் கீழே உள்ளவர்களுக்கு வரி விதிப்பு இல்லை என்ற நிலைமையை உருவாக்கியிருக்கிறோம். நீண்டகாலமாக 50 ஆயிரமாக இருந்ததை இன்றைக்கு 1 லட்சமாக்கி இருக்கிறோம். 1974 ஆம் ஆண்டு ஏப்ரல் 1 ஆம் தேதியிலிருந்து 1984 ஆம் ஆண்டு ஏப்ரல் 1 ஆம் தேதி வரையிலும் 50 ஆயிரமாக இருந்ததை அதற்குக் கீழே உள்ளவர்களுக்கு வரி இல்லை என்று இருந்ததை, மாற்றி இன்றைக்கு ஒரு லட்சத்திற்குக் கீழே உள்ளவர்களுக்கு வரியில்லை என்று கொண்டு வந்திருக்கிறோம். அதனால் எவ்வளவு வியாபாரிகள் தமிழகத்திலே நன்மை அடைகிறார்கள் என்றால் வரி விதிக்கும் லோயர் லிமிட் 1 லட்சம் என்று ஆக்கியதனாலே 20,626 வியாபாரிகள் நன்மை அடைகிறார்கள்.





ஒருமுனை வரி என்பதில்தான் இங்கே அடிக்கடி மாறுபாடான கருத்துக்கள் வருகின்றன. உள்ளே இருக்கிற சட்டமன்ற உறுப்பினர்களானாலும் சரி வெளியே இருக்கிற பொதுமக்களானாலும் சரி சமுதாய நலனிற்காகப் பாடுபடுகிற நல்ல கருத்துடையவர்களானாலும் சரி யாருடைய நல்ல கருத்தையும் இந்த அரசு ஆராய்ந்து முடிவு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆராய்ந்து முடிவு எடுப்பது மட்டுமல்ல, ஏழை எளியவர்களுக்காக அவர்களுக்கு நன்மை செய்ய வேண்டுமென்கிற நோக்கத்தோடு உள்ளேயும் வெளியேயும் பெரும்பாலான மக்கள் எதைக் கருதுகிறார்களோ அதை ஆராய்ந்து முடிவு எடுப்பதற்கு இந்த அரசு என்றைக்கும் தயங்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். 50 ஆயிரத்திலிருந்து 1 லட்சம் என்று கொண்டு வருகிறபோது 20626 பேர்கள் நன்மை அடைகிறார்கள். பலமுனை வரி இருக்கிற பொருள்களுக்கு அவர்களுக்குத்தான் நன்மையே தவிர ஒருமுனை வரிக்கு அவர்களுக்கு நன்மை ஏற்படாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். பெரிய வியாபாரிகளுக்குத்தான் சிங்கிள் பாயின்ட் அட்வென்டேஜ், சிறிய வியாபாரிகளுக்கு மல்ட்டி பாயின்ட்தான் பல முனை வரிதான் அவர்களுக்கு உதவிகரமாக இருக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அப்படி எல்லாவற்றையும் ஒருமுனை வரி ஆக்கிவிட்டால் அவர்கள் வந்து 50 ரூபாய் வியாபாரம் செய்தாலும் சரி 100 ரூபாய் வியாபாரம் செய்தாலும் சரி, ஒரு லட்சம் ரூபாய் வியாபாரம் செய்தாலும் சரி அவர்கள் கணக்கு வைத்துக் கொள்ளவேண்டும். வரி செலுத்தவேண்டும். இன்றைக்கு ஒரு லட்சம் ரூபாய் வரைக்கும் சிறிய வியாபாரிகள் கணக்கை வைத்துக்கொள்ள வேண்டிய தில்லை. ஆனால் சிங்கள் பாயின்ட் இருந்தால் கணக்கை வைத்துக்கொள்ள வேண்டும். ஆகவே எங்களுக்கு சிங்கள் பாயின்ட், ஒரு முனைவரிதான் சிறிய வியாபாரிகளுக்கு நன்மை பயக்கும் என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அது மட்டும் அல்ல, இன்றைக்கு இருக்கிற அரசினுடைய வருவாயில் 85 சதவீதம் வரையிலும் ஒருமுனை வரியின் மூலமாகத்தான் வருகிறது. ஆனால் சிலவற்றை பலமுனை வரியாக வைத்து இருக்கிறோம் என்றால் அது தவிர்க்க முடியாத காரணத்தாலும், அது வைத்துதான் ஆகவேண்டும் என்ற நிர்ப்பந்தத்தினாலும் இன்றைக்கு பல முனை வரி வைத்து இருக்கிறோம் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். அந்தப் பொருட்களை எங்கே வாங்குகிறோம், அந்தப் பொருட்கள் எங்கே செய்யப்படுகின்றன. எங்கே விற்கப்படுகின்றன பொருட்களை விற்கின்றபோது இலகுவிலே கண்டுபிடிக்கப்படுகிற பொருட்களுக்கு எல்லாம் ஒருமுனை வரி. ஆனால் செய்யப்படுகிற இடமும் மேனுபாக்சரிங்

[திரு. எஸ். டி. சோமசுந்தரம்] [1984 ஏப்ரல் 27

பாயின்டும், டிஸ்ட்டிரிபுஷன் பாயின்டும் அது விற்பனை ஆகின்ற இடமும் இரண்டுமே தெரியாமல் சில வகையில் வரும்போது அதற்கு பலமுனை வரி வைத்திருக்கிறோம். அது மட்டும் அல்ல, ஒருமுனை வரி என்று சொல்லிவிட்டு அந்தப் பொருட்களை விற்கின்றபோது இது ஒருமுனை வரி இந்த வரி கட்டியாகிவிட்டது. நாங்கள் வரி கட்ட வேண்டியது இல்லை என்று யாரும் சொல்லிவிட முடியாது. அந்தப் பொருட்களுக்கு முன்கூட்டியே வரி செலுத்தப்பட்டது என்ற ஆதாரத்தை அவர்கள் தெரிவித்து ஆகவேண்டும். இப்படிப்பட்ட சங்கடங்கள் இருக்கிறபோது இது ஒருமுனை வரிதான் இவர்களுக்கு நன்மை என்று யாரோ உங்களுக்கு தவறாகச் சொல்லி அதை ஏழை எளியவர்கள் சொல்லவில்லை, யாரோ சொல்லி நீங்கள் எடுத்துக்கொண்டு தெரிவிக்கிறீர்கள். ஏழை எளியவர்களுக்கு நீங்கள் பாடுபடுவது உண்மைதான். ஆனால் தவறான கருத்தை அவர்கள் சொல்லியதைச் சொல்கிறீர்களே ஒழிய, சிறிய வியாபாரிகளிடத்தில் உங்களுக்கு எவ்வளவு அக்கறை இருக்கிறதோ அந்த அக்கறை எங்களுக்கும், இந்த அரசுக்கும் இருக்கிறது என்பதை நான் உங்களிடத்திலே சொல்லிக்கொள்ள கடமைப்பட்டு இருக்கிறேன். இன்னும் ஒன்றைச் சொன்னார்கள், வரியை ஏற்றிக்கொண்டு இருக்கிறார்கள் என்று. இங்கே ஒரு பக்கத்தில் ஒருவரையும் காணவில்லை. ஒருவரும் காணவில்லை. ஏன் என்று தெரியவில்லை (குறுக்கீடு) அப்படி அல்ல. நம்முடைய திரு. சங்கரய்யா அவர்கள் தப்பாகச் சொல்கிறார்கள். அப்படி ஒன்றும் வாய்ப்பு இல்லை. எப்படி வாய்ப்பு என்று எடுத்துச் சொன்னால் நான் அதற்குப் பதில் சொல்கிறேன்.

**திரு. என். சங்கரய்யா:** மாண்புமிகு பேரவையின் துணைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சியோடு உங்களுக்கு கூட்டணி இருப்பதால் நீங்கள் அவர்களிடம் பிரைவேட்டாக சொல்லிக்கொள்ளலாம்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** மாண்புமிகு பேரவையின் துணைத் தலைவர் அவர்களே, திரு. சங்கரய்யா அவர்களுக்கு நன்றாகத் தெரியும். கூட்டணி என்பதாலே கொள்கையில் விட்டுக் கொடுப்பது அல்ல. 1967-லே இந்தியக் கம்யூனிஸ்ட் மார்க்சிஸ்ட் கட்சியினுடனும் அண்ணா அவர்களுக்கு கூட்டு உண்டு. சுதந்திரா கட்சியினுடனும் கூட்டு உண்டு. ஆனாலும் அப்போதும் கொள்கையை விடவில்லை.



1984 ஏப்ரல் 27] (திரு. எஸ். டி. சோமசுந்தரம்)

'It is only electoral alliance. It is not even an alliance but only an adjustment. We should not surrender our policies and ideologies because of the electoral alliance.'

ஆகையால் இப்போது அவர்கள் இல்லை என்பதாலே நான் ஏன் இந்த வரியைப் போட்டேன் என்பதை நான் சொல்ல முடியவில்லை. அதைப்பற்றி கொஞ்சம் பேச வேண்டும். ஆள் இல்லாத இடத்தில் பேச வேண்டியதாக இருக்கிறது. அதற்காகத்தான் சொன்னேன். வேறு ஒன்றும் இல்லை. ஏன் என்றால் நீங்கள் எல்லாம் நான் சொல்வதை ஏற்றுக்கொள்கின்ற பெரும்பாலோர் இருப்பதால் இல்லாதவர்களுக்காக நான் பேசுகிறேன் என்பதாலே அதிலே உணர்வுப் பூர்வமாக உற்சாகமாகப் பேச முடியவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பெட்ரோலுக்கு இன்றைக்கு நாம் பார்க்கிறபோது கேரளாவிலே 17.25 சதவிதம், ஆந்திராவில் 13.75 சதவிதம், கர்நாடகாவில் 13.75 சதவிதம்: ஆக இன்றைக்கு நாம் போட்டு இருப்பது 14 சதவிதம் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். அதேபோல் டீசலுக்கு. கேரளாவிலே 23 சதவீதம், ஆந்திராவிலே 14.5 சதவிதம், கர்நாடகாவிலே 15.4 சதவீதம், ஆனால் நாம் போட்டிருப்பது 14 சதவீதம்தான்.

(பிற்பகல் 1-20)

விமான எண்ணெய்க்கு, கேரளாவில் 8, ஆந்திராவில் 10, கர்நாடகத்தில் 11, நாம் 10 போட்டிருக்கிறோம்.

இப்படி நாம் போட்டிருக்கின்றபொழுது, அண்டை மாநிலங்களில் இருப்பவற்றை யோசித்துப் பார்த்து, அதற்கேற்றவாறு நாங்கள் வரி போட்டிருக்கிறோம். இன்றைக்கு வரி போட்டிருப்பது, வேறு தவிர்க்க முடியாத நிலையில், அரசினுடைய பல்வேறு திட்டங்களை நிறைவேற்றுவதற்காகத்தான் இந்த வரிகளை நாங்கள் போட்டிருக்கிறோம் என்று சொல்லி, இதை நீங்கள் நிறைவேற்றித் தரவேண்டுமாய்க் கேட்டு, அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி.

"தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 30/1984) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 7 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்றன.

பிரிவு 1.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி. "பிரிவு 1 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்."

The Hon. Thiru S. D. SOMASUNDARAM: Sir, I move that—

In clause 1, in sub-clause (2), for clause (b), substitute the following, namely :—

"(b) The rest of this Act shall be deemed to have come into force on the 1st day of April 1984."

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 1, திருத்தப்பெற்றபடி, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறை வேற்றப்பெற்றது.

முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :—

"தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (மூன்றாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 30/1984), திருத்தப் பெற்றப்படி, நிறைவேற்றப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு, திருத்தப்பெற்றபடி, நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலு வல்கள் இத்துடன் முடிவுற்று, 28—4—1984 காலை 9-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-22 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.



## பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### (அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

170. தமிழ்நாடு வேளாண்மைத் தொழில்கள் இணையகத்தின் 1981-82 ஆம் ஆண்டிற்கான பதினாறாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் I /1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்.)

### (ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

183. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் 1972-73 முதல் 1977-78 ஆம் ஆண்டு வரையிலான ஆண்டுக் கணக்குகள் குறித்த தணிக்கை அறிக்கைகள் மீதான பொது நிறுவனங்கள் குழுவின் நாற்பத்தி ஒன்றாவது அறிக்கை (தமிழ்).

184. இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் 1979-80 ஆம் ஆண்டிற்கான (வணிகத் துறைகள் பற்றிய) அறிக்கையின் மீதான பொது நிறுவனங்கள் குழுவின் நாற்பத்திரண்டாவது அறிக்கை (தமிழ்).

185. தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்தின் செயல்முறை குறித்த பதினேழாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு எடுத் துள்ள நடவடிக்கைபற்றிய பொது நிறுவனங்கள் குழுவின் நாற்பத்தி மூன்றாவது அறிக்கை (தமிழ்).

186. 'வேளாண்மைத் துறை' பற்றிய மதிப்பீட்டுக் குழுவின் இருபத்தி இரண்டாவது அறிக்கை (தமிழ்).

187. கைத்தறி மற்றும் துணி நூல் துறை பற்றிய மதிப்பீட்டுக் குழுவின் இருபத்தி மூன்றாவது அறிக்கை (தமிழ்).

188. மருத்துவத் துறை பற்றிய மதிப்பீட்டுக் குழுவின் இருபத்தி நான்காவது அறிக்கை (தமிழ்).

189. உடுக்குறியிடப் பெறாத வினாக்களும், விடைகளும் (ஒன்பதாம் பட்டியல்).

## உள்ளடக்கம்.

**28—4—1984.**


| | பக்கங்கள் |
|---|---|
| **1. இரங்கல் குறிப்பு—** | |
| முன்னாள் உறுப்பினர் திரு. எம். குமரன் மறைவு | 927—928 |
| **2. வினாக்கள்-விடைகள்—** | |
| (அ) உடுக்குறியிட்ட வினாக்கள் | 928—952 |
| (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் | 952—975 |
| **3. தகவல் கோரல்—** | |
| (அ) கரும்புக்கு அதிக விலை கோரி போராட்டம் | 975 |
| (ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள் | 976 |
| (இ) இரயில்வே ரிசர்வேஷனில் உறுப்பினர்களுக்கு முன் உரிமை அளிக்கக் கோருதல் | 977 |
| **4. ஒத்திவைப்புத் தீர்மானம்—** | |
| கீழக்கரை காவல் நிலையத்திலிருந்து ஜாமீனில் விடுதலை செய்யப்பட்ட முனியாண்டி மரணமடைந்துள்ளது | 978—988 |
| **5. அறிவிப்புகள்—** | |
| (அ) அனுமதிக்கப்பட்டுள்ள அறிவிக்கைகளுக்குத் துறைகள் பதில் அனுப்பி வைத்தல் | 976—977 |
| (ஆ) மதிப்பீட்டுக் குழு—உறுப்பினர்கள் தேர்தல் | 988—989 |
| (இ) பொதுக்கணக்குக் குழு—உறுப்பினர்கள் தேர்தல் | 989—990 |
| (ஈ) பொது நிறுவனங்கள் குழு—உறுப்பினர்கள் தேர்தல் | 990—991 |
| (உ) உரிமைக் குழு—உறுப்பினர்கள் தேர்தல் | 991—992 |
| (ஊ) அலுவல் ஆய்வுக் குழு—உறுப்பினர்கள் தேர்தல் | 992—993 |
| (எ) சட்ட விதிகள் ஆய்வுக் குழு—உறுப்பினர்கள் தேர்தல் | 993—994 |

**பக்கங்கள்**

5. **அறிவிப்புகள்**—தொடர்ச்சி.

(ஏ) அரசு உறுதிமொழிக் குழு—உறுப்பினர்கள் தேர்தல் 994

(ஐ) அவைக் குழு—உறுப்பினர்கள் தேர்தல்

994—995

(ஒ) பேரவை நிறைவேற்றிய அலுவல்கள் பற்றிய விவரங்கள் 1097—1100

6. **கவன ஈர்ப்பு—**

(அ) திருநெல்வேலியில் பார்த்தீனியம் விஷச் செடி படர்வது 995—997

(ஆ) மருத்துவக் கல்லூரிகளில் மருந்தாளுநர் பட்டயப் படிப்பு நிறுத்தப்படுவது

997—1004

7. **அறிக்கைகள் அளித்தல்—**

(அ) பொதுக் கணக்குக் குழு

(ஆ) உரிமைக் குழு 1004—1005

1006

8. **ஒழுங்குப் பிரச்னை—**

இராமப்பிரசாத் ராவ் கமிஷன் அறிக்கை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுதல்

1006—1007

9. **அரசினர் சட்ட முன்வடிவுகள்—**

(அ) நிவாரண நிறுவனங்கள் (சிறப்பு விதிகள்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1984

1007

(ஆ) பொது விற்பனை வரி (நான்காம் திருத்த) சட்ட முன்வடிவு, 1984

1007—1021

(இ) கூடுதல் விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1984

1021—1037

(ஈ) பயிரிடு குத்தகைதாரர்கள் (தனி விதித்துறைகள்) சட்ட முன்வடிவு, 1984

1037—1086

(உ) வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பயிரிடு குத்தகைதாரர்கள் (தற்காலிக நிவாரணம்) சட்ட முன்வடிவு, 1984

1038—1090

**பக்கங்கள்**

10. **அரசினர் தனித் தீர்மானம்—** 1096—1097

எஸ்டேட் நிலவரிச் சட்டம், 1953-க்கான திருத்தம்

11. **அரசினர் தீர்மானம்—** 1100—1101

பேரவை ஒத்திவைக்கப்பெறுதல் 1101—1102

12. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

**1984, ஏப்ரல் 28, சனிக்கிழமை.**

**சித்திரை 16, ரக்தாக்ஷி—திருவள்ளுவர் ஆண்டு-2015.**

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :**

"நகை ஈகை இன்சொல் இகழாமை நான்கும்
வகைஎன்ப வாய்மைக் குடிக்கு".

நல்ல குடிமக்களுக்கு, முகமலர்ச்சி, உதவும் இயல்பு, இனிய சொல், பிறரை இகழ்ந்து கூறாமை, ஆகிய நான்கும் நல்ல பண்புகள் என்பர்.

## 1. இரங்கல் குறிப்பு.

### முன்னாள் உறுப்பினர் திரு. எம். குமான் மறைவு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அன்றைய ஒருங்கிணைந்த சென்னை சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினரான திரு. எம். குமான் அவர்கள் 19—4—1984 ஆம் தேதியன்று மறைந்ததை இப் பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். குமான் அவர்கள் 1946 ஆம் ஆண்டிலிருந்து 1952 ஆம் ஆண்டு வரையில் சிர்க்கல் பொது கிராமப்புறத் தொகுதியிலிருந்து அன்றைய ஒருங்கிணைந்த சென்னை சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பெற்று நல்லமுறையில் பணியாற்றி உள்ளார்.

அன்னாரின் மறைவு குறித்து அவரை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு ஆழ்ந்த வருத்தத்தையும், அனுதாபத்தையும், இரங்கலையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன்.

[பேரவைத் தலைவர்] [1984 ஏப்ரல் 28

இயற்கை எய்தியவருக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மவுனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நின்றனர்).

## 2. வினாக்கள்—விடைகள்.

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்.

### அதிக பால் கறக்கும் மாடு இனங்களைப் பெருக்கும் திட்டம்.

684—(* வினா எண் 11791)—திரு. எம். சின்னசாமி: மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விஞ்ஞான யுக்தியைப் பயன்படுத்தி அதிக பால் கறக்கும் மாடு இனங்களை உற்பத்தி செய்யும் ஆராய்ச்சி நடைபெறுகிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** (அ) ஆம்.

(ஆ) மாநில அளவில் சராசரி பால் உற்பத்தியை உயர்த்த, அதிக உற்பத்தித் திறனுள்ள கால்நடை இனங்களைப் பெருக்குவதற்கு குறுகிய காலத் திட்டம், நீண்டகாலத் திட்டம் ஆகிய அணுகுமுறைகளால் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**திரு. பெ. சு. திருவேங்கடம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விஞ்ஞான யுக்தியை பயன்படுத்தி அதிக பால் கறக்கும் மாடு இனங்கள் உற்பத்தி செய்யப்படுகிறதா என்று கேட்டிருக்கிறார்கள். அதிகமாக பால் கொடுப்பதற்கு விஞ்ஞான யுக்தியை எப்படி பயன்படுத்துகிறார்கள் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிக்க இயலுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, அயல்நாட்டு கறவை இனங்களைச் சேர்த்து கருவூட்டல் மூலம் உள்நாட்டுப் பசுக்களுக்குப் பிறக்கும் கன்றுகள் அதிக அளவிற்குப் பால் கொடுக்கின்றன. நம்முடைய பசுக்கள் 1 லிட்டர் அல்லது 1½ லிட்டர் பால் கொடுக்கிறது என்று சொன்னால், புதிதாகக் கலப்பினங்கள் மூலம் கருவூட்டப்பட்ட பசுக்கள் 6 லிட்டர் அல்லது 7 லிட்டர் அளவிற்கு பால் கொடுக்க வருகின்றன.



2804

1984 ஏப்ரல் 28]

**திரு. பி. எம். தங்கவேல்ராஜ்:** தலைவர் அவர்களே, தமிழகத்திலே அதிக பால் தருவதற்காக விஞ்ஞானத்தைப் பயன்படுத்தி செயல்முறைகளைக் கையாளுவதுபோல், விஞ்ஞான ரீதியில் தயாரிக்கப்பட்ட பால் நிவனங்களை அரசே தயாரித்து பால்மாடுகளுக்கு வழங்க முன்வருமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, விஞ்ஞான ரீதியில்தான் கால்நடைத் தீவனங்கள் கூட்டுறவு முறையில் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

**திரு. சு. பாலன்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதிகப் பால் கறக்க, மாட்டு இனங்கள் செயற்கைக் கருவூட்டல் மூலம் உற்பத்தி செய்யப்படுகின்றன என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். செயற்கைக் கருவூட்டல் மூலம் மட்டும்தான் அதிகப் பால் பெற முடியுமா? நல்ல உணவு கொடுப்பதன் மூலம் அதிகப் பால் பெறுவதற்கு முடியுமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** தலைவர் அவர்களே, நல்ல சத்துணவும் தேவை. அதே நேரத்தில் செயற்கைக் கருவூட்டல் மூலம் பிறக்கும் இனங்கள்தான் அதிகப் பாலைக் கொடுக்கும்.

**திரு. ரா. கிருஷ்ணன்:** தலைவர் அவர்களே, இந்த செயற்கைக் கருவூட்டல் செய்வதற்காகப் பயன்படுத்தப்படும் செமனைப் பிரசர்வ் செய்வதற்காக வைக்கப்பட்டுள்ள ரெப்ரிஜிரேட்டர்கள் இருந்தும் பயன்படுத்த முடியாமல் இருப்பதாகத் தகவல் எனக்கு வந்துள்ளது. இந்த செமனை பிரசர்வ் செய்வதற்கு இந்த ரெப்ரிஜிரேட்டர்கள் மிகமிக அவசியமாக இருப்பதால், அதை முழுமையாக எல்லா இடங்களிலும் பயன்படுத்திக்கொள்ளும் வகையில் நடவடிக்கை அரசு எடுக்குமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** தலைவர் அவர்களே, என்னிடத்தில் கொடுக்கப்பட்டுள்ள தகவல்படி போதுமான அளவிற்கு இந்த ப்ரோசன் செமன் வைப்பதற்காக உறைவிந்துக் குழல்கள் அளிக்கப்பட்டு இருக்கின்றன என்றும், தமிழ்நாட்டில் ஏறத்தாழ 1,24,963 உறைவிந்துக் குழல்கள் உபயோகத்தில் இருந்து வருகின்றன என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. மு. அப்பாதுரை:** தலைவர் அவர்களே, இந்த உறை விந்துகளைப் பயன்படுத்துகிறபோது அவைகள் சிலநேரங்களில் தவறுதலான முறையில் பயன்படுத்தப்படுவதால் அந்தப் பசுக்கள் இறந்து விடுகின்றன என்பது போன்ற புகார்கள் என்னிடத்தில் வந்துள்ளன. இப்படிப்பட்ட நிலைமைகளைத் தவிர்க்கவும் மீண்டும் அப்படிப்பட்ட தவறுகள் நடைபெறாமல் இருப்

[1984 எப்ரல் 28

பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படுமா? தற்போது இந்த உறைவிந்துகள் பெரிய பெரிய கேந்திரங்களில் தான் கிடைக்கின்றன. இந்த இனப் பசுக்கள் அதிகமான பால் தருவதால் கிராமப்புறங்களில் இந்தத் திட்டத்தை விஸ் தரிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதனால் பசுக்கள் இறந்து விடுகின்றன என்று சொல்வதும் அடுத்து இதை விஸ்தரிக்க வேண்டும் என்று கேட்பதும் முரணானதாக இருக்கிறது. எனக்குத் தெரிந்தவரையில், இத் திட்டம் பற்றி அப்படிப்பட்ட நிலைமை இல்லை.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: தலைவர் அவர்களே, விரிவாக, பரவலாகக் கிராமப்புறங்களில் உள்ள விவசாயிகளுக்குக் கிடைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

டாக்டர் கே. சமரசம்: தலைவர் அவர்களே, விஞ்ஞான யுக்தியைப் பயன்படுத்தி அதிகப் பால் கொடுக்கும் மாட்டு இனங்கள் பற்றிய ஆராய்ச்சி தமிழ் நாட்டில் எங்கெங்கே நடைபெறுகின்றன? என்னென்ன மாட்டு இனங்கள் ஆராய்ச்சிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன? அதனால் இதுவரையில் பெற்ற முன்னேற்றம் என்ன என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: தலைவர் அவர்களே, பல தகவல்களைக் கேட்டு இருக்கிறார்கள். எனவே, தனியாக் கேள்வி போடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எஸ். சிவராமன்: தலைவர் அவர்களே, விஞ்ஞான யுக்தியைக் கொண்டு பால் கூடுதலாகக் கறப்பதற்கு அயல் இனக் காளைகள் மூலம் கருவூட்டல் செய்து பால் மாடுகளை அபிவிருத்திச் செய்வதாகச் சொல்லியிருக்கிறார்கள். தற்சமயம், சிந்தி, ஜெர்சி, பர்சியன், போன்ற காளைகளை இதற்குப் பயன்படுத்துகிறார்கள். புதிதாக எந்தவித அயல் இனக்காளைகளைப் பயன்படுத்தி பால் உற்பத்தியைப் பெருக்க அரசு முயற்சி எடுத்து வருகிறது, என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மூலக்கேள்வி ஆராய்ச்சியைப் பற்றியதாகும். எனவே மாண்புமிகு உறுப்பினர் தனிக் கேள்வி போடவும்.

திரு. டி. மணி: தலைவர் அவர்களே, விஞ்ஞான யுக்தியைப் பயன்படுத்தி கலப்பினப் பசுக்களை நாம் பயன்படுத்துகிறபோது, அந்த வகையில் பர்சியன், ஜெர்சி, போன்றவைகளைப் பயன்படுத்தினாலும், தமிழகத்தில் ஜெர்சி இனத்தால் பால் அதிகமாகக் கிடைக்கிறதா அல்லது வேறு இனப் பசுக்களால் அதிகமாகக் கிடைக்கிறதா என்பதைப்பற்றி அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா?





மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு உறுப்பினர் சமரசம் கேள்விக்கு பதில் சொன்னதைத்தான் இருக்கும் சொல்ல வேண்டும். ஆராய்ச்சியைப் பற்றிய கேள்வி இது என்பதால் அதற்கான தகவல்கள்தான் இங்கே இருக்கின்றன. மற்ற விவரங்கள் தேவையானால், உறுப்பினர் அவர்கள் தனிக் கேள்வி போடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**பால் கொள்முதல் விலையில் மாற்றம் செய்யும் திட்டம்.**

685—(* வினா எண் 22011)—திரு. இரா. தாமரைக்கனி; மாண்புமிகு பால் வளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பால் கொள்முதல் விலையில் மாற்றம் செய்ய அரசு உத்தேசித்துள்ளதா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: பால் கொள்முதல் விலையில்
மாற்றம் பற்றிய முடிவு தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணை
யத்தால் மேற்கொள்ளப்படுகிறது. பால் உபரி காலத்தில் ஒரு விலையும்,
பால் வற்றுக் காலத்தில் சற்று அதிகமான விலையும் சாதாரணமாக நிர்ண
யிக்கப்படுகின்றன. 16—3—1984 முதல் எருமைப் பாலுக்கு ஒரு கிலோ
கொழுப்புச் சத்துக்கு ரூ. 38 விதமும், பசும் பாலுக்கு 1 கிலோ மொத்தச்
சத்துக்கு ரூ. 18 விதமும் கொடுக்கப்பட்டு வருகின்றன. சீதோஷ்ண
நிலையைக் கருத்தில் கொண்டு இந்த விலை தக்க சமயத்தில் மாற்றி அமைக்
கப்படும்.

திரு. சோ. அழகர்சாமி: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர்
அவர்கள் இந்தப் பால் கொள்முதல் விலை இரு காலங்களில் இரண்டுவிதமாக
அமைத்திருப்பதாகவும், மார்ச் மாதத்திற்குப் பின்னால் எருமைப்பாலுக்கு
ஒரு கிலோ கொழுப்புச் சத்துக்கு 38 ரூபாய் கொடுப்பதாகவும் சொன்னார்கள்.
இந்த விலை கூடக் குறைவுதான். இந்த விலையை உயர்த்த வேண்டும்
என்பது ஒன்று. மேற்கொண்டு இந்தக் கொழுப்புச் சத்து 7.5 இருந்தால்
மூன்று ரூபாய் கொடுக்க வேண்டும். இந்தக் கொழுப்புச் சத்தைக் கணக்கிடு
வதில் தவறுகள் நடைபெறுகின்றன என்று சொல்லப்படுகின்றது. ஆகவே,
பால் கொள்முதல் செய்யக்கூடிய யூனியன்களில் அல்லது இதர இடங்களில்
எலக்ரானிக் அளவு/மானியைப் அமைத்து, அந்தந்தச் சங்கத்திலிருந்து
கொண்டுவரப்படுகிற பாலைத் தனியாக பரிசோதித்துப் பார்த்து, அதற்கு
ஏற்ப விலை கொடுக்கப்படுமா? அப்படிச் செய்தால் இந்த தவறு நிகழாது
என்று கருதப்படுகிறது. ஆகவே, எலெக்ட்ரானிக் அளவு/மானியைப் பயன்
படுத்தவும், உரிய விலை கொடுக்கவும் அரசு ஏற்பாடு செய்யுமா என்று நான்
அறிய விரும்புகிறேன்.

[1984 எப்ரல் 28

(முற்பகல் 9-10)

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** தலைவரவர்களே, தவறுகள் நடைபெறாமல் இருக்க மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன ஆலோசனைப்படி தக்க நடவடிக்கை எடுக்க முயற்சி செய்யப்படும்.

**திரு. உ. சுப்பிரமணியன்:** தலைவரவர்களே, இந்த பால் விலையை நிர்ணயம் செய்வதைப் பொறுத்தவரையில், கிராமப்புறங்களிலும் நகரப் புறங்களிலும் தனியார் கொடுக்கக்கூடிய விலைக்கும், அரசுத் தரப்பில் கொடுக்கபபடுகிற விலைக்கும் அதிக விலை வித்தியாசம் இருப்பதால் பால், மாடு வைத்திருப்பவர்கள் தனியாருக்கு விற்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, இந்த விலை வித்தியாசம் இல்லாமல் இருக்க உற்பத்தியாளர்களுக்கு கூடுதலாக விலை கொடுக்க அரசு முயற்சி செய்யுமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** தலைவரவர்களே, தனியார் சில நேரங்களில் பாலுக்குக் கூடுதல் விலை கொடுப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் சில நேரங்களில் தனியார் அதிக விலை கொடுக்கிறார்கள் என்று சொல்லுகிறபோது, இன்னொன்றையும் பார்க்க வேண்டும். அவர்கள் பாலிலே தண்ணீரைக் கலந்து விற்கின்ற நடைமுறை எல்லாம் இருப்பதை அவர்கள் அறிவார்கள் என்று கருதுகிறேன். ஆக, அந்த முறையில் அவர்கள் இழப்பை ஈடுகட்டிக்கொள்கிறார்கள். ஆனால் கூட்டுறவு அமைப்பில் அந்த முறையைக் கையாள முடியாது. அதனால்தான் நியாய மான விலை கொடுக்கப்படுகிறது.

**திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்:** தலைவரவர்களே, இந்த விலை முன்பே நிர்ணயிக்கப்பட்டது. இப்போது இடுபொருள் விலை எல்லாம் ஏறியிருப்பதால் மேலும் விலையை கூட்ட வேண்டுமென்று அரசு வற்புறுத்துமா? அப்படிக் கொடுக்கிற விலையை நுகர்வோர்மீது சுமத் தாமல் அரசே, அரிசிக்கு மானியம் கொடுப்பதைபோல, மானியமாகக் கொடுத்து, நுகர்வோருக்கு விலை ஏற்றம் இல்லாமல் உற்பத்தியாளர்களுக்கு அதிக விலை கொடுக்க நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்பு கிறேன்.

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:** தலைவரவர்களே, இன்றைக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கிற விலை இறுதியான விலை அல்ல. அவ்வப்போது நிலைமைக்கு ஏற்ப, தகுந்த காலத்தில் விவசாயிகளுக்குக் கட்டுப்படியாகக் கூடிய விலை நிர்ணயம் செய்யப்படுகிறது.



1984 ஏப்ரல் 28]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண்கள் 686, 687, 688 மற்றும் 689 ஆகியவை மாண்புமிகு அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க தள்ளி வைக்கப்படுகின்றன.

**செயங்கொண்டம் தொகுதியில் நகரப் பேருந்து விடும் திட்டம்.**

690 (*வினா எண் 17423).—**திரு. பி. தங்கவேலு:** மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செயங்கொண்டம் தொகுதி உடையார்பாளையம் பேரூராட்சி வழியாகவோ அல்லது உடையார்பாளையத்திலிருந்தோ நகரப் பேருந்துகள் விடுவதற்கான குறிப்பு ஏதேனும் உண்டா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது விடப்படும்?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** (அ) மற்றும் (ஆ) ஆம், செயங் கொண்டத்திலிருந்து விளாங்குடி கைகாட்டி (வழி) உடையார்பாளையம், தத்தனூர் என்ற நகரத் தடத்திற்கான செயற்குறிப்பு உள்ளது. இத்தடத்தில் பேருந்து இயக்கத் தனியார், மற்றும் போக்குவரத்துக் கழகத்தினைச் சேர்ந்து 7 மனுக்கள் பெறப்பட்டு, வட்டாரப் போக்குவரத்து அதிகாரியின் முடிவுக்கு உள்ளது. வட்டாரப் போக்குவரத்து அதிகாரியால் முடிவு செய்யப்பட்டபின், இத் தடத்தில் பேருந்து விடப்படும்.

**திரு. பி. எம். தங்கவேல்ராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த உடையார்பாளையம் பேரூராட்சி வழியாக நகர்ப் பேருந்துகள் விடவேண்டுமென்று டெவலப்மெண்ட் கவுன்சிலில் பலமுறை மாண்புமிகு உறுப் பினர் தங்கவேலு அவர்கள் கோரிக்கைகளை எழுப்பியிருக்கிறார்கள். ஆனால் இதுவரையில் எந்த நடவடிக்கையும் எடுக்காமல் இப்போது ஆய்வில் இருப்பதாகச் சொல்கிறார்கள். இதற்கு முன்னுரிமை கொடுத்து, பேருந்து களை விடுவதற்கு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** நிலைமைகளுக்கேற்ப நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

**திரு. என். பழனிவேல்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, ஜெயங் கொண்டம் தொகுதியில் பல ஊர்களுக்குப் பேருந்துகள் விடுவதற்கு அரசு நடவடிக்கை எடுப்பதாகச் சொன்னார்கள். இந்த அரசினுடைய கொள்கை 1,500 மக்கள் வசிக்கக்கூடிய கிராமங்களுக்கும், மலைப் பகுதியாக இருந்தால், 1,000 பேர் வசிக்கக்கூடிய பகுதிகளுக்கும் பேருந்துகள் விடுவது முதல் வேலை

[1984 ஏப்ரல் 28

என்று சொல்லி, கடந்த 4 ஆண்டுகளுக்கு மேலாக ஆகிவிட்டது. ஆனால் 2,000, 3,000 பேர்கள் வசிக்கக்கூடிய ஊர்களுக்குக்கூட இன்னும் பஸ்கள் விடப் படாமல் இருக்கிறதே, அரசு எப்பொழுது அந்தக் குறையைத் நீர்த்து வைக்கும்?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மொத்தமாக எதையாவது சொல்லிவிட்டு போகக்கூடாது. இன்றைக்குக் கடைசி நாள் என்பதால், எல்லாவற்றையும் சொல்லி விடுவது என்று முடிவு எடுத்துவிட்டார் என்று கருதுகிறேன். எங்கெங்கே பேருந்துகள் தேவை என்று இருக்கிறதோ, அதையெல்லாம் பரிசீலித்து, நாம் வண்டிகளை விட்டுக் கொண்டிருக்கிறோம். ஏற்கனவே ஓடிக்கொண்டிருக்கின்ற வண்டிகளைப் பொறுத்தவரையில், எங்கெங்கே வசதிகளை செய்ய வேண்டுமோ, அதையும் செய்கிறோம். எனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுதிக் கொடுத்த அதையும் சேர்த்துப் பரிசீலித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, இப்படிப் பல்வேறு பகுதிகளிலும் பேருந்துகள் விட வேண்டு மென்று கோரிக்கைகள் வந்து கொண்டிருக்கின்றன. இந்தச் சூழ்நிலையில் ...யார் துறையைச் சேர்ந்தவர்கள் பல இடங்களில், பல வழித் தடங்களில் ...னுமதி பெற்று வைத்துக்கொண்டு, அந்தந்த பகுதிகளில் உள்ள கிராமங் களில் ஓட்டாமல் இருக்கிறார்கள். குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், திண்டுக்கல், ஆர்.டி.ஓ. பகுதியில் சுமார் 32 வழித் தடங்களில் ஓட்டாமல் இருக் கிறார்கள். இப்படி அனுமதி பெற்றுக்கொண்டு, ஓட்டாமல் இருக்கின்ற தனியார்களின் உரிமங்களை ரத்து செய்யுமா? அல்லது அவர்களைக் கட்டாயப்படுத்தி, கிராமப் பகுதிகளில் சிறப்பாகப் பேருந்துகளை விடுவதற்கு அரசு ஏதேனும் நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவர் அவர்களே, ஓர் இடத்திற்கு பேருந்து இயக்குவதாக உரிமம் வாங்கிக்கொண்டு, அந்தப் பேருந்து இயக்கப் படாமல் இருந்தால், வேண்டுமென்றே அவர்கள் இயக்காமல் இருந்தால், இருக் கின்ற சட்டத் திட்டங்களை வைத்துக்கொண்டு, எவ்வளவு கடுமையாக நடவ டிக்கை எடுக்க முடியுமோ, அவ்வளவு கடுமையாக நடவடிக்கை எடுக்க அரசு தயாராக இருக்கிறது; பல இடங்களில் நடவடிக்கை எடுத்துக்கொண்டும் இருக் கிறது. சில இடங்களில் அதிவேகமாக நடவடிக்கை எடுக்க முடியாத நிலைமை ஏற்பட்டால், அந்த மக்களுக்கு இடையூறு ஏற்படாத வண்ணம், பேருந்துக் கழகங்களே இயக்க வேண்டுமென்று நடவடிக்கை எடுத்துக் கொண்



1984 ஏப்ரல் 28]

டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அடிப்படையில் அந்தப் பகுதிகளில் கடுமையான நடவடிக்கைகளை எடுக்க, உத்தரவை அரசாங்கம் நாளைக்கே போட ஏற்பாடு செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஏ. டி. கருப்பையா:** தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் கூறும்போது ஜனத்தொகை அதிகமாக இருக்கின்ற பகுதி களில் பஸ்கள் விடப்படும் என்று சொன்னார்கள். நான் கேட்டுக்கொள்வது, பிளேன்டேஷன் ஏரியாவில், தேயிலைத் தோட்டக் காடுகளில் குறிப்பாக வால்பாறைப் பகுதியில் தேயிலைத் தோட்டத்தில் பணியாற்றுகின்ற ஆயிரக் கணக்கான தோட்டத் தொழிலாளர்கள் எஸ்டேட் வாரியாக இருக்கிறார்கள், அந்தப் பகுதிகளில் பேருந்துகளை எஸ்டேட் நிர்வாகம், அவர்களுக்குச் சொந்தமான சாலைகளில் விடுவதற்கு அனுமதி தர மறுக்கிறார்களே, அப்படி மறுக்கின்ற தோட்ட முதலாளிகள் மீது அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது உடையார்பாளையம் சம்பந்தப் பட்ட கேள்வி. தனிக் கேள்வி போட்டால் அவர் பதில் சொல்வார்.

**திரு. பெ. சு. திருவேங்கடம்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே சட்டமன்ற உறுப்பினர்கள் கோரிக்கைகளை ஏற்று, நகரப் பேருந்துகள் விடுவதற்கு முயற்சி எடுப்பதாக பொதுவாகச் சொன்னார்கள். அவர்கள் சொல்லியதுபோல நானும்கூட, பல மனுக்களைக் கொடுத்துள்ளேன். குறிப்பாக வடாற்காடு மாவட்டத்தில் செங்கம்-போளூர் பகுதிகளில் நகரப் பேருந்துகள் இல்லாமல் இருக்கின்றன. அவைகளை கவனிப்பார்களா?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியபடியே பல கோரிக்கைகளைக் கொடுத்து, அவற்றில் சில கோரிக்கை களை நிறைவேற்றியிருக்கிறோம் என்பது அவருக்கே தெரியும் எனக் கருது கிறேன். மீதம் இருக்கின்ற கோரிக்கைகள் குறித்து நிச்சயமாக நடவடிக்கை எடுப்போம் என்று நான்கு நாட்களுக்கு முன்பாக நானும் அவரும் தனியாக அமர்ந்து பேசும்போது உத்தரவாதம்கூட அளித்தேன். இன்றைக்கு எப்படி யாவது அது குறிப்பேட்டில் வரவேண்டும் என்பதற்காக சொல்லியிருக்கிறார். நான் இப்போதும் பின்வாங்கிவிடவில்லை. நிச்சயமாக தேவையான ஏற்பாடு களை அரசாங்கம் செய்யும் என தெரிவிக்க விரும்புகிறேன்.

[1984 ஏப்ரல் 28

(முற்பகல் 9-20)

**திரு. எல். இளையபெருமாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்கின்றபோது, திருச்சி மாவட்ட டெவலப்மென்ட் கவுன்சிலில் நீங்கள் கட்டாயம் விடவேண்டும் என்று சொல்லியிருந்தும், ஏன் இவ்வளவு காலதாமதம் ஆகிறது? உடனடியாக அதை விடுவதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவர் அவர்களே, புதிதாக 57-2 என்று நோட்டிபை செய்து நாம் மனுக்களை வாங்கிவிட்டால் ,அந்த வழித் தடத்திலே டெம்பரரி பெர்மிட் கொடுக்கக்கூடாது என்ற நிர்ப்பந்தம் இருக் கிறது. சட்டப்படி அதைக் கொடுக்க முடியாது. எனவே அதற்குப் பதிலாக இப்போது வேறு கொஞ்சம் தடத்தை மாற்றி கொடுக்க வேண்டும் என்ற கார ணத்தால், காலதாமதம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. இதே மனுவை பரிசீலனை செய்து கொடுத்துவிடலாமா என்ற ஏற்பாட்டைச் செய்துகொண் டிருக்கிற காரணத்தால், இந்தக் காலதாமதம். விரைவான நடவடிக்கை எடுப்பதற்கான ஏற்பாட்டைச் செய்வோம்.

**திரு. ஏ. பாலுச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேருந்து விடுவதற்கு உரிமங்கள் வழங்குகின்ற நேரத்தில், இவ்வளவு நாட் களுக்குள்ளாக பேருந்து விடவேண்டும், இல்லாவிட்டால், உரிமம் ரத்து செய் யப்படும் என்ற முறை அமுலாக்கப்படுமா என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட முறையிருக்கிறது. அப்படிப்பட்ட முறைகளை மீறுபவர்கள் மீது நடவ டிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறோம்.

கடலாடி ஊராட்சி ஒன்றியப் பகுதியில் பேருந்து விடும் திட்டம்.

691 (* வினா எண் 21671).—**திரு. வ. சத்தியமூர்த்தி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், கடலாடி ஊராட்சி ஒன்றியம், டி.எம். கோட்டை, டி. கரிசல்குளம், கொண்டுநல்லான்பட்டி, வாலம்பட்டி வழித் தடத்தில் பேருந்துவிடக் கோரிக்கை உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது விடப்படும்?



1984 ஏப்ரல் 28]

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** (அ) மற்றும் (ஆ) இராமநாதபுரம் மாவட்டம், கடலாடி ஒன்றியத்தைச் சேர்ந்த பகுதியான டி.எம். கோட்டையி லிருந்து சாயலகுடி (வழி) வாலம்பட்டி மற்றும் கொண்டுநல்லாள்பட்டி. பேருந்து விடக் கோரிக்கை பரிசீலனை செய்யப்பட்டு, அப்பகுதிச் சாலைகள் பேருந்து செல்ல ஏற்ற நிலையில் இல்லையென பரமக்குடி கோட்டப் பொறி யாளர் தெரிவித்ததன்பேரில், நடவடிக்கை கைவிடப்பட்டது. தற்போது அப் பகுதி மக்கள் சொந்த செலவில் மண்வேலை பார்த்து பேருந்து செல்ல ஏற்ற நிலையில் சாலையை வைத்திருப்பதாக தெரிவித்ததன் பேரில் மீண்டும் சாலையின் தன்மையை அறிந்து கோட்டப் பொறியாளரின் அறிக்கை தர வேண்டுமென்று கேட்கப்பட்டுள்ளது. அவ்வறிக்கை கிடைத்தவுடன் நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. வ. சத்தியமூர்த்தி:** பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதி மக்கள் சுமார் 10 கிராமத்தைச் சேர்ந்த 10 ஆயிரம் பேர்கள், 6 கி.மீ. தொலைவில் பேருந்து வசதி இல்லாமல், பல தடவை அரசை வலியுறுத்தி வந்திருக்கிறார்கள். அதோடு போராட்ட அறிவிப்பும் செய்து பிறகு கோட் டாட்சித் தலைவர் விரைவிலே பேருந்து விடுவேன் என்று வாக்குறுதி கொடுத் ததன் பேரில், கிராமச் செலவில் சுமார் 20 ஆயிரம் ரூபாய்ச் செலவு செய்து அந்தச் சாலையை புதுப்பித்து இருக்கிறார்கள். தற்போது ஊராட்சி ஒன்றி யத்தின் மூலம், நாம் வெள்ள நிவாரணத்திற்காக வழங்கப்பட்ட நிதியிலிருந்து 4 லட்சம் ரூபாய் செலவு செய்து அந்தச் சாலை புதுப்பிக்கப்பட்டு வருகிறது. ஆகவே விரைவிலே ஒரு மாதத்திற்குள் அந்தச் சாலையிலே பேருந்து விடுவ தற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆணையிடுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப் பினர் சொல்லும்போதே, போராட்டம் செய்கிறபோது அந்தப் பாதை சரியாக இல்லை என்று சொன்னார்கள். அதற்குப் பின்பு அந்தப் பொதுமக்கள் பணத்தைச் செலவழித்து இருக்கிறார்கள் என்றார்கள். ஆனால் இந்த அரசைப் பொறுத்தவரையில், அல்லது எல்லாப் போக்கு வரத்துக் கழகங்களைப் பொறுத்தவரையில், பாதைகள் சரியாக இருக்கு மானால், அந்த இடத்திலே பேருந்து விடுவதற்கு நிச்சயமாக தயக்கம் காட்டாது. மாண்புமிகு உறுப்பினர் சொல்லியதுபோல், 10 கி.மீ. தூரம் வரை பேருந்து இல்லாமல் இருக்குமானால், நிச்சயமாக 1 மாதம் அல்ல, அந்தப் பாதை தயாராக இருக்குமானால், ஒரு வார காலத்திற்குள்ளாக அங்கே வண்டி விடுவதற்கு ஏற்பாட்டைச் செய்வோம்.

**திரு. வ. சத்தியமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அந்தப் பகுதி கோட்டப் பொறியாளருடைய அறிக்கை கோரப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். அவர்களுடைய அறிக்கையை விரைவில் பெற்று, விரைவில் அதற்கு ஒரு தீர்வு காண அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த அறிக்கையைக் கொஞ்சம் விரைவாக அனுப்பி வைக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்:** தலைவர் அவர்களே, இந்தப் புதிய வழித்தடங்களில் பேருந்துகள் விடுவதைப் பற்றி முடிவு செய்வதற்கு டிஸ்ட்ரிக்ட் டிரான்ஸ்போர்ட் கமிட்டி என்ற ஒன்றை வைத்து அதிலே அரசுக்கு ஆலோசனை சொல்லி, அனுப்புகிறார்கள். அந்தக் கமிட்டியிலே தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் இல்லை. குறைந்தபட்சம் அந்தந்தத் தொகுதி சம்பந்தப்பட்ட அந்த வழித் தடங்களில் பஸ்கள் விடலாம் என்று அந்த டிஸ்ட்ரிக்ட் டிரான்ஸ்போர்ட் கமிட்டி முடிவு எடுக்கிறபோது, அந்தத் தொகுதி சட்டமன்ற உறுப்பினரை ஆலோசனைக்காகவாவது அந்தக் குழுவிலே சேர்க்க அரசு வழிவகை செய்யுமா?

**மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:** தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் பல்வேறு கமிட்டிகளிலே இருக்கிறார்கள். நேராக அதிகாரிகளைச் சந்தித்தோ, அல்லது தொலைபேசி மூலமாகவோ கடிதங்கள் மூலமாகவோ, அவர்களிடம் சொல்வதற்கான வாய்ப்பிருக்கிறது. மற்றவர்களுடைய கடிதங்களைப் போல உங்களுடைய கடிதங்கள் எடுத்துக்கொள்ளப் படுவதில்லை. உங்களுக்கு அதற்கு மேலே மரியாதை கொடுக்கின்ற வகையிலே அந்த மனுக்களை உடனடியாக பரிசீலிக்கின்ற வகையிலே உங்களுக்கு உரிமையிருக்கிறது. எனவே அப்படிப்பட்ட உரிமையிருக்கிறபோது, அதை விடக் கொஞ்சம் சாதாரணமாக இருக்கிற அந்தக் கமிட்டியிலே போட்டு, உங்களுடைய அந்த நிலைமையைக் குறைத்துவிடக் கூடாது என்ற காரணத்தால் தான், அதிலே நாங்கள் போடவில்லை. எனவே உங்களுக்கு அப்போதே, அந்த உரிமை, கமிட்டியிலே இருந்தாலும், இல்லாவிட்டாலும், அதிகமாக இருக்கிறது என்பதை புரிந்து வைத்திருந்தும் கூட அதை நீங்கள் கேட்பது அவ்வளவு சரியாக இல்லை. எனவே அது வேண்டாம் என்று நினைக்கிறேன்.

**திரு. எஸ். சிவராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் பஸ் இல்லாத இடங்களுக்கெல்லாம் பஸ் விடப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதை வரவேற்கிறேன். இப்போது கள்ளக்குறிச்சியிலிருந்து சென்னைக்கும், சென்னையிலிருந்து கள்ளக்குறிச்சிக்கும் . . . .



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மூலக் கேள்வி இராமநாதபுரம் மாவட்டத்தைப் பற்றியது. அனுமதி மறுக்கப் பெறுகிறது.

**செயல்படாமலிருக்கும் தாட்கோ செங்கை உப கோட்டம்.**

692—(*வினா எண் 21237)—திரு. சி. கணேசன்): மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாட்கோ செங்கை உப-கோட்டம் செயல்படாமல் நிறுத்தப்பட்டு விட்டது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அதை மீண்டும் செயல்படுத்த அரசு பரிசீலிக்குமா?

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி:** (அ) ஆம்.

(ஆ) இதனை மீண்டும் பரிசீலனை செய்ய அவசியம் இல்லை.

**திரு. சி. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாட்கோ செங்கை உபகோட்டம் செயல்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டது, பரிசீலிக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் தாட்கோ, செங்கை உபகோட்டத்தை, செங்கையிலிருந்து மாற்றி, வடக்கு செங்கற்பட்டு மாவட்டத்தின் கோடியில் கொண்டு போய் அமைத்து இருப்பதாகச் சொல்லப் படுகிறது. அதற்கு காரணமாக சொல்லும்போது, ஏற்கெனவே இருந்த இடத்திலே அந்த சிப்பந்திகளுக்கு சி.சி.ஏ., எச்.ஆர்.ஏ. கிடைக்காது. ஆகவே யாருடைய சிபாரிசாலோ இப்படி அமைக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறதே; தேவைக்குரிய இடத்தில் வேண்டும் என்று மக்கள் வேண்டிக் கொண்டிருக்கும்போது, இந்த நிலை ஏற்பட்டிருப்பதை அரசு உணருமா? அப்படித் தெரிந்திருந்தால் அதற்கு என்ன விளக்கம் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் விடை சொல்லும்போது பரிசீலிக்கப்படும் என்று சொல்லவில்லை. பரிசீலனை செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்றுதான் சொல்லியிருக்கிறேன். இந்த உப கோட்டத்தைப் பொறுத்தவரையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கிற காரணத்திற்காக, அங்கேயிருந்து மாற்றப்படவில்லை.

ஏனைய உப கோட்டங்களில் உள்ள வேலை பளுவைப் பார்க்கிற நோக்கில், செங்கற்பட்டு உப கோட்டம் மிகக் குறைந்த அளவு வேலை பளுவை கொண்டிருப்பதால், அங்கு தனியாக ஒரு உபகோட்டம் தேவையில்லை, அது அங்கே இயங்க வேண்டிய அவசியம் இல்லை என்று ஒரு முடிவு எடுக்கப்பட்டு, இயக்குநர் கூட்டத்திலே முடிவு எடுக்கப்பட்டு, தற்போது செங்கற்பட்டு உப கோட்டத்தை திருவள்ளுவர் உபகோட்டத்தோடு இணைப்பதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு. உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கக்கூடிய காரணத்தின் அடிப்படையில் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**சேலம் உருக்காலைத் திட்டத்திற்கு நில ஆர்ஜிதம் செய்யப்பட்டபோது பாதிக்கப்பட்ட குடும்பங்கள்.**

693—(* வினா எண் 22652)—திரு. செ. செம்மலை: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை அளிப்பாரா—

(அ) சேலம் உருக்காலைத் திட்டத்திற்கென்று நில ஆர்ஜிதம் செய்யப்பட்டபோது பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தைச் சார்ந்தவர்களுக்கு இது வரை அளித்துவந்த வேலைவாய்ப்பில் முன்னுரிமையை நிறுத்த உத்தரவிடப்பட்டிருப்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அவர்களுக்கு மீண்டும் முன்னுரிமை அளிக்க அரசு பரிசீலிக்குமா ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: (அ) சேலம் உருக்காலைத் திட்டத்திற்காக ஆர்ஜிதம் செய்யப்பட்டபோது பாதிக்கப்பட்ட நில உரிமையாளர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தைச் சார்ந்தவர்களுக்கு வேலைவாய்ப்பில் அளிக்கப்பட்ட முன்னுரிமையை நிறுத்த எவ்வித ஆணையும் வெளியிடப்படவில்லை. அரசு ஆணை எண் 188, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை (பணியாளர்-பி), நாள் 28—12—1976-ன்படி அரசு நிறுவனங்கள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களுக்கு நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டால், அந்நிலத்தின் முன்னாள் உரிமையாளர்களின் குடும்பத்தினருக்கு வேலைவாய்ப்பு அலுவலகத்தின் மூலம் மாநில அரசு அலுவலகங்களால் நிரப்பப்படும் பணியிடங்களுக்குப் பரிந்துரைக்கும்பொழுது முன்னுரிமை வழங்க வேண்டும் என்று உள்ளது. அரசு, பணியாளர் மற்றும் நிருவாக சீர்திருத்தத் (பணி-ஆர்), துறை கடித எண் 62134/83-2, நாள் 8—9—1983-ல் அரசு மற்றும் அரசுத் துறையைச் சார்ந்த நிறுவனங்களுக்காக ஆர்ஜிதம்



செய்யப்பட்ட நிலத்தின் முன்னாள் உரிமையாளர்களுக்கு "இழப்புத் தொகையும், அபிவிருத்தி செய்யப்பட்ட மனையும் வழங்கப்பட்டிருந்தால்" அவர்களுக்கு வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மூலம் பரிந்துரை செய்யும் பணிகளுக்கு முன்னுரிமை அளிக்க தேவையில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

(முற்பகல் 9-30)

திரு. எல். இளையபெருமாள்: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது முதலில், நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டால் அதன் முன்னாள் உரிமையாளர் குடும்பத்தினருக்கு வேலைவாய்ப்புக்கு பரிந்துரைக்கும்போது முன் உரிமை வழங்கப்படும் என்று சொன்னார்கள். பின்னர், இழப்புத் தொகையும், அபிவிருத்தி செய்யப்பட்ட மனையும் வழங்கப்பட்டிருந்தால் முன்னுரிமை அளிக்க தேவையில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். இந்த இரண்டும் இல்லாமல் நிலம் எடுக்கப்பட்டு, படிப்புத் தகுதி இருந்து கேட்பவர்களுக்கு வேலை கொடுக்கவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா ? அப்படிப்பட்ட நிரபராதிகளுக்குக் கொடுக்கப்படாமலிருந்தால் உடனடியாக உத்தரவு கொடுத்து அவர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: தலைவர் அவர்களே, எடுக்கப்பட்டிருக்கக்கூடிய நிலத்தைப் பொறுத்தவரையில் முன்னாள் உரிமையாளர்களுக்கு இழப்புத் தொகையும் அபிவிருத்தி செய்யப்பட்ட மனையும் வழங்கப்பட்டிருந்தால் அவர்களுக்கு வேலைவாய்ப்பு அலுவலகங்களின் மூலம் முன் உரிமை அளிக்க வேண்டியதில்லை என்றிருக்கிறது. இவை இரண்டுமே இல்லாதவர்களுக்கு கொடுக்கவில்லை என்று உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். குறிப்பாக சேலத்தைப் பொறுத்தவரையில் உருக்காலைத் திட்டத்திற்காக நிலங்கள் கொடுத்திருக்கக்கூடியவர்களுக்கு மொத்தமாக வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து இந்த உருக்காலைத் திட்டத்திற்காக நில ஆர்ஜிதம் செய்யப்பட்டதன் தொடர்பாக 31—3—1984-ம் நாள் நிலவரப்படி வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்திருப்பவர்கள் 731 பேர்கள். இவர்களில் சேலம் உருக்காலைத் திட்டத்தின் கீழ் 191 பேர்களுக்கு வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது. அரசாங்கம் மற்றும் வேறு துறைகளில் 214 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே ஏறத்தாழ 405 பேர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கித் தரப்பட்டிருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன். இது தவிர நில

ஆர்ஜிதம் செய்யப்பட்டு, இழப்புத் தொகையும், அபிவிருத்தி செய்யப்பட்ட மனையும் வழங்கப்படவில்லை என்பதற்கான சான்றிதழ் பெற்று 56 நபர்கள் விண்ணப்பித்திருக்கிறார்கள். ஏனையோர் இத்தகைய சான்றிதழ்கள் வேண்டுமென்று மாவட்ட ஆட்சியரிடத்தில் தங்கள் குறைகளை முன்வைத்துள்ளார்கள் என்று வேலைவாய்ப்பு இயக்குனர் தெரிவித்திருக்கிறார்கள். இவர்களுக்கும் மாவட்ட ஆட்சியர் அப்படிப்பட்ட சான்றிதழ்களைத் தந்தால் அவர்களுக்கும் வேலைவாய்ப்பு அளிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கைகள் எடுக்கும்.

**திரு. சோ. அழகர்சாமி :** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது ஒரு தொழிற்சாலைக்கு நிலம் கொடுத்தவர்களுக்கு, நில ஆர்ஜிதம் மூலம் பாதிக்கப்பட்டவர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுப்பது சம்பந்தமாக, இழப்புத் தொகையும், அபிவிருத்தி செய்யப்பட்ட மனையும் வழங்கப்பட்டிருந்தால் அவர்களுக்கு பணிகளுக்கு முன்னுரிமை அளிக்கத் தேவையில்லை என்று கண்டிஷன் போடுகிறார்கள். ஒரு தொழிற்சாலைக்கு நிலம் கொடுக்கிறவர்களுக்கு அதன் மதிப்பில் அரைப் பங்கு அல்லது கால் பங்கு அளவிற்கு கிரயம் கொடுக்கிறார்கள். ஒருவர் நிலத்தை இழந்துவிட்டால் அவர் வேறு தொழில் செய்து பிழைக்க வாய்ப்பில்லாமல் போய் விடுகிறது. எல்லாத் தொழிற்சாலைகளுக்கும் இப்படி நிலம் ஆர்ஜிதம் செய்யும்போது அப்படி நிலத்தை இழக்கிறவர்களுக்கு வேலை கொடுப்பதாகச் சொல்கிறார்கள், ஆனால் வேலை கொடுக்கப்படுவதில்லை. இந்துஸ்தான் மோட்டார் கம்பனியிலும் அப்படி வேலை கொடுக்கிறோம் என்று சொல்லி பத்து ஆண்டுகளாக வேலை கொடுக்கப்பட வில்லை. அதே போல் ஆலங்குளம் சிமெண்ட் பாக்டரி. ஆகவே ஒரு கடுமையான உத்தரவு போடுவதற்கு—தொழிற்சாலைகளுக்கு நிலம் கொடுப்பவர்களுக்கு அல்லது நிலம் இழப்பவர்களுக்கு அந்தக் குடும்பத்தில் உள்ளவருக்கு தகுதிக்கேற்ப, அவர்கள் எவ்வளவு படித்திருக்கிறார்கள் என்பதைப் பார்த்து, ஒரு குடும்பத்தில் ஒருவருக்காவது வேலை கொடுப்பதற்கான கண்டிப்பான உத்தரவை இந்த அரசு பிறப்பிக்குமா ?

**மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி :** தலைவர் அவர்களே, அரசாங்க நிறுவனங்கள் மற்றும் பொதுத் துறை நிறுவனங்களுக்கு நில ஆர்ஜிதம் செய்யப்பட்டால் அந்நில உரிமையாளரின் குடும்பத்தில் ஒருவருக்கு வேலை வாய்ப்பு அலுவலகங்கள் மூலம் வேலைக்கு பரிந்துரைக்கும்போது முன்னுரிமை அளிக்கவேண்டும் என்று அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இது தவிர நிலங்களுக்குத் தேவையான நஷ்டஈடு தருகிறார்கள். இது தவிர மைய அரசின் வேண்டுதலின்பேரில் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டு அந்தக்



குடும்ப வாழ்விற்கு இந்த நிலத்திலிருந்து வரும் வருமானமே முக்கியமாயிருப்பின் அப்படிப்பட்ட குடும்பங்களிலிருந்து ஒரு நபரையாவது பொதுத்துறை நிறுவனங்களில் மட்டும் வேலைவாய்ப்பகங்களை கலந்து கொள்ளாமல் நேரடியாக நியமனம் செய்யலாம என்றும் அரசு ஆணை பிறப்பித்துள்ளது. அந்த அடிப்படையில் தொடர்ச்சியான நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்கும்.

### 1981-82 ஆம் ஆண்டில் பிற்பட்ட வகுப்பினர் பட்டியலில் சேர்க்கப்பட்ட பிரிவினர்கள்.

694—(* வினா எண் 18164)—திரு. பாபு ஜனார்த்தனன் : மாண்புமிகு பிற்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை அளிப்பாரா—

1981-82 ஆம் ஆண்டு எந்தெந்த பிரிவினர்கள் பிற்பட்ட வகுப்பினர் பட்டியலில் சேர்க்கப்பட்டனர் ?

**மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் :** 1981-82-ம் ஆண்டில் எந்த பிரிவினரும் பிற்பட்டோர் வகுப்பு பட்டியலில் சேர்க்கப்படவில்லை. எனினும், மேற்படி ஆண்டில், "ராவுத்தர்" மற்றும் "மரக்காயர்" எனும் இரு உட்பிரிவுகள் மட்டும் ஏற்கனவே இருந்து வரும் "லப்பை" எனும் தலைப்பில் பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்கப்பட்டன.

**திரு. கி. அன்பழகன் :** தலைவர் அவர்களே, பிற்பட்ட வகுப்பினர் பட்டியலில் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டு செல்வதால் இதை பிற்பட்டவர்கள், மிகவும் பிற்பட்டவர்கள் என்று இரண்டாகப் பிரிக்க அரசாங்கம் ஆவன செய்யுமா ?

**மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் :** தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட கருத்து அரசாங்கத்திற்கு இல்லை.

**திரு. வ. சத்தியமூர்த்தி :** தலைவர் அவர்களே, பறவைகளை வேட்டையாடி தங்கள் வாழ்க்கையை நடத்துகிற காட்டு நாயக்கன் என்ற வகுப்பினர் தங்களை எந்த வகுப்பிலும் சேர்க்கவில்லை, தங்களை தாழ்த்தப்பட்டவர்கள் வகுப்பில் சேர்க்க வேண்டுமென்று விண்ணப்பித்தும் அவர்களை முற்பட்டவர்கள் வகுப்பில் சேர்த்திருப்பதாக அரசாங்கக் குறிப்பில் காணப்படுகிறது. அவர்கள் மீண்டும் அரசிடம் முறையிட்டிருக்கிறார்கள். அதன் மீது என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்பதை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் பழங்குடி மக்கள் பட்டியலில் இருக்கிறார்கள். இதற்கு மாண்புமிகு ஆதிதிராவிட நலத் துறை அமைச்சர் அவர்களிடம் கேட்டால், உருப்படியான பதில் கிடைக்கும்.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறவர் சமூகத்தைச் சார்ந்தவர்கள் பல முறை மனுக்களைக் கொடுத்து, தங்களை எஸ்.சி. பட்டியலில் சேர்க்க வேண்டுமென்று வேண்டியும் கூட அவர்கள் இன்னும் அந்தப் பட்டியலில் சேர்க்கப்பட வில்லை. அதற்கு என்ன காரணம் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றிய தகவல் இல்லை. தனிக் கேள்வி போடவும்.

**திரு. ப. நெடுமாறன் :** மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, பல்வேறு சமூகத்தினர் தங்களை பிற்பட்டோர் பட்டியலில் சேர்ப்பது பற்றி உறுப்பினர்கள் பல்வேறு கேள்விகளைக் கேட்டு, அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள்: ஆனால், அதைப் பற்றி ஆராய்ந்து முடிவு சொல்வதற்கு பிற்பட்டோர் நலக் கமிஷன் அமைத்திருக்கும்போது, அமைச்சர் அவர்கள் இதிலே அரசாங்கம் முடிவெடுக்கும் என்று சொல்லுகிறாரா அல்லது கமிஷனுடைய பரிந்துரைகள் மீது அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் என்று அவர் சொல்ல விரும்புகிறாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்பட்டோர் பட்டியலில் சேர்ப்பது பற்றிய கோரிக்கைகளை எல்லாம் பிற்பட்டோர் நலக் கமிஷன் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. அந்த அறிக்கை கிடைத்த பின்னால், அரசு அதைப்பற்றி முடிவு எடுக்கும்.

**டாக்டர் கே. சமரசம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் கர்நாடக எல்லையோரப் பகுதிகளில் குறிச்சான் என்ற சமூகத்தினர் இருக்கிறார்கள். கர்நாடகத்தில் அவர்களை மலைவாழ் மக்கள் பட்டியலில் சேர்த்திருக்கிறார்கள். ஆனால், இங்கே மலைவாழ் மக்கள் பட்டியலில் சேர்க்காமல், பிற்பட்டோர் பட்டியலிலும் சேர்க்காமல், ஷெடியூல் காஸ்டிலும் சேர்க்காமல் இருப்பதுபற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? ஆகவே, அதைப் பரிசீலித்து அவர்களை மலைவாழ் மக்கள் பட்டியலில் சேர்க்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய துறை பிற்பட்டோர் நலத் துறை. மலைவாழ் மக்கள் பட்டியலில் சேர்க்க வேண்டுமென்றால், அது மத்திய அரசாங்கத்தின் அதிகாரத்திற்கு உட்பட்டது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**திரு. செ. இராமலிங்கம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்பட்டோர் வகுப்பினர் பட்டியலை மண்டல் கமிஷன் அறிக்கையின் அடிப்படையில் மாற்றியமைக்க அரசு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மண்டல் கமிஷன் 21 சதவிகிதம் வேண்டுமென்று சொல்லுகிறதே தவிர, இன்னும் அதிலே எந்தவிதமான உருப்படியான உத்தரவையும் மத்திய அரசு போடவில்லை. ஏற்கனவே 31 சதவிகிதம் என்றிருந்ததை, நாம் 50 சதவிகிதம் ஆக ஆக்கியிருக்கிறோம். மண்டல் கமிஷன் அறிக்கை பரிந்துரையை நாம் ஏற்கனவே செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம்.

### எட்டயபுரம் நகரத்திலுள்ள பிற்பட்டோர் நல மாணவர் விடுதி

695—(* வினா எண் 19663)—**திரு. சோ. அழகர்சாமி :** மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம் எட்டயபுரம் நகரத்திலுள்ள பிற்பட்டோர் நல மாணவர் விடுதியில் மாணவர் எண்ணிக்கையை உயர்த்த அரசு துரித நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் :** திருநெல்வேலி மாவட்டம் எட்டயபுரம் நகரத்திலுள்ள பிற்பட்டோர் நல மாணவர் விடுதியிலுள்ள மாணவர் எண்ணிக்கையை உயர்த்தும் செயற்குறிப்பு எதும் அரசின் பரிசீலனையில் இல்லை

[1984 ஏப்ரல் 28

(முற்பகல் 9-40)

திரு. சோ. அழகர்சாமி: தலைவர் அவர்களே, அது மிகப் பிற்படுத்தப்பட்ட ஒரு பகுதியாக இருப்பதன் காரணமாகவும் அந்த மேல்நிலைப் பள்ளியைச் சுற்றி 7, 8 மைல்களுக்கு அப்பால் இருந்து அந்தப் பிள்ளைகள் இங்கே வந்து படிப்பதற்கு மிகவும் சிரமமாக இருப்பதன் காரணமாகவும்— அந்த இடத்திலே இனியும் 100 குழந்தைகள் இருந்து படிப்பதற்கு வசதிகள் இருக்கின்றன. ஆகவே—அந்த எண்ணிக்கையைக் கூடுதலாக்க அமைச்சர் அவர்கள் பரிசிலனை செய்வார்களா ?

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன்: தலைவர் அவர்களே, போதிய இட வசதி அங்கே இருக்குமானால் அரசு அதைப்பற்றிப் பரிசீலிக்கும்.

**சார்ட்டட் அக்கௌண்டன்சி தேர்வுக்குரிய பயிற்சி பெறும் பிற்பட்ட மாணவர்களுக்கான அரசின் உதவி.**

696-(* வினா எண் 21136)—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாநிலத்தில் உள்ள பின்தங்கிய மாணவர்கள் (Chartered Accountancy) தேர்வுக்குப் பயிற்சிபெற அரசு ஏதேனும் சிறப்பு ஏற்பாடுகள், உதவிகள் செய்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன்: (அ) மற்றும் (ஆ) பிற்பட்ட மாணவர்களுக்கு சார்ட்டர்ட் அக்கௌண்டன்சி தேர்வுக்குரிய பயிற்சி அளிக்கும் திட்டம் ஏதும் இல்லை, எனினும் அவர்களுக்கு உதவித் தொகை வழங்கப்படுகிறது.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: தலைவரவர்களே, இந்த பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு சார்ட்டர்ட் அக்கவுண்டன்சி தேர்வு எழுதுவதற்கு பயிற்சி அளிக்கபபடவில்லை. ஆனால் உதவித் தொகை வழங்கப்படுகிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். 1971-72 ஆம் ஆண்டு இந்த உதவித் தொகை அளிக்கப்படுகிறது. எத்தனை மாணவர்களுக்கு மாநில அரசு உதவித் தொகை வழங்குகிறது ? இந்த உதவித் தொகையை ஏற்றிக் கொடுப்பதற்கு அரசிடம் ஏதாவது செயற்குறிப்பு இருக்கிறதா, என்பதை அறிய விரும்புகிறேன்.



1984 ஏப்ரல் 28]

மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன்: தலைவர் அவர்களே. சார்ட்டேர்ட் அக்கவுண்டன்சி பயிலும் மாணவர்களுக்கு உதவித் தொகை வழங்கும் திட்டம் 1973-74 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு கீழ்க்கண்ட விதத்தில் உதவித் தொகைகள் வழங்கப்படுகின்றன. பாடமுறை ஆர்டிக்கில் கிளர்க்—மூன்று ஆண்டுகள் படிப்புக் கட்டணம், பதிவுக் கட்டணம், தபால் மற்றும் எழுதுபொருள் கட்டணம், புத்தகக் கட்டணம் உள்பட முதலாண்டு ரூ. 475, இரண்டாம் ஆண்டு 270 ரூபாய், மூன்றாம் ஆண்டு 270 ரூபாய். பாட முறை—ஆடிட் கிளார்க் நான்காண்டுகள். இதற்கு முதலாண்டில் 435 ரூபாய்; இரண்டாம் ஆண்டு 235 ரூபாய், மூன்றாம் ஆண்டு 235 ரூபாய், நான்காம் ஆண்டு 230 ரூபாய், மேலும் உண்டி, உறையுள் கட்டணம் மாதம் ஒன்றுக்கு ரூ. 45 வீதம் வழங்கப்படுகிறது. மேலும் வணிகவியல் பட்டதாரிகள் அல்லாத மற்ற பட்டதாரி மாணவர்களுக்கு ரூ. 50 மட்டும் மேற்கண்ட கட்டணத் தொகையுடன் கூடுதலாக வழங்கப்படும். மாநிலம் முழுவதும் 30 பிற்பட்ட, மிகவும் பிற்பட்ட குற்றப்பரம்பரையிலிருந்து நீக்கப்பட்ட மாணவர்களுக்கு மட்டும் ஒரு ஆண்டுக்கு புதிய உதவித் தொகைகள் வழங்கப்படுகின்றன. ஆனால் புதுப்பித்த உதவித் தொகைகள் அனைத்து மாணவர்களுக்கும் வழங்கப்படுகின்றன. புதுப்பித்தல் உதவித் தொகைகள் பொறுத்தவரையில் உதவித் தொகை வழங்கப்படும், மாணவர்கள் எண்ணிக்கையில் உச்ச வரம்பு ஒன்றும் இல்லை. மாநிலம் முழுவதும் 30 மாணவர்களுக்கு வழங்கப்படுகிறது. மேற்படி திட்டத்தின் கீழ் 1982-83-ல் சுமார் 85 மோணவர்கள் பயனடைந்துள்ளனர்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: தலைவர் அவர்களே, இந்த சார்ட்டர்டு அக்கவுண்டன்சி தேர்வு எழுதுவதற்கு பயிற்சியாளர்களாக சார்ட்டர்டு அக்கவுண்டண்ட் தொழில் நடத்துகிறவர்களிடம் சேரவேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆகவே தாழ்த்தப்பட்ட பிரிவிலிருந்தும் குறிப்பிட்ட பகுதியினரை, ஒரு குறிப்பிட்ட பிரிவினரை பயிற்சிக்கு சேர்க்கிற ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆகவே தாழ்த்தப்பட்ட பிரிவிலிருந்து பிற்பட்ட பிரிவிலிருந்தும் மிக உயர்ந்த பதவிக்குப்போகிற வாய்ப்பை உருவாக்கக்கூடிய முறையில் பெறுகிற வாய்ப்பே இல்லாமல் இருக்கிறது. ஆகவே குறைந்த பட்சம் இத்தனை சதவீதம் பின்தங்கியவர்களை தொழில் நடத்துகிறவர்கள் பயிற்சியாளர்களாக எடுத்துக் கொள்ள வேண்டுமென்ற முறையிலே குறைந்த பட்சம் இத்தனை சதவீதம் தாழ்த்தப்பட்டவர்களை தொழில் நடத்துகிறவர்கள் பயிற்சியாளர்களாக எடுத்துக் கொள்ள வேண்டுமென்றும் ஒரு நிலை வந்தால் தாழ்த்தப்பட்டவர்களும் பிற்பட்டவர்களும் அந்தத் தொழிலுக்குப் போகிற சூழ்நிலை ஏற்படும், ஆகவே அதைத்

கட்டுப்படுத்துகிற அதிகாரம் மாநில அரசுக்கு இல்லாமல் இருந்தாலும் இந்தத் தேர்வுகளை நடத்துகின்ற மத்திய அரசு தேர்வாணைக் குழு அப்படிப் பட்ட நடைமுறையைப் பின்பற்ற வேண்டுமென்றும் தாழ்த்தப்பட்டவர் களுக்கும் பிற்பட்டவர்களுக்கும் கட்டாயமாக இத்தனை சதவீதம் கொடுக்க வேண்டிய முறையில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ஆர். கோவேந்தன் :** தலைவர் அவர்களே, இது ரொம்ப முக்கியமான கேள்வியாக இருக்கிறது. உறுப்பினருடைய கருத்தை எண்ணத்தில் கொண்டு இந்த அரசு மத்திய அரசுக்கு எழுதும்.

**வடாற்காடு மாவட்டத்தில் பட்டுப்புழு அபிவிருத்தி நிலையம் அமைக்கும் திட்டம்.**

697-(*வினா எண் 17107)—**திரு. பெ. சு. திருவேங்கடம் :** மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வடாற்காடு மாவட்டத்தில் 1982-83-ல் பட்டுப்புழு அபிவிருத்தி நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரமென்ன ?

(இ) எந்த இடத்தில் ஆரம்பிக்கப்படும் ?

**மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் :** (அ) ஆம்.

(ஆ) கிராமிய இளம்புழு வளர்ப்பு மையங்கள், மாதிரி இளம்புழு வளர்ப்பு மையங்கள் அமைக்க அரசு அனுமதி அளித்துள்ளது.

(இ) 1982-83-ம் ஆண்டு திம்மியாம்பேட், பாச்சூர், ஆண்டியப்பனூர், கீழ்ப்பென்னாத்தூர் ஆகிய இடங்களில் கிராமிய இளம்புழு வளர்ப்பு மையங் களும், ஜவ்வாது மற்றும் ஏலகிரி மலைப் பகுதியில் மாதிரி இளம் பட்டுப்புழு வளர்ப்பு மையங்களும் நிறுவ அரசு அனுமதி வழங்கியது. மேற்படி மையங்கள் நிறுவப்பட்டு செயல்பட்டு வருகின்றன.

**திரு. பெ. சு. திருவேங்கடம்:** தலைவர் அவர்களே, இந்தப் பட்டுப் பூச்சி புழுக்கள் வளர்க்கிற இடங்களைப்பற்றி வடஆற்காடு மாவட்டத்திலே உள்ளவைபற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஜவ்வாது, ஏலகிரி மலைப் பகுதியில் அதிகமாக மக்கள் வேலையில்லாமல்—சந்தனமரம்



வெட்டுகிற கால கட்டங்களில்தான் வேலை—மற்ற நாட்களில் அரசாங்கம் வெட்டுகிற கால கட்டங்களில்தான் வேலை—மற்ற நாட்களில் அதிகமாக வேலையில்லாமல் இருக்கிறார்கள், அவர்கள் பிழைக்கக்கூடிய முறையிலே தனிப்பட்டவர்கள் பட்டுப் பூச்சியை வளர்த்து நூல் ஆக்கு கின்ற தொழிற்சாலையை நடத்துகிறார்கள். அதனால் அவர்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கக்கூடிய சூழ்நிலை ஏற்படுகிறது. ஆகவே அரசாங்கத்தின் சார்பிலேயே ஒரு பட்டுப் புழு வளர்ப்பு, நூல் உற்பத்தி போன்ற தொழில்களை செய்கின்ற முறையிலே ஒரு தொழிற்சாலையை ஆரம்பித்து அந்த ஜவ்வாது, ஏலகிரி மலைப் பகுதிக்கு ஒரு முக்கியத்துவம் கொடுத்து ஆரம்பிக்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் :** தலைவர் அவர்களே; ஒருங் கிணைந்த மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் புதூர்நாடு, அம்ருதின் மலைப்பகுதியில் இளம்புழு மையம் அமைக்கவேண்டி 1984-85 ஆம் ஆண்டில் அனுமதிப்பதுபற்றி அரசின் சமூக நலத் துறையில் பரிசீலனையில் உள்ளது.

**திரு. பெ. சு. திருவேங்கடம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரிசீலனையில் உள்ளதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். நான் ஏற்கனவே சொல்லியது போல் தனியார்கள் பெங்களூர் போன்ற நகரங்களில் இருந்து அந்தப் பட்டுப்புழு கூடுகளை வாங்கி வந்து அதை முறைப்படி நூலாக தயாரித்து வருகிறார்கள். ஆனால் அரசாங்கம் அந்தத் தொழிலை ஜவ்வாது, ஏலகிரி பகுதியில் ஆரம்பித்தால் மிகவும் லாபகரமாக நடக்கும். அதனால் அங்குள்ள மலைவாழ் மக்களுக்கு வேலை கிடைக்கின்ற நல்ல வாய்ப்பும் இருக்கிறது. ஆகவே இதில் இந்த அரசு மிகவும் சிரத்தை எடுத்துக்கொண்டு, அதற்கு மத்திய அரசு ஏராளமான உதவி செய்ய இருக்கிற காரணத்தால் இந்த உதவியைப் பெற்று இந்தத் தொழிலை அங்கே ஆரம்பிக்க அரசு தீவிர நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது நல்ல யோசனை. அதைப் பற்றி அரசு பரிசீலிக்கும்.

**திரு. தி. அன்பழகன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுப்புழு வளர்ப்பு மையங்கள் மூலம் பட்டுத் தொழில் வளர்ப்பதற்கு அதை வேகப்படுத்துவதற்கு அரசு ஏதாவது சிறப்பு செயல் திட்டம் வைத்து இருக் கிறதா? அதற்காக ஏதாவது நிதி ஒதுக்கீடு செய்து இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. அருணாசலம்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுப்புழு வளர்ப்பு மையங்கள் அமைப்பது பற்றி அரசு எல்லா வகையிலும் எல்லா நடவடிக்கையும் எடுத்து வருகிறது.

**திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பட்டுப்புழு உற்பத்தி செய்வதில் வேலை செய்கின்ற தொழிலாளர்களுக்கு நாம் நிர்ணயித்து இருக்கின்ற குறைந்தபட்சம் சம்பளம் கிடைக்காமல் இருக்கிறது. அவைகள் கிடைப்பதற்கு அரசு ஏதாவது உத்தரவு போட முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. அருணாசலம்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றி தகவல் எதும் இல்லை.

**திரு. இ. எஸ். எம். பக்கீர் முகமது** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பட்டுப்புழு அபிவிருத்தி நிலையங்களை எல்லா மாவட்டங்களிலும் வட ஆற்காடு மாவட்டத்தில் மட்டும் அல்ல தமிழ்நாட்டில் உள்ள எல்லா மாவட்டங்களிலும் இப்படிப்பட்ட ஒரு அமைப்பை அமைப்பதற்கு செயற்குறிப்பு உள்ளதா ? தமிழ்நாட்டின் மூலப்பொருளுக்கு இது முக்கியமாக தேவைப்படுகிற காரணத்தால் அது சம்பந்தப்பட்ட இலாக்கா அமைச்சர் அவர்கள் இங்கே இருக்கிறார்கள். அதை அதிகமாக வெளி மாநிலங்களிலிருந்து வாங்கக்கூடிய நிலை இருக்கிற காரணத்தால் அதை தமிழ்நாட்டிலேயே அதிகமாக உற்பத்தி செய்வதற்கு அரசு முயலுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. அருணாசலம்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முன்பு சொல்லியது போல் இளம்பட்டுப்புழு மையங்கள் அமைப்பதற்கு அரசு எல்லா வகையிலும் எல்லா உதவியும் செய்யும்.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுப் புழுவை வளர்க்கின்ற அந்த சிறிய தொழிலாளர்கள் அதை உற்பத்தி செய்து அதை விற்பனை நிலையங்களில் கொடுக்கும்போது அவர்கள் அதற்குரிய பணத்தை உடனே கொடுக்காமல் 1 மாதம் கழித்து வாருங்கள், 2 மாதம் கழித்து வாருங்கள் என்று சொல்லுகிற காரணத்தால் அதிலே அவர்களுக்கு ஒரு அதிருப்தி ஏற்பட்டு அந்தத் தொழிலை விட்டுவிடலாமா என்று எண்ணுகின்ற நிலை இருக்கிறது. ஆகவே அந்தப் பட்டுப் புழுக்களுக்கு உடனே பணம் கிடைப்பதற்கு ஆவன செய்யப்படுமா ; அதே நேரத்தில் சிறுசிறு நிலங்களில் அந்த சிறிய விவசாயிகள் இதை உற்பத்திச்





செய்வதால், அந்த 10 ஏக்கர், 20 ஏக்கர் நிலங்கள் இதை உற்பத்திச் செய்வதால் அவர்களுக்கு ஒரு பெரிய கிணறு வெட்டிக்கொடுத்து அதில் பம்புசெட் அமைத்துக்கொடுத்து அதன் மூலம் தண்ணீர் வழங்குவதற்கு வழி வகை செய்ய முடியுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. அருணாசலம்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது பற்றிய குறிப்பு இல்லாவிட்டாலும் கூட மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியவற்றை அரசு பரிசீலனை செய்து தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### இராமநாதபுரம் மாவட்டத்தில் மாவட்ட தொழில் மையம் அமைக்கும் திட்டம்.

598 (*வினா எண் 22076)—**திரு. இரா. தாமரைக்கனி**: மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டத்தில் மாவட்ட தொழில் மையம் அமைக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. இரா. அருணாசலம்** : இராமநாதபுரம் மாவட்டத்திற்கான மாவட்ட தொழில் மையம் ஏற்கனவே 1—6—1978-ல் மதுரையில் அமைக்கப்பட்டு இயங்கி வருகிறது.

**திரு. உ. சுப்பிரமணியன்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய மாவட்டங்களாக இன்றைக்கு பிரிக்கின்ற நேரத்தில் மதுரையில் இருப்பது போல் அந்த அந்த புதிய மாவட்ட பகுதிகளிலும் அமைப்பதற்கு ஏற்பாடு செய்ய அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. அருணாசலம்** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது இருக்கின்ற மாவட்டங்களிலேயே 2 மாவட்டங்களுக்கு சேர்த்து ஒரு தொழில் மையம் ஒரு சில இடங்களில் இருக்கிறது. எனவே அதுபற்றிய தகவல் எதுவும் இல்லை.

(முற்பகல் 9-50)

**திரு. கே. உச்சி**: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்தில் ஏற்கனவே தொழில் மையம் இருப்பதாகச் சொன்னார்கள். ஆனால், நீலகிரி மாவட்டத்தில், மாவட்டத் தொழில் மையம் இல்லை. ஆகவே, அதைப் பரிசீலித்து, நீலகிரி மாவட்டத்திற்கும் தனியாக ஒரு தொழில் மையம் ஏற்படுத்துவதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1984 ஏப்ரல் 28

**மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்களுடைய கருத்தை அரசு பரிசீலனை செய்யும்.

**திரு. ரா. கிருஷ்ணன்:** பேரவைத் தலைவரவர்களே, மாவட்டத் தொழில் மையங்களில், எதாவது சில யூனிட்ஸ் இதன்மூலம்—சிட்கோ மூலம் கட்டிக் கொடுக்கப்படுகிறது. அப்படிக் கொடுக்கப்படும் யூனிட்டுகளில் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்த மக்களுக்குக் கொடுக்கின்ற முறையிலே அங்கேயுள்ள அதிகாரிகள் செயல்படாமல் இருக்கிறார்கள். குறிப்பாக கோயில் பட்டியில் அப்படிப்பட்ட சம்பவம் நடந்திருக்கிறது. எனவே, இப்படிப்பட்ட தொழில்களை ஆரம்பிக்க வேண்டும், சில யூனிட்டுகள் வேண்டுமென்று தாழ்த்தப்பட்ட மக்கள் கேட்கின்றபொழுது அவைகளைப் பரிசீலித்து ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. அருணாசலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாவட்டத் தொழில் மையம் மூலமாகத் தாழ்த்தப்பட்ட மக்கள் தொழில் முனைவர்கள் அணுகி வந்தால் அதுபற்றி உடனடியாக ஏற்பாடுகளை மாவட்டத் தொழில் மையங்கள் செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உடுக்குறியிட்ட வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

### (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்.

### சான்றிதழ் பெற்று மலைவாழ் மக்கள் பட்டியலில் இடம் பெற முயற்சிக்கும் இதர சமூகத்தினர்.

*(1) **வினா எண் 6713.—திரு. ஜி. மூர்த்தி:*** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ரெட்டி சமூகத்தினர் "கொண்டகாப்பு" என்றும், நாயுடு சமூகத்தினர் "ஈடிகா" என்றும் சான்றிதழ் பெற்று மலைவாழ் மக்கள் பட்டியலில் இடம் பெற முயற்சிப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், எந்தெந்த மாவட்டங்களில் எந்தத் தொழில் செய்பவர்கள், "கொண்டகாப்பு", "ஈடிகா" இனத்தைச் சேர்ந்தவர்கள் என்பதனை அரசு அறிவிக்குமா?



1984 ஏப்ரல் 28]

**விடை—**

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

### சென்னை நகரில் நச்சுக் காற்று பரவுவதைத் தடுக்கும் திட்டம்.

*(2) **வினா எண் 10005.—திரு. எம். சின்னசாமி:*** மாண்புமிகு சுற்றுப்புறச் சூழல் கட்டுப்பாட்டுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை நகரில் நச்சுக்காற்றுப் பரவுவதைத் (Air pollution) தடுக்க அரசு நடவடிக்கை எடுக்க உத்தேசம் உள்ளதா?

**விடை—**

நடவடிக்கை எடுத்து வருகிறது.

### மதுரை மீனாட்சி கோயில் மாடலில் அமெரிக்காவில் ஒரு கோயில் கட்ட அரசின் உதவி குறித்த கோரிக்கை.

*(3) **வினா எண் 12433.—திரு. இரா. தாமரைக்கனி :*** மாண்புமிகு செய்தி-அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அமெரிக்காவில் உள்ள இந்தியர்கள் அமெரிக்காவில் மதுரை மீனாட்சி கோயில் பாடலில் ஒரு கோவில் கட்ட தமிழக அரசிடம் நிதிகளையும் கோவில்கள் அமைக்கும் ஆகம நிபுணர்களையும் கொடுத்து உதவும்படி கோரிக்கை விடுத்துள்ளனரா?

(ஆ) ஆம் எனில், என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது?

விடை—

(அ) வினாவில் குறிப்பிட்டவாறு கோரிக்கை எதுவும் வரவில்லை.

(ஆ) எனவே அடுத்த வினாவிற்கு இடமில்லை.

### ஆதிதிராவிட மக்களுக்குக் கல் உடைக்கும் இயந்திரம் மற்றும் தொழில் கருவிகள் வாங்குவதற்கான கடன் உதவி.

*(4) **வினா எண் 13765.—திரு. சி. கணேசன்:*** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மலைக் குவாரிகளை ஏலம் எடுத்துத் தொழில் செய்யும் ஏழை ஆதிதிராவிடர் மக்களுக்குக் கிரஷர் மற்றும் கல் உடைப்பதற்கு ஏற்ற கருவிகளை வாங்க கடன் அளித்து உதவும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

விடை—

(அ) ஆதிதிராவிட மக்களுக்குக் கல் உடைக்கும் இயந்திரம் மற்றும் தொழில் கருவிகள் வாங்குவதற்குக் கடன் உதவி அளிக்கும் திட்டம் ஏதும் செயல்படுத்தப்படவில்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

**தூத்துக்குடியிலுள்ள அரசு ஐ.டி.ஐ. அரிசன மாணவர்களுக்குத் தங்கும் விடுதி கட்டும் திட்டம்.**

(5) வினா எண் 14150.—திரு. மு. அப்பாதுரை: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடியிலுள்ள அரசு ஐ.டி.ஐ. அரிசன மாணவர்களுக்குத் தங்கும் விடுதி கட்டிக் கொடுக்க அரசிடம் ஏதேனும் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) அதன் விபரம் என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

*Starting of Head Injury Unit in all the Medical Colleges*

6. Q. No. 14498—Thiru S. SEMMALAI and Thiru M. CHINNARAJ: Will the Hon. the Minister for Health be pleased to state—

(a) Is there any proposal to start Head Injury Unit in all the Medical Colleges in Tamil Nadu?

(b) Whether the same will be extended to the fully equipped District Headquarters Hospitals; and

(c) If so, when it will be implemented?

*Answer*—

(a) No.

(b) and (c): Does not arise.



**ஆற்காடு தொகுதியில் ஐ.டி.ஐ. பள்ளி ஏற்படுத்தும் திட்டம்.**

(7) வினா எண் 15053.—திரு. ஏ. எம். சேதுராமன்: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆற்காடு தொகுதியில் ஐ.டி.ஐ. பள்ளி ஏற்படுத்தும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது துவக்கப்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**திருமங்கலம் அரசினர் மருத்துவமனையில் புதிதாக ஏற்படுத்தவுள்ள பிரிவுகள்.**

(8) வினா எண் 15312—திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமங்கலம் அரசினர் மருத்துவமனையில் அரசு புதிதாக ஏற்படுத்த உள்ள பிரிவுகள் எவையெவை?

(ஆ) அவை எப்போது ஆரம்பிக்கப்படும்?

விடை—

(அ) தற்சமயம் எதுவுமில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**சிவகிரி அரசு மருந்தகத்தை மருத்துவமனையாக்கும் திட்டம்.**

(9) வினா எண் 16538—திரு. ரா. கிருஷ்ணன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாசுதேவநல்லூர் தொகுதி சிவகிரியில் அரசு மருந்தகத்தைப் படுக்கை வசதியுடைய மருத்துவமனையாக விரிவுபடுத்த வேண்டி கோரிக்கை அரசுக்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள திருக்கோயில் நிர்வாகத்தின் மூலம் புதிய பாலிடெக்னிக் ஆரம்பிக்கும் திட்டம்.**

(10) **வினா எண் 16800.—திரு. க. முத்துகிருஷ்ணன்:** மாண்புமிகு செய்தி-அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் இணைக்கப்பட்ட மற்றும் இணைக்கப்படாத திருக்கோயில் நிர்வாகத்தின் மூலம் புதிதாகப் பாலிடெக்னிக் ஆரம்பிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது ஆரம்பிக்கப்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**'தமிழரசு' இதழை வார இதழாக மாற்றும் திட்டம்.**

11 **வினா எண் 17077—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு செய்தி-அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசு நடத்தும் 'தமிழரசு' இதழை வார இதழாக மாற்றும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

இல்லை.

**மேற்கு ஜெர்மனி, மொரீஷியஸ் நாடுகளில் பூம்புகார் விற்பனை நிலையம் அமைக்கும் திட்டம்.**

(12) **வினா எண் 17242.—திரு. எஸ். இராசாராமன்:** மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேற்கு ஜெர்மனி, மொரீஷியஸ் ஆகிய நாடுகளில் பூம்புகார் விற்பனை நிலையம் அமைக்கும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா?





(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

(இ) எப்பொழுது ஆரம்பிக்கப்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ) வினா எழவில்லை.

**நல்ல வருமானம் உள்ள ஆலயங்கள் பின்தங்கிய கிராமங்களைத் தத்து எடுத்து மேம்படுத்தும் திட்டம்.**

(13) **வினா எண் 17300—திரு. சி. கணேசன்:** மாண்புமிகு செய்தி-அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் நல்ல வருமானம் உள்ள ஆலயங்கள் பக்கத்தில் உள்ள பொருளாதாரத்தில் பின்தங்கிய கிராமங்களைத் தத்து எடுத்து அவைகளை மேம்படுத்தும் திட்டம் அறநிலையத் துறையால் மேற்கொள்ளப்படுமா?

விடை—

திருக்கோயில்களில் போதுமான நிதி வசதி இல்லையென்பதால் பக்கத்திலுள்ள பின்தங்கிய கிராமங்களைத் தத்து எடுத்து அவற்றை மேம்படுத்தும் திட்டம் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையிடம் தற்போது இல்லை.

**செங்கற்பட்டு அரசு மருத்துவமனையில் தீவிரக் கண்காணிப்பு சிகிச்சைப் பிரிவு ஏற்படுத்தும் திட்டம்.**

(14) **வினா எண் 17342.—திரு. சி. கணேசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு அரசு மருத்துவமனையில் தீவிரக் கண்காணிப்பு சிகிச்சைப் பிரிவு (Intensive Care Unit) தேவை என்று அரசுக்குக் கோரிக்கை ஏதேனும் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**விதவைப் பெண்கள் தொழில் செய்வதற்கான அரசின் நிதியுதவி.**

(15) வினா எண் 17395.—திரு. க. பாரமலை: மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விதவைப் பெண்களுக்குத் தொழில் செய்ய ரூ. 1,000 வீதம் அரசு உதவித்தொகை வழங்கப்படுவது உண்மையா?

(ஆ) ஆம் எனில், 1982 ஆம் வருடத்தில் இராமநாதபுரம் மாவட்டத்தில் எவ்வளவு பேர்களுக்கு வழங்கப்பட்டது?

(இ) அதில் ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்தவர்கள் எத்தனை பேர்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ) இக்கேள்விகளுக்கு இடமில்லை.

**திருப்பாச்சேத்தியில் அரிசன மாணவர் இல்லம் ஆரம்பிக்கும் திட்டம்.**

(16) வினா எண் 17872.—திரு. க. பாரமலை: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை வட்டம் திருப்பாச்சேத்தியில் அரிசன நலத் துறையின் மூலம் மாணவர் இல்லம் ஒன்று ஆரம்பிக்க வேண்டும் என்ற கோரிக்கை ஏதும் அரசுக்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதுகுறித்து அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை வட்டம், திருப்பாச்சேத்தியில் அரிசன மாணவர் இல்லம் ஆரம்பிப்பது பற்றிய கோரிக்கைகள் எதுவும் அரசின் பரிசிலனையில் இல்லை.

**ஒவ்வொரு வட்டத் தலைநகரிலும் வேலைவாய்ப்பு அலுவலகம் தொடங்கும் திட்டம்.**

(17) வினா எண் 17974—திரு. நா. பழனிவேல்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஒவ்வொரு தாலுக்கா தலைநகரிலும் வேலைவாய்ப்பு அலுவலகம் திறக்கும் உத்தேசம் உண்டா?





விடை—

ஒவ்வொரு வட்ட (தாலுக்கா) தலைநகரத்திலும் வேலை வாய்ப்பு அலுவலகம் தொடங்குவதற்கு சாத்தியக் கூறுகள் இல்லை.

**கொடைரோட்டில் சுற்றுலா மையம் அமைக்கும் திட்டம்.**

18 வினா எண் 18024—திரு. கா. கோபாலகிருஷ்ணன்: மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாவட்டம், கொடைரோட்டில் ஒரு சுற்றுலா மையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

கொடைரோட்டில் சுற்றுலா மையம் அமைக்கும் செயற்குறிப்பு தற்பொழுது அரசின் பரிசிலனையில் இல்லை.

**குடிநீருக்காக நகர பஞ்சாயத்துக்களில் ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கும் திட்டம்.**

19 வினா எண் 18093—திரு. சி. கணேசன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

குடிதண்ணீர் தட்டுப்பாட்டைப் போக்க நகர பஞ்சாயத்துக்களில் குடிநீர் வடிகால் வாரியம் மூலம் ஆழ்துளை கிணறுகள் அமைக்கும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

விடை—

வறட்சி நிவாரணத் திட்டத்தின்கீழ் பேரூராட்சிகளில் ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன.

**காவேரிப்பட்டினத்தில் பழம் பதப்படுத்தும் தொழிற்சாலை ஏற்படுத்தும் திட்டம்.**

20 வினா எண் 18155—டாக்டர் கே. சமரசம்: மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரி மாவட்டம் காவேரிப்பட்டினத்தில் பழம் பதப்படுத்தும் தொழிற்சாலையை ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது ஏற்படுத்தப்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**ஓமலூர் அரசு மருத்துவமனையை விரிவுபடுத்தும் திட்டம்.**

21 வினா எண் 18199—திரு. செ. செம்மலை: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் அரசினர் மருத்துவமனையை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் யாது?

விடை.—

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

**கூணாண்டியூர், தெத்தகிரிப்பட்டி ஆகிய ஊர்களில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கும் திட்டம்.**

22 வினா எண் 18209—திரு. செ. செம்மலை: மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், மேச்சேரி ஊராட்சி ஒன்றியத்தில் கூணாண்டியூர், தெத்தகிரிப்பட்டி ஆகிய இடங்களில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கக் கோரி அப்பகுதியிலிருந்து கோரிக்கைகள் வந்துள்ளனவா?

(ஆ) ஆம் எனில் அக்கோரிக்கைகள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

விடை.—

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.



**காஞ்சிபுரம் மாவட்ட மருத்துவமனையில் விபத்துகள் சிகிச்சைக்காக தனிப் பிரிவு அமைக்கும் திட்டம்.**

23 வினா எண் 18255—திரு. ப. வெங்கடசுப்பிரமணியன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரம் மாவட்ட மருத்துவமனையில் விபத்து சிகிச்சைக்கு தனிப்பிரிவு அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில் விவரம் என்ன?

விடை—

(அ) இம்மருத்துவமனையில் தனிப்பிரிவு ஏற்படுத்தும் திட்டம் ஏதும் தற்போது இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**பள்ளிப்பட்டு பேரூராட்சியில் ஆதிதிராவிட நலத்துறை மூலம் மாணவியர் விடுதி கட்டும் திட்டம்.**

24 வினா எண் 18290—திரு. பூ. மு. நரசிம்மன்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கை மாவட்டம், பள்ளிப்பட்டு பேரூராட்சியில் ஆதிதிராவிட நலத்துறை மூலம் மாணவியர் விடுதி கட்டும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்போது கட்டப்படும்?

விடை—

(அ) செங்கை மாவட்டம், பள்ளிப்பட்டு பேரூராட்சியில் ஆதிதிராவிட நலத்துறை மூலம் மாணவியர் விடுதி கட்டும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் இல்லை.

(ஆ) கேள்விக்கிடமில்லை.

**இரசாயன தொழில்களுக்கு மின் கட்டணத்தைக் குறைக்கும் திட்டம்.**

25 வினா எண் 18296—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இரசாயன தொழில்களுக்கு மின் கட்டணத்தைக் குறைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரமென்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**செம்பரம்பாக்கம் ஏரியிலிருந்து சென்னை நகருக்குக் குடிநீர் வழங்கும் திட்டம்.**

26 வினா எண் 18373—திரு. ப. வெங்கடசுப்பிரமணியன்: மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செம்பரம்பாக்கம் ஏரியிலிருந்து சென்னை நகருக்குக் குடிதண்ணீர் எடுக்க இருப்பதை குறித்து அப்பகுதி மக்கள் ஆட்சேபனை மனு அரசுக்கு அனுப்பியுள்ளார்களா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

(அ) இல்லை. செம்பரம்பாக்கம் ஏரி பாய்ச்சல் பகுதிகளில் பயிர் சாகுபடி உரிமையை எடுத்து சென்னை குடிநீருக்காக அந்த ஏரி தண்ணீரைப் பயன்படுத்தும் செயற்குறிப்பு தற்பொழுது இவ்வரசு கைவிட்டு விட்டது.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**பவானிநகரில் பவானி ஆற்றின் குறுக்கேயுள்ள பாலத்தை அகலப்படுத்தும் திட்டம்.**

27 வினா எண் 18474—திரு. பி. ஜி. நாராயணன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பெரியார் மாவட்டம் பவானி நகரில் பவானி ஆற்றின் குறுக்கே அமைந்துள்ள மிகக் குறுகிய பாலத்தை அகலப்படுத்தும் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

விடை—

இதுவரை அரசின் ஒப்புதல் பெற்ற எந்தவிதமான திட்டத்திலும் இப்பணி இடம் பெறவில்லை.



**நாச்சிபுத்தூர் குளத்துக்குக் கொல்லிமலையிலிருந்து வரும் பாண்டியாறு நீர்.**

28 வினா எண் 18551—திரு. சி. சிவப்பிரகாசம்: மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேந்தமங்கலம் தொகுதியிலுள்ள காளப்பநாயக்கன்பட்டி அருகில் உள்ள நாச்சிபுத்தூர் குளத்துக்குக் கொல்லிமலையிலிருந்து வரும் பாண்டியாறு நீரை வாய்க்கால் மூலம் ஏரிக்குத் திருப்பிவிட அரசிடம் திட்டமுள்ளதா?

(ஆ) திட்டத்தைச் செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**அவினாசியில் சர்க்கரை ஆலை அமைக்கும் திட்டம்.**

29 வினா எண் 18675—திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு சட்டம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம் அவினாசியில் சர்க்கரை ஆலை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு தொகையில், எப்போது ஆரம்பிக்கப்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

**நடுக்கோம்பை, வாழவந்திக்கோம்பை பகுதிகளில் பெரும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் அமைக்கும் திட்டம்.**

30 வினா எண் 18697—திரு. சி. சிவப்பிரகாசம்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சேந்தமங்கலம் ஒன்றியத்தில் நடுக்கோம்பை, வாழவந்திக் கோம்பை ஆகிய பகுதிகளில் மலைவாழ் மக்களுக்காகத் தனியாக (லேம்ப்) பெரும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மலையடிவாரத்திலுள்ள நடுக்கோம்பை வாழவந்திக்கோம்பை ஆகிய ஊர்களில் ஒரு பெரும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் அமைக்கும் சாத்தியக் கூறுகள் இல்லை.

**அரசு மருத்துவமனைகளைக் கவனிக்கத் தனி மக்கள் குழு நியமிக்கும் திட்டம்.**

31 வினா எண் 18721—திரு. சி. சிவப்பிரகாசம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரசு மருத்துவமனைகளில் ஏற்படும் சிக்கல்களையும், மக்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களையும் போக்க மருத்துவமனைகளைக் கவனிக்கத் தனி மக்கள் குழு நியமிக்கப்படுமா?

விடை—

ஆம்.

**காட்டுமன்னார்குடி தாலுகா மருத்துவமனையை விஸ்தரிக்கும் திட்டம்.**

32 வினா எண் 18807—திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தென்னாற்காடு மாவட்டம் காட்டுமன்னார்குடி தாலுகா மருத்துவமனை விஸ்தரிப்புத் திட்டம் அரசு பரிசிலனையில் உள்ளதா?

விடை—

(அ) இல்லை.

**மாட்டு வண்டிகளின் வடிவமைப்பில் மாற்றம் செய்யும் திட்டம்.**

(33) வினா எண் 19010—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கூடுதல் சுமை ஏற்றிச் செல்லும் வகையில் மாட்டு வண்டிகளின் வடிவமைப்பில் தகுந்த மாற்றம் செய்யப்பட வேண்டுமென திட்டக் குழுத் தலைவர் அரசுக்குப் பரிந்துரை செய்துள்ளாரா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரமென்ன?

(இ) எந்த வகையில் மாற்றம் செய்யப்படும்?

(உ) இதன்மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?



விடை.—

(அ) இல்லை.

(ஆ), (இ) மற்றும் (உ) கேள்விக்கு இடம் இல்லை.

**21 ஆவது வட்டம் காமராஜ் நகர்ப் பகுதியில் மேல்நிலைக் குடிநீர்த் தொட்டி அமைக்கும் திட்டம்.**

34 வினா எண் 19037—திரு. வே. இராஜசேகரன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) டாக்டர் இராதாகிருஷ்ணன்நகர்த் தொகுதி, 21 ஆவது வட்டம் காமராஜ்நகர்ப் பகுதியில் ஒரு மேல்நிலைக் குடிநீர்த் தொட்டி அமைக்க அரசு உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**உலக வங்கி உதவியுடன் வடாற்காடு மாவட்டத்தில் சுகாதாரப் பயிற்சி நிலையங்கள் ஏற்படுத்தும் திட்டம்.**

35 வினா எண் 19090—திரு. சி. கோபால்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உலக வங்கி உதவியுடன் வடாற்காடு மாவட்டத்தில் சுகாதாரப் பயிற்சி நிலையங்கள் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

விடை.—

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

**நெய்வேலியில் கிடைக்கும் நிலத்தடி நீரை சென்னை குடிநீருக்குப் பயன்படுத்தும் திட்டம்.**

36 வினா எண் 19118.—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெய்வேலியில் இருந்து வேண்டிய அளவு தொடர்ந்து நிரந்தரமாய் கிடைக்கக்கூடிய நிலத்தடி நீரை சென்னை குடிதண்ணீருக்குப் பயன்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**தஞ்சை பெரிய கோயிலைப் புதுப்பிக்கும் திட்டம்.**

37 வினா எண் 19309—திரு. சி. கணேசன்: மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை பெரிய கோயிலைப் புதுப்பிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

தஞ்சாவூர் (பெரிய கோயில்) அருள்மிகு பிரகதீஸ்வரர் திருக்கோயில் மத்திய அரசின் தொல்பொருள் துறையின் பொறுப்பில் இருப்பதால் திருக்கோயிலைப் புதுப்பிக்கும் திட்டம் எதுவும் தமிழக இந்துசமய அறநிலைய ஆட்சித் துறையில் இல்லை.

**வீரசிகாமணி கிராமத்தில் சார் பதிவாளர் அலுவலகம் ஆரம்பிக்கும் திட்டம்.**

38 வினா எண் 19356—திரு. பி. துரைராஜ்: மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம் வீரசிகாமணி கிராமத்தில் சார்பதிவாளர் அலுவலகம் ஆரம்பிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்வி எழாது.

**க. பரமத்தி உயர்நிலைப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக்கும் திட்டம்.**

39 வினா எண் 19415—திரு. சென்னிமலை என்கிற ப. செ. கந்தசாமி: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) கரூர் வட்டம், க. பரமத்தி உயர்நிலைப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மாற்றித் தரக் கோரி பொதுமக்கள் விண்ணப்பித்துள்ளனரா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கிடமில்லை.

**குருவிக்குளத்தில் ஆதிதிராவிடர் நல உணவு விடுதி ஏற்படுத்தும் திட்டம்.**

(40) வினா எண் 19437—திரு. பி. துரைராஜ்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோயில் வட்டம் குருவிக்குளத்தில் ஆதிதிராவிடர் நல உணவு விடுதி ஏற்படுத்தும் திட்டம் உண்டா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நிறுவப்படும்?

விடை—

(அ) திருநெல்வேலி மாவட்டம். சங்கரன்கோவில் வட்டம். குருவிக்குளத்தில் ஆதிதிராவிடர் நல உணவு விடுதி ஏற்படுத்தும் திட்டம் தற்போது இல்லை. கோரிக்கையும் ஏதும் வரவில்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**ஸ்ரீரங்கம், ஸ்ரீவில்லிப்புத்தூர் போன்ற ஊர்களின் பெயர்களை மாற்றும் திட்டம்.**

(41) வினா எண் 19490—திரு. து. புருஷோத்தமன்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—.

(அ) ஸ்ரீரங்கம், ஸ்ரீவில்லிபுத்தூர் போன்ற ஊர்களின் பெயர்களையும் மாற்றவேண்டும் என்ற கோரிக்கை அரசுக்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் பேரில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

[1984 ஏப்ரல் 28

**செஞ்சியில் பெண்கள் மேல்நிலைப்பள்ளி ஏற்படுத்தும் திட்டம்.**

(42) **வினா எண் 19590—திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன் :** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம் செஞ்சியில் பெண்கள் மேல்நிலைப் பள்ளி ஏற்படுத்தும் உத்தேசம் உண்டா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது தொடங்கப்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கிடமில்லை.

**அனந்தபுரத்தில் கால்நடை மருத்துவமனை தொடங்கும் திட்டம்.**

(43) **வினா எண் 19595—திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன் :** மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம் அனந்தபுரத்தில் புதியதாக கால்நடை மருத்துவமனை தொடங்கும் உத்தேசம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது தொடங்கப்படும்?

விடை—

(அ) தென்னாற்காடு மாவட்டம் அனந்தபுரத்தில் கால்நடை மருந்தகம் ஏற்படுத்தும் உத்தேசம் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**ஜோலார்ப்பேட்டையில் தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம்.**

(44) **வினா எண் 19776—திரு. இரா. தாமரைக்கனி :** மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஜோலார்ப்பேட்டையில் தொழிற்பேட்டை அமைக்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், மேற்படி செயற்குறிப்பு எப்பொழுது நடைமுறைக்கு வரும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.



1984 ஏப்ரல் 28]

**கிண்டி ஏ. சி. காலேஜ் ஆப் டெக்னாலஜி மூலம் செயற்கை மழை பொழிய வைக்கும் திட்டம்.**

(45) **வினா எண் 19930—திரு. தி. கா. நல்லப்பன் :** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிண்டி ஏ.சி. காலேஜ் ஆப் டெக்னாலஜியில் இருந்து செயற்கை மழை பொழிய வைக்கும் திட்டம் ஏதாவது அரசிற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் அரசு அதுகுறித்து மேற்கொண்ட நடவடிக்கை யாது?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**ஈங்கூரில் ரயில் பாதையின் குறுக்கே மேம்பாலம் அமைக்கும் திட்டம்.**

(46) **வினா எண் 19935—திரு. தி. கா. நல்லப்பன் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பெருந்துறை வட்டம் பெருந்துறையிலிருந்து தாராபுரம் செல்லும் பாதையில் ஈங்கூரில் ரயில்பாதையில் மேம்பாலம் அமைக்கும் திட்டம் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

இல்லை.

**தே. கல்லுப்பட்டி துணை மின் நிலையம்.**

(47) **வினா எண் 19940—திரு. இரா. முத்தையா :** மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம் தே. கல்லுப்பட்டி துணை மின்நிலையம் 66 கே. வி. நிலையமாகவும் முகவை மாவட்டம் ராஜபாளையம் பீடருடன் இணைந்ததாகவும் உள்ளதை 110 கே.வி.-ஆக மாற்றி பசுமலையோடு இணைக்கக் கோரிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் உடனடியாக பசுமலையோடு இணைக்கும் திட்டத்தை யாவது முதல் கட்டமாக எடுத்துக்கொள்ளப்படுமா?

[1984 ஏப்ரல் 28

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

**சிதம்பரம் தாலுக்காவில் 'சுவாமி சகஜானந்தா' பெயரால் பாலிடெக்னிக் துவங்கும் திட்டம்.**

(48) **வினா எண் 19996—திரு. வி. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் தாலுக்காவில் ஆதிதிராவிடர் மற்றும் மலைவாழ் மாணவ மாணவியர்களுக்கு 'சுவாமி சகஜானந்தா' பெயரால் ஒரு பாலி டெக்னிக் துவங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**ஆதி திராவிடர் குடிசைகளுக்குத் தீ விபத்து இன்சூரன்ஸ் திட்டத்தை அமுல்படுத்தும் திட்டம்.**

(49) **வினா எண் 19998—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் உள்ள ஆதிதிராவிடர் குடியிருப்பில் உள்ள குடிசை களுக்குத் தீ விபத்து இன்சூரன்ஸ் திட்டத்தை அமுல்படுத்த திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.



1984 ஏப்ரல் 28]

**டான்சி, சிட்கோ நிறுவனங்கள் மூலம் காஞ்சிபுரத்தில் தொழிற்சாலைகள் அமைக்கும் திட்டம்.**

50 **வினா எண் 20012—திரு. ப. வெங்கடசுப்பிரமணியன் :** மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) டான்சி, சிட்கோ ஆகிய நிறுவனங்கள் மூலம் காஞ்சிபுரத்தில் தொழிற்சாலைகள் அமைக்க வேண்டுமென அரசுக்குக் கோரிக்கை வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், இக்கோரிக்கை மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**குளத்தூர் தொகுதியிலுள்ள காவேரி நகர் நூற்பாலை.**

(51) **வினா எண் 20020—திரு. த. மாரிமுத்து:** மாண்புமிகு சட்டம் மற்றும் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் தொகுதியில் உள்ள காவேரி நகர் நூற்பாலையில் கடந்த பல ஆண்டுகளாகக் குறைந்த அளவு தொழிலாளர் களைக் கொண்டு செயல்படுவது உண்மையா?

(ஆ) ஆம் எனில், நூற்பாலையில் முழு அளவு தொழிலாளர்கள் வேலை செய்ய ஆவன செய்யப்படுமா?

விடை.—

(அ) மற்றும் (ஆ) இது ஒரு பழைய நூற்பாலையாகும். இதுவரை இந்த நூற்பாலை நவீனப்படுத்தப்படவில்லை. நெடுங்காலமாக இந்த நூற் பாலை நஷ்டத்திலேயே இயங்கி வந்துள்ளது. தற்போது இயன்ற அளவு நடந்து வருகின்றது.

**செங்கற்பட்டு மாவட்டத்தில் கயிறு அபிவிருத்தி மையம் ஏற்படுத்தும் திட்டம்.**

52 **வினா எண் 20360—திரு. ப. வெங்கடசுப்பிரமணியன் :** மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்டத்தில் கயிறு அபிவிருத்தி மையம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**சட்டப் பேரவைக்கென தனியாக அச்சகம் அமைக்கும் திட்டம்.**

(53) **வினா எண் 20415—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சட்டப் பேரவைக்கென தனியாக அச்சகம் ஒன்று அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

விடை—

இல்லை.

**அச்சிறுபாக்கத்தில் பெண்களுக்கென பாலிடெக்னிக் ஆரம்பிக்கும் திட்டம்.**

(54) **வினா எண் 20442.—திரு. சி. கணேசன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்டம் அச்சிறுபாக்கத்தில் பெண்களுக்கென பாலிடெக்னிக் ஆரம்பிக்க அரசுக்கு விண்ணப்பம் வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை.—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**இரும்புலி கிராமத்தில் எடுக்கப்பெற்ற ஆழ்துளைக் கிணறுகள்.**

(55) **வினா எண் 20478.—திரு. சி. கணேசன்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அச்சிறுபாக்கம் தொகுதியில் இரும்புலி கிராமத்தில் ஆழ்துளைக் கிணறுகள் எடுத்துப் பயனற்றுப் போனது உண்மையா?





(ஆ) ஆம் எனில், அப்படி எத்தனை கிணறுகள் எடுக்கப்பட்டன?

(இ) அதற்கான மாற்று ஏற்பாட்டுக்கு அரசிடம் ஏதேனும் திட்டமுண்டா?

விடை—

(அ) இல்லை.

(ஆ) மற்றும் (இ) இக்கேள்விக்கு இடமில்லை.

**மொபட் (Moped) போன்ற சிறிய வாகனங்கட்கு வசூலிக்கப்படும் வரிகள்.**

(56) **வினா எண் 20542.—திரு. எம். சின்னசாமி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பார்—

(அ) மொபட் (Moped) போன்ற சிறிய வாகனங்கட்கு ரோடு டேக்ஸ் (Road Tax) மோட்டார் வாகனவரி போன்ற வரிகள் வசூலிக்கக்கூடாது என்று மத்திய அரசு உத்தரவிட்டு இருப்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**ஆற்காடு வட்டத்தில் நவீன கோழிவளர்ப்பு நிலையம் துவங்கும் திட்டம்.**

(57) **வினா எண் 20546.—திரு. ஏ. எம். சேதுராமன்:** மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆற்காடு வட்டத்தில் நவீன கோழிவளர்ப்பு நிலையம் துவங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) தற்சமயம் ஏதுமில்லை.

(ஆ) எழவில்லை.

[1984 ஏப்ரல் 28

## மேல்நிலைப் பள்ளிகள் ஏற்படுத்தியதன் காரணமாகப் பணி நீக்கம் செய்யப்பட்ட ஆசிரியர்கள்.

(58) வினா எண் 20572.—திரு. சி. கணேசன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேல்நிலைப்பள்ளிகள் ஏற்படுத்தியதின் காரணமாக ஆசிரியர்கள் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளார்களா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

## அரசுப் பள்ளிகளில் தற்காலிகமாகப் பணியாற்றும் பட்டதாரி ஆசிரியர்கள்.

(59) வினா எண் 21087.—திரு. சி. கணேசன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் தற்காலிகமாகப் பணியாற்றும் பட்டதாரி ஆசிரியர்களுக்குத் தேர்வாணைக்குழு பட்டதாரி ஆசிரியர்களைத் தேர்ந்தெடுக்கும்போது (மேற்படி தற்காலிக பட்டதாரி ஆசிரியர்கட்கு) அவர்கட்கு முன்னுரிமை கொடுக்கும் நிலை குறித்து அரசின் பரிசீலனையில் இருக்கிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

## ஆதி திராவிடர் நலத் துறைக் கல்லூரி மாணவர் விடுதிகளில் பகுதி நேர ஆசிரியர்களை நியமிக்கும் திட்டம்.

(60) வினா எண் 21259.—திரு. சி. கணேசன்: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆதி திராவிடர் நலத்துறை கல்லூரி மாணவர்கள் விடுதிகளில் பகுதிநேர ஆசிரியராகக் கல்லூரி ஆசிரியர்களை நியமிக்கும் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இதன் விவரம் என்ன?



1984 ஏப்ரல் 28]

விடை—

(அ) ஆதி திராவிடர் நலத்துறை கல்லூரி மாணவர்கள் விடுதிகளில் பகுதி நேர ஆசிரியராகக் கல்லூரி ஆசிரியர்களை நியமிக்கும் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

(ஆ) கேள்விக்கிடமில்லை.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் *உடுக் குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 3. தகவல் கோரல்.

### (அ) கரும்புக்கு அதிக விலை கோரி போராட்டம்

**திரு. சோ. அழகர்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நேற்றே நான் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தேன். கரும்பு உற்பத்தியாளர்கள் உற்பத்தி செய்கின்ற கரும்புக்கு போன வருஷத்தைவிட இந்த வருஷம் விலை குறைவாக இருக்கிறது. அதற்கும் முந்தைய ஆண்டு, போன வருஷத்தைவிட விலை குறைவாக இருந்து, அரசாங்கம் ஒரு பகுதியைக் கொடுத்து நஷ்டத்தைத் தவிர்த்தார்கள். இந்த ஆண்டு அதைவிடப் பத்து ரூபாய் குறைந்துதான் கிடைப்பதால் அவர்கள் பேரணி என்றும், உண்ணாவிரதம் என்றும் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சரவர்கள் முத்தரப்பு மாநாட்டைக் கூட்டி, அந்த விவசாயிகளுக்கு நன்மை செய்வதற்கு ஏற்பாடு செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது சம்பந்தமான மானியக் கோரிக்கை வந்த நேரத்தில் இதையெல்லாம் கேட்டிருந்தால் அரசு முடிந்த அளவிற்குக் கூட்டிக் கொடுப்பது என்பது வழக்கமாக நடப்பதுதான். எனவே, மானியக் கோரிக்கையில் பேசியிருக்கலாம். அப்பொழுது பேசியிருந்தால் அரசு தக்க முடிவை அவர்களுக்குச் சந்தர்ப்பம் வரும்பொழுது எடுப்பார்கள்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** தலைவரவர்களே, அது அரசின் ஆய்வில் இருக்கிறது. ஆய்ந்து முடிவெடுக்கப்படும்.

### (ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள்.

**திரு. சு. பாலன்:** தலைவரவர்களே, செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள ஊர்களில் முகமூடிக் கொள்ளை தொடர்ந்து நடக்கிறது. நேற்றுகூட அம்பத்தூரில் நான்கு வீடுகளிலே, மக்கள் முன்னாலேயே, பெண்கள் முன்னாலேயே பயங்கரமாகத் தாக்கிக் கொள்ளையடித்திருக்கிறார்கள். இம்மாதிரி தொடர்ந்து நடக்கிறது. அதிகாரிகள், நாங்கள் பாதுகாப்பு கொடுக்கிறோம் என்று சொல்கிறார்களே தவிர, அந்த முகமூடிக் கொள்ளை தொடர்ந்து நடந்துகொண்டுதான் இருக்கிறது. அவர்களைப் பிடிப்பதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது? ஒத்திவைப்புத் தீர்மானம்கூடக் கொடுத்திருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சொரணம் அவர்களும் கொடுத்திருக்கிறார்கள்; நீங்களும் கொடுத்திருக்கிறீர்கள். பதில் வரவில்லை. இப்பொழுது வேறு ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தை எடுக்க இருக்கிறேன்.

**திரு. உ. சுப்பிரமணியன்:** தலைவரவர்களே, நானும், காரைக்குடி சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு திரு. சிதம்பரம் அவர்களும் ஒரு ரோட்டைப் பற்றித் தீர்மானம் கொடுத்திருந்தோம். அது நிராகரிக்கப்பட்ட அந்த நிலையிலே, அதேபோன்ற தீர்மானத்தை திரு. பிரபாகரன் அவர்கள் கொடுத்ததை ஏற்றுக்கொண்டுள்ளீர்கள். அதைப்பற்றிய பிரச்சினை வரும்பொழுது விவாதத்திற்கு எடுப்பதாகச் சொன்னீர்கள். அது என்ன ஆயிற்று? இன்றைக்குக் கடைசி நாள். ஒரே விஷயம் குறித்துக் கொடுக்கின்றபொழுது ஒருவருக்கு அனுமதித்துவிட்டு, ஒருசிலருக்கு அனுமதி மறுத்திருக்கிறீர்களே, அது ஏன்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏறக்குறைய, தினசரி ஒன்றை எடுத்துக் கொண்டிருக்கிறோம். கவன ஈர்ப்புத் தீர்மானம் இரண்டு எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

## 5. அறிவிப்புகள்.

### (அ) அனுமதிக்கப்பட்டுள்ள அறிவிக்கைகளுக்குத் துறைகள் பதில் அனுப்பி வைத்தல்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இதை மாண்புமிகு அமைச்சர்களும் கேட்டுக்கொள்ள வேண்டும்.

மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்துள்ள கவன ஈர்ப்பு முன்னறிவிப்புக்களில் அனுமதிக்கப்படத் தக்கவை சம்பந்தப்பட்ட துறைகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன. துறைகளிடமிருந்து இவற்றிற்கு அறிக்கைகள், பேரவைச்





செயலகம் மூலமோ அல்லது மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நேரடியாகவோ கூடிய விரைவில் அனுப்பி வைக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர்களைக் கேட்டுக் கொள்கிறேன். ஆகவே எல்லோருடைய வேண்டுகோள்களும் நிறைவேற்றப்படும். வரிசையாக ஒவ்வொன்றாக வரும். (குறுக்கீடுகள்) அதற்குத்தான் சொன்னேன் எல்லாவற்றுக்கும் பதில் ஒவ்வொன்றாக வரும். (குறுக்கீடுகள்) எல்லோருக்கும் பதில் எழுத்து மூலமாக வரும்.

## 3. தகவல் கோரல்—தொடர்ச்சி.

### (இ) இரயில்வே ரிசர்வேஷனில் உறுப்பினர்களுக்கு முன் உரிமை அளிக்கக் கோருதல்.

**திரு. மா. சின்னராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்கள் சென்னைக்கு வருவதாக இருந்தாலும் அல்லது திரும்பி ஊருக்குப் போவதாக இருந்தாலும் இரயிலில்தான் போக வேண்டி இருக்கின்றது. இரயிலைப் பொறுத்தவரையில் கட்டணச் சலுகை அதிகமாகக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் ரிசர்வேஷன் செய்கின்றபோது எல்லோரோடும் இணையாக நின்றுதான் க்யூ. கேட்கவேண்டி இருக்கின்றது. சட்டமன்ற உறுப்பினர்களுக்கு முன்னுரிமை கொடுக்கின்ற நிலைமை இல்லை. இப்படிப்பட்ட நிலைமை காரணமாக சேலம் வரை இடம் கிடைக்காமலே வரவேண்டிய நிலைமை எனக்கு நேர்ந்தது. ஆகவே இதுபற்றி இரயில்வே இலாக்காவிற்கு ஒரு கடிதம் எழுதி priority among all others என்ற நிலைமைக்குப் பதிலாக சட்டமன்ற உறுப்பினர்களுக்கு முதல் priority கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரயில்வே இலாக்காவிற்கு இதைப்பற்றி எழுதி இருக்கிறோம். மேலும் எழுத இருக்கிறோம். அப்படி எழுதினால்தான் முடியும். மேலும் இரயில்வே-யைப் பொறுத்தவரையில் பல சிரமங்கள் இருக்கின்றன. ஏனென்றால் நான் நிறைய இரயில் பயணம் செய்திருக்கிறேன். பொதுவாக கடைசி நேரத்திலே கூப்பன்களைக் கொண்டுபோய் கொடுத்து நான் எம்.எல்.ஏ. என்று சொல்லிக் கேட்டால் கிடைப்பதில்லை. எம்.பி. என்று சொன்னால் ஓரளவுக்குப் பயந்துகொண்டு அவர்கள் கொடுக்கக்கூடும். ஏனென்றால் எம்.பி.-க்களுக்காக ஒரு நான்கு இடங்களை வைத்திருப்பார்கள்; அவர்கள் கடைசி நேரத்திலே வருவார்கள் என்பது அவர்களுக்குத் தெரியும். ஆனால் எம்.எல்.ஏ. பற்றிய பயம் இல்லாததன் காரணத்தால் அவர்கள் செய்வதில்லை. பயப்படவேண்டியதில்லை; மரியாதை கொடுத்தாலே போதும். எனவே இனிமேல் திரும்பவும் நாம் இரயில்வே இலாக்காவிற்கு எழுதலாம் . . . (குறுக்கீடுகள்) அலட்சியமாக நினைக்கமாட்டார்கள். இடம் இல்லை. என்று சொல்வார்கள், அவ்வளவுதான். எனவே இதுகுறித்து நாம் எழுதலாம்.

[1984 ஏப்ரல் 28

## 4. ஒத்திவைப்புத் தீர்மானம்.

### கீழக்கரை காவல் நிலையத்திலிருந்து ஜாமீனில் விடுதலை செய்யப்பட்ட முனியாண்டி மரணமடைந்துள்ளது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருவாளர்கள் ப. பொன்னுரங்கம், கே. ஆர். சுந்தரம், என். பழனிவேல், டி. மணி, ஜே. ஹேமச்சந்திரன், ரா. கிருஷ்ணன், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், என். சங்கரய்யா, இரா. கருப்பையா, உ. சுப்பிரமணியன், என். வரதராஜன், கு. பா. பழனியப்பன், என். வி. என். சோமு, மு. அப்பாதுரை ஆகியோர் "கடந்த வாரம் இராமநாதபுரம் மாவட்டம் கீழக்கரைக்கு அருகில் உள்ள கஞ்சிரான்குடியைச் சேர்ந்த முனியாண்டி என்ற நபர் அப்பகுதியைச் சேர்ந்த காவல் நிலையத்தில் மரணம் அடைந்துள்ளதால் அவர்தம் குடும்பத்தார் மத்தியிலும் மற்றும் அப்பகுதி வாழ் பொதுமக்கள் மத்தியிலும் ஏற்பட்டுள்ள கொந்தளிப்பான பதட்ட நிலை குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும்" என்ற தீர்மானத்தை மொழிய என் அனுமதி கேட்டு அறிவிப்புகள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து அவர்கள் மிகச் சுருக்கமாகக் கூறும்படி கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 10-00)

**திரு. ப. பொன்னுரங்கம்:** பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டம் கீழக்கரையில் கஞ்சிரான்குடியைச் சேர்ந்த முனியாண்டி என்ற வாலிபர் அந்த ஊரில் இருக்கிற போலீஸ் ஸ்டேஷனில் அடிக்கப்பட்ட காரணத்தால், உயிரிழந்திருக்கிறார் என்ற செய்தி வந்திருக்கிறது. நாம் பல போலீஸ் ஸ்டேஷன்களுடைய விவகாரங்களைப் பார்த்திருக்கிறோம். போலீசாலே அடிக்கப்பட்டு, சாகடிக்கப்பட்டதை எல்லாம் பார்த்திருக்கிறோம். ஆனால் அவைகளுக்கும் இதற்கும் நிரம்ப வித்தியாசம் உண்டு. ஏனென்றால் விசாரணைக்காக அழைத்துச் செல்வார்கள். திருட்டுக் கேஸ் அல்லது கள்ள நோட்டு கேஸ் அல்லது சந்தேக கேஸ் என்று அழைத்துச் செல்வது உண்டு. அப்படியென்றால் விசாரிக்கலாம்; விசாரணைக்கு எடுத்துக் கொள்ளலாம் அல்லது மாஜிஸ்டிரேட்டிடம் சென்று விசாரணை செய்யலாம். ஆனால் இந்த விவகாரம் அப்படி அல்ல.

பாவம், தன்னுடைய மனைவியைப் பார்க்க அந்த முனியாண்டி பஸ்ஸிலே சென்றிருக்கிறார். சென்ற அவர்—இப்பொழுது என் வீட்டுக்குப் போக வேண்டுமென்றால், 4-எச் பஸ்ஸில் போக வேண்டும். வேறு பஸ்சிலே ஏறிவிட்டால், உங்கள் பகுதிக்குப் போகாது, பாரிசுக்குத்தான் போகும் என்று



சொல்கிறான். சரி இறங்கிக் கொள்கிறேன் என்றால், 30 பைசா டிக்கட்டு வாங்கிக் கொண்டு இறங்குங்கள் என்று சொல்கிறான்; அதுபோல் வேறு பஸ்ஸில் ஏறிய காரணத்தால்—டிக்கட் வாங்க வேண்டுமென்று கண்டக்டர் சொல்லியிருக்கிறார். 30 பைசா டிக்கட் வாங்கு என்று சொல்லியிருக்கிறார். வாங்குகிறேன் என்று ரூ. 2 நோட்டைக் கொடுத்திருக்கிறான் இந்த முனியாண்டி. சில்லறை இல்லை என்று சர்ச்சையாகியிருக்கிறது. சரி பஸ்ஸை போலீஸ் ஸ்டேஷனுக்கு விடு என்று சொல்லியிருக்கிறார்கள். இவன் பயந்து கொண்டு, பஸ்ஸிலே இருந்து குதித்து விட்டிருக்கிறான். ஆனால், பஸ்ஸில் பயணம் செய்தவர்கள் என்ன நினைத்தார்கள்? கண்டக்டர் பையைப் பிடுங்கிக் கொண்டு ஓடுகிறான் என்று தவறாக நினைத்து, அவனைப் பிடித்துக் கொண்டு போய் போலீஸ் ஸ்டேஷனில் போலீசாரிடம் ஒப்படைக்கிறார்கள். ஆனால் போலீசே ஒத்துக்கொள்கிறது செக்ஷன் 75 தான் போட்டோம் என்று. நியூசன்ஸ் மாதிரியான கேஸ். சொந்த ஜாமீனிலேயே வெளியே விட்டு விடலாம். அதற்குப் பதிலாக, அவனை உள்ளே வைத்து, வாங்கு, வாங்கு என்று வாங்கியிருக்கிறார்கள். இதை சபையிலே விவாதித்த உடனே, இது அப்படி அல்ல, ஹார்ட் அட்டாக்கால் செத்து விட்டான், அல்லது பிளட் பிரஷரால் செத்து விட்டான் அல்லது தற்கொலை என்று சொல்லப்படுவது சர்வ சாதாரணமாக இருக்கிறது. கொரின், லைட் எல்லாம் இருக்கிறது, நம் ஆட்சியிலே, உள்ளே. ஆகவே, இப்படிப்பட்ட ஒரு அக்கிரமமான சம்பவம் நடந்திருக்கிறது. மற்ற சம்பவங்களைவிட கொடுமையான ஒரு சம்பவம் நடந்திருக்கிறது. யாருக்கும் இந்த நிலை ஏற்படலாம்.

நான் பஸ்ஸிலே போகிறேன். என்னைக்கூட அந்த மாதிரி கூப்பிட்டுக் கொண்டு போகலாம். நான் பஸ்ஸில்தான் போகிறேன். நான் சட்டமன்ற உறுப்பினர் என்று தெரியாவிட்டால் என்னையும் அந்த மாதிரி அழைத்துச் சென்று விடலாம். சட்டமன்ற உறுப்பினர் பாஸை மறந்து வைத்துவிட்டு வந்தால், மறந்து வைத்துவிட்டு வந்தேன் என்று சொன்னால்கூட ஏற்றுக் கொள்ளாமல், லாக் அப்பில் கொண்டு போய் வைக்கலாம். லாக் அப்பில் நடக்கும் இத்தகைய நிகழ்ச்சிகளைத் தடுக்காத காரணத்தால், சீரிங் வைக்காத காரணத்தால், தக்க நடவடிக்கை எடுக்காத காரணத்தால், அவர்களுக்குத் தைரியம் வந்துவிட்டது. போலீஸ்காரர்கள் சட்டத்தைத் தங்கள் கையிலே எடுத்துக் கொள்கிறார்கள். அவர்களே நீதிபதியாகி விடுகிறார்கள். நீதிமன்றம்கூட ஒருவருக்கு தண்டனை கொடுக்கவேண்டுமென்றால், கீழ்கோர்ட்டுக்கு அதிகாரம் இல்லை. செஷன்ஸ் கோர்ட்டுக்குத்தான் அந்த அதிகாரம் இருக்கிறது. ஆனால், அங்கு சப்-இன்ஸ்பெக்டருக்குக் கீழே உள்ளவர்கள்

அடித்து விடுகிறார்கள். ஆகவே, இந்த பயங்கரமான சம்பவம் என்பதைத் தங்கள் மூலமாக, இந்த மேலான அவையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

அதுகுறித்து என்ன நடவடிக்கை எடுத்தார்கள்? ஆகவே, அங்கேயிருக்கிற பொதுமக்களுக்குச் சந்தேகம் வந்திருக்கிறது. போஸ்ட் மார்ட்டம் சரியாகச் செய்வார்களோ என்ற சந்தேகம் வந்து, டி.எம்.ஓ. தான் செய்ய வேண்டும், வேறு அசிஸ்டெண்ட்ஸ் யாரும் செய்யக்கூடாது என்று அந்த ஊரிலே இருக்கிற பொதுமக்கள் கேட்டிருக்கிறார்கள். அதற்கேற்றாற்போல் அரசாங்க அதிகாரிகளைச் சரிக்கட்டி, தற்கொலை என்று சொல்கிறார்கள். அவனைக் கொட்டகையிலே போட்டிருக்கிறார்கள். சமீபத்திலே வேறு ஒரு நிகழ்ச்சி வந்தது. கும்பகோணத்திலே அடித்து விட்டார்கள். அடித்து விட்டு குளத்திலே போட்டுவிட்டு தற்கொலை செய்து விட்டான் என்று சொன்னார்கள். அதே போல் இங்கும் அவனை அடித்துவிட்டு கொட்டகையில் போட்டுவிட்டார்கள். ஆகவே, அதுகுறித்து யார் மீதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா என்றால் இதுவரையில் தகவல் இல்லை. எந்த அதிகாரிமேலாவது, கான்ஸ்டபிள் மேலாவது நடவடிக்கை உண்டா? போஸ்ட்மார்ட்டம் 40 மணி நேரம் கழித்தா செய்வார்கள்? சென்னை நகரத்தில் 1 மணி நேரத்தில் போஸ்ட் மார்ட்டம் செய்யவில்லையா? எதற்காக 40 மணி நேரம்? ஆகவே, ஐயப்பாட்டிற்குரிய பல விவகாரங்கள் இடம் பெற்றிருக்கின்றன. இது விசாரணைக்குரிய கொலையாக இருக்கிற காரணத்தால், ஒரு சாதாரண காரியத்திற்கே, கொலைக்குக் கொண்டு செல்கிற நிலை போலீஸ் ஸ்டேஷனில் ஏற்பட்டிருக்கிற காரணத்தால், இதைத் தீர விசாரிப்பதற்காக, மற்ற விவரங்களைச் சொல்வதற்காக, விவரம் தெரிந்த உறுப்பினர்கள் பேசுவதற்காக, இன்றைய இதர அலுவல்களை ஒத்திவைத்து இதுகுறித்து விவாதிக்க அனுமதி அளிக்க வேண்டுகிறேன்.

**திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம்:** பேரவைத் தலைவர் அவர்களே, 2—4—1984 அன்று கீழக்கரையில் கஞ்சிராயன்குடியைச் சேர்ந்த முனியாண்டி என்பவர் பிரசவத்திற்காகச் சென்றுள்ள தன்னுடைய மனைவியைப் பார்ப்பதற்காக, மருதுபாண்டியன் என்ற டவுன் பஸ்ஸிலே 30 பைசா பஸ் டிக்கட் கேட்டபொழுது, சில்லறை இல்லையென்று சொல்ல, சில்லறை இல்லாதவன் ஏனப்பா பஸ்ஸிலே ஏறுகிறாய் என்று கண்டக்டர் கேட்க, கண்டக்டருக்கும் அவனுக்கும் வாய்த் தகராறு ஏற்பட, இதனால், கண்டக்டர் அவனைக் கொண்டு போய் போலீஸ் ஸ்டேஷனில் ஒப்படைக்க வேண்டிய துர்பாக்கியமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அங்கு கூட செக்ஷன் 75 கேஸ்தான் போட்டிருக்கிறார்கள். உடனே ஜாமீனில்



அனுப்பியிருக்கலாம். அதற்குப் பதிலாக, கண்டக்டரிடம் தகராறு செய்தாயாமே என்று கேட்டு, உதை, உதை என்று உதைத்து, ரத்த வாந்தி எடுத்த அபாயகரமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அங்கே வேறு விசாரணைக்கு சென்றிருந்த ஒருவர், தர்மராஜன் என்பவர் இதை பார்த்து இருக்கிறார். இப்படிப்பட்ட நிலை ஏற்பட்டது வீட்டிற்கு தெரிந்த பின்னாலே பெற்றோர்கள் வந்து அவருக்கு ஜாமீன் கொடுத்து, வராண்டாவிலே கையைப் பிடித்து அழைத்துக்கொண்டு வருகிறபொழுதே அவர் அங்கே விழுந்து விடுகிறார். உடனே ஆஸ்பத்திரியிலே சேர்த்து விடுகிறோம் என்று போலீஸ் ஸ்டேஷனில் சொல்லிவிட்டு வருகிறார்கள். பின்னாலே விஷத்தை குடித்து இறந்திருக்கலாம் என்ற சந்தேகம் இருக்கிறது என்றும், பிரேதத்தை போஸ்ட் மார்ட்டம் செய்யவேண்டுமென்றும், வீட்டிலேயிருந்து பிரேதத்தை கைப்பற்றி போலீசார் எடுத்து வருகிறார்கள். இதையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த மக்கள், வேண்டுமென்றே அடித்து கொலை செய்துவிட்டு இப்படி செய்தது சரியான முறையில்லை; ஆகவே போஸ்ட் மார்ட்டம் செய்வது டாக்டர்களைப் பொறுத்தவரையில் டி.எம்.ஓ. தான் செய்யவேண்டுமென்று வற்புறுத்தி இருக்கிறார்கள். ஆகவே இது இழுபறியிலே இருந்து, 42 மணி நேரம் போஸ்ட் மார்ட்டம் செய்யாமல் வைத்திருந்து, கடைசியிலே வேண்டா வெறுப்பாக செய்திருக்கிறார்கள். இந்த விவரங்களை அறிந்த அவருடைய மனைவி அதிர்ச்சியுற்று, அவருடைய கர்ப்பம் கலைந்து, உடல்நிலை மிக மோசமான நிலையில் இருக்கிறார். இதைக் குறித்து விசாரணை செய்யவேண்டுமென்று மக்கள் போலீசிடத்திலும், தாசில்தாரிடத்திலும் முறையிட்டிருக்கிறார்கள். கடைசியாக எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படாததைப் பார்த்து, நீதி விசாரணை நடத்த வேண்டுமென்று இராமநாதபுரத்திலே சத்யேந்திரன், எம்.பி. அவர்கள் தலைமையிலும், மாவட்ட மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி செயலாளர் எஸ். ஏ. பெருமாள் அவர்கள் தலைமையிலும், மற்றும் பல கட்சிகளுடைய தலைவர்கள் தலைமையிலும் ஊர்வலம் நடத்தி இருக்கிறார்கள். நீதிவிசாரணை செய்வதுகூட உயர்நீதி மன்ற நீதிபதி செய்யவேண்டுமென்று வற்புறுத்தி இருக்கிறார்கள்.

இதற்கிடையிலே விசாரணை நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அந்த வட்டாரத்திலே இருக்கிற சப்-கலெக்டரை விசாரணைக்காக போட்டிருக்கிறார்கள். அவர் முதலில் 17—4—1984-ல் விசாரணை செய்வதாக அறிவிக்கிறார். பிறகு திடீரென்று அதை ஒத்தி வைப்பதாகச் சொல்கிறார்.

[திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரலம்] [1984 ஏப்ரல் 28

இந்தச் சம்பவத்தை நேரடியாகப் பார்த்த போலீஸ் லாக்கப்பில் இருந்த தர்மராஜன் என்பவரை சாட்சியமாக போடவேண்டுமென்று அந்தத் தரப்பிலே யிருந்து சொன்னதன் அடிப்படையில், அவரை அழைத்துப் போய் விசாரிக்கிறோம் என்று ஜீப்பிலே அழைத்துக்கொண்டு போனார்கள். இதுவரையில் அந்த தர்மராஜனைக் காணவில்லை. அவர் என்ன ஆனார் என்பது கேள்விக் குறியாக இருக்கிறது. அவர் தான் அந்தச் சம்பவத்தை நேரிடையாகப் பார்த்த சாட்சியம். அவர் சாட்சியம் சொன்னால் போலீஸ் ஸ்டேஷனில் நடந்த சம்பவங்களை ஆதாரபூர்வமாகச் சொல்லலாம். அதன் காரணமாக உண்மை வெளிவந்துவிடும் என்ற அடிப்படையிலே தடயங்களை மறைப்பதற்காக தர்மராஜனை கடத்தி இருக்கிறார்கள். இப்படி பல்வேறு மோசடிகள், தவறுகள் நடந்திருக்கின்றன. இதுகுறித்து உயர்நீதிமன்ற நீதிபதியால் விசாரிக்கப்பட வேண்டுமென்று மக்கள் தொடர்ந்து கிளர்ச்சி செய்துக் கொண்டிருக்கிறார்கள். இதன் காரணமாக அந்தப் பகுதியில் ஒரு பதட்டநிலை ஏற்பட்டிருக்கிறது. யார் யார் சாட்சியம் சொல்ல வருகிறார்களோ அவர்களைக் கூப்பிட்டு பயமுறுத்துகிறார்கள். தர்மராஜன் மட்டுமல்லாமல் அந்த வட்டாரத்திலிருக்கிற முத்து என்பவர் நடந்த சம்பவம்பற்றி தனக்குத் தெரியும்; சாட்சியம் சொல்கிறேன் என்று வந்தால் அவரையும் கடத்தி இருக்கிறார்கள். கடத்திய பிறகு, 'நீ உண்மையைச் சொல்ல ஆரம்பித்தால் உனக்கும் தர்மராஜன் கதிதான்' என்று சொல்கிறார்கள். இந்த நிலையில் அந்த வட்டாரத்தில் இருக்கிற மக்கள் போலீசாலும், தாசில்தாராலும், சப்-கலெக்டராலும் பயமுறுத்தப்படுகிற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆகவே உயர்மட்ட விசாரணை நடத்தவேண்டிய அவசியம் இருக்கிற காரணத்தால், இந்தப் பிரச்னையை குறித்து ஒத்திவைத்து விவாதிக்க வேண்டும். இந்தப் பிரச்னையை மற்ற பிரச்னைகளைப் போல தள்ளுபடி செய்துவிடாமல் அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து இதுபற்றி விவாதிக்க வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.

**திரு. மு. அப்பாதுரை:** மாண்புமிகு தலைவர் அவர்களே, கடந்த 2—4—1984 தேதியன்று கீழக்கரை காவல் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்ட முனியாண்டி என்ற இளைஞர் இறந்திருக்கிறார்; மருது பாண்டியர் போக்குவரத்துக் கழகத்தின் நடத்துனர் ஒருவருக்கும் அவருக்கும் ஏற்பட்ட தகராறு காரணமாக காவல் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப் பட்ட அவர் இரவு 10 மணிக்கு ஜாமீனில் வெளியே அனுப்பப்பட்டிருக்கிறார்கள். அவருடைய தந்தை கருப்பையா ஜாமீனில் அழைத்துச் சென்று இருக்கிறார். அப்படி அவரை அழைத்துச் சென்றபோது அவர் தன்னால்



1984 ஏப்ரல் 28] [திரு. மு. அப்பாதுரை]

நடக்க முடியவில்லை என்றும், காவல் நிலையத்தில் கொடுமையாக தன்னை நடத்தினார்கள் என்றும் சொல்லி இருக்கிறார். வீட்டிற்கு அழைத்துச் செல்லப்பட்ட அவர் காலையில் மரணம் அடைந்திருக்கிறார். இந்த மரணத்தில் சந்தேகம் இருக்கிறது என்று காவல் துறையினர் அவருடைய உடலை மருத்துவப் பரிசோதனை செய்யவேண்டுமென்று எடுத்துச் சென்றிருக்கிறார்கள். இதன்மீது பொதுமக்களுக்கு சந்தேகம் ஏற்பட்டு அன்றையதினம் ஏறத்தாழ 3,000-க்கும் மேற்பட்ட அந்த வட்டார மக்கள் திரண்டு இராமநாதபுரத்தில் ஒரு ஊர்வலத்தை நடத்தி இருக்கிறார்கள். அவர்கள் கேட்டது எல்லாம், மாவட்ட தலைமை மருத்துவ அதிகாரி மூலமாக அந்தப் பரிசோதனை செய்யப்படவேண்டும் என்பதாகும். ஏனென்றால் இந்தச் சாவில் எங்களுக்குச் சந்தேகம் இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் உடனடியாக அந்த மருத்துவப் பரிசோதனை செய்யப்படாமல் 40 மணி நேரம் கழித்து, அவருடைய அங்கங்கள் எல்லாம் கெட்டுப்போன பிறகு போஸ்ட் மார்ட்டம் செய்யப்பட்டு, அதனுடைய முடிவு என்ன என்பது கூட தெரியவில்லை என்கிற செய்தி எங்களுக்குக் கிடைத்து இருக்கிறது. அப்படிப்பட்ட சூழ்நிலையில் மருத்துவப் பரிசோதனை குறித்த தகவல் கிடைக்காத நிலையில், அந்த மரணத்தில் அந்த மக்களுக்குச் சந்தேகம் ஏற்பட்டு, 17—4—1984 அன்று ஏறத்தாழ 5,000-க்கு மேற்பட்ட கட்சித் தலைவர்கள் தலைமையில் மிகப்பெரிய ஆர்ப்பாட்டம், ஊர்வலம் நடைபெற்று இருக்கிறது. அந்த அடிப்படையில் அங்கே இருக்கும் ஆர்.டி.ஓ. அவர்கள் நான் விசாரணை செய்கிறேன் என்று சொல்லியிருக்கிறார். அதற்குப் பிறகு முனியாண்டி அவர்களின் மனைவி கர்ப்பவதியாக இருக்கிறார். அவர் சாட்சி சொல்ல இராமநாதபுரம் வந்த பிறகு திடீரென்று விசாரணை ஒத்திவைக்கப் படுகிறது.

(முற்பகல் 10-10)

ஆகவே, மரணத்தில் சந்தேகம், பிரேத பரிசோதனை அறிக்கையில் சந்தேகம், திடீரென்று விசாரணை ஒத்தி வைத்ததால் சந்தேகம் என்பதோடு மட்டுமல்ல, முனியாண்டி காவல் நிலையத்தில் தாக்கப்பட்ட அதே நாளில் அங்கேயுள்ள கைதி தர்மராஜன் காணவில்லை என்ற நிலைமையும் ஏற்பட்டு இருக்கிறது. மேலும், காவல் நிலையத்தில் மரணம் என்று சொல்லப்படுகிறது சித்திரவதை என்பது இந்த அமைச்சரவையில் ஒரு தொடர்கதையாக தமிழகத்தில் இருக்கிறது. இன்றைக்கு எங்களைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்கள்கூட நேரடியாக எதுவும் செய்யமுடியாத அளவிற்கு இராமநாதபுரம் மாவட்டத்தில் நிலைமைகள் இருக்கின்றன. இதைப்பற்றி அங்கேயுள்ள 40 கிராமங்களில் ஒரு கொந்தளிப்பான சூழ்நிலை ஏற்பட்டு இருக்கிறது.

காவல் நிலையங்களில் நடைபெறுகின்ற இத்தகைய வன்மையான தாக்குதல் காரணமாக மரணங்கள் ஏற்பட்டுவிடுகின்ற இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளை முழுமையாக விசாரிப்பதோடு மட்டுமல்லாமல், உடனடியாக அந்தக் காவல் நிலையத்தைச் சேர்ந்த அத்தனை அதிகாரிகளையும் உடனடியாக மாறுதல் செய்வதோடு, இதைப்பற்றி முழுமையாக விசாரணை ஒன்றை உயர்நீதிமன்ற நீதிபதியை வைத்து நடத்தவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதோடு, மரணம் அடைந்த முனியாண்டியின் குடும்பத்திற்கு குறைந்தபட்சம், அவர் மனைவி உடல் ஊனமுற்றவள், அவர்கள் தொழில் செய்து பிழைத்துக்கொள்ளும் அளவிற்கு, முதலமைச்சர் நிவாரண நிதியில் இருந்து குறைந்தபட்சம் 20,000 ரூபாய் கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்வதோடு, இதுகுறித்து விசாரிக்க உயர்நீதி மன்ற நீதிபதி ஒருவரை நியமிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்வதோடு அந்த பெண்ணுக்கு சமூக நலத் துறையில் ஒரு வேலை கொடுத்தால்கூட நல்லது என்று தெரிவித்து, அப்படிப்பட்ட ஒரு நிலையை உருவாக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்வதோடு, இப்படிப்பட்ட நிலைமைகள் போலீஸ் நிலையத்தில் ஏற்படுவதைத் தடுக்க நல்ல வழிமுறைகளை வகுக்க, மற்ற உறுப்பினர்களும் ஆலோசனை நல்கத் தக்க வகையில், இதுகுறித்து விவாதிக்க சபையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் கேட்டு, அமர்கிறேன்.

**திரு. உ. சுப்பிரமணியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழக்கரையில் நடந்த சம்பவத்தைப்பற்றி எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் விவரமாக, விரிவாக விளக்கமாக எடுத்துச் சொல்லிவிட்டார்கள். இந்த மாதிரி நிலைமைகள் தமிழகம் முழுவதும் அன்றாடம் நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றன என்பதை நான் இங்கே சொல்லாமலேயே மன்ற உறுப்பினர்கள் அனைவரும் அறிவார்கள். இங்கே சட்டமன்றத்திலும் அவ்வப்போது கொண்டுவரப்படும் ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மூலமும், வேறு பல வகைகளில் கொண்டுவரப்படுகிற கவன ஈர்ப்புத் தீர்மானங்களின் மூலமாகவும், விவாதங்களின் மூலமாகவும் நாங்கள் இங்கே அதைப்பற்றி தெரிவித்து இருக்கிறோம். ஆகவே, இப்படி அடிக்கடி நிலைமைகள் ஏற்படக் காரணம் என்ன என்பதை நாம் ஆராய வேண்டும். சாதாரணமாக, அரசாங்கம் அந்த ஊழியர்கள் தரப்படுவதை ஏற்றுக்கொண்டு, இங்கே நிலைமைகளை விளக்கினால், உண்மையிலேயே அந்த போலிசின் மோரேல் கெட்டுவிட்டதா, அல்லது அவர்களுடைய உணர்வுகள் கெட்டு விட்டதா அல்லது என்ன தவறு செய்தாலும் அரசு நம் செய்கையை நியாயப் படுத்தும் என்ற எண்ணம் அவர்களுக்கு ஏற்பட்டுவிட்டதா என்பதை நாம்





ஆராய்ந்து பார்க்கவேண்டும். இது தமிழ்நாட்டில் தொடர்கதையாக நடந்து வருகிறது என்று பத்திரிகைகளில் இரண்டு மூன்று நாட்களாக வந்து கொண்டிருக்கிற செய்திகளின் அடிப்படையில் நாம் சொல்ல முடியும். ஆங்காங்கு பரவலாக 'போலீஸ் நிலையங்களில் கைதிகள் தூக்கில் தொங்கினார், அடித்துப்போடப்பட்டு, இறந்து போனார்' என்ற செய்திகளைப் பார்க்கிறோம். இந்தச் சந்தர்ப்பத்தில் கீழக்கரையில் நடைபெற்றதை நாம் சொல்லியாகவேண்டும். கீழக்கரை போலீஸ் ஸ்டேஷனில் இதுபோன்று பல்வேறு சம்பவங்கள் நடந்து இருந்தாலும், இந்த முனியாண்டி சம்பவம் தான் வெளிவந்து இருக்கிறது. ஆங்கிலத்தில் சொல்லவேண்டுமானால், கீழக்கரை காவல் நிலையம் ஒரு 'நோட்டோரியஸ் ஸ்டேஷன்' என்பது எல்லோருக்கும் தெரியும். சாதாரணமாக அரசியல் கட்சிகள் தங்கள் எதிர்ப்பைத் தெரிவிக்க உண்ணாவிரதம், மறியல் போன்றவைகளைச் செய்தால், தங்கள் கடமைகளைச் செய்கிறார்கள் என்ற அடிப்படையில் காவலர்கள் அவர்களை காவல் நிலையத்திற்கு இழுத்துச் செல்வதை நாம் அறிந்து இருக்கிறோம்.

எங்களுடைய கட்சி, தாலுகா காங்கிரஸ் தலைவர் ஒருவர்மீதுகூட அங்கே பொய் கேஸ் போட்டிருக்கிறார்கள். காரணம் என்னவென்றால் அவர் பொது மக்களுக்காக, நியாயமான காரியங்களுக்காக போலீஸ் ஸ்டேஷனுக்குப் போய் கேட்பார், பொதுமக்களுக்கு உதவியாக இருப்பார். அதை அவர்கள் விரும்பவில்லை.

இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் ஏதோ ஒரு சம்பவம் நடந்தது என்று அஜாக்கிரதையாக இருக்காமல் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். தொடர்ச்சியாக இப்படிப்பட்ட சம்பவங்கள் அந்த காவல் நிலையத்தில் நடந்துகொண்டிருக்கிறது தவறு நடந்திருக்கிறது என்று நிரூபிக்கப்பட்டால், அவர்கள் போலீஸ் உத்தியோகஸ்தர்கள், சர்க்கார் சிப்பந்திகள் என்று பார்க்காமல் நியாயம் வழங்க வேண்டும், உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். அப்படி நியாயமான நடவடிக்கை எடுக்காமல் மனு நீதிச் சோழனைப் பற்றி எல்லாம் சொல்லிக் கொண்டிருந்தால் போதாது. மனுநீதிச் சோழன் ஆராய்ச்சி மணி கட்டியதைப் போல தற்போதைய நடைமுறையில் எங்கும் கட்டியதாக இதுவரை தெரியவில்லை. ஆராய்ச்சி மணி கட்டி, இதுபோன்ற சம்பவங்களுக்காகவாவது தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படிச் செய்தால்தான் இதுபோன்ற சம்பவங்கள் தொடராமல் இருக்கும்.

நீங்கள் எப்படித்தான் சிப்பந்திகளை நியாயப்படுத்திப் பேசினாலும், மக்கள் மத்தியிலே அதை மறைக்க முடியாது. மக்களுடைய பாதுகாப்புக்காக இருக்கிற இந்த காவல்துறையில் இப்படிப்பட்ட துயர சம்பவங்கள் ஏற்பட்டால், இந்தத் துறை பாதுகாப்புக்காக இல்லை, மக்களை இம்சை படுத்துவதற்காக இருக்கிறது என்ற கருத்துத்தான் மக்கள் மத்தியிலே எழும். அப்படிப்பட்ட எண்ணம் மக்களுக்கு ஏற்படாமல் இருக்க வேண்டுமென்றால் இதிலே யார், யார் சம்பந்தப்பட்டிருக்கிறார்களோ அவர்கள்மீது எல்லாம், தகுந்த விசாரணைக்குப் பின்னால், கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். கடுமையான நடவடிக்கை எடுத்து, அந்தப் பகுதி மக்களுடைய பீதியை பதட்ட நிலையை மாற்ற வேண்டும்.

இன்னும் சொல்லப்போனால் அந்தப் பகுதி மக்கள் மத்தியிலே பல்வேறு காரணங்களால் ஏற்கெனவே பீதியும் பதட்டமும் இருந்து வருகிறது. தொடர்ந்து ஒரு பதட்டமான பகுதியாக அது இருந்து வருகிறது. சிறு விஷயங்களுக்குக்கூட அவ்வப்போது கலவரம் நடைபெறும் பகுதியாக மாறக் கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, எல்லாக் கட்சிகளும் சேர்ந்து சொல்லுகின்ற ஒரு கருத்தை அரசாங்கம் ஏற்று, இந்தப் பிரச்சினையிலே தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும். இது சம்பந்தமாக இன்னும் விரிவாக பல கருத்துக்களைச் சொல்ல வேண்டியிருப்பதால், அவையின் இன்றைய இதர அலுவல்களை ஒத்திவைத்து இப்பிரச்சினை குறித்து விவாதிக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவரவர்களே, கீழக்கரை சம்பவம் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் தங்களுக்குக் கிடைத்த தகவல்கள் அடிப்படையில் சிலபல கருத்துக்களை இங்கே தெரிவித்திருக் கிறார்கள்.

2—4—1984 அன்று காலை 10-30 மணியளவில் இராமநாதபுரம் மாவட்டம் காஞ்சிரங்குடி கிராமத்தைச் சேர்ந்த முனியாண்டி என்பவர் காஞ்சிரங்குடியி லிருந்து கீழக்கரைக்கு மருதுபாண்டியர் பேருந்தில் பயணம் செய்யும்போது பேருந்து நடத்துனரிடமும் மற்றும் சில பயணிகளிடமும் தகராறு ஏற்பட்டிருக் கிறது. எனவே பேருந்து நடத்துனர் அவரை கீழக்கரை காவல் நிலையத் திற்குக் கொண்டு சென்று ஒப்படைத்துள்ளார். கீழக்கரை காவல் நிலையக் குற்ற எண் 94/84-ல் சென்னை நகரக் காவல் சட்டம் பிரிவு 75-ன் கீழ் அவர் மீது ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டு அவரைக் காவல் நிலையத்தில் வைத் திருந்தனர். அன்று இரவு 8-30 மணியளவில் முனியாண்டியின் தந்தை கருப்பையா மற்றும் காட்டுவாசாகிப் என்பவர்களின் பிணையின் பேரில்





முனியாண்டி ஜாமீனில் விடுதலை செய்யப்பட்டார். மறுநாள் 3—4—1984 அன்று காலை 7 மணியளவில் காஞ்சிரங்குடி கிராமத்தில் முனியாண்டி வேலை பார்க்கும் தோப்பில் இறந்து கிடந்ததை அவருடைய தந்தை கண்டதாகக் காவல் நிலையத்திற்குத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. கீழக்கரை காவல் நிலையத்தில் இது குறித்து ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டு, பிரேதத்தை கீழக்கரைக்கு கொண்டு சென்று பிரேதப் பரிசோதனைக்காக கீழக்கரை அரசு மருத்துவ மனைக்கு அனுப்பப்பட்டது. இறந்தவரின் குடலுறுப்புகள், இரசாயனப் பரிசோதனைக்காக மதுரை இராசாசி அரசு மருத்துவ மனைக்கு அனுப்பப்பட்டுள்ளன. இரசாயனப் பரிசோதனை அறிக்கை இன்னும் கிடைக்கப்பெறவில்லை. இதற்கிடையில் முனியாண்டியின் மரணத்திற்கு காவல் துறையினர் காரணமாக இருக்கலாம் என்று தனக்கு சந்தேகம் ஏற்பட் டுள்ளதாக அவருடைய தந்தை இராமநாதபுரம் சார் ஆட்சியருக்கு தந்தி அனுப்பியுள்ளார். அந்தக் குற்றச்சாட்டு குறித்து காவல் துறை நிலை யாணை எண் 145-ன் கீழ் விவரமாக விசாரணை செய்யும்படி சார் ஆட்சி யருக்கு இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆணையிட்டுள்ளார். அதன்படி விசாரணை நடந்து வருகிறது.

21—4—1984 அன்று முக்கியமான அரசியல் கட்சிகளைச் சேர்ந்த சுமார் 1,500 பேர்கள் ஊர்வலமாகச் சென்று, இராமநாதபுரம் சார் ஆட்சியரிடம் ஒரு மனுவை அளித்தார்கள். அந்த மகஜரை வாங்கிக்கொண்டு இதுபற்றி விசாரித்து தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று சார் ஆட்சியர் அந்தக் கட்சித் தலைவர்களிடம் சொல்லியிருக்கிறார். அதன்பிறகு ஊர்வலத்தினர் அமைதி யாக கலைந்து செல்ல வேண்டுமென்று கேட்டுக்கொண்டதற்கிணங்க சர்வ கட்சித் தலைவர்களும் அந்த ஊர்வலத்தினரும் கலைந்து சென்றிருக்கி றார்கள்.

(முற்பகல் 10-20)

இராமநாதபுரம் சார் ஆட்சியரின் விசாரணை முடியும் தருவாயில் உள்ளது. அவரது அறிக்கை அரசுக்குக் கிடைத்தவுடன் பரிசீலிக்கப்பட்டு, தக்க நடவ டிக்கை எடுப்பதாக அரசு இருக்கிறது. ஆக இதுபற்றி விசாரணை நடத்தி முழு உண்மையையும் அளிக்க வேண்டுமென்று மாவட்ட ஆட்சித் தலைவ ருக்கும், சார் நிலை ஆட்சியருக்கும் அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. ஆக யார் ஒருவரையும் காப்பாற்ற வேண்டிய அளவில் அரசு இல்லை. யார் குற்றவாளி யாக இருந்தாலும், அவர்கள் தண்டிக்கப்பட வேண்டியவர்கள்தான். ஆனாலும் கூட, தொடர் கதையாக எல்லா காவல் நிலையங்களிலும் நடைபெறுகிற பொதுவான நிகழ்ச்சியாக இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. எனவே

றால், தமிழகத்தில் சுமார் 1,000 காவல் நிலையங்கள் இருப்பதால், கிட்டத்தட்ட பல்லாயிரக்கணக்கான காவல் கைதிகள் தினமும் அங்கே அனுப்பப்படுகிறார்கள். அங்கொன்றும், இங்கொன்றுமாக இப்படிப்பட்ட வருந்துவதற்குரிய சம்பவங்கள் நடைபெறுகின்றன. இதிலே ஐயப்பாடு தெரிவிக்கப்படுகின்றது என்னவென்றால், இரவு 8-30 மணி அளவில் முனியாண்டியின் தந்தை கருப்பையா மற்றும் காட்டுவாசாகிப் என்பவர்களின் பிணையின் பேரில் முனியாண்டி ஜாமீனிலே விடுதலை செய்யப்பட்டார். ஆனால் மறுநாள் அவருடைய தந்தை, முதல் நாள் அடிக்கப்பட்டதன் காரணமாக தன் மகன் இறந்திருக்கிறார் என்று எடுத்துச் சொல்லியிருக்கிறார். யாரையும் காப்பாற்ற வேண்டிய அவசியம் இந்த அரசிற்கு இல்லை. அங்கிருக்கின்ற சர்வ கட்சித் தலைவர்களும், பொதுமக்களும் ஊர்வலமாகச் சென்று மகஜரைக் கொடுத்து, அந்த மகஜரில் இவ்வாறு கொலை செய்யப்பட்டதாக தகவல் சொல்லியிருக்கின்ற காரணத்தால், அவர்களுக்கு நியாயம் என்று படுகின்ற அளவிற்கு இந்த விசாரணை நடத்தப்பட்டு, உள்ளபடியே நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று அரசு சொல்லியிருக்கிறது. இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவரும் இதுபற்றி குறிப்பாக கவனிக்க வேண்டும் என்று கோரப்பட்டுள்ளார்.

மருத்துவ ரசாயனப் பரிசோதனையில் அறிக்கையின் தன்மையும், சார்நிலை ஆட்சியரின் அறிக்கையும் வந்ததற்குப் பிறகு, தக்க நடவடிக்கை எடுக்கப்படும். இந்த அறிக்கை வந்ததற்குப் பிறகு மாண்புமிகு அப்பாதுரை அவர்கள் கூறியமாதிரி, அந்தக் குடும்பத்திற்கு என்ன செய்யவேண்டுமென்பது பற்றி ஆலோசித்து, தக்க முடிவு எடுக்கப்படும் என்று கூறி, இதற்கு மேல் இதுகுறித்து விவாதிக்க வேண்டிய அவசியமில்லை என்று கூறிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவரின் விளக்கத்திற்குப் பின் பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைத்து இத்தீர்மானம் குறித்து விவாதிக்கத் தேவை இல்லையென்பதால், இதற்கு இசைவு மறுக்கப்பெறுகிறது.

### 5. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

#### (ஆ) மதிப்பீட்டுக் குழு—உறுப்பினர்கள் தேர்தல்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1984-85 ஆம் ஆண்டுக்கான மதிப்பீட்டுக் குழுவிற்கு (Committee on Estimates) கீழ்க்கண்ட பதினாறு உறுப்பினர்கள் முறைப்படி நியமனம் செய்யப் பெற்றுள்ளனர் என்பதை நான் பேரவைக்கு அறிவிக்கிறேன்—



1. திரு. என். பழனிவேல்
2. திரு. எம். ஆறுமுகம்
3. திரு. சு. பாலன்
4. திரு. த. வேணுகோபால்
5. திரு. கே. நாராயணசாமி
6. திரு. ரா. பெரியசாமி
7. திரு. க. பாரமலை
8. திரு. த. குலசேகரபாண்டியன்
9. திரு. மா. சின்னராசு
10. திரு. சு. பழனிசாமி
11. திரு. என். குப்புசாமி
12. திரு. இரா. சண்முகம்
13. திரு. மு. சிவபெருமான்
14. திரு. கே. பி. நாச்சிமுத்து
15. திரு. ஆர். டி. கோபாலன்
16. திரு. மி. வின்சென்ட்.

நியமனம் செய்யப்பெற்றுள்ள வேட்பாளர்களின் எண்ணிக்கை தேர்ந்தெடுக்கப்பெற வேண்டியவர்களின் எண்ணிக்கைக்குச் சமமாக இருப்பதால், 1984-85 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழுவிற்கு இவர்கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பெற்றதாக நான் அறிவிக்கிறேன்.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களும், பொதுக்கணக்குக் குழு தலைவர் மற்றும் பொது நிறுவனங்கள் குழு தலைவர் ஆகியோர் தங்கள் அலுவல் காரணமாக இக்குழுவின் உறுப்பினர்களாவர்.

சட்டமன்றப் பேரவை விதி 211-ன் கீழ் திரு. மா. சின்னராசு அவர்களை இக்குழுவின் தலைவராக நான் நியமனம் செய்கிறேன்.

#### (இ) பொதுக் கணக்குக் குழு—உறுப்பினர்கள் தேர்தல்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1984-85 ஆம் ஆண்டுக்கான பொதுக் கணக்குக் குழுவிற்கு (Public Accounts Committee, கீழ்க்கண்ட பதினாறு உறுப்பினர்கள் முறைப்படி நியமனம் செய்யப் பெற்றுள்ளனர் என்பதை நான் பேரவைக்கு அறிவிக்கிறேன்—

1. திரு. பி. எம். தங்கவேல்ராஜ்
2. திரு. என். சங்கரப்பா
3. திரு. மு. அப்பாதுரை
4. திரு. அ. புருஷோத்தமன்
5. திரு. துரைமுருகன்
6. டாக்டர் கே. சௌரிராஜன்
7. திரு. இரா. முத்தையா
8. திரு. ஜி. கிருஷ்ணராஜ்
9. திரு. எஸ். ஆண்டித்தேவர்
10. திரு. சி. சிவப்பிரகாசம்
11. திரு. தா. வீராசாமி
12. திரு. செ. செம்மலை
13. திரு. என். பெருமாள்
14. திரு. மா. அண்ணாதாசன்
15. டாக்டர் கே. பி. இராமலிங்கம்
16. திரு. வே. இரா. ஜெயராமன்

நியமனம் செய்யப்பெற்றுள்ள வேட்பாளர்களின் எண்ணிக்கை தேர்ந்தெடுக்கப்பெற வேண்டியவர்களின் எண்ணிக்கைக்குச் சமமாக இருப்பதால், 1984-85 ஆம் ஆண்டு பொதுக்கணக்குக் குழுவிற்கு இவர்கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பெற்றதாக நான் அறிவிக்கிறேன்.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களும், மதிப்பீட்டுக் குழுவின் தலைவர் மற்றும் பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர் ஆகியோர் தங்கள் அலுவல் காரணமாக இக்குழுவின் உறுப்பினர்களாவர்.

சட்டமன்றப் பேரவை விதி 223-ன்கீழ் திரு. என். சங்கரப்பா அவர்களை இக் குழுவின் தலைவராக நான் நியமனம் செய்கிறேன்.

(ஈ) பொது நிறுவனங்கள் குழு—உறுப்பினர்கள் தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1984-85 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவிற்கு (Public Undertakings Committee) கீழ்க்கண்ட பதினாறு உறுப்பினர்கள் முறைப்படி நியமனம் செய்யப்பெற்றுள்ளனர் என்பதை நான் பேரவைக்கு அறிவிக்கிறேன்—





1. திரு. என். வரதராஜன்
2. திரு. இரா. கருப்பையா
3. திரு. அ. ரகுமான்கான்
4. திரு. கெ. சொக்கலிங்கம்
5. திரு. ப. தீர்த்தராமன்
6. திரு. சி. பழனிமுத்து
7. திரு. செ. சிவசாமி
8. திரு. ஆலூர் பு. கோ. ஜகதீசன்
9. திரு. பெ. திருமாறன்
10. திரு. ஆ. வெள்ளைச்சாமி
11. திரு. கே. சௌந்திரராசன்
12. திரு. தா. சாமிக்கண்ணு
13. திரு. சேலம் மு. ஆறுமுகம்
14. திரு. செ. பட்டாபிராமன்
15. திரு. கே. எம். எஸ். சுப்பிரமணியன்
16. திரு. வ. சத்தியமூர்த்தி

நியமனம் செய்யப்பெற்றுள்ள வேட்பாளர்களின் எண்ணிக்கை தேர்ந்தெடுக்கப்பெறவேண்டியவர்களின் எண்ணிக்கைக்குச் சமமாக இருப்பதால், 1984-85 ஆம் ஆண்டு பொது நிறுவனங்கள் குழுவிற்கு இவர்கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பெற்றதாக நான் அறிவிக்கிறேன்.

மதிப்பீட்டுக் குழுவின் தலைவர் அலுவல் காரணமாக இக் குழுவின் உறுப்பினராவார்.

சட்டமன்றப் பேரவை விதி 236-ன்கீழ் திரு. ஆ. வெள்ளைச்சாமி அவர்களை இக்குழுவின் தலைவராக நான் நியமனம் செய்கிறேன்.

(உ) உரிமைக் குழு—உறுப்பினர்கள் தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1984-85 ஆம் ஆண்டிற்கான உரிமைக் குழுவிற்கு (Privileges Committee) கீழ்க்கண்ட பதினொன்று உறுப்பினர்கள் முறைப்படி நியமனம் செய்யப் பெற்றுள்ளனர் என்பதை நான் பேரவைக்கு அறிவிக்கிறேன்—

1. திரு. ஜே. ஹேமச்சந்திரன்
2. திரு. இரா. கருப்பையா
3. திரு. கு. பா. பழனியப்பன்
4. திரு. த. ஆறுமுகம்
5. திரு. ச. முத்துக்கிருஷ்ணன்
6. திரு. கா. கோபாலகிருஷ்ணன்
7. திரு. மே. அ. இராசகுமார்
8. திரு. எஸ். டி. உகம்சந்த்
9. திரு. இரா. தாமரைக்கனி
10. திரு. பி. துரைராஜ்
11. திரு. எம். எஸ். மாணிக்கம்
13. திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்
13. திருமதி த. இராசாம்பாள்
14. திரு. உ. சுப்பிரமணியன்

நியமனம் செய்யப்பெற்றுள்ள வேட்பாளர்களின் எண்ணிக்கை தேர்ந்தெடுக்கப்பெற வேண்டியவர்களின் எண்ணிக்கைக்குச் சமமாக இருப்பதால், 1984-85 ஆம் ஆண்டுக்கான உரிமைக் குழுவிற்கு இவர்கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பெற்றுள்ளதாக நான் அறிவிக்கிறேன்.

மாண்புமிகு பேரவை முன்னவர், எதிர்க்கட்சித் தலைவர், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் ஆகியோர் தங்கள் அலுவல் காரணமாக இக்குழுவின் உறுப்பினர்களாவர்.

சட்டமன்றப் பேரவை விதி 245 (4)-ன்கீழ் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களை இக்குழுவின் தலைவராக நான் நியமனம் செய்கிறேன்.

### (ஊ) அலுவல் ஆய்வுக் குழு—உறுப்பினர்கள் தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சட்டமன்றப் பேரவை விதி 256 (1)-ன் கீழ், கீழ்க்கண்ட சட்டமன்ற உறுப்பினர்களை அலுவல் ஆய்வுக் குழுவின் (Business Advisory Committee) உறுப்பினர்களாக நான் நியமனம் செய்கிறேன்—

1. மாண்புமிகு முதலமைச்சர்
2. மாண்புமிகு பேரவை முன்னவர்
3. மாண்புமிகு மின்துறை அமைச்சர்
4. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்
5. மாண்புமிகு திரு. கே. எஸ். ஜி. ஹாஜா செரீப் (எதிர்க்கட்சித் தலைவர்)



6. திரு. ஆர். மணிமாறன், அரசு தலைமைக் கொறடா
7. திரு. என். எஸ். வி. சித்தன்
8. திரு. அன்பில் தர்மலிங்கம்
9. திரு. சு. பாலன்
10. திரு. என். சங்கரய்யா
11. திரு. சோ. அழகர்சாமி
12. திரு. எஸ். ஆண்டித்தேவர்
13. திரு. ஆர். நவநீதகிருஷ்ணபாண்டியன்
14. திரு. பி. முகமது இஸ்மாயில்
15. திரு. ப. நெடுமாறன்

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அலுவல் காரணமாக இக்குழுவின் தலைவராக இருப்பார்.

### (எ) சட்ட விதிகள் ஆய்வுக் குழு உறுப்பினர்கள்—தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சட்டமன்றப் பேரவை விதியின் 264 (1)-ன்கீழ் கீழ்க்கண்ட சட்டமன்ற உறுப்பினர்களை. 1984-85 ஆம் ஆண்டிற்கான சட்ட விதிகள் ஆய்வுக் குழுவிற்கு (Committee on Delegated Legislation) உறுப்பினர்களாக நான் நியமனம் செய்கிறேன்.

1. திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்
2. டாக்டர் கே. சமரசம்
3. திரு. சி. கோபால்
4. திரு. ப. தனபால்
5. திரு. ரா. கு. பெருமாள்
6. திரு. ஏ. சி. சண்முகம்
7. திரு. வி. பாலகிருஷ்ணன்
8. திரு. மெ. ஆண்டி அம்பலம்
9. திரு. பாபு ஜனார்த்தனன்
10. திரு. ரா. கிருஷ்ணன்
11. திரு. சோ. அழகர்சாமி
12. திரு. பி. முகமது இஸ்மாயில்

சட்டமன்ற பேரவை விதி 265-ன்கீழ் திரு. சி. கோபால் அவர்களை இக்குழுவின் தலைவராக நான் நியமனம் செய்கிறேன்.

### (எ) அரசு உறுதிமொழிக் குழு—உறுப்பினர்கள் தேர்தல்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சட்டமன்றப் பேரவை விதி 279 (1)-ன் கீழ் கீழ்க்கண்ட சட்டமன்ற உறுப்பினர்களை 1984-85 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் (Committee on Government Assurances) உறுப்பினர்களாக நான் நியமனம் செய்கிறேன்—

1. திரு. ஏ. எம். சேதுராமன்.
2. திரு. ஏ. பெரியசாமி.
3. திரு. கே. ரங்கசாமி.
4. திரு. கே. ஆர். சின்னராசு.
5. திரு. சி. குப்புசாமி.
6. திரு. ஆர். தவசி.
7. திரு. கே. உச்சி.
8. திரு. ஆர். சுந்தரமூர்த்தி.
9. திரு. பெ. சு. திருவேங்கடம்.
10. திரு. எம். செல்லமுத்து.
11. திரு. தி. கா. நல்லப்பன்.
12. திரு. ஜி. மூர்த்தி.

சட்டமன்றப் பேரவை விதி 280 (1)-ன் கீழ் திரு. ஜி. மூர்த்தி அவர்களை இக்குழுவின் தலைவராக நான் நியமனம் செய்கிறேன்.

### (ஐ) அவைக் குழு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1984-85 ஆம் ஆண்டிற்கான அவைக் குழுவிற்கு (House Committee) கீழ்க்கண்ட பனிரெண்டு உறுப்பினர்கள் முறைப்படி நியமனம் செய்யப் பெற்றுள்ளனர் என்பதை நான் பேரவைக்கு அறிவிக்கிறேன்—

1. திரு. பம்மல் நல்லதம்பி.
2. திரு. செ. இராமலிங்கம்.
3. திரு. ஏ. டி. கருப்பையா.
4. திரு. கோவைத்தம்பி,
5. திரு. ம. கண்ணன்.
6. திரு. சி. கணேசன்.
7. திரு. வ. பாலகிருஷ்ணன்.



8. திரு. இரா. சா. முனிரத்தினம்.
9. திரு. இரா. அமிர்தராஜ்.
10. திரு தி. அன்பழகன்.
11. திரு. எல். ஜகத்ரட்சகன்.
12. திரு. ஆர். மணிமாறன்.

1984-85 ஆம் ஆண்டுக்கான அவைக் குழுவிற்கு இவர்கள் முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்டதாக நான் அறிவிக்கிறேன். நியமனம் செய்யப்பெற்ற வேட்பாளர்கள் எண்ணிக்கை தேர்ந்தெடுக்கப்பட வேண்டியவர்களின் எண்ணிக்கைக்கு ஒன்று குறைவாக இருப்பதால் அவ்வெற்றிடத்தை நிரப்புவதற்கு அறிவிப்பு பின்னர் செய்யப்படும்.

சட்டமன்றப் பேரவை 288 (1)-வது விதிக்கு இணங்க திரு. இ. கணேசன், திரு. டி. ராமசாமி, திரு. பூ. மு. நரசிம்மன், திரு கி சட்டநாத கரையாளர் ஆகியவர்களை இக்குழுவின் உறுப்பினர்களாக நான் நியமிக்கிறேன். பேரவைத் துணைத் தலைவர் அலுவல் காரணமாக இந்தக் குழுவின் தலைவராவார்.

இந்தக் குழுக்கள் அனைத்தும் 30—4—1984 தேதியிலிருந்து அமைக்கப் படும்.

(முற்பகல் 10-30)

## 6. கவன ஈர்ப்பு.

### (அ) திருநெல்வேலியில் பார்த்தீனியம் விஷச் செடி படர்வது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருவாளர்கள் பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம், மு. அப்பாதுரை ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

**திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்:** தலைவர் அவர்களே, "திருநெல்வேலி இரயில் நிலையத்தை ஒட்டியும் அதன் சுற்றுப் புறங்களிலும் பார்த்தீனியம் என்ற விஷச்செடி வளர்ந்து வருவதால் மக்களிடையே நிலவும் கவலை குறித்த" அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** தலைவர் அவர்களே, "திருநெல்வேலி ரயிலடி மற்றும் சுற்று வட்டாரங்களில் பார்த்தீனியம் என்ற களையை அகற்றுவதற்கு, திருநெல்வேலி நகராட்சி ஆணையரால் உடனடி தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு விட்டன.

**திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொாணம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமீப நாட்களில் நான் வரும்போதுகூட பல இடங்களில் இன்னும் அந்தச் செடி அகற்றப்படாமல் இருக்கிறது. நகரசபை கமிஷனரிடம் கூட அதைப்பற்றி சொல்லியிருக்கிறது. அவர்களும் சீக்கிரமாக எடுக்கிறோம் என்று சொல்கிறார்களே தவிர, எடுக்கவில்லை. இதன் காரணமாக அந்தப் பகுதியிலே செல்கிற பல்வேறு நபர்களுக்கு, அந்தச் செடி மேலே படுகின்றபோது மேலே எல்லாம் தேமல் ஏற்பட்டு, ஒரு மாதிரியான மாற்றம் ஏற்பட்டு விஷ நோயாக பரவி வருகிறது. ஆகவே, சுற்றியிருக்கிற, அது பரவியிருக்கிற, எல்லா இடங்களிலும் இதனை எடுக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** தலைவர் அவர்களே, அந்தக் களையை அகற்றுவதற்கு உரிய ஆலோசனைகளை வழிமுறைகளைத்தான் வேளாண்மைத் துறை சொல்கிறது. ஆனால் உரிய நடவடிக்கையை நகராட்சி மூலமாகத்தான் எடுக்க வேண்டும். அந்த வகையில் சோப்பும் உப்பும் கலந்து, 1:4 என்ற விகிதத்தில் கலந்து அந்தச் செடிகளின் மீது தெளித்தாலே 10 நிமிடத்திலே அந்தச் செடி பட்டுப் போய்விடும். அந்த ஆலோசனையை வேளாண்மைத் துறை, மாநகராட்சியிடம் சொல்லியிருக்கிறது. நகராட்சியும் உரிய நடவடிக்கை எடுப்பதாக தகவல் தந்திருக்கிறது. இன்னும் அகற்றப்படாத இடங்கள் இருக்குமானால், அதையும் அகற்றுவதற்கு அரசு நிச்சயமாக ஆலோசனை வழங்கும்.

**திரு. மு. அப்பாதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 24 ஆம் தேதி திருநெல்வேலிக்குச் சென்றிருந்தேன். இந்த கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்த பிறகும், அந்தச் செடிகள் அங்கே அகற்றப்படவில்லை. குறிப்பாக என்னுடைய மாவட்ட கட்சி அலுவலகத்திலிருந்து ஆற்றுப் படுகைக்குச் செல்கிற இடங்களில் எல்லாம் இந்தச் செடிகள் நிறைய இருந்து கொண்டிருக்கின்றன. இதன் காரணமாக, மனிதர்களுக்குத்தான் இந்த வியாதி வருகிறது என்பது போக இப்போது மிருகங்களுக்குக்கூட வந்து சிகிச்சை செய்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, உடனடியாக இதை அகற்றுவதற்கு ஏதாவது மாற்று ஏற்பாட்டையாவது செய்து, அதை உடனடியாக அகற்ற அரசு முயலுமா என்று அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து:** தலைவர் அவர்களே, 11—4—1984-ல் இந்த சோப்பையும் உப்பையும் கலந்து அவர்கள் தெளித்திருப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 24-ஆம் தேதி அன்றுகூட பார்த்தேன் அகற்றப்படவில்லை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இதை அகற்றுவதற்கு அதிகமான செலவு கூட இல்லை. இந்த வழிமுறைகளை நகராட்சியினர் பின்பற்றினாலே போதுமானது. ஆகவே, அரசு அதற்குரிய வகையில் அவர்களிடத்திலே சொல்லி, எஞ்சியிருக்கிற இடங்களில் கூட, இந்தக் களையை அகற்றுவதற்கு நிச்சயமாக தேவையான செயல்குறிப்பை வழங்கும்.

### (ஆ) மருத்துவக் கல்லூரியில் மருந்தாளுநர் பட்டயப் படிப்பு நிறுத்தப்படுவது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் கே. பி. இராமலிங்கம், திருவாளர்கள் எம். வின்சென்ட், வ. சத்தியமூர்த்தி, க. பாலசுப்பிரமணியன், ஆ. வெள்ளைச்சாமி, எம். எல். மாணிக்கம், என். எஸ். வி. சித்தன், கே. கல்லன், எஸ். இராசாராமன் ஆகியோர் ஒரே பொருள் குறித்த கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களுள் ஒருவர் இதை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவருவார்.

**திரு. வ. சத்தியமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாடு அரசு மருத்துவக் கல்லூரிகளில் இரண்டாண்டு மருந்தாளுநர் பட்டயப் படிப்பு நடைபெற்று வந்ததை தற்போது நிறுத்தி வைத்துள்ளது குறித்த" அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

இந்திய மருந்தாளுநர் கழகம் பின்வரும் இரு வகைப் படிப்புகளை மருந்தாளுநர் பட்டயப் படிப்பில் வைத்துள்ளது :—

(1) மேல்நிலைப் படிப்பு முடித்த வேட்பாளர்களுக்காக ஓராண்டு படிப்பு.

(2) உயர்நிலைப் பள்ளி இறுதித் தேர்வு முடித்த வேட்பாளர்களுக்காக இரு ஆண்டு படிப்பு.

இந்திய மருந்தாளுநர் கழகத்தின் தகுதி நிர்ணயப்படி இரு ஆண்டு படிப்பு மாணவர்கள் (உயர்நிலைப்பள்ளி இறுதித் தேர்வு முடித்தவர்கள்) அவர்களுடைய இரு ஆண்டு மருந்தாளுனர் பட்டயப் படிப்பின் முதல் ஆண்டின் பௌதிகம், வேதியியல் மற்றும் உயிரியல் பாடங்கள் போதிக்கப்பட வேண்டும்.

முன்பு, எம்.பி.பி.எஸ். பட்டப் படிப்பில் சேர்த்துக் கொள்ளப்பட்ட புகுமுக வகுப்பு மாணவர்களுக்கு மேற்குறிப்பிட்டப் பாடங்களைப் போதிப்பதற்காக கல்வித் துறையிலிருந்து வரவழைக்கப்பட்ட மருத்துவத் துறையில் நியமனம் செய்யப்பட்ட ஆசிரியர்கள் இரு ஆண்டு மருந்தாளுநர் பட்டயப் படிப்பு மாணவர்களுக்கும் மேற்குறிப்பிட்டப் பாடங்களைப் போதித்து வந்தனர்.

எம்.பி.பி.எஸ். பட்டப் படிப்பிற்கு புகுமுக வகுப்பு மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட மாட்டார்கள் என்ற அரசின் முடிவிற்கிணங்க கல்வித் துறையிலிருந்து வரவழைக்கப்பட்ட ஆசிரியர்களின் பணி இனிமேல் தேவைப்படாது என்ற காரணத்திற்காகவும் அவர்களைப் பணியில் அமர்த்தியதால் அரசுக்கு ஏற்பட்ட கூடுதல் செலவைத் தவிர்க்கும் நோக்கத்தோடும் அவ்வாசிரியர்கள் கல்வித் துறைக்குத் திருப்பி அனுப்பப்பட்டனர். இதன் காரணமாக எஸ்.எஸ்.எல்.சி. மாணவர்களுக்காக அரசு மருத்துவக் கல்லூரிகளில் நடத்தப்பட்டு வந்த இரு ஆண்டு மருந்தாளுநர் பட்டயப் படிப்பு நிறுத்தப்பட்டது.

**டாக்டர் கே. பி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு தமிழகத்தில் இருக்கிற மருத்துவர்களின் எண்ணிக்கையோடு கணக்கிட்டுப் பார்க்கும்போது, மருந்தாளுநர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாகவே இருக்கிறது. ஆகவே இந்த மருந்தாளுநர்கள் என்கிற பார்மாசிஸ்ட்ஸ் தனியாக இருக்கிற தனியார் நிறுவனங்களுக்கும் சரி, அல்லது மருத்துவத் துறையிலே பணியாற்றுபவர்களும் சரி, அவர்கள் எண்ணிக்கையில் மிகவும் குறைவாக இருக்கிற காரணத்தால், பல்வேறு இடர்பாடுகளும், இன்னல்களும் ஏற்படுகின்றன. இந்த நேரத்தில் அரசு துறையிலே இருந்த இந்தக் கோர்ஸையும் மூடிவிட்டது நலம் தானா? ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தமிழகத்திலே இருக்கிற மருந்தாளுநர்களின் எண்ணிக்கைக்கு தகுந்த அளவுக்கு, அதாவது அதற்கு சமமாக, அவர்கள் டிப்ளோமா ஹோல்டர்களாக இருந்தாலும் கூட பரவாயில்லை ஆகவே அந்த வகையில், டி-பார்மசி என்கிற அளவிற்காவது அவர்களை உருவாக்கி, இந்த மருந்தாளர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்த அரசு முயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** தலைவர் அவர்களே, இந்த டிப்ளமோ கோர்சை மூடிவிட வில்லை. அங்கே பிளஸ் 2 மாணவ மாணவியர்களுக்கு வாய்ப்புக் கொடுக்க வேண்டுமென்ற அந்த எண்ணத்தின் அடிப்படையில் பிளஸ் 2-க்கு கொடுக்கிற நேரத்திலே 2 ஆண்டுகளுக்குப் பதிலாக ஒரு ஆண்டுதான் படிக்க வேண்டியிருக்கிறது. ஒரு ஆண்டு படிக்க வேண்டுமென்றால் ஒரு ஆண்டு நிறுத்தி வைத்தால்தான் அது முறைப்படி தொடர்ச்சியாக இருக்கும் என்ற நிலைமை இருக்கிற காரணத்தினால் ஒரு



ஆண்டுதான் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. இன்னொரு கேள்வியை இணைத்துக் கேட்டிருக்கிறார்கள். தமிழகத்திலே டிப்ளமோ கோர்சுக்கு மாணவ மாணவியர்களின் எண்ணிக்கையை உயர்த்த வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். பற்றாக்குறை அந்தப் பகுதியிலே இருப்பது உண்மைதான். மாண்புமிகு உறுப்பினர்கள் எழுப்பியிருக்கக்கூடிய அச்சம் நியாயமான அச்சம் தான். ஏனென்றால் மருத்துவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப மருந்தாளுநர்கள் எண்ணிக்கை கிடையாது. தனியார் நிறுவனங்கள் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே அரசாங்கமே அந்த எண்ணிக்கையை இன்னும் கொஞ்சம் ஜாஸ்தியாக உயர்த்தலாமா என்பதைப் பரிசிலித்துக்கொண்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. வை. சத்தியமூர்த்தி:** தலைவர் அவர்களே, இரண்டு ஆண்டு மருந்தாளுநர்கள் படிப்பு முறையை தனியார் பள்ளிகளுக்கு மட்டும் அந்த உரிமை விட்டுக் கொடுக்கப்பட்டிருக்கிறது; இந்த நிலையில் தனியார் நிறுவனங்கள் ஏழை மாணவர்களிடம் அதிகமான தொகையை கல்வி வளர்ச்சிக்காக என்ற பெயரில் நிர்ப்பந்தமாக வசூல் செய்து வருகிறார்கள். அந்த நிலையைப் போக்குகிற வகையில் மீண்டும் அரசுக் கல்லூரியிலே இரண்டு ஆண்டுகள் மருந்தாளுநர் படிப்பைக் கொண்டுவர அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புவதோடு அரசு மருத்துவக் கல்லூரியில் பணிபுரிகிற ஆசிரியர்கள் மருத்துவப் பட்டப் படிப்பு பட்டம் பெற்றவர்களாக இருக்கிறார்கள் என்றும் இந்த இரண்டு ஆண்டுக் காலம் மருந்தாளுநர்கள் படிப்புக்கு முதல் ஆண்டு கல்வியைப் பயிற்றுவிக்கிறவர்கள் கலைக் கல்லூரிகளிலே படித்துப் பட்டம் பெற்றவர்கள் என்றும் இருவரும் ஒரே இடத்தில் இருப்பதால் மருத்துவக் கல்வி படிப்புப் படித்தவர்களுக்கு சற்று அந்தஸ்து குறைவாக இருக்கிறது என்ற சிந்தனையின் அடிப்படையில்தான் இது உருவாக்கப்பட்டது என்றும் ஒரு புகார் சொல்லப்படுகிறது. ஆகவே அமைச்சர் அவர்கள் அதை கவனத்தில் கொண்டு மீண்டும் முதலிலே நடைபெற்றதைப் போன்றே 2 ஆண்டு மருந்தாளுநர்கள் படிப்பை அரசு மருத்துவக் கல்லூரிகளில் கொண்டுவர முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** மாண்புமிகு உறுப்பினர் பல்வேறு கருத்துக்களை இணைத்து ஒரு கேள்வியை எழுப்பியிருக்கிறார்கள். இதிலே ஒரு பிரச்சினையைத் தெளிவாகப் புரிந்துகொண்டால் எந்தவிதமான அச்சமோ சந்தேகமோ இருக்காது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். பிளஸ் 2 படித்தவர்களுக்கு ஒரு ஆண்டும் எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர்களுக்கு 2 ஆண்டும் என்ற முறையை இப்போது நாம் கடைப்பிடித்துக் கொண்டிருக்கிறோம். எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர்களுக்கு பிசிக்ஸ் கெமிஸ்ட்ரி இவைகள் எல்லாம் பிளஸ் 2 மாணவர்களுக்கு இருக்கக்கூடிய அளவிற்கு இருக்காது.

ஆகவே பிளஸ் 2 இல் பிசிக்ஸ், கெமிஸ்ட்ரி பையாலஜி படித்ததற்குப் பிறகு மீண்டும் அதே படிப்பை டிப்ளமோ கோர்சில் சொல்லிக் கொடுப்பது நியாயமில்லை, தேவையில்லை, ஆகவே பிளஸ் 2 படித்த மாணவர்களுக்கு ஒரு ஆண்டு போதும் என்று திட்டவட்டமாக நிர்ணயித்து இருக்கிறோம். இதை இரண்டாண்டுகளாக உயர்த்துவது என்று சொல்வது அந்த மாணவர்களுக்கு இன்னும் சோதனை ஏற்படுத்துவது மாதிரியாக இருக்குமே தவிர அது மாணவர்களுக்கோ படிப்பிற்கோ சாதகமான கருத்தாக இருக்காது. அகில உலகத்திலேயும் 5 ஆண்டுகளாக இருந்தால் இன்றைக்கு அதை 4 ஆண்டுகளாக எப்படிக் குறைப்பது (How to condense) என்றுதான் கருதுகிற நிலை இருக்கிறதே தவிர இன்னும் ஜாஸ்தியாக்க வேண்டுமென்ற பிரச்சினை எழவில்லை. இரண்டாவது அந்தஸ்து என்று சொன்னார்கள். இதிலே எந்தவிதமான அந்தஸ்துக்கும் இடம் இல்லை பிசிக்ஸ் பேராசிரியர் பிசிக்ஸ் சொல்லிக் கொடுப்பார், கெமிஸ்ட்ரி பேராசிரியர் கெமிஸ்ட்ரி சொல்லிக் கொடுப்பார், பையாலஜி பேராசிரியர் பையாலஜி சொல்லிக் கொடுப்பார். ஆகவே அந்தஸ்து பிரச்சினை எழவில்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். அதே மாதிரி தனியார் கல்லூரிகளிலே பிளஸ் 2 படித்தவர்களுக்கு ஒரு ஆண்டு போதும், எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர்களுக்கு 2 ஆண்டு படிக்க வேண்டுமென்ற ஒரு நிபந்தனையை ஏற்படுத்தத் தயாராக இருக்கிறோம்.

(முற்பகல் 10-40)

திரு. க. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அவையின் முன்னால் வைத்து இருக்கின்ற அறிக்கையில் இந்திய மருந்தாளுநர் கழகம் இந்த மேல்நிலைப் படிப்புப் படித்தவர்களுக்கு 1 ஆண்டும் உயர்நிலைப் பள்ளி இறுதித் தேர்வு முடித்தவர்களுக்கு 2 ஆண்டுகள் என்றும், ஆண்டை நிர்ணயித்து சொல்லிக் கொடுக்க வேண்டும் என்று அறிவுறுத்தியிருக்கிறார்கள். ஆனால் நம்முடைய அரசு அதை கொள்கை ரீதியில் நிறுத்தியிருப்பதாகவும் அதற்கான காரணங்கள் சிலவற்றை இங்கே அறிக்கையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதாவது எம்.பி.பி.எஸ். பட்டப் படிப்பிற்கு புகுமுக வகுப்பு மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட மாட்டார்கள் என்ற அரசின் முடிவிற்கிணங்க கல்வித்துறையிலிருந்து வரவழைக்கப்பட்ட ஆசிரியர்களின் பணி இனிமேல் தேவைப்படாது என்ற காரணத்திற்காகவும், அவர்களைப் பணியில் அமர்த்தியதால் அரசுக்கு ஏற்பட்ட கூடுதல் செலவைத் தவிர்க்கும் நோக்கத்தோடும் அவ்வாசிரியர்கள் கல்வித் துறைக்குத் திருப்பி அனுப்பப் பட்டனர் என்றும், இதன் காரணமாக இந்த பட்டயப் படிப்பு நிறுத்திவைக்கப் பட்டிருக்கிறது என்றும் அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. நான்





கேட்டுக்கொள்ள விரும்புவது எல்லாம், ஏழை எளிய மாணவர்கள் இவ்வாறு எம்.பி.பி.எஸ். படிப்பதற்கோ அல்லது வேறு பொறியியல் கல்விக்கோ செல்ல முடியாதவர்களுக்கு இப்படிப்பட்ட பட்டயப் படிப்பால் வாய்ப்பு ஏற்படும். ஆகவே அவர்களுக்கு நல்ல வாய்ப்பு கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்தில் அரசு தன்னுடைய கொள்கையை மாற்றி, இந்த மாணவர்களுக்கெல்லாம் வாய்ப்பு கிடைக்கின்ற அளவுக்கு அதற்கு ஓரளவுக்காவது ஆசிரியர்களை நியமித்து—அத்தனை ஆசிரியர்களையும் கல்வித் துறைக்கு அனுப்பி விட்டதாகச் சொல்லியிருக்கிறார்கள், அதை மாற்றி—தொடர்ந்து இந்த மாணவர்களுக்கு வாய்ப்பு அளிப்பதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாணவர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் திருப்தியோடு இருக்கிறார்கள். ஏன் என்றால் 2 ஆண்டுக்கு பதிலாக ஒரு ஆண்டாக குறைத்து இருக்கிறோம். ஆகவே அவர்கள் திருப்தியோடு இருக்கிறார்கள். ஒரு ஆண்டாக குறைத்த பிறகு மீண்டும் எக்ஸ்ட்ரா ஸ்டாஃப்பை நாம் வைத்துக் கொள்ள வேண்டிய தேவையில்லை. அப்படி எக்ஸ்ட்ரா ஸ்டாஃப் வைத்துக் கொண்டால் நாளைக்கு ஆடிட் அப்ஜெக்ஷன் வந்து விடும். ஏ.ஜி. ஆபீசிலும் அதற்கு அப்ஜெக்ஷன் ரெயிஸ் செய்வார்கள். இந்தப் படிப்பைச் சொல்லிக் கொடுக்க வேண்டிய தேவையில்லாமல் நீங்கள் உபரியாக இந்த ஸ்டாஃப்பை ஏன் வைத்துக்கொண்டு இருக்கிறீர்கள் என்று கேட்பார்கள். இதில் யாருக்கும் எந்தவிதமான சங்கடமும் ஏற்படவில்லை. இந்த எக்ஸ்ட்ரா ஸ்டாஃப் போண்டு டிபார்ட்மெண்டுக்கு சென்று விடுவார்கள்.

திரு. எம். எஸ். மாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மருந்தாளுநர் படிப்பை மீண்டும் 2 ஆண்டுகளாக மாற்ற வேண்டும் என்ற முறையில் கேட்கவில்லை. இங்கே எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர்களுக்கு 2 ஆண்டுகள் என்று தனிப்பட்ட கல்லூரிகளில் வைத்து இருக்கிறார்கள். ஆனால் மேல்நிலைப் படிப்பு படித்தவர்களுக்கு நாம் ஒரு ஆண்டு படிப்பை மட்டும் வைத்து இருக்கிறோம். எனவே அதே நேரத்தில் உயர்நிலைப் படிப்பு படித்த மாணவர்கள் தனியார்கள் இடத்தில் போய் அதிகமான பணத்தைக் கொடுத்து அங்கே இடத்தை பிடிக்க வேண்டிய நிலை இருக்கிற காரணத்தால் அவர்களுக்கு 2 ஆண்டு பட்டயப் படிப்பை அரசு கல்லூரிகளிலேயே வைத்து அவர்களுக்கு அந்த கல்வியை உருவாக்கித் தருவதற்கு அரசு முன்வருமா? அதன் மூலம் மருந்தாளுநர் அதிகமான அளவுக்கு நமக்குத் தேவையாக இருப்பதால் அதைக் கொண்டு வருவதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

[illegible] 

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. அதற்கு பதிலாக தனியார் கல்லூரிகளில் பிளஸ் படிப்பை மட்டும் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று நாம் ஆணையிட தயாராக இருக்கிறோம்.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** மாண்புமிக்கப் பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே பிரச்சிலுனயே 10-வது படித்து மேல்நிலை வகுப்பில் இரண்டு ஆண்டுகள் படித்த பிறகு ஒரு ஆண்டு படித்தால் 13 ஆண்டுகள் ஆகிறது. 10-வது படித்த பிறகு இதை 2 ஆண்டுகள் படித்தால் 12 ஆண்டுகள்தான் ஆகிறது. ஒரு ஆண்டு குறைந்து விடுகிறது. மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இராமலிங்கம் அவர்கள் சொன்னதுபோல நிறைய பேரை மருந்தாளுநர் பயிற்சியைக் கொடுத்து அவர்களை உருவாக்கி நாட்டுக்கு அர்ப்பணிக்கலாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. மாணிக்கம் அவர்கள் கேள்வி கேட்ட நேரத்தில் தனியார் கல்லூரிகளில் 10-வதிலிருந்து 2 ஆண்டு படிப்பை நிறுத்தி விடலாம் என்று சொல்கிறார்கள். நம்முடைய கோரிக்கை அது அல்ல. 10-வது படித்தவர்களுக்கு 2 ஆண்டு கொடுக்க வேண்டும். அப்படி கொடுத்தால் அவர்கள் சொன்னது போல் கிராமப் புறத்தில் இருப்பவர்களுக்கு 2 ஆண்டுகள் படித்து இந்தத் தொழிலுக்கு போக முடியும். பாலிடெக்னிக்குகளில் எல்லாம் 10வது படித்த அவர்களுக்கு டிப்ளமோ கொடுக்கிறார்கள். அப்படி இருக்கும்போது நாம் 10-வது படித்த பிறகு 2 ஆண்டு படித்த பிறகு 1 ஆண்டு படிக்க வேண்டும் என்று ஏன் கொடுக்க வேண்டும். ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்ளுவது எல்லாம் இதனால் அரசுக்கு எந்தவிதமான தனியாக செலவும் கிடையாது. இப்போது இருக்கின்ற ஆசிரியர்களை வைத்துக் கொண்டே கிராமப்புறங்களில் இருப்பவர்களுக்கு எளிதாக வேலை வாய்ப்பு, இந்த சமுதாயத்திற்கு தேவையான மருந்தாளுநர்களை உருவாக்குகின்ற வகையில் தயவுசெய்து இந்த மன்றத்தின் மூலமாக 10 ஆண்டு படித்தவர்களுக்கு 2 ஆண்டு கொடுக்க முடியும் என்கின்ற ஒரு உத்தரவை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பிறப்பித்தால் இதனால் நல்ல பயன்கள் தமிழகத்திற்கு கிடைக்கும். தனியார் கல்லூரிகளில் நிறைய கேப்பிடேஷன் ஃபீ வாங்குகிறார்கள். இரண்டு ஆயிரம், 3 ஆயிரம், 4 ஆயிரம் என்று வாங்குகிறார்கள். ஆகவே அரசு தன்னுடைய துறையில் இருப்பவர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தி 10 ஆண்டு படித்தவர்களை 2 ஆண்டு படிப்பதற்கு உத்தரவை அரசு இந்த மன்றத்தின் மூலமாக அறிவிப்பார்களானால் அது நலமாக இருக்கும். அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. பி. இராமலிங்கம் அவர்கள் கேட்ட நேரத்திலேயே நான் சொன்னேன். இன்னும் அதிகமான இடங்களை ஏற்படுத்துவதற்காக அரசு அதை பரிசீலனைச் செய்து கொண்டிருக்கிறது என்பதை நான் திட்டவட்டமாக சொன்னேன். அதை ஒரு அஷ்யூரன்சாக கூட இந்த மன்றத்தில் எடுத்துக் கொள்ளலாம். ஏன் என்றால் நமக்கு இன்னும் அதிகமான அளவில் இந்த துறையில் ஆட்கள் தேவை இருக்கிறது என்பதற்காகவும் மருந்தாளுநர்கள் இன்னும் அதிகமாக தேவை இருக்கிறது என்பதற்காகவும் அதே நேரத்தில் அவர்களிடத்தில் கேப்பிடேஷன் ஃபீ வாங்கக் கூடிய ஒரு துர்ப்பாக்கியமான நிலைமை இருக்கிறது என்பதற்காகவும் நாம் அந்த கேப்பிடேஷன் ஃபீ வாங்காமல் இருப்பதற்கு வேறு என்ன நடவடிக்கை எடுக்கலாம் என்பதையும் கூட அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆகவே அதை ஜாஸ்தியாக ஆக்குவதற்கு அரசாங்கம் பரிசீலனை செய்து கொண்டிருக்கின்றது. இரண்டாவது பிரச்சினையைப் பொறுத்தவரையில் இதனை இன்ஜினியரிங் துறையோடு ஒப்பிட்டுப் பார்ப்பது சரியில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மக்கள் நல்வாழ்வுத் துறையினைப் பொறுத்தவரையில் மெடிக்கல் கவுன்சில் இருப்பது போன்று, பார்மசி கவுன்சில் ஒன்றும் இடையிலே வருகின்றது. அவர்கள் சில கட்டுப்பாடுகளைச் சொல்லி டைரக்ஷன்ஸ் கொடுப்பார்கள். மெடிக்கல் கவுன்சில் அங்கீகரித்தால்தான் எம்.பி.பி.எஸ். பட்டம் கொடுக்கிறார்கள். அதேபோன்று

The Pharmacy Council has got the powers to recognise or derecognise the course.

ஆகவே பார்மசி கவுன்சில் கொடுக்கக்கூடிய டைரக்ஷன்சையும் நாம் எடுத்துக் கொள்ள வேண்டி இருக்கின்றது. அந்த வகையில் பார்மசி கவுன்சில் என்ன சொல்கிறது என்றால் பிளஸ் 2 என்பது நாலெஜ் எக்ஸ்ப்ளோஷன் என்ற அளவில் இருக்கின்றது; கிட்டத்தட்ட பழைய பி.ஏ., பி.எஸ்சி.-யில் எந்த அளவுக்குச் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தார்களோ அந்த அளவுக்கு பிளஸ் 2-வில் சொல்லிக் கொடுக்கப்படுகின்றது. இந்தியாவிலே இந்த பிளஸ் 2 என்பதைப் பல இடங்களிலும் கொண்டு வந்தார்கள். தமிழகத்திலும் நாம் அதைக்கொண்டு வந்து கிட்டத்தட்ட 5 ஆண்டுகளாக நடைமுறைப் படுத்திக் கொண்டு வருகிறோம். எனவே நல்ல வகையிலே விவரம் எல்லாம் தெரிந்து கொள்ளக்கூடிய முறையிலே அப்படிப்பட்ட நிலைமை இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் பிளஸ் 2 விற்குத்தான் முன்னிடம் கொடுக்க வேண்டும் என்று பார்மசி கவுன்சில் கருதுகின்ற காரணத்தால் இதை நாம் நடைமுறைப்படுத்தி வருகிறோம்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** பக்கத்து மாநில்ங்களில் 10-வது வகுப்பு படித்தவர்களுக்கென்று வைத்துக் கொண்டிருக்கிறார்களே; அதுபோல் நாமும வைத்துக் கொள்ளலாமே.

**மாண்புமிகு டாக்டர் எச் வி. ஹண்டே :** தலைவர் அவர்களே, நாம் இன்றைய தினம் செய்வதை பக்கத்து மாநிலங்களில் இருப்பவர்கள் நாளைய தினம் செய்வார்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கே. கல்லன் :** பேரவைத் தலைவர் அவர்களே, இது மூடப்பட்டிருப்பதன் காரணத்தால் பாதிக்கப்படுபவர்கள் ஏழைகளும், நலிந்த பிரிவினர்களும் தான். மூடப்பட்ட பிறகு பல கல்லூரிகள் தோன்றி இருக்கின்றன. ஆகவே ஏழைகளுக்கும், நலிந்தவர்களுக்கும் உதவியாக இந்த அரசு இருக்குமேயானால் நிச்சயமாக அதை உடனே தடுக்க அரசு முன்வருமா என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் புரிந்துகொள்ளவில்லை என்று நான் கருதுகிறேன். நாம் ஏழைகளுக்காக மிக விரைவாகப் பணியாற்றுகின்ற காரணத்தால்தான், இங்கே சிலர் இரண்டாண்டுகள் வேண்டும் என்று கேட்டபோதும் கூட ஓராண்டு போதும் என்று திட்டவட்டமாக உறுதியாக முடிவெடுத்தோம். அதற்குக் காரணமே ஏழை எளிய மாணவர்களை அனாவசியமாக இரண்டாண்டுகள் எக்ஸ்போஸ் செய்யவேண்டிய தேவையில்லை; ஓராண்டு போதும் என்று அரசு கருதுவதுதான். எனவே இதுதான் ஏழை எளிய மக்களுக்குச் செய்யக்கூடிய நன்மை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிந்து கொண்டிருப்பார்கள் என்று நான் நம்புகிறேன். ஆகவே இதற்காகவே அவர்கள் பாராட்ட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

## 7. அறிக்கைகள் அளித்தல்.

### (அ) பொதுக் கணக்குக் குழு.

**திரு. கே. எஸ். ஜி. ஹாஜா செரிப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளைப் பேரவைக்கு அளிக்கிறேன்—

(அ) 1978-79 ஆம் ஆண்டிற்கான வாக்களிக்கப் பெற்ற மானியங்களிலும் சாட்டப்பெற்ற நிதி ஒதுக்கீடுகளிலும் மிகையாக ஏற்பட்ட செலவு பற்றிய மேற்படி குழுவின் இருப்பத்தாறாவது அறிக்கை.





(ஆ) 1977-78 மற்றும் 1978-79 ஆம் ஆண்டுகளுக்கான இந்திய தணிக்கை துறைத் தலைவரின் (வருவாய் வரவினங்கள்) பற்றிய அறிக்கையின் மீதான மேற்படி குழுவின் இருபத்தேழாவது அறிக்கை.

(இ) 1973-74 ஆம் ஆண்டிற்கான இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் துணை அறிக்கையின் (சிவில்) மீதான பொதுக் கணக்குக் குழுவின் (1977—1979) ஏழாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய மேற்படி குழுவின் இருபத்தெட்டாவது அறிக்கை.

(ஈ) 1974-75 மற்றும் 1975-76 ஆம் ஆண்டுகளுக்கான வாக்களிக்கப் பெற்ற மானியக் கோரிக்கைகளுக்கும்; சாட்டப் பெற்ற நிதி ஒதுக்கீடுகளுக்கும் மிகையாக செலவழித்த தொகைகள் பற்றிய பொதுக் கணக்குக் குழு (1980-81) அளித்த முதலாவது மற்றும் ஏழாவது அறிக்கைகளில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய மேற்படி குழுவின் இருபத்தொன்பதாவது அறிக்கை.

(உ) 1979-80 மற்றும் 1980-81 ஆம் ஆண்டுகளுக்கான தமிழக அரசின் கணக்குகள் மற்றும் அவ்வாண்டுகளுக்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் சிவில் துறைகள் பற்றிய அறிக்கையில் சில துறைகள் தொடர்பான குறிப்புகள் மீதான மேற்படி குழுவின் முப்பதாவது அறிக்கை.

(ஊ) 1977-78 மற்றும் 1978-79 ஆம் ஆண்டுகளுக்கான தமிழக அரசின் கணக்குகள் மற்றும் அவ்வாண்டுகளுக்கான இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் சிவில் துறைகள் பற்றிய அறிக்கையில் சில துறைகள் தொடர்பான குறிப்புகள் மீதான மேற்படி குழுவின் முப்பத்தோறாவது அறிக்கை.

31-வது அறிக்கையைப் பொறுத்தமட்டில் போதிய அவகாசம் இல்லாமையால் அச்சிட்ட பிரதிகளுக்குப் பதிலாக படியெடுத்த பிரதிகள் அளிக்கப்பட்டுள்ளன. மேற்கண்ட அறிக்கையில் தமிழ் மற்றும் ஆங்கிலப் படிகள் மாண்புமிகு உறுப்பினர்களின் பார்வைக்காக சட்டமன்றத்தின் நூலகத்தில் வைக்கப்பட்டிருக்கின்றன. அச்சிட்ட பிரதிகள் கிடைத்தவுடன் அவை பேரவையின் உறுப்பினர்களுக்குத் தனியாக அனுப்பி வைக்கப்படும்.

[திரு. கே. எஸ். ஜி. ஹாஜா செரீப்] [1984 ஏப்ரல் 28

(முற்பகல் 10-50)

(ஆ) உரிமைக் குழு.

**திரு. கே. எஸ். ஜி. ஹாஜா செரீப்:** மிஸ்டர் ஸ்பீக்கர் சார். "திரு. எம். கே. சீனிவாசன்" மற்றும் "எதிரொலி" நாளிதழ் மீதான உரிமை மீறல் பிரச்சினை குறித்த உரிமைக் குழுவின் அறிக்கையை உரிமைக் குழுவின் தலைவர் சார்பாக நான் இங்கே அளிக்கிறேன்.

8. ஒழுங்குப் பிரச்சினை.

இராமப்பிரசாத் ராவ் கமிஷன் அறிக்கை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுதல்.

**திரு. அ. ரகுமான்கான்:** பாய்ண்ட் ஆப் ஆர்டர், தலைவர் அவர்களே . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்றைக்குக் கடைசி நாள். கேட்ட எல்லோருக்கும் அனுமதி கொடுத்திருக்கிறேன். 10 மணிக்குக் கேட்ட எல்லோரும் பாய்ண்ட் ஆப் ஆர்டர் எழுப்பியிருக்கிறார்கள். உறுப்பினர் 10-50-க்கு வந்து பாய்ண்ட் ஆப் ஆர்டர் எழுப்பினால் எப்படி? (குறுக்கீடுகள்) உறுப்பினர்களுக்கு இருக்கிற உரிமையை நான் தடுக்கத் தயாராகவில்லை. உரிமையை முழுமையாக அனுபவிக்கட்டும். 10 மணிக்குப் பலர் கேட்டார்கள். எல்லோரையும் அனுமதித்தேன். (குறுக்கீடு) எப்பொழுது வேண்டுமானாலும் பாயிண்ட் ஆப் ஆர்டர் கேட்பது என்று வைத்துக் கொண்டால் சபையை எப்படி நடத்துவது? இப்பொழுது மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்குப் பதில் அளித்தார்கள். அதில் ஏதாவது பாயிண்ட் ஆப் ஆர்டர் என்றால் கேட்கலாம். (குறுக்கீடு) சரி, இன்று கடைசி நாள், ஆகவே அனுமதிக்கிறேன். ஆனால் இது முறை அல்ல.

**திரு. அ. ரகுமான்கான்:** மன்றத் தலைவர் அவர்களே, நேற்று நம்முடைய நாவலர் அவர்கள் தெரிவித்த ஒரு கருத்து சம்பந்தமாக உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். பிசினஸ் அட்வைசரி கமிட்டியில் ராமப்பிரசாத் ராவ் கமிஷன் அறிக்கை விவாதம் வேறு ஒரு தேதிக்கு வைத்துக் கொள்ளப்படலாம் என்று பேசி முடிவெடுத்ததாகச் சொன்னார்கள். திரு. அன்பில் அவர்களை நேற்று சந்தித்துக் கேட்டேன், ராமச் பிரசாத் ராவ் கமிஷன் அறிக்கை சம்பந்தமாக எந்தப் பேச்சும் பேசப்படவில்லை, விவாதிப்பதற்கு தேதி அறிவிக்கப்படவில்லை, அறிக்கை வைப்பது சம்பந்தமாக பேசப்படவில்லை, என்றார். இங்கே அறிக்கையையும் வைக்கவில்லை, இங்கே விவாதிப்பதற்கு தேதியும் நிர்ணயிக்கப்படவில்லை. எனவே, அது குறித்து உங்கள் கவனத்திற்குக்



1984 ஏப்ரல் 28] [பேரவைத் தலைவர்]

கொண்டு வருகிறேன். ஆகையினாலே இந்த அரசு சட்டமன்றத்திலே கொடுத்த வாக்குறுதியைக் கூட நிறைவேற்றாமல் இருக்கிறது. நீதிக்கு தலை வணங்குகிறேன் என்று சொல்லக்கூடியவர்கள் கொடுத்த வாக்குறுதிக்குக் கூட தலை வணங்காமல் இருப்பதால் வெளிநடப்பு செய்கிறோம்.

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நாவலர் அவர்கள் அச்சடித்த பிறகு வைத்து, வைத்த பிறகு விவாதிக்கலாம் என்றுதான் சொன்னார். (குறுக்கீடு) அது குறித்து அச்சாபீசிலேதான் கேட்க வேண்டும்.

9. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

(அ) நிவாரண நிறுவனங்கள் (சிறப்பு விதிகள்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1984.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு நிவாரண நிறுவனங்கள் (சிறப்பு விதிகள்) திருத்தச் சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(ஆ) பொது விற்பனை வரி (நான்காம் திருத்த) சட்ட முன்வடிவு, 1984.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (நான்காம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 31/1984) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்".

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

[1984 ஏப்ரல் 28

**திரு. ரா. கிருஷ்ணன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இங்கே அவையிலே வைக்கப்பட்டிருக்கிற பொது விற்பனை வரிச் சட்டத்தை மேலும் திருத்துவதற்கான சட்ட முன்வடிவின் மீது பேசுவதற்கு வாய்ப்புக் கிடைத்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒப்பந்தம் அல்லாத வேறு வகையில், ரொக்கத்திற்காக, காலங் கடந்து செலுத்தப்படும் தொகைக்காக அல்லது வேறு ஆதாயத்திற்காகச் சரக்கு உடைமை உரிமை மாற்றம் என்று சொல்லி இருக்கிறீர்கள். ஆனால் ஐந்து சதவீதம் வரி விதிக்கப்படுகிறது. அதற்கு வழிவகைச் செய்யக்கூடிய இந்த மசோதாவை நான் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக எதிர்க்கிறேன். பொதுவாக இந்த விற்பனை வரி என்பது சாதாரண மக்கள் பயன்படுத்தக் கூடிய பொருள்களின் மீது போடப்படுகிறது. இதனால் விலைவாசி நாட்டில் உயர்கிறது. இது மறைமுகமான வரியாகும். இந்த மறைமுகமான வரி இன்றைக்கு நாட்டிலே நாள் ஒரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக கூடிக் கொண்டே போகிறது. ஆனால் பெரிய பெரிய தொழில் அதிபர்கள், வியாபாரிகள் மீது போடப்படுகிற இன்கம்-டாக்ஸ் போன்ற நேர்முக வரிகள் நாளுக்கு நாள் குறைந்துகொண்டே வருகிற சூழ்நிலை நாட்டிலே இருந்து வருகிறது. இந்த நேர்முக வரியைப் பொறுத்தவரையில் அது மத்திய அரசால் வசூல் செய்யப்படுகிற வரியாகும். மத்திய அரசு வரி வசூல் செய்வதற்கு, நிதியாதாரங்களைத் திரட்டுவதற்கு பல்வேறு வழிவகைகள் இருக்கின்றன. மாநிலங்களுக்கு இருக்கக்கூடிய அந்த நிதித் திரட்டுகிற வாய்ப்பு இன்றைக்கு சுருங்கிக்கொண்டே போகிறது என்பது உண்மைதான். அப்படிப்பட்ட நிலையில் மாநிலங்களுக்கு காமதேனுவாக, கற்பக விருட்சமாக இருப்பது விற்பனை வரிதான். இந்த விற்பனை வரி மறைமுகமாக சாதாரண மக்கள் பயன்படுத்துகிற பொருள்கள் மீது போடப்படுகிறது.

மாநில அரசு மத்திய அரசிடமிருந்து கூடுதலாக நிதியாதாரங்களைப் பெற்று இங்கே இருக்கிற தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய வழிவகைகளைச் செய்ய வேண்டும். அதுதான் மாநில அரசினுடைய கடமை. சமீபத்தில் மைய அரசு மாநில அரசுகள் வசூல் செய்துகொண்டிருக்கிற, சில பொருள்களின் மீது போடுகிற வரி வாய்ப்பைக்கூட நாங்கள் எடுத்துக்கொள்கிறோம் என்று சொல்லக்கூடிய ஒரு போக்கு இருக்கிறது. மாநில சர்க்கார் தங்களுடைய முழு பலத்தைப் பயன்படுத்தி அதை எதிர்ப்பதற்கு வாய்ப்பு இல்லை; அந்த விவாதத்திலே கலந்து கொள்வதற்கு வாய்ப்பு இல்லை.

** 1984 ஆம் ஆண்டு மார்ச் 31 ஆம் தேதி தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.



1984 ஏப்ரல் 28] [திரு. ரா. கிருஷ்ணன்]

அப்படிப்பட்ட நிலையில் விவாதத்தில் கலந்து கொண்டாலும், நாம் மற்ற மாநிலங்கள் அதாவது காங்கிரஸ் அல்லாத மாநிலங்களோடு இணைந்து, மத்திய அரசினுடைய தன்னிச்சையான போக்கை மாற்றியமைப்பதற்கான வழியில் அந்தப் போக்கை எதிர்ப்பது மிக மிக அவசியம் என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

இந்த விற்பனை வரி வசூல் செய்வதில் பல்வேறு கோளாறுகள், குறைபாடுகள் ஏற்பட்டிருக்கின்றன என்று ஆடிட்டர்-ஜெனரல் ரிப்போர்ட்டில் சுட்டிக்காட்டி இருக்கிறார்கள். பொதுவாக இந்த வரியை மேலும் மேலும் போடுவதன் மூலமாக சட்டத்திற்குக் கட்டுப்பட்டவர்களுக்குப் பளு அதிகமாகிறது. ஆனால் சட்டங்களை ஏமாற்றக்கூடியவர்களுக்கு அதிகமான வாய்ப்பு ஏற்படுகிறது. இன்றைக்குக் கிராமப்புறங்களிலும், நகர்ப்புறங்களிலும் விற்பனை வரித்துறையில் பணி செய்கின்றவர்களுக்குப் பெண் கொடுப்பதென்றால் மிகவும் மகிழ்ச்சியோடு முன் வருகிறார்கள். காரணம் அவர்களுக்குச் சம்பளம் மட்டுமல்லாமல், வேறு சில வருமானமும் இருப்பதாக நாடு பூராவும் பேசப்படுகிற ஒரு நிலை இருக்கிறது. இதற்கு அடிப்படையான காரணத்தைப் பார்த்தால் ஆடிட்டர்-ஜெனரல் ரிப்போர்ட்டில் சொல்லப்பட்டிருப்பவை அனைத்தும் உண்மை என்பது நிரூபணமாகிறது. வரியைப் போடுவதிலும்,

(முற்பகல் 11-00)

பெனால்ட்டியைப் போடுவதிலும் கோளாறுகள் இருக்கின்றன. தாங்கக்கூடிய பெரிய வியாபாரிகள், தொழில் அதிபர்கள்மீது போடுகிற வரியைக் கறாராக போடுகிற நிலைமை இல்லை. மாறாக சிறு வியாபாரிகள், சிறிய மூலதனத்தை வைத்து சிறுதொழில் நடத்துகிறவர்கள்மீது கண்டிப்பாக, கறாராக வரியைப் போடுகிற நிலைமைதான் இருக்கிறது. காரணம். அந்த அதிகாரிகளுடைய விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்றவாறு நடந்துகொள்ள முடியாத நிலை. ஆகவே, இன்றைக்கு சாதாரணமாக அரக்கோணம் டிட்கோ நிறுவனத்தில். 1982-83 ஆம் ஆண்டில் 92.9 லட்சம் ரூபாய் தள்ளுபடி செய்யப்பட்டு இருக்கிறது. அதைப்போன்று 1982-83 ஆம் ஆண்டில் மொத்தம் 87.32 கோடி ரூபாய் இந்த வருவாய் வரவு பாக்கி இருப்பதாக ஆடிட் ரிப்போர்ட்டிலே கூறியிருக்கிறார்கள். நிலத் தீர்வை 82 கோடி ரூபாய், நகர்ப்புற நிலத் தீர்வை—வரி பொறுத்தவரையில் 15.88 கோடி ஆக மீதி எல்லாமே இந்த சேல்ஸ்டாக்ஸ் மூலமாக வரும் பாக்கிதான். ஆகவே, அப்படிப்பட்ட முறையிலே வரி வசூல் செய்வதிலே கோளாறுகள் இருக்கின்றன.

அதைப்போன்று சென்னையிலே உள்ள ரிசர்வ் வங்கிக்குச் சொந்தமான நிலம் 344 கிரவுண்டு அதைப் பொறுத்தவரையில் அது அர்பன் லாண்ட் டாக்ஸில் வருகிறது அதிலே 19.6 லட்சம் ரூபாய் வசூல் செய்ய

வில்லை. ஆடிட் ரிப்போர்ட்டில் கூறி இருக்கிறார்கள். ஆனால் பொது வாக மத்திய அரசாங்கத்தின் துறையாக அது இருக்குமானால் வரி விலக்கு கொடுக்கலாம். ஆனால் ரிசர்வ் வங்கி ஒரு ஸ்டசுடரி பாடி. அதற்கு வரி விலக்கு என்பது கிடையாது. அப்படி இருந்தாலும்கூட அது விதிகளுக்கு முரணாக இருக்கும் நிலையில் இந்த 19.65 லட்சம் வசூல் செய்ய ஏன் முடிய வில்லை. இப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கின்றன என்பதை நான் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

இதைப்போலவே, விற்பனை வரியைக் குறைத்து மதிப்பிடுவதன் காரண மாக 2.15 கோடி ரூபாய் ஷார்ட்டேஜ் இருக்கிறது. அதையும் ஆடிட் ரிப் போர்ட்டிலே கூறியிருக்கிறார்கள். இந்த மாதிரி இருக்கக்கூடிய நிலைமையில் மேலும் மேலும் வரி போடுவதன் மூலமாக வரி செலுத்தக்கூடியவர்கள் வரி யைச் செலுத்திக் கொண்டே இருக்கவும், வரியை ஏமாற்றிக்கொண்டு இருப்ப வர்கள் ஏமாற்றிக்கொண்டே இருக்கும் வாய்ப்பும் இருக்கிறது. அல்லது குறைந்த வருமானம் உள்ளவர்களே வரியைக் கட்டிக்கொண்டு இருக்கும் நிலைமை இருக்கிறது. வசதி படைத்தவர்கள் இருக்கின்ற நிலைமைகளை அனுசரித்துக்கொண்டு வரியை ஏமாற்றிக்கொண்டிருக்கும் போக்கு இருக் கிறது. இதைத் தவிர்க்க நிச்சயமாக இந்த அரசு முன் வரவேண்டும் என்பதை நான் இங்கே வலியுறுத்திச் சொல்லிக்கொள்கிறேன்.

வரியைச் சரியான முறையில் வசூல் செய்கிற வாய்ப்பு இருக்குமானால், மேலும் அதிகமாக வரியைப் போடவேண்டிய அவசியம் இருக்காது. மேலும், மேலும் வரி போடுவதால் சாதாரண மக்கள்தான் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே, பாசிடிவ்வாக நீங்கள் நடந்து கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன். சாதாரண மக்கள் தலையில் வரியைச் சுமத்துவது என்பது குருவி தலையில் பனங்காய் வைப்பதுபோல் ஆகும். அவர்களால் அதைத் தாங்க முடியாது. இன்றைக்கு விலைவாசிகள் தாறுமாறாக ஏறிக்கொண்டு இருக் கின்றன. ஓட்டல் பண்டங்களின் விலை ஏறிக்கொண்டே இருக்கிறது. ஓட்டல் முதலாளிகள் சொல்கிறார்கள், நாங்கள் வாங்கும் பொருள்களின் விலை ஏறிக்கொண்டே போகிறது, ஆகவே நாங்களும் விலையை ஏற்றவேண்டி யிருக்கிறது என்று சொல்கிறார்கள். இன்றைய நிலையில் பார்க்கிறபோது சேல்ஸ்டாக்ஸ் டிப்பார்ட்மெண்ட் உண்மையிலேயே செயல்படுகிறதா என்ற கேள்வி எழுகிறது. ஆகவே, வரியை மேலும், மேலும் போடுவதன் மூலமாக ஏற்கனவே வரி செலுத்தி வருகின்றவர்கள்தான் பாதிக்கப்படுகிறார்கள் என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்து, இந்த வரி விதிப்பைத் தவிர்ப்பதற்கு ஏற்ற வகையில் வேறு வழிமுறைகளைக் கையாள வேண்டும் என்று நான் வலியுறுத்தி அமர்கிறேன்.





**திரு. இரா. கருப்பையா:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தை மேலும் திருத்துவதற்கான சட்ட முன்வடிவின் மீது இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். பொதுவாகவே, நம்மு டைய மாநிலத்தில் விற்பனை வரி ஆண்டுதோறும் அதனுடைய விகிதங்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் மாற்றப்பட்டு அது உயர்ந்துகொண்டே வருகிறது. இதனால் சாமான்ய மக்கள் பாதிக்கப்படுகிறார்கள் என்பதை எல்லோரும் அறிந்து இருந்தாலும், அரசுக்கு அந்தக் கருத்து இருந்தாலும், மேலும் மேலும் அந்த மக்களைப் பாதிக்கும் முறையிலேயே வரி விதிப்பு விதிக்கும் முறையிலே இங்கே சட்டங்கள் புதிது புதிதாகக் கொண்டு வரப்பட்டு, திருத் தங்கள் வந்துகொண்டே இருக்கின்றன.

அமைச்சர் அவர்கள் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிற நோக்கமே ஏதாவது ஏற்கனவே இருக்கிற சட்டங்களின்கீழ் விடுபட்டிருந்தால் அவற்றை எல்லாம் இந்தச் சட்டத்தின்கீழ் கொண்டுவந்து, அந்த வர்த்தகப் பொருள்கள் மீதும் வரி போட்டு, வருமானத்தைப் பெருக்கிக்கொள்ள வேண்டும் என்பதுதான். அந்த நோக்கத்தோடுதான் கொண்டுவரப்பட்டிருக் கிறது இந்தச் சட்டம்.

இதன் விளைவு என்னவென்றால் வர்த்தகர்களுக்கு எந்த அளவுக்கு அது கஷ்டமாக இருக்கிறது என்பது ஒருபுறம் இருந்தாலும் இதன் சுமை முழுவதும் மக்கள் மீதுதான் விழுகிறது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன். இதிலே ஒப்பந்தம் அல்லாத வேறு வகையில், ரொக்கத்திற்காக, காலங்கடந்து செலுத்தப்படும் தொகைக்காக அல்லது வேறு ஆதாயத்திற்காகச் சரக்கு உடைமை உரிமை மாற்றத் தொழிலில் ஈடுபட்டுள்ள ஒருவர் என்று இம்மாதிரி 4, 5 சரத்துக்களைப் போட்டிருக்கிறார்கள். இதன் மூலமாக ஒப்பந்தப் பணி களில் ஈடுபட்டு, ஒப்பந்த முறையிலே பொருள்களை வாங்கி, அந்தத் தொழிலை நடத்தக்கூடியவர்களையும் வரி விதிப்பின்கீழ் கொண்டுவர வேண்டுமென்ற நோக்கத்தோடுதான் இந்தத் திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது என்று கருதுகிறேன்.

சாதாரண நபர்கள்கூட இன்றைக்குச் சமுதாயத்திலே ஒப்பந்த முறையில் பொருள்களை வாங்குவது, வாங்கிக் கொடுப்பது என்ற அடிப்படையிலே அவர்கள் இடைத்தரகு என்ற முறையிலே வர்த்தகத்தை நடத்தக்கூடியவர் களாக இருக்கிறார்கள். அதையும் விட்டுவிடக்கூடாது என்று கருதி அவர் களுக்கு எல்லாம்கூட வரி விதிக்கும் நோக்கோடு இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆகவே, இது சரியானது அல்ல, முறையானது அல்ல என்பதை நான் அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அடுத்து, 5-வது பிரிவிலே "3-ம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள பொருள்களைப் பயன்படுத்தும் உரிமையை மாற்றும் இனத்தில் அவ்வப்போது அரசு அறிவிக்கக்கூடியவாறு வரி விதிக்கத்தக்க அவருடைய வியாபாரத் தொகையில் 5 சதவீதத்திற்கு மிகாத அத்தகைய வீதம்" என்பதைச் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லியிருக்கிறீர்கள். வரி விதிப்பில் எதுவும் விடுபட்டு விடக்கூடாது என்ற நோக்கத்தில் இப்படி ஒரு சரத்தும் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இதன் மூலமாக அரசுக்கு இருக்கிற ஒரே நோக்கம் வருமானத்தைத் தேட வேண்டும் என்பதுதான். இந்த எண்ணம் சரியானது அல்ல என்பதைச் சுட்டிக்காட்டி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக எங்களுடைய ஆட்சேபணையைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மற்றொரு விஷயத்தையும் இந்தச் சந்தர்ப்பத்தில் அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இன்றையதினம் இந்தச் சட்டத்தை நிறைவேற்றி நாம் உரிய அதிகாரிகளிடம் அதிகாரத்தைக் கொடுக்கிறோம். இதனால் எந்த அளவுக்கு வர்த்தகர்களுக்கு இன்னல்கள் ஏற்படும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். ஏற்கெனவே இருக்கிற சட்டங்களின் அடிப்படையிலே கொடுத்துக்கொண்டிருக்கிற இன்னல்கள் ஒருபுறமிருக்க, இது இன்னும் அந்த இன்னல்களைக் கூடுதலாக்கும்.

வரி விதிப்பு என்று சொல்லுகிறபோது, அந்த வரியை வசூல் செய்வதிலே யாருக்கும் இன்னல் ஏற்படாமல், அல்லல் இல்லாமல் இணக்கமான முறையில் வசூல் செய்வதாக இருக்க வேண்டும். அதற்கான வழிவகைகளை அமைச்சர் அவர்கள் ஆராய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மற்றொரு விஷயத்தையும் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இன்றையதினம் அக்கவுண்டன்சி படித்தவர்கள், பயிற்சி பெற்றவர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். அவர்கள் ஏதாவது வருமானம் கிடைக்கும் என்ற முறையிலே 'சேல்ஸ் டாக்ஸ் பிராக்டிஷனர்ஸ்' என்ற முறையில் வியாபாரிகளுடைய கணக்குகளை ஆடிட் செய்து, முறையாக விற்பனை வரி அதிகாரிகளுக்கு சமர்ப்பித்து, வியாபாரிகளுடைய கணக்குகளை முறைப்படுத்திக் கொடுக்கின்ற தொழிலைச் செய்து வருகிறார்கள். இதுபோன்ற மற்ற பணிகளையும் செய்கிறார்கள். அநேகமாக அவர்கள் மாவட்டத்திற்கு 8, 10 பேர்கள் இருக்கிறார்கள். வாழ்க்கைக்கு வேண்டிய வருமானம் ஓரளவுக்காவது இதில் கிடைக்கும் என்ற முறையினாலே இந்தப் பணியைச் செய்து வருகிறார்கள்.



(முற்பகல் 11-10)

சமீபத்தில் அரசாங்கம் ஒரு உத்தரவு போட்டிருக்கிறது. அரசாங்க அதிகாரியாக இருந்து, ஓய்வு பெற்றவர்கள் சேல்ஸ் டாக்ஸ் பிராக்டிஷனர்களாக பதிவு செய்து கொள்ளலாம் என்ற அறிவிப்பை அரசு கொடுத்திருக்கிறது. ஏற்கெனவே 58 வயதாகி, 35 வருஷங்களுக்கு மேல் இந்த இலாகாவில் பணி புரிந்து, அரசாங்கத்திலிருந்து முழுமையாக பென்ஷன், ஓய்வு ஊதியம் எல்லாம் அவர்கள் பெற்று வருகிறார்கள். ஆகவே அவர்களுக்கு இந்தப் பொறுப்பைக் கொடுப்பதன் மூலமாக ஏற்கனவே வேலை இல்லாமல் இருக்கின்ற படித்தவர்கள், இந்தப் பணியில் ஈடுபடக்கூடியவர்கள், இவர்களுக்கு எதிராகத்தான் இது அமைகிறது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

அது மட்டுமல்ல. மற்றொரு அம்சம் இதிலே இருக்கிறது. விற்பனை வரி இலாகாவின் அதிகாரிகள் இந்தத் துறையில் பணி புரிந்தவர்கள். அவர்களே கணக்குகளைத் தொகுத்து, கணக்குகளை மீண்டும் கொடுத்து, அப்பீல் போன்ற விஷயங்களிலே அவர்களே வாதாடுவது போன்ற நிலைமைகளை ஏற்படுத்திக் கொடுப்பதால், அது எந்த அளவிற்கு முறை என்பதை அமைச்சரவர்களும், இலாகாவும் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அரசாங்கத்திற்கு இதனால் இழப்பு ஏற்படக்கூடும், என்பது என்னுடைய கருத்து. இதைத் துறை பரிசீலனை செய்ய வேண்டும். வரியை விதிக்கக் கூடிய நேரத்திலே, வரியை வசூலிப்பதற்குரிய பொறுப்புகளில் நியமிக்கப்படக் கூடிய அதிகாரிகள் தங்களுடைய கடமைகளைச் செய்ய வேண்டுமென்று நாம் விரும்புகின்ற நேரத்தில், இந்த ஓய்வு பெற்றவர்கள் இந்த மாதிரி பணி செய்வார்களேயானால், அவர்களுக்குக் கீழே பணிபுரியும் ஏ.சி.டி.ஓ., டி.சி.டி.ஓ. இருப்பார்களேயானால், அவர்கள் ஏற்கனவே உயர்ந்த பணியில் இருந்து ஓய்வு பெற்று, இப்போது வேலையை எடுத்துக்கொண்டு செய்யக்கூடிய நேரத்தில், எவ்வாறு இப்போது பணியில் இருப்பவர்கள் இந்தக் கடமையை ஆற்றுவார்கள் என்பதாலும், அரசாங்கத்திற்கு இழப்பு ஏற்படும் என்பதாலும், இதைப் பரிசீலித்து இம்மாதிரியான நடைமுறைகளை மாற்ற வேண்டும் என்றும். அமைச்சர் இந்தச் சட்டத் திருத்தத்தைக் கைவிட வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடிக்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே; இந்தச் சட்ட முன்வடிவைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். அதுவும் நம்முடைய காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த துணைத் தலைவர் மிக நன்றாக விவாதங்களை எடுத்து வைத்துப் பேசுகின்ற ஆற்றலை இயற்கையாகப் பெற்றவர்கள். அவர்களுக்குப் புரியவில்லை என்று சொல்வது சும்மா ஒரு ஒப்புக்காகத்தான்.

அதேபோல திரு. கருப்பையா அவர்கள் விவரம் தெரியவில்லை என்றால் பேச முன் வரமாட்டார்கள். விவரம் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். எப்போதும் விவரங்கள் எடுத்து வைத்துப் பேசியதை பல கூட்டங்களில் பார்த்திருக்கிறேன். கமிட்டிக் கூட்டங்களில் விவரங்களை நன்றாக ஆராய்ந்து பேசக்கூடிய ஆற்றலைப் பெற்றவர்கள்.

அதைப்போல் நம்முடைய மாண்புமிகு கிருஷ்ணன் அவர்கள் நன்றாக விவரங்களைத் தெரிந்து பேசக்கூடியவர். அவர்கள் தெரியவில்லை என்று சொன்னது ஒப்புக்காக என்று நான் கருதுகிறேன். அவர்கள் நன்றாக விவரம் தெரிந்தவர்கள் என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். திரு. ஆர். கிருஷ்ணன் அவர்கள் பேசுகிறபோது ஒன்றைச் சொன்னார்கள். மாநில அரசு, இருக்கின்ற அதிகாரிகளை மத்திய அரசு எடுத்துக்கொள்வதைக் கடுமையாக எதிர்க்கவில்லை என்று அவர்கள் சொன்னார்கள். நீங்கள் அவையினுடைய குறிப்பேட்டினைப் பார்த்தால், நான் இங்கே சொல்கிறபோது ஒவ்வொரு முறையும் எவ்வளவு கடுமையாகச் சொல்லியிருக்கிறேன் என்பது தெரியும். இந்த வரி விதிப்பை அவர்கள் எடுத்துக்கொண்டால், ஒரு மாநில அரசு will become only a glorified municipality என்பதையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ரா. கிருஷ்ணன்:** நான் இங்கே பேசியது உண்மைதான். ஆனால் இந்த மாநில அரசின் சார்பாக நிதியமைச்சர்கள், வருவாய்த் துறை அமைச்சர்கள் மாநாட்டில், அல்லது மாநில என்.டி.சி. கூட்டம் இப்படிப்பட்ட கூட்டங்களில் நீங்கள் என்ன சொல்லியிருக்கிறீர்கள்? அதற்கு மத்திய சர்க்கார் என்ன சொல்லியிருக்கிறது என்பதைச் சொல்ல வேண்டும்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** இந்த 'குளோரிபைடு' என்ற வார்த்தை எனக்கு வந்ததை நானாகச் சொல்லவில்லை. முதலமைச்சர்கள் மாநாட்டில், முதலமைச்சர் அவர்களின் சார்பில் கலந்துகொள்கிறபோது, "நீங்கள் இப்படி இந்த வரியை எல்லாம் எடுத்துக்கொண்டு போனால் State Government is only an administrative unit of the Centre என்று அந்த வார்த்தைகளை அப்போதே பேசியிருக்கிறேன். It is only an administrative unit of the Centre அதாவது அவர்களுடைய, சென்ட்ரல் கவர்ன்மென்ட்டினுடைய ஒரு நிர்வாகக் குழுவாக, சாதாரண ஒரு யூனிட்டாக இது ஆகிவிடும் என்று சொல்லியிருக்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், நீங்கள் இப்படியே வரியை எடுத்துக்கொண்டு போனால், இந்த மாநில சர்க்கார் ஒரு குளோரிபைட் முனிசிபாலிட்டியாக ஆகிவிடும் என்பதைச் சொல்லியிருக்கிறேன். அப்படிச் சொன்னது மாத்திர





மல்ல, அந்தப் புத்தகத்தை அச்சடித்து கையிலே கொடுத்திருக்கிறோம். அதிலும் முதலமைச்சர் சார்பாக என்பதாலே, அவர்கள் பெயரையும் கொடுத்திருக்கிறோம். அதை நானே சொல்லியிருக்கிறேன். அதை நானே படித்திருக்கிறேன், இப்போது வேண்டுமானாலும் அந்தப் புத்தகத்தைக் கொண்டு வந்து படிக்கிறேன். ஆகவே மத்திய அரசிலே போய் சொல்கிறபோது, நான் சொன்னதை, நீங்கள் பயந்துகொண்டு அங்கே சொல்கிறீர்கள் என்று தவறாக யாரும் கருதக்கூடாது. நாங்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு. நாங்கள் யாருக்கும் பயப்படத் தேவையில்லை. பயப்படுவது மக்களிடம் தான் பயப்பட வேண்டும். வேறு யாருக்கும் பயப்படத் தேவையில்லை. இதை நீங்கள் தானே சொல்வீர்கள், முதலமைச்சர் அவர்கள் சொன்னார்களா? என்றால், நான் இங்கே பேசுகிறபோது முதலமைச்சர் சார்பிலேதான் பேசினேன் என்பதும், இந்தப் புத்தகம் முதலமைச்சர் பெயராலேதான் அச்சடிக்கப்பட்டது என்பதும்—அந்தப் புத்தகத்தை வேண்டுமானால் உங்களுக்கு நான் தருகிறேன்—இதைவிட கடுமையாக யாரும் சொல்லவில்லை என்பதும், இன்னும் நம்முடைய கிருஷ்ணன் அவர்கள் தவறாகக் கருதவில்லை என்றால், மேற்கு வங்க முதல்வர் இந்தப் புத்தகத்தை வாங்கிப் பார்த்துவிட்டு, மிகவும் விவரமாகவும், அழுத்தந்திருத்தமாகவும் சொல்லியிருக்கிறீர்கள்,' என்று அவர்களே பாராட்டியிருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்களா என்றால், கடைசியிலே நடந்த கூட்டத்திலே முதலமைச்சர் அவர்கள் கலந்து கொண்டிருக்கிறபோது, நாங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு, தேர்ந்தெடுக்கப்பட்டதற்கு முன்னாலே, மக்களிடத்திலே, அவர்கள் சொன்ன வார்த்தைகள், தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு மக்களிடத்திலே வாக்கைக் கொடுத்துவிட்டு, நாங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு வருகிறோம். அதற்குப் பின்னால் கொடுக்கப்பட்ட அந்த வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும் என்றால், வரி போடுகிற அதிகாரத்தை நீங்கள் எடுத்துவிட்டால், எப்படி எங்களுடைய வாக்குறுதிகளை நாங்கள் நிறைவேற்ற முடியும் என்று அவர்கள் கேட்டிருக்கிறார்கள்.

இன்னும் ஒன்றை அவர்கள் கடுமையாகச் சொன்னார்கள். அதை நான் இங்கே சொல்லியிருக்கிறேன். இங்கே இருக்கிறவர்கள், இதிலே மெஜாரிட்டி, மைனாரிட்டி பார்க்கக் கூடாது என்று சொல்லி இருக்கிறார்கள். இங்கே இருக்கிற முதலமைச்சர்கள், யார் எந்தக் கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள், என்று மெஜாரிட்டி, மைனாரிட்டி பெரும்பான்மை, சிறுபான்மை பார்க்கக் கூடாது, சொன்ன கருத்திலே எந்தக் கருத்து தேவை என்பதை நீங்கள்

யோசிக்க வேண்டும் என்று அங்கே தெரிவித்திருக்கிறார்கள். அது பதிவு செய்யப்பட்டிருக்கிறது. நான் இங்கே பதிவு செய்யப்படாததைச் சொன்னால், நீங்கள் என் மீது உரிமைப் பிரச்சினை கூட கொண்டு வருவதற்கு உங்களுக்கு வாய்ப்பு இருக்கிறது.

அதுமட்டுமல்லாமல், இன்னொன்று, ஒரு படி மேலே போய் அதிகமாகச் சொன்னார்கள். இங்கே இருக்கிற முதலமைச்சர்களை எல்லாம், மனச்சாட்சிப் படி underline that word இங்கே இருக்கிற, முதலமைச்சர்களை எல்லாம் மனச்சாட்சிப்படி பேச வைத்தால், நான் சொல்லியதைத்தான் சொல்வார்கள். இதற்கு மேல் ஒரு முதலமைச்சர் எப்படிப் பேச முடியும் என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்கவேண்டும். அங்கே போனவுடனே பயந்துவிட்டே வருகிறோம் என்று நீங்கள் அப்படி எங்களைப்பற்றி ஏன் சொல்கிறீர்கள் என்பது எனக்குத் தெரியாது. யாருக்கும் பயப்படமாட்டோம். என் பயமில்லா வேண்டும். ஆகையினாலே என் கிருஷ்ணன் அவர்கள் இதைச் சொன்னார்கள் என்றால், அவர்களுக்கு நன்றாகத் தெரியும். இதை நான் அழுத்தந்திருத்தமாகச் சொல்லவேண்டும் என்பதற்காக அவர்கள் சொன்னார்கள். ஏன் நான் இங்கே பேசுகிறபோது, காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள், நான் நேற்றுக் கொண்டுவந்த சட்ட முன்வடிவில் அவர்கள் எதையுமே பேசவில்லை, இங்கே ஒருவருமே இல்லை, அவர்கள் ஒருவருமே இல்லாததினால், நான் இங்கே உற்சாகத்தோடு பேச முடியவில்லை என்று நான் இங்கே தெரிவிக்கிறபோது, இங்கே நான் சொன்னேன், நான் கொண்டுவருகிற சட்டத்தை நீங்கள் ஏற்றுக் கொள்கிறீர்கள் என்று நான் தெரிவித்தேன். இன்றைக்கு அவர்கள் பேசாமல் இருக்கிறார்கள், எனவே அவர்களை ஏதாவது பேச வைக்கவேண்டும் என்பதற்காக, கிருஷ்ணன் அவர்கள் தூண்டிவிடுகிறார்கள் என்றுதான் நினைக்கிறேன். நான் அங்கே பேசவில்லை என்பதும், அல்லது இதற்கு முன்னாலே நான் பேசியதிலே அவர்கள் கவனம் வைக்கவில்லை என்றும் நான் சொல்ல மாட்டேன், காரணம் இங்கே பேசியதை எல்லாம் அவர்கள் கவனம் வைத்திருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

(முற்பகல் 11-20)

இந்தச் சட்ட முன்வடிவைப் பற்றிச் சொல்லவேண்டும் என்றால், இதிலே ஏழை எளியவர்களுக்காக, அவர்களுக்கு புதிதாக எந்த வரியும் போடவில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால் இதைச் சொன்னால், நீங்கள் ஏற்றுக்கொள்வீர்கள். ஒன்றைச் சொல்ல வேண்டும் என்றால், ஒப்பந்தங்கள், கான்ட்ராக்ட். கான்ட்ராக்ட் என்று சொன்னால், இன்றைக்கு இங்கே ஒரு கட்டிடத்தைக் கட்டுகிறார்கள், அதிலே கான்ட்ராக்ட் செய்கிறேன்





என்று சொல்லி, பெரிய இயந்திரத்தை ஒரு லிப்ட் இருக்கிறது என்று வையுங்கள், ஒரு லிப்ட் இங்கே வைத்தால், அந்த லிப்டை அவர்கள் வந்து கான்ட்ராக்ட் போட்டால், இந்த லிப்டுக்கு நாங்கள் வரி போட முடியாது. ஒரு லிப்ட் இங்கே வைக்கிறார்கள் என்று வைத்துக் கொள்வோம். அதுவும் கான்டிராக்டாக- அதுவும் கான்டிராக்ட்காரர்களே அந்த லிப்டை கொண்டு வந்து வைக்கிறார்கள் என்றால், அதற்கு வரி போட முடியாது. அதேபோல ஒரு பெரிய கட்டிடம் இருக்கிறது. அதற்கு மொசைக் செய்கிறார்கள், அதாவது வழவழப்பான கல் இருக்கிறதே அது போடுகிறார்கள். அந்தக் கல்லுக்கு அந்த மேனுபெக்சரரே கான்டிராக்ட் எடுத்து, அதைக் கொண்டு வந்து போடுவார்களேயானால், அதன் மீது வரி போட முடியாது. இப்படி கான்டிராக்ட் என்ற பெயரால் பெரிய பெரிய தொழில் நடத்துபவர்கள், வரியிலிருந்து யார் ஏமாற்றுகிறார்களோ அவர்களுக்கு போடப்படும் இந்த வரியை நீங்கள் நிச்சயமாக வரவேற்பீர்கள், அதை நன்றாகப் பார்த்திருந்தால் என்பதை நான் மனப்பூர்வமாகச் சொல்லிக்கொள்கிறேன்.

இன்னொன்றைச் சொல்லவேண்டும் என்றால், அது டிஸ்டிரிப்பியூஷன் பற்றியது. இப்போது சினிமாவிலே நல்ல வரும்படி வருகிறது. அந்தப் பிலிமை டிஸ்டிரிப்பியூஷனில். கான்ட்ராக்ட் முறையில் வாங்குகிறார்கள். அதுவும் ஒப்பந்தம் செய்து, 2 வருஷம், 3 வருஷம் என்று ஒப்பந்தம் செய்து வாங்குகிறார்கள். அப்படி வாங்கிக்கொண்டு போகிறார்கள் என்றால் அவர்களிடமிருந்து வரி வாங்க முடியாது. அவர்கள் டிஸ்டிரிபியூஷன் முறையில் ஒப்பந்த முறையில் பிலிமை வாங்கிக்கொண்டால், அவர்கள் மீது நாம் வரி போட முடியாது. அதுதான் இதுவரையில் இருந்த நிலைமை. இப்போது அவர்களுக்கு வரி போடுகிறோம். ஆகவே, இதை உறுப்பினர்கள் ஏற்றுக் கொள்வார்கள் என்பது எனக்கு நன்றாகத் தெரியும்.

அதேபோல புரொஜெக்டர், வீடியோ, கேசட், பிலிம் போன்ற இவைகளையெல்லாம் வாங்குகிறபோது. இவைகளையெல்லாம் சில நேரங்களிலே தவணை முறையிலே வாங்குகிறார்கள். தவணை முறையிலே வாங்கினால் என்ன ஆகிறது என்றால் (குறுக்கீடு) அப்படி தவணை முறையிலே வாங்குகிறபோது, இன்றைக்கு இருக்கிறபடி, எல்லாத் தவணைகளையும் கட்டிய பிறகுதான், அதன் மீது வரி போட வேண்டியிருந்தது. இப்போது தவணை முறை என்றால், மொத்தத்திலே தொகை எவ்வளவு என்று தெரிந்தால், முதல் தவணை வருகிறபோதே வரி போடுகின்ற வாய்ப்பு இந்த விதிகளிலே கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆகவே, இப்படி பல்வேறு வழிகளில் யார் யார் ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்களோ, அவர்களிடத்திலிருந்தெல்லாம் வரிதனை எடுத்துக் கொள்வதற்காகத்தான், இந்த வரி போடப்படுகிறதே தவிர வேறு ஒன்றும் இல்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். இதிலே ஒன்றும் ஏழை எளியவர்களுக்காக எந்த வரியும் போடப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். தவணை முறையில் வாங்குகிறபோது வானொலிப் பெட்டி வாங்குகிறார்கள், மின்சார விசிறி வாங்குகிறார்கள். குளிர் சாதனப் பெட்டி வாங்குகிறார்கள். இப்படிப்பட்டவைகளுக்கெல்லாம் வரி முதலிலே கட்டப்படவில்லை என்றால் அதைத் தவணை முறையிலே வாங்கினாலும் அதற்கு தற்போது வரி போடுகிறோம் என்று சொல்லி, அந்த நிலைமையே தவிர, வேறு பாதிப்பு எதுவும் இதில் இல்லை என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

அது மட்டும் அல்ல, சிறிய வியாபாரிகளுக்கு எல்லாம், 1 லட்சம் ரூபாய்க்குள்ளாக வியாபாரம் செய்கிறார்கள் என்றால், அவர்கள் செய்கிற வியாபாரம் ஒரு லட்சத்திற்குள்ளே நடக்கிறது என்றால், அவர்களுக்கு எந்தவிதமான வரியும் இல்லை என்பதையும் இப்போது ஏற்றிருக்கிறோம். பலமுனை வரியாக இருந்தால், 1 லட்சத்திற்குள் வியாபாரம் இருந்தால் அவர்களுக்கு வரி இல்லை என்பது இங்கே சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே இதில் யாருக்கும் எந்தவித சங்கடமும் இல்லாமல்தான் நாம் செய்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ரா. கிருஷ்ணன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இதைப் பொறுத்தவரையிலே இங்கே சொல்லப்பட்டிருப்பது,

" . . . a tax on the transfer, otherwise than in pursuance of a contract . . . ."

தமிழிலே சொல்லும்போது 'ஒப்பந்தம் அல்லாத வேறு வகையில்' என்று இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் காண்டிராக்ட்காரர்கள் விட்டு வைத்தால் அவருக்கு முன்பு லிப்டுக்காக வரி இல்லை, இப்போது போடுகிறோம் என்று சொன்னார்கள். ஆனால் ஒப்பந்தம் அல்லாத என்று இதிலே போட்டிருக்கிறதே. இதிலே 'ஒப்பந்தம் அல்லாத வேறு வகையில், ரொக்கத்திற்காக, அல்லது காலங்கடந்து செலுத்தப்படும் தொகைக்காக—அதாவது இன்ஸ்டால்மெண்ட்பேசிஸ்—அல்லது வேறு ஆதாயத்திற்காகச் சரக்கு உடைமை உரிமை மாற்றத் தொழிலில் ஈடுபட்டுள்ள ஒருவர்' என்று இருக்கிறது. அப்படியானால் டிரான்ஸ்பர் செய்யப்படும்போது கூட வரி உண்டு, என்று இருக்கிறது. ஆகவே நேரிடையாக சாதாரண மக்கள் பயன்படுத்துகிற பொருள்களுக்கு போடக்கூடிய வரிதான் இது. அதேபோல இன்ஸ்டால்



மெண்ட் பேசிஸ்லே கொடுக்கும்போது, அது சாதாரணமாக ரேடியோ, மின்விசிறி வாங்கினால், அவைகளுக்கு வரி என்றால், அதுவும் சாதாரண மக்கள் மீது போடக்கூடிய வரிதான். ஆகவே, அவர்களுக்கு நிவாரணம் அளிப்பதாகக் கருதி இதில் 1 லட்சத்திற்கு மேல் என்று வைத்திருப்பதை சரி என்றும் சொல்வதற்கு இல்லை. விலைவாசி ஏற்றத்தில் சாதாரண ஒரு பெட்டிக் கடை கூட 1 லட்சம் சரக்கு வைத்துத்தான் நடத்தப்படுகிறது. ஆகவே, இந்த 1 லட்சம் என்பது மிகச் சிறிய தொகை. ஆகவே இந்தச் சூழ்நிலையில், இந்த வரி விதிப்பு தவிர்க்கப்பட வேண்டும் என்பதுதான் என்னுடைய கருத்து.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, தவணை முறையிலே வாங்குகிற பொருளெல்லாம் ஒருமுனை வரி வகையிலே இருப்பதினாலே, முன்கூட்டியே அவைகளுக்கெல்லாம் வரி செலுத்திவிடுவார்களேயானால், அவைகளுக்கெல்லாம் மீண்டும் வரி வராது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (டாக்டர் கே. சமாசம்): பேரவை முன்னுள்ள கேள்வி—

"தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (நான்காம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 31/1984) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 5 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவுகள் 6 மற்றும் 7.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (டாக்டர் கே. சமாசம்): சட்ட முன்வடிவுக்குப் பொறுப்புள்ள மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பிரிவுகள் 6 மற்றும் 7 ஆகியவை சட்ட முன்வடிவின் பகுதிகளாக இருக்க வேண்டாம் என்ற திருத்தத்தைக் கொடுத்துள்ளதால், பேரவைத் தலைவருக்குள்ள அதிகாரத்தின்படி அந்தப் பிரிவுகளை பேரவை முன் வைக்காமல். அவற்றைச் சட்ட முன்வடிவிலிருந்து நீக்கி விடுகிறேன்.

[1984 ஏப்ரல் 28

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்—

"Renumber clauses 8 to 10 as clauses 6 to 8 respectively". The amendment was put and carried.

எண் மாற்றியமைக்கப்பட்ட பிரிவுகள் 6, 7 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

எண் மாற்றியமைக்கப்பட்ட பிரிவு 8.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (டாக்டர் கே. சமரசம்): பேரவை முன்னுள்ள கேள்வி—

"எண் மாற்றியமைக்கப்பட்ட பிரிவு 8 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்".

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்:

"In clause 8 as so re-numbered, in sub-clause (2) *for* the expression "material items", *substitute* the expression "material times".

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

எண் மாற்றியமைக்கப்பட்ட பிரிவு 8, திருத்தப்பெற்றபடி, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 1.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (டாக்டர் கே. சமரசம்): பேரவை முன்னுள்ள கேள்வி:

"பிரிவு 1 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்".

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்:

"In clause 1, in sub-clause (2), *for* the expression "section 10", *substitute* the expression "section 8".

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று. நிறைவேற்றப்பெற்றது.



1984 ஏப்ரல் 28] [திரு. எஸ். டி. சோமசுந்தரம்]

பிரிவு 1, திருத்தப்பெற்றபடி, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு பொது விற்பனை வரி (நான்காம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 31/1984), திருத்தப்பெற்றபடி, நிறைவேற்றப் பெறவேண்டும்".

தீர்மானம், பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு, திருத்தப்பெற்றபடி, நிறைவேற்றப்பெற்றது.

(இ) கூடுதல் விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1984.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு கூடுதல் விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 32/1984) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்".

திரு. ரா. கிருஷ்ணன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, பில் நம்பர் 31-ல் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது இது சாதாரண மக்களை பாதிக்கக்கூடிய வரி அல்ல, ஆகவே இது தாங்கக்கூடியவர்கள் மீது போடக்கூடிய வரிதான். ஆகவே இதை அனுமதிக்கலாம் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் இப்போது இதில் போட்டு இருக்கக்கூடிய வரி இது உண்மையிலேயே அவர்களுக்கே தெரியும். இதை சாதாரண மக்கள் தாங்க முடியாது. ஆனால் இதற்கு என்ன பதிலை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லப் போகிறார்கள் என்று தெரியவில்லை. மூன்று லட்சத்திலிருந்து 5 லட்சம் வரை டர்ன்ஓவர் இருந்தால் 0.4-லிருந்து 0.5 ஆகவும், 5 லட்சத்திலிருந்து 7 லட்சம் வரை இருந்தால் 0.5-லிருந்து 0.7 ஆகவும், 7 லட்சத்திலிருந்து 10 லட்சம் வரை இருந்தால் 0.6-லிருந்து 1 சதவீதமாகவும், 10 லட்சத்திற்கு மேல் டர்ன்ஓவர் இருந்தால் 0.7 என்பது 1.25 சதவீதமாகவும் கூட்டப்பட்டு போடப்பட்டிருக்கிறது. நாம்

* 1984-ம் ஆண்டு மார்ச் 31-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

ஏற்கனவே கூறியபடி இந்த 1 லட்சம் 2 லட்சம் வியாபாரத்தில் முதலீடு அல்லது டர்ன்ஓவர் என்பது மிக சர்வ சாதாரணமானது. இன்றைக்கு பொருட்களுடைய விலைகள் தாறுமாறாக ஏறிவிட்ட காரணத்தால் இன்றைக்கு நாணயத்தின் மதிப்பு மிக மிகக் குறைவாகி விட்டதாலும் மத்திய அரசின் அறிவிப்புப் படியே இன்றைக்கு நாணயத்தின் அதாவது 1 ரூபாயின் மதிப்பு 17 காசு என்று அறிவித்து இருக்கக்கூடிய சூழ்நிலையில் இந்த நாணயத்தின் மதிப்பு குறைந்துவிட்ட காரணத்தால் இந்தத் தொகையை நாம் 3 லட்சம், 4 லட்சம் என்று சொல்வது எல்லாம் அது நிச்சயமாக சாதாரண மக்களை பாதிக்கக் கூடியது என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

(முற்பகல் 11-30)

அதோடு பொதுவாக ஒரு ஆட்சி என்பது வரியைக் குறைத்து வசதியைப் பெருக்கவேண்டும் என்பதுதான். நீங்கள் எல்லாம் போட்டி போட்டுக் கொண்டு சொல்லக்கூடிய பேறிஞர் அண்ணா அவர்களுடைய கருத்தும் அன்றைக்கு சொல்லிய கருத்தும் அதுதான். குலேபகாவலி என்ற படம் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நடித்த சினிமாப் படம். அதிலே அநியாயம் இந்த ஆட்சியிலே இது அநியாயம் என்று பாடும்போது இட்லிக்கு வரி, சட்னிக்கு வரி, நிமிர்ந்தால் வரி, குனிந்தால் வரி, இது அநியாயம் என்று அவர்களே பாடியிருக்கிறார்கள். ஆனால் வரி போடாமல் ஆட்சி நடத்த முடியும் என்று நான் சொல்லவில்லை. ஆனால் வரி யார் மீது போடுவது என்பதுதான் பிரச்சினை. இப்போது சோசலிஸ்டு நாடுகளில் நார்த் கொரியா போன்ற நாடுகளில் வரி என்பது கிடையாது. வரி இல்லாமல் ஆட்சி நடத்துகிறார்கள். ஆனால் அப்படிப்பட்ட ஒரு அமைப்பு இப்போது இங்கே இல்லை. அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை இங்கே வரவேண்டும் என்று விரும்பினாலும் அது வரும் என்று நாம் எதிர்பார்க்கவும் இல்லை. ஆனால் இப்படிப்பட்ட அந்த வரியை போடுவது யார் மீது போடுவது? யார் மீது போடக் கூடாது என்பதுதான் வரையறுக்கப்பட வேண்டும். இப்போது இட்லிக்கு வரி, சட்னிக்கு வரி என்பது எல்லாம் சாதாரண மக்கள் பயன் படுத்தக்கூடிய பொருட்கள். ஓட்டல் பண்டங்கள், அதன் மீது போடக்கூடிய வரி குறைக்கப்பட வேண்டும் என்பதுதான் அன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்த சினிமாவில் பாடி இருக்கக்கூடிய அந்த பாடல். ஆனால் இப்போது இந்த வரியை சாதாரண மக்கள் மீது போடக்கூடிய வரியை நிச்சயமாக தவிர்க்க வேண்டும். அதற்கு ஒரு ஆக்கபூர்வமான கொள்கையை வைக்க வேண்டும். இந்த வரியை சாதாரண மக்கள் மீது போடாமல் இருந்து வேறு சில வரவினங்கள் மூலம் போட்டு நிதி ஆதாரத்தைப் பெருக்கிக்கொள்ள முடியும். ஏற்கனவே இந்த மன்றத்தில் விவாதிக்கப்





பட்டது ஸ்டீல் ரோலிங் மில். அந்த உருக்கு உருட்டு ஆலை மீது போடக்
கூடிய வரி தவிர்க்கப்பட்ட காரணத்தால் பல கோடிக்கணக்கான ரூபாய்
8 கோடி ரூபாய்க்கு மேல் இந்த அரசுக்கு இழப்பு ஏற்பட்டிருக்கிறது. அதை
நான் மீண்டும் இங்கே சொல்ல வேண்டிய அவசியம் இல்லை.

அதனுடைய காரணம் என்ன? ஹைக்கோர்ட்டில் ஒரு தீர்ப்பு கொடுக்கப்
பட்டு வரியை வசூல் செய்து கொள்ளலாம் என்று தீர்ப்பு அளிக்கப்பட்ட பிறகு
கூட இந்த அரசு அவர்களிடம் வரியை வசூல் செய்யவில்லை. அது ஒரு பெரிய
குறைபாடு. அதைப்போன்று இன்றைக்கு சாராயம், அல்லது மதுவிலக்கு
தளர்த்தப்பட்ட காரணத்தால் இன்றைக்கு வேறு சில வரவினங்கள் இருக்
கின்றன. அதிலும்கூட இந்த பாட்டிலிங் அண்டு பிளண்டிங் இவைகளை அரசே
எற்றுக்கொள்ள வேண்டும் என்றும் இதனால் அதிகமான வருமானத்தைப்
பெருக்க முடியும். அதையும்கூட எடுக்க இன்றைக்கு இந்த அரசு தயங்குகிறது.
ஏற்கனவே இந்தச் சாராய மொத்த விற்பனையை அரசு ஏற்றுக்கொண்
டிருப்பது மகிழ்ச்சிக்குரியது, வரவேற்கக்கூடியது. ஆகவே இந்த பாட்டிலிங்
அண்டு பிளண்டிங்-ல் ஏராளமான வருவாய் இருப்பதாகச் சொல்கிறார்கள்.
அதில் கோடிக்கணக்கான ரூபாயை தனிப்பட்ட நபர்கள் எடுத்துக்கொள்கி
றார்கள். அதற்கான வாய்ப்பை இந்த அரசு விட்டுக் கொடுத்து இருக்கிறது.
உருவாக்கியிருக்கிறது. ஆனால் இப்போது இந்த அரசே அப்படிப்பட்ட பாட்
டிலிங் அண்டு பிளண்டிங் யூனிட்டை ஏற்படுத்திக்கொண்டால் குறைந்த மூல
தனத்தில்—சொல்லப்போனால் மூலதனமே தேவையில்லை. ஏதோ ஒரு தண்
ணீர் தொட்டி அல்லது தண்ணீர் ஆக சில ப்ராசசிங், பாட்டலிங் இவைகள்தான்
தேவை. ஆக இதில் கோடிக்கணக்கான ரூபாய் அதாவது ஒரு லிட்டர்
2 ரூபாய் 65 பைசாவுக்கு விலை கொடுத்து வாங்கக்கூடிய எரி சாராயத்தை
கிட்டத்தட்ட 40 ரூபாய், 50 ரூபாய் விலைக்கு இன்றைக்கு நிர்ணயிக்கப்படு
கிறது. இடையிலே வரக்கூடிய அந்தத் தொகை வித்தியாசம் எந்த வழியில்
போகிறது என்பது யாருக்கும் தெரியவில்லை, புரியவில்லை. ஆக இந்தச் சூழ்
நிலை தவிர்க்கப்பட்டால் தமிழகத்தினுடைய அரசுக்கு மிக அதிகமான
வருமானம் ஏற்படக்கூடிய ஒரு வாய்ப்பு இருக்கிறது. அதை நாம் முழுமை
யாகப் பயன்படுத்தி இந்தச் சாதாரண மக்கள் மீது போடக்கூடிய வரியை
நாம் அடியோடு ரத்து செய்துவிடலாம். ஆகவே இன்றைக்கு இந்தக் குறைந்த
முதலீடுகளை வைத்து நடத்தக்கூடிய தொழில் மீது போடக்கூடிய இந்த வரி
உயர்வு என்பது நிச்சயமாக தவிர்க்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தி
அதோடு இன்றைக்கு கோவையில் இன்று பத்திரிகையில் செய்தி வந்து இருக்
கிறது ; செல்ஸ் டாக்ஸ் கமிஷன் என்று ஒன்று போடப்பட்டிருக்கிறது.
அதாவது முன்னாள் உயர்நீதிமன்ற நீதிபதி வடகல் என்பவருடைய

தலைமையில் 3 உறுப்பினர்களைக் கொண்டு இருக்கக்கூடிய ஒரு கமிஷன் போடப்பட்டிருக்கிறது. அசெஸ்மெண்ட், விதி இவைகளையெல்லாம் மீண்டும் பரிசீலனை செய்து ஏற்பாடு செய்வதற்காக ஒரு குழு நியமிக்கப்பட்டிருப்பதாகப் பத்திரிகையில் பார்த்தேன்.

ஆடிட்டர்-ஜெனரல் ரிப்போர்ட்டில் பல்வேறு குறைபாடுகள் சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றன.

In Dharmapuri, Park Town, Madras and Virudhunagar on purchase of goods varying Rs. 14.34 lakhs made during the years 1978–79 and 1979–80 from three unregistered dealers tax was not levied eventhough the goods were consumed in the manufacture of other goods and were sold on consignment basis.

ஆகவே, 14.3 இலட்சம் ரூபாயை ஒருசில குறிப்பிட்ட, விரல் விட்டு எண்ணக் கூடியவர்கள் வரியைச் செலுத்தாமல் தவிர்த்திருப்பதாக ஆடிட்டர்-ஜெனரல் ரிப்போர்ட் கூறுகிறது. சாதாரணமாக இருக்கின்ற நிகழ்ச்சிகளாக ஆடிட்டர்-ஜெனரல் பல்வேறு குறைபாடுகளைச் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட குறைபாடுகளைத் தவிர்ப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். அதன் மூலம் இந்த அரசாங்கத்தின் வருமானத்தைப் பெருக்கி, இந்த வரியைப் போடுவதைத் தவிர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கி. கா. நல்லப்பன் : மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு கூடுதல் விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவின் மீது சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

இந்தச் சட்டம் 1—4—1984 ஆம் தேதி அமலுக்கு வந்ததாகக் கருதப்பட வேண்டுமென்று இந்தக் குறிப்பிலே கூறப்பட்டிருக்கிறது.

இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையிலே, மாண்புமிகு அமைச்சரவர்கள் பதில் சொல்லுகின்றபொழுது, நிச்சயமாக இது ஏழை எளியவர்களைப் பாதிக்காது என்றுதான் சொல்லுவார்கள்.

மூன்று இலட்சம் ரூபாய்க்கு மேற்பட்டு, ஆனால் ஐந்து இலட்சம் ரூபாய்க்கு மிகாமல் வியாபாரம் செய்பவர்களுக்கு 0.4 சதவீதத்திலிருந்து 0.5 சதவீதம் என்றும்; ஐந்து இலட்சம் ரூபாயிலிருந்து ஏழு இலட்சம் ரூபாய் வரையில் வியாபாரம் செய்பவர்களுக்கு 0.5 சதவீதத்திலிருந்து 0.7 சதவீதம் வரையிலும், ஏழு இலட்சம் ரூபாயிலிருந்து பத்து இலட்சம் ரூபாய் வரையில்



வியாபாரம் செய்பவர்களுக்கு 0.6 சதவீதத்திலிருந்து ஒரு சதவீதம் வரையிலும், பத்து இலட்சம் ரூபாய்க்கு மேல் வியாபாரம் செய்யும் வியாபாரிகளுக்கு 0.7 சதவீதத்திலிருந்து 1.25 சதவீதம் வரையிலும் வரி விதிப்பதாகவும் இந்தக் குறிப்பிலே கூறப்படுகிறது.

அரசு எவ்வளவுதான் வரி போட்டாலும், வியாபாரிகள் தங்களுடைய சொந்தப் பணத்திலிருந்து அந்த வரியைச் செலுத்துவதில்லை. எந்த ஒரு பொருளின்மீது வரியைப் போட்டாலும் அந்த வரி மக்களின் மீதுதான் விழுகிறது என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதைப் போலத்தான் இந்த வரியும் இருக்கிறது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

ஏற்கனவே விலைவாசி அதிகமாக ஏறியுள்ளது. மேலும் வரியைப் போடுகின்ற இந்தச் சூழ்நிலையில், விலைவாசி மேலும் ஏறுகின்ற சூழ்நிலையைத் தான் உண்டாக்குகின்ற சாத்தியக்கூறு இருக்கும். ஆகவே, இதைப் பரிசீலனை செய்து, இந்தச் சட்டத்தை வாபஸ் வாங்குவது நல்லது என்று கூறி அமர்கிறேன்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே. மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சரவர்கள் கொண்டு வந்திருக்கின்ற, தமிழ்நாடு 1970 ஆம் ஆண்டு கூடுதல் விற்பனை வரிச் சட்டத்தை மேலும் திருத்துவதற்கான சட்ட முன்வடிவின் மீது இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாகச் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

பொதுவாக, எதிர் வரிசையிலேயிருந்து நாங்கள் என்ன கருத்துக்களைச் சொன்னாலும்கூட, மாண்புமிகு அமைச்சர்கள் தங்கள் வழக்கமான பதிலில், இது நிச்சயமாக ஏழைகளைப் பாதிக்கப் போவதில்லை; வணிகர்களுக்குத்தான் இந்த வரி உயர்வு என்று சொல்லுவார்கள்.

நான், இந்தச் சட்ட முன்வடிவைப் பார்க்கின்றபொழுது, அதில் காரண, நோக்க விளக்கம் என்று அச்சிடப்பட்டிருக்கிறது. இதில், எங்கே காரணம் சொல்லப்பட்டிருக்கிறது என்று தேடித் தேடிப் பார்த்தேன். ஒரு காரணத்தையும் காணோம். காரணம் எங்கே இருக்கிறது என்று தெரியவில்லை.

(முற்பகல் 11-49)

விளக்கம் கொடுத்திருக்கிறார்கள். 1—4—1984 ஆம் நாளிலிருந்து உயர்த்துவது என்று 3—3—1984 அன்று சமர்ப்பிக்கப்பட்ட 1984-85 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் அரசு அறிவித்துள்ளது என்று இருக்கிறது. அதைத் தவிர இதிலே வேறெந்த காரணமும் சொல்லப்படவில்லை. ஒரே

காரணம் அரசாங்கத்திற்கு வரி வேண்டும்; ஆகவே வரி போடுகிறோம் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்வார்கள். நாம் பார்க்கின்ற ஒரு அம்சம் என்னவென்றால் இந்தக் கூடுதல் வணிக வரியினைப் பொறுத்த வரையிலே மூன்று இலட்சத்திலிருந்து ஐந்து இலட்சம் வரை உள்ள வியாபாரத் தொகைக்கு 4 சதவிதத்திலிருந்து 5 சதவிதமாக வரியினை உயர்த்தி இருக்கிறார்கள்; இது 12 சதவித உயர்வு என்று நான் கருதுகிறேன்.

அடுத்த கட்டமாக 5 இலட்சத்திலிருந்து 7 இலட்சம் வரை இருக்கின்ற வரி விதிக்கத்தக்க வியாபாரத் தொகையைப் பொறுத்தவரையில் .5 சதவிதத்திலிருந்து .7 சதவிதம் என்று உயர்த்தி இருக்கிறார்கள். இதைக் கணக்குப் போட்டுப் பார்த்தால் 40 சதவிதம் என்ற அளவுக்கு வருகின்றது.

மூன்றாவது கட்டமாக 7 இலட்சத்திலிருந்து 10 இலட்சம் வரை இருக்கக் கூடிய வரி விதிக்கின்ற வியாபாரத் தொகைக்கு .6 சதவிதத்திலிருந்து 1 சதவிதம் வரை போட்டிருக்கிறார்கள். இது 70 சதவித உயர்வாகும்.

கடைசிக் கட்டமாக 10 இலட்சம் ரூபாயும் அதற்கு மேலும் இருப்பவர்களுக்கு ஒட்டுமொத்தமாக .7 சதவிதத்திலிருந்து 1.25 சதவிதம் என்று போட்டிருக்கிறார்கள். இதைக் கணக்கிட்டால் 80 சதவிதம் என்று வருகின்றது. அப்படித்தான் கணக்கு வருகின்றது என்று நான் நினைக்கிறேன். திருத்திச் சொன்னால் திருத்திக் கொள்கிறேன். எனவே இவ்வளவு அதிகமான அளவுக்கு வரி உயர்வு செய்திருப்பது என்பது நியாயம்தானா என்று நான் கேட்க விரும்புகிறேன். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் நிதிநிலையறிக்கையில் சொல்கின்றபோது சொல்கிறார்கள்.

Since these increases are proportionate to the size of the taxable turnover, the additional burden to be borne by the trading community will not be high.

என்று. இது எப்படிப் பொருத்தமாக இருக்கும் என்று எனக்குத் தெரியவில்லை. வில் நாட் பி ஹை என்ற வார்த்தையின்படி அதிகமாக இருக்காது என்று சொல்கிறார்கள். அதை எப்படி வாதத்திற்கு ஒத்துக்கொள்ள முடியும்? 12 சதவிதத்திலிருந்து 80 சதவிதமாக உயர்த்துவது என்பது அதிகமாக இருக்காது என்று சொல்வது எப்படிப் பொருத்தமாக இருக்கும்? இதிலே இரண்டு அம்சங்களைப் பார்க்கலாம். ஒன்று; வணிகர்கள் அவர்கள் செலுத்துகின்ற வரியினை விற்பனையின் மூலமாக வசூலிப்பார்கள் அதாவது சாதாரண மக்களின் தலையிலேதான் அது விழுகின்ற வகையிலே அவர்கள் அந்த விலையினைக் கூட்டுவார்கள்; மற்றொன்று, சில பேர் வரியைக் கட்ட முடியாத



காரணத்தால் தன்னுடைய பையிலே இருந்து எடுத்துக் கொடுக்கிறார்கள் என்று வைத்துக்கொள்ளுங்கள். அப்படியானால் நேர்மையாக வணிகம் செய்கின்ற வியாபாரிகளுக்கு நாம் கொடுக்கின்ற அதிகமான பளுவாக இது ஆகாதா என்று நான் உங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த வணிக வரிச் சட்டம் என்பதைப் பொறுத்தவரையில் இந்தியாவிலேயே தமிழகம்தான் வழிகாட்டியாக இருக்கின்றது. அறிவுலக மேதை இராஜாஜி அவர்கள் இதனைக் கொண்டு வந்தார்கள். மெட்ராஸ் ஜெனரல் சேல்ஸ் டாக்ஸ் என்பதுதான் அதன் ஆரம்பப் பெயர். இதைப் பார்த்துதான் மற்ற மாநிலங்களிலும் வந்திருக்கின்றது. முன்பு பழைய பைசாவான ஒரு பைசாவாக இருந்தது. பிறகு திரு. கருப்பையா அவர்கள் சொன்னதுபோல் கற்பகத் தருவாக விரைந்து வளர்ந்திருக்கின்றது. அப்படி ஒரு காலத்தில் இருந்ததைக் கொஞ்சம் கொஞ்சமாக உயர்த்திக்கொண்டு போனால் ஆங்கிலத்திலே சொல்வதைப்போல ஒட்டகத்தின் மேலே வைத்து ஒட்டகத்தின் முதுகை உடைக்கின்ற கடைசித் துரும்பாக இது இருக்கின்றது. The last straw on the camel's back.

என்று ஆகிவிட்டது என்ற சந்தேகத்தை நான் எழுப்ப விரும்புகிறேன். ஆனால் அரசாங்கத்திற்கு வருமானம் வரவேண்டுமானால் உடனே இருக்கவே இருக்கின்றது இந்த வணிகவரிச் சட்டம்; அதன்படி வரியினை உயர்த்துவது என்ற வகையிலே ஒரு நோக்கம் இருப்பது என்பது சரியாக இருக்குமா? அரசாங்க நிர்வாகத்தில் விழுமிய பயன் அதனால் கிடைக்குமா என்ற என்னுடைய சந்தேகத்தை நான் உங்கள் மூலமாக இங்கே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். எனவே இவ்வளவு அதிகமான வரி உயர்வு என்பது சரியாக வராது.

இந்தக் கட்டத்திலே வணிக வரியினை உயர்த்துவதன் மூலமாக 20 கோடி ரூபாய் அரசாங்கத்திற்குக் கிடைக்கின்றது என்று சொல்கிறார்கள். அந்த 20 கோடி ரூபாயை வேறு இனங்களிலே நம்முடைய திறமை மிக்க அதிகாரிகளால் வசூல் செய்ய முடியவில்லை என்றால் நான் ஒத்துக்கொள்ளமாட்டேன். அதிகாரிகள் திறமையற்றவர்கள் என்றோ அல்லது அரசாங்கத்தால் வசூல் செய்ய முடியவில்லை என்றோ ஏழை நடுத்தர மக்களைப் பாதிக்காத அளவுக்கு வசூல் செய்ய இயலாதவர்கள் என்றோ சொன்னால் அதை நாம் ஒத்துக்கொள்ள முடியாது. நிச்சயமாக அரசாங்கத்தால் முடியும். அரசாங்கத்திற்கு இப்போது இருக்கின்ற அதிகாரத்தை வைத்துக்கொண்டு, இப்போது இருக்கின்ற வரி உயர்வை வைத்துக்கொண்டு, இப்போது இருக்கின்ற வணிகர்

களிடம் இருந்து ஏழை எளிய மக்களைப் பாதிக்காத அளவுக்கு வசூலிக்க முடியும். அப்படி இருக்கும்போது இதை ஏன் புதிதாகக் கொண்டு வந்து மேலும் வரியினை அரசாங்கம் உயர்த்த முனைகின்றது என்பதை நான் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணன் அவர்கள் கேரள மாநிலத்தில் ஒரு கமிஷன் போட்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். எனவே அது போல் பல்வேறு பிரச்சினைகளில் இதுகுறித்து விரிவாக விவாதிக்க வேண்டி இருக்கின்றது. இது ஒரு அடிப்படையான வரி. அரசாங்கத்திற்கு அதிக மான தொகை கொடுக்கக்கூடிய வரி. எனவே இந்த அரசாங்கம் ஒரு கமிஷனை நியமித்துத் -தமிழகத்திலேயும் இது சம்பந்தமாக 'ஏ டு இஸட்' பிரச்சினைகளை எல்லாம் விவாதிக்க வேண்டி இருப்பதால்—விசாரிப்பதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். பல பிரச்சினைகளைப் பொறுத்தவரையில் பல முனை வரி கூடாது; ஒரு முனை வரிதான் போடவேண்டும் என்றெல்லாம் சொல்கிறோம். இப்படி பல்வேறு கட்டங்களில் உள்ள பிரச்சினைகளை எல்லாம் அரசாங்கம் ஒரு கமிஷன் போட்டு அதன்மூலமாக விசாரித்து மக்களுக்கு ஒரு நல்ல பயனை வழங்கலாம் என்ற கருத்தைச் சொல்லி இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பிலே பேசுகின்ற நான் இந்தக் கட்டத்தில் வணிக வரியின் மூலமாக கூடுதலாக 20 கோடி ரூபாய் வருமானம் வருவதற்காகக் கொண்டு வந்திருக்கிறோம் என்று நீங்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்தச் சட்ட முன்வடிவை எதிர்த்து அமைகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** மாற்றுத் தலைவர் அவர்களே, திரு. சித்தன் அவர்கள் எதிர்த்து என்று சொல்லி ஒரு பால் கொடுத்து அதற்குப் பிறகு அமைகிறேன் என்று சொன்னதற்குக் காரணமே எங்கே நான் கவனிக்காமல் விட்டு விடுவேனோ என்பதற்காக—அவருடைய எதிர்ப்பை நான் அண்டர்லைன் பண்ணிக்கொள்ள வேண்டுமென்பதற்காகத்தான் தெரிவித்தார்கள் என்பதை முதலிலேயே நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த விற்பனை வரியைப் பற்றி இங்கே மானியக் கோரிக்கையைக் கொண்டு வந்து பேசியபொழுது பல்வேறு விவரங்களைச் சொல்லியிருக்கிறேன். அவையெல்லாம் அச்சிடப்பட்டிருக்கின்றன. அவற்றை மீண்டும் ஒரு முறை நம்முடைய எதிர்க்கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்கள் படித்துவிட்டு, நான் பேசியதிலே ஏதாவது நியாயம் இல்லையென்றால் என்னிடத்திலே மறுபடியும் பேசினால்கூட அதற்கு நான் விளக்கம் சொல்லத் தயாராயிருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.





இன்றைக்கு ரூ. 20 கோடி தானே என்று சொன்னார்கள். இது கற்பக விருட்சம் என்று சொன்னார்கள். இந்த ஒரு கற்பக விருட்சத்தைதான் நீங்கள் விடாமல் வைத்திருக்கிறீர்கள். அதையும் விட்டுவிட்டால் இங்கே கற்பக விருட்சமே இருக்காது. இருப்பது ஒரே ஒரு மரம். அது கற்பக விருட்சம். வேறு வழியே இல்லை என்ன செய்வது? ஒரே ஒரு மரம் என்றால் புயல் அடிக்கின்றபொழுதெல்லாம் அந்த மரத்தடியிலேதான் போய் நிற்க வேண்டுமே தவிர, வேறு மரம் இல்லை எங்களிடத்திலே. வேறு மரத்தை எல்லாம் ஆக்கிரமிப்பு பண்ணி விட்டார்கள்.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** அமைச்சர் அவர்கள் சொல்லிய வாதத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன். இது ஒன்றுதானே எங்களுக்குக் கற்பக விருட்சம், அதன் அடியிலேதான் நிழல் பெற வேண்டியிருக்கிறது என்று சொல்கிறார்கள். அதே நேரத்திலே மத்திய அரசுக்கு நிறைய நிதி வருவாய் வாயில்கள் இருக்கின்றன. அது மாதிரி பொறுப்புகளும் அவர்களுக்கு அதிகமாக இருக்கின்றன. நம்முடையது மாநிலமாக இருப்பதால், மாநிலங்களுக்குப் பொறுப்புகளும் வரையறுக்கப்பட்டிருக்கின்றன. ஆகையினாலே இந்த ஒரு விருட்சம்தான் இருக்கிறது என்று சொல்லும்போது, அவர்களுக்கு நிறையச் செலவுகள் இருக்கின்றன என்ற வாதத்தையும் சொல்லிவிட்டுச் சொல்வார்களானால் சரியாக இருக்கும்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அந்த வாதத்திற்குப் பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். மத்திய அரசுக்குப் பொறுப்பு இருக்கிறது. மாநில அரசைக் காப்பாற்றுகிற பொறுப்பு; மாநில மக்களைக் காப்பாற்றுகிற பொறுப்பு. ஆனால், பொறுப்புகளை எடுத்துக்கொண்டு போட்டுக்கொள்வதால்தான் மத்திய அரசுக்குச் செலவு அதிகமாகிறது. நான் செலவைத் தவிர்க்க கருத்துக்கள் கூற வேண்டுமானால், நான் இதற்கு முன்னாலே சொல்லியிருக்கிறேன் என்று நினைக்கிறேன். எடுக்கேஷன் என்ற ஒன்றிருக்கிறது. இங்கே ஒரு எடுக்கேஷன் மினிஸ்டர்; அங்கே ஒரு எடுக்கேஷன் மினிஸ்டர்; அவருக்குச் செயலாளர், இவருக்குச் செயலாளர்; அவருக்கு பி.ஏ., இவருக்கு பி.ஏ. என்றால் செலவாகிறது. அதேபோல் ஹெல்த் மினிஸ்டர் அங்கே ஒன்று, இங்கே ஒன்று. அதேபோல் கோ-ஆப்பரேஷன் மினிஸ்ட்டர் அங்கே ஒன்று, இங்கே ஒன்று. இந்த ஆண்டு மத்திய அரசினுடைய நிதிநிலைமை எவ்வளவு தெரியுமா? ரூ. 29,000 கோடி. அந்த ரூ. 29,000 கோடியை நிர்வாகத்திற்கே அவர்கள் செலவு செய்து கொண்டிருக்கிறார்கள். தேவையில்லாத நிர்வாகத்தை அங்கே இருக்கிற மத்திய அரசு வைத்துக் கொண்டிருக்கிறது. அந்த நிர்வாகத்திற்கு வேண்டிய செயலாளர்களும், செக்காட்டேரியட்டும் வைத்துக் கொண்டிருப்பதால்தான் அவர்களுக்கு

[1984 ஏப்ரல் 28

அதிகமாகச் செலவாகிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். நீங்கள் நாட்டைக் காப்பாற்ற வேண்டும். டிபென்ஸ், பாரின் அபெர்ஸ், கம்யூ னிக்கேஷன், ரெயில்வே, கரன்சி இவைகள் அவர்களுக்குப் போதும். இவ்வளவு மட்டும் இருந்தால் மத்திய அரசுக்கு வேலைப் பளுவும் குறைச்சல், செலவும் குறைச்சல். இந்தப் பணத்தை வைத்துக்கொண்டு வரியே போடாமல் இங்கே இருக்கிற ஏழை எளியவர்களை முன்னேற்ற முடியும். இன்றைக்கு நாளுக்கு நாள் மக்களுடைய ஏழ்மைதான் அதிகமாகப் போய்க்கொண்டே இருக்கிறது. நான் சொல்லக்கூடாது என்று நினைத்திருந்தாலும் என்னை எல்லாவற்றையும் சொல்ல வைத்துவிட்டார்கள். அதேபோல் பல்வேறு விவரங்களில் அவர்கள் நுழைந்து, செய்கிறபொழுது, பல சங்கடங்கள் வருகின்றன என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, இங்கே சொல்கின்றபொழுது ரூ. 20 கோடி என்று சொல்லி யிருக்கிறார்கள். மத்திய அரசு எங்களிடத்திலேயிருந்து எவ்வளவு எடுத்துக் கொண்டது? சர்க்கரை, டொபாக்கோ, டெக்ஸ்டைல், இந்த மூன்றிலிருந்து இன்றைக்கு மாநில சர்க்காருக்கு வரவேண்டியது எவ்வளவு என்றால் ரூ. 128 கோடி. ஆனால் கொடுப்பது ரூ. 32 கோடி. நஷ்டம் இந்த ஒரே ஆண்டில் மட்டும் ரூ. 96 கோடி, மத்திய அரசு மாநில அரசுக்குக் கொடுத்ததை எடுத்துக் கொண்ட வகையில். இந்த 3 ஐட்டம்களில் மட்டும் ரூ. 96 கோடி நஷ்டம் என்பதை நான் இங்கே சொல்லவில்லை, முதலமைச்சர் கையெழுத்தையும் போட்டு எழுதி அச்சடித்துக் கொடுத்திருக்கிறோம், இன்று வரைக்கும் அவர்கள் பதில் சொல்லவில்லை.

(முற்பகல் 11-50)

அரசியல் சட்டத்திலே எங்கெங்கு வரி போட்டு மாநிலங்களுக்கு கொடுக்க வேண்டுமென்று இருக்கிறதோ அவைகளுக்கு வரியே போடுவதில்லை.

Transfer of goods through Air, through Sea and through Railways.

என்று அப்படி வருபவைகளுக்கு வரி போட்டு, மாநில சர்க்கார்களுக்கு கொடுக்க வேண்டுமென்று சட்டம் இருக்கிறது. அவைகளுக்கு வரியே போடுவ தில்லை. அதிலே 30 கோடி ரூபாய்; ரெயில்வே பேசஞ்சர் கட்டணத்தில் 3 கோடி ரூபாய்; இதையெல்லாம் சேர்த்துப் பார்த்தால் இன்றைக்கு 225 கோடி ரூபாய் மாநில சர்க்காருக்கு வரவேண்டிய பணம் வரவில்லை. நீங்கள் இந்த வரி விதிப்பதிலே சரியான முறையைப் பின்பற்றாததினால்தான் இதில் இப்படிப்பட்ட சங்கடங்கள் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.



1984 ஏப்ரல் 28]

Thiru K. S. G. HAJA SHAREEF: I hope the Hon. Minister is aware that the Central Government is giving due shares from both Income Tax as well as Excise duty to the State Governments to the extent of 500 crores. It is not as if the Central Government is not giving money to the State Governments. If the Hon. Minister thinks that it is not sufficient, it is for the Government to put up their case and tell the Government of India that they want more money.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாற்றுத் தலைவர் அவர்களே, உங்களுக்கு இருக்கிற பொறுப்புகள் எவ்வளவு என்பதைக் கூறி அவை அனைத்தும் தேவையில்லாத பொறுப்புகள் என்றும் சொல்லிவிட்டேன். இன்கம்-டாக்சில் நீங்கள் எவ்வளவு வாங்குகிறீர்கள் என்பதற்கு என்னிடத் திலே கணக்கு இருக்கிறது. 1801 கோடி ரூபாயில் எல்லா மாநிலங்களுக்கும் மிகவும் குறைவாக கொடுத்திருக்கிறீர்கள். இன்கம்-டாக்ஸ் இருக்கட்டும்; கஸ்டம்ஸை எடுத்துக் கொள்வோம். கஸ்டம்சில் மத்திய அரசின் கணக்குப் படி இந்த ஆண்டு எவ்வளவு வந்திருக்கிறதென்றால் 6,649.70 கோடி ரூபாய். (குறுக்கீடு) இப்படி பள்ளிக்கூடத்து பிள்ளைகளைக் கேள்வி கேட்பதைப் போல கேட்பீர்கள் என்று எனக்குத் தெரியாது. உங்களை எல்லாம் ஆசிரியர் களாக கருதுகிறேன். ஆசிரியர்கள் எவ்வளவு கேட்டாலும் அதற்குப் பதில் சொல்கிற மாணவன் என்ற முறையிலே விவரங்களைக் கொண்டு வந்திருக் கிறேன். ஆகவே ஏழு ஆண்டுகளில் சென்னை மாநிலத்திலிருந்து ஏர்போர்ட், துறைமுகம், மற்ற இடங்களில் கஸ்டம்ஸில் வசூல் செய்தது 3,454 கோடி ரூபாய். அதை வசூல் செய்து உங்களுடைய கஜானாவிலே போட்டு இருக்கி றீர்கள். எங்களுக்குத் தரவில்லை. அதுமட்டுமல்ல, அவர்களுக்கு வேண்டிய தண்ணீர், போலீஸ், பாதுகாப்பு, போக்குவரத்து வசதிகள் போன்றவற்றை இந்த மாநில சர்க்கார் செய்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதையெல்லாம் நான் சொல்லவில்லை, ஆனால் நீங்கள்தான் என்னை சொல்ல வைத்து விட்டீர்கள். இப்படி பல்வேறு சங்கடங்களை உருவாக்கி இருக்கி றீர்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னும் சொல்ல வேண்டுமென்றால் நாம் ஏன் வரி போடுகிறோம்? மக்க ளுக்கு நன்மை செய்யவேண்டும் என்பதால்; விலைவாசி ஏறிக்கொண்டே போகிறது; அதற்கு என்ன காரணம்? நீங்கள் ஒரு நிறுவனத்தை ஏற்படுத்தி இருக்கிறீர்கள். Indian Institute of Public Finance, New Delhi என்று. அந்த நிறுவனம் ஒரு ரிப்போர்ட் கொடுத்திருக்கிறது. அதன்படி 60 ஆயிரம் கோடி ரூபாய் கறுப்புப் பணம் இந்த நாட்டிலே இருக்கிறது. இன்றைக்கு நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன், மத்திய அரசி

னுடைய பணம், வரவு-செலவுத் திட்டம் எவ்வளவு என்றால் 29 ஆயிரம் கோடி ரூபாய். இங்கே இருக்கிற எல்லா மாநிலங்களுக்கும் சேர்த்து இந்த வரவு-செலவு எவ்வளவு என்று தோராயமாக நாம் கணக்கு எடுத்து இருக்கிறோம். அதன்படி 68 ஆயிரம் கோடி ரூபாய் வருகிறது. ஆனால் இன்றைக்கு பாரலல் கவர்ன்மெண்ட் நடக்கிறது. மாநிலங்களைவிட அதிகமாக 60,000 கோடி ரூபாய் நாட்டிலே அவர்களிடத்திலே இருக்கிறது. ஆகவே, இதிலே இவ்வளவு சங்கடங்கள் இருக்கின்றன என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, வரி போடுவதைப் பற்றி இந்த நாட்டிலே முதலமைச்சராக இருந்த அண்ணா அவர்கள், முதலமைச்சராக இருந்தபோது சொல்லி இருக்கிறார்கள். முதலமைச்சராக இல்லாதபோது சொல்லியிருந்தால், வெளியே பேசியிருப்பார் என்று சொல்வார்கள். அவர் முதலமைச்சராக இருந்தபோது இந்த அவையிலே பேசி இருப்பதால், அது அவைக் குறிப்பேட்டிலும் இருக்கிறது. "வரி வசூலிப்பதை மாநில அரசிடமிருந்து மத்திய அரசு பிடுங்கிக் கொள்ளும் போக்கு ஒரே கட்சி எல்லா இடங்களிலும் ஆண்ட போது சரியானதாக இருக்கலாம். இப்போது பல கட்சிகள் பல மாநிலங்களில் இருக்கின்றன. ஆகையினால் இந்தக் கருத்து இப்போது சரியானதாக ஆகாது. (குறுக்கீடு) அண்ணா அவர்கள் சொன்னதைச் சொல்கிறேன். அது மட்டுமல்ல, அவர்கள் மறுபடியும் சொல்கிறார்.

வரி போடுகிறீர்களே என்று மத்திய அரசைப் பார்த்துச் சொல்கிறீர்களே, அதை உங்களுக்குத்தானே தருகிறார்கள். ஆகவே மத்திய அரசு போட்டால் என்ன, மாநில அரசு போட்டால் என்ன, என்று சொன்னார்களே, அதற்கு அண்ணா அவர்கள் சொல்கிறார்கள். "யார் வரி வசூலித்தால் என்ன? அது இந்தியாவுக்குள்தானே இருக்கிறது" என்று சிலர் விசித்திரமாகப் பேசுகிறார்கள். களவாடப்படும் பொருள் கூட இந்த நாட்டிலேதான் இருக்கிறது. திருநெல்வேலியிலே களவாடப்பட்டது, திருச்செந்தூரில் இருக்கிறது. ஆகவே, கவலைப்பட வேண்டாம். இந்தியாவிலேதான் இருக்கிறது என்று யாரும் கூறமாட்டார்கள்." (குறுக்கீடுகள்) வரியைப்பற்றி இன்னொன்றையும் சொல்கிறார்கள்.

"ஒருவனுக்கு உரிய பொருளை எடுத்தாலும்—வரி போடும் உரிமை நமக்கு அதை எடுக்கிறார்கள்"—ஒருவனுக்கு உரிய உரிமையை எடுத்துக் கொண்டாலும், இரண்டும் களவுதான். ஆகையினாலே, மத்திய அரசாங்கத்துடன் சண்டை போடுவதால் அர்த்தம் இல்லை. மாநில அரசும் மத்திய அரசும் ஒன்றுபட்டு பணியாற்ற வேண்டியது கடமைதான். ஒன்றுபட்டு விடக் கூடாது".





THIRU K. S. G. HAJA SHAREEF : Chairman Sir, these are all the matters to be discussed in Parliament and my esteemed Hon. Minister has got his representatives there, who can raise the matter. The Central Government is giving a lot of money in proportion to what they collect from Income-tax and Excise Duties. In addition to that, whenever there is calamity or whenever funds are required, the Central Government is giving interest-free loans and other aids. In spite of all these things, the Hon. Minister is making statements accusing the Central Government. It is a very unkind cut.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாற்றுத் தலைவர் அவர்களே, மத்திய அரசை இங்கே கண்டிப்பதாகச் சொன்னார்கள். நாங்கள் மத்திய அரசைக் கண்டிக்கவில்லை. நடைமுறையைச் சொன்னேன். மாநில அரசைப் பார்த்து, நீங்கள் ஏன் வரி போடுகிறீர்கள் என்று சொல்கிறபோது, கற்பக விருட்சத்தின் மீது இப்படி அடிக்கடி வாளை வீசிக் கொண்டிருந்தால் மரம் பட்டுப் போகுமே என்று எதிர்க்கட்சித் துணைத் தலைவர் சொல்கிற போது நான் பதில் சொல்ல வேண்டாமா?

திரு. என். எஸ். வி. சித்தன் : மாற்றுத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் ஏதோ மத்திய அரசு தொலை தூரத்தில் இருப்பது போலும் நமக்கும் அதற்கும் சம்பந்தம் இல்லாதது போலவும் வேறு ஒரு சர்க்கார் போலவும் வாதத்தை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். நம்முடைய தமிழ்நாட்டிலுள்ள மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளும் அங்கிருக்கிறார்கள். நமக்கும் சேர்த்துதான் அவர்கள் செலவழிக்கிறார்கள். நாடாளுமன்றத்தில் சொல்ல வேண்டியவற்றை, அங்கே சொல்லாமல் இங்கே சொல்வது சரியல்ல என்றுதான் எதிர்க் கட்சித் தலைவர் சொன்னார். நான் சொல்ல வந்தது, இன்று நம்மிடத்தில் இருக்கும் அதிகாரத்தை வைத்துக்கொண்டு, ஏற்கெனவே இருக்கும் வரி விகிதங்களின் அடிப்படையிலேயே அதிகமான வருமானத்தை பெற முடியுமே என்றுதான் நான் சொன்னேனே தவிர, வரி போடக் கூடாது என்று வாதிடவில்லை. ஏற்கெனவே போட்டுள்ள வரிகளை ஒழுங்காக வசூலித்தால், இந்த வரி தேவையில்லை என்பதுதான் என்னுடைய வாதம்.

(நண்பகல் 12-00)

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (டாக்டர் கே. சமரசம்) : நீங்கள் பேசும் போது கற்பக விருட்சம், காமதேனு என்பன போன்ற வார்த்தைகள் எல்லாம் வெளி வந்ததால்தான் மாண்புமிகு அமைச்சரவர்கள் இப்படி பதில் சொல்லிக்

கொண்டு வருகிறார்கள். மத்திய அரசு, மாநில அரசு உறவுகள் பற்றி அதிகாரங்கள் பற்றி எல்லாம் இங்கே இப்போது நாம் விவாதிக்க வேண்டாம், இந்தச் சட்ட முன்வடிவு பற்றி மட்டும் பேசி, முடித்துக் கொள்ளலாம்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** எழுப்பப்பட்ட பிரச்சினைகளுக்குப் பதில் சொல்ல வேண்டுமே.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (டாக்டர் கே. சமரசம்) :** மத்திய மாநில அரசு உறவுகள், அதிகாரங்களுக்குள் நாம் போக வேண்டாம். இப்போது இந்தச் சட்ட முன்வடிவைப் பற்றி மட்டும் பேசினால் போதும். மாண்புமிகு அமைச்சரவர்கள் பதில் உரையைத் தொடரலாம்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** மாற்றுத் தலைவர் அவர்களே, அவர்கள் சொன்னதற்குத்தான் நான் பதில் சொன்னேன். அவர்கள் எவ்வளவு சொன்னாலும் எனக்கு தெரிந்தவைகளை வைத்து நான் பதில் சொல்கிறேன், எல்லாம் எனக்குத் தெரியும் என்று சொல்லவில்லை; தெரிந்தவற்றைச் சொல்கிறேன்.

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், அங்கே பேசவேண்டியதை இங்கே பேசுகிறார்களே என்று சொன்னார்கள். நான் தெரிந்துதான் சொல்கிறேன். இங்கே பிரச்சினை எழுப்பப்பட்டதால் சொல்கிறேன். அண்ணா வழியில் செல்கிற அரசு என்பதால் அண்ணா சொன்னதை இங்கே நினைவுபடுத்துகிறேன்.

மத்திய அரசுடன் மோத வேண்டுமென்ற எண்ணமோ, கருத்தோ எனக்குக் கிடையாது. தேவையை, தேவையான இடத்தில் சொல்ல வேண்டியது, இந்த மாநிலத்தைக் காப்பது என்னுடைய கடமை என்று சொல்லியிருக்கிறார்கள். அதனால்தான் சொல்கிறேனே அல்லாமல் வேறு ஒன்றுமில்லை.

இங்கே சொல்லுகிறபோது இந்த வரியைப் பொறுத்தவரையில் வியாபாரிகளுக்கு வருகிற இலாபத்தில் ஒரு பகுதியைத்தான் வரியாகக் கொடுக்க வேண்டுமே தவிர வேறு அல்ல. அதற்காகத்தான் இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இந்த வரி விதிப்பினால் வியாபாரிகள் நுகர்வோர்மீது இந்தச் சுமையைப் போடக்கூடாது என்று சொல்லப்பட்டிருக்கிறது.

இங்கே சொல்லுகிறபோது பல கோடி இதனால் வரும் என்று சொன்னார்கள். அது சரியல்ல. பல கோடி என்று சொல்வது சரியாகாது. உங்களுக்குச் சொல்ல வேண்டுமென்றால், பர்சென்டேஜ் என்ன என்று சொல்லுகிறபோது 3 இலட்சத்திலிருந்து 5 இலட்சம் வரை உள்ளவர்களுக்கு 0.4 சதவீதம்





என்று இருந்ததை 0.5 சதவீதமாக மாற்றியிருக்கிறோம். அதாவது 100 ரூபாய்க்கு 0.4 ரூபாய் என்று இருந்தது இப்போது 0.5 ரூபாய். அதாவது 0.1 சதவீதம் ஏற்றியிருக்கிறோம்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** 0.4 சதவீதத்திற்கும் 0.5 சதவீதத்திற்கும் எவ்வளவு உயர்வு என்பதை அமைச்சர் அவர்கள் விளக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். நான் தெரிந்து வைத்துக்கொண்டு கேட்கிறேன் என்று நினைக்க வேண்டாம். மாணவன் ஆசிரியரிடம் கேட்கும் ஐயத்தைப் போன்று கேட்கிறேன். எனக்கு ஆசிரியர்கள் சொல்லிக் கொடுத்திருக்கிற கணக்குப்படி இது 20 சதவீதம் உயர்வு என்று நான் சொல்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** 0.4 சதவீதத்திலிருந்து 0.5 சதவீதம் உயர்த்தியிருக்கிறோம் என்றால் 0.1 சதவீதம் ஏறியிருக்கிறது. அதாவது ஒருவர் 100 ரூபாய்க்கு வியாபாரம் செய்தால் அவர் 4 பைசா கட்ட வேண்டும் முன்னால்; இப்போது 5 பைசா கட்ட வேண்டும். இது எப்படி மிகப் பெருமளவுக்கு வரி போட்டதாக அமையும்?

**திரு. என். எஸ். வி. சித்தன் :** நான் அமைச்சர் அவர்களுடைய நேரத்தை எடுத்துக் கொள்கிறேன் என்று எண்ணக் கூடாது. நான் கேட்டுக் கொள்வது; சரியான கணக்கைச் சொல்லுங்கள். புரிந்துகொள்ளுகின்ற வகையில் சொல்லுங்கள்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (டாக்டர் கே. சமரசம்) :** 0.4 சதவீதத்தை 0.5 சதவீதமாக உயர்த்தினால், 20 சதவீதம் உயர்த்தியிருக்கிறார்கள் என்று கருதுகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** 100 ரூபாய்க்கு இவ்வளவு வரி போட்டிருக்கிறோம். அதாவது 0.4 சதவீதத்திலிருந்து 0.5 சதவீதமாக உயர்த்தியிருக்கிறோம். அதாவது 0.1 சதவீதம் உயர்வு.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** இது எப்படி இருக்கிறது என்றால் அந்தக் கடைக்காரன் ரூபாய்க்கு ரூபாய் வட்டி வாங்குகிறான், நான் அப்படியல்ல, பைசாவுக்கு பைசா வாங்குகிறேன் என்பதைப்போலத்தான் இருக்கிறது.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** வியாபாரம் பண்ணுகிறவர்கள் எவ்வளவு வரி ஏறியிருக்கிறது என்று பார்க்க வேண்டும் 4 சதவீதம் இன்றைக்கு வரி போடுகிறோம். நாளைக்கு இதை 8 சதவீதமாக்கினால், அது 50 சதவீதமாகிறது என்று பார்க்கக்கூடாது. நான்கு சதவீதம் நாம் ஒரு பொருளுக்கு வரி போடுகிறோம். அது மல்டி பாய்ன்ட் ஆகிறது. ஆனால்

[திரு. எஸ். டி. சோமசுந்தரம்] [1984 ஏப்ரல் 28

சிங்கிள் பாய்ன்ட்டில் 4 சதவீதத்திலிருந்து 8 சதவீதமாகிறபோது, அது போடப்பட்ட வரியில் 50 சதவீதமேயொழிய, கொள்முதல் வியாபாரத்தில் 8 சதவீதம் என்று வைத்துக்கொள்ள வேண்டும். நீங்கள் வரியில் கணக்கு பண்ணுகிறீர்கள் என்று எடுத்துக் கொள்கிறேன். இப்படி போடப்படுகின்ற வரி, வியாபாரிகள் அவர்களுடைய டர்ன் ஓவரில் வியாபாரம் செய்யப்பட்டது எவ்வளவு இருக்கிறதோ, அதில்தான் போடப்பட்டிருக்கிறது.

அது மட்டுமல்ல, நான் நேற்றைக்குச் சொன்னதுபோல, ஒரு இலட்ச ரூபாய் கூடியதிலே, சிறு வியாபாரிகள் விடப்பட்டு விடுகிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே மாண்புமிகு திரு. கிருஷ்ணன் சொல்கிறபோது, ஸ்டீல் ரோலிங் மில் பற்றிச் சொன்னார்கள். ஸ்டீல் ரோலிங் மில்லுக்காக வாங்கப்படுகின்ற ரா மெட்டீரியல்சிற்கு ஒரு முறை அந்த ரா மெட்டீரியலுக்காக வரி கொடுத்திருந்தால் அதற்கு வரி இல்லை. ஆனால் ரா மெட்டீரியல் வேறு மாநிலத்திலே வாங்கப்படுகிறபோது, அதற்கு வரி கொடுத்திருந்தாலும், இங்கே வாங்கப்படும். ரா மெட்டீரியல் இங்கே வாங்கப்பட்டு, வரி கொடுக்கப்பட்டிருந்தால், அதற்கு வரி இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தச் சட்ட முன்வடிவினால் ஏழைகளுக்கு எந்தவிதமான கஷ்டமும் இல்லை என்றும் டர்ன் ஓவரில் தான் இந்த வரி போடப்பட்டிருக்கிறது என்றும் தெரிவித்துக்கொள்கிறேன். போட வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு நான் ஏன் வந்தேன் என்பது உங்களுக்குத் தெரியும். எனவே அதை ஏற்றுக்கொண்டு, இந்தச் சட்ட முன்வடிவை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** தலைவர் அவர்களே, நான் சொல்லிய நேரத்தில், 3 இலட்சத்திலிருந்து 5 இலட்சம் வரை வியாபாரம் செய்கிறவர்களுக்கு .4 லிருந்து .5 சதவீதம் உயர்த்தப்பட்டுள்ளது 12 சதவீதம் என்று சொன்னேன். ஆனால் அது 25 சதவீதம்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (டாக்டர் கே. சமரசம்) :** பேரவை முன் உள்ள கேள்வி:

"தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு கூடுதல் விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 32/1984) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.



1984 ஏப்ரல் 28]

பிரிவு 1.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (டாக்டர் கே. சமரசம்) :** பேரவை முன்னுள்ள கேள்வி :

"பிரிவு 1 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்."

THE HON. THIRU S. D. SOMASUNDARAM: Sir, I move that "'In Clause 1, *for* sub-clause (2), *substitute* the following sub-clause, namely :—

"(2) It shall be deemed to have come into force on the 1st day of April 1984".

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பட்டது.

பிரிவு 1, திருத்தப்பெற்றபடி, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்—

"தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு கூடுதல் விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 32/1984) திருத்தப் பெற்றபடி, நிறைவேற்றப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று சட்ட முன்வடிவு, திருத்தப்பெற்றபடி, நிறைவேற்றப்பெற்றது.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (டாக்டர் கே. சமரசம்) :** அடுத்து, இரண்டு சட்ட முன்வடிவுகளும் ஒன்றாக விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

**(ச) பயிரிடு குத்தகைதாரர்கள் (தனி விதித்துறைகள்) சட்ட முன்வடிவு, 1984.**

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :** தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு பயிரிடு குத்தகைதாரர்கள் (தனி விதித்துறைகள்) சட்ட முன்வடிவு * (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 21/1984) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்".

---

* 1984 ஆம் ஆண்டு மார்ச் 19-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளன.

**(உ) வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பயிரிடு குத்தகை தாரர்கள் (தற்காலிக நிவாரணம்) சட்ட முன்வடிவு, 1984.**

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்** : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பயிரிடு குத்தகைதாரர்கள் (தற்காலிக நிவாரணம்) சட்ட முன்வடிவு * (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு என் 22/1984) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்".

(பிற்பகல் 12-10)

**திரு. பி. எம். தங்கவேல்ராஜ்** : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு பயிரிடு குத்தகைதாரர்சள் சட்ட முன்வடிவின் மீது நான் சார்ந்திருக்கின்ற இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக சில யோசனைகளைச் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டுவந்த இந்தச் சட்டத்தை நான் எனது கட்சியின் சார்பாக ஆதரித்து வரவேற்கிறேன் என்பதை இந்தச் சமயத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எற்கெனவே ஒரு சட்டத்தைச் கொண்டு வந்தார்கள். ஆக்ட் 26 ஆப் 1983 என்று ஒரு சட்டம் கொண்டு வந்தார்கள். அது 15—1—1984 முதல் காலாவதியாகிவிட்டது. அந்தச் சட்டத்திலே, சரியான அளவிலே ஓட்டை உடைசல்கள் இல்லாமல், அல்லது லூப் ஹோல்கள் எல்லாம் இல்லாமல் நாம் கொண்டு வராததினால், இதிலே பல கஷ்டங்களை எல்லாம் விவசாயிகள் அனுபவித்தார்கள் என்பதை நான் கூறிக் கொள்ள விரும்புகிறேன். காரணம் நாம் கொண்டுவந்த ஆக்ட் 26/1983 என்ற அந்தச் சட்டத்திலே நாம் குத்தகைதாரர்கள், குத்தகை பாக்கி கொடுப்பதிலே யிருந்து தவறியவர்களை நிலத்தைவிட்டு மேலேற்றக் கூடாது என்று நாம் சொல்லியிருக்கிறோமேயொழிய, குத்தகையை வசூல் செய்வதற்கு, சிவில் கோர்ட் மூலமாகவோ, அல்லது வேறு கோர்ட்டுக்கும் போகக்கூடாது என்றோ சட்டத்திலே நாம் சொல்லவில்லை.

இந்தமாதிரி சொல்லாததினால்தான் குத்தகைதாரர்களை பழி வாங்கும் எண்ணத்தோடு, குத்தகை பாக்கிக்காக சிவில் கோர்ட்டுகளிலே, தாவா தொடுத்தோ, ஜப்தி செய்தோ அல்லது மகசூலை ரிசிவரைப் போட்டு

* 1984 ஆம் ஆண்டு மார்ச் 19-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளன.





நியமனம் செய்தோ, குத்தகையை வசூல் செய்தார்கள். ஆகவே இந்த நிலைதான் இந்த பில் நெம்பர் 21/84-லேயும் இருக்கிறது என்பதை நான் இந்தச் சமயத்திலே மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டு வந்த சட்டத் திலே குத்தகை பாக்கிக்காக நிலத்தை விட்டு மேலேற்றக்கூடாது என்றும் நான்கு தவணைகளிலே வசூல் செய்யவேண்டும் என்றும் இந்தச் சட்டத்திலே கொண்டு வந்திருக்கிறார்கள். ஆனால் இந்தச் சட்டத்திலே சிவில் கோர்ட்டிலே கேஸ் போட்டு, குத்தகை பாக்கியை வசூல் செய்யக்கூடாது என்ற ஒரு திருத்தம் இல்லை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மேலும் இந்தச் சட்டத்திலே குறிப்பிடப்பட்டிருக்கிறது என்னவென்றால்—சட்போஸ் குத்தகைதாரர்களுக்கு குத்தகை நிர்ணயம் செய்வது—உதாரணமாக சொல்ல வேண்டும் என்றால், ரொக்க குத்தகையாக இருந்தால், நான்கிலே ஒரு பகுதி சுலபமாக கட்டி விடுவார்கள். இதே தானிய குத்தகையாக இருந்தால், தானிய குத்தகையை விலை நிர்ணயம் செய்வது யார், எந்த நிலையில் நிர்ணயம் செய்வது, உதாரணமாக ஒரு விவசாயி. 400 ரூபாய் கட்டுவதற்குப் பதிலாக, 300 ரூபாய் கட்டி விட்டார்கள் என்றால், அவனுக்குக் கடைசி காலத் திலே கேஸ் முடிவிலே 400 ரூபாய்க்குப் பதிலாக, 300 ரூபாய் கட்டியிருக் கிறாய், ஆகவே நீ கட்டிய தொகை சரியான தொகையாக ஆகாது, ஆகவே சட்டப்படி உனக்கு பாதுகாப்பு இல்லை என்ற நிலைமை ஏற்பட்டால், அதற்கு நாம் பாதுகாப்புக் கொடுக்க இந்தச் சட்டத்திலே வழிவகை செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டு வந்த இந்தச் சட்டத் திலே, கீழே இருக்கக்கூடிய அந்த ரெவின்யூ கோர்ட்டினுடைய தீர்ப்பை எதிர்த்து யாரிடத்திலே அப்பீல் செய்வது என்பதைப்பற்றி இதிலே இல்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதிலே குறிப்பிட்டு இருக்கிறார்கள். டிஸ்ட்ரிக்ட் கோர்ட்டிலே, நீதிமன்றம், இச்சட்டத்தின் கீழ் தகுதி வாய்ந்த அதிகாரியால் எடுக்கப்பட்ட நடவடிக்கை எதனையும் பொறுத்தவரையில் அதன் ஒழுங்குமுறைமை, அல்லது சீர்மை, அல்லது பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பு, அல்லது அதன்கீழ் பிறப்பிக்கப்பட்ட ஆணையின் சட்டத் தன்மை, அல்லது பொருள் குறித்து மனநிறைவு கொள்வதற்காக அந்த அதிகாரியின் பதிவேட்டைப் பெற்று ஆய்வு செய்யலாம் என்று, கோர்ட் விரும்பினால்தான் இதுமாதிரி தீர்ப்பை தானே கேட்டு வாங்கி, அதிலே வந்த இந்த ஆர்டரை ரத்து செய்வதோ, அல்லது மாடிஃபை பண்ணுவதோ, அல்லது மறுபடியும் ரிமாண்டு செய்து மறு விசாரணைக்கு அனுப்புவதைப் பற்றித்தான் இருக்கிறதேயொழிய

அதிலே தோல்வியுற்றவர்கள் எந்தக் கோர்ட்டிலே அப்பில் செய்வது என்பதை பற்றி திட்டவட்டமாக இங்கே சொல்லவில்லை. இதிலே நாம் ஆம்பிகுட்டியாக ஒருசில சட்டங்களைக் கொண்டு வருவதால்தான் வெளியிலே இருக்கும் நீதிபதிகள் தங்களுக்கு இஷ்டமான அளவிலே தீர்ப்பைச் சொல்லக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. மேலும் தி.மு.க. ஆட்சிக் காலத்திலேயிருந்த, ஆக்ட் 21/71 என்ற ஒரு சட்டத்தைக் கொண்டுவந்து, பஞ்சத்தாலே, பட்டினியாலே, வெள்ளத்தாலே மழை பெய்யாமல் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஒரு வருட குத்தகை கட்டினால், மற்ற வருட குத்தகை எல்லாம் தள்ளுபடியாகும் என்ற ஒரு சட்டத்தை, ஆக்ட் 21/71 என்று சட்டத்திலே கொண்டு வந்திருக்கிறார்கள். அப்போது இருந்த நிலைமையைவிட, இன்று விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். பெரிதும் கஷ்டப்படுகிறார்கள் என்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். அமைச்சர் அவர்கள், தஞ்சாவூரைச் சேர்ந்தவர்கள், அங்கேயிருப்பவர்கள் எவ்வளவு கஷ்டப்படுவார்கள் என்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். மேலும் எங்கள் கரூர் குளித்தலையை எடுத்துக்கொண்டால், அமராவதி ஆற்றுப் பாசனத்திலே தண்ணீரே வருவதில்லை. பெரும் வறட்சியினாலே, 2, 3 வருடங்களாக எந்தவிதமான மகசூலும் இல்லாமல், அங்கே மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். மேலும் இப்போது பெய்த பேய் மழையினாலே, குளித்தலையிலே ஒருசில கிராமங்கள் எல்லாம் மிகவும் பாதிக்கப்பட்டிருக்கின்றன.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்தத் திருத்தத்திலே, திருச்சி ஜில்லாவை எடுத்துக் கொண்டால், ஒருசில ஊர்களைத்தான் சேர்த்துக் கொண்டிருக்கிறீர்கள். அத்தனையையும் சேர்க்கவில்லை என்பதை இந்த நேரத்திலே கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அரியலூர், ஜெயங்கொண்டான், பெரம்பலூர், குளித்தலை, மணப்பாறை போன்ற வட்டங்களில் உள்ள ஒருசில ஊர்கள்தாம் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இதுபோன்றே இன்னும் அதிகமாக பாதிக்கப்பட்ட பல இடங்களுக்கு இந்தச் சட்டத்திலே பாதுகாப்பு கொடுக்கவில்லை. அதில் குறிப்பாக குளித்தலை தாலுக்காவும், கரூர் தாலுக்காவும், முசிறி தாலுக்காவும் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அப்படி அவை பாதிக்கப்பட்டதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நேரிலேயே தெரிவித்திருக்கிறோம்.

மேலும் திருச்சி ஜில்லா டேவலப்மெண்ட் கவுன்சிலிலேகூட, எந்தெந்த கிராமங்கள் எந்தெந்த தாலுக்காக்களில் பாதிக்கப்பட்டன என்கிற விவரங்



களை சொல்லியிருக்கிறோம். ஆகவே, நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களை இந்தச் சமயத்திலே கேட்டுக் கொள்வதெல்லாம், திருச்சி ஜில்லாவிலே இந்த மூன்று தாலுக்காக்களுக்கும் முழுவதுமாக, எல்லா ஊர்களுக்கும் சேர்த்து, அதாவது குளித்தலை தாலுக்கா, கரூர் தாலுக்கா, முசிறி தாலுக்கா ஆகிய மூன்று தாலுக்காக்களுக்கும் முழுவதுமாக பாதுகாப்புத் தரவேண்டும். அந்த தாலுக்காக்களிலும் உள்ள எல்லா விவசாயிகளுக்கும் இந்தச் சட்டம் பொருந்தும் என்ற நிலையில் கொண்டு வரவேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள விரும்புவது, இந்தச் சட்டத்திலே முதல் தவணையை 1984 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 30 ஆம் தேதிக்குள் செலுத்திவிட வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இடையில் அவர்களுக்கு ஒரு மாத காலம்தான் இருக்கிறது.

அண்மையிலே பெய்த அடைமழை காரணமாக விவசாயமே பாதிக்கப்பட்டு, மகசூலே இல்லாமல் விவசாயிகள் வருமானம் எதுவும் இல்லாமல். பாதிக்கப்பட்டு, ஆடு, மாடுகளைக் கூட இழந்து நடுத் தெருவிலே நின்று கொண்டிருக்கிற இந்த நேரத்திலே 30—6—1984-க்குள் முதல் தவணையை கட்டி விட வேண்டும் என்று சொன்னால், எப்படிக் கட்டுவார்கள் ? எங்கிருந்து கட்டுவார்கள் என்பதை எண்ணிப் பார்த்து, இந்தத் துன்பத்திற்கு நிவாரணம் அளிக்க, முதல் தவணையை, இரண்டாம் தவணையாக இப்போது தாங்கள் வைத்திருக்கும், 1984 டிசம்பர் மாதம் 31 ஆம் தேதிக்குள் கட்டினால் போதும் என்ற திருத்தத்தைக் கொண்டுவர வேண்டும். மற்ற தவணையையும் அதற்கேற்றவாறு மாற்றிக் கொண்டுவர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள், சிறு விவசாயிகளுக்கு, குத்தகைதாரர்களுக்கு பாதுகாப்புத் தரவேண்டும் என்று சொல்வது மிகவும் முக்கியமான, அவசியமான ஒன்றுதான், அதை நாங்கள் வரவேற்கிறோம். ஆனால் அதே மாதிரி சிறு நிலச் சொந்தக்காரர்களாக • ஒரு விதவையோ அல்லது மைனர் சில்ரன் என்று சொல்லக்கூடிய குழந்தைகளோ இருந்தால் அவர்கள் ஒரு ஏக்கர் 2 ஏக்கர், 3 ஏக்கர்தான் வைத்திருப்பார்கள். ஆகவே அவர்களுக்கும் ஏதாவது பாதுகாப்பு கொடுக்க முன் வரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அவர்களும் நிலத் தீர்வையைச் செலுத்த வேண்டியிருக்கிறது. ஆகவே, அவர்களுக்கு நிலத் தீர்வையிலிருந்து விதிவிலக்களித்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள இந்தத் தீர்மானத்திலே, மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே எடுத்துச் சொல்லியிருப்பதுபோல் 21/1977-லே கொண்டு வந்த சட்டத்தின்படி,

30—6—1983-க்குள் உள்ள பாக்கித் தொகையை முழுவதுமாக தள்ளுபடி செய்து, ஒரு வருஷ குத்தகையைச் செலுத்தினால் போதும், பழைய குத்தகையை முழுவதுமாக வைப் ஆப் செய்ய வேண்டும் அல்லது தள்ளுபடி செய்ய வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ள ஆசைப் படுகிறேன். ஏனென்றால் கடந்த 4, 5 ஆண்டுகளாக, இன்னும் சொல்லப் போனால், ஏறக்குறைய 1977-லேயிருந்து விவசாயிகள் தொடர்ந்து மழையி னாலும், வெள்ளத்தாலும், வறட்சியாலும் பாதிக்கப்பட்டு, மகசூலே இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, 30—6—1983-க்குள் உள்ள அனைத்து குத்தகை பாக்கியையும் தள்ளுபடி செய்து, இந்தச் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வரவேண்டும் என்று கோரி, என்னுடைய உரையை முடிக்கிறேன். வணக்கம்.

**திரு. என். பழனிவேல்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இன்றையதினம் பயிரிடும் குத்தகைதாரர்கள் கொடுக்க வேண்டிய சில குத்தகை பாக்கிகளின் தொடர்பாக அவர்களுக்கு சலுகைகள் அளிக்க வேண்டிய முறையிலே வந்திருக்கக்கூடிய இந்தச் சட்ட முன்வடிவிலே சில விஷயங்களை நான் சொல்ல எண்ணுகிறேன்.

இந்தச் சட்டத்தினுடைய நோக்கம் தமிழகத்திலே உள்ள பயிரிடும் குத்தகை தாரர்கள் அவர்களுடைய குத்தகை பாக்கிக்காக, நிலத்திலிருந்தும் வெளி யேற்றப்படக்கூடாது என்ற வகையிலே கொண்டு வரப்பட்டுள்ளது. ஆனால் நான் சொல்லிக்கொள்ள விரும்புவது, இதிலேகூட என்ன சொல்லியிருக்கி றார்கள் என்று சொன்னால், தமிழகத்திலே இருக்கக்கூடிய 16 மாவட்டங் களிலும்—உங்களுக்குத் தெரியும் போன ஆண்டு 16 மாவட்டங்களிலும் வறட்சி யால் பாதிப்பு ஏற்பட்டது என்பது—இதிலே சொல்லப்பட்டிருப்பது, தென்னாற்காடு, தஞ்சை, புதுக்கோட்டை, திருச்சி, செங்கற்பட்டு ஆகிய 5 மாவட்டங்களில் உள்ள குத்தகை விவசாயிகளுக்கு மட்டும், முன் பாக்கிக்காக வெளியேற்றக்கூடாது என்பதுதான். இந்த முன் பாக்கியைக்கூட 4 தவணை களில் அவர்கள் செலுத்திவிட வேண்டும். அதிலே ஒரு தவணையைச் செலுத்தத் தவறினாலும் கூட, அவர்களை சட்டப்படி நில வெளியேற்றம் செய்யலாம் என்று இப்படி அந்தச் சட்டத்திலே சொல்லியிருக்கிறார்கள்.

(பிற்பகல் 12-20)

நான் இந்த அரசைப் பார்த்துக் கேட்டுக் கொள்வது, மாண்புமிகு உறுப பினர் திரு. தங்கவேல்ராஜ் குறிப்பிட்டதைப்போல், 4, 5 ஆண்டுகளாகத தொடர்ந்து வறட்சி, வெள்ளம் மாறி மாறி வந்து குத்தகை விவசாயிகள் பெரும் பாதிப்புக்குள்ளாகியிருக்கிறார்கள். அதனால் அவர்கள் எந்தவித மான முன்பாக்கிகளையும் செலுத்த முடியாத நிலைமைக்கு ஆளாகியிருக் கிறார்கள். குத்தகை விவசாயிகள் பாதுகாக்கப்பட வேண்டுமென்றால்



முழுவதுமாக—இந்த ஆண்டு ஏற்பட்ட வறட்சி வெள்ளம் மட்டுமல்ல, இதற்கு முன்னால் ஏற்பட்ட வெள்ளம், வறட்சி இவைகளை கணக்கிலே வைத்துக் கொண்டு—குத்தகை முழுவதையும் தள்ளுபடி செய்யவேண்டுமே தவிர, மேலும் மேலும் தள்ளிக்கொண்டே போவதிலே தவணை கொடுத்துக் கொண்டே போவதிலே எந்தவிதமான பிரயோசனமும் இல்லை. அவர்கள் கோர்ட்டிற்கு அலைந்து அலைந்து கடைசியிலே தோல்வி அடையக் கூடிய நிலைமை தான் ஏற்படும். உதாரணத்திற்கு எடுத்துக் கொண்டால் என்னுடைய தொகுதியிலே கோயில் தேவஸ்தானத்திற்கு சொந்த மான நிலம், மானேஜ்மெண்டார் கோர்ட்டிற்குச் செல்கிறார்கள். கோர்ட் டிலே குத்தகை செலுத்த வேண்டுமென்று தீர்ப்புச் சொல்லி விட்டார்கள். அதனால் அங்கே அந்த விவசாயிகள் எங்கே போவது என்று தெரியாமல் ஒரு அவல நிலையில் இருக்கிறார்கள். இது சம்பந்தமாக அறநிலையத் துறை அமைச்சர் திரு. ஆர். எம். வீரப்பன் அவர்களிடம் நான் ஒரு மெமோ ராண்டம் எழுதிக் கொடுத்தேன், விளையாத வருடத்திற்கு கொடுக்க வேண்டு மென்று கோர்ட்டிலே தீர்ப்பாகியிருக்கிறது, விளைந்த வருடத்திற்கு அல்ல, விளையாத வருடத்திற்குக் கொடுக்க வேண்டுமென்று சொல்லியிருப்பதால் எந்த விதத்திலாவது இதை நாம் மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று சொல்லி யிருக்கிறேன். இந்த நிலையிலே குத்தகை விவசாயிகளுக்கு 5 மாவட்டங் களுக்கு மட்டுமே நிவாரணம் அளிப்பது என்பது சரியல்ல. தமிழகத்திலே முழுவதும் அவர்களுக்கு நிவாரணம் அளிக்கக்கூடிய முறையிலே நிவாரண நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். தமிழ் மாநிலத்திலே ஏற்பட்ட வெள்ளம் வறட்சி இவைகளினால் பாதிக்கப்பட்ட குத்தகை சாகுபடிதாரர்களுக்கு சில தாற்காலிகமான நிவாரணம் என்ற முறையிலே தலைப்பிலே சொல்லியிருக் கிறார்கள்.

இந்த அவையிலே 19—1—1984 அன்று நம்முடைய வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் ஒரு அறிக்கையை தாக்கல் செய்தார்கள். வெள்ள நிவாரணம் சம்பந்தமான வெள்ளை அறிக்கையை வைத்தார்கள். தமிழகத் திலே 5,893 கிராமங்கள் பாதிக்கப்பட்டு இருப்பதாக அதிலே சொன்னார்கள். ஆனால் இன்று குத்தகை விவசாயிகளுக்கு சலுகைகள் தரப்படுவது 952 கிராமங்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். இது என்ன முறை என்றே தெரியவில்லை. எனக்கு விளங்கவில்லை. கிட்டத்தட்ட 6 ஆயிரம் கிராமங் கள் பாதிக்கப்பட்டுள்ளன என்று நீங்களே சொல்லி, கால்நடைகள் மனித உயிர்கள் அழிந்திருக்கின்றன என்று புள்ளி விவரத்தைச் சொல்லி, கிட்டத் தட்ட $2\frac{1}{2}$ லட்சம் ஏக்கர் நிலத்தில் பயிர் நாசமாகியிருக்கிறது என்றும் சொல்லி விட்டு இன்றைக்கு குத்தகை விவசாயிகளுக்கு நிவாரணம் என்று வருகிற போது 952 கிராமங்களுக்குத்தான் என்றால் சாகுபடி செய்யக்கூடியவர்களுக்கு

பட்டுந்தான் என்று சொல்வது சரியல்ல. அதுவும் என்ன சொல்கிறார்கள், நிவாரணம் என்று சொல்லவில்லை, ஏதோ நிறுத்தி வைப்பதாக இந்த பில் கொண்டு வரப்படுவதாகத்தான் சொல்கிறார்கள். ரத்து செய்ய வேண்மென்று இதிலே சொல்லப்படவில்லை.

இது வெறும் கண் துடைப்புதான் எதையோ நினைத்து கண் துடைப்பு செய்கிறதே தவிர வேறு அல்ல. மதுரை மாவட்டத்திலே பழனி, ஒட்டன் சத்திரம் ஆகிய இரண்டு தொகுதிகளிலேயும் இந்த வருடம் மழையாலும், புயலாலும், வறட்சியாலும் பாதிக்கப்பட்டிருக்கிறது. அங்கே உள்ளவர்கள் புஞ்சை வேளாண்மை செய்திருந்தார்கள். ஆனால் மழையால் வெள்ளத்தால் பருத்தி போயிற்று, ஐ. ஆர். 50 நெல் போயிற்று, மொச்சை போன்ற பல பயிர்கள் போயிற்று. ஒட்டுச் சோளம் கோடிக் கணக்கான ரூபாய் மதிப்புள்ளது போய்விட்டன. இவைகளையெல்லாம் மாவட்ட வளர்ச்சி மன்றத்திலே எடுத்துச் சொன்னோம். கலெக்டர் அம்மா என்ன சொன்னார்கள் என்றால் நான் பூராவையும் அறிக்கையிலே எழுதி அனுப்பி விட்டேன். சர்க்காரிடமிருந்து கொடுக்கவில்லையென்றால் நான் என்ன செய்வது? என்று கேட்கிறார்கள். பழனி தாலுகாவிற்கு இதிலே ஏதுவுமே இல்லை. அங்கே யாருமே பாதிக்கப்படவில்லையா? குத்தகை விவசாயியே அங்கே இல்லையா? அவர்கள் வெளியேறினால் பரவாயில்லையா? மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதையெல்லாம் கணக்கில் எடுத்துக் கொண்டு மாநிலம் பூராவுக்கும் குத்தகை விவசாயிகளுக்கு அதை ரத்து செய்யவேண்டும். வெறும் தள்ளிப் போடுவது என்பது நீட்டிப்பு நீட்டிப்பு என்று சொல்லி சொல்லி காலப்போக்கிலே அவர்கள் கடனாளிகளாகி, நிம்மதியாக வாழ முடியாமல், கடைசியில் தற்கொலை செய்து கொள்ளக்கூடிய நிலைமைக்கு தள்ளாமல் விடமாட்டார்கள் என்பது போல் இருக்கிறது. மாநிலத்திலே வெள்ளம், புயல், வறட்சி இதனால் பாதிக்கப்பட்ட அத்தனை விவசாயிகளுக்கும்—ஒரு சில மாவட்டங்களுக்கும் மட்டும் என்று இல்லாது—கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

**திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள குத்தகைதாரர்கள் பாக்கி வசூலை ஒத்தி வைக்கின்ற இந்தச் சட்ட முன்வடிவினை வரவேற்று என்னுடைய கருத்துக்களை சொல்ல விழைகிறேன். புயலாலும் வெள்ளத்தினாலும் பாதிக்கப்பட்டு இருக்கிற விவசாயிகள் ஒட்டுமொத்தமாக அந்தக் குத்தகை பாக்கிகளைச் செலுத்த முடியாது என்பதைக் கணக்கில் கொண்டு அரசு அவர்கள் தரப்பில் இருந்து கோரிக்கை வரவில்லை என்றாலும், சிலர் விவசாயிகள் பெயரைச் சொல்லி போராட்டம்



நடத்துகிறார்கள் என்றாலும், இந்த மாநிலத்தில் தனிப்பட்டவர்களுடைய கடனை ரத்து செய்யுங்கள் என்று சொல்கிற துணிவு இல்லாத சூழ்நிலையில் இப்படிக் குத்தகை விவசாயிகளுடைய கடனை ரத்து செய்யவேண்டும் அல்லது குத்தகை பாக்கியை ஒத்திவைக்கவேண்டும் என்று சொல்கிற தைரியம் இல்லாத சூழ்நிலையில் இந்த அரசே முன்வந்து மாநிலம் முழுவதும் இருக்கின்ற குத்தகைதாரர்களுக்கு இந்தக் குத்தகை பாக்கியைக் கட்டுவதற்கு 4 தவணைகள் வழங்கியிருப்பதை நான் இங்கே பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிவேல் அவர்கள் கூட மாநிலம் முழுவதும் உள்ள குத்தகை விவசாயிகளுக்கு இந்தச் சலுகை கொடுக்கவில்லை என்பதைப் போல ஒரு தவறான கருத்தை குறிப்பிட்டார்கள். சட்ட முன்வடிவின்படி மாநிலத்திலே புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகள் என்று முழுவதுமாக 4 தவணைகள் என்றும், அதே போல் சட்டமுன்வடிவு எண் 21-ல் மிகத் தெளிவாக இதே அடிப்படையில்—மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறாக புரிந்து கொண்டார்கள் என்று நினைக்கிறேன்—அங்கே செட்யூலில் போடப்பட்டு இருக்கிற 5 மாவட்டங்களைத் தவிர மீதி மாவட்டங்களில் இருப்பவர்களுக்கு எல்லாம் இது பொருந்தும் என்று தான் விதி 14 கூறுகிறது. ஆகவே மாநிலம் பூராவும் இருக்கின்ற குத்தகை விவசாயிகள் 4 தவணைகள் இந்தக் கடனையும் கட்ட முடியும் என்கின்ற ஒரு சூழ்நிலையை இந்தச் சட்டமுன்வடிவில் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் உருவாக்கி இருக்கிறார்கள். இதை வரவேற்கின்ற அதே நேரத்தில் இப்படிப்பட்ட உரிமைகள் சலுகைகள் வேண்டும் என்று சொல்கிறபோது அவர்கள் குத்தகைதாரர்கள் என்று தங்களை பதிந்து இருக்க வேண்டும் என்று நீதிமன்றங்கள் சொல்கிற ஒரு சூழ்நிலை இருக்கிறது. 1969 ஆம் ஆண்டில் தமிழ்நாடு ரெக்கார்டு ஆப் டெனன்சி ஆக்ட் நாம் நிறைவேற்றினாலும் கூட இன்னும் பல குத்தகைதாரர்கள் பதியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆகவே இவைகளை களைவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பொறுப்பு ஏற்றதற்கு பிறகு 1981 ஆம் ஆண்டு தான் இந்தச் சட்டம் இந்த நோக்கத்திற்காக பயன்படவேண்டும் என்று அதை நிறைவேற்றுகின்ற பொறுப்பையும் மக்களுக்கே கொடுத்து ஆங்காங்கே குத்தகைதாரர்கள் பதிவதற்கு என்று குழுக்கள் அமைக்கப்பட்டு இருக்கிறது என்றாலும் கூட அந்தக் குழுக்களுக்கு கொடுக்கப்பட்டு இருக்கின்ற அதிகாரம் அவ்வளவு போதுமானதாக இல்லை. இதை அனைத்துத் தரப்பில் இருப்பவர்கள் எண்ணிப் பார்க்கவேண்டும். ஒரு சில பிரிவினருக்கு சலுகை அளிக்க வேண்டும் என்று குத்தகைதாரர்கள் சட்டம் பல்வேறு கால கட்டங்களில் கொண்டுவரப்பட்டாலும் கூட உண்மையான குத்தகைதாரர்களை பதிவதற்கு என்று நாம் நடவ

டிக்கை எடுத்து ஆகவேண்டும். குத்தகைதாரர்கள் நிலத்தை உழுகிறார்கள். குத்தகைதாரர்களைப் பதிவதற்காகத்தான் இப்படிப்பட்ட சட்டங்கள் போடப் பட்டு இருக்கின்றன என்றாலும் கூட இன்று நடைமுறையில் உண்மையிலேயே குத்தகை போடாதவர்கள் தங்களை குத்தகைதாரர்களாக பதிந்துகொள்கின்ற ஒரு காட்சியையும் நாம் பல்வேறு இடங்களில் காண்கிறோம். இப்படி இந்த குத்தகைச் சட்டத்தின் அடிப்படையிலே பல்வேறு சிவில் வழக்குகள் உருவாகு கின்ற சூழ்நிலை இருக்கிறது. பல்வேறு இடங்களில் கடன் வாங்கியவர்கள் கடனை பெறவேண்டும் என்பதற்காக டிகிரியை பெறுகிறார்கள். அந்த கோர்ட் டிகிரியை வைத்துக்கொண்டு ஜப்தி செய்து வசூலித்து விடுவார்கள் என்பதற் காக ஒரு பொய்யான குத்தகை உருவாக்கப்படுகிறது. 2, 3 சகோதரர்கள் இருக்கின்ற குடும்பங்களில் அங்கே பாக பிரிவினை வேண்டும் என்று ஒரு சகோதரர் கோருகின்றபோது இன்னொரு சகோதரர் அவருடைய உரிமையை உயர்நீதிமன்றத்தில் அடிக்கவேண்டும் என்பதற்காக ஒரு குத்தகை எழுதி வைத்துவிட்டு போய்விடுகிறார். அவர்களும் குத்தகைதாரர் என்ற சூழ்நிலை இருக்கிறது. அதேநேரத்தில் ஒரு குறிப்பிட்ட நிலத்தை ஒருவர் இன்னொரு வருக்கு விற்பதற்கு கிரய ஒப்பந்தம் சேல் அக்ரிமெண்டு போட்டு இருந்தால் அந்த சேல் அக்ரிமெண்டு படி அந்த ஒப்பந்தப்படி நான் எழுதித் தர மாட்டேன் என்று மறுக்கின்றபோது அந்த கிரயம் பெறுவதற்கு ஒப்பந்தம் செய்ததிலே அந்த உரிமையை உயர்நீதி மன்றத்திலே போய் நிலை நாட்ட வேண்டும் என்று அங்கே போகின்ற அதே நேரத்திலே நிலத்தினுடைய சொந் தக்காரர் ஒரு குத்தகையை உருவாக்கி விடுகிறார்கள். இப்படி பல்வேறு வழக்குகள்.

இப்படிக் குத்தகைச் சட்டத்தை உண்மையான நல்ல நோக்கத்திற்காக நாம் நிறைவேற்றினாலும் கூட அதை பல்வேறு வகையிலும் தவறான அடிப்படையிலே பல்வேறு சிவில் வழக்குகளை உருவாக்குவதன் காரணமாக இந்த குத்தகைச் சட்டம் இருக்கிறது என்பதைப் பார்க்கும் போது மக்கள் குழுவுக்கு கூடுதலான அதிகாரம் கொடுக்கவேண்டும் என்ற ஒரு சூழ்நிலை. பல்வேறு வகையான பிரச்சினைகளில் இன்று தனித் தாசில்தார்கள் நியமித்து இருந்தாலும் கூட அவர்கள் தீர்ப்பதிலே பல்வேறு வகையான இக்கட்டுகள் இருக்கின்றன. இதே குத்தகை உரிமை பதிவுக்கு என்று வழக்கு இருக்கின்ற அதே நேரத்திலே சிவில் நீதிமன்றத்திலே வழக்கு இருக்கின்ற சூழ்நிலை. இப்படி பல்வேறு விஷயங்களில் தனித் தாசில்தார்கள் இந்த குத்த கைத்தாரர்கள் யார் என்பதை நிர்ணயிப்பதிலும் அதற்கான வழக்குகளை செய்வதிலும் பல்வேறு சிக்கல்கள் ஏற்படுகிறது. 10 ஏக்கர் நிலத்திலே ஒரு ஏக்கர் தான் ஒருவருக்கு உரிமை இருக்கிறது என்றால் அதை பிரிக்கப்படு





வதை நிறுத்தவேண்டும் என்றே ஒரு தனிப்பட்டவருக்கு குத்தகை உருவாக்குகின்ற ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆகவே தான் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களை வேண்டி விரும்பி கேட்டுக்கொள்வது எல்லாம் 1969 ஆம் ஆண்டு தமிழ்நாடு ரெக்கர்ட்ஸ் ஆப் டெனன்சி ஆக்ட்-ன் படி அன்று அதிகாரிகளே தயாரித்ததைப் போல இன்று 10, 11 ஆண்டுகளுக்கு பின்னால் நாம் இருக்கிறோம் இப்போதும் மாநிலம் முழுவதும் அதிகாரிகள் முன்வந்து டிராப்ட் ரெக்கார்டு ஆப் டெனன்சி ஆக்ட் தயாரிப்பதற்கு நடவ டிக்கைகளை மேற்கொண்டால்தான் இது பல்வேறு வகையிலும் சிறப்புள்ளதாக இருக்கும். அப்படி சொல்லுகின்ற அதே நேரத்தில் இன்று குத்தகைத்தார்ர் கள் பதிவதிலே நீதிமன்றத்தில் ஒரு வழக்கும், தாசில்தார் இடத்திலே ஒரு வழக்கும் இருக்கின்ற ஒரு கொடுமையான சூழ்நிலை இருக்கிறது. ஏதாவது ஓரிடத்தில் இதை வைத்தாக வேண்டும். குத்தகைதாரர் என்று சொல்லக்கூடிய உரிமை தனித் தாசில்தாருக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. என்றாலும், யார் அந்த நிலத்திலே உழுகிறார்கள் என்றால் (who is in possession) என்று சொல்வது சிவில் நீதிமன்றத்தின் உரிமையாக இருக்கிறது; வழக்குகளை ஏற்றுக்கொண்டு, இன்ஜங்க்ஷன் கொடுக்கும் சூழ்நிலை இருக்கிறது.

(பிற்பகல் 12-30)

இன்னொரு தகவலையும் நான் சொல்ல விரும்புகிறேன். குத்தகை பற்றிய சில சிக்கலான விஷயங்களைக் குறித்துத் தனித் தாசில்தார் முடிவு செய்வார். பிரிக்கப்படாத சொத்துக்களை, குத்தகைக்கு என்று விடுவதற்கு உரிமை இருக்கிறதா இல்லையா; குத்தகைக்கு எழுதி வைப்பதற்கு நிலச் சொந்தக் காரர்களுக்கு உரிமை இருக்கிறதா இல்லையா, அது வாரிசு சட்டப்படி வருகிறதா இல்லையா என்பது போன்ற இவைகளைப்பற்றித் தாசில்தார் நிர்ணயிக்க வேண்டியிருக்கிறது.

நாற்பது ரூபாய்க்குக் குறைந்த வாடகை வீட்டிலே இருப்பவர்கள் அதைக் காலி செய்ய வேண்டுமா அல்லது வாடகை கொடுக்க வேண்டுமா என்று முடிவு செய்கின்ற அதிகாரம் சிவில் நீதிமன்றத்திற்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது; ஆனால் நான்கு இலட்சம் ரூபாய் மதிப்புள்ள சொத்துக்கு, குத்தகைதாரரா இல்லையா என்று நிர்ணயிக்கின்ற அதிகாரத்தைத் தனித் தாசில்தாருக்குக் கொடுத்திருக்கின்ற அந்த நிலைமைகளை மாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஒட்டுமொத்த சமுதாய நலனுக்காகத் தனிப்பட்ட மனிதனின் உரிமை பாதிக்கப்படுவதில் தவறேதுமில்லை. ஆனால் ஒரு மனிதனுடைய உரிமை யைப் பிடுங்கி இன்னொரு மனிதனிடத்திலே கொடுப்பது என்பது முறையாக இருக்காது.

[திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்] [1984 ஏப்ரல் 28

ஒருவரிடம் ஐந்து ஏக்கரா நிலம் இருந்து அதைக் குத்தகைதாரரிடம் கொடுத்து விட்டார் என்றால் அவர் நிலம் இல்லாதவராகத் தான் இருக்கிறார். ஆனால் சட்டத்திலே, அவருக்கு லேண்ட் லார்ட் என்று பெயர் இருக்கிறது. அவர்கள் பிறகு தங்களுடைய சொந்த விவசாயத்திற்கு வேண்டுமென்று விரும்பினால்கூட அதைப் பெற முடியாத நிலை இருக்கிறது. இதற்கு ஒரே காரணம், அவர் அந்த நிலத்தை குத்தகைக்கு விட்டதுதான் அவருக்கு வேறு வேலை கிடையாது. குத்தகைக்குக் கொடுத்த ஒரே காரணத்திற்காக அந்தக் குத்தகைதாரர்தான் அந்த நிலத்தை அனுபவித்துக்கொண்டிருக்கிறார். சொந்த விவசாயம் செய்ய வேண்டுமென்று கருதினாலும் அந்த நிலத்தைத் திரும்பப் பெறுவதற்குச் சட்டத்தில் வழியில்லை. எனவே, சமுதாய நீதிக்காகச் செய்கிறோம் என்று ஒருபுறத்திலே சொன்னாலும், மறுபக்கத்திலே சமுதாய அநீதி ஏற்பட்டுவிடக் கூடாது என்பதை அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்கிறேன், ஒருவர் இராணுவத்தில் பணியாற்றச் செல்கிறார்; அவர் கையில் ஐந்து ஏக்கர் நிலம் இருக்கிறது; அந்த நிலத்தைக் குத்தகைக்கு விட்டுவிட்டு இராணுவத்தில் சென்று பணியாற்றுகிறார். பத்தாண்டுக் காலம் கழித்து, இராணுவத்திலிருந்து திரும்பி வந்து விவசாயம் செய்ய வேண்டுமென்று விரும்பினால் அவர் விவசாயம் செய்ய முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது.

அதைப்போலவே அரசு ஊழியர் ஒருவர் இருக்கிறார் என்று வைத்துக் கொள்வோம், அவருக்கு ஐந்து ஏக்கர் நிலம் சொந்தமாக இருக்கிறது. அந்த நிலத்தைக் குத்தகைக்கு விட்டு விட்டு அரசுப் பணியில் இருக்கிறார். ஒரு நாள் திடீரென்று, துறை எடுத்த நடவடிக்கையின் காரணமாக அவர் வேலையிழந்துவிடுகிறார். பிறகு தன்னுடைய கிராமத்திற்குச் சென்று, தன்னுடைய சொந்த நிலத்தில் வேலை செய்ய வேண்டுமென்று நினைத்தால்கூட, அந்த நிலத்தைத் திரும்பப்பெற முடியாத சூழ்நிலை இருக்கிறது.

இப்படிப்பட்ட நிலச்சீர்திருத்தச் சட்டம், குத்தகைதாரர்கள் சட்டம் போன்ற பல்வேறு சட்டங்களைச் சமுதாய நீதி வழங்க வேண்டுமென்பதற்காகத்தான் கொண்டு வந்திருக்கிறோம். ஆனால், ஒருவர் அரசு ஊழியராக ஆகி, ஏதாவது துறையில் ஏற்பட்ட தவறின் காரணமாக அவர் பணியிலிருந்து நீக்கப்பட்ட பிறகு, அவர் தன்னுடைய சொந்த நிலத்தில் விவசாயம் செய்கிறேன் என்று நினைத்தால், குத்தகைக்கு விட்ட ஒரே ஒரு காரணத்திற்காக அதைத் திரும்பப் பெற முடியாத சூழ்நிலை இருக்கிறது. சட்டத்தின் நோக்கமே, உழுபவனுக்கு—உழைப்பவனுக்கு நிலம் இருக்க வேண்டுமென்ற



1984 ஏப்ரல் 28] [திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்]

நோக்கத்திற்காகத்தான். வேலையில்லாமல் வந்த அந்த அரசு ஊழியர் உழத் தயார் என்று சொல்கிறார்; உழைக்கத் தயார் என்று சொல்கிறார்; தனக்கு வேலை இல்லை என்பதால் தன்னுடைய சொந்த நிலத்தில் உழைக்கிறேன் என்று சொல்கிறார் என்றால் சட்டத்தில், விதியில் அதற்கு இடம் இருக்கிறதா என்று கேட்டால் நிச்சயமாக இல்லாத சூழ்நிலைதான் இருக்கிறது.

அது போன்றே, ஒரு ஐந்து ஏக்கர் நிலத்தின் சொந்தக்காரர் இறந்து விட்ட சூழ்நிலையில், அவருடைய விதவை மனைவி விவசாயம் செய்ய முடியாத சூழ்நிலையில், ஐந்து வயதுக் குழந்தையை வைத்துக்கொண்டு, வாழ்க்கையை ஓட்ட வேண்டுமென்பதற்காகக் குத்தகைக்கு விடுகின்ற சூழ்நிலை இருக்கிறது. இருபதாண்டுகள் சென்ற பிறகு அந்த மைனர் மேஜராகி தான் விவசாயம் செய்யத் தயார், என்னுடைய தகப்பன் விட்டுச் சென்ற நிலத்தில் பாடுபட்டு உழைக்கத் தயார்; எனக்கு ஐந்து ஏக்கர் நிலம் இருக்கிறது, அதில் விவசாயம் செய்ய வேண்டுமென்று நினைத்தால் அதைத் திரும்பப் பெற முடியாத சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சரவர்களிடத்தில் மிகப் பணிவன்போடு நான் வைக்கின்ற வேண்டுகோள் எல்லாம், சொந்த நிலம் இருந்து, சொந்தமாக விவசாயம் செய்வதற்கான வாய்ப்புகள் இருக்கின்ற நேரத்தில் அதற்குச் சட்டத்தில் வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வாடகைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தில்கூட அப்படிப்பட்ட ஒரு விதி இருக்கிறது. மாற்றுக் கருத்துக்களைச் சொல்லக்கூடிய மாண்புமிகு உறுப்பினர்கள் வேண்டுமானால் சொல்லக்கூடும், வேண்டுமென்றே, சொந்த விவசாயம் செய்ய வேண்டுமென்று நிலத்தைக் கேட்கலாம்; நிலத்தைப் பெற்றுக்கொண்ட பிறகு, இன்னொருவருக்குக் கொடுக்கின்ற நிலைமை இருக்கலாம் என்று. ஆனால், வாடகைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தில் தெளிவாக விதிகள் இருக்கின்றன. ஒருவர் ஒரு வீட்டில் வாடகைக்கு இருந்தால், அந்த வீட்டின் சொந்தக்காரர் வாடகைக்குக் குடியிருப்பவரிடம் தன்னுடைய உபயோகத்திற்கு அந்த வீடு வேண்டுமென்று ஆண்டாண்டு காலத்திற்கும் கேட்க முடியாது என்ற சூழ்நிலை இல்லை. சொந்த உபயோகத்திற்கு personal occupation என்று வீட்டின் சொந்தக்காரர் கேட்கலாம். அப்படி பெற்றுக்கொள்வதற்குச் சட்டத்திலே விதிவிலக்கு இருக்கிறது. ஆனால், ஒரு ஆண்டுக்குள், எந்த நோக்கத்திற்காக நீதிமன்றத்திற்குச் சென்று, தன்னுடைய சொந்த உபயோகத்திற்கு என்று பெற்றுக்கொண்டாரோ, அப்படித் தன்னுடைய சொந்த உபயோகத்திற்கு என்று அவர் அந்த வீட்டை வைத்துக்கொள்ளவில்லை என்றால், அதை இன்னொருவருக்கு வாடகைக்கு விட்டார் என்றால்—முன்பு நீதிமன்றத்திற்குச் சென்றபொழுது யாருக்கு விட்டிருந்தாரோ அவர்களுக்கே திரும்பவும் விட வேண்டுமென்று அந்தச் சட்டத்திலே, சேஃப்டி வால் கூட இருக்கின்ற ஒரு நியதி இருக்கிறது.

ஆகவே இலட்சக்கணக்கான குத்தகைதாரர்களுக்கு நாம் நன்மைகள் செய்கிறோம், சமுதாய நீதி வழங்குவதற்காக இப்படிப்பட்ட சட்டங்களைக் கொண்டு வருகிறோம் என்று சொல்கிறபோது, அதன்காரணமாக ஆயிரக்கணக்கானவர்களைத் தெருவிலே நிலமற்றவர்களாக விடுகின்ற ஒரு அபாயம் இருக்கின்றது, என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அருள்கூர்ந்து எண்ணிப்பார்க்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். பல்வேறு மாநிலங்களில் இப்படி சொந்த உபயோகத்திற்காக அல்லது சொந்த விவசாயத்திற்காகத் தயாராக இருப்பவர்களுக்குக் கொடுக்கப்படுகின்ற சூழ்நிலை இருக்கின்றது. எனவே ஒரு குறைந்தபட்ச அளவு வைத்து நிலத்தின் சொந்தக்காரர்கள் தாங்கள் சொந்தமாக விவசாயம் செய்கிறோம் என்று சொல்கிறபோது அதற்குச் சட்டத்திலே ஒரு விதிவிலக்கு அளித்து அவர்கள் உழுவதற்கான ஒரு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கின்ற வகையில், வருகின்ற காலங்களில் சட்டங்களில் திருத்தம் செய்யவேண்டும் என்ற கோரிக்கைகளை முன்வைத்து வழங்கிய வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

**திரு. பொ. உத்திராபதி:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் குத்தகை விவசாயிகளுக்காக குத்தகை பாதுகாப்புத் திருத்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அந்தத் திருத்தச் சட்டத்தில் சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். தொடர்ச்சியாக நமது மாநிலத்தில் குறிப்பாகத் தஞ்சை மாவட்டத்தில் 1977 ஆம் ஆண்டுக்கு முன்னதாக வறட்சி இருந்தது. அதற்கடுத்து வெள்ளம் வந்தது. சென்ற ஆண்டு கடுமையான வறட்சி ஏற்பட்டது. இந்த ஆண்டு கடுமையான மழை வெள்ளம் ஏற்பட்டது. இப்படி தொடர்ச்சியாக விவசாயிகள் அங்கே பாதிக்கப்பட்டே வந்திருக்கிறார்கள். 1983 ஆம் ஆண்டு டிசம்பரில் ஆரம்பித்த மழை மார்ச் மாதம் வரைக்கும் பெய்தது. அதன் காரணமாக கொஞ்சநஞ்சம் இருந்த அறுவடையைக் கூட அறுக்க முடியாத அளவுக்கு அத்தனையும் அழிந்துவிட்டது. இதைப்பற்றி நமது வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் காரண நோக்க விளக்கத்திலே மிகத் தெளிவாகக் கொடுத்திருக்கிறார்கள்.

1984 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 15-ஆம் தேதி வரை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்குப் பாதுகாப்பு அளிக்கப்பட்டிருக்கின்றது. ஆனால் இப்படித் தொடர்ச்சியாக விவசாயிகள் பாதிக்கப்பட்டு வருகிறார்கள். அவர்களால் குத்தகையைக் கூடக் கட்ட முடியாத நிலைமை இருக்கின்றது. கூட்டுறவுக் கடன்களையும் அவர்கள் பெற்றிருக்கிறார்கள். தனியாரிடத்திலே கடனைப் பெற்றிருக்கிறார்கள். இப்படி கடனை ஒரு பக்கம் கொடுக்கவேண்டியிருக்கின்றது. குத்தகை நிலத்தினைப் பொறுத்த வரையில் குத்தகை வேறு





அளிக்கவேண்டியிருக்கின்றது. இதன் காரணத்தால் அவர்கள் செய்யக்கூடிய செலவுக்கும், வருமானத்திற்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லாமல் இன்றைக்கு சொந்த நிலத்தை வைத்திருப்பவர்கள் எப்படிக் கடனால் நிலத்தையே இழக்கக்கூடிய அபாயத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்களோ, அதைவிட இன்னும் கொடுமையாகக் குத்தகை விவசாயிகள் வாழ்ந்துகொண்டு வருகிறார்கள் என்பதை எல்லாம் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் நன்கு தெரிந்துதான், இரண்டு காரண நோக்க விளக்கத்திலும் தெளிவாகக் கொடுத்திருக்கிறார்கள்.

ஆனால் இந்த அளவுக்குக் கொடுத்த பிறகும் கூட என்ன சொல்கிறார்கள் என்றால் 30—6—1984 ஒரு தவணை கட்டவேண்டும் என்று சொல்கிறார்கள். 30—6—1984 என்பது அடுத்து வருகின்ற ஜூன் மாதத்திலே வருகின்றது. ஜூன் மாதத்திலே தண்ணீர் வருவதாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அப்படித் தண்ணீர் வந்து விவசாயத்தைத் துவக்கக் கூடிய காலத்தில் எப்படி முதல் தவணையைக் கட்ட முடியும். எனவே தயவு செய்து சிந்தித்துப் பார்க்கவேண்டும். அடுத்து 31—12—1984 என்பதைப் பொறுத்தவரையிலே இயற்கை எல்லாம் சரியாக ஒத்துழைப்பு கொடுத்து அதன் பலன் காலத்தோடு கிடைத்தால் குறுவைக்கு விவசாயிகள் தயாராவார்கள் அப்படித்தான் எதிர்பார்க்க வேண்டியிருக்கின்றது. அடுத்து 30—6—1985 அதற்கடுத்து 31—12—1985 என்று ஆகமொத்தம் 4 தவணைகளில் கட்ட வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. ஆனால், அவ்வாறு 4 தவணைகளில் அந்தக் குத்தகையைக் கொண்டுவந்து தொடர்ச்சியாக் கட்டுவதற்கு விவசாயிகளால் முடியாது.

முதலிலே திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியிலே ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அதாவது ஒரு தவணையைக் கட்டினால் முந்தைய பாக்கிகளைத் தள்ளுபடி செய்யவேண்டும் என்று இருந்தது. இதை எல்லாம் பார்த்துத்தான் வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் 1977 புயலுக்குப் பிறகு ஒரு தவணையைக் கட்டினால் 4 தவணைகள் தள்ளுபடி செய்யப்படும் என்று சொன்னார்கள், அப்படி நான்கு ஆண்டுகளில் இந்த ஒரு ஆண்டில் கட்ட வேண்டிய குத்தகை பாக்கியைக் கட்டி இருந்தாலும் அதைச் சேர்த்துக்கொள்ள முடியும் என்று கொண்டுவந்தார்கள். அது விவசாயிகளுக்கு நன்மை அளித்தது. நான் இல்லை என்று சொல்லவில்லை. நாங்கள் வரவேற்றோம். ஆனால் போன ஆண்டு வறட்சி, இந்த ஆண்டு வெள்ளம் என்று ஏற்பட்டிருக்கின்ற சூழ்நிலையில் இப்படித் தவணையாகக் கொண்டு வருவதைவிட முழுமையாகத் தள்ளுபடி செய்யவேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12-40)

வெள்ளத்தைப் பற்றிக்கூடச் சொல்லியிருக்கிறார்கள். 1985 ஜனவரி வரைக்கும் ஒத்திவைப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். இந்த ஆண்டு முழுமையாகச் சேதம் என்று அறிவித்துவிட்டு இதையும் 1985 ஜனவரி வரையிலே விவசாயிகளைப் பாதுகாக்கிறோம் என்று சட்டம் கொண்டு வருவது நியாயம் அல்ல. எனவே, இதை முழுமையாக தள்ளுவதற்கு வருவாய்த் துறை அமைச்சர் நடவடிக்கை எடுக்கவேண்டும். நாங்கள் சொல்கிறபொழுது, நமது ஆளும் கட்சி சட்டமன்ற உறுப்பினர் சொன்னார்; காங்கிரஸ் கட்சி உறுப்பினர் சொன்னார். நான் சொல்கிறேன், விதவையாக இருக்கிறார், சொத்து இல்லையாது. 3, 4 ஏக்கர் வைத்திருக்கிறார். அவர் வாரத்திலே ஒப்படைத்து விட்டார்கள். அப்பேர்ப்பட்டவர்களுக்கு உண்மையிலே விவசாயிகள் கிராமத்திலே உள்ளவர்கள் அழைத்து வைத்து பேசி அவர்களை எந்த வகையிலும் பாதிக்காமல் இருக்க அவர்களுக்குக் குறைந்த பட்சம் குத்தகை இப்பொழுதும் கொடுத்து வருகிறார்கள். இது கிராமப்புறத்தில் நடந்து வருகிறது. இது வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுக்கே தெரியும்.

ஆனால் நான் கேட்டுக்கொள்வது, இப்படிப் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஒவ்வொரு ஆண்டும் தவணை முறை என்றும், 1985-வது ஆண்டு ஜனவரி 31-ஆம் தேதி என்று சொல்வது சரியல்ல, இதைப் பூராவும் தள்ளுபடி செய்யவேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன். அதேபோல் குத்தகை விவசாயிகளுக்குப் பதிவு சம்பந்தமாக நமது ஆளுங் கட்சி உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள், உண்மைதான். இன்னமும் தஞ்சை மாவட்டத்தில் பல்லாயிரக்கணக்கான, உண்மையான குத்தகை விவசாயிகளுக்குப் பதிவு செய்யப்படவில்லை. நான் குறிப்பாக ஒன்று சொல்லவிரும்புகிறேன். பாபநாசம் தாலுக்கா ரங்கசாமி மூப்பனார் என்பவரால் ஒரு ஆசிரியைக்கு பினாமியாக நிலம் எழுதி வைக்கப்பட்டிருந்தது. இந்த நிலத்தில் ரங்கராஜன் என்பவர் 10 ஆண்டுக்காலமாக குத்தகை விவசாயம் செய்து வருகிறார். அவர் குத்தகைப் பதிவுக்கு மனு தாக்கல் போட்டு விட்டார். ஆனால் அவருக்குப் பதிவு கிடைக்கவில்லை. ஆனால் அதற்குப் பிறகு என்ன நடந்து கொண்டிருக்கிறது. பெரிய அதிகாரிகள், போலிசார் உண்மையான குத்தகை விவசாயிக்குப் பாதுகாப்பு அளிக்காமல், அந்த பினாமியாக இருப்பவர்கள் அந்த நிலத்தை அத்துமீறி அறுவடை செய்து எடுத்துக் கொண்டார்கள். அதற்கு வேண்டியது நடந்து கொண்டிருக்கிறது. இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேட்டுக் கொள்வது, சம்பந்தப்பட்ட உண்மை என்ன என்பதை அதிகாரிகளை விசாரணை செய்து இந்த ரங்காராஜனுக்கு, உண்மையான குத்தகைதாரருக்குப் பதிவு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





இப்படிப் பல்லாயிரக்கணக்கான விவசாயிகளுக்கு இன்னும் பதிவு கிடைக்காமல் இருக்கிறது. அவர்களுக்குப் பதிவு செய்ய நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

வருவாய்த் துறை அமைச்சரை நான் கேட்டுக் கொள்வது அரசாங்கத்தினுடைய கொள்கையில் ஒரு குழப்பம் இருக்கிறது. நீண்ட காலமாக அந்தக் குத்தகை பதிவு அளிக்க முடியாது. கடன் கட்ட முடியாமல் இருக்கும்போது விவசாயிகளுக்கு நிரந்தரத் தீர்வு காண வேண்டும். எப்படி காண முடியும்?

திராவிட முன்னேற்றக் கழகத்தினர் ஒரு சட்டம் கொண்டு வந்தார்கள். 12 ஆண்டுக்காலம் கட்டிவிட்டால் இந்தக் குத்தகை நிலம் சொந்தமாக்கிக் கொடுக்கப்படும் என்று சட்டம் கொண்டு வந்தார்கள். இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டால் அது தொடர்பாக உண்மையான குத்தகை விவசாயிகளுக்கு நிலத்தைச் சொந்தமாக்க வேண்டுமென்று தமிழகத்தில் விவசாயிகளும், விவசாயச் சங்கங்களும் தொடர்ச்சியாகப் போராடி வருகிறார்கள். ஆகவே நான் கேட்டுக்கொள்வது நிலத்தைச் சொந்தமாக்குவதில், ஆளும் கட்சியில் ஏதோ ஒரு குழப்பம் இருப்பதாக நாங்கள் சந்தேகிக்கிற சூழ்நிலை இருக்கிறது. வருவாய்த் துறை அமைச்சர் இந்த நிலையில் உறுதியாக இருப்பதாக நான் நம்புகிறேன்.

அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள், கோயில் நிலத்தில் விவசாயம் செய்யக் கூடியவர்கள், மடத்திற்குச் சொந்தமாக இருக்கிற நிலத்தை விவசாயம் செய்கிற விவசாயிகளுக்கு விதிவிலக்கு என்று ஒரு அபாய சங்கு ஊதி இருக்கிறார்கள். நான் வருவாய்த் துறை அமைச்சரைக் கேட்டுக்கொள்வதெல்லாம், கோயில் நிலமாக இருக்கட்டும், அது மடத்து நிலமாக இருக்கட்டும், கிராமப்புறத்தில் இதையே நம்பி வாழக்கூடிய குத்தகைதாரர்களுக்கு உதவி செய்யட்டும். நீங்கள் அரசாங்கத்தினுடைய கொள்கையைத் தெளிவாக சொல்லுங்கள். காலங்காலமாக குத்தகையைத் தள்ளி வைப்பதும், ஒத்தி வைப்பதும் இதனால் விவசாயிகளுக்கு ஒரு பதட்ட நிலை ஏற்பட்டுக்கொண்டு வருவதும் முற்றுப் புள்ளி வைக்கப்பட வேண்டுமென்று சொன்னால் இறுதியாக இங்கே வருவாய்த் துறை அமைச்சர் இருக்கிறபொழுது, இந்த இலட்சக்கணக்கான விவசாயிகளுக்கு குறிப்பாக தஞ்சை மாவட்ட விவசாயிகளுக்கு நிலத்தைச் சொந்தமாகக்கூடிய அளவுக்கு துண்டு துக்கடாவாக இருக்கிற சட்டங்களை ஒருமைப்படுத்தி, அந்த விவசாயிகளுக்கு நிலத்தைச் சொந்தமாக்கும் சட்டத்தை விரைவில் கொண்டு வந்து, அந்த விவசாயிகளுக்குப் பாதுகாப்பளிக்க வேண்டும். படிப்படியாக தள்ளி வைக்கவேண்டாம். நிரந்தரமாக இந்த ஆண்டு இந்தக் குத்தகை முழுமையையும் தள்ளிக் கொடுக்கவேண்டு

மென்று இந்த விவசாயிகளுக்கு நிரந்தர வாக்குறுதியைக் கொடுப்பதற்கு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் அந்த அவையிலே முன் வரவேண்டு மென்று கேட்டுக்கொண்டு அமர்கிறேன்.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்தச் சட்ட முன்வடிவின்மீது ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். ஒருவருக்கு சொந்தமாக நிலம் இருக்கிறதென்றால் அந்த நிலச் சொந்தக்காரருக்கு நல்ல பாதுகாப்பு இருக்கவேண்டும். அதிலே விவசாயம் செய்யக்கூடிய விவசாயிகளுக்கும் பாதுகாப்பு இருக்க வேண்டும். இன்றைக்கு நம்முடைய அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்தச் சட்டமுன்வடிவில் குத்தகை கொடுக்காவிட்டால் அவர்களை நிலத்திலிருந்தது வெளியேற்ற முடியாது என்று ஒரு இடத்திலும், வெளியேற்றலாம் என்று இன்னொரு இடத்திலும் இருக்கிறது. இந்தமாதிரியான நிலை இருப்பதால் யாருமே துணைக்கு இல்லாத விதவைப் பெண்கள், ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர் வைத்திருக்கிறவர்கள் கஞ்சிக்கு வழியில்லாமல் பாதிக்கப்படக்கூடிய நிலைமை இருக்கிறது. சில ஏரியாக்களில் குத்தகை விவசாயிகளுக்கு, வெள்ளத்தினால் இயற்கை சீற்றத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நாம் முழுமையாக தள்ளுபடி செய்யலாம். இந்த இந்த ஜில்லாவிற்கு என்று இல்லாமல் மாநிலம் முழுமைக்கும் ஒன்றாக நாம் செய்ய வேண்டும்.

என்னிடத்தில் இதுபோன்ற ஒரு கோரிக்கை வந்தது. வத்தலகுண்டிலே ஒரு தியாகியின் மனைவி இருக்கிறார். அந்தத் தியாகி எந்தக் காலத்திலோ இறந்துவிட்டார்கள். அவருக்கு ஒரு ஏக்கர் 10 சென்ட் நிலம் இருக்கிறது. அந்த நிலத்தை ஒருவருக்கு குத்தகைக்கு கொடுத்துவிட்டார்கள். குத்தகை எடுத்து விவசாயம் செய்கிறவர் பல ஆண்டுக் காலமாக அவருக்கு குத்தகை கொடுக்கவில்லை. இதனால் அந்தப் பெண்மணி வறுமையால் வாடுகிறார்கள். எங்களின் ஒப்பற்றத் தலைவர் காமராசர் அவர்கள்கூட என்னிடத்தில், 'இதுபற்றி என்னவென்று பாருங்கள்' என்று சொன்னார்கள். பிறகு அந்த நிலத்தை விற்பனை செய்தார்கள். ஆனால் விற்பனை செய்த பிறகுகூட அந்த குத்தகை எடுத்திருந்தவர் நிலத்தை விட்டு வெளியேறவில்லை. அவர்கள் நிலத்தை விட்டு வெளியேற மறுக்கிறார்கள். ஆகவே நிலம் வைத்திருப்பவர்களுக்கு எந்தவிதமான பாதுகாப்பும் இல்லாமல் இன்றைக்கு இருந்து கொண்டிருக்கிறது.



ஆகவே நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களை கேட்டுக் கொள்வதெல்லாம், இரண்டு பேர்களுக்கும் பாதுகாப்பு இருக்க வேண்டும். அல்லது அந்த நிலத்தை எல்லாம் எடுத்துக்கொள்ளுங்கள். மாநிலம் முழுமைக்கும் ஒரு சட்டத்தைக் கொண்டு வாருங்கள். அந்த நிலமே யாருக்கும் வேண்டாம். நிலம் அரசாங்கத்தினுடைய சொத்து என்று வைத்து விடுவோம். யார் உழைக்கிறார்களோ அவர்களுக்கு தக்க ஊதியம் கொடுக்கலாம். இப்படி ஒரு சட்டத்தைக் கொண்டுவந்தால் நாங்கள் வரவேற்போம்; அதை பாராட்டுவோம். அதை விட்டுவிட்டு குத்தகைதாரர்களை வெளியேற்றக் கூடாது என்ற அளவிற்கு கொண்டுவருவது சரியல்ல. குத்தகையும் கொடுக்கவேண்டாம், அவர்களை வெளியேற்றவும் கூடாது என்கிற நிலைமை நீடிக்குமேயானால், நிலத்தை வைத்திருப்பவர்கள் செத்து மடிவதைத் தவிர வேறு வழியில்லை. பெரிய நிலச்சுவான்தார்கள் என்றால் அவர்களுக்கு எதை வேண்டுமானாலும் செய்யலாம். ஆனால் சிறு சிறு அளவில் நிலம் வைத்திருப்பவர்கள், ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர் நிலம் வைத்திருப்பவர்கள், விதவைகள், கைக்குழந்தைகளை வைத்திருப்பவர்கள், ஏழைகளுக்கு எல்லாம் பாதுகாப்பு அளிக்கிற வகையில் இருக்கவேண்டும். அவர்களுக்கு ஒழுங்காக குத்தகை செலுத்த வேண்டும், குத்தகை எடுத்திருப்பவர்கள். இயற்கை சீற்றத்தால் பாதிக்கப்படாமல் இருந்தால் கட்டாயம் ஒழுங்காக குத்தகைச் செலுத்த வேண்டும் என்கிற நிலைமையில் ஒரு ஏற்பாட்டை இந்த அரசாங்கம் செய்ய வேண்டும். அதைவிட்டுவிட்டு உழுகிறவனுக்கே நிலம் சொந்தம் என்று நாம் பேசிக்கொண்டு போனால் சரியாக இருக்காது. இன்றைக்கு மாண்புமிகு உத்திராபதி போன்றவர்கள் தனக்கென்று சொத்து இல்லாமல் இருக்கிறார்களா? அவர்கள் தனக்கென்று வீடில்லாமல் இருக்கிறார்களா? ஆகவே 'எல்லாவற்றையும் பொதுவுடைமை ஆக்குங்கள்.

**திரு. இ. கா. நல்லப்பன் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, உழுபவனுக்கு நிலம் சொந்தம் என்பது வேறு; ஒரு ஏக்கர், அரை ஏக்கர் வைத்திருப்பது என்பது வேறு. ஆகவே அதை கொச்சைப்படுத்தி தயவுசெய்து மாண்புமிகு உறுப்பினர் பேச வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** மாற்றுத் தலைவர் அவர்களே, நான் ஒன்றும் கொச்சைப்படுத்தவில்லை. நான் பேசுவது ஒன்று, செய்வது ஒன்று என்று என்றைக்கும் இருந்ததில்லை. எதை நினைக்கிறேனோ, எதைச் சொல்கிறேனோ அதைச் செய்யக்கூடியவள் நான். விதவை பெண்கள், கைக்குழந்தை வைத்திருக்கிறவர்கள் போன்றவர்களுக்கு 10 ஆண்டு காலத்திற்கு மேலாக குத்தகை எடுத்தவர்கள் குத்தகை செலுத்தாமல்

இருக்கிறார்கள். எங்கள் கிராமத்திலே வாரம் என்று சொல்கிறோம். யாரும் அதைத் தடுப்பதில்லை. நான் 'ஏ', என்னால் விவசாயம் செய்ய முடியவில்லை; 'பி' என்பவருக்கு வாரத்திற்கு விட்டால், அவர்கள் விவசாயம் செய்து விளைச்சலில் பாதியை ஒழுங்காக கொடுத்து விடுவார்கள். ஆகவே நிலச் சொந்தக்காரர்களுக்கு எந்தவிதமான சலுகையும் இல்லாமல், 10 ஆண்டுகள், 15 ஆண்டுகளாக குத்தகையைக் கொடுக்காமல் இருந்தால் அது நல்லதல்ல; நியாயமும் அல்ல. அந்த விதவைப் பெண்களுக்குப் பாதுகாப்பு கொடுக்க வேண்டும் என்பதற்காகத்தான் நான் சொல்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் நல்லப்பன் நான் ஏதோ கொச்சைப்படுத்திவிட்டேன் என்று சொன்னார்கள். நான் உள்ளபடியே வேதனைப்படுகிறேன். நான் கொச்சைப்படுத்துகிற பாரம்பர்யத்தில் வரவில்லை. நாங்கள் ஒழுங்காகச் சொல்லக்கூடியவர்கள். எங்களைப் பார்த்து கொச்சைப்படுத்துகிறார்கள் என்று சொல்வது கண்டிக்கத் தக்கது என்பதைச் சொல்லிக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) (திரு. தி. கா. நல்லப்பன் எழுந்தார்)

(பிற்பகல் 12-50)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (டாக்டர் கே. சமரசம்):** திரு. நல்லப்பன் அவர்கள் உட்கார வேண்டும். திருமதி பொன்னம்மாள் அவர்கள் தங்கள் கருத்துக்களைச் சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள். ஏற்கனவே உங்கள் கட்சிக்கொள்கையை நீங்கள் எடுத்துச் சொல்லிவிட்டீர்கள். ஆகவே, இப்போது அதிலே எந்தச் சர்ச்சையும் வேண்டாம்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** மாண்புமிகு உறுப்பினர் நல்லப்பன் அவர்களுக்கு நான் சொல்லிக்கொள்வேன். நீங்கள் ஏற்கனவே இந்த அவைமுன் வைத்துள்ள கருத்துதான் அரசின் கருத்தும் என்பதை நீங்கள் அறிவீர்கள். ஆகையால் நீங்கள் கோபப்பட வேண்டியதில்லை, உங்கள் கருத்துத்தான் அரசின் கருத்து. ஆகவே, தயவுசெய்து அமைதியாக இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்:** மாற்றுத் தலைவர் அவர்களே, நான் யாரையும் வேறுவிதமாகச் சொல்லவில்லை. உழுபவர்களுக்கு நிலம் கொடுங்கள் என்று சொன்னார்கள். உழுபவர்களுக்கு நிலம் கொடுக்கவேண்டும் என்று சொன்னால் முழுமையாக அரசே எல்லா நிலங்களையும் எடுத்துக்கொண்டு, அரசு சொத்தாக அறிவிக்கவேண்டும். யார் நன்றாக வேலை செய்து உழைக்கின்றார்களோ அவர்களுக்கு உழைப்புக்குத் தகுந்த கூலி கொடுக்க வேண்டும் என்று நான் சொல்லிக்கொள்கிறேன். இதுதான் என் கருத்து.



இதை நான் வலியுறுத்திச் சொல்கிற நேரத்தில், உங்களுக்குச் சொத்து இல்லையா? என்று கேட்டேன். எல்லோரும் கொஞ்சம் சொத்து வைத்து இருக்கிறோம். ஆகவே, குத்தகைக்கு விட்டவர்களுக்கும், குத்தகை எடுத்த விவசாயிகளுக்கும், இருவருக்கும் பாதுகாப்பு அளிக்கவேண்டும் என்பது என்னுடைய கருத்து. (குறுக்கீடுகள்)

**திரு. க. பாரமலை:** தலைவர் அவர்களே, திருமதி பொன்னம்மாள் அவர்கள் பேசும்போது நிலம் இல்லையா என்று கேட்டதற்கு கோபித்துக் கொண்டார்கள். 50 ஏக்கர் நிலம் வைத்து இருக்கின்ற கம்யூனிஸ்ட்டுகளை நான் குறிப்பிடமுடியும். (திரு. உத்திராபதி எழுந்தார்)

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (டாக்டர் கே. சமரசம்):** உறுப்பினர்கள் இப்படி ஒருவருக்கொருவர் பேசிக்கொள்வது முறையல்ல.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** மாண்புமிகு உறுப்பினர் உத்திராபதி அவர்களை உரிமையோடு நான் கேட்டுக்கொள்கிறேன். நீங்கள் தயவுசெய்து அவர்களோடு சண்டை போட வேண்டாம். நீங்கள் முதலிலேயே உங்கள் கருத்துக்களைச் சொல்லி இருக்கிறீர்கள். நீங்கள் சொல்லிய கருத்துக் களைத்தான் அரசும் கொண்டிருக்கிறது. ஆகவே, நான் பதில் சொல்லிக் கொள்கிறேன்.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்:** தலைவர் அவர்களே, நான் யாரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. நிலத்தை குத்தகைக்கு விட்டவர்களுக்கு பாதுகாப்பு கொடுக்கவேண்டும். குத்தகை விவசாயிக்கும் பாதுகாப்பு கொடுக்க வேண்டும். அவர்களை வெளியேற்றக்கூடாது என்பதில் நானும் ஒன்று படுகிறேன். எவ்வளவு ஆண்டுகள் ஆனாலும் அவர்கள் குத்தகையைக் தொடுத்துக்கொண்டு இருந்தால் இருக்கலாம். சில நேரங்களில் குறைத்துக்கூட வாங்கிக்கொள்ளலாம். அவர்களுக்கு விவசாயம் செய்ய முடியாத நிலையில் தள்ளிக்கொடுக்கலாம். ஆனால், நான் முன்பு ஏரியா கமிட்டியில் இருந்தபோது பார்த்து இருக்கிறேன். கோயில் நிலத்தை குத்தகைக்கு எடுத்துக்கொண்டு, அதிலே நன்றாக உழுது பயிரிட்டு விட்டு, குத்தகையைத் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று மனு கொடுப்பார்கள். அதையெல்லாம் பார்த்த காரணத்தால் தான் யார் குத்தகையை ஒழுங்காகக் கொடுக்கிறார்களோ அந்த விவசாயியை வெளியேற்றக்கூடாது. அவர்களுக்கு நிச்சயமாகப் பாதுகாப்புக் கொடுக்க வேண்டும். அதைப்போலவே, குத்தகைக்கு விட்டவர்களுக்கும் பாதுகாப்பு கொடுக்கவேண்டும். ஏனென்றால் விதவைகள் நிலத்தை வைத்துக்கொண்டு உழுவதற்கு முடியாமல் இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு பாதுகாப்பு கொடுக்கவேண்டும்.

[திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்] [1984, ஏப்ரல் 28

இன்றைக்கு இங்கே மாண்புமிகு உறுப்பினர் பாலசுப்பிரமணியம் அவர்கள் பேசும்போது அவர்கள் கோர்ட்டுக்குப் போகவேண்டியிருக்கிறது, இதே நேரத்தில் தனித்தாசில்தாரிடத்திலும் போகவேண்டியிருக்கிறது; இப்படி இரண்டு பக்கத்திலும் அவர்களுக்கு சங்கடம் இருக்கிறது என்று சொன்னார்கள். இதைத் தவிர்க்கவேண்டும். அந்த மக்கள் அவதிப்படக் கூடாது.

எனக்குத் தெரிந்த ஒரு விவரத்தைச் சொல்கிறேன். கொட்டிப்பட்டி சங்கரன் ஐயர் என்று ஒருவர் இருந்தார். அவர் தியாகத்திலே வளர்ந்தவர். தியாகத்திலே திளைத்தவர். அவர் வெள்ளைக்காரன் ஆட்சி காலத்தில் வெள்ளைக்காரர்களின் கொடுமைகளுக்குப் பலியாகி இறந்தார். அவருடைய மனைவி கஞ்சிக்குக்கூட வழியில்லாமல் இன்றைக்குத் திண்டாடுகிறார்கள். அவர்களுக்கு இருந்த 1 ஏக்கரா 10 சென்ட் நிலத்தைக் குத்தகைக்கு விட்டு விட்டு, இன்றைக்கு குத்தகையும் வாங்க முடியவில்லை. அதை அவர்கள் இன்னொருவருக்கு விற்றுவிட்ட பின்னாலும் அந்த நிலத்தை வாங்க முடிய வில்லை. ஆகவே, இருவருக்கும் பாதுகாப்பு கொடுக்கும் வகையில் சட்டங்கள் கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு, என் உரையை முடிக்கிறேன்.

திரு. எஸ். என். இராமசாமி: மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் பயிரிடும் குத்தகைதாரர்கள் கொடுக்க வேண்டிய குத்தகைப் பாக்கிகள், கடன் நிவாரணச் சட்டத்தை மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கிறார்கள். அதன்மீது காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக ஒருசில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

நெல்லை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் திருச்செந்தூர், ஸ்ரீவைகுண்டம், சாத்தூர் ஆகிய மூன்று தாலுகாக்கள் வெள்ளத்தினால் பலத்த சேதம் அடைந்த பகுதிகளாகும். அந்தத் தாலுகாக்களில் உள்ள விவசாயம் அனைத்துமே வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு, அங்குள்ள விவசாயிகள் மிகுந்த நஷ்டமடைந்திருக்கிறார்கள். 1982-83 ஆம் ஆண்டில் அந்த மூன்று தாலுகாக்களிலும் உள்ள விவசாயிகள் நஞ்சையிலே வாழை பயிர் செய்து, ஒரு வாழைக்கு சுமார் 17 ரூபாய் செலவு செய்து, அந்த வாழைத்தார் ஒன்று 25 ரூபாய் வரைக்கும் கேட்கப்பட்டும் கொடுக்காத நிலையில் இயற்கையின் கொடுமையால், புயல் காற்று வீசி, அத்தனையும் அழிந்துபோய் விட்ட நிலையில் ஒரு விவசாயிக்குக்கூட பலன் கிடைக்கவில்லை. பல இலட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுள்ளது.



1984 ஏப்ரல் 28] [திரு. எஸ். என். இராமசாமி]

அதன் பிறகு 1983-84 ஆம் ஆண்டில் செய்யப்பட்ட விவசாயம் புயல், மழை ஏற்பட்டதன் காரணமாக அறுவடை செய்ய முடியாத நிலை ஏற்பட்டு அந்த விவசாயப் பெருமக்கள் மிகவும் பாதிப்புக்குள்ளானார்கள். அறுவடை நேரத்தில் கதிரை அறுக்க முடியாத நிலை ஏற்பட்டு, கட்டிலை கொண்டுபோய் வெள்ளத்தில் வைத்து, ஓரளவுக்கு அறுவடை செய்ய ஏற்பாடு செய்யப்பட்டது. இருந்தாலும் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

அதைப்போன்று இங்கே அரசாங்கத்தால் கொடுக்கப்பட்டுள்ள குறிப்பு களிலே கொடுக்கப்பட்டுள்ள பல பகுதிகளிலே பல ஊர்கள் சேர்க்கப்பட வில்லை. ஆகவே, வெள்ளத்தால் முழுவதுமாகப் பாதிக்கப்பட்ட திருச் செந்தூர், ஸ்ரீ வைகுண்டம். சாத்தான்குளம் ஆகிய இந்த மூன்று தாலுக்காக் களிலுள்ள விவசாயிகளுக்கு நிவாரணம் அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போன்று தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களிலும் இந்த துயரம் ஏற்பட்டது. அதிலே விவசாயிகள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். பாதிக்கப்பட்ட விவசாயிகள் அத்தனை பேர்களுக்கும் தள்ளுபடிகள், சலுகைகள் எல்லாம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நான் இன்னொன்றையும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத் திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். ஏழை, எளிய விவசாயிகள், விவசாயம் செய்பவர்கள் இரு பிரிவினராக இருக்கிறார்கள். அதிக வசதி படைத்தவர்கள் நிலத்தை வைத்து விவசாயம் செய்பவர்களும் இருக்கிறார்கள். நடுத்தர விவசாயிகள் நிலத்தை வைத்து விவசாயம் செய்பவர்களும் இருக்கிறார்கள். நல்ல வசதி படைத்தவர்களுடைய நிலத்திலே விவசாயம் செய்பவர்களுடைய குத்தகை பாக்கியைத் தள்ளுபடி செய்வதோடு நடுத்தர வசதி படைத்த விவசாயிகளுடைய நிலத்திலே விவசாயம் செய்பவர்கள் கால் பங்கு அந்த நிலத்தின் சொந்தக்காரர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி கூறி முடிக்கிறேன். வணக்கம்.

திரு. எல். இளையபெருமாள்: மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, இங்கே கொண்டுவரப்பட்டிருக்கிற தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு பயிரிடு குத்தகைதாரர்கள் (தனி விதித் துறைகள்) சட்ட முன்வடிவு, தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பயிரிடு குத்தகைதாரர்கள் (தற்காலிக நிவாரணம்) சட்ட முன்வடிவு ஆகியவற்றின்மீது நான் சார்ந்திருக்கிற இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக ஒருசில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

இந்தச் சட்டம் 1952-ஆம், 1955-ஆம் பண்ணையாள் பாதுகாப்பு என்ற முறையில் குத்தகைதாரர்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்ற நோக்கத்தில் மறைந்த பெரியவர் இராஜாஜி அவர்களால் கொண்டுவரப்பட்டது. ஆளும் கட்சி உறுப்பினர் திரு. பாலசுப்பிரமணியன் அவர்கள் பேசும்போது விதவைகள், குழந்தைகள் ஆகியோருக்கு பாதுகாப்பு கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். 1970 ஆம் ஆண்டு வரையில் அந்த பாதுகாப்பு அந்தச் சட்டத்திலே இருந்தது. அதன் பிறகுதான் சட்டத்திலே இருந்து அது விலக்கப்பட்டிருப்பதாக நான் அறிகிறேன். ஆகவே அமைச்சர் அவர்கள் அதைக் கருணையோடு பார்த்து, மீண்டும் அதற்குச் சட்டத்திலே இடம் அளிக்கின்ற வகையில் செய்தால், அதனால் எந்தக் குறையும் வராது. அதிகமான மக்கள், விதவைகள், குழந்தைகள் இருக்கப்போவது இல்லை. குத்தகைதாரர்களும் அதிகமாக கஷ்டப்படப்போவது கிடையாது. ஆகவே அவர்களைச் சேர்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த இரண்டு பில்களையும் நான் வரவேற்கிறேன். அதே சமயத்தில் வெள்ளப் பகுதியை நாம் எடுத்துக் கொண்டிருக்கிறோம். வறட்சிப் பகுதியிலே பாதிக்கப்பட்டவர்களுக்கு என்ன செய்யப்போகிறோம் என்று குறிப்பிடப்படவில்லை.

(பிற்பகல் 1-00)

1974 ஆம் ஆண்டுக்கு முன்பாக காங்கிரஸ் கட்சி ஆட்சியில் இருந்தபோது விதவைகளுக்கும், குழந்தைகளுக்கும், விதிவிலக்கு கொடுத்திருந்தார்கள். அந்த விதிவிலக்கு இப்போது விடப்பட்டிருக்கிறது. கிராமப் பகுதிகளைப் பற்றி அமைச்சரவர்கள் நன்கு தெரிந்தவர்கள். மீண்டும் அவர்களுக்கு விதிவிலக்கு கொடுப்பது நல்லதென்று தெரிவித்துக் கொள்கிறேன். வறட்சியால் பாதிக்கப்பட்டு, அதனால் உண்மையிலேயே விளைச்சல் இல்லாமல் விவசாயிகள் அவதிப்படுவார்களேயானால், அவர்களுக்கு நாம் உதவி செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: வறட்சிப் பகுதிகளுக்குச் சொல்லவில்லை என்று உறுப்பினரவர்கள் சொன்னார்கள். சட்ட முன்வடிவு 21-ல் வறட்சியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிறைய சலுகைகள் கொடுக்கப் பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எல். இளையபெருமாள்: நண்பர் திரு. பாலசுப்பிரமணியன் அவர்கள் சொல்வதுபோல சலுகைகள் கொடுக்கப்பட்டிருப்பது உண்மை. ஆனால் அதை நடைமுறையில் நடத்துவதற்குப் போதுமான அலுவலர்கள் நியமிக்கப்படவில்லை. குறைந்தபட்ச கூலிச் சட்டத்தைக் கொண்டுவந்து, தமிழ்நாடு முழுவதிற்கும் அந்தச் சட்டம் இருக்கிறது என்று சொன்னாலும், அதை அமல் நடத்துவதற்கான அதிகாரிகள் இல்லை. ஏதோ தாசில்தாரிடம்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. எனவே பல்வேறு காரணங்களினால், எந்த நல்ல நோக்கத்தோடு அமைச்சர் அவர்கள் கொண்டுவந்தார்களோ, அந்த நல்ல நோக்கம் நிறைவேறவில்லை. அதைப்போலத்தான் வறட்சிப் பகுதிகள் பற்றிய சட்டமும் இருக்கும் என்பதை நண்பர் பாலசுப்பிரமணியன் ஒத்துக் கொள்வார்கள் என்று நினைக்கிறேன்.





கோர்ட்டைப் பொறுத்தவரையில், ரெண்ட் கோர்ட்டு, ரெவின்யூ கோர்ட்டு என்று இருக்கிறது. இரண்டு கோர்ட்டுகளுக்கும் குத்தகைதாரர்கள் போக வேண்டியிருக்கிறது. இந்த முன்சிப் கோர்ட்டிலே இன்ஜெங்ஷன் வாங்குவதற்கு இடமிருக்கிறது. அட்டேச் செய்வது சம்பந்தமாக கமிஷன் வைத்து நாம் செய்வோம் என்றெல்லாம் சொன்னாலும்கூட, இதிலுள்ள அதிகாரிகளின் நிலைமைகளைப் பொறுத்து, நிலச் சொந்தக்காரர்கள் சக்தியைப் பொறுத்து, சட்டம் அங்கே வளைந்து கொடுக்கிறது. அந்தக் குத்தகைதாரர்களுக்காக இந்தச் சட்டத்தைக் கொண்டுவந்தவர்கள் அவர்களுடைய சக்தியற்ற நிலையில் அவர்களுக்கு அரசியல் பின்னணி நிலை இல்லாத நிலையிலும், அவர்களால் இந்தச் சட்டத்தின் நன்மைகளைப் பெற முடியவில்லை. ஆகவே ரெண்ட் கோர்ட்டு, ரெவின்யூ கோர்ட்டு, குத்தகை சட்டங்கள், பண்ணையாள் சட்டம் ஆகிய எல்லாவற்றையும் ஒன்றுபடுத்தி, ஒரு தனி அதிகாரியை நியமித்து, விவசாயிகளுக்கும், விவசாயத் தொழிலாளர்களுக்கும், இந்த நிலைமைகளை ஒருமுகப்படுத்தி, முழுமையான சட்டமாக உருவாக்குவதற்கு வருங்காலத்தில், அமைச்சர் அவர்கள் வழி செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

குத்தகைப் பதிவு பற்றிச் சொல்ல விரும்புகிறேன். தாசில்தாரிடம், 5 ஆம் நம்பர் பார்ம், 6 ஆம் நம்பர் பார்ம், என்றெல்லாம் இருக்கிறது. சில படித்த குத்தகைதாரர்கள் அதைச் செய்துகொள்ள முடிகிறது. சிலரால் செய்துகொள்ள முடியவில்லை. ஆகவே பதிவு செய்யும் நிலைமையைப் பொறுத்தவரையில், நாம் ஒன்றைச் செய்யவேண்டும். அரசாங்கமே முழுமையாக ஒரு நிலைமையை உருவாக்கி, யார் யார் குத்தகைதாரர்கள், யார் யார் வாரதாரர்கள் என்று பார்க்க வேண்டும்.

திருநெல்வேலி மாவட்டத்தில் மேல்வாரம், கைமேல்வாரம் என்றிருக்கிறது. இதில் மாவட்டத்திற்கு மாவட்டம் வித்தியாசம் இருக்கிறது. இதைப்பற்றி எல்லாம் அரசாங்கமே தாசில்தார் மூலமாகவோ அல்லது வேறு தனி அதிகாரிகள் வைத்தோ, உண்மைகளைக் கண்டுபிடித்து, முழுமையான நிலைமைகளை உருவாக்கி இரு சாராருக்கும் நன்மை செய்யவேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

ரெவின்யூ கோர்ட்டிலே முடிவு எடுத்தால், அந்த விவசாயி நேராக உயர்நீதி மன்றத்திற்குத்தான் செல்லவேண்டும். அல்லது உச்ச நீதிமன்றத்திற்குத்தான் செல்லவேண்டும். ஆனால் மற்ற சிவில், கிரிமினல் கேஸ்களைப் பொறுத்த வரையிலும், மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் முடிந்தால், டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜ், செஷன்ஸ் ஜட்ஜ் என்ற அளவிற்கு டிஸ்ட்ரிக்ட் கோர்ட்டிற்குச் சென்று முடிவு எடுக்கிறார்கள். ஆனால், விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள், அந்த ரெவின்யூ கோர்ட்டில் முடித்துவிட்டால், அல்லது தாசில்தார் முடிவு எடுத்து விட்டால், உயர் நீதிமன்றத்திற்கோ, உச்ச நீதிமன்றத்திற்கோதான் போக வேண்டும்.

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், சிதம்பரம் தாலுக்காவில், 2 ஆண்டுகளுக்கு முன்னதாக விவசாயத் தொழிலாளர்கள் 200 பேருக்கு மேல் கொடுக்கவேண்டிய கூலி—தாசில்தார் கொடுக்க வேண்டுமென்று சொல்லியும், கலெக்டர் கொடுக்க வேண்டுமென்று சொல்லியும், நேரில் பேசியும்—கிடைக்க முடியாமல் உயர் நீதிமன்றத்திற்கு வந்து, 3½ ஆண்டுகளாக இந்த கேஸ் இன்னும் முடிவுறாமல் இருக்கிறது. ஆகவே சிவில், கிரிமினல் கேஸ்களுக்கு எப்படி மாவட்டத்திலே முடிவு காணலாம் என்ற சகாய நிலை இருப்பதுபோல, இந்தக் குத்தகைதாரர்களுக்கும், இந்த விவசாயத் தொழிலாளர்களுக்கும், மாவட்ட ரீதியில், ஒரு அமைப்பை உருவாக்கிக் கொடுத்தால்தான், இந்தச் சட்டங்களை நாம் செய்ததன் பலன்களை இந்தக் குத்தகைதாரர்களும், விவசாயத் தொழிலாளர்களும் அடைவதற்கு சௌகர்யமாக இருக்கும்.

திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள் பேசுகிறபோது ஒன்றைச் சொன்னார்கள். இந்த நிலத்திலே பயிரிடுகின்றதைப்பற்றி. ஆக்சுவல் டில்லர் ஆப் தி சாயில் பற்றி அவர்கள் சொன்னார்கள். ஒரு அதிகாரியாக இருப்பவர்கள், ஆசிரியாக இருப்பவர்கள், வந்துவிட்டால் கொடுக்கவேண்டும் என்று எனக்கு ஒன்றும் அதிலே கருத்துவேறுபாடு இல்லை. அப்படி ஓய்வுபெற்ற அதிகாரிகள், அல்லது ஓய்வு பெற்றவர்கள், ஓய்வு பெறாதவர்கள், குறைந்த நிலம், 5 ஏக்கர், 3 ஏக்கர் நிலத்தை உடையவர்கள், உண்மையாக விவசாயத்திலே ஈடுபட்டு, வயலிலே அவர்கள் இறங்கி வேலை செய்வது உண்மையாக இருக்குமானால், அவர்களுக்கு விதிவிலக்கு கொடுப்பதிலே எனக்கு எந்தவிதமான ஆட்சேபனையும் கிடையாது. ஆனால் அவர்கள் இறங்காமல் நடத்தா குத்தகைதாரர்களைப்போலவே, வேறு ஒரு ஆளை வைத்து, செய்துகொண்டு, இந்த உண்மையான 'டில்லர் ஆப் தி சாயில்' என்று சொல்லக்கூடியவர்கள், உண்மையாக உழைக்கக்கூடியவர்களை வெளியேற்றுவதற்காக செய்கின்ற பல்வேறு காரணங்களால்தான் அரசாங்கத்திலேயிருந்தேன் என்றோ, எனக்கு வேறு அதிக நிலம் இல்லை என்றோ, அல்லது [illegible] இருந்து ஓய்வு



பெற்றவன் என்றோ, அல்லது பல்வேறு காரணங்களைக் காட்டி, அவர்களுக்கு உண்மையிலே அந்த நிலத்திலே உழைக்கின்ற மக்களுக்குக் கொடுக்காமல், உதவி செய்யாமல் அவனைப் பட்டினி போடுகின்ற நிலைமை உருவாகுமானால், அப்படிப்பட்டவர்களுக்கு நாம் விதிவிலக்கு கொடுக்கக்கூடாது. அதையும் கண்காணிக்க வேண்டுமானால் இந்த குத்தகைதாரர்களையும் இடைத் தரகர்களையும் விட்டால் இவர்கள் அவர்களுக்குச் சொல்வார்கள். அவர்கள் இவர்களுக்குச் சொல்வார்கள்.

ஆகவேதான் அரசாங்கமே ஒரு அதிகாரியை நியமித்து, நடுநிலைமையாக இவர்களுக்குக் கொடுக்கலாம், அல்லது குழந்தை மைனருடைய சொத்து, அல்லது ஓய்வு பெற்ற தன்னிடம் நிலம் குறைவாக இருப்பதாலே, 2 ஏக்கர், 3 ஏக்கர், 1 ஏக்கர் இருப்பதால், அவர்கள் உண்மையிலே செய்வதற்கு தகுதி உள்ளவர்கள்தானா என்பதை எல்லாம் கண்டுபிடித்து, விதிவிலக்குக் கொடுத்தால் இருபாலருக்கும் தொல்லையில்லாமல் இருக்கும். அந்த நிலைமையைச் செய்யவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பிறகு இந்தக் குத்தகைதாரர்களுக்கு நான்கு தவணைகளிலே கட்ட வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். இந்த நான்கு தவணைக்கும்—இன்றைக்கு இன்னும் ஒரு மாதம்தான் இருக்கிறது இடையிலே—ஆகவே இவர்கள் கட்டுவது மட்டுமல்ல, ஒன்று தள்ளுவதாகச் செய்யுங்கள், அல்லது கட்டவேண்டும் என்று முடிவுக்கு வரவேண்டும். அல்லது கட்டாமல் இருப்பதற்கு எவ்வளவு அவனால் முடியும் என்பதை விவரமாக ஆக ஒரு அதிகாரியை விட்டு பரிசீலனை செய்து உண்மையிலேயே அந்தக் குத்தகைதாரர்கள், அந்த நிலச் சொந்தக்காரனை ஏமாற்றுவதற்காக விளையவில்லை என்ற காரணத்தையோ, அல்லது வெள்ளம், அல்லது வறட்சி, விளையவில்லை என்று சொல்லி, ஏமாற்றுவதாக இருந்தால், நிச்சயமாக நாம் தள்ளுபடி செய்ய வேண்டியதில்லை. ஆனால் உண்மையிலே அவனுக்கு முடியாத நிலைமையிருந்தால், உண்மையாக தள்ளி விடுவதுதான் நல்லதே தவிர, இதை ஒத்திவைத்து, அவனைக் கடனாளியாக்கி பிறகு, ரெவின்யூ கோர்ட், இவைகளைச் சுற்றி, பின்னால் ஹைகோர்ட்டுக்கு போகின்ற ஒரு நிலைமைக்கு அவனை இழுக்கின்ற ஒரு நிலைமை இல்லாமல், ஒரு [illegible] நிலை உருவாகவேண்டும் என்றால் அரசாங்கமே முன்வந்து [illegible] [illegible], இதற்கு முடிவு எடுத்தாலொழிய இதற்கு வேறு வழியில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுபோலவே 1970 ஆம் ஆண்டிலே ஒரு சட்டம் கொண்டுவரப்பட்டது. அதாவது அவன் கட்டவேண்டியது ஒரு குறிப்பிட்ட காலம் என்று வைத்து, ஒரு வருஷத்திலே உள்ள பாக்கியை அவன் கட்டிவிட்டால் அவன் அதற்கு அதிகமாக, 2 வருஷம், 3 வருஷம் கொடுப்பதைத் தள்ளுபடி செய்வோம் என்று சொல்லி, இதையும் கட்ட முடியவில்லை, அதையும் கட்ட முடியவில்லை. இரண்டையும் சேர்த்துக் கோர்ட்டுக்குப் போய், கோர்ட்டார் ஒரு நிலைமையை உண்டாக்கி, கடைசியில் நிலத்தை விட்டு வெளியே வருகிற நிலைமைதான் ஏற்படும். இதை உதாரணமாகச் சொல்கிறேன். ஐந்து வருஷம் கடனை ஒரு வருஷத்தில் கட்டினால் போதும், ஒரு குறிப்பிட்ட நாளிலே கட்டினால் போதும், ஏதோ அவனுக்கு நன்மை செய்வதாக அவனுடைய தரித்திர நிலைமையை, அவனுடைய இயலாமையை நாம் புரிந்துகொள்ளாமல், ஏதோ இங்கே சட்டமன்றத்திலே உட்கார்ந்து கொண்டு, சட்டத்தைப் போடுவதாலே, அவன் பயன் பெறுவான் என்ற நம்பிக்கையிலே நாம் செய்தால், உண்மையிலே நீங்கள் எந்த நல்ல எண்ணத்தோடு செய்கிறீர்களோ, அந்த நல்ல எண்ணம் அவனுக்கு பலன் அளிக்கவில்லை என்பதை உங்களுக்குச் சொல்லிக் கொள்கிறேன்.

பிறகு, பதிவு செய்யும் முறையிலே இன்னும் தாலுக்கா தாசில்தார் முறை இருப்பதை ஒரு ஆர்.டி.ஓ. நிலைமையிலே உயர்த்தினால் மிக நல்லதாக இருக்கும் என்று நான் சொல்லிக்கொள்கிறேன்.

கடைசியாக மடத்தினுடைய நிலங்கள், கோயில் நிலங்கள், இவைகளிலே எல்லாம் சீர்திருத்தம் செய்யவேண்டும் என்று நம்முடைய அமைச்சர் அவர்கள் யாராக இருந்தாலும், இந்த நில உச்சவரம்புச் சட்டம் செல்லும், அதன்படி நடப்பேன் என்று சொல்கிறார்கள். நம்முடைய அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் நல்ல எண்ணத்தோடு சொல்கிறார்கள். கோயில் நிலங்களை ஏமாற்றுவது, கோயில் நிலங்களை நாசப்படுத்துவது, என்று குத்தகைதாரர்கள் அரசியல்வாதிகள் பின்புறத்திலே இருந்துகொண்டு, அவர்கள் தங்களுக்குச் சாதகமானவர்களுக்குச் சமயத்திலே செய்கின்ற பாவத்தினாலேதான் இந்தக் குத்தகைதாரர்கள் ஒழுங்காகக் கொடுக்கவில்லை. ஆனால் குத்தகைதாரர்களுடைய நிலமாக இருந்தாலும், கோயில் நிலமாக இருந்தாலும், தனிப்பட்ட நிலமாக இருந்தாலும், நம்முடைய அமைச்சர் அவர்கள் ஒரு உறுதியான முடிவை எடுத்து இந்த ஓரே ஒரு வழியை நீங்கள் செய்யத் தவறினால், அரசுக்கும் கெட்ட பெயர், குத்தகைதாரர்களுக்கும் கெட்ட பெயர், உண்மையான சட்டத்தின் பயனும் கிடைக்காது. இதற்கு ஓரே ஒரு வழி அரசாங்கம், மடத்து நிலத்தை, கோயில் நிலங்களை நேரடியாக எடுத்துக்கொண்டு, அதற்குள்ள தொகை எவ்வளவு என்பதை டெபா-





சிட் மூலமாகக் கட்டி, இந்த அறநிலையங்கள் ஒழுங்காக நடக்கச் சொல்லிவிட்டு, யார் இந்தக் குத்தகை நிலங்களிலே பயிரிடுகிறார்களோ, அந்த நபர்களுக்கு, எவ்வளவு நிலத்திலே நடுகிறார்களோ அதை விகிதாசாரப் படுத்தி, 50 ஆண்டுக் காலத்திலே, 25 ஆண்டுக் காலத்திலே அந்தத் தொகையை வட்டியின்றி செலுத்திவிட வேண்டும் என்று ஒரு முடிவுக்கு வந்தாலொழிய மடத்து நிலங்களும், தனிப்பட்ட குத்தகைதாரர்களுக்கும் அந்த மடத்து நிலத்து குத்தகைதாரர்களுக்கும் இருக்கின்ற தொல்லைகளை உங்களால் தீர்க்க முடியாது.

(பிற்பகல் 1-10)

இதுபோன்ற சிறுசிறு சட்டங்களைக் கொண்டு வருவதால் நீங்கள் என்ன நல்ல எண்ணத்தை நினைக்கிறீர்களோ, அந்த நல்ல எண்ணத்தின் அடிப்படையில், அவர்களுக்கு வாழ்வு கிடைக்காது என்பதை தெரிவித்து, அதற்காக ஒரு முழுமையான சட்டத்தை நம்முடைய அமைச்சர் அவர்கள், இந்தச் சட்டமன்றக் காலம் முடிவதற்குள்ளாகவே கொண்டு வருவார்கள் என்று எதிர்பார்த்து, என் வார்த்தையை முடிக்கிறேன். வணக்கம்.

**திரு. மா. சின்னராசு:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப் பட்டிருக்கிற குத்தகைதாரர் நிவாரண சட்டத்தினை வரவேற்று நான் சில வார்த்தைகளைப் பேச முன் வருகிறேன். இந்தச் சட்டத்திலே கொடுக்கப் பட்டிருக்கிற நிவாரணம், குத்தகை நிலத்தை சாகுபடி செய்துகொண்டிருக் கிறவர்கள் தற்போது ஏற்பட்ட வெள்ளத்தாலும், அதற்கு முன்னால் ஏற்பட்ட வறட்சியாலும், ஏற்பட்டிருக்கிற வருமான இழப்பின் காரணமாக, தாங்கள் செலுத்த வேண்டிய குத்தகையை செலுத்தாமல் இருந்தாலும். அவர் களுக்கு ஒரு நிவாரணத்தை அளிக்க வேண்டும் என்ற முறையிலே இந்தச் சட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள்.

ஆகவே குத்தகை சாகுபடி செய்கிறவர்கள், இயற்கையின் இடர்பாட்டால் தாங்கள் சந்தித்திருக்கிற சோதனையிலிருந்து விடுபடவேண்டும், அவர்களுக்கு ஏதாவது ஒரு நிவாரணம் கொடுக்க வேண்டும் என்ற வகையிலே இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிற நோக்கத்தை நான் வரவேற்கிறேன். ஆகவே, புரட்சித் தலைவர் அவர்களுடைய அரசு எந்த நேரத்தில், எந்தப் பகுதியில் இருக்கிற மக்களுக்கு துயர் ஏற்பட்டாலும். அது இயற்கையால் ஏற்பட்டாலும் அல்லது வேறு விளைவுகளினால் ஏற்பட்டாலும், அதற்கு கருணையான நடவடிக்கை எடுக்கிறது என்ற அடிப்படையில்தான் இந்தச் சட்டம் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

[திரு. மா. சின்னராசு] [1984 ஏப்ரல் 28

இந்தச் சட்டம் இப்போதுதான் முதன் முறையாகக் கொண்டுவரப்பட்ட சட்டம் அல்ல. 1981-லேயே இதுபோன்ற சட்டம் கொண்டுவரப்பட்டது. 1976-லேயும் கொண்டுவரப்பட்டது. ஆகவே, எப்பொழுதெல்லாம் விவசாய குத்தகைதாரர்களுக்கு நாம் நிவாரணம் கொடுக்க வேண்டும் என்று அரசியல் கட்சிகளின் சார்பிலே வாதாடுகிறோமோ, அப்பொழுதெல்லாம் அவர்களுக்கு நிவாரணம் கொடுக்கப்படுகிறது. அதிலே எனக்கோ நண்பர் பாலசுப்பிர மணியம் அவர்களுக்கோ கருத்து வேறுபாடு கிடையாது.

நாங்கள் வலியுறுத்துச் சொல்கிற கருத்தெல்லாம், இந்தக் குத்தகை பாதுகாப்புச் சட்டம் 1955-லே கொண்டுவரப்பட்டது. 1955-லேயிருந்து பல கட்சிகள் இந்த நாட்டிலே ஆட்சியை நடத்திக்கொண்டு வந்திருக்கின்றன. முதலிலே காங்கிரஸ் ஆட்சியும். பின்னால் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியும், அதற்குப் பின்னால் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி —இப்போதும் ஆட்சியை நடத்திக்கொண்டு வருகிறது. தொடர்ந்து எல்லா அரசியல் கட்சிகளும் இந்த குத்தகைதாரர் பாதுகாப்புச் சட்டம் வருகிற போது, அவைகளை ஆதரித்துத்தான் பேசுகிறார்கள். இருந்தாலும்கூட அதிலே ஒரு உண்மை மறைக்கப்பட்டிருக்கிறது என்ற யதார்த்தமான உண்மையை எடுத்து நான் 'சொல்வதற்காகத்தான், நானும், நண்பர் பாலசுப்பிரமணியம் அவர்களும் 1981-லேயும் இந்த விவாதத்திலே கலந்து கொண்டு இந்தக் கருத்துக்களை வலியுறுத்திச் சொல்லியிருக்கிறோம். 1976-லே செக்ஷன் 4-ஏ என்று இருந்தது. அது 1976-லே ஒரு அமெண்ட் மெண்ட் மூலம் எடுக்கப்பட்டது, அந்த 4-ஏ இருக்கிறபோது, நிலச் சொந்தக் காரர் தன்னுடைய சொந்த சாகுபடிக்காக நிலத்தைக் கேட்கிறபோது, குத்தகைதாரர்களிடம் இருக்கிற நிலத்தில் பாதியை எடுத்துக் கொள்ளலாம் என்று சட்டத்திலே வழி இருந்தது.

அதேபோல ராணுவத்திலே பணி புரிகிறவர்களுக்கும், விதவைகள், மைனர்கள் ஆகியோருக்கும், அவர்கள் தங்கள் சொந்த உபயோகத்திற்கென்று நிலத்தைக் கேட்கிறபோது, குத்தகைதாரர்களிடம் இருந்து தங்களுடைய நிலத்தை, தாசில்தாரிடம் விளக்கி, நீதி பெற்று அவர்கள் தங்களுக்கு சொந்தமான நிலத்தைப் பெற்றுக் கொள்ளலாம் என்ற நிலை இருந்தது. அது இப்போது எடுக்கப்பட்டிருக்கிறது. நான் இங்கே கூறுவதெல்லாம், அந்த சமுதாய நீதி தொடரவேண்டும். ஒரு ஜனநாயக நாட்டிலே நாம் ஒருவருக்காக பேசுகிறபோது, அவர்கள் சொன்னதைப்போல, ஒருவருடைய உரிமையை எடுத்து இன்னொருவருக்கு உரிமை கொடுப்பதாக இருக்கக்கூடாது.



1984 ஏப்ரல் 28] [திரு. இளைய பெருமாள்]

ஒரு சமுதாயத்திலே சமுதாய நன்மைக்காக, ஒட்டுமொத்தமான நன்மைக்காக, சிலருடைய உரிமையை எடுப்பதை யாரும் ஆட்சேபிக்க முடியாது. ஆனால் ஒருவருக்காக, ஒருவர் உரிமை பறிக்கப்பட்டு கொடுக்கப் படுகிறது என்பதுதான். நாம் ஜனநாயகத்திலே இரண்டு பேருக்குமாக பேசுகிறபோது யதார்த்தமான உண்மையை, கிராமங்களிலே இருக்கிற உண்மையான நிலைமையை சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம். ஆக, அந்த வகையில் குத்தகைதாரர்களிடமிருந்து நிலச் சொந்தக்காரர்கள், அதாவது லேண்ட் லார்ட், பெயர்தான் அவர் சொன்னதைப்போல லேண்ட் லார்டே தவிர, உண்மையிலேயே வறுமையிலே இருக்கக்கூடிய நிலச் சொந்தக்காரர்கள் இருக்கிறார்கள். தஞ்சாவூருக்கும், கோயம்புத்தூருக்கும், சேலத்திற்கும் நிறைய வித்தியாசம் உண்டு. அதை நாம் முதலில் உணர்ந்துகொள்ள வேண்டும்.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் நல்லப்பன் அவர்களுக்கு தெரியும். எங்களுடைய பகுதியிலே தொண்டாமுத்தூர் ஆனாலும் சரி, அதற்குப் பக்கத்திலே இருக்கிற பகுதியானாலும் சரி, குத்தகைதாரர்கள் மோட்டார் சைக்கிள் வைத்துக்கொண்டு, கார் வைத்துக் கொண்டு, குத்தகை வயலிலே பங்களா கட்டிக் கொண்டு இருப்பதும், குத்தகைக்கு ஏமாந்து நிலத்தைக் கொடுத்தவர்கள் தெருவிலே சோத்துக்குக்கூட இல்லாமல் அலைந்து பிறகு தற்கொலை செய்துகொண்ட வரலாறும் உண்டு.

நான் ஒன்றைச் சொல்லிக் கொள்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டிருக்கிற கருத்திலே எங்களுக்கு வேறுபாடு கிடையாது. அவர்கள் எங்களுக்கெல்லாம் ஆசானாக இருக்கக்கூடியவர்கள். அவர்கள் சொன்னார்கள், பதில் சொல்லக்கூடிய மாணவனாக இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். எங்களைப் பொறுத்தவரையில் அவருடைய மாணவர்கள் தாம் நாங்கள், எங்களுக்கு அவர் ஆசானாக இருக்கிறார்கள். அவருக்கு ஆசான் பேரறிஞர் அண்ணா அவர்கள். ஆக அப்படி எங்களுக்கு ஆசானாக இருக்கிற ஆசிரியரிடத்திலே நாங்கள் உரிமையோடு கேட்கிறோம். இது யதார்த்தமான நிலைமை. 1971-லே புரட்சித் தலைவர் அவர்கள், தேர்தல் பிரச்சாரத்திற்கு எங்கள் ஊருக்கு வந்தபோது பெரியநாயக்கன்பாளையத்திலே பேசினார்கள். ஒருவன் உத்தியோகத்திற்காக வெளியே செல்கிறான். செல்கிறபோது இருக்கிற இரண்டு ஏக்கர் நிலத்தை குத்தகைக்குக் கொடுத்துவிட்டுச் செல்கிறான், உத்தியோகம் முடிந்து தன்னுடைய குழந்தை குட்டிகளோடு திரும்பி வருகிறபோது தன்னுடைய நிலம் அவனுக்குச் சொந்தமில்லை, தான் சாகுபடி செய்ய முடியாத நிலையிருந்தால் அது என்ன நீதி என்று கேட்டார்கள். நான் அதைத்தான் கேட்கிறேன். அது நீதியல்ல.

ஆகவே அவர்களுக்கு நாம் வேலைவாய்ப்புக் கொடுப்பதில்லை. அவனுடைய மகன் ஏதோ படித்திருந்தால் வேலை உத்திரவாதம் கிடையாது இந்த நாட்டிலே. அப்படி ஒரு உத்திரவாதம் இருந்தால்கூட, வேலை இருக்கிறது, நீ செய் என்று சொல்லலாம். அதுவும் கிடையாது. தன்னுடைய வருமானத்திற்கு வழியில்லை, தன்னுடைய சொந்த உபயோகத்திற்காக நிலமும் பெற்றுக் கொள்ள முடியாது என்றால் அந்தக் குடும்பத்தினுடைய நிலையென்ன என்பதை யதார்த்த நிலையிலிருந்து நாம் எண்ணிப் பார்க்கிறோம் என்ற முறையிலே நாம் இந்த வாதத்தை இங்கே வைக்கிறோம். 1976 இல் இருந்தபடி சொந்த உபயோகத்திற்காக நியாயமான முறையில் தேவையாக இருக்கிறவர்களுக்கு திருப்பிக் கொடுப்பதற்கு அந்தச் சட்டத்திலே இடம் வேண்டும். என்பதை நான் வலியுறுத்தி சொல்ல விரும்புகிறேன் அப்படி சொல்பதின் மூலம் ஏதோ சமுதாயத்திலே ஒரு பிரிவினரை நாம் ஏமாற்றியதாக ஆகாது. இப்போது இருக்கிற சட்டத்தில் சட்டத்தினுடைய விதிகளைப் பயன்படுத்திக்கொண்டு—அவர்கள் சொன்னதைப்போல்—கோர்ட்டை ஏமாற்றுகிறார்கள், ஏலதாரரை ஏமாற்றுகிறார்கள், வங்கிக் கடன்களை ஏமாற்றுகிறார்கள், அவர்கள் எல்லாம் நிறைய இருக்கிறார்கள். இன்னும்கூட கோவையிலே இருக்கிற வழக்குகள் இன்று அதிகமாக இருப்பதற்குக் காரணமே குத்தகைப் பதிவுச் சட்டத்திலே பினாமியாக டெனன்சியாக ரிக்கார்ட் செய்துகொள்வதுதான். இன்னொரு விஷயம். டெனன்சி ரிக்கார்டு செய்துகொள்ள தனி தாசில்தார்கள் பல இடங்களில் இருக்கிறார்கள். கோவையிலே தனி தாசில்தார் கிடையாது. ஏற்கெனவே நான் இதுபற்றி அமைச்சர் அவர்களிடம் வலியுறுத்திச் சொல்லி இருக்கிறேன். கோவை தாலுகாவிலே நான்கு தாலுகாக்கள் என்று சொல்லக்கூடிய அளவுக்கு வேலை செய்து கொண்டிருக்கிறார்கள் இப்போது. தாலுகாவைப் பிரிக்கவேண்டும் என்று மீண்டும் இந்த நேரத்திலே இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அமைச்சர் அவர்களை மீண்டும் கேட்டுக் கொள்கிறேன். பிரிக்கப்படாத தாலுகாவிலே ஏற்கெனவே வேலைப் பளு இருக்கிற இடத்திலே அந்த ரெகுலர் தாசில்தார்தான் அந்த குத்தகை விவசாயிகளை பதிவுசெய்யும் வேலையையும் கவனித்து வருகிறார். 144 போன்ற ஜுடிஷியரி வேலையையும் பார்க்கிறார், அவர் எக்ஸிக்யூடிவ் மாஜிஸ்திரேட்டாகவும் வேலை பார்க்கிறார். ஆகவே வேலை பளுவாக இருக்கிறது. டெனன்சி ரெக்கார்டுக்கு போகிற எந்த கேஸும் அங்கே உடனடியாக முடிக்கப்படவில்லை. ஆண்டாண்டுக்காலமாக, மூன்று, ஐந்து ஆண்டுகள் என்று அரியர்ஸிலே இருந்துகொண்டிருக்கின்றன. அந்த இடத்திலேயே அவைகளை பைசல் செய்யக்கூடிய முறையிலே தனி தாசில்தார் போடவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அது மட்டுமல்ல,





தாசில்தாருக்கு அடுத்து மேல்முறையீடு டி.ஆர்.ஓ. என்று இருக்கிறது. முதலில் இருந்ததுபோல் டிஸ்ட்ரிக்ட் முன்சிப்பிற்கு அது வழங்கப்படவேண்டும். நீதி மன்றத்திற்கு மேல்முறையீடு போகிற அதிகாரத்தை மீண்டும் வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சமுதாய நீதி வழங்குகிறபோது பொதுவாக இரண்டு பக்கமும் சமமாக இருக்கவேண்டும். நீங்கள் வேண்டுமானாலும் ஒரு நீதி விசாரணை வையுங்கள், என்குயரி கமிஷன் வையுங்கள், எங்கள் மாவட்டத்திற்கு, எங்கள் பகுதிக்கு எல்லாம் வந்து குத்தகைதாரர் நிலைமை என்ன? குத்தகை கொடுத்தவருடைய நிலை என்ன என்பதையெல்லாம் பார்த்து உண்மையிலேயே குத்தகைதாரரைவிட குத்தகைக்கு நிலத்தைக் கொடுத்தவர் ஏழ்மையில், வறுமையில் இருந்தால் அவர்களுக்கு நீங்கள் நிலம் கொடுத்தால் போதும். ஆகவே அந்த வகையில் உண்மையாக ஒரு சமுதாய நீதியை ஏற்படுத்துவதற்காக இந்தச் சட்டத்திலே 55-வது சட்டத்திலே உரிய மாற்றங்களை சமுதாய நீதிக்காக ஏற்படுத்தவேண்டுமென்று அமைச்சர் அவர்களை இந்த நேரத்திலே கேட்டு முடிக்கிறேன். வணக்கம்.

திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பயிரிடும் குத்தகைதாரர்களுக்கு தற்காலிக நிவாரணம் அளிக்கின்ற சட்டமுன்வடிவு சம்பந்தமாக ஒரு சில கருத்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் திருமதி பொன்னம்மாள் அவர்களும், திரு. சின்னராஜ் அவர்களும் சொன்ன கருத்துக்களில் அடிப்படையாகவே எங்களுக்கு சில வேறுபாடுகள் உண்டு, யாரோ ஒருவர் உத்தியோகத்தில் இருக்கக்கூடியவர் ஒரு ஏக்கரோ 2 ஏக்கரோ 10, 15 ஆண்டுகளுக்கு முன்பு விட்டுவிட்டு சென்றவர், மீண்டும் வந்ததற்குப் பின்னாலே அந்த நிலம் எனக்கு வேண்டும், எனக்கு வேறு வழியில்லை என்று கேட்டால் அப்படிக் கேட்கக்கூடியவர்கள் இந்த நாட்டிலே 1 சதவீதம்கூட இல்லை. 1 சதவீதம்கூட இல்லாதவர்களை வைத்துக் கொண்டு ஒட்டுமொத்தமாக குத்தகை விவசாயிகள் பிரச்சினையைப் பார்ப்பது என்பது சரியாக இருக்காது. உதாரணமாகச் சொல்லவேண்டுமானால் இந்த அவையிலே அமைச்சர் அவர்கள் ஒரு சட்டத்தைக் கொண்டுவந்தார்கள். பினாமி நிலங்களை அரசாங்கம் கைப்பற்றுவதற்காக ஒரு சட்டத்தைக் கொண்டுவந்தார்கள். மதிப்பிற்குரிய ஜனாதிபதி அவர்கள் கையெழுத்துப் போடாத காரணத்தினால் அந்தச் சட்டம் அப்படியே நின்றுவிட்டது. ஆகவே தமிழகத்திலே பினாமி என்ற பெயரால் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் வைத்திருக்கக்கூடிய அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களும் உண்டு. அவர்களை வைத்துக்கொண்டே தமிழகத்திலே ஆட்சியை நடத்தக்கூடிய, அரசியல் நடத்தக் கூடிய பெரிய பெரிய தலைவர்களும் உண்டு. அப்படிப்

பட்ட நிலங்களை ஏன் எடுக்கக்கூடாது? அந்த நிலங்களை எடுத்து சாதாரணமாக உள்ள ஏழை எளிய விவசாயிகளுக்கு, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு விநியோகிப்பதிலே என்ன கஷ்டம் என்று எனக்குத் தெரியவில்லை.

தஞ்சை மாவட்டத்திற்கும் கோவை மாவட்டத்திற்கும் சில அடிப்படை வேறுபாடுகள் உண்டு என்பது உண்மை. கோவை மாவட்டத்திலே சில பகுதிகள் வானம் பார்த்த பூமியாக இருந்தாலும்கூட 50, 100 ஏக்கர் என்று வைத்திருக்கிறவர்கள் உண்டு. அப்படி 50, 100 ஏக்கர் நிலம் இருந்தாலும்கூட வேறுவிதமான வழியில்லாமல் விவசாயம் மூலமாகத்தான் தன்னுடைய வாழ்க்கையை பெருக்கிக்கொள்ள வேண்டுமென்ற நிலையில் இல்லாதவர்கள் உண்டு. 50 ஏக்கர் 100 ஏக்கர் என்று வைத்துக்கொண்டிருக்கிறவர்கள் தொழிற்சாலைகளை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். எனவே தொழிற்சாலைகளை வைத்துக்கொண்டிருக்கிறவர்களுக்கு விவசாயத்திலே அதிகமான அக்கறை இல்லை. நான் கேட்டுக்கொள்வது எல்லாம் உண்மையான குத்தகை விவசாயிகள் இன்று குத்தகை விவசாயிகளாக பதிவு செய்ய வேண்டுமென்று பல பேர்கள் விண்ணப்பம் கொடுத்திருக்கிறார்கள், பதிவு செய்யப்படாமலே இருக்கிற சூழ்நிலை இருந்துகொண்டிருக்கிறது, அதை துரிதப்படுத்தவேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 1-20)

இந்தச் சட்டத் திருத்தத்திலே கடைசியாக கொடுக்கப்பட்டிருக்கிற காரண காரிய விளக்கத்தில் ஒன்று சொல்லப்பட்டு இருக்கிறது. கடந்த 2 ஆண்டு காலமாக தொடர்ந்து பருவ மழை தவறியதாலும் அதைத் தொடர்ந்து 1983 டிசம்பரில் வெள்ளம் ஏற்பட்டதாலும் இந்த மாநிலத்தின் சில பகுதிகளில் விளைந்த பயிர்களுக்கு பொருள் சேதம் ஏற்பட்டது. அதனால் அங்கே உள்ள பயிரிடும் குத்தகைதாரர்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று சொல்லப்பட்டிருக்கிறது. நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வது எல்லாம் தமிழகத்தின் ஒவ்வொரு புறத்திலும் மழையும், வெள்ளமும் மாறி மாறி வந்திருக்கிறது. கோவை மாவட்டம் எல்லாம் கடுமையான வறட்சியால் பாதிக்கப்பட்டது. பெரியார் மாவட்டம் வறட்சியினால் பாதிக்கப்பட்ட மாவட்டம். எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொண்டு வந்து இருக்கக்கூடிய இந்த சட்டத்தில், மாநிலத்தில் இருக்கக்கூடிய மாவட்டங்களில் வறட்சியும், வெள்ளமும் மாறி மாறி வந்து இருக்கிற காரணத்தால் யாருமே இதில் விதிவிலக்கு கிடையாது. தஞ்சை மாவட்டம், திருநெல்வேலி மாவட்டம், இராமநாதபுரம் மாவட்டம், செங்கற்பட்டு மாவட்டம், சென்னை மாவட்டம் கடுமையான வெள்ளம்.





அதேபோல் சேலம் மாவட்டம், பெரியார் மாவட்டம், கோவை மாவட்டம், நீலகிரி மாவட்டம் இங்கு எல்லாம் கடுமையான வறட்சி. ஆகவே வறட்சியாலும் குத்தகை விவசாயிகள் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள், வெள்ளத்தினாலும் குத்தகை விவசாயிகள் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். எனவே 2 வகையான குத்தகை விவசாயிகளும் 2 புறங்களிலும் வெள்ளத்தினாலும் வறட்சியினாலும் கடுமையான நிலையில் பாதிக்கப்பட்டு இருக்கிற காரணத்தால் இதில் கோவை மாவட்டத்தில் உள்ள குத்தகை விவசாயிகளையும் இணைத்துக் கொள்ளவேண்டும். பெரியார் மாவட்டத்தில் இருக்கக்கூடிய குத்தகை விவசாயிகளுக்கு பாதுகாப்பு கொடுக்கக்கூடிய முறையில் சட்டத்தை திருத்தவேண்டும். அதேபோல் நீலகிரி மாவட்டத்தில் இருப்பவர்களுக்கும் கொடுக்கவேண்டும். அதேபோல் வறட்சியும், வெள்ளமும் மாறி மாறி வந்து கொண்டிருக்கிற காரணத்தால் தமிழகத்தில் இருக்கக்கூடிய அத்தனை குத்தகை விவசாயிகளும் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். எனவே இந்தச் சட்டத்தை தமிழகத்தில் இருக்கக்கூடிய அனைத்து மாவட்டங்களுக்கும் பொருந்தக்கூடிய முறையில் இந்தச் சட்டத்தை திருத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடிக்கிறேன், நன்றி. வணக்கம்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இங்கே 2 சட்ட முன்வடிவுகள் கொண்டு வரப்பட்டு அதிலே மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய அரிய கருத்துக்களை எல்லாம் சொல்லியிருக்கிறார்கள். இரண்டு சட்ட முன்வடிவிலே ஒன்று தொடர்ந்து 2 ஆண்டுகளாக வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களுக்கு அங்கே இருக்கிற குத்தகை விவசாயிகள் அவர்களால் குத்தகை கொடுக்க முடியாது என்பதற்காக அவர்களுக்கு பாதுகாப்பு; இன்னும் ஒன்று தொடர்ந்து அந்த வறட்சிக்குப் பிறகு வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் இருக்கின்ற குத்தகை விவசாயிகளுக்கு அவர்களிடமிருந்து குத்தகை வசூல் செய்வதை தள்ளி வைத்தும் முதலிலே தவணையில் கொடுக்க வேண்டும் என்பதும் இதைத் தள்ளி வைத்தும் 2 சட்ட முன்வடிவை இங்கே கொண்டு வந்து இருக்கிறோம். இதிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்துக்களை நன்றாக இங்கே தெரிவித்து இருக்கிறார்கள்.

கடைசியாகப் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்கள் இந்தச் சட்ட முன்வடிவின் காரண காரியங்களைப் பற்றிச் சொல்கிறபோது அதிலே இந்த அரசு என்ன தெரிவித்து இருக்கிறது என்பதைச் சொன்னார்கள். தொடர்ந்து வறட்சி, விளையவில்லை. அதற்குப் பிறகு வெள்ளம், விளையக்கூடிய விளைச்சல் போய்விட்டது என்பதுதான் இதில் முக்கியமான காரணம் ஆகும். இதைப்பற்றி பேசுகிறபோது பல்வேறு

[திரு. எஸ். டி. சோமசுந்தரம்] [1984 ஏப்ரல் 28

கருத்துக்களை இங்கே சொன்னாலும், அதன் மொத்தமான கருத்தைச் சொல்
கிறபோது வறட்சி வந்து இருக்கிறது. அவர்களை 4 தவணைகளில் கட்டச்
சொன்னால் எப்படி கட்ட முடியும் என்ற ஒரு கேள்வியை வைத்து இருக்கி
றார்கள். இன்னொரு கேள்வி இப்போது வெள்ளம் வந்திருக்கிறது, அவை
களை தள்ளிவைத்து இருக்கிறீர்கள். அதற்கு பிறகு நீங்கள் தவணை என்று
சொல்லப்போகிறீர்கள், அவர்கள் எப்படி கட்ட முடியும் என்பது 2-வது கேள்வி.
ஆனால் இந்த 2 கேள்விகளும் நியாயமான கேள்விகள் தான் என்பதை இந்த
அரசு ஏற்றுக் கொள்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.
விளைந்தால் தானே பங்கு. விளையாவிட்டால் எப்படி பங்கு? அதுதான்
விளையவில்லையே? நீங்கள் தள்ளிப்போட்டு 4 தவணைகளில் கொடுக்கச்
சொல்கிறீர்களே என்கின்ற உங்களுடைய நியாயமான கேள்வி. இந்த அரசு
மனப்பூர்வமாக நியாயமானதாகத் தான் கேட்கிறீர்கள் என்பதை ஏற்றுக்
கொள்கிறது. அதற்காகத்தான் நியாயமாக சொல்கிறபோது மாண்புமிகு
உறுப்பினர் திரு. உத்திராபதி அவர்கள் சொல்கிறபோது அவர்கள்
என்றைக்கும் இல்லாமல் இன்றைக்குக் கொஞ்சம் கோபமாகப் பேசினார்கள்.

அவர் கோபமாகப் பேசுகின்றபொழுது, என்னிடத்திலே கோபமாகப் பேசி
னார் என்றால் நான் மகிழ்ச்சி அடைந்திருப்பேன். ஆனால், என்னிடத்திலே
கோபமாகப் பேசாமல்—பெண் என்றால் பேயும் இரங்கும் என்று சொல்வார்
கள்—நம்முடைய அன்புச் சகோதரியிடத்திலே கோபமாகப் பேசினார்கள்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

இதை நான் சொல்வதற்குக் காரணம், அவர்கள் கோபமாகப் பேசினார்கள்
என்பதற்காக அல்ல. இன்றைக்கு இந்த ஏழை விவசாயிகள் ஏழை
களாகவே இருக்கிறார்கள் என்பதற்கு அவர்களே இங்கே கோபமாகப் பேசி
யதுதான் அதற்கு ஒரு எடுத்துக்காட்டு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அது எப்படி என்றால், இரண்டு பேர்களும் ஏழைகளுக்காகவே உள்ள
வர்கள்; இரண்டு பேர்களும் ஏழை விவசாயிகளைப் பற்றிக் கவலைப்படுகின்ற
வர்கள். இப்படி இரண்டு பேர்களும் ஏழை விவசாயிகளுக்காகக் கவலைப்படு
கின்ற நேரத்தில், நன்றாக விவரம் தெரிந்தவர்கள், அரசியல் கட்சிகளிலே
உள்ளவர்கள், நீண்டகாலமாக உள்ளவர்கள் ஒரு ஒருமித்த கருத்துக்கு வர
முடியவில்லை என்றால், படிக்காத, விவரம் தெரியாத கிராமப்புற விவசாயி
களிடமிருந்து எப்படி ஒருமித்த கருத்து வர முடியும்?



1984 ஏப்ரல் 28] [திரு. எஸ். டி. சோமசுந்தரம்]

விவசாயிகளாக இருந்து, ஏழைகளாக இருந்து மேலும் ஏழைகளாகப்
போய்க்கொண்டிருப்பதற்குக் காரணமே அந்த ஒற்றுமை கிராமப்புறத்தில்
இருப்பவர்களுக்குப் போதாது என்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக்
கொள்கிறேன்.

நான்கு தவணைகளில் கொடுக்க வேண்டுமென்றாலும், இன்றைக்கு 4-வது
மாதம் முடியப் போகிறது. 30—6—1984; அதற்குப் பிறகு 31—12—1984;
அதற்குப் பிறகு 30—6—1985; அதற்குப் பிறகு 31—12—1985 என்று
இப்படி 4 தவணைகளில்—இரண்டாண்டுகளில் எப்படிக் கொடுப்பது என்று
வருகின்றபொழுது, அடுத்த தவணை—30—6—1984 என்பது இப்பொழுதே
வந்துவிடுமே என்று சொன்னார்கள். அது நியாயமான கேள்விதான்.

விளைகின்ற விளைபொருட்கள் அத்தனையையும் கொடுக்க முடியுமா
என்பதைப்போலக் கேட்டார்கள். உத்திராபதி அவர்களுக்கும் தெரிவித்துக்
கொள்கிறேன்; தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் சொல்ல வேண்டு
மென்றாலும், எல்லா மாவட்டங்களைப் பற்றியும் சொல்லிக்கொள்ள விரும்பு
கிறேன். தஞ்சையில் மழை பெய்து நின்று விட்டது; ஆனால் தஞ்சையிலே
ஆரம்பித்து, மன்னார்குடிக்குப் போய், நீடாமங்கலத்திற்குப் போய்,
திருவாரூருக்குப் போய், பிறகு நாகப்பட்டினத்திற்குப் போய், பிறகு திருத்
துறைப்பூண்டிக்குப் போய், வேதாரண்யத்திற்குப் போய், முத்துப்பேட்டைக்
குப் போய், பட்டுக்கோட்டைக்குப் போய், மதுக்கூர் வரையில் வந்தால், 10
நாள், 15 நாள் வரைக்கும் தண்ணீர் நான்கடி, எட்டடி, பத்தடி என்று இருந்
தால் அங்கே எப்படி விளைந்திருக்குமோ அதற்குப் பிறகு அவர்கள் நான்கு
தவணைகளில் கொடுக்க வேண்டுமென்றால் அது எப்படி நியாயமாகும்? அது
நியாயம் இல்லை.

அதற்காகத்தான், அதற்கு என்ன பரிகாரம் என்பது சட்டத்திலேயே
இருக்கிறது. 25 விழுக்காடுகளுக்கு மேல் குறைவாக இருந்தால், பாதிக்கப்
பட்டிருந்தால்; அந்தக் குறைந்த விளைச்சலுக்கேற்றவாறுதான் அவர்களுக்
குக் குத்தகையிலே பிரிக்க வேண்டும். இன்றைக்கு 25-75 என்று இருந்தா
லும், பத்து கலம் விளைய வேண்டிய இடத்தில், பத்து கலம் விளையாமல்
ஏழரை கலம் மட்டுமே விளைந்திருந்தால் அதில் 25 சதவீதம்தான்—அதற்
கேற்றவாறுதான் பிரிக்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது.

நெல் விளைச்சலே இல்லை என்றால் அதற்குச் தகுந்தவாறு பிரிக்க
வேண்டியதுதான். இதையெல்லாம் அரசு யோசிக்கும். எப்படிப் பிரிக்க
வேண்டுமென்பதையும் இந்த அரசு எண்ணிப்பார்த்து, அதற்கு வேண்டிய
நடவடிக்கைகளையும் எடுக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. எஸ். டி. சோமசுந்தரம்] [1984 ஏப்ரல் 28

சில ஊர்கள் விட்டுப் போயிருக்கின்றன; சில தாலுக்காக்கள் விட்டுப் போயிருக்கின்றன என்று சொன்னார்கள். இந்த அரசு உங்களிடத்திலேயே அனுமதி பெற்றிருக்கிறது. சட்டமுன்வடிவை நிறைவேற்றிவிட்டு எங்கேயாவது நியாயமாக உள்ள ஒரு கிராமம் விட்டுப் போய் இருந்தால் அல்லது ஊராட்சி விட்டுப் போயிருந்தால் அதற்காகப் பிறகு சட்டம் கொண்டு வந்து நிறைவேற்ற முடியாது என்பதால்தான், இந்தச் சட்டமன்றத்தின் முன்னால் உங்களுடைய அனுமதியை இந்த அரசு கேட்டிருக்கிறது; நீங்களும் கொடுத்திருக்கிறீர்கள். எனவே, அப்படி எங்கேயாவது சில கிராமங்கள் விடுபட்டுப்போய் இருந்தால், அவைகளைத் திருப்பிச் சேர்த்து, அந்தக் கிராமத்தையும் ஏற்று, அதற்குப்பிறகு அதற்கும் எல்லோருக்கும் என்ன உரிமை உண்டு என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றைக்குக் கட்ட வேண்டியது, அவர் நீதிமன்றத்திற்குப் போயிருந்தாலும் சரி, அந்த நீதிமன்றத்திலே இருக்கின்ற வழக்குகள் அத்தனையும் செல்லுபடியாகாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 1-30)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவையின் முன் அனுமதியோடு அவையின் நேரம் நீட்டிக்கப்பெறுகின்றது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குத்தகைதாரர்கள் குத்தகை நிலத்திலிருந்து முழுமையாகவோ அல்லது பாதியாகவோ வெளியேற்றப்பட்டிருந்தால் அது செல்லாது. அவர்கள் உடனே வருவாய்க் கோட்ட அதிகாரிகளிடத்திலே மனுக்கள் செய்து கொள்ளவேண்டும். அப்படிச் செய்துகொள்கின்றபோது அவர்களே மீண்டும் அந்த நிலத்தில் அமர்த்தப்படுவார்கள். குத்தகையைக் கட்டவில்லை என்ற ஒரே காரணத்தைக் கொண்டு—வேறு காரணங்கள் இருக்க முடியாது, அவர்களுக்கும் எனக்கும் சண்டை, வம்பு என்றெல்லாம் வேறு காரணங்களைச் சொல்ல முடியாது—யாரையும் அந்த நிலத்தை விட்டு வெளியேற்றுவதற்கு நீதிமன்றத்திற்கோ அல்லது சிவில் கோர்ட்டுக்கோ யாருக்குமே அதிகாரம் இல்லை. அவர்களிடத்திலே கொடுக்கப்பட்டிருக்கின்ற அத்தனை அதிகாரங்களும் இந்தச் சட்டமுன்வடிவின் மூலமாக ரத்து செய்யப்படுகின்றது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.



1984 ஏப்ரல் 28] [திரு. எஸ். டி. சோமசுந்தரம்]

அடுத்து குத்தகைதாரர்கள் பலபேர் பதிவு செய்யவில்லை என்று சொல்லி இருக்கிறீர்கள். குத்தகைதாரர்களில் விடுபட்டவர்களைப் பதிவு செய்வதற்காக பல மாவட்டங்களில் குழுக்கள் போடப்பட்டிருக்கின்றன. அந்தக் குழுக்களுக்கு பதிவு செய்துகொள்வதற்கான அதிகாரம் இருக்கின்றது. அந்தக் குழுக்களில் இருக்கின்ற உறுப்பினர்கள் நேரடியாக எந்தக் காரணத்திற்காகவும் சென்று யார் குத்தகைதாரர்கள் என்று எண்ணுகிறார்களோ அவர்களிடத்திலே சென்று எழுதி வாங்கிக்கொண்டு வந்து, சாட்சியும் வாங்கிக்கொண்டு வந்து தாசில்தாரிடத்திலே கொடுத்தால் தாசில்தார் அவர்களைக் காரணம் சொல்லாமல் தள்ளிவிட முடியாது. அப்படிச் செல்வதற்கும் வருவதற்கும் உங்களுக்கு வேண்டிய வசதிகள் கிடைக்கும். அதாவது ட்ராவலிங் அலவன்ஸ், டெய்லி அலவன்ஸ் ஆகிய எல்லாமே கிடைக்கும். இங்கே இருக்கின்ற எல்லா சட்டமன்ற உறுப்பினர்களும் அதிலே உறுப்பினர்களாக இருக்கிறீர்கள். அப்படி இல்லாத இடத்தில் போடப்படும். அதை நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

ரென்ட் கோர்ட்டில் தாசில்தார் அவர்கள் இல்லை என்று சொல்லிவிட்டால் அவர்கள் உடனே ஆர்.டி.ஓ. அவர்களிடம் வழக்கிற்குப் போகலாம். ஆர்.டி.ஓ. இல்லை என்று சொல்லிவிட்டால், டி.ஆர்.ஓ. அவர்களிடம் வந்து அதன்பிறகு ஹைகோர்ட்டுக்குப் போகலாம். அவர்கள் டெனன்ட்டா இல்லையா என்று பார்ப்பதைப் பொறுத்தவரையிலே ஆர்.டி.ஓ. மற்றும் டி.ஆர்.ஓ. ஆகியோர்களுக்குப் போதிய அதிகாரம் வழங்கப்பட்டிருக்கின்றது என்பதை நான் தெரிவித்து இந்தச் சட்டமுன்வடிவினை நீங்கள் எல்லோருமே ஏற்றுக்கொண்டு பேசி இருப்பதன் காரணத்தால் நீண்ட நேரம் இதுபற்றி நான் பேசத் தேவையில்லை என்பதைச் சொல்லி இதிலே விடுபட்டுப்போன கருத்துக்கள் ஏதாவது இருந்தாலும், குத்தகைதாரர்களுக்கு எல்லாவிதமான, பூரணமான பாதுகாப்பையும் இந்த அரசு என்றும், எப்போதும் கொடுக்கும் என்பதை நான் இங்கே சொன்னாலும், சொல்லாவிட்டாலும் சட்டத்திலே அதிகாரம் இன்றைக்கு வழங்கப்பட்டிருக்கின்றது என்பதைச் சொல்லி இந்த இரண்டு சட்ட முன்வடிவுகளையும் நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எஸ். இளையபெருமாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் ஒரு வேண்டுகோளை ஆளும் கட்சி உறுப்பினர்களும் சொன்னார்கள், எதிர்க்கட்சி உறுப்பினர்களும் சொன்னோம். விதவைகள் மற்றும் மைனர் குழந்தைகளுக்குப் பாதுகாப்பு கொடுக்கின்ற [illegible] காங்கிரஸ் கட்சி ஆட்சிக் காலத்திலே சட்டத்திலே இடம் இருந்தது. அது இடையிலே விடுபட்டுப் போய்விட்டது. 1970-76-க்கு மத்தியில்தான்

விடுபட்டது என்று நான் நினைக்கிறேன். அதனை மீண்டும் கொண்டு வருகின்ற வகையிலே தாங்கள் யோசித்து விதிவிலக்கு அளிக்கவேண்டும் என்ற வகையிலே கேட்டிருக்கிறோம். அதுபற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்ன செய்யப்போகிறீர்கள்? வருங்காலத்திலே யோசித்து ஒரு முடிவு எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சி ஆட்சியில் இருந்த சட்டதிட்டங்களைப் பொறுத்தவரையில் விதவைகளின் நிலத்திலிருந்து குத்தகைதாரர்களை வெளியே அனுப்பலாம் என்று இருக்கவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எல். இளையபெருமாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விதவைகள் மற்றும் குழந்தைகளுக்குப் பாதுகாப்பு அளிக்கின்ற வகையிலே நிலங்களைக் குத்தகையிலேயிருந்து எடுத்துச் செய்யலாம் என்ற அளவுக்கு விதிவிலக்கு இருந்தது. அந்த விதிவிலக்கு 1976-ல் 42-ம் என்ற செக்ஷன்படி எடுக்கப்பட்டிருக்கின்றது. ஆகவேதான் அதை மறு பரிசீலனை செய்து அவர்களுக்கு உதவி செய்வதற்குரிய வழிவகைகளை வகுக்குமா அரசு என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** தலைவர் அவர்களே, அது அப்படியில்லை. நிலத்தைச் சொந்த விவசாயம் செய்வதற்காக அவர்கள் கேட்டார்களேயானால், அவர்களுடைய சொந்த நிலத்தை அவர்கள் விவசாயம் செய்யாமல், பூராவும் குத்தகைக்கு விட்டிருந்தால் அவர்களுக்கு 50 சதவிகிதம் கொடுக்கப்படவேண்டும் என்ற வகையிலே சட்டம் இருந்தது. அது இன்றைக்கு எடுக்கப்பட்டிருக்கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதைப்பற்றி அரசு யோசிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி—

"தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு பயிரிடு குத்தகைதாரர்கள் (தனி விதித்துறைகள்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 21/1984) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 4 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.



பிரிவு 5.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி—

"பிரிவு 5 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்".

**திரு. சோ. அழகர்சாமி:** தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்—

பிரிவு 5-க்குப் பதிலாக கீழ்க்கண்டதைச் சேர்க்கவும்:

"பிரிவு 5.—30—6—1983 ஆம் நாளுக்கு முந்தைய கால அளவிற்குரிய குத்தகைப் பாக்கி முழுதும் தள்ளுபடி செய்யப்படும்".

திருத்தம் முறையே வழிமொழியப்பெற்றது.

**திரு. சோ. அழகர்சாமி:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லும் போது இந்தப் பக்கத்திலேயிருந்து சொன்னதெல்லாம் நியாயம்தான் என்று ஒத்துக் கொண்டார்கள். மேற்கொண்டும் சொல்லும்போது அந்தக் கூலியை 4 தவணைகளிலே 6-வது மாதம், 12-வது மாதம், 1982-வது ஆண்டையதை இரண்டு தவணைகளிலே கட்ட வேண்டுமென்று சொன்னார்கள். மேற்கொண்டும் சொல்லும்போது எவ்வளவு விளைந்திருக்கிறதோ, அவ்வளவுதான் குத்தகை—25 சதவிகிதம் விளைந்திருந்தால் அவ்வளவுதான் குத்தகை என்றும் சொன்னார்கள். இதை நிர்ணயம் பண்ணுவதிலே ஏகப்பட்ட தகராறுகள் வரும். நாம் 25 சதவிகிதம் விளைச்சல் என்று சொல்வோம். அங்குள்ள அதிகாரிகள், நிலச்சுவாந்தார்களுக்குச் சாதகமாக 50 சதவிகிதம் விளைந்திருக்கிறது என்று சொல்வார்கள். ஆகவே, இந்தத் தகராறுகள் எல்லாம் அதிகமாக வருமே, அந்தந்த ஆண்டுகள் குத்தகையையே கட்ட முடியாமல் சங்கடப்பட்டு கோர்ட்டுக்குப் போய் இன்னல் படும்போது, பழைய குத்தகைப் பாக்கியைக் கட்ட வேண்டுமென்று சொல்ல முடியுமா? ஆகவே, அதை முழுவதும் தள்ளுபடி செய்ய வேண்டுமென்ற எங்களுடைய திருத்தத்தை நாங்கள் வற்புறுத்து கிறோம்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் குத்தகை பாக்கியைப் பொறுத்தவரைக்கும் இந்த அரசு எம்மாதிரியான திட்டங்களை எல்லாம் கொண்டு வந்து நிறைவேற்றியிருக்கிறது என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். 1381-வது பசலி, அதாவது 1972வது ஆண்டு பசலியில் மட்டுமே குத்தகை கட்டாவிட்டால் அதற்கு முன்னாலே இருந்தது எல்லாமே போய் விடும் என்று திராவிட முன்னேற்றக் கழக அரசு கொண்டு வந்தது. அதை இங்கே நம்முடைய அருமைச் சகோதரர் திரு. உத்திராபதி சொன்னபொழுது, அதிலே இருந்ததை விட இந்த அரசு தீவிர

மாகக் கொண்டு வந்தது என்று சொன்னார்கள். அது எப்படி என்றால், அது குழவிக் கல்லில் போட்டு மாவு அரைப்பதுபோல, இப்பொழுது மில்லில் மாவு அரைப்பதுபோல. அதிலே இருக்கிற சங்கடம் என்னவென்றால், 1381-வது பசலியில் கட்டாமல், 1380-வது பசலியில் கட்டியிருந்தால் தவணை முடிந்துவிடும், 1382-வது பசலியில் கட்டியிருந்தால் தவணை முடிந்துவிடும். இந்த அரசு ¼ பாகம் கட்டியிருந்தாலும் சரி, அல்லது 10 சதவிதம் கட்டியிருந்தாலும்—எந்தப் பசலியிலே எவ்வளவு கட்டியிருந்தாலும் சரி. எல்லாவற்றையும் சேர்த்து 5 ஆண்டுகளுக்குக் கட்ட வேண்டியதை இந்த அரசம் செய்யவில்லை. இந்த அரசும் செய்கின்ற அளவுக்கு அந்தச் சந்தர்ப்பம் வரவில்லையென்று சொல்லிவிடுகிறேன். ஆனால் 5 ஆண்டுகளுக்குக் கட்டப்பட வேண்டியதை, அந்த 5 ஆண்டுகளை எப்பொழுது வேண்டுமானாலும் கொஞ்சம் கொஞ்சமாக, இரண்டு தடவையோ, மொத்தமாக ஒரு வாரம் கட்டியிருந்தால் மற்றவர்கள் எல்லாம் கட்ட வேண்டியதில்லை என்று இந்த அரசு நல்லபடி கொண்டு வந்து நிறைவேற்றியிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 1-40)

அதைப் போல், சட்டத்தை வேறு யாரும் கொண்டு வரவில்லை. நான் ஒரு உதாரணம் அளிக்கும்போது சொன்னேன், திருவாரூர், மன்னார்குடி, முத்துப்பேட்டை, திருத்துறைப்பூண்டி ஆகிய பகுதிகளில் தண்ணீரே இருந்தது, 15 நாட்கள்; இரண்டு அடி தண்ணீர் இருந்தது. அங்கே எப்படி விளைந்திருக்கும்? விளையாமல் அவர்களால் எப்படிக் கொடுக்க முடியும் என்பதை நான் கோடிட்டுக் காட்டி இருக்கிறேன். ஆகவே, நான் தெரிவித்துக் கொள்வது, பானையிலே இருந்தால்தான் அகப்பையிலே வரும். விளையவே இல்லை என்கிறபொழுது அவர்களிடத்திலே 10 தவணையிலே கட்டு, 20 தவணையிலே கட்டு என்றால் எப்படிக் கட்டுவார்கள்? கட்ட முடியாது. ஆகவே, இனிமேல் விளைந்தால் அதற்குத்தான் பாக்கியே ஒழிய இதற்கு முன்னாலே விளையாததற்கும் வாங்குவது என்றால் வட்டிக்கு வட்டி போட்டு வாங்குகிற பழைய மிராசுதார்களுடைய கணக்காகும். இது மிராசுதார்களுடைய அரசல்ல. ஆகவே இதில் உங்களுக்கு எந்தவிதமான சந்தேகமும் தேவையில்லை. விளையவில்லையென்றால் அவர்களிடத்தில் குத்தகை வாங்கப்போவதில்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி: இது முந்தைய பாக்கி; போன ஆண்டு அதற்கு முன்னாலே இருக்கிற பாக்கிகளை நான்கு தவணைகளில் வசூல் செய்யவேண்டுமென்று சொல்லி இருக்கிறீர்கள். ஆகவேதான் சொல்கிறேன். அந்தந்த ஆண்டுகளில் இருக்கிற பாக்கிகளைக் கொடுக்க முடியாமல் இருக்கிறபோது, பழைய பாக்கிகளை எப்படிக் கொடுக்க முடியும்? முன்பு விளைந்தது, விளைய





வில்லை என்று அப்போது எழுதி வைத்திருப்பார்கள். அதையெல்லாம் கொடுக்க முடியாத நிலைமை இருக்கிறதாலே, இதை முழுமையாகத் தள்ளுபடி செய்ய வேண்டும். நான்கு தவணைகளில் வசூல் செய்யலாம் என்று விவசாயிகளை இழுக்கடிக்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எல். டி. சோமசுந்தரம்: நான்கு தவணைகளில் அவர்கள் எவ்வளவு கட்ட வேண்டுமோ அவ்வளவு வசூலிக்கப்பட மாட்டாது. நான் இதைச் சொல்வதற்குக் காரணம், இந்த அவையின் மூலம் அதிகாரிகள் தெரிந்து கொள்ள வேண்டுமென்பதற்காகச் சொல்கிறேன். அதிகாரிகளுக்கு நீங்களும் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்த நான்கு தவணைகளில் எவ்வளவு தரவேண்டுமோ அதை நான்காகப் பிரித்து வசூல் செய்ய முடியாது; வசூல் செய்யக்கூடாது. ஆனால் எவ்வளவு விளைந்திருக்கிறது என்று பார்த்து 20 சதவிதத்தை விட குறைந்திருந்தால், அப்படி குறைந்திருப்பதன் ரேசியோ எடுக்க வேண்டும். வறட்சி என்றால் தண்ணீர் தீர்வை தள்ளப்பட்டிருக்கிறது; வாய்தாப் பணம் தள்ளப்பட்டிருக்கிறது. யாருக்குத் தள்ளப்பட்டிருக்கிறது என்றால் 50 சதவிதத்திற்கு குறைந்தவர்களுக்கு தண்ணீர் தீர்வை வாய்தாப் பணம் தள்ளப்பட்டிருக்கிறது. ஆகவே குத்தகை எங்கெங்கே கட்ட வேண்டியிருக்கிறதோ அந்த இடத்திலே எல்லாம் தண்ணீர்த் தீர்வை, வாய்தாப் பணம் தள்ளப்பட்டிருந்தால் அதையே ஒரு அத்தாட்சியாக வைத்துக்கொண்டு அங்கே 50 சதவிதத்திற்கு குறைவாகத்தான் விளைந்திருக்கிறது என்று சொல்லலாம். அது பதிவாகி ரெக்கார்டாகி இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, தோல்வியுற்றது.

பிரிவு 5 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

பிரிவுகள் 6 முதல் 16 வரையில் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

அட்டவணை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி— அட்டவணை சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்".

மாண்புமிகு திரு. எல். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்:

"கீழ்க்கண்டவற்றை அட்டவணையோடு இணைத்துக் கொள்ளவும்".

[திரு. எல். டி. சோமசுந்தரம்] [1984 ஏப்ரல் 28

மதுரை மாவட்டம்.

**மதுரை வடக்கு வட்டம்—கிராமங்கள்:** 1. சமயநல்லூர், 2. தேனூர். 3. வைரச்சிகுளம்.

**மதுரை தெற்கு வட்டம்—கிராமங்கள்:** 1. தென்பலஞ்சி, 2. கொச்சடை, 3. ஐராவதநல்லூர், 4. மதுரை-9, 5. தோட்டகுளம் கண்மாய் மற்றும் பல, 6. பலங்கி, 7. தனக்குளம்கலம், 8. மாடகுளம், 9. கொடிமங்கலம்.

**திலக்கோட்டை வட்டம்—கிராமங்கள்.** 1. சோழவந்தான், 2. பேட்டை, 3. சோலைக்குறிச்சி, 4. முள்ளிபள்ளம், 5. மண்ணாடிமங்கலம், 6. குருவித்துறை, 7. மேலக்கால், 8. கச்சிராயிருப்பு, 9. திருவேடகம், 10. சிசபம், 11. டி.வி. நல்லூர், 12. ஆண்டிப்பட்டி, 13. காட்டான்குளம், 14. தனிச்சியம், 15. வடுக பட்டி, 16. கொண்டயம்பட்டி, 17. நாச்சிகுளம், 18. நீரதான், 19. பொம்மு நாய்க்கன்பட்டி, 20. குலிசெட்டிபட்டி, 21. பொம்மயகவுண்டன்பட்டி, 22. சிவ ஞானபுரம், 23. சித்ரகல்நத்தம், 24. பிள்ளையார்நத்தம், 25. மாட்கோட்டை, 26. மேட்டுப்பட்டி, 27. பட்லகுண்டு, 28. அலங்காநல்லூர், 29. சொக்க லிங்கபுரம், 30. ஆதனூர், 31. குன்டுவாராயன்கோட்டை, 32. பண்ணைபட்டி, 33. மேலசின்னம்பட்டி, 34. சம்பாகுளம், 35. ப. புதுப்பட்டி, 36. சின்ன எலந்தன்குளம், 37. கே. மாயவரம், 38. மாரியம்மான் குளம், 39. கல்வேலி பட்டி, 40. பெரிய எலந்தன்குளம், 41. திருமால்நத்தம், 42. கலில்குருவித்துறை 43. விளம்பட்டி, 44. சொக்கபட்டி, 45. ஆயன்குருவித்துறை, 46. இ. ராமநாய்க் கன்பட்டி. 47. டி. புதூர். 48. சின்னநாய்க்கன்பட்டி, 49. குலசேகரன் கோட்டை.

**பெரியகுளம் வட்டம்—கிராமங்கள்:** 1. கோவிந்தநகரம், 2. அம்பாசமுத் திரம், 3. அல்லிநகரம், 4. குப்பிநாய்க்கன்பட்டி, 5. சாருதாலி, 6. ராமகிருஷ்ணா புரம், 7. பாளையகோட்டை, 8. பாலகொம்பை, 9. தொப்பம்பட்டி, 10. கடமலை குண்டு, 11. மயிலாடும்பாறை, 12. குன்னூர், 13. கோவில்பட்டி, 14. எஸ்.எஸ். புரம், 15. வள்ளல்நதி என்கிற கண்டமனூர், 16. புதுக்கோட்டை, 17. மேல் மங்கலம், 18. தாமரைக்குளம், 19. வடவீரநாய்க்கன்பட்டி, 20. தென்கரை, 21. வடகரை, 22. கீழ வடகரை, 23. ஜெயமங்கலம். 24. சில்வார்பட்டி, 25. குள்ளபுரம். 26. கங்குவார்பட்டி, 27. தேவதானம்பட்டி, 28. வீரபாண்டி, 29. குள்ளபுரம், 30. கோட்டூர், 31. கோட்டபுலி, 32. அலகுபட்டி, 33.. சப்பம்பு, 34. லட்சுமிபுரம், 35. கோட்டைபட்டி, 36. அம்மாச்சியாபுரம், 37. கண்டமனூர், 38. ராமச்சந்திரபுரம், 39. ஆத்தங்கரைப்பட்டி, 40. சக்கம்மாபட்டி, 41. நரசிங்கபுரம், 42. தங்கம்மாள்புரம், 43. தர்மராஜபுரம், 44.. அம்மகுண்டு. 45. வருசநாடு, 46. செங்குளம், 47. ஒட்டணை, 48. அய்யனார்கோவில். 49. கொம்பு காரன்புளியூர், 50. மேலபட்டி, 51. அரைசாமிபுரம், 52. சொர்ணதேவன்பட்டி,



1984 ஏப்ரல் 28] [திரு. எல். டி. சோமசுந்தரம்]

53. அழகாபுரி, 54. சேவுநிலையம், 55. கோவிந்தபட்டி, 56. ஆவாரம்பட்டி, 57. மொட்டனூத்து, 58. சிந்துவாம்பட்டி, 59. கல்லுவார்பட்டி, 60. நொட்டார்பட்டி, 61. பெரிய குளம், 62. பங்களாபட்டி.

**உத்தமபாளையம் வட்டம்—கிராமங்கள்:** 1. கோடி, 2. பி. மீனாட்சிபுரம், 3. பூதிபுரம், 4. கோடங்கிபட்டி, 5. சின்னமனூர், 6. கருகாட்டான்குளம், 7. பூதநாதபுரம்.

**கொடைக்கானல் வட்டம்—கிராமங்கள்.**—1. மன்னவனூர், 2. கூக்கல், 3. பூண்டி, 4. பூம்பாறை, 5. வில்பட்டி.

**திண்டுக்கல் வட்டம்—கிராமங்கள்.**—1. ரெட்டியார்பத்திரம், 2. அம்மாபட்டி, 3. மாங்கரை, 4. காமாட்சிபுரம், 5. வெள்ளோடு, 6. பலங்காநூது, 7. நீலமலை கோட்டை, 8 தேத்துபட்டி, 9. கோடல்வாரி, 10. பழைய கன்னிவாடி, 11. சத்ரபட்டி, 12. கசவனம்பட்டி, 13. இந்தலகாடு, 14. போடிகாமன்வாடி, 15. சிலசாரு, 16. நரசிங்கபுரம், 17. ஆத்தூர், 18. பாளையங்கோட்டை, 19. பாரைபட்டி, 20. சித்தரேவு, 21. அய்யம்பாளையம், 22. கீழகோட்டை, 23. தோப்பம்பட்டி, 24. கம்பிலியம்பட்டி, 25. முரிலைகோட்டை, 26. அம்பாதுரை, 27. என். பஞ்சம்பட்டி, 28. வீரக்கால், 29. அம்மாபட்டி, 30. வக்கம்பட்டி, 31. பிளாலைபட்டி, 32. அகரம், 33. தாடிகொம்பு, 34. சிலபாடி, 35. முள்ளிபாடி, 36. தாமரைபாடி, 37. பெரியகோட்டை, 38. கோவிலூர், 39. அடியநூது, 40. பன்னபட்டி, 41. பாலகிருஷ்ணாபுரம், 42 தோட்டநூது, 43. செட்டிநாய்க்கன் பட்டி, 44. அலகுவார்பட்டி.

**வேடசந்தூர் வட்டம்—கிராமங்கள்**—1. வேடசந்தூர், 2. மரம்பாடி, 3. நல்லம்மார்கோட்டை, 4. கல்வார்பட்டி, 5. குட்டம், 6. கூவக்கம்பட்டி, 7. நாதுபட்டி, 8. பூதபுரம். 9. நாகதியம்கோட்டை, 10. எரியோடு, 11. இ. சித்தூர், 12. வெல்லம்பட்டி, 13. ஸ்ரீராமபுரம், 14. பாலபட்டி, 15. மால்வார்பட்டி, 16. குளத்துபட்டி. 17. வேம்பார், 18. நல்லூர், 19. நாகயகோட்டை, 20. உசிலம்பட்டி.

**உசிலம்பட்டி வட்டம்—கிராமங்கள்.**—1. வடக்கத்தியான்பட்டி, 2. சப்ளார், 3. சங்கரலிங்கபுரம். 4. அத்திபட்டி. 5. காளப்பன்பட்டி, 6. எழுமலை, 7. ஆலபுரம், 8. சிலநாயக்கன்பட்டி, 9. நாகமநாய்க்கன்பட்டி, 10. மல்லபுரம், 11. வங்கிநாய்க்கன்பட்டி, 12. பொம்மம்பட்டி, 13. மேலதிருமாணிக்கம், 14. குன்னூர் பட்டி, 15. செல்லம்பபுரம்.

## இராமநாதபுரம் மாவட்டம்.

முதுகுளத்தூர் வட்டம்—கிராமங்கள்.—1. கொளுந்துறை, 2. வளநாடு, 3. மாரந்தை, 4. நொக்காகோட்டை, 5. கொண்டுநல்லான்பட்டி, 6. டி. கரிசல் குளம், 7. எஸ். தரைக்குடி, 8. திருமாலுகந்தக்கோட்டை, 9. சிக்கல், 10. பேய்க்குளம், 11. டி. கீரந்தை, 12. வாலிநோக்கம், 13. சிறுகுளம், 14. பணிவாசல், 15. ஆதங்கொத்தங்குடி, 16. ஏர்வாடி, 17. இதம்பாடல்.

கமுதி வட்டம்—கிராமங்கள்.—1. முடியனார்கோட்டை, 2. நீராவி, 3. முதல்நாடு, 4. வில்லானேந்தல், 5. எம். புதுக்குளம், 6. அரியமங்கலம், 7. கே. வேப்பங்குளம். 8. இடிவிலகி. மாவிலங்கை, 10. கொத்தங்குளம், 11. இளவனூர், 12. என். கரிசல்குளம், 13. நாராயமங்கலம். 14. திம்மநாதபுரம், 15. டி. வாலசுப்ரமணியபுரம், 16. பி. முத்துராமலிங்கபுரம்.

ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டம்—கிராமங்கள்.—1. வாட்ராப், 2. எஸ். கோடிகுளம், 3. கன்சாபுரம், 4. சுந்தரபாண்டியம், 3. டபிள்யூ. புதுப்பட்டி, 6. நாத்தம்பட்டி, 7. சிவந்திபட்டி, 8. மம்சாபுரம்.

மானாமதுரை வட்டம்—கிராமங்கள்.—1. பரப்பாகுடி, 2. தேளி மங்கலக்குடி, 3. வடமானேந்தல். 4. சிறுகுடி. 5. கணக்கன்குடி, 6. வி. கரிசல்குளம், 7. மணலூர், 8. புதூர், 9. தாந்தை, 10. ராஜகம்பீரம். 11. பெருங்கொட்சேரி, 12. மாநாடு.

பரமக்குடி வட்டம்—கிராமங்கள்.—1. உரபுளி. 2. கே. வலசை. 3. சிரக்கிக் கோட்டை, 4. செவ்வூர், 5. நாகாச்சி, 6. முதலூர். 7. வி. வலனூர், 8. பகைவென்றி .9 மஞ்சக்கொல்லை.

இளையான்குடி வட்டம்—கிராமங்கள்.—1. சாலைக்கிராமம், 2. சமுத்திரம், 3. வளமநேந்தல், 4. என். கீரனூர், 5. சிவலந்தை, 6. சாத்தனூர், .7. புதுக்கோட்டை, 8. என். ஆண்டக்குடி, 9. கோட்டையூர், 10. கண்ணமங்கலம், 11. நெஞ்சத்தூர், 12. திருவடனூர், 13. நாகமுகசுந்தர்குடி. 14. விஜயன்குடி, 15. உத்தமனூர், 16. காரைக்குளம், 17. மேலத்துறையூர், 18. கல்கராசன் கோட்டை, 19. தகழூர், 20. உதயனூர், 21. அரண்மனைக்கரை. 22. காட்டனூர், 23. மருத்தூர், 24. சூராணம், 25. அக்கரவயல், 26. வல்லக்குளம், 27. வண்டல், 28. அலாபிராமம், 29. விசவனூர், 30. பெரியார்சேரி, 31. கோபக்குடி, 32. இலமனூர், 33. நகரக்குடி, 34. அவியதுரை, 35. வளக்கவி, 36. எமனேஸ்வரம், 37. குமாரக்குறிச்சி.

சிவகங்கை கிராமங்கள்.—1. கல்குரணி, 2. இடைக்காட்டூர், 3. வேம்பத்தூர், 4. கண்ணாரிருப்பு, 5. பதமத்தூர், 6. வீ. புதுக்குளம், 7. வலுத்தனி.





## திருநெல்வேலி மாவட்டம்.

திருநெல்வேலி வட்டம்—கிராமங்கள்.—1. சிந்துபூந்துறை, 2. மேலவீர ராகவபுரம்.

பாளையங்கோட்டை வட்டம்—கிராமங்கள்.—1. திம்மராஜபுரம், 2. திரு வன்னநாதபுரம், 3. மேலப்பாளையம், 4. வெள்ளக்கோயில், 5. பாளையஞ்செட்டி குளம், 6. குலவணிகர்புரம், 7. கீழவீரராகவபுரம், 8. பாளையங்கோட்டை (மனக்காவலம் பிள்ளை நகர் சேர்த்து), 9. முத்தூர், 10. சிவந்திப்பட்டி, 11. இட்டேரி, 12. பார்ப்பகுளம், 13. நொச்சிகுளம், 14. கீழநத்தம், 15. மணப் படைவீடு, 16. மேலப்பாட்டம், 17. நம்வக்குறிச்சி, 18. கீழப்பாட்டம், 19. கான்சாபுரம், 20. அரியகுளம், 21. டி. எம். கோலுண்டுபுரம், 22. சிவலப்பேரி, 23. மருதூர், 24. உடையார்குளம், 25. மேலபுத்தனேரி, 26. பெரியகுளம், 27. வேலன்குளம், 28. உத்தமபாண்டியன்குளம், 29. அவினாப்பேரி, 30. எம்.டி.என். புரம், 31. கே. டி. என். புரம், 32 விளாகம், 33. கருப்பன்துறை, 34. முன்னீர் பள்ளம், 35. குன்னத்தூர், 36. மேலத்திடியூர், 37. செங்குளம், 38. திடியூர், 39. பொன்னாக்குடி, 40. தருவை.

தென்காசி வட்டம்—கிராமங்கள்.—1. மாயமான்குறிச்சி, 2. தென்காசி, 3. ஐயனார்குளம், 4. ஆலங்குளம், 5. சிவலார்க்குளம், 6. நெட்டூர், 7. இடைகால், 8. கிருஷ்ணாபுரம், 9. நெடுவயல், 10. பாட்டபத்து, 11. மேலகரம், 12. மத்தாளம்பாறை, 13. புலியூர், 14. குணராமநல்லூர், 15. திப்பணம்பட்டி, 16. ஆவுடையானூர், 17. கல்லூரணி, 18. கடையநல்லூர், 19. காசிதர்மம், 20. பட்டகுறிச்சி, 21. திருச்சிற்றம்பலம், 22. குலசேகரபட்டி, 23. ஆண்டிப் பட்டி, 24. கீழப்பாவூர், 25. ஐயன்சுரந்தை, 26. குற்றாலம், 27. வட கரை, 28. தென்பொழி, 29. கணக்கப்பிள்ளை வலசை, 30. பன்பொழி.

செங்கோட்டை வட்டம்—கிராமங்கள்.—1. செங்கோட்டை, 2. புலியரை, 3. புதூர், 4. அச்சன்புதூர், 5. எலத்தூர், 6. ஆய்க்குடி, 7. சாம்பவர்வடகரை.

வி. கே. புதூர் வட்டம்—கிராமங்கள்.—1. பெத்தநாடார்பட்டி, 2. குலய னேரி, 3. நயினாரகரம், 4. சிவகுருநாதபுரம். 5. ஊர்மேலலகையன், 6. கம்பனேரிப் புதுக்குடி, 7. வீராணம், 8. அச்சன்குட்டம், 9. கருவந்தா, 10 வாடி, 11. குறிச் சம்பட்டி. 12. அகரம், 13. வெள்ளகல், 14. பொகநல்லூர், 15. வல்லம், 16. ராஜ கோபாலபேரி, 17. சொக்கம்பட்டி, 18. வி. கே. புதூர், 19. நாரணபுரம். 20. அத்திகுளம், 21. கலுநீர்குளம், 22. சுரந்தை.

அம்பாசமுத்திரம் வட்டம்—கிராமங்கள்.—1. முக்கூடல், 2. ஆழ்வார் குறிச்சி, 3. மேலஆம்பூர், 4. பாப்பான்குளம், 5. பத்தமடை (எம். ஜி. ஆர். நகர்), 6. பொட்டல்புதூர், 7. கடையம், 8. மேலசேவல், 9. சேரன்மகாதேவி (அருணா தாதன்கோவில் மனுடை கிராமம்).

[திரு. எஸ். டி. சோமசுந்தரம்] [1984 ஏப்ரல் 28

**நாங்குநேரி வட்டம்—கிராமங்கள்.**—1. நாங்குநேரி, 2. தளபதிசமுத்திரம், 3. பருத்திபாடு, 4. பூலம், 5. சிங்கிகுளம், 6. களக்காடு, 7. பொத்தை, 8. விஜய நாராயணம், 9. மூக்கரைப்பொத்தை, 10. புளியகுறிச்சி, 11. ஏருவாடி, 12. திருக்குறங்குடி.

**திருச்செந்தூர் வட்டம்—கிராமங்கள்.**—1. அம்மன்புரம், 2. வீரமாணிக்கம் பட்டி (மறுவடை கிராமம்), 3. மூலக்கரை, 4. கந்தசாமிபுரம், 5. கனம், 6. பள்ளிபத்து, 7. காயமொழி, 8. மேலதிருச்செந்தூர், 9. கீழதிருச்செந்தூர், 10. ப்ரமன்குறிச்சி, 11. செம்மரிகுளம், 12. நங்கைமொழி, 13. மெஞ்ஞானபுரம், 14. மணடுதண்டபத்து, 15. லஷ்மிபுரம், 16. காலன்குடியிருப்பு, 17. உடன்குடி, 18. மணப்பாடு, 19. ஆறுமுகனேரி, 20. மேலஆத்தூர், 21. ஆத்தூர், 22. சேந்த மங்கலம், 23. சேத்துக்குவைத்தான், 24. அங்கமங்கலம், 25. புன்னைபூர், 26. காயல்பட்டினம் (வடக்கு), 27. காயல்பட்டினம் (தெற்கு), 28. நல்லூர், 29. சுகந்தலை, 30. புன்னக்காயல் (அழிந்துபோன கிராமம்), 31. கச்சனாவிளை, 32. மூக்குப்பேரி, 33. ராஜபதி, 34. ஆழ்வார்திருநகரி, 35. அழகியமணவாள புரம், 36. ஆதிநாதபுரம், 37. தேமங்குளம், 38. வெள்ளமடம், 39. தென் திருப்பேரை 40. கும்கல்லூர், 41. மாவிடுபண்ணை, 42. திருக்களூர், 43. கடயனோடை, 44. திம்மவிருடையபுரம், 45. நாசரேத், 46. உடையார்குளம், 47. குரிப்பன்குளம்.

**ஸ்ரீவைகுண்டம் வட்டம்—கிராமங்கள்.**—1. வேலூர் கஸ்பா, 2. ஆதிச்ச நல்லூர், 3. தோழப்பன்பண்ணை, 4. பத்மநாபமங்கலம், 5. ஸ்ரீவைகுண்டம், 6. ஸ்ரீ. புதுக்குடி, 7. பராக்கிரமபாண்டி, 8. ஸ்ரீபராங்குசநல்லூர், 9. பேரூர், 10. திருப் புளியங்குடி, 11. கே. வரதராஜபுரம், 12. ஆரியபாநல்லூர், 13. ஸ்ரீமூலக்கரை, 14. பெருங்குளம், 15. கே. அப்பன்கோவில், 16. பே. கஸ்பா, 17. நட்டாத்தி, 18. டி. செட்டிகுளம், 19. தண்ணுத்து, 20. இருவப்பபுரம், 21. மங்கலக்குறிச்சி, 22. சிவகளை, 23. சாயர்புரம், 24. ஆறுமுகமங்கலம், 25. கொட்டாரக்குறிச்சி, 26. ஸ்ரீதொண்டநல்லூர், 27. வாழவல்லன், 28. டி. செட்டியபத்து, 29. கொற்கை, 30. கொடுங்கனி, 31. மாரமங்கலம், 32. முக்கனி, 33. அகரம், 34. மஞ்சநீர்காயல், 35. பழையகாயல், 36. வல்லநாடு கஸ்பா, 37. வடவல்லநாடு, 38. கலியாவூர், 39. உமரிகுடி, 40. சிங்காத்தாகுறிச்சி, 41. எம். கோரம்பத்து, 42. எம். புதுகிராமம், 43. கீழபுத்தனேரி. 44. பூவாணி, 45. அலந்தா, 46. வசவப்பபுரம், 47. அகிகுடி, 48. முத்தலங்குறிச்சி, 49. விட்டிலாபுரம், 50. வி. கோவில்பட்டி, 51. செய்துங்கநல்லூர், 52. கருங்குளம், 53. டி. காரசேரி, 54. சேரகுளம், 55. வல்லகுளம், 56. கால்வாய், 57. சேக்காரக்குடி, 58. வடக்கு காரசேரி, 59. தெய்வச்செயல்புரம், 60. எல்லைநாயக்கன்பட்டி, 61. கீழவல்ல நாடு, 62. நாவல்காடு, 63. மணக்கரை, 64. அரம்பன்னை, 65. ஆள்வார்கள் குளம், 66. கொங்கராயன்குறிச்சி, 67. செட்டிமல்லன்பட்டி.



1984 ஏப்ரல் 28] [திரு. எஸ். டி. சோமசுந்தரம்]

**சாத்தான்குளம் வட்டம்—கிராமங்கள்.**—1. சாத்தான்குளம், 2. சாஸ்தாவி நல்லூர், 3. பன்னம்பாறை, 4. ஸ்ரீவெங்கடேஸ்வரபுரம், 5. மீரான்குளம்.

**தூத்துக்குடி வட்டம்—கிராமங்கள்.**—தூத்துக்குடி டவுன், 2. முடிவைத்தா னேந்தல், 3. கோரம்பள்ளம், 4. குலையன்கரிசல், 5. குமாரகிரி, 6. காட்டாலன் குளம், 7. வர்த்தகரெட்டிபட்டி, 8. திம்மராஜபுரம், 9. கூட்டுடன்காடு, 10. பேரூரணி, 11. முல்லக்காடு, 12. அல்லிக்குளம், 13. மேலதட்டப்பாறை, 14. கீழதட்டப்பாறை, 15. உமரிகோட்டை, 16. சேர்வைகாரன்மடம், 17. முத்துசாமி புரம், 18. அய்யன்அடைப்பு, 19. ராமசாமிபுரம்.

**கோவில்பட்டி வட்டம்—கிராமங்கள்.**—1. ஊத்துபட்டி, 2. இத்தாம்பட்டி, 3. சிவந்திப்பட்டி, 4. இட்டான்குளம், 5. இலுப்பையூரணி, 6. குமாரரெட்டியா புரம், 7. உருலக்குடி, 8. காமநாயக்கன்பட்டி, 9. அச்சன்குளம், 10. தொட்டாம் பட்டி, 11. முடுக்கலகன்குளம், 12. குருவிநாதம்.

**சிவகிரி வட்டம்—கிராமங்கள்.**—1. திருமலாபுரம், 2. நாரணபுரம், 3. புளியங் குடி, 4. வாசுதேவநல்லூர், 5. சிந்தாமணி, 6. டி. என். புதுகுடி, 7. நகரம், 8. தலைவன்கோட்டை, 9. தேவிபட்டினம், 10. குமாரபுரம், 11. சிவகிரி, 12. ராயகிரி.

**சங்கரன்கோவில் வட்டம்—கிராமங்கள்.**—1. மூக்கூட்டுமலை, 2. இளையரச னேந்தல், 3. வீரசிகாமணி, 4. களப்பாகுளம், 5. சங்கரன்கோவில், 6. வாடிக் கோட்டை, 7. தெற்கு சங்கரன்கோவில், 8. வெள்ளான்குளம், 9. எச்சாண்டா, 10. கரிசாதன். 11. மடத்துப்பட்டி, 12. வெட்டியம்பட்டி, 13. திருவேட்ட நல்லூர், 14. பட்டாடைகட்டி, 15. சேந்தமங்கலம், 16. அரியநாயகிபுரம், 17. சித்திரம்பட்டி, 18. புளியங்குளம், 19. புன்னவனம், 20. பொய்கை, 21. பெரிய கோவிலங்குளம், 22. கரிவலம்வந்தநல்லூர், 23. பெருமாள்பட்டி, 24. பண்டபுளி, 25. பனையூர்.

**ஓட்டப்பிடாரம் வட்டம்—கிராமங்கள்.**—1. குலசேகரநல்லூர், 2. ஆரைக் குளம், 3. ஓட்டப்பிடாரம், 4. தெற்கு அவாரங்காடு, 5. வடக்கு அவாரங்காடு, 6. ஜம்புலிங்கபுரம், 7. தெற்கு வீரபாண்டியபுரம், 8. சில்லாநத்தம், 9. பாஞ்சாலங் குறிச்சி, 10. சாமிநாதம், 11. புதியம்புத்தூர், 12. சித்தாலக்கோட்டை, 13. முல்லூர், 14. சந்நரகிரி, 15. ஆதனூர், 16 வாழசமுத்திரம், 17. கே. தலவாய் புரம், 18. ஜெகவீரபாண்டியபுரம், 19. கொல்லம்பரம்பு, 20. எஸ். குமாரபுரம், 21. கே. சண்முகபுரம், 22. நாகம்பட்டி, 23 குதிரிகுளம், 24. சில்லன்குளம், 25. பசுவந்தனை, 26. குமாரரெட்டியாபுரம் 27. மருதன்வல்வு .நாரைக்கிணறு. 28. சவரிமங்களம். 29. முரம்பன், 30. வேலபாண்டியபுரம், 31. எஸ். கைலாச புரம், 32. அக்கநாயக்கன்பட்டி, 33. புதூர்பாண்டியபுரம், 34. ஜக்கம்மாள்புரம், 35. வேப்பலோடை.

[திரு. எஸ். டி. சோமசுந்தரம்] [1984 ஏப்ரல் 28

**விளாத்திகுளம் வட்டம்—கிராமங்கள்.**—1. சூரங்குடி, 2. கே. தங்கம்மாள்புரம், 3. எம். சண்முகபுரம், 4. பெரியசாமிபுரம், 5. சிவபெருங்குன்றம், 6. வேம்பார், 7. அரியநாயகிபுரம், 8. பல்லக்குளம், 9. இ. வேலாயுதபுரம், 10. எம். குமாரசக்கனபுரம், 11. மேலாண்மை, 12. மகாராஜபுரம், 13. தாந்தவேரி, 14. எம். சுப்பிரமணியபுரம், 15. பி. ஜெகவீரபுரம், 16. மதவபுரம், 17. கே. துரைசாமிபுரம், 18. என். ஜெகவீரபுரம், 19. லட்சுமிபுரம், 20. முத்தையாபுரம், 21. பூதாலபுரம், 22. கந்தசாமிபுரம், 23. மல்லேஸ்வரபுரம், 24. வடமலபுரம், 25. சப்பையாபுரம், 26. ராமசந்திரபுரம், 27. மேலக்கல்லூரணி, 28. காடல்குடி, 29. மாவிலோடை, 30 சின்னூர், 31. தலைக்காட்டுபுரம், 32. படர்ந்தபுளி, 33. சித்தவாணிக்கன்பட்டி, 34. பெரிலோவன்பட்டி, 35. கருப்பூரலபுரம், 36. மாத்தாண்டம்பட்டி.

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

அட்டவணை, திருத்தப்பெற்றபடி, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்** : தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு பயிரிடும் குத்தகைதாரர்கள் (தனி விதித்துறைகள்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 21/1984), திருத்தப்பெற்றபடி, நிறைவேற்றப்பெற வேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு திருத்தப்பெற்றபடி நிறைவேற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: பேரவை முன்னுள்ள கேள்வி—

"தமிழ்நாடு 1984 ஆம் ஆண்டு வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பயிரிடு குத்தகைதாரர்கள் (தற்காலிக நிவாரணம்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 22/1984) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற்றது.



1984 ஏப்ரல் 28]

பிரிவு 2.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : பேரவை முன்னுள்ள கேள்வி—

"பிரிவு 2 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்."

**திரு. சோ. அழகர்சாமி** : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன் :—

"பிரிவு 2 உட்பிரிவு (சி)-ல் 'விவர அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பகுதிகள்' என்பதற்குப் பதிலாக 'தமிழ்நாடு முழுவதும்' என்ற வார்த்தைகளை சேர்த்துக்கொள்ள வேண்டும்."

என்னுடைய கட்சியின் சார்பிலும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலும் கொடுத்த திருத்தத்தை நான் வற்புறுத்துகிறேன். அது சம்பந்தமாக பிரிவு 2 உட்பிரிவு (சி)-ல் "விவர அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பகுதிகள்" என்பதற்கு பதிலாக "தமிழ்நாடு முழுவதும்" என்ற வார்த்தைகள் சேர்த்துக்கொள்ளப்பெற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். காரணம், இன்றைக்கு அட்டவணையில் கொடுக்கப்பட்ட பெயர்களில் சில ஊர்களின் பெயர்கள் விட்டுப் போய் இருக்கின்றன. இந்த அட்டவணையிலே சேராத பகுதிகளிலும் பாதிப்பு ஏற்பட்டு இருக்கிறது. அப்படி பல கிராமங்கள் பாதிக்கப்பட்டு இருப்பினும், அவைகளின் பெயர்கள் இங்கே குறிப்பிடப்படவில்லை. ஆகவே, அத்தனை கிராமங்களையும் சேர்ப்பதற்கு பதிலாக, தமிழகத்தில் எங்கெங்கே பாதிப்பு இருக்கிறதோ அந்தப் பகுதிகளில் எல்லாம் இந்தப் பலன் கிடைக்க நான் கொடுத்துள்ள திருத்தத்தை ஏற்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அரசாங்கம் இப்போது குத்தகை பாக்கியை ரத்து செய்யவில்லை. ஒத்தித்தான் வைத்திருக்கிறது ஓராண்டு காலத்திற்கு. அப்படி ஒத்தி வைத்து இருப்பதால் எந்தெந்தப் பகுதிகளில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதோ அந்தப் பகுதிகளில் உள்ள குத்தகை விவசாயிகள் வெளியேற்றப்படுவதினின்று தடுக்கப்பட முடியும். அமைச்சர் அவர்களும் அதை பல்வேறு விவாதங்களில் ஒப்புக்கொண்டு இருக்கிறார்கள். இந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்**: தலைவர் அவர்களே, அதற்காகத்தான் சட்டத்திலேயே 'எனேபிளிங் பவர்' அரசுக்குக் கொடுக்கப்பட்டு இருக்கிறது. எந்தெந்த கிராமங்கள் விடுபட்டுப் போய் இருக்கிறதோ அது நிச்சயமாக எக்சிகியூடிவ் ஆர்டர் மூலமாக சேர்த்துக்கொள்ளப்படும்.

திருத்தம், பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப் பெற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 3 முதல் 10 வரை பேரவையின் முடிவிற்கு விடபெற்று நிறைவேற்றப்பெற்றது.

அட்டவணை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—
" அட்டவணை சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும். "

(பிற்பகல் 1-50)

மாண்புமிகு திரு. எல். டி. சோமசுந்தரம் : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்:—

கீழ்க்கண்டவற்றை அட்டவணையோடு இணைத்துக் கொள்ளவும்.

மதுரை மாவட்டம்.

மதுரை வடக்கு வட்டம்—கிராமங்கள்: 1. சமயநல்லூர், 2. தேனூர். 3. ஊமச்சிகுளம்.

மதுரை தெற்கு வட்டம்—கிராமங்கள் : 1. தென்பலஞ்சி, 2. கோச்சடை, 3. ஐராவதநல்லூர், 4. மதுரை-9, 5. தொட்டகுளம் கண்மாய் பற்றும் பல, 6. பலஞ்சி, 7. தனகுளம்கலம், 8. மாடகுளம், 9. கொடிமங்கலம்.

திலக்கோட்டை வட்டம்—கிராமங்கள்: 1. சோழவந்தான், 2. பேட்டை, 3. சோலைக்குறிச்சி, 4. மூள்ளிபள்ளம், 5. மண்ணாடிமங்களம், 6. தூதவிதுறை, 7. மேலக்கால், 8. கச்சிராயிருப்பு, 9. திருவேடகம், 10. சிரபம், 11. டி.வி. நல்லூர், 12. ஆண்டிப்பட்டி, 13. காட்டான்குளம், 14. தனிசியம், 15. வடுக பட்டி, 16. கொண்டயம்பட்டி, 17. நாச்சிகுளம், 18. சீராதான், 19. போடி நாய்க்கன்பட்டி, 20. குளிசெட்டிபட்டி, 21. போடிபகவுண்டன்பட்டி, 22. சிவஞானபுரம், 23. சித்தாகல்நத்தம், 24. பிள்ளையார்நத்தம், 25. மாட கோட்டை, 26. பேட்டுப்பட்டி, 27. பட்லகுண்டு, 28. அலங்காநல்லூர், 29. சொக்கலிங்கபுரம், 30. ஆதனூர், 31. குண்டுவாராயன்கோட்டை, 32. பண்ணை பட்டி, 33. மேலசின்னம்பட்டி, 34. சம்பாகுளம், 35. எ. புதுப்பட்டி, 36. சின்ன எலந்தன்குளம், 37. கெ. மாயவரம், 38. மாரியம்மான்குளம், 39. கல்வேலி



பட்டி, 40. பெரிய எலந்தன்குளம், 41. திருமால்நத்தம், 42. கனில்குருவிதுறை, 43. வினம்பட்டி, 44. சொக்கபட்டி, 45. ஆயன்குருவிதுறை, 46. இ. ராம நாய்க்கன்பட்டி, 47. டி. புதூர், 48. சின்னநாய்க்கன்பட்டி, 49. குலசேகரன் கோட்டை.

பெரியகுளம் வட்டம்—கிராமங்கள்;: 1. கோவிந்தநகரம், 2. அம்பாசமுத் திரம், 3. அல்லிநகரம், 4. குப்பிநாய்க்கல்பட்டி, 5. ராஜதானி, 6. ராமகிருஷ்ணா புரம், 7. பாளையங்கோட்டை, 8. பாலகொம்பை, 9. தொப்பம்பட்டி, 10. கடமலை குண்டு, 11. மயிலாடும்பாறை, 12. குன்னூர், 13. கோவில்பட்டி, 14. எஸ். எஸ். புரம், 15. வன்னல் நதி என்கிற கண்டமனூர், 16. புதுக்கோட்டை, 17. மேல மங்கலம், 18. தாமரைக்குளம், 19. வட வீரநாய்க்கன்பட்டி, 20. தென்கரை, 21. வடகரை, 22. கீழ வடகரை, 23. ஜெயமங்களம், 24. சில்வார்பட்டி, 25. குள்ளபுரம், 26. கங்குவார்பட்டி, 27. தேவதானபட்டி, 28. வீரபாண்டி 29. குள்ளபுரம், 30 கோட்டூர், 31. கோட்டபுலி, 32. அலகுபட்டி, 33. சப்ரம்பு, 34. லட்சுமிபுரம், 35. கோட்டைப்பட்டி, 36. அம்மாச்சியாபுரம், 37. கண்டமனூர், 38. ராமச்சந்திரபுரம், 39. ஆத்தங்கரைப்பட்டி, 40. சக்கம்மாபட்டி, 41. கதிர் நாசிங்கபுரம், 42. தங்கம்மாள்புரம், 43. தர்மராஜபுரம், 44. தும்மகுண்டு, 45. வருசநாடு. 46. செங்குளம். 47. ஒட்டனை, 48. அய்யனார்கோயில், 49. கொம்பு காரன்புலியூர், 50. மேலபட்டி, 51. துரைசாமிபுரம், 52. சோனைதேவன் பட்டி, 53. அழகாபுரி, 54. சேவநிலையம், 55. கோசிங்கிபட்டி, 56. ஆவாரம் பட்டி, 57. மொட்டனூது, 58. சிந்துவர்ம்பட்டி, 59. கல்லுவார்பட்டி, 60. நொட்டார்பட்டி, 61. பெரியகுளம், 62. பங்களாபட்டி.

உத்தமபாளையம் வட்டம்—கிராமங்கள்: 1. கோடி, 2. பி. மீனாட்சிபுரம், 3. பூதிபுரம், 4. கோடங்கிபட்டி, 5. சின்னமனூர், 6. கருகாட்டான்குளம், 7. பூதநாதபுரம்.

கொடைக்கானல் வட்டம்—கிராமங்கள்: மன்னவனூர், 2. கூக்கல், 3. பூண்டி, 4. பூம்பாறை, 5. வில்பட்டி.

திண்டுக்கல் வட்டம்—கிராமங்கள்: 1. ரெட்டியார்சத்திரம், 2. அம்மாபட்டி. 3. மாங்கரை, 4. காமாட்சிபுரம், 5. வெள்ளோடு, 6. பலக்கானூது, 7. நீலமலை கோட்டை, 8. தேத்துபட்டி, 9. கோடங்வாரி, 10. பழைய கன்னிவாடி, 11. சத்ரபட்டி, 12. கசவனம்பட்டி, 13. இந்திலகாடு, 14. போடிகாமம்வாடி, 15. ஒவைசாரு, 16. நாசிங்கபுரம், 17. ஆத்தூர், 18. பாளையங்கோட்டை, 19. பாரைபட்டி, 20. சித்தரேவு, 21. அய்யம்பாளையம், 22. கீழகோட்டை, 23. தொப்பம்பட்டி, 24. கம்பிலியம்பட்டி, 25. மூரிலைகோட்டை, 26. அம்பா துரை, 27. என். பஞ்சம்பட்டி, 28. வீரக்கால், 29. அம்மாபட்டி, 30. வக்கம்

பட்டி, 31. பிளாவைபட்டி, 32. அகரம், 33. தாடிகோம்பு, 34. சிவபாடி, 35. முன்னிபாடி, 36. தாமரைபாடி, 37. பெரியகோட்டை, 38. கோவிலூர், 39. அடியனூது, 40. பள்ளபட்டி, 41. பாலகிருஷ்ணபுரம், 42. தோட்டனூது, 43. செட்டிநாய்க்கன்பட்டி, 44. அலகுவார்பட்டி.

**வேடசந்தூர் வட்டம்—கிராமங்கள்:** 1. வே. சந்தூர். 2. மாம்பாடி, 3. நல்லம்மார்கோட்டை, 4. கல்வார்பட்டி, 5. குடம், 6. கூவக்காப்பட்டி, 7. நாதபட்டி, 8. பூதபுரம், 9. நாகையன்கோட்டை, 10. எரியோடு, 11. இ. சித்தூர், 12. வெல்லம்பட்டி, 13. ஸ்ரீராமபுரம். 14. பாலபட்டி, 15. மல்வார்பட்டி, 16. குளத்துபட்டி, 17. வேம்பார், 18. தம்மனம், 19. நாகையகோட்டை, 20. உசிலம்பட்டி.

**உசிலம்பட்டி வட்டம்—கிராமங்கள்:** 1. வடக்கத்தியான்பட்டி, 2. சப்தூர், 3. சங்கரலிங்கபுரம், 4. அத்திபட்டி, 5. சாளப்பன்பட்டி, 6. எழுமலை, 7. ஆவபுரம், 8. சிலநாயக்கன்பட்டி, 9. நாகபநாய்க்கன்பட்டி, 10 மங்கலபுரம், 11. வங்கிநாய்க்கன்பட்டி, 12. போயம்பட்டி, 13. மேலதிருமாணிக்கம், 14. துன்னூர் பட்டி, 15. செல்லையாபுரம்.

## இராமநாதபுரம் மாவட்டம்.

**முதுகுளத்தூர் வட்டம்—கிராமங்கள்:** 1. கொளுந்துரை. 2. வாநாடு, 3. மாராந்தை, 4. கொக்கரகோட்டை. 5. கோண்டுநல்லான்பட்டி, 6. டி. கரிசல் குளம், 7. என். தனைக்குடி, 8. திருமாலுகந்தக்கோட்டை. 9. சிக்கல், 10. பேய்க்குளம், 11. டி. கீரந்தை, 12. மாவிநாக்கம், 13. சிறுகுளம், 14. பனிவாசல், 15. ஆதங்கொத்தங்குடி, 16. ஏர்வாடி, 17. இதம்பாடல்.

**கமுதி வட்டம்—கிராமங்கள்:** 1. முதுமன்னார்கோட்டை, 2. நீராவி, 3. பெருநாழி, 4. வில்லானேந்தல், 5. எம். புதுக்குளம், 6. அரியமங்கலம், 7. கே. வேப்பங்குளம், 8. இடிவிலகி, 9. மாவிலங்கை, 10. கோத்தங்குளம், 11. இளைஞூர், 12. என். கரிசல்குளம், 13. தாயமங்கலம். 14. திம்மநாதபுரம், 15. டி. வாலசுப்ரமணியபுரம், 16. பி. முத்துராமலிங்கபுரம்.

**ஸ்ரீவில்லிபுத்தூர் வட்டம்—கிராமங்கள்:** 1. வாட்ராப், 2. எம். கோடி குளம், 3. கன்சாபுரம். 4. சுந்தரபாண்டியம், 5. படிக்கு புதுப்பட்டி, 6. தாந்தாம்பட்டி, 7. சிவந்திபட்டி, 8. மம்சாபுரம்.

**மானாமதுரை வட்டம்—கிராமங்கள்:** பசப்பாகுடி. 2. தேளி முத்தன்குடி, 3. வடாரேந்தல், 4. சிறுகுடி, 5. கணக்கன்குடி, 6. வி. கரிசல்குளம், 7. மனலூர், 8. புதூர், 9. தாந்தை. 10. ராஜகம்பீரம், 11. பெரும்பேச்சேரி, 12. மாநாடு.





**பரமக்குடி வட்டம்—கிராமங்கள்:** 1. உரபுளி, 2. தே. வலசை, 3. சிரக்கிக் கோட்டை, 4. செவ்வூர், 5. நாகாச்சி, 6. முதலூர், 7. விருவனூர், 8. பகைவேந்திரி .9 மஞ்சக்கொல்லை.

**இளையான்குடி வட்டம்—கிராமங்கள்:** 1. சாலைக்கிராமம், 2. சமுத்திரம். 3. வளயநேந்தல், 4. என். சேனூர், 5. சிவலந்தை, 6. சாத்தனூர், 7. புதுக்கோட்டை, 8. என். ஆண்டக்குடி, 9. கோட்டையூர், 10. கண்ணமங்கலம், 11. நெஞ்சத்ஸ்ரீர், 12. திருவனூர், 13. நாகமுகண்டங்குடி, 14. விஜயாங்குடி, 15. உத்தமனூர், 16. காரைக்குளம், 17. மேலத்துறையூர், 18. கலங்காதான் கோட்டை, 19. தகலூர், 20. உதயனூர், 21. அரண்மனைக்கரை, 22. காட்டனூர், 23. முத்தூர், 24. சூரணம், 25. அக்காவயல், 26. வல்லக்குளம், 27. வண்டல், 28. ஆலவிடங்கம், 29. விசவனூர், 30. பெரும்பச்சேரி, 31. சிளயாக்குடி, 32. இலமனூர், 33. நகரக்குடி. 34. அலிமதுரை, 35. வளக்கனி, 36. எமனேஸ்வரம், 37. குமாக்குறிச்சி.

**சிவகங்கை வட்டம்—கிராமங்கள்:** 1. கல்லூரணி. 2. இடைக்காட்டூர், 3. வேம்பத்தூர், 4. கண்ணரிருப்பு. 5. பதம்த்தூர், 6. வி. புதுக்குளம், 7. வலுத்தனி.

## திருநெல்வேலி மாவட்டம்.

**திருநெல்வேலி வட்டம்—கிராமங்கள்**—1. சிந்துபூந்துறை, 2. மேலவீரராகவபுரம்.

**பாளையங்கோட்டை வட்டம்—கிராமங்கள்**—1. திம்மராஜபுரம், 2. திருவன்னதாதபுரம், 3. மேலப்பாளையம், 4. வெள்ளக்கோயில், 5. பாளையஞ்செட்டி குளம், 6. குலவணிகர்புரம், 7. கீழவீரராகவபுரம், 8. பாளையங்கோட்டை (மனக்காவலம் பிள்ளை நகர் சேர்ந்தது), 9. முத்தூர், 10. சிவந்திப்பட்டி, 11. இட்டேரி, 12. பார்ப்பகுளம், 13. நொச்சிகுளம், 14. கீழநத்தம், 15. மணப்படைவீடு, 16. மேலப்பாட்டம், 17. நடுவக்குறிச்சி, 18. கீழப்பாட்டம், 19. கான்காபுரம், 20. அரியகுளம், 21. டி. எம். கோதுண்டபுரம், 22. சிவலப்பேரி, 23. மருதூர், 24. உடையார்குளம், 25. மேலபுத்தனேரி, 26. பெரியகுளம், 27. வேலன்குளம், 28. உத்தமபாண்டியன்குளம், 29. அரினாப்பேரி, 30. எம். டி. என். புரம், 31. கே. டி. என். புரம், 32. வினைகம், 33. கருப்பன்துறை, 34. முன்னீர் பள்ளம், 35. குன்னத்தூர், 36. மேலத்திடியூர், 37. செங்குளம், 38. திடியூர், 39. பொன்னாக்குடி, 40. தருவை.

**தென்காசி வட்டம்—கிராமங்கள்:** 1. மாயமான்குறிச்சி. 2. தென்காசி, 3. ஆய்க்குடியர்குளம், 4. ஆலங்குளம், 5. சிவலார்குளம், 6. நெட்டூர், 7. இடைகால், 8. கிருஷ்ணாபுரம், 9. நெடுவயல், 10. பாட்டபத்து, 11. மேலகரம், 12. மத்தாளம்பாறை, 13. புலியூர், 14. குணராமநல்லூர், 15. திப்பனம்பட்டி, 16.

ஆவுடையானூர், 17. கல்லூரணி; 18. கடையநல்லூர், 19. கசிதர்மம், 20. பட்டக்குறிச்சி, 21. திருச்சிற்றம்பலம், 22. குலசேகரபட்டி, 23. ஆண்டிப்பட்டி, 24. இலுப்பாலூர், 25. ஐயன்சுரந்தை, 26. குற்றாலம், 27. வடகரை, 28. தென் பொழி, 29. கணக்கப்பிள்ளை வலசை, 30. பண்பொழி.

**செங்கோட்டை வட்டம்—கிராமங்கள்:** 1. செங்கோட்டை, 2. புளியரை, 3. புதூர், 4. அச்சன்புதூர், 5. இலத்தூர், 6. ஆய்க்குடி, 7. சாம்பவர்வடகரை.

**வி.கே. புதூர் வட்டம்—கிராமங்கள்:** 1. பெத்தநாடார்பட்டி, 2. குலய நேரி, 3. நயினாரகரம், 4. சிவகுருநாதபுரம், 5. ஊர்மேலழகியான், 6. கம்பனேரிப் புதுக்குடி, 7. வீராணம், 8. அச்சன்குட்டம், 9. கருவந்தா, 10 வாடி, 11. குறிச் சம்பட்டி, 12. அகரம், 13. வெள்ளகல், 14. போகநல்லூர், 15. வல்லம், 16. ராஜ கோபாலபேரி, 17. சொக்கம்பட்டி, 18. வி.கே. புதூர், 19. நாரணபுரம், 20. துத்திகுளம், 21. கலுநீர்குளம், 22. சுரந்தை.

**அம்பாசமுத்திரம் வட்டம்—கிராமங்கள்:** 1. முக்கூடல், 2. ஆழ்வார் குறிச்சி, 3. மேலஆம்பூர், 4. பாப்பான்குளம், 5. பத்தமடை (எம். ஜி. ஆர். நகர்), 6. பொட்டல்புதூர், 7. கடையம், 8. மேலசேவல், 9. சேரன்மகாதேவி (அருணா நாதன்கோவில் உள்ளடை கிராமம்).

**நாங்குநேரி வட்டம்—கிராமங்கள்:** 1. நாங்குநேரி, 3. தளபதிசமுத்திரம், 3. பருத்திபாடு, 4. பூலம், 5. சிங்கிகுளம், 6. களக்காடு, 7. போத்தை, 8. விஜய நாராயணம், 9. மூக்கரைப்பொத்தை, 10. புளியகுறிச்சி, 11. ஏருவாடி, 12. திருக்குறுங்குடி.

**திருச்செந்தூர் வட்டம்—கிராமங்கள்:** 1. அம்மன்புரம், 2. வீரமாணிக்கம் பட்டி (உள்ளடை கிராமம்), 3. மூலக்கரை, 4. கந்தசாமிபுரம், 5. கணம், 6. பள்ளிபத்து, 7. காயாமொழி, 8. மேலதிருச்செந்தூர், 9. கீழதிருச்செந்தூர், 10. பரமன்குறிச்சி, 11. செம்மறிகுளம், 12. நங்கைமொழி, 13. மெஞ்ஞானபுரம், 14. மனடுதண்டபத்து, 15. லட்சுமிபுரம், 16. காலன்குடியிருப்பு, 17. உடன்குடி, 18. மணப்பாடு, 19. ஆறுமுகனேரி, 20. மேலஆத்தூர், 21. ஆத்தூர், 22. சேர்ந்த மங்கலம், 23. சேத்துக்குவைத்தான், 24. அங்கமங்கலம், 25. புறையூர், 26. காயல்பட்டினம் (வடக்கு), 27. காயல்பட்டினம் (தெற்கு), 28. நல்லூர், 29. சுகந்தலை, 30. புன்னக்காயல் (அழிந்துபோன கிராமம்), 31. கச்சனாவிளை, 32. மூக்குப்பேரி, 33. ராஜபதி, 34. ஆழ்வார்திருநகரி, 35. அழகியமணவாள புரம், 36. ஆதிநாதபுரம், 37. தேமாங்குளம், 38. வெள்ளமடம், 39. தென் திருப்பேரை, 40. கும்கல்லூர், 41. மாவடிப்பண்ணை, 42. திருக்களூர், 43. கடையனோடை, 44. திம்மிருடையபுரம், 45. நாசரேத், 46. உடையார்குளம், 47. குரிப்பன்குளம்.





**ஸ்ரீவைகுண்டம் வட்டம்—கிராமங்கள்:** 1. வேலூர் கஸ்பா, 2. ஆதிச்ச நல்லூர், 3. தோழப்பன்பண்ணை, 4. பத்மநாபமங்கலம், 5. ஸ்ரீவைகுண்டம், 6. கீ. புதுக்குடி, 7. பராக்கிரமபாண்டி, 8. ஸ்ரீபராங்குசநல்லூர், 9. பேரூர், 10. திருப் புளியங்குடி, 11. கே. வரதராஜபுரம், 12. ஆரியபரநல்லூர், 13. ஸ்ரீமூலக்கரை, 14. பெருங்குடி, 15. கே. அப்பன்கோவில், 16. கே. கஸ்பா, 17. நட்டாத்தி, 18. டி. செட்டிகுளம், 19. தன்னூத்து, 20. இருவப்பபுரம், 21. புங்கலக்குறிச்சி, 22. சிவகளை, 23. சாயர்புரம்; 24. ஆறுமுகமங்கலம், 25. கொட்டாரக்குறிச்சி, 26. ஸ்ரீதொண்டநல்லூர், 27. வாழவல்லான், 28. டி. செட்டியபத்து. 29. கொற்கை, 30. கொடுங்கனி, 31. மாரமங்கலம், 32. முக்கனி, 33. அகரம், 34. மஞ்சநீர்காயல், 35. பழையகாயல், 36. உல்லநாடு கஸ்பா, 37. வடவல்லநாடு, 38. கலியாவூர், 39. உழக்குடி, 40. சிங்கத்தாகுறிச்சி, 41. எம். கோயில்பத்து, 42. எம். புதுகிராமம், 43. கீழபுத்தனேரி, 44. பூவாணி, 45. அலந்தா, 46. வசவப்பபுரம், 47. அலிகுடி. 48. அகிகுடி, 49. விட்டிலாபுரம், 50, வீ. கோவில்பட்டி, 51. செய்துங்கநல்லூர், 52. கருங்குளம், 53. டி. காரசேரி, 54. சேரகுளம், 55. வல்லகுளம், 56. கால் வாய், 57. சேக்காரக்குடி, 58. வடக்கு காரசேரி, 59. தெய்வசெயல்புரம், 60. எல்லைநாயக்கன்பட்டி, 61. கீழவல்லநாடு, 62. நாவல்காடு, 63. மணக்கரை, 64. அரும்பண்ணை, 65. ஆள்வார்கற்குளம், 66. கொங்கராயன்குறிச்சி, 67. செட்டி மலப்பட்டி.

**சாத்தான்குளம் வட்டம்—கிராமங்கள்:** 1. சாத்தான்குளம், 2. சாஸ்தாவி நல்லூர், 3. பன்னம்பாறை, 4. ஸ்ரீவெங்கடேசபுரம், 5. மீரான்குளம்.

**தூத்துக்குடி வட்டம்—கிராமங்கள்:** 1. தூத்துக்குடி டவுன், 2. முடி வைத்தானேந்தல், 3. கோரம்பள்ளம், 4. குலையன்கரிசல், 5. குமாரகிரி, 6. காட் டாலன்குளம், 7. வர்த்தகரெட்டிபட்டி, 8. திம்மராஜபுரம், 9. கூட்டுடன் காடு, 10. பேரூரணி, 11. முல்லக்காடு, 12. அல்லிக்குளம், 13. மேலதட்டப்பாறை, 14. கீழதட்டப்பாறை, 15. உமரிகோட்டை, 16. சேர்வைகாரன்மடம், 17. முத்து சாமிபுரம், 18. அய்யனடைப்பு, 19. ராமசாமிபுரம்.

**கோவில்பட்டி வட்டம்—கிராமங்கள்:** 1. ஊத்துப்பட்டி, 2. இத்தாம்பட்டி, 3. வெற்றிப்பட்டி, 4. இட்டான்குளம், 5. இலுப்பையூரணி, 6. குமாரரெட்டியா புரம், 7. உருளைக்குடி, 8. காமநாயக்கன்பட்டி, 9. அச்சன்குளம், 10. தொட்டாம் பட்டி, 11. முடுக்கலான்குளம், 12. குருவிநாதம்.

**சிவகிரி வட்டம்—கிராமங்கள்:** 1. திருமலாபுரம், 2. நாரணபுரம், 3. புளி யங்குடி, 4. வாசுதேவநல்லூர், 5. சிந்தாமணி, 6. டி. என். புதுக்குடி, 7. நகரம், 8. தலைவன்கோட்டை, 9. தேவிபட்டினம், 10. குமாரபுரம், 11. சிவகிரி, 12. ராயகிரி.

**சங்கரன்கோவில் வட்டம்—கிராமங்கள்:** 1. முக்கூட்டுமலை, 2. இளை யரசனேந்தல். 3. வீரசிகாமணி, 4. களப்பாகுளம், 5. சங்கரன்கோவில், 6. வாடிக்கோட்டை, 7. தெற்கு சங்கரன்கோவில், 8. வெள்ளாளன்குளம், 9. எச் சாண்டா, 10. கரிசாதன். 11. மடத்துப்பட்டி, 12. வெட்டியம்பட்டி. 13. திரு வேட்டநல்லூர், 14. பட்டாடைகட்டி, 15. சேத்தமங்கலம், 16. அரியநாயகிபுரம். 17. தெற்கிலம்பட்டி, 18. புளியங்குளம். 19. புன்னைவனம், 20. பொய்கை. 21. பெரிய கோவிலன்குளம், 22. கரிவலம்வந்தநல்லூர், 23. பெருமாள்பட்டி, 24. பண்டபுளி, 25. பனையூர்.

**ஒட்டப்பிடாரம் வட்டம்—கிராமங்கள்:** 1. குலசேகரநல்லூர், 2. ஆரைக் குளம், 3. ஒட்டப்பிடாரம், 4. தெற்கு அவாரங்காடு, 5. வடக்கு அவாரங்காடு. 6. ஜம்புலிங்கபுரம், 7. தெற்கு வீரபாண்டியபுரம், 8. சில்லாநத்தம், 9. பாஞ்சாலங் குறிச்சி, 10. சாமிநாதம், 11. புதியம்புத்தூர். 12. சிந்தாலக்கோட்டை. 13. மூல்லூர், 14. சந்தரகிரி, 15. ஆதனூர், 16. வாழசமுத்திரம், 17. கே. தலைவாய் புரம், 18. ஜெகவீரபாண்டியபுரம், 19. கொல்லம்பரம்பு, 20. என். குமாரபுரம், 21. கே. சண்முகபுரம், 22. நாகம்பட்டி, 23. குதிரைகுளம், 24. சில்லன்குளம், 25. பசுவந்தனை, 26. குமாரரெட்டியாபுரம், 27. மருதன்வலவு நாரைக்கிணறு, 28. சவரிமங்களம், 29. மூரம்பன், 30. மேலபாண்டியபுரம், 31. எம். கைலாச புரம், 32. அக்கநாயக்கன்பட்டி, 33. புதூர்பாண்டியபுரம், 34. ஜக்கம்மாள்புரம், 35. வேப்பலோடை.

**விளாத்திகுளம் வட்டம்—கிராமங்கள்:** 1. சூரங்குடி. 2. கே. தங்கம்மாள புரம், 3. எம். சண்முகபுரம், 4. பெரியசாமிபுரம், 5. கீழபெருங்குன்றம், 6. வேம்பார், 7. அரியநாயகிபுரம், 8. பல்லக்குளம், 9. இ. வேலாயுதபுரம், 10. எம். குமாரசக்கனபுரம், 11. மேலான்மறை, 12. மகாராஜபுரம், 13. நாத்தவேலி, 14. எம். சுப்பிரமணியபுரம், 15. பி. ஜெகவீர்புரம், 16. மதனபுரம், 17. கே. துரைசாமி புரம், 18. என். ஜெகவீரபுரம், 19. லட்சுமிபுரம், 20. முத்தையாபுரம், 21. புதூலபுரம், 22. சந்தர்சாமிபுரம், 23. மல்லேஸ்வரபுரம், 24. வடமலபுரம், 25. கப்பையாபுரம், 26. ராமசந்திரபுரம், 27. மேலக்கல்லூரணி, 28. கடல்குடி, 29. மாவிலோடை, 30. சின்னூர், 31. தலைக்காட்டுபுரம், 32. படர்ந்தபுளி, 33. சிந்த லாளிக்கன்பட்டி, 34. பெரிலோவன்பட்டி, 35. கழுகாச்சலபுரம், 36. மார்த்தாண் டம்பட்டி.

திரு. இரா. கருப்பையா: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத் தத்தை மொழிகிறேன்:—





"விவர அட்டவணையில் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் குளித்தலை வட்டம் என்பதற்கு எதிரில் கிராமங்களின் பெயர்களில் கீழ்வரும் கிராமங்களை சேர்த்துக் கொள்ளவும்.

4. கே. பேட்டை.
5. வதியம்.
6. மனத்தட்டை.
7. இனம்கடம்பர்கோவில்.
8. வைகநல்லூர் (தெற்கு).
9. வைகநல்லூர் (வடக்கு).
10. குளித்தலை.
11. ராஜேந்திரம்.
12. மருதூர் (தெற்கு).
13. மருதூர் (வடக்கு).
14. குமாரமங்கலம்.
15. பொய்யாமணி.
16. நெய்தலூர்.
17. இனுங்கூர்.
18. முதலைப்பட்டி.
19. சேப்ளாப்பட்டி.
20. இளம் சத்தியமங்கலம்."

திருத்தம் முறைப்படி வழி மொழியப்பெற்றது.

திரு. இரா. கருப்பையா: தலைவர் அவர்களே, நான் கொடுத்துள்ள திருத்தத்தில் கொடுக்கப்பட்டுள்ள கிராமங்கள் 4. கே. பேட்டை முதல் 20. இளம் சத்தியமங்கலம் வரையுள்ளவை குளித்தலை வட்டத்தில் வருபவை. அவைகளையும் அட்டவணையில் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று அமைச் சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அட்டவணையில் திருச்சி மாவட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பகுதிகளில் எந்த அளவிற்கு பாதிப்பு ஏற் பட்டுள்ளதோ, அதே அளவிற்கு பாதிப்பு நான் கொடுத்துள்ள கிராமங்களின் பட்டியலிலும் ஏற்பட்டு இருக்கிறது. என்ன காரணத்தாலோ அவைகள் விடு பட்டுப் போய் இருக்கிறது. அது வேண்டும் என்று விடப்பட்டதா என்பது எனக்குத் தெரியவில்லை. தவறுதலாக விடுபட்டுப் போய் இருந்தால் அவற்றைச் சேர்த்துக் கொள்ளவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே திரு. அழகர்சாமி அவர்களுக்குச் சொன்ன அதே பதிலைத்தான் இதற்கும் சொல்ல வேண்டும். அங்கே இருப்பவர்கள் யாரும் வேண்டுமென்றே அந்தப் பெயர்களை விட்டு இருக்க மாட்டார்கள். என்ன காரணத்தாலோ

நிதி அலுவல் தொடர்பாக மார்ச் திங்கள் 3 ஆம் நாள் தொடங்கி நடைபெற்ற கூட்ட நாட்கள்—38.

பேரவை கூடிய மொத்த நாட்கள்—48.
மாலையிலும் பேரவை நடைபெற்ற நாட்கள்—9.
பேரவை கூடியுள்ள மொத்த நேரம்—240 மணி, 50 நிமிடங்கள்.

வினாக்கள்-விடைகள்—

விடையளிக்கப்பெற்ற குறுகிய கால வினா—1.
உடுக்குறியிட்ட வினாக்கள்—680.
கேட்கப் பெற்றுள்ள துணை வினாக்கள்—1,405.
உடுக்குறியிடாத வினாக்கள்—1,060.
½ மணி நேரம் விவாதம் நடைபெற்றது—1 நாள்.

கவன ஈர்ப்புகள்—

கொடுக்கப்பெற்ற அறிவிப்புகள்—370.
அனுமதிக்கப்பெற்றவை—103 (67 பொருள் பற்றி).
அவையில் எடுத்துக்கொள்ளப்பெற்றவை—80 (50 பொருள் பற்றி).
நிலுவையில் உள்ளவை—23 (17 பொருள் பற்றி).

ஒத்திவைப்புத் தீர்மானங்கள் :

கொடுக்கப்பெற்ற அறிவிப்புகள்—413.
தலைவரின் அறையிலேயே அனுமதி மறுக்கப்பெற்றவை—254.

அவையில் எடுத்துக்கொண்டு அனுமதி மறுக்கப்பெற்றவை—115 (28 பொருள் குறித்து).

54-வது விதியின்கீழ் கவன ஈர்ப்பாக மாற்றப்பெற்றவை—44 (22 பொருள் குறித்து).

உரிமை மீறல் குறித்த பிரச்சினைகள் :

அறிவிப்பு வரப்பெற்றவை—9.
இசைவு மறுக்கப்பெற்றவை—4.
தீர்ப்பு அளிக்கப்பெற்றவை—2.
உரிமைக் குழுவிற்கு அனுப்பப்பெற்றவை—எதுவுமில்லை.

சட்ட முன்வடிவுகள் :

அவையில் ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பெற்றவை—26.
நிறைவேற்றப் பெற்றவை—26.
நிலுவையில் உள்ளவை—19.



நிதி அலுவல்கள் :

1984-85 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் பேரவையில் அளிக்கப்பெற்ற நாள்—3-3-1984.

வரவு-செலவுத் திட்டத்தின் மீது பொது விவாதம் நடைபெற்ற நாட்கள்—6 நாட்கள்.

மானியக் கோரிக்கையின் மீது விவாதமும் வாக்கெடுப்பும் நடைபெற்ற நாட்கள்—25.

கொடுக்கப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள்—2,273.
அவையின் முன் வைக்கப்பெற்றவை—2,123.
விவாதித்து நிறைவேற்றப்பெற்ற மானியக் கோரிக்கைகள்—58.

தீர்மானங்கள் :

அ. அரசினர் தனித் தீர்மானங்கள் :
வரப்பெற்றவை—6.
நிறைவேற்றப் பெற்றவை—3.
நிலுவையில் உள்ளவை—3.

ஆ. தனியார் தீர்மானங்கள் :
வரப்பெற்றவை—2.
அனுமதிக்கப் பெற்றவை—2.

பேரவையின் முன் வைக்கப்பெற்ற ஏடுகள் :
அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்—171.
ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்—199.

சட்டப் பேரவைக் குழுக்கள் 1983-84-ல்

| | கூடிய நாட்கள். | அளித்துள்ள அறிக்கைகள். |
|---|---|---|
| 1. பொதுக் கணக்குக் குழு | 55 | 8 |
| 2. பொது நிறுவனங்கள் குழு | 53 | 13 |
| 3. மதிப்பீட்டுக் குழு | 57 | 5 |
| 4. சட்ட விதிகள் ஆய்வுக் குழு | 25 | 1 |
| 5. அரசு உறுதி மொழிக் குழு | 37 | 2 |
| 6. உரிமைக் குழு | 12 | 2 |
| 7. அலுவல் ஆய்வுக் குழு | 11 | — |

கூட்டாய்வுக் குழு அறிக்கைகள்

**பார்வையாளர்கள் :**

**பார்வையாளர் மாடத்தில் அனுமதிக்கப் பெற்ற**

ஆண்கள்—19,971.

பெண்கள்—2,451.

**பேரவைத் தலைவர் மாடத்தில்**

அனுமதிக்கப்பெற்றவர்கள்—15,623.

பேரவை நிகழ்ச்சியைக் காண வந்தவர்கள்—மொத்தம்—38,045.

சட்டமன்ற நூலகத்திற்கு வருகை தந்துள்ளவர்கள்—511.

வழங்கப்பெற்றுள்ள நூல்கள்—478.

பேரவைக் கூட்டம் நடைபெற்ற எல்லா நாட்களிலும் வருகை தந்த உறுப்பினர்கள்—3 பேர்கள்.

தட்டச்சு செய்யப் பெற்றுள்ள பேரவை நடவடிக்கைக் குறிப்புகளின் மொத்தப் பக்கங்கள்—9,668.

பேரவை நிகழ்ச்சிகளை நல்ல முறையில் நடத்திச் செல்ல எங்களுக்கு ஒத்துழைப்புத் தந்த அவை உறுப்பினர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எல்லாக் கட்சி கொறடாக்களுக்கும் நம்முடைய பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

செய்தியாளர்களுக்கும் நம்முடைய பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் அவை நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெறுவதற்கு மிகவும் ஒத்துழைப்புத் தந்த சட்டமன்றப் பேரவைச் செயலாளர் திரு. அழகர்சாமி அவர்களுக்கும், சட்டமன்ற அலுவலர்கள் அனைவருக்கும் பேரவை மூலம் நம்முடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்போது நாள் குறிப்பிடப் பெறாமல் பேரவையை ஒத்தி வைப்பதற்கு அவை முன்னவர் அவர்கள் தீர்மானத்தை மொழிவார்கள்.

**11. அரசினர் தீர்மானம்.**

**பேரவை ஒத்திவைக்கப்பெறுதல்.**

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :—

"பேரவை விதி 25(1) ன்படி, பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப் பெறலாம்."



தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இக்கூட்ட அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் பேரவை ஒத்திவைக்கப்பெறுகிறது.

பின்னர் பிற்பகல் 1-57 மணிக்கு மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்பெறாமல் பேரவை ஒத்திவைக்கப்பெற்றது.

**12. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.**

**(அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.**

171. பல்லவன் பொறியியற் கழகத்தின் 1983 ஆம் ஆண்டிற்கான ஒன்பதாவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் [மத்தியச் சட்டம் 1956) 619-எ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.]

**(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.**

190. தமிழ்நாடு மின்சார வாரிய மின் கட்டணம் குறித்து திரு. சி. வி. ஆர். பணிக்கர், ஐ.ஏ.எஸ். அவர்களின் அறிக்கை (தமிழ், ஆங்கிலம்) மற்றும் பொதுப்பணித் துறையின் 16—5—1983 ஆம் நாளிட்ட 1033 ஆம் எண் அரசாணை. (ஆங்கிலம்).

191. 1978-79 ஆம் ஆண்டிற்கான வாக்களிக்கப் பெற்ற மானியங்களிலும் சாட்டப் பெற்ற நிதி ஒதுக்கீடுகளிலும் மிகையாக ஏற்பட்ட செலவு பற்றிய பொதுக் கணக்குக் குழுவின் இருபத்தாறாவது அறிக்கை. (தமிழ், ஆங்கிலம்).

192. 1977-78 மற்றும் 1978-79 ஆம் ஆண்டுகளுக்கான இந்திய தணிக்கைத் துறைத் தலைவரின் (வருவாய் வரவினங்கள்) பற்றிய அறிக்கையின் மீதான பொதுக் கணக்குக் குழுவின் இருபத்தேழாவது அறிக்கை. (தமிழ், ஆங்கிலம்).

193. 1973-74 ஆம் ஆண்டிற்கான இந்திய தணிக்கைத் துறை தலைவரின் அறிக்கையின் (சிவில்) மீதான பொதுக் கணக்குக் குழுவின் (1977-1979) ஏழாவது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய பொதுக் கணக்குக் குழுவின் இருபத்தெட்டாவது அறிக்கை. (தமிழ், ஆங்கிலம்).

194. 1974-75 மற்றும் 1975-76 ஆம் ஆண்டுகளுக்கான வாக்களிக்கப் பெற்ற மானியக் கோரிக்கைகளுக்கும் சாட்டப் பெற்ற நிதி ஒதுக்கீடுகளுக்கும் மிகையாக செலவழித்த தொகைகள் பற்றிய பொதுக் கணக்குக் குழு (1980-81)

136270
சென்னை-600 008.



அளித்த முதலாவது மற்றும் ஏழாவது அறிக்கைகளில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய பொதுக் கணக்குக் குழுவின் இருபத்தொன்பதாவது அறிக்கை. (தமிழ், ஆங்கிலம்).

195. 1979-80 மற்றும் 1980-81 ஆம் ஆண்டுகளுக்கான தமிழக அரசின் கணக்குகள் மற்றும் அவ்வாண்டுகளுக்கான இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் சிவில் துறைகள் பற்றிய அறிக்கையில் சில துறைகள் தொடர்பான குறிப்புகள் மீதான பொதுக் கணக்குக் குழுவின் முப்பதாவது அறிக்கை. (தமிழ், ஆங்கிலம்).

196. 1977-78 மற்றும் 1978-79 ஆம் ஆண்டுகளுக்கான இந்திய தணிக்கைத் தலைவரின் (சிவில்) துறைகள் பற்றிய அறிக்கையில் சில துறைகள் தொடர்பான குறிப்புகள் மீதான பொதுக் கணக்குக் குழுவின் முப்பத்தோராவது அறிக்கை. (தமிழ், ஆங்கிலம்).

197. திரு. எம். கே. சீனிவாசன் மற்றும் எதிரொலி நாளிதழ் மீதான உரிமை மீறல் பிரச்சினை குறித்த உரிமைக் குழுவின் அறிக்கை. (தமிழ்).

198. கீழ் காணப்பெறும் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் அளித்துள்ள எழுத்து மூலமான சொத்து விவரங்கள் (தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை 27-8-1969 ஆம் தேதியன்று ஏற்பளித்த தீர்மானத்தின்படி பேரவையில் வைக்கப் பெற்றது).

31-3-1983 அன்று உள்ளவாறு அளித்துள்ளவர்கள்—

1. திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொர்ணம்.
2. திரு. சி. சபாபதி.
3. திரு. ஆர். தவசி.
4. திரு. பி. கலியமூர்த்தி.
5. திரு. மு. அப்பாதுரை.
6. திரு. எம். பி. முனுசாமி.
7. திரு. ஜி. மூர்த்தி.
8. திரு. செ. செம்மலை.
9. திரு. தா. சாமிக்கண்ணு.
10. திரு. என். பழனிவேல்.
11. திரு. இ. இராமசுப்பிரமணியன்.
12. திரு. கே. தனுக்கோடித் தேவர்.
13. திரு. ஆர். பெரியசாமி.
14. திரு. பி. துரைராஜ்.

199. உடுக்குறியிடப் பெறாத வினாக்களும் விடைகளும் (எண்கள் 1 : 20 வரை).